உ

செந்திலாண்டவன் திருவடி துணை

கந்தபுராணச் சுருக்கம்

(குறிப்புரையுடன்)

ஸ்ரீ சம்பந்த சரணாலய ஸ்வாமிகள்
இயற்றியது

திருப்பனந்தாள் காசி மடத்து வெளியீடு

1945

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனம்

ஸ்ரீ சம்பந்த சரணாலய ஸ்வாமிகள்

அருளிச்செய்த

கந்தபுராணச் சுருக்கம்

திருப்பனந்தாள் - காசிமடம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி ஸ்வாமிகள்

திருவுள்ளப்பாங்கின்படி

கலைமகள் ஆசிரியர் :

ஸ்ரீ வித்துவான் கி. வா. ஜகந்நாதன், B. O. L.,

எழுதிய

குறிப்புரை முதலியவற்றுடன்

அல்லயன்ஸ் கம்பெனியார்

பிரசுரித்தது

1945

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.

உ

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ காசிமடம் - திருப்பனந்தாள்



ஸ்ரீ ஆதிகுமரகுருபர ஸ்வாமிகள்

சைவ சித்தாந்தப் பிரசங்கப் பரிசளிப்பு ரூ. 1000

ரூபாய் ஆயிரம்

உ

செந்திலாண்டவன் துணை

சைவ சித்தாந்தப் பிரசங்கப் பரிசு

ரூ. 1000 - ரூபாய் ஆயிரம்

ஐந்து வயதில் செந்திலாண்டவனருளால் ஊமை நீங்கப்பெற்றுக் கந்தர் கலிவெண்பாப் பாடியருளியும், மதுரையில் ஸ்ரீ மீனாட்சி யம்மை மீது பிள்ளைத்தமிழ் பாடி அம்மையால் முத்தாரம் அணியப் பெற்றும், திருமலை நாயக்க மன்னர் வேண்ட, மன்னன் முதல் உலகிலுள்ள மக்கள் அனைவருக்கும் உலகறிவூட்டுவான் நீதிநெறி விளக்கம் அருளியும், தருமையும் கமலையும், விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசு வீற்றிருந்த மாசிலாமணி தேசிகராயரைக் கண்டு கேட்டுப் பண்டார மும்மணிக் கோவை பகர்ந்தும், தில்லை, திருவாரூர் தெரிசித்து மும்மணிக்கோவை நான்மணிமாலை நவின்றும், காசி சென்று தமிழர்கள் பிற மொழிகளை யும் கற்றல் வேண்டுமென அறிவுறுத்துவான் சகலகலாவல்லிமாலை பாடி யருளியும், உயிருள்ள சிம்மத்தின் மீதேறி முகலாய மன்னன் ஔரங்கசீப் பாதுஷாவைக் கண்டு அன்னவனால் உயர்மதிப்புப் பெற்று, அம்மன்னன் உதவியால் ஸ்ரீ விசுவேசுவரர் ஆலயத்தை விளக்கமுறச் செய்தும், கேதார கட்டத்தில் அறச்சாலை நிறுவியும் இன்னோரன்ன செயற்கரிய பணி பல செய்தருளிய முனிவர் பெருமான், ஸ்ரீலஸ்ரீ காசி வாசி ஆதி குமரகுருபர சுவாமிகள் ஆவார்கள்.

ஷை சுவாமிகளின் 257-ஆம் ஆண்டு மகேசுவர பூசை விழா காசியி லும், பனசையிலும் வருகிற பார்த்திவ ஆண்டு வைகாசித் திங்கள் 16-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (29—5—45) நடைபெறும். அம் முனிவர் பெருமான் ஞாபகார்த்தமாக, இப்போது திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 20-ஆம் பட்டத்தில் விளங்கிவரும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்களால் இந்த ஆயிர ரூபாய் பிரசங்கப் பரிசு ஏற்படுத்தப்பெற்றிருக்கிறது.

பரிசளிப்புக்குரிய விதிகள் :

1. தனித்தமிழ் வித்துவான் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களோ, அல்லது அதற்குச் சமமான தமிழ்ப் புலமையுள்ளவர்களோ, சைவசித்தாந்த சாத்திரம் நன்கு கற்றுணர்ந்து நாளிது தாருண வருஷத்தில் (13-4-44 முதல் 12-4-45 முடிய ஓராண்டு கால அளவிற்குள்) எழுபத்தைந்துக்குக் குறையாத சைவசமய சாத்திரப் பிரசங்கம் தமிழில் செய்திருப்பார்களாயின் அவர்கள் மட்டுமே இதிற் கலந்து கொள்வதற்குரியர். (அத்தகைய ரேடியோப் பிரசங்கமும் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பெறும்.)

2. அவர்களுள் பிரசங்கவன்மை, சைவசித்தாந்தப் பயிற்சி, ஒன்றுக்கு மேற்பட்ட ஜில்லாக்களில் சொற்பணி புரிந்தமை, பிறமொழிப் புலமை, பிறப்பொழுக்கம் முதலியவைகளில் முதன்மையாக வருபவருக்கே ஷை விழாவில் ரூ. 1000 பரிசாக அளிக்கப்பெறும்.

3. இதற்குரிய இவ்வாண்டுத் தேர்வு திருப்பனந்தாளில் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் ஷை விழாவில் (29-5-45) நடத்தப்பெறும். தலைவரவர்கள் தீர்ப்பே முடிவானது.

4. இதிற் கலந்துகொள்ள விருப்பமுடையார் தங்கள் பெயர், ஊர், தமிழ், ஆரியம், பிற மொழிப்புலமை, சைவ சமய சாத்திரப் பிரசங்க எண், பணியாற்றிய தலங்கள் (அத்தாட்சியுடன்) திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர்களுக்கு 30-4-45-க்குள் விண்ணப்பித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் பரிசீலனை செய்யப்பெற்றுத் தேர்வில் கலந்துகொள்வதற்கு உரியவர்களுக்கு அனுமதிச் சீட்டு அனுப்பப்பெறும்.

5. இப்பரிசு ஆண்டுதோறும் அளிக்கப்பெறும். ஒருமுறை பரிசு பெற்றவர் மறுமுறை பெறுவதற்கு உரியவரல்லர்.

ஸ்ரீ காசிமடம்,
திருப்பனந்தாள்,
31—3—45.

உத்தரவுப்படி,
S. பொன்னுசாமி முதலியார்
காறுபாறு.

பொருள் அடக்கம்

		பக்கம்
முன்னுரை	....	vii
ஆசிரியர் வரலாறு	....	xi
கந்த புராணச் சுருக்கம்		
கடவுள் வணக்கம்	....	1
நூல் வந்த வழி	....	7
அவையடக்கம்	....	7
புராண வரலாறு	....	8
உற்பத்தி காண்டம்	....	15
அசுர காண்டம்	....	62
மகேந்திர காண்டம்	....	114
யுத்த காண்டம்	....	142
தேவ காண்டம்	....	247
தக்ஷ காண்டம்	....	260

முன்னுரை

வேதவியாஸரால் அருளிச் செய்யப்பெற்றுச் சூதபுராணிகரால் நைமிசாரணிய முனிவருக்குத் திருவாய் மலர்ந்தருளப் பெற்றனவாகிய மகா புராணங்கள் பதினெட்டு. இவற்றுள் அளவினால் பெரியது ஸ்காந்தம் ; சற்றேறக்குறைய லக்ஷம் கிரந்தம் உடையது அது. பல வகையான உபாக்கியானங்களும், உபதேசங்களும் நிரம்பிக் கடல்போலப் பரந்திருக்கும் அதன் பெருமை, "எந்தப் பொருளும் கந்தப்புராணத்திலே" என்ற பழமொழியளவிலும் வந்திருக்கிறது. அது சனற்குமார சங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விஷ்ணுசங்கிதை, சங்கரசங்கிதை, சூதசங்கிதை என்ற ஆறு பிரிவுகளை உடையது. இவ்வாறினுள் சங்கரசங்கிதை என்பது பன்னிரண்டு கண்டங்களால் ஆகியது. அவற்றுள் முதற் கண்டத்தின் பெயர் சிவரகசிய கண்டம் என்பது.

சிவரகசியகண்டம் ஏழு காண்டங்கள் அடங்கியது. சம்பவகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம் என்னும் முதல் ஆறு காண்டங்களையும் தமிழில் இனிய செய்யுட்களால் ஸ்ரீ கச்சியப்பசிவாசாரியார் இயற்றினார். அதுவே **கந்தபுராணம்** என்ற காவியமாகும். ஏழாவதாகிய உபதேச காண்டத்தைக் கோனேரியப்ப முதலியாரென்னும் புலவர் தனியே தமிழ்ச் செய்யுளுருவத்தில் இயற்றியிருக்கிறார்.

ஸ்ரீ கச்சியப்பசிவாசாரியார் இயற்றிய கந்தபுராணம் சொற்பொருள் நயமும் பக்திச்சுவையும் மிகுந்ததாக இருத்தலின் தமிழ்ப் புலவர்களாலும் முருகன் அடியார்களாலும் சிறப்பாகப் போற்றப்பெற்று வருகின்றது. பலர் அதனைப் பாரா

யணம் செய்து வருகிறார்கள். அது ஆறு காண்டங்களும் 94 படலங்களும் 10,346 செய்யுட்களும் கொண்டது. முருகக் கடவுளுடைய திருவவதாரம் முதல் வள்ளியம்மை திருமணம் இறுதியாக அப்பெருமானுடைய இனிய சரித்திரத்தை விரிவாகச் சொல்வது. இடையிடையே பல கிளைக் கதைகளை உடையது.

கந்தபுராணச் சுருக்கமென்பது, அப்புராணத்திலுள்ள வரலாறுகளைச் சுருக்கி 1049 செய்யுட்களில், திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ சம்பந்த சரணாலய ஸ்வாமிகளால் இயற்றப்பெற்றது. கந்தபுராணத்தில் உள்ள விரிவான வருணனைகளையும், சில உபாக்கியானங்களையும் விலக்கிவிட்டு அதில் விரிவாகச் சொல்லப்பெற்ற வரலாறுகளைச் சுருக்கமாக அமைத்துச் செய்யப்பட்ட இந்நூல் முருகக்கடவுள் திவ்விய சரித்திரத்தை விரைவில் தெளிந்து கொள்பவர்களுக்கு உரியதாக விளங்குகின்றது. படலப்பிரிவை விலக்கி ஒவ்வொரு காண்டத்திற்கும் ஒவ்வொரு பிரிவாக வைத்து ஆறு பகுதிகளாக இந்நூல் இயன்றுள்ளது. "தொகுத்தல் வகுத்தல் தொகைவிரி மொழி பெயர்ப்பு" என்ற நான்கு வகையான யாப்புக்களுள் தொகுத்தல் என்னும் வகையைச் சார்ந்தது இது.

இந்நூலின் மூலம் ஸ்ரீ யாழ்ப்பாணத்துநல்லூர் ஆறுமுக நாவலரவர்களுடைய வித்தியானுபாலன யந்திரசாலையில் முதல் முதலில் அச்சியற்றப் பெற்று வெளியாகி யிருக்கிறது. பிறகு, காஞ்சீபுரம் மகாவித்துவான் ஸ்ரீ சபாபதி முதலியாரவர்கள் இயற்றிய பொழிப்புரையும், திரு. வி. உலகநாத முதலியாரவர்கள் எழுதிய விருத்தியும் அடங்கிய உரைப்பதிப்பொன்று (1925) வெளியாகியுள்ளது.

சிறந்த செந்தமிழ்ச்சுவை பயின்ற இந்நூலைக் குறிப்புரையுடன் வெளியிடவேண்டுமென்ற தம் திருவுள்ளக் கருத்தைத்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி ஸ்வாமிகளவர்கள் குறிப்பித்தார்கள். அவர்கள் திருவுள்ளக் கருத்தின்படி இந்நூல் ஸ்ரீ குமரகுருபரஸ்வாமிகள் மகேசுவர பூஜைத்தினமாகிய இன்று வெளியாகிறது.

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ குமரகுருபரஸ்வாமிகள் நிறுவிய திருத்தொண்டை வழி வழியே செய்துவரும் பனசைக் காசி மடத்திலிருந்து அத்தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த மற்றொரு மெய்ஞ்ஞானப் பெரியார் இயற்றிய நூல் வெளிவருதல் இயைபுடைய செயலே யாகும். இத்தகைய அரிய நூல்களை வெளியிடும் விஷயத்தில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிகள் அவர்கள் காட்டிவரும் ஊக்கம் தமிழ்நாட்டாரால் மிகவும் பாராட்டற்குரியது. சென்ற வருஷம் அவர்களுடைய கட்டளையின்படி உரையுடன் ‘ அபிராமி அந்தாதி ’ வெளியானதை அன்பர்கள் அறிவார்கள்.

இந்த நூலைப் பதிப்பித்தற்குரிய அவகாசம் மிகச் சுருங்கியதாக அமைந்தது. காகிதம் பெறுதல், அச்சிடுதல் முதலிய பல துறைகளிலும் இடர்ப்பாடுகள் பல நேரும் இக்காலத்தில் ஸ்ரீ ஷண்முகநாதன் திருவருளால் தான் இது நிறைவேறியதென்று சொல்லவேண்டும். புத்தகம் இந்த உருவத்தில் வருவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு உபகாரம் செய்த மயிலாப்பூர் அல்லயன்ஸ் கம்பெனியார்பால் மிக்க நன்றி பாராட்டுகிறேன். மிகக் குறுகிய காலத்துக்குள் விரைவாகவும் அழகாகவும் இதனை அச்சிட்டுத் தந்த இராயப்பேட்டை, சாது அச்சுக்கூடத்தாரின் உதவியையும் நான் மறவேன்.

காசி மடாலயம் அன்னமும் கல்வியும் வழங்கிப் புகழ் பெற்று விளங்குவது. ஞானமும் புலமையும் ஒருங்கே படைத்த பெரியார்களைத் தலைவர்களாகப் பெறும் பாக்கியம் உடையது. இப்போது மடாலயத் தலைமை தாங்கி விளங்கும்

ஸ்ரீலஸ்ரீ **காசிவாசி அருணந்தி ஸ்வாமிகள்** அவர்கள் தமிழ்க் கலாசாலை நிறுவியும், அறிஞரைக் கொண்டு பல பிரசங்கங்களைச் செய்வித்தும்,நல்ல நூல்களை வெளியிடுவித்தும் தமிழும் சைவமும் தழைத்தினிதோங்கச் செய்து வருகிறார்கள். அவர்களுடைய பல தருமச் செயல்களில் இப்புத்தகத்தின் ஆரம்பத்தில் உள்ள அறிக்கையில் கண்ட ‘சைவ சித்தாந்தப் பிரசங்கப் பரிசு’ம் ஒன்று.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் இன்னும் இத்தகைய அருந்தொண்டுகள் பலவற்றைச் செய்துகொண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து விளங்கவேண்டுமென்று ஸ்ரீ செந்திலாண்டவன் திருவடிகளைப் பரவுகின்றேன்.

இங்ஙனம்

26-5-1945 **கி. வா. ஜகந்நாதன்**

ஆசிரியர் வரலாறு

1

இந்த நூலின் ஆசிரியராகிய சம்பந்த சரணாலய ஸ்வாமிகள் தம்முடைய இளமையிலேயே சிவபக்தி மிக்கவராய்த் திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தைச் சார்ந்து ஆண்டுள்ள அடியார்களோடும் துறவியர்களோடும் பழகி வந்தனர். இவருடைய ஒழுக்கத்தையும் பக்திச் சிறப்பையும் உணர்ந்த அவர்கள் அக்காலத்தில் அவ்வாதீனத்தில் ஆறும் பட்டத்தில் ஞானதேசிகராக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ திருஞான சம்பந்ததேசிக சுவாமிகளின் கருணைத் திருப் பார்வைக்கு இவரை இலக்காகச் செய்தனர். அக்காலத்தில் இவர் இலக்கண இலக்கியங்களும், சித்தாந்த நூல்களும் ஓதிக் கை வந்தனர். அவ்வாதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ வெள்ளியம்பல வாணத் தம்பிரான் என்ற புலமைப் பெரியார்பால் பாடம் கேட்டார்.

அப்பால் ஞானாசிரிய மூர்த்தியாகிய ஸ்ரீலஸ்ரீ திருஞான சம்பந்ததேசிக சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெற்று விரத முனிவராகி நிட்டை புரிந்து ஒழுகினார். தம்முடைய ஞானாசிரியரிடம் இணையற்ற அன்பு பூண்டவர் இவர் என்பதற்கு இவருடைய திருநாமமாகிய 'சம்பந்த சரணாலயர்' என்பதும் ஒரு சான்று.

இவர் புலமையாலும் ஒழுக்கத்தாலும் ஞானத்தாலும் சிறந்து விளங்கியமையின் இவருடைய புகழ் தமிழ்நாட்டிலும் மைசூர் முதலிய பிரதேசங்களிலும் பரவியது. அவ்வத் தேசத்திலிருந்து தருமபுர ஆதீனத்தில் எழுந்தருளியிருந்த ஞானாசிரியரைத் தரிசிக்க வருவாரெல்லாம் இவருடைய பெருமையையும் உணர்ந்து பாராட்டிச் சென்றார்கள். அங்ஙனம் சென்றவர்கள் வாயிலாக இப்பெரியாரின் சிறப்பை

உணர்ந்து அக்காலத்தில் மைசூரை ஆண்டிருந்த மன்னர்பிரான் இவரைத் தரிசித்து இவருடன் பழகவேண்டுமென்னும் அவா நிரம்பியவரானார். தமிழ் நூல்களில் ஓரளவு அறிவுடையவர் அவ்வரசர். அவர் தம் கருத்தை ஸ்வாமிகளுக்குத் தக்கார் வாயிலாக விண்ணப்பித்துக்கொள்ள இவர் தம் ஞானாசிரியரிடம் விடைபெற்று மைசூருக்கு எழுந்தருளினார்.

ஸ்வாமிகளுடைய துறவுக் கோலத்தில் அரசர் உள்ளம் ஈடுபட்டது. இவருடைய சம்பாஷணையிலும் இயல்புகளிலும் தனிச்சிறப்பைக் கண்டு தெய்வமெனப் போற்றினார். சிலகாலம் தம்முடனே இருக்கவேண்டுமென்று பிரார்த்திக்க அங்ஙனமே ஸ்வாமிகள் அங்கே இருந்தார்.

ஸ்வாமிகள் அவ்வாறு இருந்த காலத்தில் நாளுக்கு நாள் ஸ்வாமிகளின் தவ ஒழுக்கச் சிறப்பும், ஞானசீல நலமும், தமிழ்ப் புலமையும் அரசருக்குப் புலனாயின. தமக்கு என்று ஒன்றும் வேண்டாராகிப் பிக்ஷை எடுத்து உண்ணலையே மேற்கொண்டிருந்த இவருடைய வைராக்கியம் மன்னருக்குப் பெரு வியப்பை உண்டாக்கியது.

அப்பால் அவ்வரசர் முருகக் கடவுளின் திவ்ய சரித்திரத்தை ஸ்வாமிகள்பால் கேட்டார். கச்சியப்ப சிவாசாரிய ஸ்வாமிகள் இயற்றிய கந்தபுராணத்திற் சிலசில பகுதிகளை ஸ்வாமிகள் இடையிடையே எடுத்துச்சொல்லி அப்பெருமான் திருவருள்விளையாடல்களைப் பிரசங்கித்தார். அரசர் மனமுருகி நின்றார். பிறகு, “இந்தப் புராணம் விரிவாக இருக்கிறது. முருகக் கடவுள் சரித்திரத்தைத் தொடர்ச்சியாக இதில் உள்ளபடியே சுருக்கமாகச் சொல்லும் நூல் ஒன்று இருந்தால் எம்போலியருக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். அத்தகைய நூலைத் தேவரீரே இயற்றியருள வேண்டும்” என்று ஸ்வாமிகளை வேண்டிக் கொண்டார். “இதுவும் திருவருட் செயலே” என்று மகிழ்ந்து ஸ்வாமிகள் இப்புராணச் சுருக்கத்தைப் பாடி நிறைவுறுத்தினார். அரசருடன் திருச்செந்தூர் அடைந்து செந்திலாண்டவன் சந்நிதியிலே இதனை அரங்கேற்றி வந்தார்.

மைசூர் அரசர் மகிழ்ந்து ஸ்வாமிகளுக்குக் காணிக்கை யாகப் பொன்னும் மணியும் வழங்கினர். அவற்றை ஸ்வாமிகள், "இவை குருமூர்த்தியின் திருவடிகளுக்கு ஆகுக!" என்று வைத்தார். அரசர் மீட்டும் ஒருமுறை பொன்னும் மணியும் அளிக்க அவற்றை, "இவை சிவபெருமானுக் காகுக" என்று வைத்தார். அரசர் மூன்றும் முறையும் அங்ஙனமே சமர்ப்பிக்கையில், "இவை அடியார்களுக்கு ஆகுக" என்று வைத்தார். ஸ்வாமிகளின் வைராக்கியச் சிறப்பை உணர்ந்த மன்னர் பெருவியப்பை அடைந்தனர்.

வேந்தர் ஸ்வாமிகளைச் சிவிகையில் எழுந்தருளச் செய்து நகர்வலஞ் செய்விக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டு இவர்பால் தெரிவித்தார். இப்பெரியார், "குருமூர்த்திகளுடைய திருவுள்ளக் கருத்தறியாமல் இது செய்யோம்" என்று கூறவே, அரசர் தம் விருப்பத்தைத் தருமபுர ஆதீனத் தலைவர்களுக்குத் தெரிவித்து அவர்களுடைய உடம்பாடு பெற்றுப் பிறகு சிறப்பாக இவரை நகர்வலஞ் செய்வித்துக் கண்டு களித்து இன்புற்றார்.

ஸ்வாமிகளால் அரசர் தருமையாதீனத்தின் பெருமையையும் வரலாற்றையும் அங்கே எழுந்தருளியுள்ள ஞானதேசிக மூர்த்திகளின் சிறப்பையும் உணர்ந்துகொண்டார். "அவ்வாதீனத்தில் உள்ளார் என்ன செய்துகொண்டிருப்பார்கள்?" என்று மன்னர் ஒருமுறை கேட்கவே, ஸ்ரீ சம்பந்தசரணாலயர் அதற்கு விடையாகப் பின்வரும் செய்யுளைக் கூறினர்:

ஆய்வார் பதிபசு பாசத்தின்
உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்
லாங்கல்வி கேள்வியல்லல்
ஓய்வார் சிவானந்த வாரியுள்
ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ர
காசன்மெய்த் தொண்டர்களே.

அரசர், " இத்தகைய பெருமையுடன் விளங்கும் ஆதீனத்தைப் பூலோக கைலாசம் என்றுதான் சொல்லவேண்டும் " என்றெண்ணிப் பல பொருள்களைத் தருமபுரத்தில் எழுந்தருளியிருந்த குருமூர்த்திகளுக்குப் பாதகாணிக்கையாக விடுத்தார். அன்றியும் ஆண்டு தோறும் நல்ல இலக்கணங்களையுடைய பசுக்களை அவ்வாதீனத்துக்கு வழங்கி வந்தார்.

சிலகாலம் மைசூரில் இருந்த ஸ்ரீ சம்பந்த சரணாலய ஸ்வாமிகள் பிறகு பல சிவஸ்தலங்களைத் தரிசித்துத் தருமபுரத்தை அடைந்து குருதரிசனம் செய்துகொண்டு வாழ்ந்து வந்தார். அவ்வாதீன முதல் ஞானாசிரியராகிய ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர்மீது இவர் இயற்றிய சிகாரத்தின மாலை என்ற பிரபந்தம் ஒன்று உண்டு.

2

கந்தபுராணச் சுருக்கத்தால் இவ்வாசிரியருடைய இயல்புகள் சில விளங்குகின்றன. தம்முடைய குரு பீடமாகிய திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் இவருக்கு இருந்த பக்தி அளவற்றது. அவ்வாதீன முதல்வராகிய குருஞானசம்பந்தருடைய குரு, கமலைஞானப்பிரகாசர் என்பவர். ' அடியார்களுடைய மும்மல இருளைப் போக்கும் ஞானமாகிய கிரணங்களையுடைய ஞான பானு அப்பெருமான். அந்த ஞானக் கதிரோனது சந்நிதியில் அன்புடையாருடைய இருதய தாமரைகள் மலர்கின்றன. வீணான குதர்க்க வாதம் செய்பவர்களுடைய புன்மதியாகிய நிலவு மங்கிப் போகின்றது ' (8) என்று அவருடைய பெருமையை இவர் பாராட்டுகிறார். குருமூர்த்தியை, " கருணை மழை பொழியுமிரு கடைக்கணாளன், பார்புகழும் ஞானசம்பந்த னெங்தை பரமன் " என்று துதிக்கிறார். அவருடைய திருவருளால் தாம் இந்நூலைப் பாடியதாகச் சொல்கிறார். " இவ்வளவு பெரிய நூலைச் சுருக்கிச் சுவை குன்றாமல் சொல்வதற்குரிய தகுதி என்பால் இல்லை. எனக்கும் இக்கதைக்கும் எத்தனையோ தூரம். தனக்கிணை தானே யான சம்பந்தன் கமலை வேந்தன், கனக்கவே யென்பாலன்பாற் கருணைவைத்திடுத லாலே, உனற்கருங் காந்தங்

தன்னை உரைத்தனன் சுருக்கி" (14) என்பது இவருடைய விநயத்தையும் குருபக்தியையும் புலப்படுத்துகிறது. சூரியோதயத்தை வருணிக்கும்போது ஓரிடத்தில், "எங்கள் குருமூர்த்திக்கு முன்னே வந்தவர்களுடைய ஆணவப் படலம் கெட்டு ஓடுவது போல இருள் அகன்றது" என்று பாடுகின்றார்.

"கந்த மாமலர்ப் பொதும்பர்சூழ் கமலைமா நகர்வாழ்
எந்தை ஞானசம் பந்ததே சிகன்றனை எதிர்ந்தார்
பந்த ஆணவப் படலம்விண் டிரிந்திடும் படிபோல்
அந்த ரம்புவி மறைத்தபே ரிருளகன் றதுவே." (517)

இறுதியில்,

"மெத்தும் இன்ப வியாபகம் ஆகிய
முத்தி தந்தெனை ஆட்கொண்ட முன்னவன்
பத்தர் மொய்த்தசம் பந்தன் கமலைவாழ்
அத்தன் வாழி" (1047)

என்று வாழ்த்துகிறார்.

இந்த நூலுக்கு முதல் நூலாகிய கந்த புராணத்தின் பாலும் அதனை இயற்றிய கச்சியப்ப சிவாசாரியாரிடத்தும் இவருக்குள்ள நன்மதிப்பை, கச்சியப்ப சிவாசாரியாருடைய துதியாக உள்ள செய்யுளால் அறியலாகும். கந்த புராணத்தை, "சலதி யமுதினைநிகர் செந்தமிழ்", "அன்புறு தமிழ்" என்று புகழ்கிறார். கச்சியப்பரை அருட்கொண்டலென்கிறார்.

இந்த நூலைப் பாடி நிறைவேற்றியபொழுது இப்பெரியார் மிக்க இன்பத்தை அடைந்திருக்க வேண்டும். இதனை, "கந்தப் புராணச் சுருக்கமும் நிறைந்தது களிப்பால்" (1044) என்ற அடி குறிப்பிக்கின்றது. இந்நூல் செந்தி லாண்டவன் திருச் சந்நிதானத்தில் அரங்கேற்றப்பெற்ற தென்பதை,

"சீரு லாவிய செந்தில் நகரிடை
ஏரி னோடரங் கேற்றிய இந்தநூல்" (1048)

என்பதனால் உணரலாம்.

முருகக் கடவுள்பால் இப்பெரியாருக்கு உள்ள அன்பு இந்த நூலைப் பாடியதனாலேயே விளங்கும். இடையிடையே அப்பெருமானுக்கும் தமக்கும் உள்ள அன்புத் தொடர்பைச் சில வகையான குறிப்புக்களால் இவர் புலப்படுத்துகிறார்.

" தூவடிவேற் குமரேசன் அடிய னேன்புன்
சொல்லினுக்கும் இரங்கியருள் சுரக்கும் பெம்மான் " (5)

" நம்மை அளித்திடு கந்தனை " (95)

" பிணியான தறுத்தெனை ஆளுமருட் பெருமான் " (127)

" எமை யாளுடைய செவ்வேள் " (154)

" என்னையா ளுடைய செவ்வேள் " (349)

" எமை யாளுடைய வள்ளல் " (757)

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சமணரோடு வாது செய்த செய்தியை ஓரிடத்தில் உவமையாக எடுத்து ஆளுகிறார். ஆகாயத்தில் நட்சத்திரக் கூட்டங்களுக்கிடையே சந்திரன் உதயமான செய்தியை, " மதுரையைப் போன்ற வானத்தில் இருள் நிரம்பிய மேகங்கள் சமணரைப் போலிருக்க, சிவனடியாரைப் போலத் தாரகைக் குலம் விளங்க, அக்கினியைப் போன்ற செவ்வானத்தினிடையே திருஞான சம்பந்தர் இட்டு வேகாமல் இருந்த ஏட்டைப் போலப் பிறைச் சந்திரன் ஒளி விட்டது " (639) என்று வருணிக்கின்றார்.

குருலிங்க சங்கம பக்தியிலே தலைசிறந்த ஆசிரியர் சைவ சித்தாந்த நுண்பொருள்களிற் சிலவற்றை ஏற்ற இடங்களிலே புலப்படுத்திச் செல்கிறார்.

பரமசிவம் ஆனந்த மயமாகி எங்கும் வியாபகமுள்ளதாகி எல்லாவற்றிற்கும் மேலான பொருளாய் இருப்பதென்பதும் (2), சிவபெருமானே கருணையினால் ஆசிரியராக எழுந்தருள்வாரென்பதும் (9), ஆணவமலம் நீங்கப் பெற்றார் இன்புறுவரென்பதும் (517), முத்தியாவது இன்ப வியாபகமாக இருப்பதென்பதும் (1047), சிவாகமத்தால் உணர்த்தப்படுவன பதிபசுபாசம் என்னும் மூன்றும் (40) என்பதும், சிவபிரானுடைய திருவருளே சக்தி வடிவாக இருப்பதென்பதும்(2, 3),

அச்சக்தியே ஞான மயமாகி ஐந்தொழிலுக்கும் ஆதாரமாகியுள்ளது என்பதும் (3) பிறவும் இவர் உணர்த்தும் சித்தாந்த நூற் செய்திகள்.

பஞ்சாட்சரம், திருநீறு என்பவற்றையும் (1046), சிவனடியார்களையும் (1046-7), சமயாசாரியர்களையும் (7) வாழ்த்துகின்றார்.

கதைப் போக்கில் சிவபரத்துவத்தை விளக்கும் பல செய்திகள் இதில் உள்ளன. அவை யெல்லாம் மூல நூலிலும் காணப்படுவன.

ஏற்ற இடங்களில் அரிய நீதிகளை எடுத்துக் காட்டுதல் காவிய ஆசிரியர்களுடைய மரபு. விதி வலிது என்பதை இவர் பல இடங்களில் பல வகையாகப் புலப்படுத்துகிறார்.

தவத்திற் சிறந்த காசிப முனிவர் மாயையின் உருவத்தைக் கண்டு காமநதியூடே மூழ்கினார். அது விதியின் பயன் என்று கூறுவாராகி ஆசிரியர்,

> "முன்னைவினை யாலிடர்செய் காமநதி யூடே
> மூழ்கின னியாரெனினும் முன்னைவினை போமோ" (203)

என்கிறார்.

பானுகோபன் தேவலோகத்தின்மேல் படையெடுத்து வருகிறான். இந்திரனும் இந்திராணியும் தேவலோகத்தை விட்டுப் போய்விட்டார்கள். அவர்களுடைய இளமைந்தனாகிய சயந்தன், அசுரன் படையெடுத்து வருவதைக் கேட்டுத் துணையின்றி நிற்கும் தன் நிலைமையை நினைந்து வருகிறான். கடைசியில் விதியை எண்ணி அவன் சண்டைக்கு எழுகிறான்.

> "தந்தையும் இல்லை பெற்ற தாயிலை குரவ னனை
> எந்தையும் இல்லை செய்வ தென்னென இதயத் துன்னி
> **முந்தையில் விதியை யாரே முடித்திட வல்லார் ஈண்டு**
> வந்தது வருக வென்னா வானவ ரோடும் போனான்" (333)

இங்கே ஆசிரியர் விதியின் வலிமையைப் புகுத்தி யிருக்கிறார்.

சிங்கமுகன் சூரனுக்கு அறிவுரை கூறுகின்றான். சூரன் கேட்கவில்லை; சினம் கொள்கிறான். அப்போது சிங்கமுகன்,

" சற்றுநம் மொழியுட் கொண்டிலன் அந்தோ
தலையினில் விதியையார் தவிர்த்திட வல்லார் " (451)

என்று விதியின் பெருமையை நினைக்கிறான்.

தக்கனுடைய ஆணைக்கு அடங்கித் தேவர் சிவபிரானைப் புறக்கணித்த செயலுக்கும் விதிதான் காரணமாக நிற்கின்றது.

" என்சொல் கேனிதை என்சொல் கேனெம
தீசன் மேன்மை அறிந்துமப்
பொன்செ யஞ்சடை யானை யெள்ளிய
புல்லர் பட்டது கண்டுநீள்
கொன்செ யுந்துயர் மாய வாழ்வு
குறித்தி தற்கும் இசைந்தனர்
மின்செய் வானவர் ஆத லால்வினை
வெல்ல வல்லவர் இல்லையே ! " (874)

அமைச்சருடைய இயல்பு (435), வீரருடைய இயல்பு (562) முதலியவற்றை அங்கங்கே இப்பெரியார் குறிப்பித்துள்ளார்.

காவியங்களில் விரிவாக உள்ள வருணனைகளை இவர் அமைக்கவில்லை. சுருங்கிய நூலில் அவற்றிற்கு இடம் இல்லையன்றோ? ஆயினும் சில இடங்களில் சூரியோதயத்தையும் (454, 516, 656), சூரியாஸ்தமனத்தையும் (638, 799), சந்திரோதயத்தையும் (570, 639) அழகாகவும் சுருக்கமாகவும் வருணித்திருக்கிறார்.

சொற்பொருள் அணிகளும் வழி யெதுகை முதலிய தொடை நயங்களும் விரவ இந்நூற் செய்யுட்கள் அமைந்திருக்கின்றன.

" கன்னற் சிலைவே டனைவிடுத்து " (81) என்பதில் மன்மதனை என்ற பொருளோடு, இடத்திற்கு ஏற்ப வேடனை

என்ற பொருளும் தொனிக்கின்றது. முதிய உருவங்கொண்டு வந்த முருகவேளைக் குறவருக் கரசன், " நீர் விரும்பியது யாது ?" என்று கேட்க, அவர்,

" இவ்வரை யிற்குமரி தீதற வாடுற வந்தனம் " (1011)

என்று கூறுகிறார். இக்கூற்றில், 'இம்மலையிலுள்ள அழியாத தீர்த்தத்தில் பாவம் போக நீராட வந்தோம்' என்ற பொருளோடு, 'இங்குள்ள வள்ளியென்னும் கன்னியிடம் துன்பமற அளவளாவ வந்தோம்' என்ற பொருளும் தொனிக்கின்றது. விநாயகக் கடவுளுடைய வணக்கத்தில் (4) பல மரங்களின் பெயர்கள் தொனிக்கின்றன.

" **பெரியோன்** காதை **சிறியோ**மிங் கறிய " (20)

" **சிறுமான்** செங்கைப் **பெருமான்** " (42)

" **விலங்கலிடை விலங்காப்புள் விலங்**கு மோகம் " (53)

" **எண்ணலா** னெண்ணுவான் " (604)

" **குன்றுறு**ப்பரங் **குன்ற** மடைந்தார் " (791)

" **இடம்பு** ரிந்தவள் **வலம்புரி** யாகி " (851)

" **பணியான்** பதம் **பணிந்து** " (946)

முதலிய பகுதிகளில் முரணணி வந்துள்ளது.

ஒருவரையோ ஒரு பொருளையோ குறிக்கும்போது நேரே குறிக்காமல் ஒன்றனோடு ஒன்று தொடர்புடையவற்றை ஒரு தொடராக்கிக் குறித்த பொருளைப் புலப்படுத்துவது ஒருவகையான சமற்காரம். வீரவாகு தேவரை,

" பங்கமிலா நீடிலங்கை மூடு மல்லின்
பகைவனவன் பகைவனவன் பகைவ னென்னேன் " (6)

என்று இவ்வாசிரியர் சமற்காரம்படக் குறிக்கின்றார். வேறோரிடத்தில் அவரையே,

" ஆனைதன் பின்னவன் பின்னவன் " (614)

என்பர். பானுகோபனை,

"மான்மகன் மகன்மகன் மகன்" (674)

என்பதும் இவ்வகையைச் சார்ந்ததே.

"காற்கமலந் தலைக்கமலம் பொருந்தத் தாங்கிக்
கைக்கமலங் குவித்தருந்துங் கமலந் தீர்வாம்" (3)

என்பதில் கமலம் என்ற சொல்மாத்திரம் நான்கு முறை அடுக்கி வந்தது.

"பூவடியாம் இருபோதும் மூன்று போதும்" (5)

என்பதில் போது என்ற சொல் இருமுறை வந்தது. இவை சொற்பின் வருநிலையணி.

பலவகையான மடக்குகள் அமைந்த செய்யுட்கள் பல உண்டு. அவற்றுட் சில வருமாறு :

"தொண்டைவள நாட்டுளது தொண்டைச் செவ்வாய்" (15)

"இன்னலா னவை நவைகள்" (21)

"மலர் விதிக்தும் விதிக்து முறை" (43)

"இப்படியிப் படிவானத் திருந்து" (44)

"இருந்தவரா யிருந்தவர்கள்" (56)

"விடையை யுதவி விடையை யிழிந்து" (81)

"நரசிங்கக் குட்டிதலைக் குட்டி யுதைத்து" (122)

"இல்லை யில்லைநிதி" (222)

"எரிமுக னிதுதெரிந் தெரிமுக னாகியே" (608)

"பல்ல வங்களாற் பல்ல வம்புரிந்து" (671)

"கண்டானிது மண்டாறிரு கண்டானுடை வள்ளல்" (773)

"மற்றவ் வேலையில் வேலையில் வேலை" (787)

"கந்தரங் கடுத்த கந்தரக் கடவுள்" (829)

"பன்னி யன்னவன் பன்னியங் கிருந்தனள்" (850)

“ மாலை சேர்குழன் மாலை நோக்கினர்
மாலை எய்தினர் மாதவர் ” (903)

48, 83, 89, 112, 115, 396, 563, 739, 755, 793, 846, 888, 917, 960, 979, 998, 1028 முதலிய செய்யுட்களையும் பார்க்க.

உலக வழக்கில் வழங்கும் சிலவற்றை ஆசிரியர் ஆண்டிருக்கிறார். தம்மால் முடிப்பதற்கரிய ஒரு செயலைப் பற்றிப் பேசும் போது, “ எனக்கும் இதற்கும் எவ்வளவோ தூரம் ” என்று சொல்வது உலக வழக்கு. இதனை,

“ எனக்குமிக் கதைக்கும் நாடின்
எத்தனை தூரம் ஆமால் ” (14)

என்பதில் அமைத்திருக்கிறார். ஏதேனும் ஒன்றிற் பயிற்சி யுடையாரென்பதை, “ அவருக்கு அது வரும் ” என்று குறிப்பது வழக்கு. இந்நூலில்,

“ வருமோ வேதமென, வருமென்ன ” (121)

என்பதில் அது வந்துள்ளது. பெருங் கூட்ட மென்பதை “ எள் போட்டால் எள் விழாது ” என்று சொல்வது வழக்கு.

“ எள்ளிடம்புரை வெள்ளிடை யின்றியே
வெய்ய தானவர் சூழ்தர ” (381)

என்பதில் இவ்வழக்கை ஆசிரியர் ஆண்டுள்ளார்.

இவருடைய வாக்கில் பல புது வகையான சொற்பிரயோகங்களைக் காணலாம். அதன்பின் என்பதை ‘ அதுபின் ’ (20, 123, 261, 364, 393, 1015) என்று பல இடங்களிலும் ஆள்வர். வீழ் என்னும் பொருளில் வீள் (366) என்பதும், வீழ்ந்த என்னும் பொருளில் வீண்ட (558) என்பதும் வந்துள்ளன. குளிர்ச்சியைக் குளிர்மை (195) என்றும், காற்றை மாருதி (753) என்றும், தோழியை நண்பி (1018) என்றும் சில இடங்களில் குறிப்பர். துவள் என்பதனடியாகத் துவளம் என்ற தொழிற் பெயரையும் (813), கொல் என்பதன் அடியா

கக் கோறு (340) என்னும் தொழிற் பெயரையும் இவர் அமைத்து வழங்குகிறார். ‘ உந்து ’ என்ற சொல்லைப் பல இடங்களில் உயர்ந்த என்னும் பொருளில் உபயோகிக்கிறார். அற்றம், ஆனவர், ஈடு, குயிற்றல், கொன், தற்று, மெத்தும் முதலிய சொற்களை அடிக்கடி இவர் வாக்கில் காணலாம்.

கந்த புராணத்தில் வரும் சொற்கள் பலவற்றை அப்படி யப்படியே அவ்வவ்விடங்களில் இவர் எடுத்தாண் டிருக்கிறார். விரிந்திருக்கும் அப்புராணக் கதையைச் சுருக்கிச் சொல்லும் போது செறிவுடைய சொற்களை வழங்குதல்இன்றியமையாதது. இவ்வாசிரியருடைய செய்யுட்கள் பொருட் செறிவும் இன் னோசையும் உடையன. பல சந்தங்களையும் வழியெதுகை முதலிய தொடை நயங்களையும் உடைமையால் இச்செய் யுட்கள் ஓசை நயத்திற் சிறந்து விளங்குகின்றன. அவசிய மில்லாத எதனையும் இந்நூலிற் காணல் அரிது. மூலக் கதைப் போக்கு அம்முறையே அமையும்படி வைத்து, கந்த புராணத் திலுள்ள பதினாயிரம் பாடல்களையும் படித்து உணரத்தக்க பொருளை 1049 பாடல்களால் எளிதில் உணரும்படி வைத்த இவ்வாசிரியருடைய நன்முயற்சி தமிழ் பயில்வோருக்குப் பேருபகாரமாக விளங்குவதாகும்.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

கந்தபுராணச் சுருக்கம்

கடவுள் வணக்கம்

விநாயகர் காப்பு

(கலிவிருத்தம்)

பொங்கு கந்த புராணச் சுருக்கநூல்
இங்கி சைத்திட வின்பொடு முற்றுவான்
மங்கை பாலகன் மாதங்க மாமுகப்
புங்க வன்றுணைப் பொற்பதம் போற்றுவாம். க

சிவபெருமான்

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

2. சீர்கொண்ட வானந்த மாகி யெங்கும்
செறிவாகிப் பரமாகித் திரம தாகி
ஏர்கொண்ட கருணைதிரு வுருவ மாகி
எழில்கொண்ட மலைமகளை யிடத்திற் கொண்டோன்

---

1. பொங்கு - புகழ்மிக்க. முற்றுவான் - நிறைவேறும் பொருட்டு. மங்கை - உமாதேவியாருடைய. மாதங்க மாமுகப் புங்கவன் - யானைமுகக் கடவுளாகிய விநாயகர். பொன் - பொலிவு.

2. எங்கும் செறிவு ஆகி - இடையீடின்றி எங்கும் நிறைந்த பொருளாகி; அகண்ட பரிபூரணப் பொருளாகி. பரம் - மேலாம் பொருள். திரமது ஆகி - நிலைபெற்ற பொருளாகி. ஏர் - அழகு, எழுச்சி. கருணையே தன் திருவுருவமாகப் பெற்று. இதனை, உருவ மாகி எழில்கொண்ட மலைமகளை என உமாதேவியாருக்கு ஏற்றி உரைப்பt

கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த னாதிக்
கடவுளர்வந் தடிபரவுங் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவ னடியைத் தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம். ௨

பராசத்தி

3. மாற்கரிய செம்பதத்தோன் றேவி யாகி
வல்வினையே னெனதாவிக் காவி யாகி
மேற்கருணைத் திருவுருவ முடையா ளாகி
வித்தகமா யைந்தொழிற்கும் வித்தாய் நின்ற
சேற்கருங்கட் டளவநகைக் களபக் கொங்கைச்
சிற்பரையின் கெமையாளு முமையாள் செம்பொற்
காற்கமலந் தலைக்கமலம் பொருந்தத் தாங்கிக்
கைக்கமலங் குவித்தருந்துங் கமலந் தீர்வாம். ௩

தும் பொருநதும். சிவபெருமானுடைய திருவருளே சத்தியென்பது சாத்திரத் துணிபு. "கருணைத் திருவுருவ முடையா ளாகி" என்பர் பின். "அருளது சத்தி யாகும் அரன்றனக்கு" (**சிவஞானசித்தியார்.**) இடத்தில் - வாமபாகத்தில். தாழாத பெருங்கதி - வீட்டு நெறி.

3. மாலுக்கு அரிய. கருணைத் திருவுருவம் உடையாள் : "கருணை திரு.வுருவ மாகி எழில்கொண்ட மலைமகளை" (2) என்றார் முன்னும். வித்தகமாய் - ஞானமாகி. ஐந்தொழில் - சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியங்கள். சத்தியே சிவத்தின் பஞ்சகிருத்தியத்திற்கும் காரணமாதலை, "பரந்தபரா பரையாதி பரன திச்சை பரஞானங் கிரியைபர போக ரூபம், தருங்கருணை யுருவாகி விசுத்தா சுத்தத் தனுகரண புவனபோ கங்கள் தாங்க, விரிநதவுபா தானங்கள் மேவி ஒன்றாய் விமலமாய் ஐந்தொழிற்கும் வித்தாய் ஞாலத், தரந்தைகெட மணிமன்று ளாடல் காணும் அன்னை" (**சிவப்பிரகாசம்**) என்பதனால் உணரலாம். சேல் கருங்கண் - சேல்மீனைப்போன்ற கரிய திருவிழியை உடைய. தளவ நகை - முல்லையரும்பைப போன்ற பற்கள். களபம் - கலவைச் சந்தனம். காற்கமலம் - திருவடியாகிய தாமரையை. தலைக்கு அமலம் பொருந்த - தலைக்குத் தூய்மை அமையும் படியாக. அமலம் பொருந்தத் தலைக்குத் தாங்கி என்றுகூட்டி, யாம் மலததினின்றும் நீங்கித் தூய்மை பெறும்படியாகச் சிரத்தினிடத்தே தாங்கி என்று பொருள் கொள்வதும் பொருந்தும். தலைக்கு : உருபு

விநாயகக் கடவுள்

4. மாவேலை யாலமதை யடக்கித் தன்னுள்
மண்டுலக மண்டமெலாம் வளர்ந்து தானோர்
காவேயின் முன்னுதித்த வரசிற் றோன்றிக்
கடம்புபுனை குருந்தினுக்குத் துணைய தாகித்
தூவேதந் தலைகாண்டற் கரிய தாகித்
துன்பமுறு பிறவியெனுந் துகள்சேர் வெய்யில்
ஆவேனை தன்னடியா நிழலிற் சேர்த்த
அத்திதனைப் பத்திசெய்து முத்தி சேர்வாம். ௪

மயக்கம். கைக் கமலம் குவித்து - கையாகிய தாமரைகளைக் குவித்து; இங்கே கையைக் கமலமென்றது தற்புகழ்ச்சியன்று; பராசக்திக்கு முன் குவியும் புண்ணியம் உடைமைபற்றிக் கூறியது. அரு துங்கம் மலம் தீர்வாம் - பரிசுத்தம் இல்லாத மும்மலங்களினின்றும் நீக்கமடைவோம். அருநதுங்கம் என்பது துங்கமரிய எனப பொருள்பட்டது; அருமை இன்மை மேல் நின்றது, "அருங்கேடன்" (திருக்குறள்) என்பது போல.

இச்செய்யுளின் ஈற்றடியில சொற்பின் வருநிலையணி வந்தது.

4. மா வேலை ஆலமதை அடக்கி - பெரிய கடலில் எழுந்த விடத்தைத் தம் திருக்கழுத்திலே அமையச் செய்து. உலகத்திலும் அண்டம் எல்லாவற்றிலும் வளர்ந்து. கா வேயில் முன் உதித்த அரசில் தோன்றி - சோலையிலுள்ள மூங்கிலிடத்து முன் ஒரு காலத்தில் தோன்றிய இறைவரிடத்தே அவர் திருக்குமாரனுக உதித்து. திருநெல்வேலியில் சிவபெருமான் மூங்கிற் புதரில் தோன்றினர் என்பது புராண வரலாறு. கடம்புபுனை குருந்தினுக்கு - கடப்ப மாலையை அணிநத பிள்ளையாகிய முருகனுக்கு; குருந்து : "சூரழ விம்மியழுங் குருந்தை" (கந்தரலங்காரம்.) துணை - சகோதரன். வேதம் தலைகாண்டற்கு அரியது : "உரைசெய் மறைக்குந் தலைதெரி யாவொரு கொம்பை" (புகலூரந்தாதி.) வெய்யில் ஆவேனை - வெய்யிலில் அமைந்து கிடக்கும் என்னை. அததி - யானை முகமுடைய விநாயகர்.

இச்செய்யுளில் மா, வேல், ஆலம், வேய், அரசு, கடம்பு, குருநது, அத்தி என்னும் மரபபெயர்கள் ஒருங்கு தொனித்தன; இவற்றுள வேயும் கடம்பும் மரங்களையே குறித்து நின்றன.

முருகக் கடவுள்

5. தேவர்குலப் பெருங்கமல மிடுக்க ணான
திமிரமகன் றளியோடு சிறந்து வாழ
மாவலிசே ரவுணர்குலக் குவளை வாடி
மண்ணினிடைச் சுருங்கியிட வந்த பானு
தூவடிவேற் குமரேச னடிய னேன்புன்
சொல்லினுக்கு மிரங்கியருள் சுரக்கும் பெம்மான்
பூவடியா மிருபோது மூன்று போதும்
பூசைபுரிந் தன்பினொடு புகழ்ந்து வாழ்வாம். ரு

வீரவாகு தேவர்

6. பொங்குகிரி களிற்றலைமை யோதும் போது
பொற்புடைய பொற்கிரிமுன் னிற்கு மாபோல்
தங்குதிறற் புகழ்வீரர் தம்மை யெண்ணின்
தானேமுன் னெண்ணவருந் தலைமை யாளன்
பங்கமிலா நீடிலகை மூடு மல்லின்
பகைவனவன் பகைவனவன் பகைவ னானோன்
மங்கலிலாப் புகழ்வீர வாகு வாய
வரிசிலைக்கைக் குரிசிலையாம் வணங்கல் செய்வாம். சு

---

5. தேவர் குலமாகிய பெரிய தாமரை. திமிரம் - இருள். அளியோடு - அன்பாகிய வண்டுகளோடு. மா வலி - மிக்க வன்மை. அசுரர் கூட்டமாகிய குவளை மலர்கள். பானு - சூரியன். முருகக் கடவுளைச் சூரியனாக உருவகம் செய்தார். பூவடி - பொலிவுபெற்ற திருவடி. போது - மலர், வேளை. பூசை புரிதல் மெய்க்கும் அன்பு உள்ளத்துக்கும் புகழ்தல் உரைக்கும் உரியன; திரிகரணத்தாலும் வழிபடுவோம் என்றபடி.

6. பொற்பு - அழகு. பொற்கிரி - மேருமலை. அல்லின் பகைவன் - சூரியன்; அவன் பகைவன் - சூரபன்மாவின் மகனாகிய பானுகோபன்; அவன் பகைவனானோன் - அவனை அழித்த வீரவாகுதேவர். வரிசிலைக் கைக்குரிசிலை - விரிந்த வில்லைத் திருக்கரத்தில் ஏந்திய தலைவரை.

சைவசமயாசாரியர்கள்

7. வெங்குருவிற் சற்குருவா யுதித்துக் கூடல்
மீனவன்மேல் வினைதீர்த்தோன் விரைத்தாள் போற்றி
துங்கமுறு மலைகடலிற் சிலையு தான
தோணியில்வந் தவன்பாத தூளி போற்றி
எங்கள்பிரான் றனையிருளிற் பரவை வாசற்
கேவல்கொண்டோன் பதப்பதும விருதாள் போற்றி
புங்கவர்சூழ் திருவாத வூரில் வந்த
புண்ணியனு ரிணையடிகள் போற்றி போற்றி. எ

ஞானப்பிரகாச தேசிகர்

8. கடியதிரி மலவிருளைக் கடிய ஞான
கரமுதவ வெதிர்செறிந்து கண்டோர் தங்கள்
வடிவுடைய விதயசரோ ருகங்க ளெல்லாம்
மலரவவ மதிநிலவு மழுங்கித் தாழப்
படியடியர் கண்டுதொழ மண்டு சீர்த்திப்
பரன்கமலை யெழுந்தவருட் பானு வெண்மைப்
பொடியணியு மெழின்ஞானப் பிரகா சன்றன்
பூங்கமல மலரடிகள் போற்றி போற்றி. அ

---

7. வெங்குரு - சீகாழி. கூடல் - மதுரை. மீனவன் - பாண்டியன். வினை தீர்த்தோன் - திருஞானசம்பந்தர். விரை - நறுமணம். சிலையுதான தோணி - அரசன் கட்டிவிட்ட கல்லாகிய தோணி; தோணியென்றது அக்கல்லே தெப்பமாக மிதந்த அற்புதத்தைக் கருதி நின்றது. தோணியில் வந்தவன் - திருநாவுக்கரசர். ஏவல் கொண்டோன் - சுந்தரமூர்த்தி நாயனர். பதப்பதும இருதாள் - அன்றலர்ந்த செவ்வியையுடைய தாமரை போன்ற இரண்டு திருவடிகளில்; பதம் - பக்குவம். புங்கவர் - தேவர். புண்ணியனுர் - மாணிக்கவாசகர்.

8. ஞானப்பிரகாசரைச் சூரியனுக உருவகம் செய்கின்றார்.

திரிமல இருளை - மும்மலமாகிய இருட்டை. ஞானகரம் - ஞானமாகிய கிரணங்களை. இதய சரோருகங்கள - இருதயங்களாகிய தாமரைகள். அவ மதி நிலவு - அடியாரல்லாத ஏனையவர்களுடைய வீணை அறிவாகிய நிலவு. படி - உலகம். கமலை - திருவாரூர். வெண்மைப் பொடி - திருநீறு.

ஞானசம்பந்த தேசிகர்

9. சீரணியு நுதலின்விழி மழுமா னுகம்
திருந்துமெரி பொருந்துவிடந் தெரிந்தி டாமல்
தாரணியன் பரையாள வவர்போல் வந்த
சைவசிகா மணியெவர்க்குந் தலைவ னெங்கோன்
காரணியு நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியுமிரு கடைக்க ணாளன்
பார்புகழு ஞானசம் பந்த னெந்தை
பரமனிரு சரணமலர் பரவி வாழ்வாம். ௯

கச்சியப்ப சிவாசாரியர்

10. போதமுறு சூதமுனி புகன்ற காந்தப்
புகழ்க்கடலிற் படிந்ததன்கட் பொருளை தாண
மேதகுவண் புனலருந்தி வைய முய்ய
வெய்யதுயர்ப் பிறவியெனும் வெம்மை தீரத்
தாதவிழ்பூம் பொழிற்காஞ்சிக் குவட்டி லேறிச்
சலதியமு தினைநிகர்செந் தமிழ தான
காதன்மழை பொழிந்தவருட் கொண்ட லாண
கச்சியப்ப னிருபாத முச்சி வைப்பாம். ௧0

---

9. நெற்றிக்கண் முதலியவற்றை மறைத்துச் சிவபெருமானே ஞானசிரியராக எழுந்தருளினரென்று கூறுகின்றார். விழியும் மழுவும் மானும் நாகமும் எரியும் விடமும் தெரிந்திடாமல். அவர்போல் வந்த - அந்த அடியார்களைப்போல மானிட வேடம் தாங்கிவந்த. கமலை - திருவாரூர். திருஞானசம்பந்தன் - தருமபுர ஆதீன முதல் ஞானசிரியர்.

10. கச்சியப்ப சிவாசாரியாரை மேகமாக உருவகம் செய்கின்றார். போதம் - ஞானம். காந்தப் புகழ்க் கடலில் - ஸ்காந்த புராணமாகிய புகழ் மிகுந்த கடலில். பிறவியெனும் வெம்மை: “ பிறவியெனுந் துகள்சேர் வெய்யில் ” (4) என்றார் முன்னும். காஞ்சிக்குவட்டில் - காஞ்சீபுரமாகிய மலையில். சலதி அமுதினை நிகர் - கடலிற் பிறந்த அமுதத்தை ஒத்த. கச்சியப்பன் - கந்தபுராணத்தை இயற்றிய கச்சியப்ப சிவாசாரியர்.

நூல் வந்த வழி

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

11\. நன்புவி யிடத்து மிக்க நைமிச வனத்து வாழும்
துன்பில்சீர் முனிவர் கேட்பச் சூதனங் குரைத்த காந்தம்
இன்புறு கச்சியப்ப னியம்பினன் றமிழா லன்னான்
அன்புறு தமிழைப்போற்றி யறிந்தவா சுருக்கிச் சொல்கேன். கக

அவையடக்கம்

12\. கருக்கடன் முருக்கி முத்திக் கரைதரு காந்த நூலைச்
சுருக்கவே கல்வி யில்லாத் தொண்டனேன் றுணிந்த வாறு
திருக்கில்வான் முழுது மிங்கோர் செங்கையி லடக்கு வேனென்
றுருக்கர மில்லா னெண்ணு மூக்கமே போன்ற தன்றே.

13\. அத்தமுஞ் சொல்லுஞ் சொல்லு மாதிமா தாத லானும்
மெத்திய வனப்பு வேலோன் வியன்கதை யுறுத லானும்
பித்தனேன்றனதுபாட்டிற் பிழைகள்வந்திடினுந்தீர்த்திட்
டுத்தமர் கொள்வ ரென்னு முரத்தினு லுரைக்கலுற்றேன்.

11\. அறிந்தவா - யான் அறிந்தபடி.

12\. கரு - பிறவி. முருக்கி - வற்றச்செய்து. தொண்டனேன் - ஏவலாளாக இருக்கும் தகுதி ஒன்றே உடையேன். திருக்கு இல் - மயக்கமின்றித் தெளிந்த. வான் - ஆகாசம். உரு கரம் இல்லான் உருவமுள்ள கை ஒன்றும் இல்லாதவன். ஊக்கம் - உள்ள எழுச்சி.

13\. சொல்லினது பொருளும் சொல்லும் முறையே ஆதியும் மாதும் ஆதலாலும்; ஆதி - சிவபெருமான்; மாது - பராசக்தி; "சொல் வடிவாய்நின் னிடம்பிரியா விமயப் பாவை, தன்னையுஞ்சொற் பொருளான வுன்னையுமே" (திருவிளையாடல், இடைக்காடன். 10); "சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன், புல்லும் பரிமளப் பூங் கொடியே" (அபிராமியந்தாதி, 28.) மெத்திய வனப்பு - மிக்க அழகையுடைய; மாரனைக் குற்சிதம் செய்யும் பேரழகுடையோன் என்று "குமரன்" என்ற திருநாமத்துக்கு உரை வகுப்பர். உரம் - துணிவு.

14. தனக்கிணை தானே யான சம்பந்தன் கமலை வேந்தன்
கனக்கவே யென்பா லன்பாற் கருணைவைத் திடுத லாலே
உனற்கருங் காந்தந் தன்னை யுரைத்தனன் சுருக்கி யல்லால்
எனக்குமிக் கதைக்கு நாடி னெத்தனை தூர மாமால். கச

புராண வரலாறு

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

15. விரிகின்ற கடற்புன லுண் டிருண்டு மின்னி
விண்மூடி வருங்கருமைக் கொண்மூ வீறி
எரிகின்ற வொளித்தாவ மொளிப்ப வோங்கும்
எழினந்தி வரையும்ப ரிம்பர் வாழச்
சொரிகின்ற வெள்ளமிகு பாலி சூழ்ந்த
தொண்டைவள நாட்டுளது தொண்டைச் செவ்வாய்ச்
சரிகின்ற வளைத்தளிர்க்கைம் மடவார் மேவும்
தடமாட நெடுவீதித் தமிழ்சேர் காஞ்சி. க

16. இன்னபரி சென்னவெழி லன்ன மேய
இறையாலு மெவராலு மியம்ப வொண்ணு
அந்நகரின் வளர்பெருமை சொன்னு லென்னல்
அடங்குமோ வடங்காதா லதன்கண் முன்னுட்

---

14. உனற்கு அரும் - உன்னுதற்கு அரிய. 'எனக்கும் இதற்கும் எத்தனை தூரம்' என்பது உலக வழக்கு.

15. கொண்மூ - மேகம். தாவம் - வெம்மை. நந்திவரை - நந்தி மலையில். உம்பர் - மேலே. இம்பர் - இவ்வுலகம். பாலி - பாலாறு. காமதேனுவின் பாலே நதியாக வந்தமையின் பாலாறு என்னும் பெயர் பெற்றது. தொண்டை - கோவைக் கனி. தட மாடம் - விசாலமான மாடங்களையுடைய.

16. அன்னம் மேய இறை - பிரம தேவன். பொன் - திருமகள். திருமார்பன் - திருமால். கமடமாகி - ஆமையுருவங் கொண்டு. கச்ச

பொன்னவிருந் திருமார்பன் கமட மாகிப்
புரங்கடிந்த கடவுளடி போற்றி வாழ்ந்த
நன்னலஞ்சேர் கச்சபா லயமென் றோதும்
நாமவா லயமொன்று நண்ணிற் றன்றே. உ

17. அனையசின கரமதனின் மதனை வென்ற
அமலனிரு கமலமல ரடிகள் போற்றிப்
புனையுநறுந் துழாய்மௌலிக் கடவுள் தந்த
போதனுறு போதுவளர் போத மேவும்
முனைவர்பல ரடைந்தவன்செம் பதங்கள் தாழ்ந்து
முண்டகமேன் முதல்வவொரு முதுசீர்க் கானம்
தனையினிதி யாங்கடவம் புரிந்து வாழச்
சாற்றுகென வனையானித் தன்மை செய்வான். ௩

18. ஒருதருப்பை யெடுத்துவளைத் தவனி மீதில்
உருட்டியிது நின்றவனத் துறைதி ரென்ன
அருமுனிவ ரெல்லோரும் பின்ன ரேக
அதுசென்று துன்றியவோ ரடவி யூடே
மருவியவ ணின்றிடவங் கிருந்தா ரன்ன
வனநைமி சாரணிய வனமென் றுகப்
பொருவில்புகழ் மாதவரோர் வேள்வி யாங்கே
புரிந்தமலம் பொருந்தியினி திருந்த போது. ௪

பாலயம் - திருமால் கூர்மாவதாரம் எடுத்தபோது சிவபெருமானைப் பூசித்த தலம்; கச்சபம் - ஆமை.

17. சினகரம் - கோயில். மதனை வென்ற அமலன் - சிவபெருமான். துழாய் மௌலிக் கடவுள் தந்த போதன் உறு போது - திருமால் நாபிக் கமலத்தின் வழியே வெளிப்படுத்திய பிரமதேவன் வந்த சமயத்தில். போதம் - அறிவு. முனைவர் - முனிவர். அவன் - பிரம தேவனது. முண்டகம் - தாமரை. கானம் - வனம். தவம் புரிந்து வாழக் கானந்தனைச் சாற்றுக.

18. துன்றிய - சேர்ந்த. ஓர் அடவியூடே மருவி - ஒரு காட்டில் பொருந்தி. அமலம் பொருந்தி - மலநீக்கத்தைப் பெற்று.

19. சூதமுனி யீதறிந்து வரனு நேர்போய்த்
தொழுதன ரங் கிழுதனலிற் றேய்ந்தா லொப்ப
மேதகுமன் புளமுருக முகமன் கூறி
வீறுதம தாச்சிரம மேவச் சேர்த்திச்
சோதிமணிப் பெரும்பீட மொன்று நாப்பண்
துலங்குறவிட் டதன்மீது துகளி லாவம்
மாதவனை யினிதிருத்தி யருத்தி யோடு
வல்லையிலர்க் கியமுதல வழங்கி னரால். ௫

20. மற்றதுபின் பின்னனெடுஞ் சடிலச் சென்னி
மன்னியமா தவரனையான் மருங்கு வைகிப்
பற்றலர்தம் புரமெரிய நகைத்த செவ்வாய்ப்
பாலவிழித் தனிக்கடவுள் பால னான
செற்றநெடுங் கதிர்வேற்கைப் பெரியோன் காதை
சிறியோமிங் கறியவுரை செய்வா யென்னக்
கொற்றமுனி யதுவினவி விழிகள் வெள்ளம்
கொள்ளவவ ரோடின்ன கூற லுற்றான். ௬

21. ஒன்னலார் சோரிகுடித் தொளிருஞ் செவ்வேல்
ஒருவனது பெருங்காதை யுரைப்போர் கேட்போர்
முன்னெலாம் புரிந்தவினை யனைத்துந் தீர்த்து
முத்திதரு மதுகேட்ப முயன்றீர் மன்னோ

---

19. இழுது - நெய். அன்பு உளம் உருக - அன்பையுடைய உள்ளமானது உருக. முகமன் - உபசார வார்த்தைகள். மணி - மாணிக்கம். துலங்குற இட்டு. அருத்தி - ஆர்வம். வல்லையில் - விரைவில்.

20. மற்றதுபின் - அதன் பிறகு ; மற்று : அசை நிலை. பின்னல் நெடுஞ் சடிலம் - பின்னிய நீண்ட சடை. அனையான் - சூத முனிவர். பால விழி - நெற்றிக் கண். செற்றம் - கோபம். கொற்றமுனி - தவத்தில் வெற்றியையுடைய சூத முனிவர் ; "ஐம்புலனும் வென்றான்றன் வீரமே வீரம்" ஆதலின் புலனை வென்று நின்ற முனிவரைக் கொற்ற முனி என்றார். அது வினவி - நைமிசாரணிய முனிவர்கள் வேண்டு கோளைக் கேட்டு.

21. ஒன்னலார் சோரி - பகைவரது ரத்தத்தை. காதை தீர்த்துத் தரும் என்க. பின்னல் - பின்னிய சடை. பேசுகேன் -

பின்னலான் மறைந்தபிடர் முனிவீர் நீவிர்
　　பெருங்காத லொடுகேண்மின் பேசு கேனென்
றின்னலா னவைநவைக ளவையும் போக்கும்
　　ஏதமில்சீர்ச் சூதமுனி யியம்ப லுற்றான். ௭

22. முற்காலத் தரன்புகன்ற மறைகள் யாவும்
　　முதல்முடிவு தடுமாற முனிவர் தேவர்
நற்காருந் தரையிருந்த மாக்க ளெல்லாம்
　　நல்லறிவு நீங்கிமய லண்ணி னாராய்
அற்காள கண்டனையு மறந்து வீறும்
　　அறமாற்றி மறமாற்ற வாற்றன் மாயோன்
விற்காமர் நெடும்புருவ வாணி கேள்வன்
　　விண்ணவர்சூழ் தரக்கயிலை மேவி னரால். ௮

23. விண்ணவர்கண் மகுடமுடி தடவுஞ் செந்தாள்
　　விறனந்தி தேவரொடு விமலன் பால்யாம்
நண்ணியது புகன்றருள வேண்டு மென்ன
　　நம்பனெதி ரடைந்திறைஞ்சி நவிற்ற லோடும்
தண்ணருளெம் பெருமானிங் கவரை வல்லே
　　தருதியென மீண்டுநெடுஞ் சார்ங்க பாணிக்
கண்ணன்முத லிமையவரை விடுப்ப நாதன்
　　கழறொழுது பணிந்தின்பங் கலந்து நின்றார். ௯

சொல்வேன். இன்னலானவை - துன்பங்கள். நவைகள் - குற்றங்கள்.

22. நற்கு ஆரும் - நன்மை நிறைந்த. மயல் - மயக்கம். அல்காளகண்டன் - இரவைப போன்ற நீலநிறத்தையுடைய கழுத்தையுடைய சிவபெருமான். அறம் மாற்றி மறம் ஆற்ற - தர்மத்தை நீக்கி அதர்மத்தைச் செய்ய. காமர் - விருப்பம்; அழகுமாம். வாணிகேள்வன் - பிரமதேவன்.

23. விமலன் - சிவபெருமான். நவிற்றலோடும் - தேவர்களது வருகையைச் சொன்னவுடன். வல்லே - விரைவில். சார்ங்கபாணிக் கண்ணன் - சார்ங்கம் என்னும் வில்லை ஏந்திய திருக்கரத்தையுடைய திருமால்.

24. நின்றுபுகழ் மான்முதல்வா னவரை நோக்கி
நிமலனும தரசுபுரி நெறிக ளெல்லாம்
நன்றுபெற நடந்தனவோ வென்ன மாயோன்
நாதவுன தின்னருளி னடந்த விந்நாள்
இன்றுமெமக் களித்தருள்வ தொன்றுண் டன்ன
தியம்புவனம் புவிமாந்த ரெவருந் தென்றற்
கன்றுலவுங் குளிர்சோலைக் கயிலை மேய
கடவுணினை மறந்துமறங் கருதி னரால். ௧0

25. நற்போத மவர்படைத்து நினது பாதம்
நணுகும்வகை யருள்சிறிது நல்கு வாயென்
றற்போடு மொழிந்திடலு மொழியாச் சீர்த்தி
அருளாள னொருகலையோ டவனி மேனீ
பொற்போடு வியாதனென வுதித்து வேதப்
புகழ்க்கடலை நான்குவகை புரிந்தி யாரும்
கற்போலுந் திரண்டபுயப் புயலே யின்பக்
கதியடையும் படிபுகறி கடிதின் மாதோ. ௧௧

26. ஓங்குமறை யுணர்ந்துமுளந் தேறு தாரும்
உணராரு மையமகன் றுய்யு மாறு
பாங்குறுமோன் பதிற்றிரட்டிப் புராண முண்டு
பண்டுநாம் நந்தியொடு பகர்ந்தா மன்னுன்
தாங்குபுகழ் படைத்தசனற் குமர னென்னும்
தவமேவு முனிதனக்குச் சாற்றி னுனல்
வாங்குதிரைக் கடலுடுத்த புடவி மீது
மற்றவன்பாற் கேட்டினிது வாழ்தி யென்றான். ௧௨

---

24. தென்றற்கன்று - இளந்தென்றல். மறம் - அதர்மச் செயல்கள்.

25. நல்போதம் - மெய்ஞ்ஞானம். "அவனரு ளாலே யவன்றாள் வணங்கி" (திருவாசகம்) என்று கூறுதலின், 'நினது பாதம் நணுகும் வகை அருள் சிறிது நல்குவாய்' என்றார். யாரும் கதி அடையும்படி. வியாதன் - வியாசன்; வேதத்தை நான்காக வகுத்துப் பிரித்தலின் இப்பெயர் பெற்றார். புகறி - சொல்லுவாயாக.

26. உணராரும் - வேதத்தைத் தெரிந்துகொள்ளாதவர்களும். வாங்கு திரை - வளைந்த அலைகள்.

27. இப்பணியை யப்பணியும் பணிசேர் சென்னி
இறையருள முடிமேற்கொண் டிறைஞ்சி யாங்கே
கைப்பதுமங் குவித்துவிடை கொண்டு நீங்கிக்
கடிதுதன திடத்தடைந்து கடைந்த வேற்கண்
துப்பனைய துவரதர வாணி கொங்கைச்
சுவடுபடும் புயனுதிச் சுரர்கள் யாரும்
ஒப்பகறம் பதம்புகுத விடுத்து வைகி
ஒருகலையோ டிதித்திடவங் குன்னி னானல். கங

28. புண்டரிகக் கடவுள்வழிப் பராச ரப்பேர்ப்
புகழ்மேவு முனிவனிமம் பொழியும் போது
தண்டரளந் திரையிறைக்குங் கங்கை தன்னில்
தன்னிகர்யோ சனகந்தி தடந்தோள் தோய
வெண்டரங்கப் புவிபோற்ற வவர்பாற் றோன்றி
வெதிரிகமா வனத்திருந்து வேதம் யாவும்
பண்டையுணர் வாலுணர்ந்தி யாரு முய்யப்
படிமிசைமா னாக்கராற் பரப்பி னானல். கச

29. ஆங்கதுபின் சனற்குமரன் பாலீ ரொன்பான்
ஆனபுரா ணங்களுணர்ந் தடியேற் கீந்து
தீங்ககல வனைவோர்க்கு முரைத்தி யென்று
செப்பினா னன்னவற்றுட் டிங்கள் வேணிக்

---

27. அப்பு அணியும் - கங்கையை அணிந்த. பணி சேர் - பாம்பை ஆபரணமாகச் சேர்த்த. இப் பணியை அருள. துப்பு - பவழம். புயன் - பிரமன்.

28. புண்டரிகக் கடவுள் - பிரமதேவன். அவன் வழிவந்த பராசர முனிவன். தன் நிகர் யோசனகந்தி - அழகில் தனக்குத்தானே ஒத்த யோசனகந்தி என்பவள். பராசர முனிவருக்கும் யோசனகந்திக்கும் பிறந்தவர் வியாசர். வெதிரிக மாவனம் - பதரீவனம்; இலந்தைக் காடு. வேதம் யாவும் உணர்ந்து பரப்பினான் என்க.

29. ஆங்கதுபின் - அதன் பிறகு. அடியேற்கு ஈந்து : சூத முனிவர் தம்மைக் குறிக்கின்றார். வேணியையும் பாகத்தையும் உடைய இறை; சிவபெருமான்.

கோங்கலர்மென் முலைபாகத் திறைக்கீ ரைந்து
 கொலைத்திகிரிப் படையோற்கு நான்கு கோலப்
பூங்கமலத் தவிசிருந்தோற் கிரண்டு செந்தீப்
 புகழ்த்தபனற் கோரொன்றாப் பொலிந்த வன்றே. ௧௫

30. புரமூன்று மெரிக்களித்தோற் போற்றுஞ் சைவம்
 பொருவில்சீர்ப் பவிடியமே பொற்பு மிக்க
வரமாரு மார்க்கண்ட மிலிங்கங் காந்தம்
 வராகமே வாமனமே மச்சங் கூர்மம்
பிரமாண்ட மிவைகள்சிவ புராண மாயோன்
 பெருங்காதை காருடநா ரதமே விண்டாங்
கருண்மேவு பாகவத மாகு மென்ப
 அயன்காதை பதுமமே பிரம மாமால். ௧௬

31. கூறுபிர மகைவர்த்த மிரவி காதை
 கொடுந்தழலின் கதையாக்கி நேய மாமென்
றாறில்பரன் கதைபத்திற் பத்தர் போற்றும்
 உயர்குமரன் கதைசுருக்கி யுரைத்தா னென்ப
மாறில்புகழ் வதரிகமா வனத்து வைகி
 வாதரா யணனாகி மறைகள் யாவும்
வீறுபெற நான்குநிலை புரிந்த வாற்றால் [ன்.
 வியாதனெனும் பெயர்படைத்தோன் வியன்மா ணாக்க

---

29. திகிரிப்படையோன் - சக்கராயுதத்தையுடைய திருமால். செந்தீக்கு ஒன்று, தபனனுக்கு ஒன்று ; தபனன் - சூரியன்.

30. அளித்தோனை. வரம் - மேன்மை. சிவபுராணங்கள் சைவம், பவிஷ்யம், மார்க்கண்டேயம், லிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம் என்னும் பத்து ; திருமாலைப்பற்றிய புராணங்கள் காருடம், நாரதம், விஷ்ணு புராணம், பாகவதம் என்னும் நான்கு. விண்டு - விஷ்ணு. பிரமனுக்குரியவை பதும புராணம், பிரம புராணம் என்னும் இரண்டு.

31. இரவி காதை - சூரியனுக்குரிய புராணம். அக்கினிக்கு உரிய புராணம் ஆக்கிநேயம். வாதராயணன் : பாதராயணன் என்பதன் திரிபு ; பதரிவனத்தில் இருந்தமையின் வியாசர் இப்பெயர் பெற்றார். என்று - என்று புராண அடைவுகளைக் கூறிவிட்டு. குமரன்

32. வளங்குலவு மலையரையன் மகளா யம்மை
வளர்ந்தசெயன் முதலாக மன்னுஞ் செவ்வேள்
விளங்குசுர ரரசளித்த கொம்பி னோடும்
வேடர்குலக் கொடியோடும் வேழக் கூற்றின்
களங்கமில்செக் கர்த்தவிசி லிருந்த தீராக்
கவின்முனிவன் றொகையாகக் கழற லோடும்
உளங்குளிர்ந்து முனிவோர்கள் விரிவா வெங்கட்
குரைத்தருள வேண்டுமென வுரைக்க லுற்றான். கஅ

முதலாவது

உற்பத்தி காண்டம்

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

33. திருமருவு கயிலைமிசைக் கனக மான
சினகரஞ்சேர் மண்டபத்துச் சிறந்த சீயப்
பொருவிலெழி லணைமீது கணைமீ னாட்டப்
பூவையொடு புரமெரித்தோன் பொருந்து போதில்
முருகுமலர்க் குழலுமையா ளெழுந்து நாதன்
முண்டகத்தா ளிணைவணங்கி முன்னா நின்று
குருகுவளைக் குலநெருங்கு கரங்கள் கூப்பிக்
குமுதவாய் திறந்தினைய கூற லுற்றாள். க

கதை சுருக்கி உரைத்தான் - கந்தபுராணத்தைச் சுருக்கிச் சொன்னான்: மாணாக்கன் - சூதமுனிவர். மாணாக்கன் என்று, உரைத்தான்.

32. சுரர் அரசு - இந்திரன். கொம்பு - தேவயானை. வேடர்குலக் கொடி - வள்ளியம்மை. வேழக்கூற்று - சிங்கம். செக்கர் - செம்மை. தவிசு - சிங்காதனம்.

33. சினகரம் - கோயில். சீயப்பொருவில் எழில் அணை - ஒப்பற்ற அழகையுடைய சிங்காதனம். கணைமீன் நாட்டம் - அம்பையும் மீனையும் போன்ற கண்கள். முருகு - நறுமணம். முன்னா நின்று - முன்பாக நின்று. குருகு வளைக்குலம் - சங்காலாகிய வளைக்கூட்டங்கள்.

34. இற்றைவரை வரைவளைத்த கரத்தோய் நின்னை
எண்ணாத தக்கன்மக ளென்னு நாமம்
பெற்றனன்மே லதுபரிப்ப வெருவி னேனப்
பெயரகல வருடியெனப் பேச லோடும்
தற்றுபொழி லிமயநெடுஞ் சைல வேந்தன்
தன்மகளா யுனைப்பெறுவான் றவஞ்செய் கின்றான்
மற்றவன்பால் வளர்ந்திடுதி வந்தி யாம்பின்
மணத்துமென விடைகொடிம மலையிற் சேர்ந்தாள். உ

35. அங்கொருபூந் தடத்தினிடைக் கமல மீதில்
அமலநா யகிகுழவி யாகி மேவ
மங்கைதனை யாண்டுதவம் புரிந்து நின்ற
மலையரையன் கண்டெடுத்து மகிழ்ந்து வான்றோய்
துங்கமனைக் கொடுபோகி மேனை யான
துணைவிகரத் தளிப்பவவ டொழுது வாங்கிப்
பங்கமற வளர்த்தனளா யாண்டு செல்லப்
பரனையுற வம்மைதவம் பண்ண வெண்ணி. ௩

36. வென்றியுறு தந்தையொடு மிந்த வாறு
விளம்புதலு மலையரையன் விளம்பு வானீ
இன்றுதவம் புரிந்திடவே பொருதுன் மேனி
இளம்பருவ மிதுதவிர்தி யென்ன வன்னை

---

34. வரை வளைத்த - மேரு மலையை வில்லாக வளைத்த. தக்கன் மகள்: தாக்ஷாயணி. பரிப்ப - தாங்க. தற்று பொழில் - செறிந்த சோலைகளையுடைய. மணத்தும் - உன்னை மணம் செய்துகொள்ளுகிறோம். என - என்று சிவபெருமான் சொல்ல. விடை கொடு - விடை பெற்றுக்கொண்டு. இம மலை - இமாசலம்.

தக்கன் சிவபெருமானுக்கு ஆகுதி அளிக்காமல் யாகம் பண்ணியவன் ஆதலின் 'நின்னை எண்ணாத தக்கன்' என்றாள்.

35. ஆண்டு - அங்கே. மேனை - பருவதராஜன் மனைவி. பரனை உற - சிவபெருமானை மீண்டும் அடைய.

36. உன் மேனி பொருது, இது இளம்பருவம். தவிர்தி - இந்த எண்ணத்தை விட்டுவிடுவாயாக. என்ன - என்று பருவதராஜன்

மன்றலுறு கொன்றைமுடிப் பரமன் காப்பன்
மறுத்தறையே லெனவிசைந்து மாத ரோடு
குன்றிலொரு பாங்கர்தவச் சாலை யூடு
கோதிறவம் புரிந்திருப்பக் குயிற்றி னுைல். ௩௬

37. செல்லாரும் பொழிலிமயத் தரனைச் சேரத்
திருந்துதவம் புரிந்துமையா ளிருந்த காலை
எல்லாருந் தழனுதற்கட் பெருமான் விண்ணோர்
எல்லாரும் பரவவர மீந்த வாற்றால்
வில்லாருங் கனகநெடு மாட நீடு
வீதிமகேந் திரமூதூர் மீது வெம்மை
அல்லாருங் கடுவனைய தகுவர் சூழ
அரசுபுரிந் திருஞ்சூர னமர்ந்தா னன்றே. ௩௭

38. சொற்றருமக் காலத்தின் ஞாலத் தின்பால்
தொல்லைமறைப் பொருளினைமுன் சோதி பாங்கர்ப்
பெற்றசன காதிமுதன் முனிவர் நால்வர்
பெருந்தவங்கள் பலபுரிந்து பின்னு முன்னும்
வெற்றிநெடுங் கயிலையெனுஞ் சைல மேவி
வீறுமெழி னந்திவிட விடஞ்சேர் கண்டக்
கொற்றவன்ற னடிவணங்கி முடிமேற் செங்கைக்
கோகனதங் குவித்தினைய கூற லுற்றார். ௩௮

சொல்ல. மன்றல் - நறுமணம். மறுத்து அறையேல் என - என்னுடைய விருப்பத்தை மறுத்துச் சொல்லற்க என்று அம்பிகை கூற. இசைந்து - பருவதராஜன் இணங்கி. குயிற்றினன் - அமைத்தான்.

37. செல் - மேகம். எல் - ஒளி. வில் - ஒளி. அல் - கருமை. கடு அனைய தகுவர் - விடத்தைப் போன்ற அசுரர்கள்.

38. தொல்லை - பழமையான. சனகாதி முதல் முனிவர் - சனகர் முதலிய முதன்மை பெற்ற முனிவர்கள்; சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர். ஞாலத்தின்பால் தவங்கள் புரிந்து. பின்னும் - அதன் மேலும். முன்னும் - அடியார்கள் நினைக்கின்ற.

39. அருமறையின் பலபொருடோர்ந் திந்நாள் காறும்
அடியரேம் புந்திவிரிந் தலைந்த தீண்டுப்
பொருவிடையோ யறிவடங்கி யாங்க ளுய்யப்
புரிந்தருள வேண்டுமெனப் புகற லோடும்
கருமறலி யுரங்கிழித்த பதுமச் செந்தாட்
கருணைநெடுங் கடலிருமின் காமர் நன்னூல்
மருளுறுநும் முணர்வொடுங்க வுரைப்பா மென்ன
மன்னுமவன் றிருத்தாண்முன் னிருந்தார் மன்னோ. எ

40. சங்கரன்முன் னவரிருப்ப நந்தி தன்னைத்
தந்திதனை யுரித்தகரத் தலைவ னோக்கிப்
புங்கவர்க ளெவர்வரினும் விடுவா யல்லை
போர்மதவேள் வரின்விடுதி போதி யென்ன
அங்கவனே கினன்முனிவர் மகிழ்ந்து கேட்ப
ஆகமத்தின் பொருண்மூன்று மாதி யோத
இங்கெமது புந்திவிரி வொடுங்க ஞானம்
இறைவபுகன் றருள்வாயென் றியம்பி னுரால். அ

41. என்றிட லு நகைத்தருளி யாது மாங்கே
இசைத்திலனப் பொருளிருப்ப திவ்வா றென்று
துன்றுநெடுஞ் சடைமுனிவர்க் குணர்த்து மாற்றால்
துலங்குமொரு கரமுரத்திற் றோயச் சேர்த்தி

---

39. புந்தி - அறிவு. புரிந்தருள வேண்டும் - விரும்பித் திருவருள் செய்யவேண்டும். கருமறலி உரங்கிழித்த - கருமையான யமனது மார்பைத் திருவடியால் உதைத்துக் கிழித்த ; வலியைக் கெடச் செய்த எனலுமாம். உணர்வு ஒடுங்க நன்னூல் உரைப்பாம் ; நன்னூல் என்றது சிவாகமத்தை.

40. நந்தி தன்னை நோக்கி. புங்கவர்கள் - தேவர்கள். போர் மதவேள் - போர் செய்யும் மன்மதன. பொருள் மூன்று - பதி பசு பாச இலக்கணம். ஆதி - சிவபெருமான். ஞானம் - ஞானோபதேசம்.

41. உரத்தில் - திருமார்பில். தகுவர் - அரசர். ஞான முத்திரையாம் குறி காட்டி - சின்முத்திரையாகிய திருக்கரக்குறிபபைக்

முன்றருவர் புரமெரித்த பரமன் ஞான
முத்திரையாங் குறிகாட்டி முனிவ ரேபோல்
ஒன்றொருநுண் கணப்பொழுதி யோக மாகி
உறைந்தனனங் கவரருள்பெற் றுய்யு மாறே. கூ

42. பிள்ளைச்சந் திரமவுலிச் சிறுமான் செங்கைப்
பெருமானிவ் வாறிருப்பப் பெருமை சான்ற
உள்ளத்தன் பினராநற் றவருந் தத்தம்
உணர்வொடுங்கி ஞானமுணர்ந் துறும்பே ரின்ப
வெள்ளத்துட் படிந்துசெய லொன்று மின்றி
மேவினரோ ரிறைப்போது விமலற் காய
தள்ளற்றெண் டிரையுடுத்த புடவி மாக்கட்
கமரர்தமக் கெண்ணி லுக மாயிற் றம்மா. க௦

43. விரிபதுமத் திருமருமப் பெருமா ளுதி
விண்ணவர்க்கு மண்ணவர்க்கும் வேந்த ளுகிப்
பொருவிலவ ருயிர்க்குயிரா யுணர்வு நல்கும்
பொருவிடையோ னுமையோடு பொருந்த லின்றி
அருமுனிவர் பொருட்டாக யோகி போல
அமர்தலா லனேவோரு மரிவை மார்தோள்
மருவிமுயங் குதலின்றி யிருந்தார் கஞ்ச
மலர்விதிக்கும் விதிக்குமுறை மாறிற் றன்றே. கக

காட்டி. முனிவரேபோல் - மௌனத்தையுடைய முனிவர்களைப் போல ; மௌனமுடைமையின் முனிவரென்னும் பெயர் வந்தது.

42. பிள்ளைச் சந்திர மௌலி - பிறைமதியை அணிந்த திருமுடி. ஓர் இறைப்போது - ஒரு கணப்பொழுது. அள்ளல் - சேறு. சிவபெருமான் மோன நிலையில் இருந்த ஒரு கணம் உலகத்திலுள்ளாருக்கும் தேவர்களுக்கும் பல யுகங்களாக அமைந்தது.

43. விரி பதுமத் திருமருமப் பெருமான் - மலர்ந்த தாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் திருமகளை உடைய மார்பைப்பெற்ற திருமால். கஞ்சமலர் விதிக்கும் - தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம தேவனுக்கும். விதிக்கும் முறை - சிருஷ்டி செய்யும் முறைமை.

44. இப்படியிப் படிவானத் திருந்து வாழும்
எவ்வுயிரு முறுங்காலத் திருணஞ் சேய்க்கும்
துப்பவுணர் பெருந்தகையாஞ் சூரன் செய்யும்
துயரிஞ லுயர்துறக்கந் துறந்து நீங்கிக்
கைப்படுவெங் குலிசநெடும் படையான் முன்னம்
கனவரைக ளிறகறுத்த கடவுள் கோல
மைப்பொலியு நயனவயி ராணி யோடும்
வானவரோ டும்புவியின் மருவி ஞனல். கஉ

45. வெள்ளிவரை யடைந்தரனை வணங்கு மாறு
வேலையலா திருந்திடலும் வேலை நஞ்சம்
கொள்ளுமடன் மிடறுடையோன் குனித்த செம்பொற்
கோதண்ட வேதண்டங் கூடி யாங்கே
கள்ளுகுதார்ச் சயந்தனெடுங் கடவு ளோரைக்
காரவுணன் சிறைபுரிந்த கடுஞ்சொற் கேட்டுத்
தள்ளுமதற் கரியதுயர் கொண்டு நாதன்
தாட்கமல மலர்நினைந்து தவம்பு ரிந்தான். கங

46. புரிந்திடலு மிறைதவள விடைமேற் ரேன்றிப்
பொருவிறவத் திளைத்தனைநீ புந்தி தன்னில்
விரும்பியதே தெனவறியான் போன்று கேட்ப
வெஞ்சூர்க்காய்ந் தெமையாள வேண்டு மென்னத்

---

44. இப்படி இவ்வாறு, இந்த உலகம். படியிலும் வானத்திலும் இருந்து வாழும் உயிர். நஞ்சு ஏய்க்கும் அவுணர்: "அல்லாரும் கடுவனைய தகுவர்" (37). துப்பு - வலி. அவுணர் பெருந்தகை - அசுரர் தலைவன். குலிச நெடும் படையால் - வச்சிராயுதத்திஞல். கடவுள் - இந்திரன். அயிராணி - இந்திராணி.

45. அரனை வணங்குமாறு வேலையலாது இருந்திடலும் - சிவபெருமானை வணஙகும்படியாக ஏற்ற செவ்வி இல்லாமல் இருந்தமையாலே, குனித்த - வளைத்த. செம்பொற் கோதண்ட வேதண்டம் - வில்லாகிய செம்பொன் மலை; மேரு. சயந்தன் - இந்திரன் மகன்.

46. தவள விடை - வெண்ணிறம் பெற்ற இடப வாகனம். தவத்து இளைத்தனை - தவத்திஞல் இளைப்பை அடைந்தாய். சூர்க்

திருந்தலனால் வருந்தலெல்லாந் தக்கன் வேள்வி
சேர்ந்திருந்த தீமையெனச் செப்பி நந்தம்
உரந்திகழு மகனொருவ னவுணர்ச் சாடி
உமைப்புரப்பா னெனவருளா லுரைத்துப் போனான்.

47. ஆங்கமல னீங்குதலு மமரர் கோமான்
ஆகுலமு மின்பமுங்கொண் டணைய வெற்பிற்
றுங்குபுக ழுயிராணி யென்னு நாமத்
தன்மனைவி பொன்மனைவி தன்பால் வைத்துத்
தேங்கமழுங் கமலநிதிப் பொகுட்டின் மன்னும்
சென்னிநான் குடையானைச் சேர்ந்து தாழ்ந்து
தீங்குபெறு சூர்புரியுந் துயரு நாதன்
செப்பியது மவனோடு செப்பி னானால். கரு

48. போயமரர்க் கிறையுரைத்த வாறு தேர்ந்து
புகுந்தபடி முகுந்தனுக்குப் புகல வெண்ணித்
தூயகம லத்திருந்து திருந்து வேதன்
சுரர்குழுவு மகவானுஞ் சூழ வேகி
மாயனுட னரன்யோகத் திருந்த வாறும்
வானவர்க டானவரால் வருந்து மாறும்
மேயபல வுங்கூற வரியு மோர்ந்து
விதிபதும முகநோக்கி விளம்ப லுற்றான். கசு

49. எம்பெருமான் முனிவோர்கட் காக யோகம்
இருந்திடுதல் தவிர்ந்தருளி யிமய வெற்பில்
அம்பிகையை மணம்புரிந்தோர் சுதனை நல்க
அரன்பான்மா ரனைவிடுகென் றறைத லோடும்

காய்ந்து - சூரபதுமனை அழித்து திருந்தலன் - பகைவன். உரம் - வன்மை. அவுணர்ச் சாடி - அசுரர்களை அழித்து.

47. ஆகுலம் - துக்கம்; தக்கன் வேள்வியிற் கலந்துகொண்ட தீமையை நினைந்து எழுந்தது. தன் மனைவியைப் பிருகஸ்பதியின் மனைவியினிடத்து ஒப்பித்து. பொன் - வியாழபகவான்.

48. அமரர்க்கிறை - இந்திரன். மகவான் - இந்திரன். விதி - பிரமதேவன்.

உம்பர்பெருங் குழுவோடு மகவா னோடும்
ஒளிதருபா ரதிகேள்வ னுவந்து மீண்டு
செம்பதும வகத்தினிதுற் றகத்து வேளைச்
சிந்தனைசெய் திடவவனுஞ் சேர்ந்தா னன்றே. கஎ

50. வந்தமதன் றனைநோக்கி யேகன் யோகம்
மருவுதல்விட் டுமையவளை மருவு மாறுன்
கந்தமலர் சிந்திவரு வாயென் றோதக்
கரங்கொடிரு செவிமூடி யரன்பே ரோதி
அந்தமிலா வையனைச்சென் றெய்ய வஞ்சி
அநேகவித மறுத்துறைய வலரோன் சீறி
இந்தமொழி மறுத்திடிற்சூ ளுறைவோ மென்ன
இசைந்தனனிவ் வாசகமங் கிசைக்க லுற்றான். கஅ

51. மண்டுபவக் கடற்படிய நினது பாங்கர்
வருஞ்சூளின் மாளுதலின் வாளு லாவும்
துண்டமதிச் சடையோன்பாற் கணைக டூவித்
துஞ்சினுநன் றுஞ்சுவருந் தொழிலு முண்டாம்
'முண்டகவண் டவிசிருந்த முனிவ வென்பால்
முனியலையா னிறைவனொடு முரட்போ ராற்றத்
திண்டிறலி னேகுவனென் றியம்ப வஞ்சேல்
செல்கவெனத் தனதுலகஞ் சேர்ந்தான் மன்னோ. கக

49. சுதனை - குமாரனை. பாரதி கேள்வன் - பிரமதேவன்; பாரதி - கலைமகள். வேளை - மன்மதனை.

50. ஏகன் - சிவபெருமான். கந்தமலர் சிந்தி - மணத்தையுடைய மலர்களாகிய அம்புகளை எய்து. மன்மதன் செவியை' மூடி, சிவ நாமத்தைச் சொல்லிப் பலவிதமாகப் பிரமதேவன் சொல்லியதை மறுத்துக் கூறினன். சூள் - சாபம். இசைந்தனன் - மன்மதன் ஒப்புக்கொண்டு; முற்றெச்சம்.

51. மண்டு பவக்கடல் - மிகுதியாக நெருங்கும் பிறவிக்கடல். நினது பாங்கர் வரும் சூளின் - உன்னிடத்திலிருந்து உண்டாகும் சாபத்தினல். வாள் - ஒளி. உஞ்சுவரும் தொழில் - பிழைத்துவரும் காரியம். முனியலை - நீ கோபங்கொள்ளாதே முரண் போர் ஆற்ற - மாறுபாட்டையுடைய யுத்தத்தைச் செய்ய. என்று இயம்ப - என்று காமன் கூற.

52. இருங்கிள்ளைப் பரித்தென்கா லிரத மீதே
இரதியொடு புகுந்துபடர்ந் திந்து வேணிக்
கருங்கண்டன் கயிலைமலை கண்டு வல்லே
கரஞ்சிரமேற் கூப்புதேர் கடிது நீங்கி
மருங்குள்ள தனதுபரி சனங்க ளாங்கே
வைகும்வகை நிறுவிநறு மலர்த்தண் சோலை
நெருங்கந்த வரைமீது மாதி னோடு
நெடுஞ்சிலைவே ளேறியிது நினைந்து செய்வான். உ0

53. விண்டுவரு ளைங்கணைவே ளனைய தான
விலங்கலிடை விலங்காப்புள் விலங்கு மோகம்
கொண்டிடவெஞ் சரந்தூண்ட நந்தி சீறக்
கொடுவாளி நெடுவானிற் குழுமி நிற்பக்
கண்டுமத னிறைஞ்சவர லென்கொ லென்று
காரணங்கேட் டணைமேலை வாச றன்னால்
அண்டர்பிரான் மொழிப்படிபோ கென்னப் போந்தாங்
கரனையெதிர் கண்டாங்கே யயர்ந்து வீழ்ந்தான். உக

54. பின்னிரதி தேற்றவெழீஇப் பொருவா னிற்பப்
பிரமன்முத லோர்மதன்செய் பெற்றி காண்பான்
அன்னகிரிக் கொருபுடைபோய் மருவி னார்வேள்
ஐங்கணைவிட் டானவைசென் றரன்பான் மேவ

---

52. பெருமையையுடைய கிளியாகிய குதிரையையுடைய தென்றற் காற்றாகிய தேரின்மேல். இந்துவேணி - சந்திரனைத் தரித்த சடையையுடைய. கூப்பு - குவித்து. பரிசனங்கள் - பரிவாரங்கள். நெருங்கு அந்த வரை. மாது - இரதி.

53. விண்டு அருள் - திருமாலால் பெறப்பட்ட. வேள் - காமன். விலங்கா - நீங்காமல் உறைகின்ற. 'விலங்கலிடை விலங்காப்புள் விலங்கு' என்ற தொடரில் சொல்முரண் வந்தது. வெம் சரம் - வேகமாகிய அம்பு; காம வேகத்தைச் செய்யும் அம்பு எனலும் ஆம். கொடுவாளி - கொடிய காம பாணங்கள். நிற்பதைக் கண்டு மன்மதன் நந்தியை வணங்கினான். அயர்ந்து - மயங்கி.

54. எழீஇ - எழுந்து. பொருவான் நிற்ப - போர் செய்வதற்காக நிற்க. வன்னி விழி - அக்கினியாகிய நெற்றிக் கண்ணை. மன்

வன்னிவிழி திறப்பமத னிறப்பத் தேவி
வருந்துமது தெரிந்தமரர் வருந்தி நாதன்
பொன்னடிநின் றேத்துதலு மியோக நீங்கிப்
புந்திதனி னந்திதனைச் சிந்தை செய்தான். ௨௨

55. அண்ணலினைந் திடவறிந்து நந்தி யேகி
அடிதொழுது நின்றிடநீ யலரோ ஞதி
விண்ணவரைத் தருதியெனத் தருத லோடும்
வேண்டியதே தெனவுமையை விமல நீவேட்
டெண்ணில்புகழ்க் குமரனைத்தந் தருள்வா யென்ன
இசைந்தவரை விடுத்திரதிக் கிமய மாதை
வண்ணமணம் புரிந்துனது கணவ ஞவி
வழங்குதுமே கெனவிமய வரையிற் சேர்ந்தாள். ௨௩

56. இன்னமொழி மொழிந்தருளிப் பின்ன ரீசன்
இட்டமுட னிட்டையனுட் டித்து வாழும்
என்னவுரைத் தருண்மேவுஞ் சனக ஞதி
இருந்தவரா யிருந்தவர்க ளேக வோதிக்
கன்னிதவங் காணமுது மறையோன் போலக்
கௌரிபா லுறவெழுந்து கரங்கள் கூப்பி
அன்னவணின் றிடுதலுமோர் தவிசின் மேவி
அருந்தவநீ புரிந்திடலே தறைதி யென்றான். ௨௪

மதன் இறக்க அது கண்டு இரதி வருந்தினள். அதைக் கண்டு தேவர் வருந்திச் சிவபிரானைத் துதித்தனர். அப்போது சிவபெருமான் யோகத்தி னின்றும் நீங்கினான்.

55. தருதி - அழைத்து வருக. வேண்டியது ஏது - நீர் விரும்பியது யாது. உமையை - பார்வதி தேவியை. இசைந்து - அதற்கு இணங்கி.

56. இருந்தவராய் இருந்தவர்கள்-பெரிய தவத்தினராகி வீற்றிருந்தவர்கள்; மடக்கு. கன்னி - பார்வதி. கரங்கள் கூப்பியது பார்வதி தேவியார் செயல். புரிந்திடல் ஏது - செய்வதற்குக் காரணம் யாது?

57. என்றிடலும் விசையையுமை பரனைச் சேர்தற்
கிச்சித்தா ளெனப்பரனை யிகழ்ந்து கூற
நின்றவுமை சினம்புரிந்து போதி போதி
நீதியிலா வேதியநீ யென்ன வுன்னை
இன்றுமணந் திடவணைந்தே னென்று கூற
இடர்மூழ்கி யிணையறுதா ளிணைக ளோவக்
குன்றினொரு புடைபோக விடையின் மீது
குழகனு யெதிர்காட்சி கொடுத்தா னன்றே. உரு

58. நாயகனும் பரம்பரனை யெதிர்கண் டம்மை
நாணமொடு பணிந்துகர நளினங் கூப்பிப்
பேயனையே னுனையறியா துரைத்த வெஞ்சொற்
பிழைபொறுக்க வேண்டுமெனப் பேச லோடும்
தூயநதிச் சடைக்கடவு ளவைக ளெம்மைத்
துதித்தனவாக் கொண்டோநீ சோரே லுன்னை
நேயமொடு நாளைமணம் புரியச் சேர்தும்
நீயரிய தவம்புரித னீங்கு கென்றான். உசு

59. பொன்றாங்கு கனகவரை குனித்தோ னின்ன
புகன்றகலச் சிலவரிது பொருப்பன் முன்போய்
நின்றாங்கு மொழிந்திடலு முவகை யென்னும்
நெடுங்கடலி னிடைப்படிந்து நிமலை பால்வந்

57. விசயை - உமாதேவியாருடைய தோழி. பார்வதி தேவி யார் சிவபிரானை மணபபதற்கு விரும்பினரென்று விசயை கூற, முது வேடம் பூண்டுவந்த சிவபிரான் சிவன் இன்ன இன்ன இழிவுடையான் என்று இகழ்ச்சி கூறினர். குழகனய் - இளைய திருவுருவம் உடைய வனகி.

58. கர நளினம் - திருக்கைகளாகிய தாமரைகளை. சோரேல் - தளர்ச்சியை அடையாதே. சேர்தும் - வருவேம்.

‘ உன்னை நாம் நாளைக்குத் திருமணம் புரிந்துகொள்ள வருவேம் ; உன் தவத்தை விடுக ’ எனறு சிவபிரான் திருவாய் மலர்ந்தருளினர்.

59. கனகவரை குனித்தோன் - மேருமலையை வில்லாக வளைத் தோன். பொன்தாங்கு என்று முன்னர்க் கூறினமையின், கனகவரை

தென்றாயே வருகவென மனையிற் சேர்த்தான்
இறைவனுயர் கயிலையடைந் திலங்கு மோரேழ்
பின்றாழ்செஞ் சடைமுனிவர் தம்மை யுன்னப்
பிஞ்ஞகன்முன் னடைந்திறைஞ்சல் பெற்று நின்றார்.

(கலிவிருத்தம்)

60. அன்ன மாதவரை யாதி தெரிந்தே
மன்னு கின்றவிம வான்மக ளாகும்
மின்னி னைத்தரவி னுவுதி ரென்னப்
பொன்னு லாவுமிம யக்கிரி புக்கார். உஅ

61. மாத வங்கொளிம வானெதிர் கொண்டே
ஆத னங்கண்மிசை யன்பொ டிருத்தி
ஏது வெஃகியிவ ணெய்திய தென்ன
ஆதி யோதிய தறைந்தன ரன்றே. உகூ

62. கூறுதற் கிசைவு கொண்டது கண்டே
ஆறு லாவுசடை யண்ணலை நண்ணி
மாறி லாதவிம வானியை வோதி
வீறு தத்தமிடை மேவின ரன்றே. நூ0

யென்றது மேருவென்னும் துணையாய் நின்றது; "வேத வேதியர்" என்புழிப்போல. சிலவர் - ஏவலாளர். இது மொழிந்திடலும். அடைந்து - ஏழு முனிவரும் வந்து. இறைஞ்சல் பெற்று - சிவபெருமானை வணங்குதலாகிய புண்ணியச்செயலைப பெற்று; வணங்கியென்றபடி.

60. ஆதி - சிவபிரான். தர விநுவுதிர் என்ன - எனக்கு மணம் செய்து கொடுக்கும்படியாக அந்த இமவானிடத்தில் கேளுங்கள் என்று கூற. புக்கார், புக்கவர் எழு முனிவர்.

61. எதிர்கொண்டு - எழு முனிவரை வரவேற்று. வெஃகி - விரும்பி ஆதி - சிவபிரான்.

62. தாங்கள் எடுத்துச் சொன்ன காரியத்திற்குப் பர்வதராஜன் சம்மதம் கொண்டதைத் தெரிந்துகொண்டு. இயைவு - இணக்கம். இடை - இடம்.

63. ஈது நின்றிட விமக்கிரி மன்னன்
காத லோடமரர் கம்மிய னைக்கொண்
டோதி மக்கிரியி லூர்புனை வித்தே
ஆதி முன்புற வணைந்து பணிந்து. ௩௧

64. ஒன்று பங்குனியி லுத்திர மாகும்
இன்று நன்றுபொழு தென்றிரு மாதை
மன்றல் செய்யயவரு வாயென முன்போ
வென்றி தன்னொடுபின் மேவுது மென்றான். ௩௨

65. நார வேணியர னந்தியை நோக்கிச்
சீரு லாவிய சிறப்புடை மன்றற்
கியாரை யுந்தருதி யென்றலும் யாரும்
சேர நந்தியிறை சிந்தனை செய்தான். ௩௩

66. உன்ன வக்கினி யுருத்திர ராதி
மன்னு ருத்திரர்கள் மான்முதல் விண்ணோர்
துன்னு மாமுனிவர் துன்று கணங்கள்
மின்னு றுங்கயிலை வெற்பிடை வந்தார். ௩௪

---

63. அமரர் கம்மியன் - தேவ தச்சனாகிய விசுவகர்மா. ஓது இமக்கிரியில். ஊர் புனைவித்து - தன் நகரத்தைத் திருமணத்துக்குரிய அலங்காரம் செய்வித்து.

64. இன்று பொழுது நன்று. மன்றல் - திருமணம். என - என்று இமவான் கூற.

65. நாரம் - நீர்; இங்கே கங்கை. ஆரையும் தருதி - எல்லோரையும் அழைத்து வருவாயாக. சேர - வந்து அடையும்படியாக. நந்தி இறை - நந்தி தேவராகிய கடவுள்.

66. உன்ன - நந்தி தேவர் இவ்வாறு நினைக்கவே. அக்கினி யுருத்திரர் - காலாக்கினி யுருத்திரர். ஆதி உருத்திரர் என்றது காலாக் கினி புவனத்தில் இருக்கும் கபாலீசன் முதலியோர். மால் - திருமால். கணங்கள் - சிவ கணங்கள். மின் உறும் - ஒளியை உடைய; பார்வதி தேவியார் திருவவதாரம் செய்திருந்த எனலும் ஆம்

67. வந்து நந்தியுறு வாயிலி னண்ண
முந்து நந்தியரன் முன்பு விடுப்ப
எந்தை தாளிணை யிறைஞ்சினர் சூழ்ந்தார்
அந்த வேலையல ரோனிது செய்வான். ௩௫

68. ஆசி லாமகுட மாதி கலன்கள்
ஈச னங்கணிய வின்பொடு நல்க
மாசி லாமுதல்வன் மற்றிது கொண்டாம்
நேச மோடென நெடுங்கரம் வைத்தான். ௩௬

69. வைத்து மெய்ப்பணிகள் வண்பணி யாக
நித்த னன்பொடு நினைந்து தரித்தே
மொய்த்தி யாவரு முரண்கொடு சூழ
வித்த கன்றிரு விடைப்புற முற்றான். ௩௭

70. ஏற தேறின னெழிற்கயி லாய
வீறு கின்றதிரு வெற்பை யகன்றே
ஊறி லும்பரொ டுருத்திரர் சூழ
மாறி லாவிம வரைப்புடை யுற்றான். ௩௮

71. வேத மேவுதிரு வீதியி னண்ணிக்
காதன் மாதர்நனி கண்டு மயங்கக்
கோதி லாதவிம வானுறு கோயில்
மாத வங்கொடலை வாயிலில் வந்தான். ௩௯

---

67. நந்தி உறவாயில் - முதற் கோபுர வாயில். சூழ்ந்தார் - துதித்தனர். வேலை - சமயத்தினில்.

68. கலன்கள் - ஆபரணங்களை. பிரமதேவன் சிவபிரான் அணிதற்குரிய ஆபரணங்களை எடுத்து அளித்தான். அவற்றைத் தாம் தொடுதல் மாத்திரம் செய்தார்.

69. மெய்பபணிகள் - திருமேனியில் அணிந்திருந்த நாகங்கள். வன் பணி ஆக - பொன்னாலும் மணியாலும ஆகிய வலிய அணிகள் ஆகும்படியாக முரண் - வலிமை. திருவிடைப்புறம் உற்றான் - அழகிய இடப வாகனத்தின்மீது எழுநதருளினான்.

70. வீறுகின்ற கயிலாய வெற்பு என்க.

71. கோயில் - அரண்மனை.

72. ஏங்கு றாவிடை யிழிந்தவ ணிற்பப்
பாங்கு மேனையெதிர் பால்கொடு வந்தே
ஓங்கு தாளிணை யுவந்து விளக்கித்
தீங்கி னாணமொடு சென்றன ளன்றே. ௪௦

73. ஆறு லாவுசடை யண்ண லதற்பின்
ஊறில் யாவரு முவந்தயல் சூழ
மாறிலா தவது வைக்கள நண்ணி
வீறு சிங்கவணை மீதுறு போது. ௪௧

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

74. தென்பால் வடபா லுயர்ந்திழியத்
தெரிந்து தேவர் வருந்துதலால்
துன்பா சகன்ற குறுமுனியைத்
தொலையா மலயந் தனிலேவ
முன்பா னதுபோற் படியிருப்ப
முனிவ ரமரர் முகமலர்ந்தார்
அன்பா யரம்பை யர்கள்சூழ
அரன்பால் வந்தா ளம்பிகையே. ௪௨

---

72 ஏங்குறா - துயருறாத. பாங்குமேனை - பண்புடைய இமவான் தேவியாகிய மேனை. மேனை சிவபிரான் திருவடியைப் பாலினால் விளக்கிச் சென்றாள்.

73. வதுவைக் களம் - கல்யாண மண்டபம். சிங்க அணை - சிங்காதனம்.

74. தேவர் இமயமலையில் கூடியதனால் வடபால் தாழ்ந்து தென்பால் உயர்ந்தது. தென்பால் உயர்ந்து வடபால் இழிய என முறையே கூட்டுக; நிரனிறை. துன்பு ஆசு - துன்பமும் குற்றமும். தொலையா மலையம் - எக்காலத்தும் கேடில்லாத பொதியில் மலை; "நடுக்கின்றி நிலியரோ வத்தை.........இமயமும் பொதியமும் போன்றே" (**புறநானூறு, 2,**) ஏவ - சென்று இருக்கும்படியாகச் சிவபிரான் கட்டளையிட. முன்பு ஆனதுபோல் படி இருப்ப - அகத்திய முனிவர் அங்ஙனம் செய்தமையால், பூமியானது முன்பு அமைந்ததுபோல ஏற்றத் தாழ்வின்றி இருக்க. அரம்பையர்கள் - தேவ மகளிர்.

75. வந்து பரனைப் பணிந்திடலும்
வள்ள றவிசி னிருத்தியென
எந்தை யோடு முமையிருப்ப
இமவா னடைந்தங் கெழின்மனைவி
உந்து கரக நீர்வார்ப்ப
உயர்மாற் கரிய வொளிப்பதத்தைப்
பந்த வினைக ளறவிளக்கிப்
பரிந்து பூசை புரிந்தனனே. ௪௩

76. பூசை புரிந்து நாரிகரம்
புனிதன் கரத்திற் கொடுத்தரனுக்
காசை பொருந்து மம்பிகையை
அளித்தே னென்ன வறைந்திடலும்
ஏசி லிமையோர் புகழ்ந்தார்கள்
இருவர் கீத மிசைத்தார்கள்
மாசில் கணங்கண் முழவறைந்தார்
மடவார் பல்லோர் வாழ்த்தெடுத்தார். ௪௪

77. அங்க ணினைய நிகழ்ந்ததற்பின்
அசல வேந்த னசலமுலைத்
திங்கண் முகத்தம் பிகைகேள்வன்
திருமுன் கனிபால் கொடுவந்தே
இங்கி தயில வேண்டுமென
இவைகொண் டாமென் றவைதம்மின்
மங்குன் மிடற்றோன் கரந்தொடலும்
மலரோன் சடங்கு தொடங்கினனே. ௪௫

---

75. மனைவி - மேனை. கரகம் - கமண்டலம். பதத்தை விளக்கி.

76. நாரி கரம் - பார்வதி தேவியாரின் திருக்கரத்தை. ஏசு இல் - இகழ்ச்சி இல்லாத. இருவர் - தும்புருவும் நாரதரும்.

77. அங்கண் - அவ்விடத்தில். அசல வேந்தன் - இமவான். திருமணம் ஆனமை தோன்றச் சிவபிரானை, “அம்பிகை கேள்வன்” என்றார். அயில வேண்டும் - உண்டருள வேண்டும். சடங்கு - திருமணத் துக்குரிய காரியங்கள்.

78. மன்றற் சடங்கு முடிந்ததற்பின்
மாலு மயனு மகபதியும்
துன்றுஞ் சுரரு மிமவானும்
சுற்றத் தோரு மற்றெவரும்
கொன்றை முடித்த நெடுவேணிக்
குழகன் றானுங் குழகனிடம்
என்றும் பிரியா வுமைதாளும்
இணங்கு மன்பால் வணங்கினரே. சசு

79. ஈது புரிந்து முற்றுதலும்
எமையா ளுமையா ளிருந்தாதை
ஆதி கரமுன் றெடுஞ்சேடம்
அனைவர் தமக்கு மளித்தனனப்
போதி விரதி வந்தெந்தாய்
போர்வே டன்னை யளித்தியெனச்
சோதி மதனை நினைந்திடலும
சுரர்கள் வெருவத் தோன்றினனால். சஎ

80. மருவா ரிதழி மதிபொதிந்து
வளர்செஞ் சடில வானவனத்
திருமா லளித்த மலர்ப்பகழிச்
சிலையான் வதனந் தெரிந்தருளி
உருவா யிரதிக் கிருத்தியரோ
ஒழிந்தோர்க் கெல்லா முருவல்லா
தருவா யிருந்துன் னரசுபுரி
கென்றே யவளோ டவன்விடுத்தான். சஅ

---

78. மகபதி - இந்திரன்.

79. முற்றுதலும் - நிறைவேறியவுடன். தாதை - இமவான். சேடம் - பிரசாதம். போர் வேள் தன்னை - நின்னொடு போர் செய்த காமனை. அளித்தி - உயிர்ப்பித்துத் தருக. சோதி - சிவபிரான். சுரர்கள் வெருவியது, தாங்கள் செய்த சூழ்ச்சி கருதி அவன் குறை கூறுவானென்று எண்ணி.

80. இதழி - கொன்றை. மலர்ப்பகழிச் சிலையான் - மலராகிய அம்பையும் மலராகிய வில்லையும் உடைய காமன் ; காமனுக்குரிய மூன்று

81. கன்னற் சிலைவே டனைவிடுத்துக்
கௌரி யோடும் விடையேறி
மின்னுங் கயிலை யடைந்தெவர்க்கும்
விடையை யுதவி விடையையிழிந்
துன்னற் கரிய வரியணைமேல்
உமையோ டிருப்ப வுயிரனைத்தும்
இன்ன லகல விருங்காம
இன்ப மேவி யிருந்தனவே. சசு

82. பின்ன ரொருநா ளரிமுதலாம்
பெருஞ்சீ ரிமையோர் மேருவின்பால்
மன்னி யிருந்தே யெமைவருத்தும்
வலிய சூரன் வலிகெடுப்ப
அன்ன நடைமா தினைமணந்தும்
அரனீந் திலன்மைந் தனையெனவே
உன்னிக் கயிலைப் பரம்பரனேர்
உற்று வேண்ட நச்சினரால். ருO

83. வேளை யெரித்த விழியாளன் வேளை யறிந்து மீளுதற்கு
நாளு முலவு காலைவிட நந்தி தனைக்கண் டஞ்சியது
மீள வரலுங் கயிலைதனில் விண்ணோ ரடைந்து நந்திவிட
ஆளும்பரனைத்தொழுதேத்தவரனிங்கேதுவேண்டுமென.

விற்களில் மலரும் ஒன்று; அதனால் அவனுக்குப் 'புஷ்பதன்வா' என்று ஒரு பெயர் வழங்கும். இரதிக்கு மாத்திரம் தோன்றும் உருவுடையவனாகி நீ இருப்பாயாக.

81. கன்னற் சிலை - கரும்பாகிய வில்லையுடைய. வேள் தனை; சிலைகொண்டு வேட்டையாடுவானென்னும் பொருளும் தோன்ற வேடனை என்றார். விடையை - உத்தரவை, இடபவாகனத்தை.

82. அன்ன நடை மாது - பார்வதி தேவி. பரம்பரன் நேர் உற்று. நச்சினர் - விரும்பினர்.

83. வேளை அறிந்து - தக்க சமயத்தைத் தெரிந்துகொண்டு. காலை விட - வாயு தேவனை அனுப்ப; கால் - காற்று. அது - வாயு தேவன். நந்தி விட - நந்தி தேவர் உள்ளே செல்லும்படி அனுமதிக்க.

84. சற்றுந் தகவில் கொடுஞ்சூரன்
தன்னு லிந்நா ளின்னன்மிக
உற்று வருந்தித் திரிந்திளைத்தோம்
உன்னைப் போல வொருசுதனை
வெற்றி பொருந்த வளித்தெமது
விழுமந் துரப்ப வேண்டுமென
அற்றன் றியசீர்க் களப்பெருமான்
அறுமா முகங்கொண் டாங்கிருந்தான். ருஉ

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

85. செம்மைகொ ளாறு முகத்தொ டிருந்தே
தீவிழி யாறினு மாறு புலிங்கம்
வெம்மையொ டுந்தர வங்கவை சென்று
வீறுல கத்தும் விரிந்திட வஞ்சிப்
பொம்ம றருங்கவி னம்மை யெழுந்து
புலம்பு சிலம்பு பொலன்கழன் மோத
இம்மென வோடி யிருக்கை புகுந்தாள்
எங்கணு மாகி யிரிந்தனர் விண்ணோர். ருரு

---

84. சுதன் - குமாரன். விழுமம் துரப்ப - துன்பத்தைப் போக்க. அல் துன்றிய சீர் களப்பெருமான் - கருமை நிறம் பொருந்திய சிறப்புடைய திருக்கழுத்தையுடைய சிவபெருமான். அறுமாமுகம்: சிவபெருமானுக்குரிய ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்னும் ஐந்து முகங்களோடு கீழ்நோக்கிய முகம் ஒன்றும் சேர ஆறு முகங்கள் ஆயின.

85. தீ விழி ஆறினும் - ஆறு திருமுகங்களிலும் உள்ள ஆறு நெற்றிக் கண்களினின்றும். புலிங்கம் - தீப்பொறி. வீறு உலகத்தும் - வேறாகிய உலகங்களிலெல்லாம். பொம்மல் - வளப்பம். பொலன்கழலில சிலம்பு மோத. இருக்கை - அந்தப்புரம். இரிந்தனர் - ஓடினர்.

86. ஓடிய விண்ணவர் கூடினர் வந்தே
உந்திய தானவ ரானவர் தம்மைச்
சாடிய விங்கொரு மைந்தனை யெந்தாய்
தந்தரு ளென்றனை வந்தனை செய்ய
ஈடுறு வெம்மைகொ ளங்கி யளித்தாய்
எங்ஙன முய்வதி யாமென வோதப்
பீடுறு மோர்முக மாகி யிருந்து
பெருந்தழன் முன்பு வரும்படி முன்ன. ௫௪

87. அந்நிலை தன்னின் விரிந்திடு செந்தீ
ஆறு பெரும்பொறி யாகி யரன்றன்
முன்னுற வந்திட வண்ணல் தெரிந்தே
மொய்ம்புள தேயுவை வாயுவை நோக்கி
மன்னிய விப்பொறி தன்னை யெடுத்தே
மங்கலில் கங்கையுள் வைத்திடு மென்றே
இன்னலில் சத்திகொ டுத்திட மாறி
எடுத்துயர் கங்கை யடுத்ததில் வைப்ப. ௫௫

88. மங்கலில் கங்கையு மப்பொறி தன்னை
வண்ணமு றுஞ்சர வணமிசை வைப்பப்
பொங்கெழி லையிரு திக்கினு மான்முற்
புங்கவர் நின்று புரந்தன ரப்போ

---

86. உந்திய - எம்மைப் பதவியினின்றும் தள்ளிய. தானவர் ஆனவர் - அசுரர்கள். சாடிய - அழிக்கும்பொருட்டு. ஈடு உறு - யாங்கள் எளிவரவு படுவதற்கு ஏதுவாகிய; ஈடு - எளிவரவு; "ஈடுபடும் இறை" (தக்கயாகப்பரணி.) அங்கி - அக்கினியை. வெளிப்பட்ட தீப்பொறிகளை முன்னாலே வரும்படி நினைத்தருளினான்.

87. மொய்ம்பு - வலிமை தேயுவை - அக்கினியை. மாறி எடுத்து - அக்கினியும் வாயுதேவனும் மாறி மாறி எடுத்துச் சென்று. கங்கையை அடுத்து அதில் வைப்ப.

88. சரவணம்மிசை - சரவணம் என்னும் பொய்கையின்கண். மால்முன் புங்கவர் - திருமால் முதலிய தேவர்கள். பத்துத் திக்கிலும் நின்று காத்தனர். பிரமதேவன் வானிலும் திருமால் பூமியிலும் இந்திரன் முதலிய திக்குப்பாலகர் தத்தமக்குரிய திசைகளிலும் நின்று காத்தனர்

தங்கதி லாறு முகத்தொடு மீரா
 றத்தமொ டெங்கம லத்தி னிடத்திற்
சங்கர னேறுரு கேசனெ னச்சீர்
 தங்க விருந்திட வண்டர்கள் கண்டார். ருசு

89. பன்னிரு மொய்ம்பு நெடுந்தகை தன்னைப்
 பால தருந்தி வளர்த்திட மார்பிற்
பொன்னை யிருத்திய பச்சுரு வத்துப்
 புங்கவன் முற்படு புங்கவ ரெல்லாம்
மின்னறு மீனை விடுத்தது கண்டே
 வீறிய வாறு சிறுரென மேவ
அன்ன மடந்தைய ரன்ன முலாவும்
 அன்ன தடத்தி லடைந்து புரந்தார். ருஎ

90. ஓதிது நின்றிட முன்ன ரெழுந்தே
 ஓடிய சங்கரி பின்புதி ரும்பிச்
சோதி யிடத்தி லடைந்தும டங்கல்
 சுமந்திடு கின்ற துலங்கணை மேவக்
கோதில்சி லம்பது டைந்ததின் முன்வீழ்
 கொன்னவ மாமணி யன்னவள் சாயை
எய்தலு மொன்பது மங்கைய ராகி
 எந்தை விளித்திட வின்பொடு வந்தார். ருஅ

(**கந்தபுராணம்,** திருஅவதாரம். 89.) ஈராறு அத்தமொடும் - பன்னிரண்டு திருக்கரங்களோடும்.

89. மொய்ம்பு - தோள். பாலது: அது, பகுதிப்பொருள் விகுதி. திருமார்பில் திருமகளை வீற்றிருக்கச் செய்த பச்சைநிறம் பெற்ற திருமால். மின் அறு மீனை - மின்னுகின்ற ஆறு நக்ஷத்திரங்களாகிய கார்த்திகை மாதரை. பால் அருத்தி வளர்த்திட மீனை விடுத்தது கண்டு. அன்ன மடந்தையர் - அந்தக் கார்த்திகை மாதர்.

90. ஓது இது நின்றிட - சொல்லிய இவ்வரலாறு நிற்க. மடங்கல் - சிங்கம். சிலம்பது உடைந்து அதில் வீழ் நவமணி. கொன் - பெருமை. சாயை எய்தலும் - நிழல் பொருந்துதலும.

91. வித்தக மங்கைய ரெம்பெரு மானை
விருப்பொடு கண்டு கருப்பம தாகச்
சத்திசி னந்து கருப்பய வாதே
தாங்குமி னென்றிட வேங்கின ராங்கே
மெத்திய மேனி வியர்ப்பி லிலக்க
வீர ருதித்தன ராரிமை சொல்லால்
உத்தம மாதர்கள் பின்பொரு நாளில்
ஒன்பது மைந்தரை யன்பொடு தந்தார். ருகூ

92. மாசறு மன்னவர் தம்பெயர் வீர
வாகுவெ னுந்திரு வள்ளல் வலைக்கைக்
கேசவ னும்பர் புகழ்ந்திடு வீர
கேசரி வீரம கேந்திர னென்போன்
வீசுபு கழ்ப்பெறு வீரம கேசன்
வீரபு ரந்தரன் வீர வரக்கன்
ஆசறு வீரதி வாகரன் வீரர்
அந்தகன் வீர மடைந்திடு தீரன். சுய

93. மற்றவர் தங்களை யாதி தெரிந்தெம்
மைந்தர்க ளென்றுமை மாதொடு கூறி
நற்றிறல் கொண்ட விலக்கர்க ளோடும்
நந்திரு மைந்தன தேவல்பு ரிந்தே
உற்றிடு வீரென வோதுபு மாதோ
டுந்துவி டைப்புற மொல்லை புகுந்தே
அற்றம றுஞ்சர வணமத டைந்தான்
ஆசறு வானவ ரானவர் சூழ. சுக

91. வித்தகம் - ஞானம். ஒன்பது சத்திகளும் சிவபெருமானைக் கண்டு விரும்பியவுடன் கருப்பம் அடைந்தனர். கரு பயவாதே தாஙகுமின் - ஈனுமலே கருப்பத்தைத் தாங்குவீராக. வியர்ப்பு - அச்சத்தினுலே வந்த வேர்வை. ஆரியை - அம்பிகை.

92. கேசவனும் உம்பரும் புகழும். வீர அரக்கன் - வீர ராக்ஷசன். வீரர் அந்தகன் - வீராந்தகன்.

93. நம் திருமைந்தன் என்றது முருகக் கடவுளை. விடைப் புறம் - இடபவாகனத்தின் முதுகில். அற்றம் - சோர்வு.

94. மாசிலி மக்கிரி யின்புடை தன்னில்
மன்னு செழுஞ்சர வணமுன மெய்தத்
தேசுறு மன்னதில் வைகிய செவ்வேள்
சிற்பர னாரி செறிந்தது கண்டான்
பாச மகற்றர னம்பிகை யோடுன்
பாலக னைக்கொடு வாவென வோத
ஆசறு பூவி லிழிந்துந டந்தே
ஆறுரு மைந்தனை யம்மை யெடுத்தாள். சூ௨

95. அம்மை யெடுத்துழி யாறுரு மைந்தன்
ஆறுமு கங்களு மாறிரு கையும்
செம்மை பொருந்தொரு மேனியு மாகச்
செப்பினை யொத்த திருத்தன நின்று
பொம்மலு டன்சொரி பாலத ருந்திப்
பொற்புறு சிற்பர னைப்பணி விக்க
நம்மை யளித்திடு கந்தனை யன்பர்
நாத னெடுத்துர மீதி லணைத்தே. சூ௩

96. அந்தரி யோடு விடைப்புடை வைத்தங்
கார னடந்தைய ருக்கருள் செய்தான்
சுந்தரி மைந்த னருந்து முலைப்பால்
துண்ணென முன்னர் சொரிந்தது தன்னிற்
சிந்திய தோடுபு கந்தன் வளர்ந்த
செழுஞ்சுனை யூடு செறிந்திட வங்கண்
வெந்திறன் மீனென வாழ்பவ ருண்டே
வீறிய தொல்லுரு மேவினர் மன்றே. சூ௪

---

94. சிற்பரன் நாரி - சிவபெருமானும் உமாதேவியும். அரன் : எழுவாய். அம்பிகையோடு ஓத.

95. பொம்மல் - பொங்குதல். சிற்பரனைப பணிவிக்க - சிவபெருமானைப் பணியும்படி செய்ய. உரம் - திருமார்பு.

96. ஆரல் மடந்தையர் - கார்த்திகை மாதர். சுந்தரி - உமாதேவியார். முருகக் கடவுளுக்கு உமாதேவியார் அருத்திய பாலில் சிந்திய துளிகள் சரவணத்தில் விழ அங்கே மீன் உருவமாக இருநத பராசர முனிவருடைய புத்திரர்கள் உண்ணவே, அவர்கள் பழையஉருவத்தை அடைந்தனர்.

97. கொற்றம துற்ற பராசர னல்கும்
கோதக லாறு குமாரரு மன்னான்
சொற்றிடு சூள்கொடு மீனென வாழும்
துன்ப மகன்றுயர் தொல்லுரு வுற்றே
பெற்ற மிசைக்கிரி மாதொ டிருந்த
பெருந்தகை முன்றுதி பேசி வணங்க
அற்றம தற்றபு கழ்கொள் பரங்குன்
றத்திடை நீவி ரடைந்திடு மென்றான். ௯௭

98. அந்தர மீதுறு மாரலை விண்ணோர்
ஆரையு மன்புட னங்கண் விடுத்தே
எந்தை பிரானுயர் வெள்ளி விலங்கல்
இணங்கி யதன்க ணிருந்திடு போதின்
வெந்திறல் கொண்ட விலக்கர்க ளொன்பான்
வீரர்கள் கந்தனை வந்தனை செய்தார்
சுந்தரி மைந்த னெழுந்தவ ரோடும்
தூவிளை யாட றொடங்கின னன்றே. ௯௮

99. மண்ணி லுலாவுறும் விண்ணி லுலாவும்
வண்ண வயன்பதம் நண்ணி யுலாவும்
கண்ண னிருந்த தலத்தி லுலாவும்
கண்ணுத னண்ணிய கண்ணி லுலாவும்
எண்ணில் வளம்பெறு மண்புனல் தீகால்
இன்புறு விண்டனி லண்ட முலாவும்
பண்ணியல் வீணை யிசைத்தினி தாடும்
பாடு மரன்றரு பாலக னம்மா. ௯௯

---

97. கொற்றம் - இந்திரியங்களைச் செற்ற வெற்றி. சூள் - சபதம். பெற்றம் - இடப வாகனம்.

98. ஆரல் - கார்த்திகை மாதர். வெள்ளி விலங்கல் இணங்கி — கைலாய மலையை அடைந்து. இலக்கர்கள் - லக்ஷம் வீரர்கள்.

99. அயன் பதம் - பிரம லோகம். கண்ணன் இருந்த தலம் — வைகுந்தம். கண்ணில் - இடத்தில்.

100. நீடு கடல்களை யொன்று படுத்தும்
நேமி நகத்தை நிலத்தி லழுத்தும்
ஈடுறு திக்கர வங்களை வெற்பூ
டின்பொடு கட்டி யிழுத்திடு மாகத
தோடிரு வோரையு முன்னியல் பன்றி
ஒருத்தா பதத்தி லொருத்தரை யுய்க்கும்
பீடுறு மெண்டிசை யாளர் பதங்கள்
பிடுங்குபு வல்லே பிறழ்ந்திட வைக்கும். ௯௮

101. தண்டரு கொண்டல விசும்பி லுறுங்கோ
தண்டம் வளைத்துயர் தாரகை யெல்லாம்
உண்டை யெனும்படி கொண்டிமை யோர்கள்
உரங்கள் சிரங்களி னூடு தெறிக்கும்
மண்டிது போல வநேக மியற்ற
மற்ற தியற்றிய வன்மைய ராரென்
றண்டரு மன்னனு மேருவி னின்றும்
அயற்கிது கூற வகன்றன ரங்கண். ௯௯

(கலிநிலைத்துறை)

102. அங்கே ரத்தினி லன்ன நகத்தை யலைத்தே
முன்னே நின்றோர் முகத்தொடு மாறு முகத்தோன்
நன்னே யத்துட னாடி யுலாவுத லாடி
இன்றே னேயிவை செய்தவ னாமென வெண்ணி. ௱

---

100 நேமி நகம் சக்கரவாள கிரி. ஈடு உறு திக்கு அரவங்களை - பெருமையை உடைய எட்டுத் திக்கிலுமுள்ள பாம்புகளை. வெற்பூடு - அஷ்ட குலாசலங்களில் மாகத்து ஓடு இருவோரையும் - வானத்தில் செல்லுகின்ற சூரிய சந்திரரை. பதம் - இடம் எண்டிசை யாளர் - திக்குப்பாலகர் பிறழ்ந்திட மாறுபடும்படி

101. தண் தரு - குளிர்ச்சியைத் தருகின்ற விசும்பில் உறும் கோதண்டம் - வான வில்லாகிய இந்திர தனுசு. உண்டை வில்லில் வைத்து அடிக்கும் வட்டு. தெறிக்கும் சுண்டுவார் மன்னன் - இந்திரன் தேவர்களெல்லாம் பிரம தேவனிடத்து முறையிடச் சென்றார்கள்

102. அன்ன நகத்தை - அந்த மேருமலையை. ஆடி உலாவுதல் நாடி.

103. வெவ்வே ளாக மெரித்தவன் மைந்தனை வெல்வான்
அவ்வேள் விக்கிறை யும்பர்க ளோடு மவற்சூழ்ந்
தெவ்வே றன்னையு முய்த்தன னுய்த்தவை யெல்லாம்
செவ்வேண் மீதல ருற்றன வொத்தன சென்றே. எக

104. பிள்ளைத் தண்மதி சூடிய கண்ணுதல் பிள்ளை
உள்ளத் தாலொரு விற்கொடு நற்கணை யொன்றால்
வெள்ளைத் தந்தியை யட்டன னட்டபின் விண்ணோர்
வள்ளற் கேழ்கணை யுய்த்தவ சத்தை வழங்கி. எஉ

105. நாலம் பால்வரு ணன்றனை யொன்றுறு நான்மைக்
கோலம் பாலிய மன்றனை வென்றிரு கோலால்
ஆலம் பாவிய வங்கியை யங்கடல் செய்தான்
வாலம் பான்மொழி யந்தரி தந்திடு மைந்தன். எங

106. குன்றா நின்றவ ரல்ல ரவன்புடை கூடி
நின்றார் யாவரு மோடுத லோடு நெடுஞ்சீர்
துன்றா றுமுக னங்கது கண்டு துரந்தே
முன்றா னுற்ற களத்திடை வந்தனன் மொய்ம்பால்.

---

103. வேள் - காமன். வேள்விக்கு இறை - இந்திரன். அவற்சூழ்ந்து - முருகக் கடவுளைச் சுற்றிக்கொண்டு. எவ்வேல் தன்னையும் - எல்லாவிதமான ஆயுதங்களையும். அலர் - மலர்.

104. உளளத்தால் ஒரு விற்கொடு - திருவுள்ளத்தால் ஒரு வில்லை உண்டாக்கி அதனைக் கைக்கொண்டு. வெள்ளைத் தந்தியை - ஐராவதத்தை. விண்ணோர் வள்ளற்கு - இந்திரன்மேல். ஏழ்கணை உய்த்து அவசத்தை வழங்கி; அவசம் - மூர்ச்சை.

105. ஒன்று உறு நான்மைக்கோல் அம்பால் - ஐந்து பாணங்களால். கோல் - அம்பு. ஆலம் பாவிய - விடத்தின் தன்மை பொருந்திய; வால் அம் பால் மொழி - தூய பால்போன்ற இனிய மொழியை உடைய.

106. குன்றா நின்றவர் அல்லர் - உயிர் குறைநதவர் அல்லாதவர்கள். துன்று ஆறு ஆம் முகன். துரநது - துரத்தி. மொய்ம்பு - வலிமை.

(தரவு கொச்சகக்கலிப்பா)

107. மற்றதனை நாரதனு மாமுனிகண் டண்டர்குரு
உற்றுழிச்சென் றோதுதலு மும்பர்கடம் வாழ்வெல்லாம்
இற்றதுகொலெனவேங்கி யெழுந்துகுக னிடத்தடைந்து
பொற்றிருத்தா ளிணைதொழுது புகழ்ந்தினைய புகல்கின்றான்.

108. அத்தநினை யறியாம லமர்புரிந்த வண்டர்கடம் [மைநிறத்
மெத்துபிழை பொறுத்தெழுப்ப வேண்டுமென வெண்
தத்தியையு மத்தியின்மே லரசையுமற் றனைவரையும்
வித்தகனங் கெழுப்புதலும் விழுந்தார்க ளெழுந்தார்கள்.

109. உஞ்செழுந்த விமையோர்க ளுயர்குகனென் றுணராதே
வெஞ்சமராற் றினமெனவே மிகநடுங்கி யவனடிதாழ்ந்
தஞ்சலிசெய் தேத்துதலு மஞ்சலிரென் றருள்கூர்ந்து
குஞ்சரமா முகற்கிளைய குமரவேள் கூறுவான். ௭௭

110. சேயெனமுன் பெமைக்கருதிச் செருப்புரிந்தீ ரினியெம
தூயவிறல் காணுமெனத் தொல்லுலக மண்டமுயிர் [து
ஆயவெலாந் தனதுருவே யல்லால்வே றில்லையென
நேயவொரு வடிவுகொடு நின்றானெம் பெருமானே. ௭௮

111. அன்பொடுமற் புதத்தோடு மமரரெல்லாந் தொழுதேத்தக்
கொன்பொலிமுன் னுருவாகிக் குமரவே ணின்றிடலும்
இன்பொடுநீ விளையாட விவ்விடைவே றுற்றவெலாம்
முன்பெனவைத் தருடியென முகிலூர்தி வேண்டினனால்.

---

107. அண்டர் குரு - பிருகஸ்பதி.

108. மெத்து பிழை - மிக்க குற்றங்களை. வெண்மை நிறத்து அத்தி - ஐராவதம். அத்தியின்மேல் அரசு - இந்திரன். விழுந்தார்கள் - முன்பு பட்ட தேவர்கள்.

109. உஞ்சு - பிழைத்து.

110. செரு - போர். தூய விறல் - பரிசுத்தமாகிய வீரத்தை.

111. கொன் - பெருமை. இவ்விடை - இவ்விடத்தில். முகில் ஊர்தி - மேக வாகனனாகிய இந்திரன்.

112\. மகவேந்தன் வேண்டவுமை மகவேந்த றம்பொருட்டால்
மிகவேவே றுற்றவெலாம் வேறின்றி முன்னுளவாம்
தகவேயக வெனவெவையுஞ் சார்ந்தனவப் படிநவிரப்
பகைவேலோன்குகன்றாள்கள்பணிந்தினையபகர்கின்றான்.

113\. இங்குநினை யருச்சிக்க வேண்டுமென விசைந்தருளிப்
பொங்குகயி லைக்கொருசார் பொருப்பினிடை விருப்பொடுபோய்
அங்கமரர் பூசனைகொண் டருங்கயிலை மருங்கடைந்தான்
தங்குபுகழ்ப் புலவருமத் தனிவரையைத் தணந்தனரால்.

114\. வீசுபுக ழாறுமுக வித்தகனை யும்பரெல்லாம்
பூசைபுரிந் திடலாலே பொற்புறுமவ் வெற்பதுதான்
காசின்முரு கற்கிடமாய்க் கந்தவெற்பென் றொருநாமம்
பேசும்வகைபெற்றதினிப் பெருந்தகரே றியதிசைப்பாம்.

115\. நாடுபுகழ் நாடுதனி னாரதன்செய் வேள்வியின்மாட்
டாடுபிறந் துயிர்கடமை யழித்திடலு மம்மகத்திற்
கூடுமுனி வருஞ்சுரருங் கோதிலரு ணாரதனும்
பீடுடைய கயிலையெனும் பிறங்கன்மிசை யுற்றனரால்.

116\. உற்றபொழு திலக்கமுட னொன்பதுவீ ரருஞ்சூழ
வெற்றிபுனை யருட்குமர வேளிருந்த படிநோக்கி
மற்றிவனங் குறைமுடிக்க வல்லவனென் றெல்லோரும்
நற்றிருத்தா ளிணைவணங்க நம்பெருமா னவின்றருள்வான்.

112\. மகவேந்தன் - இந்திரன். உமை மகவு ஏந்தல் - பார்வதி தேவியின் குமாரராகிய முருகக் கடவுள் இவ்வடியில் மடக்கு வந்தது. தம் பொருட்டால் - அத்தேவர்களுக்காக தகவு ஏய்க - தகுதிப்படி பொருந்துக. நவிர பகை வேலோன் - மலைகளுக்குப் பகைவனாகிய வச்சிராயுதத்தையுடைய இந்திரன்.

113\. புலவர் - தேவர்.

114\. காசு இல் - குற்றம் இல்லாத. தகர் - ஆட்டுக்கிடாய்.

115\. நாடுதனில் - தேவ லோகத்தில். மகத்தில் - யாகத்தில். பிறங்கல் - மலை.

116\. நம் பெருமான் - முருகக்கடவுள்.

117. நொந்தனைந்நீர் புகுந்தபடி நுவன்றிடுதி ரென்றருளச்
சிந்தைமகிழ்ந்தொருவேள்விசெய்யவொருசெச்சையதில்
வந்தெமையிங் கடனினையமகந்தணந்து வந்தனமவ்[யமே தே.
வெந்தகர்மண் ணுயிர்களொடு விண்ணுயிர்கொன் றுலவி

118. வெய்யவத னடலடக்கி வேள்விமுடித் தடியேங்கள்
உய்யவளித் தருளெனவே யுயர்வீர வாகுவைப்பார்த்
தையவது தனைப்பிடித்திங் கணைதியென வவனேகிக்
கையில்விறற் றகர்பிடித்துக் கந்தனிடை வந்தனனே.

119. அத்தகரைப் பரியாக்கொண் டவர்வேள்வி செயவிடுத்து
வித்தகனு முருகேசன் விளையாடி யுறுநாளில்
தத்தைமொழிக் கலைமாது தலைவனுயர் கயிலையடைந்
தத்தனடி பணிந்துபுறத் தணிவாயி லிடையடைந்தான்.

120. ஆலயத்தின் முன்பிருந்த வணிமணிக்கோ புரத்தலத்திற்
கோலமுட னிருந்தருளுங் குமரவேள் கண்டருளி
ஞாலமளித் திடுவோனை நம்முன்வரு கெனவேகிச்
சீலமுறப் பணிந்திடுதல் செய்யாமற் பரவுதலும். அஅ

121. ஏதுபுரி வாயென்ன யான்படைப்பே னெனவருமோ
வேதமென வருமென்ன வியனிருக்கு விளம்பென்ன

117. புகுந்தபடி - இங்கு வந்த காரணத்தை. செச்சை - ஆடு. இங்கு அட; அட - அழிக்க. மகம் தணந்து - யாகத்தை விட்டு அகன்று.

118. அளித்தருள் - பாதுகாத்தருள்வாயாக. கந்தனிடை - முருகக்கடவுளிடத்தில்.

119. பரி - வாகனம். அவரை யாகம் செய்யும்படி அனுப்பி. தத்தை - கிளி. கலைமாது தலைவன் - பிரமதேவன். அத்தன் - சிவபிரான்-

120. ஞாலம் அளித்திடுவோனை-உலகத்து உயிர்களைச் சிருஷ்டிக்கும் பிரமதேவனை. என - என்று முருகக் கடவுள் கூற. சீலம் உற - முறைமை அமைய. பிரமதேவன் கீழ்விழுந்து பணியாமல் நின்றவாறே வணங்கினன்; ‘ பங்கயா சனதினேன் பணிந்திடாது தொழுதலும்” (**கந்தபுராணம்,** அயனைச். 4.)

121. ஏது புரிவாய் - எத்தொழிலைச் செய்வாய். வேதம வருமோ என. வரும் என்ன - வரும் என்று பிரமன் கூற. இருக்கு - வேதத்தின் சிறு பகுதி. குடிலை - பிரணவம்.

ஆதியினிற் குடிலையெடுத் தறைகுதலு மதன்பொருளை
ஓதியபின் னேதெனவே யோதிஞ னுமைபாலன்.

122. மன்னுகுடி லைப்பொருளை யறியாமன மயங்குதலும்
கொன்னுடைய நரசிங்கக் குட்டிதலைக் குட்டியுதைத்த
தின்னலுறக் கந்தவெற்பிற் சிறையிடுவித் ததிலேகி
அன்னநடை யுமைபால னவிகளபன் னுட்படைத்தான்.

123. அங்கதுபின் னொருநாளி லண்டரொடு முனிவரொடும்
செங்கண்மால் கயிலைநெடுங் சிலம்படைந்து நந்திவிடச்
சங்கரனைப் பணிந்தயனைச் சண்முகத்தே னிட்டசிறை
நங்கள்பிரான் றவிர்த்தியென நந்தியொடு நவின்றருள்வான்.

124. வென்றியுறு குமரனிடை மேவியாம் விடச்சொன்னேம்
என்றுவிதி சிறைவிடுவித் திங்கணைவா யெனவெதிபோய்
நின்றிதனைப் புகன்றிடலு நின்றிடிலிங் குன்றனையும்
இன்றுசிறை படுத்திடுவே னென்றிடமீண் டிறைக்குரைத்தான்.

125. இந்தமொழி கேட்டுநகைத் தேறேறிக் குமரனுறு
கந்தமலைப் புகுந்திடலுங் கழல்பணிந்தென் வந்ததென
அந்தணனைவிடுத்திடென வதுசெய்யேனெனச்சினம்போல்
அந்தமிலா னேதுதலு மயன்றனைமுன் புறவுய்த்தான்.

---

122. கொன் உடைய - அச்சத்தை உடைய நரசிங்கக்குட்டி தலைக்குட்டி - திருமாலின் புதல்வனாகிய பிரமதேவன் தலையிலே குட்டி. அதில் - கந்தகிரிக்கு

பிரமனைச் சிறையிடுவித்து முருகக் கடவுள் தாமே உயிர்களைப் படைக்கத் தொடங்கினார்.

123 அங்கது பின் - அதன்பிறகு என - என்று திருமால் கூற.

124. விதி சிறை - பிரமனது சிறைவாசத்தை என என்று கட்டளையிட.

125. ஏறு ஏறி - இடப வாகனத்தில் இவர்ந்து என வந்தது என - இங்கே எழுந்தருளி வந்ததன் காரணம் யாது என்று முருகக் கடவுள் வினவ அந்தணனை - பிரம தேவனை அந்தம் இலான் - சிவபிரான்.

126. அந்தணனுக் கருள்புரிந்தே யறுமுகனைக் கவானிடைவைத்
துந்துகுடி லைப்பொருணீ யுரைத்தியென வுரைத்ததுகேட்
டெந்தைமகிழ்ந் தருங்கயிலை யெய்தினான் குறுமுனிக்குச்
சுந்தரமூ லப்பொருளைச் சொல்லினான் குமரேசன். கூ௪

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

127. அணியார்முரு கேசன் வளர்ந்ததடத்
தமுதக்கொடி சுந்தரி யென்றிருவோர்
தணியாநசை யிற்குக னைத்தழுவத
தவமுற்றது கண்டவர் தங்கணுறப்
பணியாவெதிர் நிற்ப விரும்பியதென்
பகர்வீரென வெம்மை மணத்தியெனப்
பிணியான தறுத்தெனை யாளுமருட்
பெருமானவ ரோடிது பேசுவனால். கூ௫

128. பேரன்பு பொருந்திய நுங்கடமைப்
பின்மன்ற லியற்றுது மவ்வளவும்
சீரிந்திரன் வேடர்கள் பான்மகவாய்ச்
சென்றேயிரு மென்றரு ளோடுவிடுத
தாருந்தொழு கந்த விலங்கலில்வந
தணிசோகயி லாய மடைந்தரனோ
டேருநதுமை யாளை வணங்கியவர்க்
கிடையாக விருந்தன னெம்பெருமான். கூ௬

---

126. கவானிடை வைதது - துடையினிலே உட்கார வைததுக் கொண்டு. உநது குடிலைப பொருள் - முதலிற் கூறபபெறும் பிரண வத்தின் பொருளை. உரைத்தது கேட்டு - சிவபெருமான் விருப்பப் படியே முருகக் கடவுள சொல்லியதைக் கேட்டு. சுநதர மூலப பொருளை - அழகிய பிரணவப பொருளை, எல்லா மநதிரங்களுக்கும் மூலமாதலின், பிரணவததை மூலம் என்றார்.

127. தடம் - சரவணப பொய்கை. நசையின - விருபபததால். தவம் உற்றது கண்டு - தவம் செய்வதை உணாநது. பணிநது அவ்விரு மகளிரும் எதிரே நிற்ப. பிணி - பிறவியாகிய நோய்.

128. பின் மன்றல இயற்றுதும் - பிற்பாடு திருமணம செய்து கொள்வோம். இந்திரன்பாலும் வேடர்பாலும் முறையே பெண்களாக.

129. அப்போதினி லண்டர்க ளிந்திரன்பால்
அயன்மாகயி லாய மடைந்திடலும்
துப்பாரரு ணந்தி தடுத்துவிடத்
தோகைக்கொரு பாகனை யன்பொடுகண்
டெப்போது மிடுக்கண் விளைத்திடுசூர்
என்போன்புரி துன்ப மிசைத்திடலும்
மெய்ப்பார்குக னோடவு ணன்றனைநீ
வென்றேவரு கென்று விளம்பினனே. கஎ

130. அப்பான்மை புரிந்திடு வேனெனவே
அடல்சேர்பதி னொன்றெ னுருத்திரரை
மெய்ப்பார்பதி னோர்படை யாவருளி
வேலொன்று குகன்கர மீதுகொடுத்
தொப்பானதி லாத விலக்கர்களோ
டொன்பானெனு முத்தமர் கைத்தலமேற்
றுப்பார்பல வெம்படை யங்கருளித்
துணையாக வுறும்படி சொற்றனனே. கஅ

131. இத்தன்மை நிகழ்ந்தபி னாறுடனே
எட்டாகிய பூத விராசர்தமைச்
சுத்தன்பரி வோடு தெரிந்தருளித்
தொல்பூத விராயிர வெள்ளமுடன்

ஏர் உந்து உமையாளை; ஏர் - அழகு. சிவபிரானும் உமாதேவியாரும் வீற்றிருக்க இடையே முருகக்கடவுள் எழுந்தருளி யிருந்தார். சிவ பிரானது இந்த மூர்த்தத்தை ஸோமாஸ்கந்தர் என்று கூறுவர்.

129. துப்பு - வலிமை தடுத்துவிட - முதலில் உள்ளே புகா மல் தடுத்துப பிறகு இறைவன் திருவுள்ளக் குறிப்புணர்ந்து உள்ளே விட மெய்ப்பு - உண்மை. குகனோடு விளம்பினன்.

130. அப்பான்மை - அவ்வாறு. ஏகாதச ருத்திரரையும் பதினோ ராயுதமாகச் செய்து அளித்தார். பதினோராயுதமாவன: தோமரம், கொடி, வாள், வச்சிரம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டம், வில், மழு என்பன. ஒன்பான் எனும் உத்தமர் - நவ வீரர்கள். துப்பு-வலி.

131. பூத இராசர் - பூதத் தலைவா. சுத்தன் - சிவபெருமான். அத்தம் - கை படையா உறும் - சேனைகளாக இருங்கள். மெத்தும் திறல் - மிக்க வலி. வித்தகன் - சிவபிரான்.

அத்தம்பதி ஞென்றுட ஞென்றுடையான்
அடல்சேர்படை யாவுறு மென்றருளி
மெத்துந்திறல் கொண்டிடு மோரிரதம
வேலோனுற நல்கினன் வித்தகனே. சுக

132. இவ்வாறு கொடுத்து மதிச்சடையோன்
ஏகென்ன வலங்கொ டிறைஞ்சுதலும்
செவ்வானுர மீதி லணைத்தருளிச்
சீர்தங்கிய நாரி திருக்கரமேல்
மைவாழ்வுறு கண்ட னளித்தருள
மாதன்பில் வயிற்றி லணைத்திமையோர்
உய்வானவு ணப்படை முற்றுமழித்
துறுவாயிவ ணென்ன வுரைத்தனளால். க00

133. ஈதம்மை யிசைத்திட லுந்தொழுதே
இருவோரையு மன்புட னேவிடைகொண்
டோதும்புகழ் வேல னகன்றுயர்தேர்
உற்றேன்பது பேரு மிலக்கர்களும்
ஏதந்தவிர் சாரத மன்னவரும்
இமையோரு மிராயிர வெள்ளமெனும்
பூதங்களு மெங்கணு மங்கணுகிப்
புடைசூழ வடைந்தன னம்புவிமேல். க0க

(கலிவிருத்தம்)

134. பாருலக மீதிலுமை பாலன்வரு போதில்
தாரக னெனும்பெயர் தரித்ததொரு வெய்யோன்

132. இறைஞ்சியவர் முருகக் கடவுள். செவ்வான் உரமீதில் - சிவந்த பெருமையையுடைய திருமார்பில். நாரி - உமாதேவியார். மாது அன்பினுல். உய்வான் பிழைக்கும் பொருட்டு. அவுணப் படை - அசுரர் சேனையை.

133. ஒன்பது பேர் - நவ வீரர்கள. ஏதம் - இடையூறு. சாரத மன்னர் - பூதத் தலைவர்.

134. வெய்யோன் - கொடியவன. அரணம் - பாதுகாப்பு. தாரகனது அரணமாகிய கிரவுஞ்ச கிரி. அயல் - அருகில்.

ஓரரண மானகிர வுஞ்சகிரி கண்டார்
வீரமுறு வேலனயன் மேவிவரு விண்ணோர். ௧0௨

135. கண்டனர் வெருண்டனர் கலங்கின ரிடுக்கண்
கொண்டன ருளங்குலை குலைந்தனர் தளர்ந்தார்
திண்டிறல்கொள் வேலனிரு சேவடி வணங்கி
அண்டர்புகழ் நாரத னறைந்திடுத லுற்றான். ௧0௩

136. உற்றகிரி யீதுகிர வுஞ்சமிதி னோர்சார்
மற்றுநிக ரற்றதொரு மாயநக ரூடே
சுற்றவுணர் சேனையொடு சூரிளவ லாகும்
வெற்றிபுனை தாரகன் விருப்புட னிருப்பான். ௧0௪

137. வென்றியுற வின்றிவனை வென்றிடுவை யாயின்
வன்றிறல்கொள் சூரனை வதைப்பதெளி தென்னத்
துன்றுகதிர் வேலன்முனி சொன்னவை வினவிச்
சென்றிவன தாருயிர் சிதைத்திடுது மென்றான். ௧0௫

138. என்றுபி னடற்பெறு மெழிற்புயனை வேலோன்
நன்றொடு தெரிந்தினைய நாகமதி னோர்சார்
வென்றியுள மாயநகர் மீதவுண ரோடும்
வன்றிறல்கொ டாரகன் வயத்தொடு வதிந்தான். ௧0௬

139. அம்புவி யழுந்தவரு மாயிரநல் வெள்ளத்
தும்பர்தொழு சாரத ருவர்க்கிறையி னோருந்
தம்பியர்க ளோடுமிகு தானவர்க ளோடும்
மொய்ம்பொடு செருப்புரிய முந்துபட ரென்றான். ௧0௭

---

135. அண்டர் - தேவர்.

136. மற்று - வேறு நகரங்கள். மாய நகர் - மாயாபுரி. சுற்று அவுணர். சூர் இளவல் - சூரபன்மனுக்குத் தம்பி.

138. அடற்பெறு புயனை - வீரவாகுவை. நாகம் - மலை. வயத்தொடு - வலிமையோடு

139. அழுந்த - மிகுந்த பாரத்தால் அழுங்கும்படியாக. சாரதரும் அவர் தலைவரும். உவர்க்கு இறையினோர் - பூதத்தலைவர். மொய்ம்பொடு - வலிமையோடு. செரு - போர். படர் - செல்வாயாக.

140. என்னவிது நன்றென விறைஞ்சிமுரு கேசன்
தன்னைவிடை கொண்டினிய தம்பியர்க ளோடும்
மின்னுகதிர் வேலனருள் வீறிரத மேறி
மன்னுபடை யோடவுணன் மாயநக ருற்றான். ௧௦௮

141. ஒற்றரிது சொற்றிட வுணர்ந்தவுணர் மன்னன்
செற்றமிக மூளவொரு தேரின்மிசை யேறித்
துற்றவனி கங்கள்புடை சுற்றவெதி ருற்றான்
அற்றமறு பூதருமவர்க்கெதிர் புகுந்தார். ௧௦௯

142. தெண்டிரை கடுத்தவிரு சேனையு மெதிர்ந்தே
மண்டுபடை சிந்தியமர் வல்லைபுரி போதிற்
சண்டமிகு தானவர்கள் சாரதர்க டம்மால்
ஒண்டிற விழுந்துதொலை வுற்றனர்க ளன்றே. ௧௧௦

143. வாரண முகத்தவுணர் மன்னனிது கண்டே
தேரினு மிறங்கியொரு திண்கதை பிடித்தே
பாரிடர்கள் பாரிடை பதைப்புற வதைப்ப
ஏருறு மிலக்கரு மெதிர்ந்துசமர் செய்தார். ௧௧௧

144. போரினி லெதிர்ந்துழி புழைக்கைகொடு சுற்றி
வாரியி லெறிந்தன னெழுந்தபினும் வந்தார்
ஏருலவு கோளரி யெதிர்ந்துகணை நூறாற்
கோரவவு ணன்றன்மகு டத்தைவிழ வெய்தான். ௧௧௨

---

140. வேலன் அருள் - முருகக் கடவுள் தந்தருளிய.

141. இது சொற்றிட - வீரவாகு தேவர் போர்புரிய வரும் இச் செய்தியைக் கூற. செற்றம் - கோபம். துற்ற அனிகங்கள் - செறிந்த சேனைகள். அற்றம் - சோர்வு.

142. தெண்திரை கடுத்த - கடலை ஒத்த. வல்லை - விரைவாக. சண்டம் - கொடுமை. சாரதர்கள் - பூதத்தலைவர்கள். தொலைவு - தோல்வி.

143. வாரண முகத்து அவுணர் மன்னன் - யானை முகத்தை யுடைய தாரகாசுரன். கதை - கதாயுதம். பாரிடர்கள் - பூதத் தலைவர்.

144. புழைக்கை - துதிக்கை. வாரியில் - கடலில். கோளரி - வீரகேசரி. கோர அவுணன் - விகாரத்தையுடைய அசுரன்.

145. சென்னிமுடி வீழ்தலுமொர் திண்கதை யெறிந்தே
பொன்னிரத மீமிசை புகுந்தன னெதிர்ந்தான்
மன்னுகதை பட்டிட மயங்கவது கண்டே
துன்னுவிறல் கொண்டுவளர் தோளின னெதிர்ந்தான்.

146. வந்தெதிர் புகுந்ததிறல் வாகுமிசை வெய்யன்
சுந்தர விறற்கொளொரு சூலமது கைத்தான்
உந்தெழி லுரத்தினிடை யுற்றிடலு மீசன்
மைந்தனிளை யோன்மிகு வருத்தமொடு நின்றான். ககச

147. மொய்ம்புடைய வாகுமிகு மோகமொடு நின்றேழ்
தம்பிய ரெதிர்ந்துடைவ தானது தெரிந்தே
வெம்பதகன் முன்பணுக வெப்பனு மெதிர்ந்தான்
அம்புமழை சிந்தியிரு வோருமமர் செய்தார். ககரு

148. பொற்சகட மீதிலுறு புல்லனது போதின்
விற்சமர் புரிந்திவனை வெல்வதரி தென்றே
கற்பொருவு தோளுடைய காளைமிசை செல்ல
விற்குலவு மும்பர்கள் விறற்படைகள் விட்டான். ககசு

149. விட்டிடலு மப்படைகள் விட்டருளி வெய்யன்
தொட்டபடை முற்றுமிகு துண்டமது கண்டான்

---

145. புகுந்தனன் எதிர்ந்தான் - புகுந்து எதிர்த்தான். மயங்க - வீரகேசரி மயங்க. விறல்கொண்டு வளர்தோளினன் - வீரவாகு தேவர்.

146. திறல்வாகு - வீரவாகு. வெய்யன் - தாரகாசுரன். கைத்தான் - செலுத்தினன். உரத்தினிடை - மார்பில். மைந்தன் - முருகன்; அவனுக்கு இளையோன், வீரவாகு தேவர்.

147. மொய்ம்புடைய வாகு - வீரவாகு. உடைவதானது - தோல்வியுறுவதை. பதகன்-பாதகனாகிய தாரகாசுரன். வீரவாகு அணுக.

148. பொற் சகடம் - பொன்னாற் செய்த தேர். புல்லன் - புன்மையையுடைய தாரகன். உம்பர்கள் விறற்படைகள் - தேவர்களுக்குரிய அஸ்திரங்களை.

149. அப்படைகள் - அத்தகைய அஸ்திரங்களை. தொட்ட - தொடுத்த. கண்டான்: கண்டவர் வீரவாகு தேவர். மட்டில் உருவங்கொடு - கணக்கில்லாத பல உருவங்களை எடுத்துக்கொண்டு; எடுத்தவன் தாரகன்.

மட்டிலுரு வங்கொடு வளைந்துசம ராடக்
கட்டழகு கொண்டதொரு காளையிது செய்தான். ௧௧௭

150. மெத்துமுரு வத்தவுணன் மீதுவிட வீர
பத்திர னெடும்படை பரித்திடலு மாயக்
கொத்தற வுடன்றனிமை கூடியொ ருபாயம்
சித்தமிசை கொண்டுகிர வுஞ்சகிரி சென்று. ௧௧௮

151. மற்றதி னொளித்திடலும் வாகைபுனை வாகு
சுற்றமொடு தம்பியர்க டோன்முக னொளித்த
பொற்றைபுக வண்டுமயல் பூண்டனர் கிடந்தார்
அற்றமறு சூரிளவ லன்னது தெரிந்தான். ௧௧௯

152. தெரிந்துமகிழ் வாகியொரு தேரின்மிசை யேறி
அருந்திறல்கொ டண்டமொ டமர்க்கள மடைந்தே
விரிந்துசெறி பூதர்மிசை வெங்கணைகள் சிந்த
இரிந்தனர்க ளும்பரினு மிம்பரினு மன்னோர். ௧௨௦

153. நண்ணினைய கண்டுபுகழ் நாரத னெனும்பேர்ப்
பண்ணவ னிடர்க்கொடு படர்ந்தமரர் செய்த
புண்ணிய முறைந்துழி பொருந்தியடி தாழூஉ
விண்ணவர் மெலிந்திட விளைந்தன விளம்ப. ௧௨௧

---

150. வீரபத்திரன் நெடும்படை - வீரபத்திராஸ்திரம். பரித்திடலும் - கையில் எடுத்துத் தாங்கவே. மாயக்கொத்து அற - தாரகன் எடுத்த மாய உருவக்கூட்டம் முழுவதும் அற்றுப்போக. தனிமைகூடி : தாரகன் செயல்.

151. தோல் முகன் - யானைமுகனாகிய தாரகன். பொற்றை புக - மலையினுள்ளே செல்ல. மயல் பூண்டனர் கிடந்தார் - மயக்கத்தை அடைந்து கிடந்தார். அற்றம் - சோர்வு. சூர் இளவல் - சூரனுக்குத் தம்பியாகிய தாரகாசுரன்.

152. திறல்கொள் தண்டமொடு ; தண்டம் - படை. உம்பர்-தேவலோகத்தில். இரிந்தனர்கள் - கெட்டு ஓடினர். அன்னோர் பூதத்தலைவர்.

153. நண்ணும் இனைய காட்சிகளைக் கண்டு. பண்ணவன் - முனிவன். அமரர் செய்த புண்ணியம் - தேவர் இயற்றிய புண்ணியத்தின் பயனாகிய முருகக் கடவுள். தாழூஉ - வணங்கி - தேவர்கள் தோல்வியடையும்படி நடந்தவற்றைச் சொல்ல

154. அங்கதை வினவியெமை யாளுடைய செவ்வேள்
இங்கவனை நூறுவ னிறைப்பொழுதி லென்றே
துங்கமுறு பூதர்க டுவன்றியயல் சுற்றச்
செங்குருதி தங்கிய செருக்கள மடைந்தான். கஉஉ

155. ஈடுசெறி பூதரு மிருந்தகுவர் யாரும்
சாடுசம ராடமிகு தானவ ருடைந்தே
ஓடவது கண்டன னுருத்தவுணர் மன்னன்
நீடிய கரத்துறு நெடுஞ்சிலை வளைத்தான். கஉங

156. வெங்கணைக ளும்பல வியன்படையு நேரே
அங்கணை கணக்குழுவி னங்கமுற வுந்திக்
கங்கைமுடி யானுதவு கந்தனெதிர் வந்தே
சங்கையில் பவங்குலவு தாரக னுரைப்பான். கஉச

157. மேதகு மரிக்குமலர் மீதிலய னுக்கும்
மாதவள வும்பலிறை வற்குமல திந்நாள்
ஆதிபர னுக்குமெம ருக்குமம ராட
ஏதுவிலை வந்தபடி யேதுமொழி கென்றான். கஉரு

---

154. நூறுவன் - கொல்வேன். இறைப்பொழுதில் - கண நேரத்தில். துவன்றி - நெருங்கி.

155. ஈடு - பெருமை. தகுவர் - அசுரர். சாடு சமர் ஆட - எதிர்த்துச் சாடும் போரைச் செய்ய. தானவர் உடைந்து - அசுரர் தோல்வியுற்று. உருத்து - கோபித்து.

156. அங்கு அணை. கணக்குழுவின் அங்கம் உற உந்தி - பூதங்களின் கூட்டத்தின் உடம்பில் பதியும்படியாக விட்டு. சங்கையில் - அளவில்லாத. பவம் குலவு - பாவம் நிறைந்த.

157. அரிக்கும் - திருமாலுக்கும். மா தவள உம்பல் இறைவற்கும் - இந்திரனுக்கும்; தவள உம்பல் - வெள்ளை யானை. இந்நாள் - இவ்வளவு காலம். அமர் ஆட - போர் செய்ய. வந்தபடி - நீ போர் செய்ய வந்தவாறு. 'திருமால் முதலிய தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பகை உண்டேயன்றிச் சிவபிரானுக்கும் எமக்கும் ஒரு பகையும் இல்லை; அங்ஙனம் இருக்க நீ போர்செய்ய வந்த காரணம் என்ன?' என்றான்.

158. நற்றெழில் புரிந்திடு நதிச்சடில நம்பன்
அற்றமறு வானவர்க ளானவர்க டம்மைச்
செற்றமொடு நீவிர்சிறை செய்ததை யுணர்ந்தே
மற்றெமை விடுத்தனனும் வன்மைவிறல் சிந்த. கடுசு

159. என்றுபல வேலவ னிசைத்தமொழி கேளாக்
குன்றுறழு மொய்ம்புள கொடுந்தகுவர் மன்னன்
வன்றனு வளைப்பவுமை மைந்தனும் வளைத்தான்
துன்றிரு வருங்கணை சொரிந்தமர் புரிந்தார். கடுஎ

160. கையன்விடு வெங்கணைகள் கந்தனெதிர் சிந்தும்
துய்யன்விடு வெங்கணைகள் சூர்துணை யகற்றும்
வையமிசை யோர்வெருவ வையமிசை நின்றே
வெய்யசம ரிவ்வகை விளைத்தனர் வெகுண்டே. கடுஅ

161. இந்தவகை விற்சம ரியற்றுமது போதிற்
கந்தன புயங்களுள கந்தன்முரு கேசன்
வெந்திறல்கொ டாரகன் விடுங்கணை விலக்கிச்
சிந்தினனொர் கோடிகணை தீயன்மிசை செல்ல. கடுகூ

162. கோடிகணை பட்டுழி கொதித்ததி னிரட்டி
நீடுகணை விட்டிடலு நேசமுரு கேசன்

---

158. முருகக் கடவுள் விடை கூறுகின்றார். அற்றம் - சோர்வு. எமை என்னும் பன்மை பெருமிதம் தோன்ற நின்றது. நம்பன் விடுத்தனன்.

159. குன்று உறழும் மொய்ம்பு - மலையை ஒத்த தோள். தகுவர் மன்னன் - தாரகாசுரன். வன் தனு - வலிய வில்லை.

160. கையன - வஞ்சகனாகிய தாரகன். சூர்துணை - சூரனுக்குத் தம்பி. கணைகளை அகற்றுவான். வையமிசை நின்று - தேர்மீது நின்று.

161. விற் சமர் - விற் போர். கந்து அன்ன புயங்கள்; கந்து - கட்டுத்தறி.

162. அதின் இரட்டி - அதைப்போல இரண்டு பங்கு; இரண்டு கோடி. விட்டிடலும் - தாரகன் எய்யவே. கோல் - அம்பு. சிதறிக் குறைத்தனன்.

நாடிமிகு கோல்சிதறி நண்ணலன் விடுப்பக்
கூடிவரு வாளிகள் குறைத்தன னறுத்தே. கசுO

163. கன்னியிட னண்ணுமிறை கண்ணில்வரு மண்ணல்
பின்னரு மிலங்கிரு பெருங்கணை துரந்தே
இன்னல்புரி சூரனிளை யானுட லிளைப்பக்
கொன்னுறு முகக்கையொடு கோடுக ளறுத்தான். கசுக

164. சந்துறு முகக்கைநெடி தானதன தந்தம்
சிந்தலு மனத்திடை சினத்தவுணர் செம்மல்
வெந்திறல்கொ ளாயிரம் விறற்கணை விடுத்தே
கந்தனிர தத்துறு கவின்கொடி யறுத்தான். கசுஉ

165. அப்பொழுது வேலவ னருங்கணைக ளெட்டு
மெய்ப்புற விடுத்தவுணன் விற்றனை யொடித்துத்
துப்புடைய வாயிர நெடுங்கணை துரந்தே
ஒப்பிலவ னேறிரத மொல்லைதுகள் கண்டான். கசுங

166. தேரழிய வேறுமொரு தேரின்மிசை யேறி
வீரமுற மற்றுமொரு விற்றனை யெடுத்தே
சீரிய குகன்றனது தேர்கடவு கான்மேல்
ஆறும்வகை யாயிர மடற்கணை விடுத்தான். கசுச

---

163. உமாதேவியார் தம் வாமபாகத்தே வீற்றிருக்கப் பெற்ற சிவபிரான். இளையான் - தம்பி. முகக்கை - துதிக்கை. கோடுகள் - கொம்புகளை.

164. சந்து உறு முகக்கை - மூட்டுவாயை உடைய தும்பிக்கையும். தன தந்தம் - தன் தந்தங்களும். சினத்து : சந்தம் நோக்கி வலித்தது.

165. முருகக் கடவுள் தாரகன் வில்லை ஒடித்துத் தேரைப் பொடியாக்கினர். துப்பு - வலி.

166. தாரகன் வேறோர் தேரின்மேல் ஏறி முருகக் கடவுளுக்குத் தேர்ப்பாகனாக இருந்த வாயுதேவன்மீது ஆயிரங் கணைகளை விட்டான். கால் - வாயுதேவன்; "அயல்வரு மருத்தினை நோக்கித், தண்ணளி புரியு மறுமுகத் தெந்தை தனிப்பெருந் தேர்மிசை நீபோய்ப், பண்ணொடு மூட்கோன் மத்திகை பரித்துப் பாகனாய்த் தூண்டெனப் பணித்தான்" (கந்த. படையெழு. 1.)

167. மன்னுகணை மேனிபட மாருதம் வருந்த
அன்னது தெரிந்துகுக னுயிர நெடுங்கோல்
கொன்னவுணர் மன்னது குளத்தினு ளழுத்தப்
பொன்னினிர தத்திடை புலம்பினன் விழுந்தான். ௧௬௫

168. சோரியொடு சோபமொடு சூரிளவல் வீழ
வீரமுற வன்படைஞர் வேலனை வளைந்தே
போரது புரிந்துழி பொலிந்தகணை தூவிச்
சீரிய குகன்றகுவர் சேனைக ளறுத்தான். ௧௬௬

169. மையல தொழிந்திட வெழுந்தவுணர் மன்னன்
செய்யமுரு கன்புடை சிவன்படை செலுத்தக்
கைகொடு பிடிப்பவது கண்டுபல மாயை
வெய்யமலை யோடுசெய வேலினை விடுத்தான். ௧௬௭

170. வென்றிபுனை யெஃகமது விஞ்சைதரு குன்றை
வன்றிறல்கொ டாரகனை வல்லைபி லழித்தே
ஒன்றுதிறல் வீரரை யெழுப்பியுயர் கங்கை
சென்றதனி லாடுபு திரும்பியதை யன்றே. ௧௬௮

171. வெந்திறல்கொள் வேலது விசாகனது கைமேல்
வந்தினி திருப்பவடல் வாகுமுதல் வீரர்
எந்தையெதிர் வந்திட விலங்குமுரு கேசன்
புந்திகள் களிப்பவவ ருக்கருள் புரிந்தான். ௧௬௯

---

167. மாருதம் - வாயுதேவன். குளத்தினுள் அழுத்த - நெற்றியில் அழுந்தும்படி செய்ய.

168. சோரி - இரத்தம் சோபம் - சோர்வு ; மயக்கம். தகுவர் சேனைகள் - அசுர சேனைகளை.

169. மையல் - மயக்கம். செய்ய முருகன் : "செய்யன் சிவந்த வாடையன்" (திருமுருகாற்றுப்படை.) சிவன் படை - பாசுபதாஸ்திரத்தை. மலையோடு தாரகன் பல மாயை செய்ய.

170. எஃகம் - வேல். விஞ்சைதரு குன்றை - மாய வித்தைகளைச் செய்த கிரவுஞ்சகிரியை. குன்றையும் தாரகனையும். வீரரை - முருகக் கடவுள் படையில் அசுரரால் விழுந்த வீரர்களை. ஆடுபு - நீராடி. திரும்பியதை: ஐ, சாரியை.

171. விசாகன் - முருகக் கடவுள். அடல்வாகு - வீரவாகு.

172. மற்றதுபி னுந்துதிறல் வாகுவை விளித்தே
வெற்றியொடு தாரகன் விடுத்துழி பிடித்த
அற்றமில ரன்படைய வன்கையி லளித்தான்
தற்றுமிகு தானவர்க டங்கள்குல காலன். கசо

173. இறந்தமிகு பூதர்க ளியாரையு மெழுப்பி
நிறைந்தபடை சூழ்தர நிவந்திடு கவந்தப்
பறந்தலை கடந்தடல்கொள் பன்னிரு புயத்தோன்
சிறந்தவிம யக்கிரியி னெல்லையது சேர்ந்தான். கசக

174. தென்றிசையி னேகியுயர் தேவகிரி நண்ண
வன்றிறல்கொ ளாதவன் மறைந்தனனவ் வேலை
குன்றுதலி லாவனைய குன்றின்மிசை வென்றிப்
பொன்றிகழு மெஃகமுள புங்கவ னிருந்தான். கசஉ

175. ஆசிலருள் வேலவனை யவ்வரையின் விண்ணோர்
பூசனை புரிந்தனர் புகன்றவிது நிற்க
வீசுபுக ழும்பன்முகன் வீடியது கேளா
மாசவுரி யென்னுமனை மாதுதுய ருற்றாள். கசங

176. மையுறு தடங்கண்மட மங்கையரொ டேகிச்
செய்யதொரு மின்னனைய செல்வமெனு மாயப்
பொய்யினில் விழுந்துபல புன்மைகள் புரிந்தோன்
மெய்யினில் விழுந்தலறி மெத்துதுய ருற்றாள். கசச

---

172. தாரகன் தன்மேல் ஏவப் பற்றிக்கொண்ட பாசுபதாஸ்திரத்தை. தற்றுமிகு - நெருங்கி மிகுந்த தானவர்கள்...காலன்: "நிருதரார்க்கொரு காலா சயசய" (திருப்புகழ்.)

173. நிவந்திடு கவந்தப பறந்தலை கடந்து - குவியலாக உயர்ந்திருக்கிற உடற் குறைகளையுடைய போர்க்களத்தை விட்டு நீங்கி; கவந்தம் - தலை நீங்கிய உடல்.

174. அனைய குன்று - தேவகிரி. எஃகம் - வேல்.

175. உம்பல் முகன் - தாரகன். வீடியது - இறந்தது. மனை மாது - தாரகனுடைய மனைவி.

176. மின் அனைய செல்வம் - மின்னலைப் போன்ற நிலையாமையை உடைய செல்வம்.

177. அந்தவமை யத்தின்முன மாசுர மடைந்த
சுந்தர மிருந்தவசு ரேந்திரன் வினாவி
வந்துதன தத்தன்மடி வானசெயல் கண்டு
வெந்துயர் பொருந்திட விழுந்தலறி னானால். கசரு

178. அங்குள கடன்செய்தவ னைத்தகன மாற்றித்
திங்கண்முக வன்னையர்கள் யாருமெரி சேரப்
பொங்குதுயர் கொண்டுசில போரவுண ரோடும்
மங்கலகல் தென்கடன் மகேந்திர மடைந்தான். கசசு

179. அந்நகரி லுள்ளவ ரருந்துயர் பொருந்தக்
கொன்னுடைய சூரனுறு கோயிலவை யுற்று
மன்னவ னடித்துணையின் வல்லையின் விழுந்தே
இன்னலொ டரற்றின னிகழ்ந்தன விசைத்தான். கசஎ

180. தம்பிமடி வானமொழி தன்செவியி லேற
வெம்பின னரித்தவிசின் மீமிசை யிருந்தோன்
அம்புவி விழுந்தன னரற்றின னதற்பின்
மொய்ம்புடைய வேலனொ டமர்க்கெழ முயன்றான்.

181. அன்னசெயல் கண்டன னமைச்சரி லமோகன்
முன்னுற வடைந்துசில புந்திகண் மொழிந்தே
மன்னவ னமர்க்கெழன் மறுத்திட விருந்தே
இன்னல்புரி சூரனவ னின்னதை யியற்றும். கசகூ

---

177. ஆசுரம் - சிங்கமுகாசுரனுக்குரிய ஆசுரபுரி என்னும் நகரம். அசுரேந்திரன்: தாரகாசுரன் மகன். தத்தன் - தந்தை.

178. உள கடன் செய்து - தான் செய்ய வேண்டிய ஈமக் கடன்களைச் செய்து. அவனைத் தகனம் ஆற்றி - தாரகாசுரனைத் தகனம் செய்து. அன்னையர்கள் - தாரகாசுரனுடைய மனைவிமார். மகேந்திரம் - சூரனுக்குரிய மகேந்திரபுரி.

179. கொன் - பெருமை; அச்சமும் ஆம். கோயில் அவை - அரண்மனையிலுள்ள ஆஸ்தான மண்டபத்தை.

180. அரித்தவிசு - சிங்காதனம். மொய்ம்பு - வலிமை.

181. புந்திகள் - அறிவுரைகள். அமோகன் என்னும் மந்திரி, பகைவனுடைய வலிமை முதலியவற்றை ஆராய வேண்டும் என்று கூற, சூரன் வேகந் தணிந்தான். மறுத்திட - அமோகன் தடுக்க.

182. மற்றிணையில் வேலவன் மருங்கினி னெருங்கும்
வெற்றியுறு சேனையை வினவிவரு மாறங்
கொற்றனை விடுத்துவிட மொத்தவ னிருந்தான்
கொற்றமுரு கேசனது கொள்கையுரை செய்வாம். ௧௫௦

183. தேரினொடு வாரிமிசை செங்கதி ரருக்கன்
ஏரினொ டெழுந்தன னெழுந்தவது மானச்
சாரதர் குலாவவரு சையநிகர் வையம்
வீரநெடு வேலுள விசாகனினி துற்றான். ௧௫௧

184. மாருதவ லவன்விடுமவ் வையமிசை மேவிச்
சீரிலகு வானவர் செழுங்கிரி யகன்றே
வீரமுறு சேனையுடை மேவுற விறற்கே
தாரகிரி கண்டது தணந்தருளி னானல். ௧௫௨

185. கருக்கடல் கடப்பவருள் காசிநகர் கண்டு
பருப்பத மெனும்பெயர் பரித்தகிரி கண்டு
விருப்பமுள வேங்கட வியன்குவடு கண்டு
மருக்குலவு தென்கயிலை வண்சிகரி கண்டு. ௧௫௩

186. ஆலவன மாகிய வரும்பதி தெரிந்து
ஞாலமுயர் கச்சியெனு நன்னகர் தெரிந்து

---

182. மற்று இணை இல் - வேறொருவர் தனக்கு ஒப்பு இல்லாத. சேனையை வினவி வருமாறு - சேனையின் அளவையும் வலிமையையும் ஆராய்ந்து வரும்படி. விடம் ஒத்தவன் - சூரபதுமன்.

183. அருக்கன் - சூரியன். ஏர் - எழுச்சி. சாரதர் - பூதர்கள். சையம் நிகர் வையம் - சையமலையை ஒத்த தேர்.

184. மாருத வலவன் - வாயு தேவனாகிய தேர்ப்பாகன். வானவர் செழுங்கிரி - தேவகிரி. கேதாரகிரியைக் கண்டு.

185. கருங்கடல் - பிறவியாகிய கடல். பருப்பதம் எனும் பெயர் பரித்த கிரி - ஸ்ரீசைலம். குவடு - மலை. தென்கயிலை - சீகாளத்தி. சிகரி - மலை.

186. ஆலவனம் - திருவாலங்காடு. கச்சி - காஞ்சீபுரம். அழற் கிரி - திருவண்ணாமலை. நவநீதக்கோலநகர் - திருவெண்ணெய்நல்லூர். முதுகுன்று - விருத்தாசலம்.

சீலமுற ழுற்கிரி தெரிந்துநவ நீதக்
கோலநக ரோடுமுது குன்றது தெரிந்து. ௧௫௪

187. வல்லிய மிடற்பதன் மகிப்பணி துதிப்பப்
பல்லிய முழங்கவுமை பார்வைகளி கூர
அல்லனைய கண்டமுள வண்ணனட மாடும்
செல்லுறு பொழிற்குலவு தில்லைநகர் கண்டு. ௧௫௫

188. சீரினொடு மன்னிவளர் சென்னிவள நாட்டு
வாரிநிகர் காவிரி வடாதுதிசை தன்னில்
ஏலரிலகு மண்ணிநதி யின்கரை யடைந்தான்
காரிலகு கண்டனது கண்ணில்வரு மண்ணல். ௧௫௬

189. அந்தவமை யந்தனி லருக்கன்மறை வாணன்
கந்தனது போதமரர் கம்மியனை நோக்கி
இந்தவிடை யொன்றுநக ரின்றுபுரி கென்றான்
உந்துமவ னப்பொழுதி லோர்நகர் புரிந்தான். ௧௫௭

190. தாரணியி னப்பதி தனக்கமரர் சேய்ஞ
லூரென வரும்பெய ருரைத்தன ரதன்கண்
ஆருமெழில் வேலவ னமர்ந்தினி திருந்தான்
சீருலவு விண்ணிறை செயற்கையை யிசைப்பாம். ௧௫௮

191. முன்னமொரு வைகலின் முரட்குலிச வேலோன்
இன்னலொடு காழியி னிருந்தபொழு தங்கண்

---

187. வல்லியம மிடல் பதன் - புலியினது வலி பொருந்திய காலை உடையவன்; வியாக்கிரபாத முனிவர். மகிப்பணி - உலகத்தைத் தாங்கும் ஆதிசேடன்; இங்கே அவனது அவதாரமாகிய பதஞ்சலி முனிவர். பல் இயம் - பலவித வாத்தியங்கள். செல் - மேகம்.

188. சென்னிவள நாடு - சோழ நாடு. வாரி - கடல். மண்ணி நதி: சுப்பிரமணிய நதி என்பது இங்ஙனமாயிற் றென்பர்.

189. அமரர் கம்மியன் - விசுவ கர்மா. இந்த இடை - இவ்விடத்தில். உந்தும் - கடவுளால் தூண்டப்பெற்ற.

190. சேய்ஞலூர்: முருகக் கடவுளுக்குரிய நல்ல ஊர் என்னும் பொருளுடையது. விண் இறை - இந்திரன்.

191. ஒரு வைகலின்-ஒரு நாளில். முரண் குலிச வேலோன்-வலிமையை உடைய வச்சிராயுதன்; இந்திரன். தெய்வதம் - தெய்வம்.

மன்னுமொரு தெய்வத மருங்கணிகள் வைத்தான்
அன்னது கலன்களை யளித்ததவண் வந்தே. ௧௮௯

192. அண்டர்புகழ் தெய்வத மளித்தவணி தம்மிற்
கொண்டலி னிருண்டிடு குழற்சசி யிடும்பூண்
கண்டவனை யுன்னிமிகு காமமெனும் வெந்நோய்
கொண்டவன் வருந்தியது கூறலரி தம்மா. ௧௯௦

193. ஆயதொரு,வேலைதனி லாதவ னெழுந்தான்
தூயமுரு கக்கடவுள் சோதிவடி வங்கண்
நேயமொடு செய்துமிகு பூசனை நிரப்பி
நாயக னளிப்பவொரு நற்படை படைத்தான். ௧௯௧

194. வெற்றியணி கஞ்சுலவ வீறிரத மேறி
மற்றிணையி லாதவிடை மாமருது மேன்மை
உற்றமயி லாடுதுறை யொண்பறிய லூர்கண்
டற்றமில் வளங்கொள்கம லாலய மடைந்தான். ௧௯௨

195. அந்தமில் வளங்குலவு மப்பதி தணந்தே
வெந்துயர் தருங்கொடிய பாலைதனின் மேவத்
தந்திமுக வற்கிளவல் சாருதனு மன்ன
செந்தழல் வனங்குளிர்மை சேர்ந்தது சிறந்தே. ௧௯௩

196. பரிந்திடு வளங்கிளர் பரங்கிரியின் மீதே
இருந்திடு பராசர னிரும்புதல்வர் வந்தே

---

192. சசி - இந்திராணி. 193. சோதி வடிவு அங்கண் செய்து - அங்கே சிவலிங்கப் பெருமானைத் தாபித்து. நாயகன் - சிவபெருமான். ஒரு நற்படை என்றது பாசுபதாஸ்திரத்தை.

194. அணிகம் சுலவ - படை சூழ. இடை மா மருது - திருவிடைமருதூர். மயிலாடு துறை - மாயூரம். பறியலூர் - திருப்பறியலூர். கமலாலயம் - திருவாரூர்.

195. தணந்து - நீங்கி. குளிர்மை - குளிர்ச்சி.

196. பரங்கிரி - திருப்பரங்குன்றம். பராசரன் இரும் புதல்வர் - முன்பு சரவணப் பொய்கையில் மீனாக இருந்து, சிந்திய உமாதேவியாரின் முலைப்பாலை உண்டு தம் உருவம் பெற்றவர்கள். அருள்செய்து அவர்களோடும்.

திருந்தடி வணங்கவருள் செய்தவர்க ளோடும்
அருந்துதிகொள் செந்திலி னடற்குமர னுற்றான். க௯௪

197. அருந்திறல் பொருந்தமரர் கம்மியனை யங்கண்
தெரிந்தருளி யெஃகமுள சிற்பரனி யாமிங்
கிருந்திடவொ ராலய மியற்றிடுதி யென்ன
விரிந்தபுகழ் மந்திரம் வியப்புற விதித்தான். க௯௫

198. வாங்கழன் மிடற்புரவி வையம திகந்தே
தேங்கமழ் பொதும்பர்செறி செந்தினக ருட்போய்
ஓங்கமரர் சேனைதொழ வொண்சினக ரஞ்சேர்ந்
தாங்குறு மடங்கலணி யாதன மமர்ந்தான். க௯௬

199. மங்கலமொ டங்கணுறு மாமுருக வள்ளல்
புங்கவர் வணங்குறு புரந்தரனை நோக்கித்
துங்கமுறு நீதியறு சூரன்முதல் வெய்யோர்
இங்குற வுதித்ததுவும் யாவுமுரை யென்றான். க௯௭

200. என்றிடலு மின்னதை யிசைத்திடுதி யென்றே
வன்றிறல்கொள் பொன்னொடு மகத்திறை விளம்பச்
சென்றுமுரு கக்கடவுள் சேவடி வணங்கி
நின்றவுணர் வந்தது நிகழ்ந்தது முரைப்பான். க௯௮

---

197. எஃகம் - வேல். மந்திரம் - மாளிகை

198. வாம் கழல் - தாவுகின்ற கால்களையுடைய. வையம் - தேர். பொதும்பர் - சோலை. சினகரம் - கோயில். மடங்கல் அணி ஆதனம் - சிங்காதனம்.

199. புங்கவர் - தேவர்.

200. பொன் - வியாழ பகவான். மகத்து இறை - இந்திரன். வந்ததும் - உற்பத்தியான செய்தியையும்.

இரண்டாவது

அசுர காண்டம்

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

201. அற்றமறு காசிப னளித்தவறு பான்மேல்
ஆறுபடு கோடியவு ணர்க்கரச னானோன்
பெற்றசுர சைப்பெயர் மகட்குயர் மழைக்கோள்
பிடுபெறு மாயவகை பேசுபு தெருட்டி
மற்றதனி லன்னமயில் வல்லப முணர்ந்தே
மாயையென வோர்பெயர் வழங்கின னதற்பின்
நற்றிறல்கொ ணந்திமுன் மொழிந்தமொழி யுன்னி
நங்கைவரு கென்றிவை நவின்றிடுத லுற்றான். க

202. மங்குல்புரை மாயன்முதல் வானவர்க டம்மால்
வல்லவுண ரெண்ணிலர் மடிந்தனர்கண் மாதோ
இங்குன தருங்குல முயர்ந்திட நினைந்தே
இன்பமொடு காசிப னிருந்துழி பொருந்தி
அங்கவனொ டுங்கலவி செய்தவுண ரைத்தந்
தன்னவர் தவஞ்செய விடுத்துவரு கென்னச்
செங்கனக மானவொரு மேருவட பாலச
சீர்முனி தவஞ்செயு மிடந்தனி லடைந்தாள். உ

---

201. காசிபனால் பெறப்பட்ட அறுபத்தாறு கோடி அசுரர்களுக்கு அரசனுடைய மகளாகிய சுரசை யென்பவளுக்குச் சுக்கிரன் மாய வித்தைகளைக் கற்பிக்க, அவற்றில் அவள் வல்லளானதால் அறிந்து மாயை என்று ஒரு பெயரை இட்டு வழங்கினான். தேவர்கள் அசுரர்களால் துன்புற வேண்டுமென்று நந்திதேவர் இட்ட சாபத்தை நினைந்து அவளை அழைத்துப் பின் வருவனவற்றைச் சொல்லத் தொடங்கினான்.

மழைக்கோள் - சுக்கிரன். மாய வகை பேசுபு தெருட்டி - மாய வித்தை வகைகளைக் கற்பித்துத் தெளிவித்து. வல்லபம் - ஆற்றல்.

202. கலவிசெய்து - புணர்ந்து. அன்னவர் - அவ்வசுரர்களை. அசசீர்முனி - காசிபன்.

203. மன்னியிடு காசிப னிருக்கையி லடைந்தே
வாவியொடு தண்டலையு மண்டபமு மங்கண்
கன்னிகடி தேபல வளத்துட னியற்றக்
கண்டன னியாவரிது கண்டவர்க ளென்றே
உன்னின னிருந்துழி யவன்றனது நேரே
உற்றிடலு மற்றவ ளுருபமது கண்டு
முன்னைவினை யாலிடர்செய் காமநதி யூடே
மூழ்கின னியாரெனினு முன்னைவினை போமோ. ௩

204. ஆயவடன் முன்பணுகி யூர்பெயர் வினவி
அன்பினொடு கூடியெனை யாளநினை யென்ன
மாயவள் புகன்றிடுவ ளுத்தர தலத்தேன்
வண்மையுள கங்கைதனில் வல்லைபடர் கின்றேன்
நீயுன தருந்தவ மொழிந்திது மொழிந்தாய்
நீதிமுறை யல்லவிது நில்லென நிகழ்த்திப்
போயின டொடர்ந்தனன் மறைந்தனள் வருந்திப்
பொற்புமுனி தேடிபு புலம்புபு திரிந்தான். ௪

205. தேடிமயல் கொண்டுமுனி வாடுமது போதிற்
செம்பரிதி பச்சிம திசைக்கட லடைந்தான்
நீடுமிருள் வந்ததெழின் மாயைதனை யன்னோன்
நினைந்தற வரற்றுதலு நேர்பட வணைந்தாள்

---

203. தண்டலை - சோலை. கன்னி - மாயை. கடிதே - விரைவில். கண்டவர்கள் - உண்டாக்கியவர்கள். உன்னினன் இருந்துழி - யோசித்தவனாகி இருந்தபொழுது. காமநதியூடே - காமமென்னும் ஆற்றினிடையே

204. உத்தர தலத்தேன் - நான் வட நாட்டில் இருப்பவள். கங்கைதனில் - கங்கைக்கு.

205. பச்சிம திசை - மேற்குத் திக்கு. அற அரற்றுதலும்-ஆற்றல் முழுதும் தீரக் கதறவே. கூறுவள் - மாயை சொல்லலாயினள். ஆடல் - புணர்தல். புத்தேள் அங்கம் - தேவனைப் போன்ற உருவம். அயன் தனது மைந்தன் - காசிப முனிவன்.

கூடியெனை யாளென விரந்தடி யிறைஞ்சக்
கூறுவளி யான்வடிவு கொண்டபடி கொண்டால்
ஆடல்புரி வேனெனலு மங்கணொரு புத்தேள்
அங்கமது கொண்டன னயன்றனது மைந்தன். ௫

206. அங்கவ ளிசைந்துமுத லானவொரு சாமத்
தன்பினொடு கூடலு மருந்திறல்கொள் சூரன்
துங்கமொ டுதிப்பவவ ரங்கவியர் வின்கண்
துப்புடைய முப்பதெனு மாயிரவெள் ளத்தோர்
பொங்கவுணர் வந்தன ரிரண்டுபடு சாமப்
போதிலரி மேனிகொடு புல்லுதலும் வல்லே
சிங்கமுக னாயிர நெடுந்தலைக ளோடும்
சேணிலுறு மண்டர்க டிடுக்கிட வுதித்தான். ௬

207. அங்கவர்க ளங்கமிசை பொங்கிய வியர்ப்பின்
அற்றமறு நான்குபதி னாயிரவெள் ளத்தோர்
தங்கியவி றற்றகுவர் வந்தனர்கண் மும்மைச்
சாமமதின் மாயையொடு சைவமுனி வோனும்
வெங்கரி யுருக்கொடு புணர்ந்துகளி கூர
வேழமுக மோடுமுயர் தாரக னுதித்தான்
துங்கவெழின் மேனிமிசை வந்தகசி வின்கண்
தோன்றினர்க ணான்குபதி னாயிரவெள் ளத்தோர். ௭

208. மற்றதுபின் னான்குபடு சாமமது தன்னில்
வன்றக ருருக்கொடு மகிழ்ச்சியொடு கூட
முற்றுமெழில் பெற்றவச மாமுகி யுதித்தாள்
முப்பதெனு மாயிர முரண்டகுவர் வெள்ளம்

---

206. முதற் சாமத்தில் சூரன் உதித்தான். துப்பு - வலி. அரி மேனி - சிங்க உருவம். சேணில் - வானுலகத்தில்.

207. தகுவர் - அசுரர். சைவ முனிவோன் - காசிபன். கரி - யானை. கசிவின்கண் - வேர்வையில்.

208. தகர் உருக்கொடு - ஆட்டின் உருவத்தைக்கொண்டு. அச மாமுகி - ஆட்டுத் தலையையுடைய அசமுகி. முரண் - வலி. பொன் துதி - பொலிவும் புகழும்.

உற்றது வியர்ப்பினிலி யாளிமுத லாகும்
உந்திய விலங்கின துருக்கள்கொடு கூடப்
பொற்றுதிகொ ளாறுபதி னாயிரவெள் ளத்தோர்
பொருக்கென வுதித்தன ரருக்கனு முதித்தான். அ

209. அப்பொழுது தொல்லுருவ மாயவள் பொருந்த
அந்தண்மலர் மீதுறு மயன்றனது மைந்தன்
மெய்ப்படுத னாதுருவ மேவினனவ் வேலை
வேலைநிகர் தானையொடு மேவுமொரு சூரன்
துப்பரி முகத்தனொடு தாரகனொ டேகித்
தூயமுனி மாயவ டுணைப்பத மிறைஞ்சி
எப்பரிசி யாமினி யியற்றுவ தெனச்சீர்
எய்தியிடு காசிப னிசைத்திடுத லுற்றான். கூ

210. மாதவ மெழிற்றொழி லனைத்தினு மினித்தால்
மற்றது குயிற்றிடின் மனத்திடை நினைத்த
தேதையு மளித்திடு மிடர்ப்பவ மறுக்கும்
இன்பமுறு நற்கதியு மீயுமிதன் மிக்க
தோதிடி னியாதுமிலை யாதலி னனைத்தே
உள்ளமிசை யன்பொடு முவந்திடுதி றென்றே
மேதகு மருந்தவ முயன்றுபுகழ் மேனாள்
மேவிய பெருங்கதை விளம்பிடுத லுற்றான். க0

---

209. தொல் உருவமாய் - பழைய உருவத்தை உடையவளாகி. **வேலை** - சமயம், கடல். துப்பு அரி முகத்தன் - வலியையுடைய சிங்கமுகாசுரன். முனியின் பதத்தையும் மாயவள் பதத்தையும் எப் பரிசு - எவ்வாறு.

210. இனித்து : இனிது என்பதன் விகாரம். குயிற்றிடின் - செய்தால். மனத்திடை நினைத்தது ஏதையும் அளிக்கும் : “வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம், ஈண்டு முயலப் படும்” (**திருக்குறள்.**) பவம் - பிறப்பை. நற்கதி - முத்தி. அனைத்தே - அத்தகையதாகிய தவத்தையே. புகழ் மேவிய பெருங் கதை என்க; மேவியவர் கதை என்பது கருத்து.

211. கொற்றமு றெழிற்கடக மேவுமறை யோனற்
குச்சக னளித்தருள் கவுச்சிக னெனும்பேர்
உற்றிடு புகழ்ச்சுத னருந்தவ மியற்றற்
குன்னியொரு துன்னுமல ரோடையய லெய்திப்
பற்றலர் புரம்பொடி படுத்தவனை யுள்கிப்
பற்றுமிகு முண்டிகள் பகர்ந்திட லிகந்து
குற்றியி னிருந்தன னருந்தவ மியற்றக்
கோகனத மின்றழுவு கொண்டலவண் வந்தான். கக

212. மன்னிப தவம்பயிறல் கண்டுவகை கொண்டு
மாதவ னிறுதுபெயர் மாமிருக கண்டூ
யன்னென மொழிந்திட வெழுந்துதொழ மாயோன்
ஆதியரு ணின்புடையி ளுகவென வோதித்
துன்னுமிமை யோரொடு மறைந்தன னதற்பின்
தூயமுனி தந்தையிடை வந்துதொழ தன்னுன்
பொன்னடி வணங்கலு மெடுத்துநனி புல்லிப்
பொற்புறு தவத்திடை புகுந்ததுரை யென்றான். கஉ

213. அம்மொழி வழங்கலு நிகழ்ந்தசொல வின்புற்
றன்பொடினி யில்லற மமர்ந்திடுதி யென்ன
வெம்மைநிரை யந்தரு மடந்தையர் துவக்கில்
வீழ்கில னெனப்பல விளம்புதலு மன்னுன்

---

211. கடகம் - ஓர் ஊர். குச்சகன் குமாரன் கௌச்சிகன். **பற்றலர்** - பகைவர். படுத்தவன் - சிவபெருமான். உண்டிகள் பகர்ந்திடல் **இகந்து** - உணவுகளையும் பேசுதலையும் நீங்கி; "ஓவிய மவுன முற்றுங் **குண**வொடு முறக்கம் நீங்கி" (**கந்த**. மார்க்கண்டேயப். 4) குற்றியின் - சம்**பத்**தைப் போல. கோகனத மின் - திருமகள். கொண்டல் - திருமால்.

212. மிருககண்டூயன்: ஆதீண்டு குற்றிபோன்று இருந்து **த**வஞ் செய்த முனிவன்மேல் விலங்குகள் தம் தினவு போக உராய்ந்து **செ**ன்றமையால் இப்பெயர் வந்தது; மிருக கண்டூயம் - விலங்குகளின் **தி**னவு; "மேவிய விலங்கு தத்த மெய்யகண் டூயம் யாவும், போவது கருதி யன்னுன் புரத்திடை யுரைத்துப் போமால்" (**கந்த**. மார்க்கண்டேயப். 4.) தந்தை - குச்சக முனிவர்.

213. நிரையம் - நரகம். துவக்கு - கட்டு. அன்னுன் - குச்சக முனிவர். மறுத்து அறையல் - மறுத்துக் கூறுதே.

செம்மையுறு வீடுபெறு நன்னெறியி தாகும்
தீதல வெனப்பல திறத்தினி லுரைத்தே
இம்மொழி மறுத்தறைப லாணைநம தென்றான்
என்றிட விசைந்தன னிறைஞ்சினி னிசைப்பான்.

214. மனந்தனின் முனிந்திடன் மொழிந்தநெறி நிற்பன்
மற்றென துரைப்படி மறுதவியல் புள்ள
கனந்தரு பெருந்தன மடந்தையுள ளேலக்
கன்னியை மணம்புரிதல் கண்டிடுவ னென்ன
வனந்தனி லிருந்தவ முழந்தவன் மகிழ்ந்தே
அன்னகுண மேயுடைய வன்னநடை மாதை
நனந்தலை பொருந்திய பெரும்புவியி னேடி
நல்குவ னுனக்கென லு நற்சுத னவிற்றும். ௧௪

215. ஐயனை யிழந்தவர்க ளன்னையை யிழந்தோர்
ஆதிநவை யாயின வகன்றமட மானார்
வையமிசை யுண்டெனின் வரைந்திடுவ லென்ன
வல்லையது செய்வனென வண்சமல மேவும்
தையன்மிக மன்னிவளர் சென்னிவள நாடு
தன்னிடை யநாமய மெனத்திகழ் வனத்தில்
மெய்யிலகு சத்திப னிடத்தினொரு கன்னி
மேயது வினாவியவண் மேவினன் விருப்பால். ௧௫

216. அன்பினொடு குச்சக விருந்தவனை நேர்கண்
டசத்திய மகன்றிடு முசத்தியன் வணங்கா
என்புடை யடைந்தபடி யென்னபுக லென்ன
என்னொரு மகற்குன தெழிற்புதல்வி தன்னை

---

214. முனிந்திடல் - கோபித்தலை யொழிக. நெறி - இல்லறம். என் சொல்லை மறுக்காமல் ஒழுகும் கன்னிகை யிருந்தால் மணம்செய்து கொள்வேனென்று மிருககண்டூய முனிவர் கூறினர்.

215. ஐயனை - தந்தையை. நவை - குற்றம். வரைந்திடுவல் - மணம் செய்துகொள்வேன். அது செய்வன் - அத்தகைய பெண் ஒருத்தியைத் தேடிக் கொணருவதைச் செய்வேன். சென்னி வள நாடு - சோழ நாடு. இலகு உசத்தியன். அவண் - அநாமயம் என்னும் வனத்திற்கு.

216. பேசும் வகை - மணம் பேசுவதை ...ன்று என - நல்லது என்று கூறி. நன்பு - நன்மை.

இன்பினொடு பேசும்வகை யுன்னியிவண் வந்தேன்
என்றிடலு நன்றென விசைந்துமுனி யோடும்
நன்புபெறு மவ்விடை யிருந்தன னிருந்த
நாளினிகழ் வுற்றது நவிற்றிடுது மாதோ. கசு

217. வன்றவவு சத்தியன் மகிழ்ந்தமனை மாதாம்
மங்கலை விடுப்பவெழின் மாமகள் விருத்தை
சென்றுமட வாரொடு நறும்புனல் படிந்தே
திரும்புமமை யத்தினனி சீறுமத வேழம்
ஒன்றெதி ரடைந்திடலு மேவரும் வெருக்கொண்
டொய்யென விரிந்தன ருரக்கரி விருத்தை
பின்றொடர வோடியொரு நீடுபுதன் மூடும்
பீடுபெறு கூவலிடை பெய்வளை விழுந்தாள். கஎ

218. விழுந்தனள் பொருந்துயிர் பிரிந்தனள் கிடந்தாள்
வேறுள மடந்தையர் விருத்தைதனை நேடி
அழுந்துதுய ரத்தினொடு கண்டிலர்க ளாகி
அன்னவட னன்னையொ டறைந்திட வரற்றிச்
செழுங்கணவ னோடிது புகன்றிடலு மன்னோன்
செல்லல்கொடு சென்றுநனி தேடின னெடுத்தங்
கொழிந்திடுத லற்றதுய ருற்றிடலு மிவ்வா
றோதமிகு குச்சக னுணர்ந்தவ னடைந்தான். கஅ

219. வந்துசில புந்திசொலி நாளையுயி ரீவன்
மண்டுதயி லத்துடலை வைத்திடுக வென்றே
உந்தொரு தடத்தணுகி யந்தகனை யுள்ளத்
துன்னின னருந்தவ முழந்திடலு மன்னோன்

---

217. மனைமாதாம் மங்கலை - பத்தினியாகிய மங்கலை. வெருக்கொண்டு - அச்சம் அடைந்து. ஒய்யென இரிந்தனர் - விரைவில் ஓடிப் போயினர். உரக்கரி - பலத்தையுடைய யானை. ஓடி - விருத்தை ஓடி. கூவலிடை - கிணற்றில்.

218. நேடி - தேடி. அரற்றி - அன்னை கதறி. செல்லல் - துன்பம். ஒழியாத துயரத்தை அடையவே.

219. புந்தி - அறவுரைகள். மண்டு தயிலத்து நிரம்பிய எண்ணெயில். தடத்து - குளத்தை. அந்தகனை - யமனை. உழந்திட

முந்தவ னடைந்தகரி யெய்திமுனி தன்னை
மொய்ம்பினொடு பற்றுபு முரண்கொள்பிடர் மீதே
சுந்தர முறக்கடிது கொண்டுவரை யென்னத்
துண்ணென நடந்ததுவ சுந்தரை துளங்க. கக௯.

220. தடந்திகழ் விலங்கல்கள் பிலந்தனி லழுந்தத்
தாள்கொடு மிதித்துயர் தருத்திரள் பறித்தே
மடங்கலு நெடுந்தல மடங்கலு நடுங்க
வல்லைவரு மும்மத வரைக்களிறிவ் வாறே
நடந்தது விருந்தவ நெடுந்தகை தெரிந்தே
நம்மையி தெடுத்ததெவ னுடுது மெனக்கொண்
டிடந்தருத னுதறிவி னேடின னுணர்ந்தான்
எவ்வகை யுணர்ந்ததெனி னிவ்வகை யுணர்ந்தான்.உ௦

221. நத்துறு தடம்பல கஞன்றிடு கலிங்க
நாடுதனி னீடுபுகழ் நன்னகர மொன்றுண்
டத்திரு நகர்ப்பெய ரிலங்கரி புரஞ்சீர்
அப்பதியின் மேவிய வருந்துதிகொள் தேவ
தத்தனெனு நாய்கனுத வுந்தரும தத்தன்
தன்னையரு ளன்னையொடு தந்தையு மிறப்ப
மெத்துவிழு மத்தினொ டிளைத்துறு தினத்து
மேவின னவன்புடையொர் வீறிரத வாதி. உக

லும் - செய்தபோது. முந்து அவண் அடைந்த கரி. முரண் - வலி. வசுந்தரை துளங்க - பூமி நடுங்க.

220. விசாலமான மலைகள் பாதலத்தில் அழுந்தும்படியாக. தருத்திரள் - மரக் கூட்டம். மடங்கலும் - சிங்கங்களும். நெடுந்தலம் அடங்கலும் - நீண்ட உலகம் முழுவதும். இருந்தவ நெடுந்தகை - மிக்க தவத்தையுடைய குச்சகன். தனது அறிவின் நேடி - தன் ஞான நோக்கத்தால் ஆராய்ந்து.

221. நத்து - சங்கு. கஞன்றிடு - நெருங்கிய. நாய்கன் - வணிகன். விழுமம் - துன்பம். இரதவாதி - ரஸவாதம் செய்பவன்.

222. அருந்தவ னெனும்படி யடைந்தவனை நேர்கண்
டன்பொடு வணங்கின னணைந்ததெவ னென்னத்
திருந்துமொரு விஞ்சையுள தென்றுபல மேன்மை
செப்பியொரு பொன்னைவளர் கோடிநிதி செய்வாம்
இருந்திடுநி னதுபொரு டந்திடினு னில்லை
இல்லைநிதி வைக்குமிட மென்னும்வகை யின்னே
புரிந்திடுது மென்றிடலு மானடமனை வீடு
பூணிவை பகர்ந்தெழில் பொருந்தறமும் விற்றான்.

223. அன்னபொருள் கொண்டுகர வன்றனை யடைந்தே
அங்கவன்முன் வைத்திட வருங்குகையு ளிட்டு
மன்னுதழ றூமமவ னேர்நனி துரப்ப
மற்றவன் மயங்கநிதி வண்குகை கரந்தே
பின்னோர்குகை யப்படி யிருந்ததது தன்னைப்
பீடுபெற வைத்துயர் பெரும்புகை தணித்தே
இன்னதை யிருங்கனலில் வைத்திடுக வென்றான்
என்றிடலு நாய்கனு மெடுத்தழலில் வைத்தான். ௨௩

224. முப்பகல் மனத்தெமை நினைத்துறைதி நீலி
முன்னொரு மகம்புரிபு முத்தின மகன்றால்
இப்புடை யடைந்திடுது மென்றவனை வைத்தே
ஏகுதலு நாய்கனுமவ் வெல்லையு மிருந்தே

---

222. அருந்தவன் எனும்படி - அரிய தவம் செய்யும் முனிவன் என்று சொல்லும்படியாக. அணைந்தது எவன் என்ன - இங்கே எழுந்தருளியது என்ன காரணமென்று தருமதத்தன் வினவ. விஞ்சை - வித்தை. ஒரு பொன்னைக் கோடி பொன்னாகச் செய்வோம். உன் இல்லை நிதி வைக்கும் இடம் இல்லை என்னும் வகை புரிந்திடுதும். பகர்ந்து - விற்று. அறமும் விற்றான் - தருமத்தின் பொருட்டு வைத்திருந்த பொருள்களையும் விற்றான்.

223. கரவன் - கள்ளவேடம் உடையவன். குகை - உருக்குகின்ற லோகங்களை இட்டு நெருப்பில் வைக்கும் ஒரு கருவி. மன்னு தழல் தூமம் அவன் நேர் நனி துரப்ப - இருந்த நெருப்பினது புகையை அவனுக்கு நேரே நன்றாகச் செலுத்த. அந்தப் புகையினால் அவன் தடுமாறி நின்றபொழுது முன் வைத்த குகையை எடுத்துக்கொண்டு வேறொரு குகையை வைத்துவிட்டான். நாய்கன் - வணிகன்.

அப்படி றனைப்புவியி னேடிநனி காணா
தல்லல்கொடு வந்தன னருங்குகை யெடுப்பக்
கைப்படு மிருங்குகை யிரும்புருவ மாகக்
கண்டனன் மிகுந்துயர் கலந்தன னிறந்தான். ௨௪

225. நற்றருமம் விற்றதொரு குற்றமது தன்னால்
நாகவுரு நண்ணின னெனக்கடி துணர்ந்தே
மற்றிவுரு வந்தனை யகற்றுவ னெனாவோர்
வைகல்புரி தன்றவம் வழங்குதலும் வல்லை
வெற்றிகொள் களிற்றுருவ மற்றமரர் மேனி
மேவுபு புகழ்ந்தெழிலின் விண்ணுலக முற்றான்
அற்றமறு பூசுரனு மோடையிடை முன்போல்
அருந்தவ முயன்றிடலு மந்தக னடைந்து. ௨௫

226. விருத்தையுயிர் நல்குதலு மன்னவ ளெழுந்தாள்
மெய்த்தவன் மகற்கவளை வீறுவது வைசெய்
தருத்திகொள் வடாதுபுல மேகலு மவன்சேய்
அன்பினொடு மில்லற மமர்ந்துறையு நாளிற்
பெருத்திடு வனப்புமிரு கண்டெனவொர் பாலற்
பெற்றுவட திக்கிடை பெயர்ந்திடலு மன்னோ
திருத்தகு மவன்குமரன் முற்கல னளித்த
சேயிழை மருத்துவதி யைவதுவை செய்தான். ௨௬

---

224. மூன்றுநாள் எம்மை நினைந்து இருப்பாயாக; காளியின் முன்னே ஒரு யாசத்தைச்செய்து அந்த மூன்று நாள் கழிந்தவுடன் இங்கே வருவேம். நீலி - காளி. இப்புடை - இவ்விடத்தை. அவ்வெல்லையும் - அவன் கூறிய மூன்றுநாட்களும். படிறனை - வஞ்சகனை. நனி நேடி - நன்றாகத் தேடி. கையிலே உள்ள குகை வெறும் இரும்பு நிறைந்ததாக இருப்பதைக் கண்டு தருமதத்தன் உயிர் நீத்தான்.

225. நாக உரு - யானையின் வடிவம். உணர்ந்தே: உணர்ந்தவன் குச்சக முனிவன். ஒருநாள் தான் புரிந்த தவப்பயனை அந்த யானைக்குத் தத்தம் செய்தான். அற்று - நீங்கி. எழிலின் - அழகோடு. ஓடையிடை - தடாகத்தில். அந்தகன் - யமன்.

226. விருத்தை - உசத்தியன் மகள். மகற்கு - மிருககண்டூயருக்கு. வதுவை செய்து - மணம் செய்வித்து. அருத்தி - அன்பு.

227. மண்டெழில்கொள் காசிநக ருற்றரனை யுன்னி
மாதவ முயன்றமலன் மன்னருளி னன்மார்க்
கண்டனை யளித்திடலு மன்னவன் வளர்ந்தே
கண்ணுத லருட்கொடியர் காலனையும் வென்று
திண்டிறல் படைத்தன னெனச்சொல மறுத்துச்
செல்வமதி கம்மது பெறச்சிவனை நாடி
வண்டவ மியற்றிடுதி ரென்றுகடி தேவி
வல்லைதனின் முல்லைநகை மாயவ ளெழுந்தே. உஎ

228. ஏருறு மருந்தவ விருத்தியகல் கின்றேன்
என்றவ ணடந்திடலு மேகன்முறை யோவென்
றாரிடர் பொருந்தியவள் பின்படர வன்னாள்
அன்பினொடு மைந்தரை யளிப்பது பொருட்டால்
வாரிதி நிலத்திலுனை நண்ணினனி யானோர்
மாயையென வோதினண் மறைந்திடலு முள்ளம்
சோர்வுற வருந்தவிதி வந்துசில புந்தி
சொல்லிய கலத்துயர் துறந்தினி திருந்தான். உஅ

229. முன்னென வடங்குத ளுடங்கினன் மடங்கல்
முகத்தனு மடற்கரி முகத்தனு முகத்தீற்
றின்னலுற வேழ்கடலு மொன்றுபடு மாபோல்
எங்குநிறை தானையு மிலங்குபுடை மேவ

அவன் சேய் - குச்சக முனிவன் பிள்ளையாகிய மிருககண்டையன். மிருகண்டு முனிவன் முற்கல முனிவர் மகளாகிய மருத்துவதியை மணந்து கொண்டான்.

227. உற்று - மிருகண்டு முனிவன் அடைந்து. எனச் சொல - என்று காசிபன், சூரன் முதலியோருக்குச் சொல்ல. மறுத்து - தவம் செய்வதற்கு உடம்படாமல் மறுத்து. மாயவள் - மாயை.

228. அருந்தவ இருத்தி - அரிய தவத்தையுடைய முனிவனே, நீ இருப்பாயாக. ஆர் இடர் - மிக்க துன்பத்தை. விதி - பிரமதேவன். பிரமதேவன் சில அறிவுரைகளைக் காசிபனுக்குச் சொல்லிப் போக, அவன் துயரம் நீங்கினன்.

229. முன் என - முன்போல. மடங்கல் முகத்தன் - சிங்கமுகாசுரன். கரிமுகத்தன் - தாரகாசுரன். உகத்து ஈற்று - யுக முடிவில்.

ஒன்னலர் நடுங்கவரு சூரனொரு பாலின்
ஒல்லையி னடைந்திட லு முந்துபுகர் வந்தே
அந்நிலை மகத்தொழி லினைத்தென வனைத்தும்
அங்கவ னறிந்திட வறைந்தனன் மறைந்தான். உகூ

230. பண்டென வடாதுபுல மேவியசு ரேசன்
பாங்குபுனை மாயைபொரு ளாங்குற வியற்ற
அண்டர்புகழ் வேள்விபதி னாயிரம தாகும்
ஆண்டுசெய வாண்டுநமை யாண்டவ னடைந்தே
மண்டருள்செ யாதவது கண்டவுணர் மன்னன்
வானிடை யெழுந்துதசை யானவை யரிந்து
குண்டமதி லாயிர முருண்டுநனி சிந்தக்
குன்றவிலி வந்திலன் மகத்தெரியில் வீழ்ந்தான். ௩௦

231. தீயிடை மடிந்தது தெரிந்தரி முகத்தோன்
சென்னிக ளரிந்துமக வன்னிமிசை சிந்தி
மாய்வுற நினைப்பமறை யோனுருவ மாகி
வந்துபர னெந்திடுவ தென்னென லு மன்னன்
ஆயிடை நிகழ்ந்தசொல வீரமுறு சூரன்
அங்குற வெழுப்பிமறை யோனுரு வகன்று
காயமிசை பெற்றமிசை மாதொடு விளங்கக்
கண்டடி பணிந்தவுணர் காவலன் மகிழ்ந்தான். ௩௧

இன்னலுற - உலகத்தில் உள்ள உயிர்களெல்லாம் துன்பம் அடையும் படி. புடை - பக்கங்களில். ஒரு பாலின் - ஒரு பக்கத்தில். ஒல்லையின் - விரைவில். புகர் - சுக்கிரன். மகத்தொழில் இனைத்து - யாக காரியம் இத்தகையது.

230. அசுரேசன் - சூரன். பொருள் ஆங்கு உற - யாகத்திற்கு வேண்டிய பொருள்களெல்லாம் அங்கே அமையும்படியாக. நமை ஆண்டவன் - சிவபெருமான். குண்டமதில் - யாககுண்டத்தில். குன்றவிலி - சிவபெருமான் ; குன்றமாகிய வில்லையுடையவன் ; குன்றமாகிய இல்லை யுடையவனெனலும் ஆம்.

231. அரிமுகத்தோன் - சிங்கமுகன். மகவன்னி - யாகாக் கினி. பரன் மறையோன் உருவமாகி வந்து; மறையோன் - பிராமணன். நிகழ்ந்த - நடந்தவற்றை. சூரனை எழுப்பி. பெற்றமிசை - இடப வாகனத்தின்மீது. மாது - உமாதேவியார். அவுணர் காவலன் - சூரன்.

232. இன்னருள ரன்புகல்வ னிங்கெமை நினைந்தே
எண்ணில்பக னற்றவ மியற்றினை மனத்தில்
உன்னியது கேளென வுரைத்திட வுரைப்பான்
உந்துபுவி கொண்டபல வண்டமர சாள
மன்னியழி யாமலுற யாவரையும் வென்றே
வாழ்வுற வெனப்பல வரங்கள திரப்பக்
கன்னியொரு பாலுடைய கண்ணுதல் வினவிக்
கண்டுதொழு சூரனொடு கட்டுரைசெய் கிற்பான். ௩௨

233. மண்ணதனி லாயிரம தாகிவளர் கோடி
மண்டுபுக ழண்டமுள மற்றவை தமக்குள்
எண்ணிலகு மாயிரவொ ரெட்டளவை நூறோ
டெட்டுக மிருந்தரசி யற்றிடுதி யென்றே
தண்ணளியி னோடருளி நெஞ்சினும் விரைந்தே
சாருமொரு தேருமொரு சக்கரமு நல்கிப்
பண்ணவர்க ளஞ்சுமொரு சிங்கமு மளித்துப்
பன்மையுறு வன்மைகொள் படைக்கலமு நல்கி. ௩௩

234. வேறுபதி னாயிர முடன்றழுவு கோடி
வெள்ளமுறு தந்திமிகு வெந்திறல்கொ டேர்கள்
பேறுறு பரித்திரள் கடற்றருவர் சேனை
பின்னுக னளிப்பவது பின்னரரன் முன்னர்ச்
சீறரி முகத்தனொடு தாரகன் வணங்கத்
தீரமுறு சூரனென வீரம தளித்து
வீறுநம தானதொரு சத்தியல தும்மை
வெல்லுமவர் யாரென விளம்பியக லுற்றான். ௩௪

---

232. அரன் புகல்வன் - சிவபிரான் திருவாய் மொழிந்தருளலானார். பகல் - காலம்.

233. ஆயிர கோடி அண்டங்கள் உள்ளன. ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகம் அரசாள்வாயாக. ஒரு தேரையும் ஒரு சக்கராயுதத்தையும் அருளி. பண்ணவர்கள் - தேவர்கள்.

234. பதினாயிரங் கோடி வெள்ளம் யானைகள். பேறு உறு பரித்திரள் - பெறுதற்கரிய பேறாக அடைகின்ற குதிரைக் கூட்டங்கள். கடல் தருவர் சேனை - கடல் போன்ற அசுரப்படை வீரர்களையும்.

235. கண்ணுத லகன்றிட வகன்றபடை யோடு
காசிப னிடத்தவுணர் காவல னடைந்தே
உண்ணய மொடும்பணிய வங்கவ னுரைப்பான்
உங்கள்குரு வெள்ளியிடை யுற்றிடுதி ரென்ன
வண்ணமு றவன்பத மடைந்துபுகர் நேரே
வந்திடவு வந்தடியில் வந்தனை புரிந்தான்
நண்ணியிடு தேசிகனு மாசிபல பேசி
நஞ்சனைய சூரனொடு நன்மனைபு குந்தான். ௩௫

236. மற்றொரு பெருந்தவி சளித்ததி விருத்தி
வந்ததெவ னென்றிடலு மன்னவுணர் மன்னன்
வெற்றிபுரி வேள்விய தியற்றியது முக்கண்
வித்தக னடைந்துபுகழ் மெத்திய வரங்கள்
நற்றிற லளித்தது மொளித்தது மதற்பின்
நன்குபெறு தந்தையிடை நண்ணியது மன்னான்
சொற்றது முரைத்தினி யியற்றுநெறி யெந்தாய்
சொல்கவென மல்குபுகர் சூரனொடு கூறும். ௩௬

237. ஆவியென வொன்றிலை யருந்தளையு மித்தை
அண்ண லுரு வங்கடொறு மங்கடவி னத்துள்
மேவிய வியோமமென மேவியழி வின்முன்
விண்ணென விருப்பன்வினை புண்ணிய முயன்றால்

சிங்கமுகனும் தாரகனும் வணங்க அவருக்கும் சூரனைப் போல வீரத்தை வழங்கினர்.

235. அகன்ற - பரந்த. அவுணர் காவலன் - சூரன். நயம் - அன்பு. வெள்ளி - சுக்கிராசாரியார். அவன் பதம் அடைந்து - சுக்கிரன் வாழும் இடத்தை அணுகி. புகர் - சுக்கிரன். தேசிகன் - குரு.

236. தவிசு - ஆதனம். வரங்களும் திறலும் அளித்ததும். ஒளித்ததும் - சிவபிரான் மறைந்தருளியதும். தந்தை - காசிபன். புகர் - சுக்கிரன்.

237. ஆவி என ஒன்று இலை - உயிர் என்று சொல்ல ஒரு பொருளும் உண்மையாக இல்லை. தளையும் மித்தை - பாசமும் பொய். குடத்துக்குள் ஆகாசத்தைப் போல எல்லா உருவங்களிலும் சிவபிரான் புகுந்து நிற்பன்; அக்குடம் உடைந்தால் அதில் இருந்த ஆகாசம் முன்னை

ஈவதவை யென்னபலன் மித்தையத ஞனீ
இன்னவற மின்னமற மென்னவுள முன்னேல்
தேவரை வருத்துதி மகத்திறை நுமக்குத்
தெவ்வனவ னைச்சிறைசெய் செய்தியிது செய்தி. ௩௭

238. கூடரிய வாயிரவொ ரெட்டளவை யண்டம்
கூடியவை கண்டுவிறல் கொண்டனை திரும்பி
ஈடுசெறி தேவரொடு தாபதர்க ளிங்குன்
ஏவல தியற்றிட வியற்றுபு விருத்தி
நீடிய கொலைத்தொழின் முதற்பவ மனைத்தும்
நிந்தனை யெனக்கருத னீபுரிதி யென்றே
நாடுபுகழ் சூரனுட னிவ்வகை மழைக்கோள்
நல்லன விலக்கியவை யல்லன வுரைத்தான். ௩௮

239. அற்றமறு மாயிரவொ ரெட்டளவை யண்டத்
தங்கவ னறிந்திடவொ ரண்டவியல் போதிக்
கொற்றமுற வேகுதியெ னப்படைகண் மும்மைக்
கோடியுறி யோசனை பரப்பிவர வேகி

ஆகாசத்தோடு கலப்பதுபோல, அவ்வுடம்புகள் அழிந்தால் ஒன்றாகிவிடும். கட இனம் - குடத்தொகுதி. வியோமம் - ஆகாசம். முன் விண் என - பழைய ஆகாசத்தைப்போல. வினை புண்ணியம் முயன்றால் - பாவத்தையும் புண்ணியத்தையும் செய்தால். அவை ஈவது என்ன பலன்; மித்தைதான். இன்ன அறம் இன்ன மறம் என்ன உளம் உன்னேல் - இவை தருமம், இவை அதருமம் என்று நெஞ்சில் நினையாதே. மகத்திறை நுமக்குத் தெவ்வன் - இந்திரன் உங்களுக்குப் பகைவன். சிறைசெய் - சிறைப்படுத்துவாயாக. செய்தி இது - இதுதான் நான் உங்களுக்குச் சொல்லவேண்டிய காரியம். செய்தி - இவற்றைச் செய்.

238. ஆயிரத்தெட்டு அண்டங்களைக் கண்டு அவற்றை வென்று வீரத்தைக் கொண்டு மீண்டு, தேவரும் முனிவரும் உன் கட்டளைப்படி ஏவல் புரியும்படி செய்து வீற்றிருப்பாயாக. தாபதர் - தவசிகள். பவம் - பாவச் செயல். நிந்தனை என - இகழ்ச்சிக்குரிய காரியங்கள் என்று. கருதல் - நினைக்காதே மழைக்கோள் - சுக்கிரன்.

239. அண்ட இயல்பு ஓதி - அண்டகோசத்தின் இலக்கணத்தை உரைத்து. என - என்று சுக்கிராசாரியார் கூற. உருத்திரன் அலாத திசையோரை - ஈசானன் அல்லாத ஏனைய ஏழு திக்குப் பாலகரையும்.

வெற்றிகொ ளுருத்திர னலாததிசை யோரை
வென்றிகொடு பாதலமி ழிந்தவரை வென்றே
நற்றுதி பெறும்படியின் முந்தென வணைந்து
நத்துறு கரத்தனுறு நற்கட லடைந்தான். ௩௯

240. தற்றவுண ரக்கடல் கலக்குதலு மாயன்
சாபநவிர் தண்டுவளை சக்கர மெடுத்து
வெற்றியுவ ணத்தின்மிசை யேறிநனி சீறி
வீறுகொலை செய்யவுண வெய்யரெதிர் சென்றே
கொற்றமுகி லென்னமிகு வாளிகள் சொரிந்தே
கோளவுணர் சேனைபல கொல்லவது கண்டே
செற்றமொடு தாரக னரிக்கெதிர் புகுந்தே
தீயகணை மாரிபல சிந்தியமர் செய்தான். ௪௦

241. கண்ணனது போதுகணை மாரிகள் சொரிந்தே
கையனுறு கின்றசக டத்தினை யழிப்ப
எண்ணுமொரு தேரணுகி மாயனுடன் மீதும்
ஏறுவண மீதினுமி ராயிர நெடுங்கோல்
துண்ணென விடுப்பவர வின்பகை வருந்தத்
துங்கநெடு மாலளவி லங்கமது கொண்டே
நண்ணியெதிர் போர்புரிய வன்னபடி கொள்ளா
நாலுதின மாலினொடு நற்சமர் புரிந்தான். ௪௧

பாதலம் இழிந்து அவரை வென்று; அவரை - பாதாளத்தில் உள்ளவர்களை. முந்தென - முன்போல. படியின் அணைந்து - பூவுலகத்திற்கு வந்து. நத்துறு கரத்தன் - திருமால். கடல் - பாற்கடலை.

240. அவுணர் தற்று - அசுரர் சூழ்ந்து. சாபம் - வில். நவிர் - வாள். தண்டு - கதை. வளை - சங்கு. உவணத்தின் மிசை - கருடன்மேல். கோள் - கொலை.

241. கண்ணன் - திருமால். கையன் - தாரகன். சகடம் - தேர். கோல் - அம்பு. அரவின் பகை - கருடன். அளவில் அங்கமது கொண்டு - கணக்கில்லாத உருவங்களை எடுத்துக்கொண்டு. அன்னபடி கொள்ளா - தாரகனும் அவ்வாறே தானும் பல சரீரங்களை எடுத்துக் கொண்டு.

242. அப்பொழுது மாயனொரு கோடிகணை விட்டே
அண்டர்பகை வன்றன தருஞ்சகடும் வில்லும்
துப்பொடு துணிப்பவொரு தண்டமது கொண்டு
தூயபுகழ் மாயனெதிர் சூரிளவ லேக
மெய்ப்புறு பெருங்கணை திரிந்தரி சொரிந்தான்
வீறுகதை கொண்டவை விலக்கியெதிர் செல்லத்
தப்பிறு கிரிப்படை விடுத்திட விரைந்தே
தானவன் மிடற்றினிடை தங்கியது மாதோ. ௪௨

243. அங்கவன் மிடற்றினிடை யாபரண மாகி
ஆழிபுற வாழியென வாசிக ளறைந்தே
பொங்குதிறன் மாயவ னகந்தனில் வியந்தே
போகவொரு தேரின்மிசை போரவுண னேறித்
துங்கமுறு முன்னெதிரு றக்கடிது புல்லிச்
சூருள மகிழ்ந்துபுடை துன்றுபடை யோடும்
செங்கதி ரருக்கன்முத லானவர் பழிச்சத்
தீதறு துறக்க நகர் சென்றணுகி னானால். ௪௩

244. அங்கணிது கண்டுசில வொற்றர்க ளுரைப்ப
அஞ்சியிடர் கொண்டுகுயி லாகிமக வானும்
மங்கையு மகன்றனர் கொடுந்தகுவர் தேடி
மம்மருற விண்ணவரை வன்மையொடு பற்றி
வெங்கத மொடுங்கடி தடித்தனர் பிணித்து
வீரமுறு சூரனெதிர் விட்டிடலும் விண்ணோர்
பொங்குபுக ழாசிமுக மன்சொல விடுத்துப்
போகமக லோகமிசை போயணுகி னானால். ௪௪

---

242. திருமால் ஒரு கோடி அம்புகளை விட்டுத் தாரகனுடைய தேரையும் வில்லையும் துண்டுபடுத்தினார். சூர் இளவல்-தாரகன். திரிந்து-மீட்டும். எதிர்செல்ல : சென்றவன் தாரகன். தப்பு இல் திகிரி.

243 ஆழி ஆபரணமாகி உற. முன் எதிர் உற - முன்னவனாகிய சூரனுக்கு எதிரே செல்ல. துறக்கநகர் - சுவர்க்கத்திலுள்ள அமராவதியை.

244. மங்கை - இந்திராணி. தகுவர் - அசுரர். மம்மர் உற - மயக்கத்தை அடைய. கதம் - கோபம். ஆசி முகமன் - ஆசீர்வாதமும்

245. அந்தமக லோகமுத லானவுல கெல்லாம்
அன்பொடு தெரிந்தவ ணமர்ந்தவர் வழுத்தக்
கொந்தலர் நெடுநதொடைகொ டானவர்கண் மன்னன்
கோகனத மீதிலுறை கோனகர நண்ணி
அந்தணனு மிவ்வகை யறிநதெதி ரடைநதே
ஆசிகள் புகன்றிடலு மங்கவனை வைத்துச்
செநதிரு விளங்குதிரு மார்புடைய செம்மல்
சேருமுல கததினிடை சேனையொடு முற்றான். ௨௫

246. அவ்விடையின் மாயவ னுணர்நதெதிர் பொருந்தி
ஆசிக ளுரைத்திட வருந்தியொ டிருநதி
வெவ்விடை யுகைத்தருள பரம்பொரு ளிருக்கும்
வீறுல கடைந்தனிக வெள்ளம திகநது
தெவ்வர்புகழ் நந்திவிட வநதிநிற மேனித்
தேவனை வணங்கவருள் செய்தருளி யேனை
எவ்வமறு மண்டவகை கண்டரசு செய்தே
இன்பொடுறை கென்னவிடை கொண்டுபுற மெய்தி.

247. துங்கமுறு சேனையொடு கூடியதன் மீதே
துன்றுபுக ழண்டவகை தோறுமினி தேகிப்
பொங்கவுண ரிற்சிலவ ரங்குற விருத்திப்
பொன்னுலகி னண்ணவவ னன்னையை யளித்த

உபசார வார்த்தைகளும். விடுத்து - தேவர்களை விட்டுவிட்டு. போகமக லோகமிசை - போகததையுடைய மகலோகததிற்கு.

245. கொநது - கொத்து. கோகனதமீதில் உறை கோன்-பிரம தேவன்; அவன் நகரம, சத்தியலோகம். அநதணன் - பிரமதேவன். செம்மல் - திருமால்.

246. அவ்விடையின் - அப்பொழுது. அருதநி - அன்பு. அனிக வெள்ளமதை இகநது - மிகுதியாகிய படைகளை நீங்கித் தனியாக. அநதிநிற மேனித தேவன் - சிவபிரான்.

247. சிலவர் - சிலரை. பொன்னுலகில - தேவலோகததில. அன்னை - மாயை. அசுரர்க்கிறை - அசுரேசன். -சுரேசன் தன் சிறபபை

செங்கணசு ரர்க்கிறைதன் மேன்மைக ளனைத்தும்
  தீதில்புகர் சூரொடு தெருட்டுற விடுத்து
மங்கலி னயப்பினொடு வந்துதொழ லோடும்
  மற்றவ னொடும்புவியின் மன்னவ னடைந்தான். சஎ

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

248. இந்த வேலையிந் திரனய னமரர்கள்
  இலங்குபாற் கடன்மேய
உந்தி பூத்தவ னனைவருங் குழுமியே
  ஓர்ந்துதா னவனேரே
வந்து வாழ்த்துரை சொற்றனர் நிற்றலும்
  மற்றவர் தொகையூடே
உந்து சீருடைப் பதினொரு கோடியாம்
  உருத்திரர் தமைக்கண்டான். சஅ

249. துண்ட மாமதி கடுத்தவா ளெயிற்றடற்
  சூரனு மசுரேசன்
வண்டு லாவரு மிதழியந் தொடையினன்
  வடிவுள வலியோரைக்
கண்டி யாவரிங் கிவரென வவிர்மதிக்
  கவிகைவா னவற்றந்த
தண்டு ழாய்முடி முடிப்பவ னுனவன்
  தானவ னொடுசொற்றும். சகூ

யெல்லாம் சூரனுக்குக் கூறி விளக்கும்படி சுக்கிரனை அனுப்பினன். அவனொடும் - அசுரேசனுடன். மன்னவன் - சூரன்.

248. உந்தி பூத்தவன் - பத்மநாபன்.

249. துண்ட மாமதி கடுத்த - பிறையை ஒத்த. எயிறு - பல். இதழி அம் தொடையினன் வடிவுள வலியோரைக் கண்டு - கொன்றை மாலையை அணிந்த சிவபெருமானது உருவத்தையுடைய பலம் பொருந்திய உருத்திரர்களைப் பார்த்து. மதிக் கவிகை வானவன் தந்த - சந்திரனைக் குடையாகவுடைய காமதேவனைப்பெற்ற. முடிப்பவன் - திருமால்.

250. முன்ன மோர்பக லகந்தையாற் பரமனை
முளரியந் தவிசும்பர்
மன்னு நான்முக னயர்த்தலு மவன்றொழில்
மல்கிய திலையற்றாற்
கன்னி பாகனை மறந்தன மெனவவற்
கருதியே பலவைகல்
இன்ன நீர்தவ மியற்றிட வடைந்தருள்
புரிந்தில னிறையோனே. ௫௦

251. மன்னு பற்பக லருந்தவஞ் செயப்பரன்
வந்தில னெனமாழ்கி
அன்ன வாகன னழுதனன் விழியினீர்
அலகையா யெழக்கண்டு
துன்னி டுந்துயர் கொண்டவ னயர்ந்திடத்
தொலைவிலா வுயிர்க்கெல்லாம்
அன்னை பாகனங் கவனது கனவில்வந்
திணையன வறைகின்றான். ௫௧

252. இங்கு நீயெமை மறத்தலால் விதித்திடும்
இயல்புனக் கிலதாய
தங்க ணம்பதத் திருப்பவர் தமையுன
தகத்தினில் விடுப்பாமென்

250. முளரியந் தவிசு உம்பர் - பதுமாசனத்தின்மேல். அயர்த்த லும் - மறந்தபோது. அவன் தொழில் மல்கியதிலை - அந்தப் பிரம தேவன் செய்யும் சிருட்டித் தொழில் மேலே நடைபெறவில்லை. இயற் றிட - பிரமதேவன் செய்ய.

251. மாழ்கி - மயங்கி. அன்ன வாகனன் - பிரம தேவன். பிரமதேவனது கண்ணீர் பேயுருவமாக எழ, அதைக் கண்டு அவன் துய ரங் கொண்டான்; அலகை - பேய்.

252. விதித்திடும் இயல்பு - சிருட்டி செய்யும் ஆற்றல். நம் பதத்து இருப்பவர்தமை - சிவலோகத்தில் இருபபவர்களை. வீதி நுதற்புடை - பிரமதேவனது நெற்றியிலிருந்து.

றெங்க ணாயகன் கழறலு மெழுந்தினி
 திருந்தன னதுபோதிற்
பொங்கு சீர்ப்பதி னொன்றெனு முருத்திரர்
 விதிநுதற் புடைவந்தார். ருஉ

253. மன்றன் மாமதுக் கமலவான் றவிசின்மேல்
 வதிந்தநான் முகவேதன்
ஒன்று மேவிய பதின்மராய் விளங்கிய
 உருத்திரர் தமைநோக்கி
இன்று நீரிவ ணடைந்ததென் னெனவெம
 திறைவன தருளாலுன்
நன்று றுந்தொழின் முடிப்பது பொருட்டினால்
 நண்ணின மெனச் சொற்றார். ருங

254. சொற்ற வாசகங் கேட்டலு மகிழ்ந்துயிர்த்
 தொகையுத வுதிரென்ன
உற்ற சீர்பெறு பதினொரு கோடியாம்
 உருத்திரர் தமைநல்கிக்
கொற்ற நான்மறை யயன்றனக் கவன்றொழில்
 கொடுத்தகன் றனரன்னார்
முற்ற ருந்திற லுருத்திர ரிவரென
 மொழிந்தனன் முகில்வண்ணன். ருச

255. இன்ன வாசகங் கேசவ னேசமோ
 டிசைத்தலு மிவைகேளாப்
பொன்னு லாம்புக ழவுணர்கோ னிமையவர்
 புனைவனை முகநோக்கி

253. மன்றல் - நறுமணம். ஒன்று மேவிய பதின்மர் - பதினொருவர். உன் தொழில் - சிருட்டித் தொழிலை.

254. உயிர்த்தொகை உதவுதிர் என்ன - உயிர்க் கூட்டங்களைச் சிருட்டி செய்யுங்களென்று பிரமதேவன் சொல்ல. நல்கி : நல்கினவர், பதினொருருத்திரர்.

255. பொன் - பொலிவு. இமையவர் புனைவன் - தேவ தச்சனாகிய விசுவகர்மா. புகர் எல்லை கூறிட - சுக்கிரன் அந்த நகரத்துக்கு உரிய எல்லைகளை வகுத்துரைக்க. குமுறு - ஒலிக்கின்ற.

நன்ன லம்பெற யாமிருந் திடவொரு
நகரது புரிகென்னக்
கொன்னு லாம்புக ரெல்லேகூ றிடவவன்
குழுறுதென் கடல்சேர்ந்தான். ருரு

256. ஆங்க தற்கிடை யெண்பதி னுயிர
யோசனை யகலத்தோர்
தீங்கி னற்பதி வளத்தொடு புரிந்தனன்
திறன்மகேந் திரமென்றோர்
பாங்கு றும்பெயர் நிறுவினன் வடகடற்·
படர்ந்தன னதிலோரூர்
தூங்கு கைக்கரிப் பகைமுகற் காசுரத்
தொன்னகர் புரிந்திட்டான். ருசா

257. மற்று முள்ளதெண் டிரைதொறு மிடையிடை
வயங்குதீ வுகடோறும்
பொற்றொ டிக்கர மங்கல கேசிதன்
புதல்விதந் திடுசூரன்
கொற்ற நால்வகைத் தானைக ளிருந்திடக்
குலவுபன் னகராற்றிக்
கற்று ணர்ந்தசீர்ப் புனைவர்கோன் கதுமெனக்
கருங்கடற் புவிசேர்ந்தான். ருஎ

258. பின்பு நாவலந் தீவின்மா யாநகர்
பெருங்கரி முகன்வாழ்தற்
கன்பி னேடுசெய் தவுணனுக் குரைத்திட
அடன்மகேந் திரமெய்திப்

---

256. பதி - நகரம். தென் கடலில் மகேந்திரம் என்ற நகரத்தைச் சூரனுக்கும், வட கடலில் ஆசுரம் என்ற நகரத்தைச் சிங்கமுகாசுரனுக்கும் இயற்றினன். கரிப்பகை - சிங்கம்.

257. மங்கலகேசிதன் புதல்வி - மாயை. புனைவர்கோன் - தச்சரும் முதல்வனாகிய விசுவகர்மா. கதுமென - விரைவாக.

258. நாவலந் தீவில் தாரகன் வாழ மாயாபுரி என்ற நகரை இயற்றினன். புலவர் - தேவர். வேதனல் முடி புனைந்து - பிரமதேவனைக் கொண்டு முடி சூட்டப்பெற்று.

பொன்பு னைந்தநற் றெண்டிரை நீரினாற்
புலவராட் டிடவாடி
இன்ப வேதனான் முடிபுனைந் திருந்தனன்
ஏவருந தொழுதேத்த. ௫௮

259. மால வன்றனை விளித்திடும் பொழுதெலாம்
வருகென விடையீந்து
கோல மாமலர்க் கடவுண்மா முகந்தெரீஇக்
குமரர்தம் மொடுநீவந்
தேலு மங்கமோ ரைந்துநா டொறுமுரைத்
தேகுதி யெனவோதிச்
சீல மேவிய வருக்கனோ டினையன
செப்புவன் றிறற்சூரன். ௫௯

260. இன்ன வாணகர்ப் புறத்துறு புரிசைமீ
தேகனிற் கரிதாகும்
பொன்னு லாமணிச் சிகரியு ணெறிக்கொடு
புகுந்துவான் மிசையேகி
இன்ன றீர்தரு மிளங்கதிர் நடத்தியே
இவ்வகை திரிவாயென்
றன்ன பின்னரே யவிர்மதிக் கடவுளுக்
கறைந்தவ னடற்சூரன். ௬0

261. வளரு கின்றதுங் குறைவது மறைவதும்
மறந்துநீ நிறைவாகிக்
கிளரு மின்னகர் நாடொறும் வருகெனக்
கிளத்தியே யதுபின்னர்

---

259. அழைக்கும்போதெல்லாம் வருகவென்று திருமாலுக்குச் சூரன் கட்டளையிட்டான். பிரமனை நாள்தோறும் பஞ்சாங்கம் சொல்லிப் போவென்றான். தெரீஇ - பார்த்து. அங்கமோரைந்து - திதிவார நக்ஷத்திர யோக கரணங்களாகிய பஞ்சாங்கம். அருக்கன் - சூரியன்.

260. வாள் - ஒளி. புரிசைமீது - மதிலின்மேல். சிகரியுள் நெறிக்கொடு புகுந்து - கோபுரத்துக்குள் உள்ள வழியாலே புகுந்து சென்று. அன்னபின்னர் - அதன்பிறகு.

261. நீ எப்போதும் நிறைமதியாகவே இங்கே வரவேண்டும். கிளத்தி - சொல்லி. முளரி வானவன் - அக்கினிதேவன். நம் பதியி

முளரி வானவற் றெரிந்துநம் பதியினோர்
முன்னினங் கவர்பாலுற்
றுளப ணித்திற மியற்றுபு தொடிற்குளிர்ந்
துறைகென வுரைசெய்தான். ௬௧

262. கொற்ப கட்டிலுற் றெதிர்ந்தவ ருளங்குலை
குலைந்திடப் புவிமாந்தர்
முற்ப கட்டிவந் திடுங்கொடுஞ் சமன்றனை
முகிண்மலை முலைமாயை
பொற்ப கட்டில்வந் துதித்தவன் றெரிந்தரும்
பொருகரி பரியாதி
நிற்ப கட்டிய கழற்றகு வர்களுகப்
புரிந்திடே னீயென்றான். ௬௨

263. விரித்தி டும்புகழ்ப் பவனனை நோக்கியிவ்
வியனகர் மிசைவாழ்வார்
தரித்தி கழ்ந்திடு தொடைமுத லாயின
தள்ளுதி யெனச்சாற்றித்
திருத்தி கழ்ந்திடு வருணனை நாவிமுற்
சிறந்தன பனிநீரிற்
பொருத்தி யின்னக ரெங்கணுந் தெளியெனப்
புகன்றனன் புகழ்ச்சூரன். ௬௩

னோர் முன்னின் - நம்முடைய நகரத்தில் இருப்பவர்கள் உன்னை நினைத்தால். பணித்திறம் இயற்றுபு - பலவகை வேலைகளையும் செய்து தொடின் குளிர்ந்து உறைக - தொட்டாற் குளிர்ச்சியடைந்து இருப்பாயாக.

262. கொன் பகட்டில் உற்று - அச்சம் தருகின்ற எருமைக் கடாவின்மேல் ஆரோகணித்து. மாநதர்முன் பகட்டி வந்திடும்; பகட்டி - தோற்றம்மிக்கு. முகிழ் - தாமரை மொட்டைப்போன்ற. மாயை பொற்பு அகட்டில் - மாயையினது பொலிவையுடைய வயிற்றில். நிற்ப - உயிரோடு நிற்க. கட்டிய கழல் தகுவர்கள் உக - காலில் கட்டிய வீரக்கழலையுடைய அசுரர்கள் இறக்கும்படியாக.

263. பவனனை - வாயுதேவனை. தள்ளுதி - சீத்துத் தள்ளுவாயாக. நாவி - கஸ்தூரி.

264. நீனி றக்கட மழைசொரி தருகவுள்
நெடியநாற் பெருங்கோட்டு
வானி றக்கரிக் கடவுளை நோக்கிநீ
வானவர் குழுவோடும்
ஏனை மாதிரத் தலைவர்தங் குழுவொடும்
இடுபணி புரிகென்றான்
ஊன முற்றிடு மிவைமறுத் திடவெரீஇ
உரைத்தவா றெழுகுற்றார். ௨௬௪

265. மரும லர்த்தொடைப் பதுமகோ மளைமுதல்
மாதரை மணஞ்செய்தே
அரிமு கற்கெழில் விபுதையை மணஞ்செய்வித்
தானைமா முகத்தோனுக்
கிருமை பெற்றசீர்ச் சவுரியை மணஞ்செய்வித்
திருவரு மிருகோடி
விரிவு சேர்படை வெள்ளமோ டவரவர்
பதிபுக விடுத்தானல். ௨௬௫

266. தண்ட ருந்தொடை யிளையவ ரகன்றபின்
தகுவரிற் பலர்தம்மை
மண்டு சீருள நாலிரு திசையினும்
வானகத் துலகத்தும்

---

264. கடமழை - மழையைப்போன்ற மதம். கோடு - தந்தம். வால்நிறக் கரி - ஐராவதம். கடவுள் - இந்திரன். மாதிரத்தலைவர் - திக்குப் பாலகர். இடு பணி - நான் இட்ட வேலையை. வெரீஇ - வெருவி.

265. பதுமகோமளை, விசுவகர்மாவின் பெண். பதுமகோமளை முதலிய பல மாதரைச் சூரன் மணம் செய்துகொண்டான். யமனுடைய மகள் விபுதை. நிருதியின் மகள் சவுரி. இருவரும் - சிங்கமுகனும், தாரகனும். அவர் பதி முறையே ஆசுரபுரியும், மாயா புரியும் ஆம்.

266. தண் தரும் - குளிர்ச்சியை விளைவிக்கும். தகுவர் - அசுரர். வரைப்பு - உலகம்.

ஒண்டி றற்பெறு பாதல வரைப்பினும்
ஒழிந்தபல் லிடந்தோறும்
எண்ட ரும்பெருந் தானையோ டிருந்திட
விடுத்தன னிருஞ்சூரன். ௬௬

267. ஏவல் செய்துழ றேவரை யொருபகல்
இருங்கடற் பெருமீன்கள்
நீவிர் நாடொறுந் தருதிரென் றுரைத்தலும்
நெடுந்துயர்க் கடன்மூழ்கிப்
பாவ வப்பணி நாடொறும் புரிந்தனர்
பதுமகோ மளைதன்பாற்
சேவ கத்தனி மைந்தன்வந் துதித்தனன்
திசையெலா மிசைவீச. ௬௭

268. உற்ற மைந்தனை மாயவண் மகன்றெரிந்
துவகையங் கடன்மூழ்கி
வெற்றி சேர்தரு மவுணர்தங் கிளைக்கெலாம்
வெறுக்கைகண் மிகவீந்தான்
மற்ற தற்பினக் குமரனை மடந்தையர்
வளங்கொடொட் டிலிலேற்ற
அற்ற மற்றிடுஞ் சிறப்பொடு மதிற்றுயின்
றமருநா ளொருநாளில். ௬௮

269. வான கத்தெழு மிரவிதன் கதிரவன்
வடிவினிற் படப்பாய்ந்து
தான வன்றனைப் பிடித்துவந் தணிமணித்
தொட்டிலிற் றளைசெய்தே

---

267. பாவ அப் பணி - பாவமாகிய மீன் பிடிக்கும் செயலை. சேவகம் - வீரம்.

268. மாயவள் மகள் - மாயையின் பிள்ளையாகிய சூரன். வெறுக்கைகள் - செல்வங்கள். அற்றம் - குறை.

269. இரவி தன் கதிர் அவன் வடிவினில் பட - சூரிய கிரணம் அந்தக் குழந்தையின் தேகத்தில் பட. தான் - அந்தக் குழந்தை. தளை செய்து - கட்டிவைத்து. விதி - பிரமதேவன். இரப்ப - சூரியனை

ஈன மற்றவா னவரொடு விதியடைந்
திரப்பவிட் டதனாலே
பானு கோபனும் வளர்ந்தொரு பகலிலேம்
படைகொண்மா லேயும்வென்றான். ௬௯

270. பின்னு மக்கினி முகத்தனே யிரணியன்
பீடுவச் சிரவாகு
என்னு மைந்தர்கள் பதுமகோ மளேயகட்
டிடத்துவந் துதித்தார்கள்
துன்னு மற்றுள மனைவியர் தங்கள்பால்
தோன்றினர் தொகைசொல்லின்
மன்னி டும்புகழ் கொண்டமு வாயிர
மைந்தர்க ளெனலாமால். ௭0

271. அரிமு கன்னதி சூரனே நூறுமைந்
தர்கடமை யளித்திட்டான்
கரிமு கன்றிறல் பெறுமசு ரேந்திரக்
காவலன் றனையீன்றான்
மருவு மின்னவர்க் கிளேயளா மசமுகி
வலிதுபோய்த் துருவாசப்
பெரிய வன்றனைப் புணர்ந்துவில் வலனைவா
தாவியைப் பெற்றாளால். ௭௧

272. அன்ன மைந்தர்க ளிருவருந் தவம்புரிந்
தயன்றரும் வரந்தன்னுற்
பின்ன வன்மறி யுருக்கொள முன்னவன்
பெருமுனி வரனாகி

விட்டுவிட வேண்டுமென்று வேண்ட. பானு - சூரியன்; அவனைக் கோபித்துப் பிடித்துக் கட்டினமையால் பானுகோபன் என்ற பெயர் வந்தது. 270. அகட்டிடத்து - வயிற்றில்.

271. அரிமுகன் - சிங்கமுகாசுரன்.

272. இருவர் - வில்வலன், வாதாபி. மறி - ஆடு. மன்னும் மாதவர்க்கு - அங்கே வரும் முனிவர்களுக்கு. அமுது - சோறு. உண்ட பிறகு முனிவர்கள் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வாதாபி வெளிப்படுவான்.

மன்னு மாதவர்க் கழுதொடு கறியென
மறிதனைச் சமைத்தூட்ட
இன்னல் சேர்ந்திட வவர்குட ரதுகிழித்
திளையவன் வருமாதோ. எ௨

273. இன்ன பான்மையி னளவிலர்க் கிறுதிசெய்
திருந்தன ரிதுநிற்கப்
பின்ன ரோர்பகற் சூரனு மவுணர்கோன்
பெருகெழி லயிராணி
தன்னை வவ்வியே சிறையிடை மகபதி
தனையிட மனமீதில்
உன்னி மன்னிய தானையந் தலைவரில்
ஒருவனோ டுரைசெய்வான். எ௩

274. இந்தி ரற்பிடித் தீண்டுமீண் டுடுதியென்
றேவியோன் பதுகோடி
பைந்தொ டிக்கரத் தருவர்தங் குலத்துவெம்
பாவையர் தமைக்கூவி
அந்த மற்றசீர்ச் சசிதனைப் பிடித்திவண்
அடைதிரென் றவண்டேண்டச்
சுந்த ரந்தரு துறக்கவா னுலகினில்
துன்னினு ரவரெல்லாம். எ௪

275. பொங்கு தானையுந் தானையந் தலைவனும்
பொற்றொடித் தளிர்ச்செங்கை
மங்கை மார்களும் வருவன வொற்றர்போய்
வானநா யகற்கோத

273. இறுதி செய்து - கொன்று. இந்திராணியை வவ்வவும் இந்திரனைச் சிறையில் இடவும் எண்ணி.

274. தொடி - வளை. சசி - இந்திராணி. துறக்க வானுலகு - சுவர்க்க லோகம்.

275. வருவன - வருதலை. வான நாயகற்கு - இந்திரனுக்கு. கரந்து - மறைந்து. தருவினர் தெரிந்திலர் - தேடிக் கண்டிலராகி.

அங்க ணீதுணர்ந் தருஞ்சசி யொடுங்கரந்
  தவனியி னிடைச்சேர்ந்தான்
துங்க வெய்யவர் துருவினர் தெரிந்திலர்
  சூரன்முன் னுரைசெய்தார். எரு

276. ஈது சூரறிந் தமரர்கோன் றுணைவியோ
  டிருந்துழி யறிந்தெய்தத்
தீதி லொற்றரை விடுத்தன னிந்திரன்
  சேயெனுஞ் சயந்தன்றான்
கோதி லாதவை குந்தமுற் றிருந்தனன்
  குறுகிய விவைகேளா
ஏத மற்றதோர் பொன்னுல கடைந்ததில்
  இருந்தன னரசாற்றி. எசு

277. மஞ்சு வாகன நாகர்கோன் புகலியாம்
  வளமுறு நகரெய்தி
எஞ்சு றுதவோர் நந்தன வனம்புரிந்
  திறைவனை யருச்சித்தே
வஞ்சி யோடுற வொற்றர்க ணேடியே
  வருவதை யறிந்துள்ளத்
தஞ்சி மாதொடுங் கழையதாய்ப் பரமனை
  அருச்சனை புரிந்துற்றான். எஎ

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

278. அந்நாளி னந்தாத நந்தன வனம்பூவில்
  அம்பற்று வாட விமையோர்
மன்னன விந்திரன் வருந்தா விருந்திட
  வணங்கார் புராரி யருளால்

---

276. சயந்தன் வைகுந்தம் அடைந்து அங்கே இருந்தவன், சுவர்க்க லோகத்தை அடைந்து அரசாட்சி செய்திருந்தான்.

277. மஞ்சுவாகன நாகர்கோன் - மேகவாகனத்தையுடைய தேவ ராஜனாகிய இந்திரன். புகலி - சீகாழி. வஞ்சியோடு - இந்திராணி யோடு. கழையதாய் - மூங்கில் உருவத்தை எடுத்துக்கொண்டு.

நன்றார தன்பெரிய விந்தா சலத்தினிடை
நண்ணித் தனுது யர்வினல்
தன்னோடு நீவறுநிக ரில்லென்று பொன்வரை
தருக்குற்ற தென்று புகல. எஅ

279. விந்தஞ் சினந்துவிதி யூர்காறு நீள்வுற
விசும்பூ டருக்கன் முதலோர்
தந்தம் பொருந்துநெறி யில்லாது மேருவிடை
சல்லாப மோடு மருவும்
அந்தண் கடத்துமுனி தன்னைப் புகழ்ந்திடலும்
அன்னு னறிந்த ருளியே
உந்தும் பரன்றனை நினைந்தே தவம்புரிய
உற்று னுயிர்க்கு ளுயிரான். எகூ

280. நிற்கேது வேண்டுமென விந்தத்தை வென்றிட
நிருத்தா பெருத்த விறலின்
றெற்கேய வேண்டுமென விந்தா சலத்தடல்
இறுத்தே யிரூத மலயக்
கற்கே யிருத்தியென வோர்பொன்னி நன்னதி
கவின்குண்டி கைக்கு ளுதவத்
தெற்கே நடந்தரி முகன்றம்பி வென்றியொடு
சேர்மாய வூர்கு றுகினன். அ0

---

278. பூவில் - பூமியில். அம்பு அற்று வாட - நீர் இல்லாமல் வாட. வணங்கார் - பகைவர்களுடைய. விந்தாசலத்தினிடை - விந்திய மலையினிடத்தில். பொன்வரை - மேருமலை. நாரதன் புகல.

279. விதி ஊர்காறும் நீள்வுற - பிரமதேவனுடைய சத்திய லோகம் வரையிலும் உயர்ந்து நிற்க. அருக்கன் - சூரியன். சல்லாபம் - இனிய சம்பாஷணை. கடத்துமுனி - அகத்திய முனிவர். புகழ்ந்திடலும் - துதித்து முறையிடவே. உயிர்க்குள் உயிரான் உற்றான் - அகத்தியர் தவத்தைக்கண்டு சிவபெருமான் அவருக்குமுன் தோன்றினன்.

280. விறல் இன்று எற்கு ஏயவேண்டும்; ஏய - பொருந்த. அடல் இறுத்து - கர்வத்தைக் குறைத்து. இரூத மலயக்கற்கே - என்றும் கேடில்லாத பொதிய மலையில்; "தொலையா மலையன்" (74) என்றார் முன்னும் என - என்று சொல்லி. பொன்னி நன் நதி -

281. கேடற்ற முனியங்கண் வருகின்ற செயல்கண்டு
கிரவுஞ்ச னென்னு மவுணன்
ஈடற்ற விமையோர்கண் முனிவோர்க ணணிவாட
எந்நாளு மின்னல் புரிவான்
கோடற்ற கிரியாகி யதனூடு சரியொன்று
கொண்டங்க ணண்ட வதனுட்
பீடற் றிடுஞ்சா கரத்தைக் கரங்கொண்ட
பெரியோ னடந்த ருளினன். அக

282. சங்கோ லிடுந்தெண் டிரைச்சா கரத்தே
தருக்கோ டெழுந்த விடநேர்
வெங்கோப நிருதர்க்கு நிருபன் புரிந்திட்ட
வியன்மாயை தன்னை யுணரான்
அங்கோர் குரோசஞ்செல் பொழுதந்த வழிமாழ்கி
அயலொன்று காண வதன்மீ
தெங்கோ னடந்தா னடந்திட்ட போதங்
கிறந்திட்ட தவ்வ தருமே. அஉ

283. வீறொன்று கும்பமுனி வல்லே திரிந்துவதி
வேறொன்று கண்டு படரச்
சீறங்கி சுற்றவொலி சுற்றவிருள் சுற்றமுகில்
திண்மாரி தூவ முனிவர்

காவிரிநதியை. கவின் குண்டிகைக்குள் உதவ - அகத்தியரது அழகிய கமண்டலத்துக்குள் இருக்கும்படியாகச் சிவபெருமான் அளிக்க. அரிமுகன் தம்பி - தாரகன். மாயவூர் - மாயாபுரி.

281. கோடு - சிகரம். சரி - வழி. அண்ட - அணுக. சாகரத்தைக் கரங்கொண்ட பெரியோன் - கடல்நீரைக் கையில் எடுத்து உண்ட அகத்தியமுனிவர்.

282. சங்கு ஓலிடும் - சங்குகள் முழங்கும். நிருதற்கு-நிருபன்- அசுரமன்னனாகிய கிரவுஞ்சன். குரோசம் - குரோச தூரம். மாழ்கி - மறைந்து. அவ்வதரும் இறந்திட்டது - அந்த வழியும் மறைந்துவிட்டது.

283. வீறு - வலிமை. வல்லே - விரைவில். திரிந்து - திரும்பி. படர - செல்ல. சீறு அங்கி சுற்ற - வெம்மை வீசுகின்ற அக்கினியானது சுற்றிக்கொள்ள. மாறு அங்கு உறு அறிவின் - மாறு

மாறங் குறுவறிவி னவுணன் புரிந்திட்ட
மாயந் தெரிந்து வெகுளாப்
பேறங் கரங்குலவு கதைகொண்டு குத்திப்
பெருஞ்சாப மோது வனரோ. ௮௩

284. நலனுற்ற புலனற்ற கொடியோயிவ் வடிவாகி
நாடோறு நண்ணி யதன்மேல்
மலைபெற்ற வுமைபெற்ற குமரேசன் வடிவேலின்
மடிவாதி யென்ற வுணர்கோன்
அலலுற்ற ழுங்கப் புகன்றே யகன்றே
அடல்கொள்விந் தங்கு றுகினான்
செலவிற் கிடந்துகிர வுஞ்சஞ்செய் வஞ்சம்
செயங்கொண்ட திண்டி றலினான். ௮௪

285. வீறுமவ் வெற்பினொடு தெற்கேக வெற்குவழி
விடுவா யெனப்பு கறலும்
மாறாகி விந்தம திகழ்ந்தோத வேதபத
மட்டுங் கரத்தி னையெடாப்
பேறும தன்றலை யழுத்தக் குலைந்தது
பிலத்தூடு போகி யதுவெண்
ணீறாடி யன்பரொடு வன்பெய்தி னார்நிரைய
நெறிவீழ்தல் காட்டு நிலைபோல். ௮௫

பாட்டை அடையாத அறிவினால். பேறு அம் கரம் - நற்செயலைச் செய்யும்பேறுடைய திருக்கரத்தில். அகத்தியர் கிரௌஞ்ச கிரியைத் தண்டத்தினால் குத்திச் சபிக்கலானார்.

284. நலன் உற்ற புலன் - நல்ல அறிவு. அதன்மேல் - அதன் பிறகு. மடிவு ஆதி - இறந்துபடுவாய். அல்லல் உற்று. குறுகினான் - அடைந்தான். செலவில் கிடந்து - செல்லும் வழியில் நின்று.

285. அவ்வெற்பினொடு - அந்த விந்தகிரியினோடு. மாறு ஆகி - அகத்திய முனிவர் கூறியதற்கு மாறுபட்டு. வேதபத மட்டும் - பிரமதேவனது உலகம் வரைக்கும். பிலத்தூடு - பாதலத்துக்குள். நிரைய நெறி - நரக கதி. இதில் நிதரிசன அணி வந்தது.

286. தாதார் மலர்க்கைகொடு வெற்பைப் பிலத்தினிடை
தள்ளிப் படர்ந்த பொழுதில்
வாதாவி வில்வல னெனும்பேர் படைத்துமிகு
வஞ்சங் குயிற்று கொடியோர்
தீதான தற்றமுனி தன்னைத் தெரிந்துயிர்
செகுப்போ மெனக்க ருதியப்
போதாட தாயிளவ லுறவில் வலன்முனிவர்
போலப் பொலிந்த னனரோ. அசு

287. குன்றத்தை வென்றமுனி முன்பாக வின்பான
கோலஞ் சமைந்த கொடியோன்
சென்றத்த வென்றடி பணிந்திற் கொணர்ந்தமுது
செய்தேக வேண்டு மெனவே
நன்றத் தொழில்புரிவ மெனமூழ்கி வந்தடிசில்
நயமோடு செய்து தகரைப்
பொன்றத் தடிந்துகறி யாகச் சிறப்பொடு
புரிந்தே படைத்த னனரோ. அஎ

288. இன்பான வமுதங் கருந்தா வருந்தவன்
இருந்தா னிருந்த பொழுதில்
வன்பாவி வாதாவி வருகென்ன முனிவன்றன்
வயிறா டெழுந்தி ரையவே

---

286. படர்ந்த பொழுதில் - மேலே செல்லுகின்ற சமயத்தில். குயிற்று - செய்கின்ற. உயிர் செகுப்போம் - கொல்வோம்.

287. இன்பான கோலம் - இனிய தவமுனிவனைப் போன்ற உருவம். அத்த - தலைவனே. இல் கொணர்ந்து - தம் இருப்பிடத்திற்கு அழைத்து வந்து. அத்தொழில் புரிவம் என - உண்ணுதலாகிய அக்காரியத்தைச் செய்வேம் என்று அகத்தியர் கூற. நயம் - இனிமை. பொன்றத் தடிந்து - முழுதும் அறுத்து.

288. அமுது அங்கு அருந்தா. வருக என்ன - நீ வருவாயாக என்று வில்வலன் அழைக்க. இரைய - சப்திக்க. கொன் பாவு - பெருமை பரவிய. அகட்டில் கரம் கொண்டு தடவ. கொண்டற் களத்தன் - சிவபெருமான். கோது ஆவி - பாவமுடைய உயிர்.

கொன்பா வகட்டிற் கரங்கொண் டிரங்கொண்ட
கொண்டற களதத னடிகட்
கன்பான வன்றடவ வாதாவி கோதாவி
அழிவுறற தன்ன பொழுதே. அஅ

289. பின்னுன தனறம்பி மடிவான செயலகண்டு
பெரிதுஞ் சினநது தருவன்
முன்னுக மதுகொண்டு முனனுக வருபோது
முனியோா தருப்பை யதனைக
கொன்றாரும விடையாளி படையாக விடுபோது
கொடியோனு முடிவ டையவே
அன்று ரிடநதனை யகனறே நெடுங்கடல்
அயின்று னடநத ருளினுன். அகூ

290. முடிவான கொடியோாக டவமேவு துருவாச
முனிமைநத ரான முறையாற
படியோாகள புகழ்கும்ப முனிபின்பு முனிவோர்கள்
படிவஙகள கொண்டு தொடரா
இடிபோ விரைப்பவுயா கொங்குக் கணிததா
யிருநதோ ரிலிங்க மதனில
அடியாா மனததனை யருசசனை புரிநதங்
ககன்று னவாக்கொல பவமே. கூ0

---

289. தருவன - வில்வலன. முன ஆகமது கொண்டு - முன னுளள அசுர உருவததை எடுததுக்கொணடு விடையாளி படையாக - பாசுபதாஸ்திரததைபபோல

290. முடிவான கொடியோாகள - இறநதுபோன வில்வலன வாதாபி யெனபவாகள. படியோாகள - உலகததினர், அவ்விருவரும் முனிவா உருவங்களைக் கொணடு இடிபோல முழங்கி அகத்தியரைத தொடாநதனா இரைபப - முழஙக. கொங்குக்கு அணித்தாய் இருநது - கொஙகு நாட்டிறகு அருகில ஓரிடததில் தஙகி. அடியார் மனத்தனை - சிவபெருமானை. அவர் கொல் பவம் - வில்வலன வாதாபிகளைக் கொன றதனுல உணடாகிய பிரம்மஹததி தோஷததை

291. கொங்குப் பொழிற்குலவு கொங்கிற் பெருந்தவர்கள்
கோமா னிருந்த ருளுநாள்
மங்குற் களத்தனடி சிந்திக்கு நாரதன்
வயற்காழி நண்ண வதனில்
தங்குற்ற விண்ணிறை தெரிந்தே யெழுந்துமுனி
தாண்மீ திறைஞ்ச வினிதே
இங்குற் றிருந்தனைகொ லென்னவுன தின்னருளின்
இன்போ டிருந்த னனென. ௯௧

292. ஒப்பான தற்றபொழி லப்பான தற்றுலர்வ
தோதக் கடத்து முனிபால்
வைப்பான வாறுவரின் மெய்ப்பாதி நந்தன
வனந்தான் வளர்ந்தி டுமெனச்
செப்பா யுபாயமென மெய்ப்பாணி யைந்துடைய
சீரோனை யர்ச்சி யெனவே
பொய்ப்பாச மற்றமுனி யுரைசெய்ய வவ்வகை
புரிந்தான் விசும்பு புரிவான். ௯௨

293. அக்காலை வேழமுகன் வந்தேது வேண்டுமென
அந்தண் கடத்து முனிபால்
மிக்கான குண்டிகை வனத்தைக் கவிழ்த்தருள
வேண்டுங் கணேச வெனவே

---

291. கொங்கு - பூந்தாது. கொங்கில் - கொங்கு நாட்டில். மங்குல் களத்தன் - மேகத்தைப் போன்ற கரிய திருக்கழுத்தையுடைய சிவபெருமான். விண் இறை - இந்திரன்.

292. பொழில் - நந்தனவனம் அப்பானது அற்று - ஜலம் இல்லாமல். கடத்து முனிபால் வைப்பு ஆன ஆறுவரின் - அகத்திய முனிவரிடத்தில் இருக்கின்ற காவிரிஆறு இங்கே வந்தால். மெய்ப்பு ஆதி நந்தனவனம் - உண்மைப் பொருளாகிய சிவபெருமானுக்குரிய நந்தனவனம். செப்பாய் உபாயம் என - காவிரி இங்கே வருவதற்கு உரிய உபாயத்தைச் சொல்லுவாயாக என்று இந்திரன் நாரதரைக் கேட்க. பாணி ஐந்துடைய சீரோன் - ஐங்கரன்; விநாயகர். விசும்பு புரிவான் - இந்திரன்.

மைக்காக மேனிகொடு சென்றுந்து குண்டிகையை
  மண்ணிற் கவிழ்க்க வதனிற்
புக்காசி லாதிலகு தண்பொன்னி நன்னதி
  புறம்போகி யோடி யதரோ. ௯௩

294. அவ்வேலை யோர்சிறுவ னைப்போல வத்திமுக
  அத்தன் றிரிந்த ருளலும்
மைவேலை தன்னையொரு கையூ டடக்குமுனி
  வன்றான் வெகுண்டு தொடரா
மெய்வே தனைப்பட விளைப்பத்த னுதுருவம்
  மேவிப் பயந்த முனிவற்
குய்வே தரும்பல வரந்தா னளித்தவண்
  ஒளித்தான் மிகுந்த வொளியான். ௯௪

295. துதியார் கடத்துமுனி கொங்கைத் தணந்துமிகு
  துங்கம் பொருந்து திருமால்
பதியா யிருந்ததொரு குற்றால முற்றளவில்
  பாவங்கொள் பாக வதருட்
கொதியா விகழ்ந்திடலு மவர்போ லுருக்கொடரி
  கோயிற் புகுந்த ரிதனைப்
புதிதா யிலிங்கவடி வாகப் புரிந்துபொதி
  யத்திற் பொருந்தி னனரோ. ௯௫

---

293. வேழமுகன் - விநாயகர். கடத்துமுனி - அகத்தியர். குண்டிகை வனத்தை - கமண்டலத்தில் உள்ள நீரை. மை - கருமை. ஆசு இலாத - குற்றம் இல்லாத. பொன்னி நல் நதி - காவிரி.

294. அவ்வேலை - அப்பொழுது. அத்திமுக அத்தன் - விநாயகர். வேலை தன்னை - கடலை. தொடரா - பிடிக்கும்பொருட்டுப் பின்பற்றி. மெய் வேதனைப பட இளைப்ப - உடல் வருத்தத்தை அடைய அதனல் அகத்தியமுனிவர் சோர்வைப் பெற. மிகுத்த ஒளியான் - மிக்க புகழை உடைய விநாயகர்.

295. கடத்துமுனி - அகத்தியர். கொங்கை - கொங்கு நாட்டை. பாகவதர் - திருமால் அடியார்கள். கொதியா இகழ்ந்திடலும் - கோபித்து அவமதிக்கவே. அவர்போல் உருக்கொடு - அந்த வைணவர்போல வேடங்கொண்டு. அரி கோயில் புகுந்து - திருமால் கோயிலுக்குள் சென்று

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

296. இதுநிற்க முனமைங் கரப்பிள்ளை தள்ளும்
எழில் கொண்ட நதிவந் திருங்காழி தன்னில்
பொதுளுற்று மெலிகின்ற நவநந்த னத்திற்
புகுதத் தழைப்பவர னைப்பூசை செய்தே
துதியுற்ற மகவா னிருக்கத் திருக்கச்
சூரன்ற னாலே வருந்தமரர் சில்லோர்
கதிருற்ற கனகத் துறக்கந் துறந்தே
காழிப் புறத்திற் கலந்தார்கண் மன்னோ. ௯௬

297. ஆண்டுற்ற தவளக் களிற்றண்ண லைக்கண்
டவனம்பொ னடிமீதி னடைவிற் பணிந்தே
ஈண்டுற் றிருந்தாய் பிரிந்தெம்மை யாமங்
கிகல்கொண்டு வருசூர னிடுமேவ லெல்லாம்
மூண்டுற்ற துயரிற் புரிந்தே மெலிந்தேம்
முடியா தினிச்செய்ய முடியாதெம் மையா
மாண்டுற்ற விறல்கொண்ட சூர்கெட்டியா முய்ய
வகையொன்று புரிகென்ன மகவண்ணல் புகலும்.

298. துன்றோர் வளைச்செங்கை யெழின்மாயை நல்கும்
சூர்மா மகந்தான் றொடங்குற்ற வன்றே
இன்றே யிழந்தோ மிரும்பொன்னி னன்னா
டென்றே நுமக்கங் கிசைத்தே னுயர்ந்த

---

296. ஐங்கரப்பிள்ளை - விநாயகர். தள்ளும் - கவிழ்த்து ஓடச் செய்த. இருங்காழிதன்னில் - பெரிய சீகாழி என்னும் தலத்தில். பொதுளுற்று - நெருங்கி. நவநந்தனம் - இந்திரனால் செய்யப்பெற்ற புதிய நந்தனவனத்தில். தழைப்ப - அந்த நந்தவனம் தழைத்து விளங்க. மகவான் - இந்திரன். திருக்கு அச்சூரன் தனாலே - மயலை உடைய அந்தச் சூரனாலே. கனகத்துறக்கம் - பொன்னுலகமாகிய சுவர்க்க லோகத்தை.

297. தவளக்களிற்று அண்ணலை - இந்திரனை. அடைவில் - முறைமைப்படி. இகல் - பகை. மெலிந்தேம் - மெலிவை அடைந் தோம். கெட்டு யாம். மகவண்ணல் - இந்திரன்.

குன்றே யெனுங்கொங்கை யுமைபங்க னல்கும்
குறைவற்று வளர்வெற்றி கூடிற்று நம்மை
வென்றே பதங்கொண்டு பன்னாளு மன்னோன்
மிடலோடு படிமீது மிகுமேவல் கொண்டான். ௨௯௮

299. மிடல்கொண்ட நஞ்சென்ன வெஞ்சூர னாலும்
மீனஞ் சுமந்தே மெலிந்தோம தல்லால்
இடர்கொண்ட புன்செய்கை யாவும் புரிந்தோம்
இவைபன்றி யயிராணி யெனுநாம மேவும்
மடமங்கை தனைவவ்வி பெணையுஞ் சிறைக்கண்
வைப்பானி னைந்துந்து வானத்து வஞ்சன்
படையுந்த விவ்வா றுணர்ந்தே கரந்தே
படரோடு மாதோடு பதியைத் தணந்தேன். ௨௯௯

300. முந்தே பொருந்துற்ற தீதன்றி யீதோர்
முரண்மேவு வசைமேவின் முடியா தெனக்கொண்
டிந்தே புரைந்திட்ட முகமங்கை யோடும்
இடர்கொண்ட நுமைவிட் டிரும்பூ தலத்தே
வந்தே கரந்தே வதிந்தே நுதற்கண்
மந்தா கினிச்சென்னி மன்னன் பதத்திற்
செந்தே னறும்போது தூவிப் பணிந்தே
சீர்பெற் றிடும்பூசை செய்தே யிருந்தேன். ௩௦௦

---

298. துன்று ஏர் - பொருந்திய அழகை உடைய. பொன்னின் நன்னாடு - பொன்னுலகமாகிய சுவர்க்கத்தை. குன்றே இசைத்தேன். நல்கும் வெற்றி கூடிற்று. பதங்கொண்டு - நம்முடைய பதவிகளைக் கைக்கொண்டு. மிடல் - வலிமை.

299. சூரனால் நாம். அயிராணி - இந்திராணி. வஞ்சன் - சூரன். படரோடு - துன்பத்தோடு.

300. முந்தே - முன்பே. முரண் - மாறுபாடு. ஈது ஓர் வசை; வசை என்றது இந்திராணியை இழத்தலால் வரும் பழியை. முடியாது - பொறுக்க முடியாது. இந்தே புரைந்திட்ட - சந்திரனை ஒத்த. மந்தாகினி - கங்கை. மன்னன் - சிவன்.

301. துன்பந் தருந்தா னவக்கையர் சொல்லும்
தொழில்செய்து நம்மேன்மை தொலைவுற்ற தினிநாம்
மின்கொண்ட வெள்ளிக் குவட்டின்கண் மேவி
மேவார் புரஞ்செற்ற விமலற் குரைத்தெம்
புன்கண் டணந்துய்ப வம்மின்க ளென்னப்
பொன்னாடர் மன்னோ மகிழ்ந்தார் புகழ்ந்தார்
இன்பங்கொ ளிமையோரை யிறையிங்ங னாறுமென்
றெழின்மேவு மயிராணி யிடைமேவி னானால்.

302. சீர்கொண்ட வயிராணி கண்டாள் பணிந்தாள்
சேர்வுற்ற தென்னிங்கொ ரெண்ணத்தொ டென்ன
வார்கொண்ட முலைமங்கை யிடரும்ப ரொடுவிண்
மதிகங்கை நதிதங்கு மௌலிப் பிரான்வாழ்
ஏர்கொண்ட கயிலைக் கிரிக்கேகு கின்றேன்
இதுகூற வந்தே னெனவங் கிசைப்பச்
சூர்கொண்டு மண்மேல் விழுந்தா ளயர்ந்தாள்
சுரர்மன்ன னதுகண்டு துண்ணென் றெடுத்தான்.

303. தன்னூரு விற்கொண்டு தெளிவிப்ப வங்கண்
தளர்துன்பு சிறிதே தணந்தென்னை விட்டுப்
பொன்னூரின் மன்னீ பிரிந்தா லெனைத்தான்
புரப்பாரி யாராவி போமல்ல துய்யேன்
உன்னோடு வருவே னெனாநிற்ப வையன்
உனையிங் களிப்பா னுளத்தஞ்ச லென்ன
அன்னா னிடத்திற் சிறப்பென்னை யென்றாள்
அதுகே ளெனாவின்ன தவளோ டுரைப்பான். ௧௦௫

---

301. தானவக்கையர் - அசுரர்களாகிய வஞ்சகர். வெள்ளிக் குவடு - கைலை. புன்கண் - துன்பம். பொன்னாடர் மகிழ்ந்தார். மன்னோ : அசைநிலை. இறை - சிறிது நேரம்.

302. அயிராணி - இந்திராணி. மங்கை : விளி. இடர் - துன் பத்தையுடைய. உம்பரொடு ஏகுகின்றேன். சூர்கொண்டு - அச்சத்தை யடைந்து. துண்ணென்று - நடுங்கி.

303. ஊருவில் - தொடையில். தணந்து - நீங்கி. பொன்னூரின் மன் - பொன்னுலக மன்னவன்; சுவர்க்காதிபதி. ஐயன் - சிவபெரு

304\. அல்லோடு நிகர்கண்ட னருளின்றி முன்னாள்
அரியாதி யிமையோர்க ளுடன்மேவு மவுணர்
கல்லோல மேவுஞ் செழுங்கீர மாரக்
கடலைக் கடைந்திட்ட காலத்தி னாலம்
பல்லோரு மிடருற் றிறப்பப் பிறப்பப்
பயங்கொண் டிரிந்தே பரன்சேர் குவட்டுற்
றெல்லாரு முக்கட் கருங்கண் டனைக்கண்
டெழில்கொண்ட துதிசெய்ய விருநஞ் சயின்றான்.

305\. கன்மா திடங்கொண்ட கங்காள னின்னும்
கடைமின்க ளமுதங்க ணெழுமென்று கழற
முன்மான வேகிக் கடைந்தார்க ளும்பல்
முகத்தானை வழிபாடு முன்னஞ்செய் தில்லார்
பொன்மேரு மத்தங் குலைந்தே கடற்குட்
புகுந்திட்ட தவனைப் புகழ்ந்தா தரிப்ப
மின்மாக நீள்வெற் பெழுந்திட்ட தெழலும்
மிகுமின் படைந்தே மிடைந்தே கடைந்தார். ௩0௫

மான். அளிப்பான் - பாதுகாப்பான். அன்னானிடத்தில் - அச்சிவபிரானிடம்.

304\. அல் - இருள். கண்டன் - திருக்கழுத்தையுடையவர். இமையோர்களும் அவுணரும். கல்லோலம் - அலைகள். கீரம் ஆர் அக்கடலை - பால் நிறைந்த அந்தக் கடலை; திருப்பாற்கடலை. ஆலம் - ஆலகாலவிடம். பிறப்ப - தோன்ற. இரிந்தே - கெட்டு ஓடி. பரன்சேர் குவடு - கயிலை. இரு நஞ்சு அயின்றான் - கரிய ஆலகால விடத்தை உண்டருளினான்.

305\. கல்மாது - பார்வதி கங்காளன் - முழு என்பை அணிந்த சிவபெருமான். அமுது அங்கண் எழும். முன் மான - முன்பு போல. உம்பல் முகத்தானை - விநாயகக் கடவுளை. மேருவாகிய மத்து. அவனை - விநாயகரை. ஆதரிப்ப - அன்பு செய்ய. மின் மாகம் நீள் வெற்பு - வானளவும் உயர்ந்து மின்னும் மேருமலை. மிடைந்தே - நெருங்கி.

306. கடைகின்ற பொழுதின்ப வமுதங்க ணெழலும்
கண்டண்டர் திண்டான வக்கையர் சூழா
அடைகின்ற வமுதிங் கெமக்கே யெமக்கென்
றடலோடு பொரமுன்ன வப்போதி லப்போர்
கெடவுன்னி யெழின்மேவு முருமாய னொருமோ
கினியாகி வந்தின்ன கேண்மின்க ளென்று
மிடைகின்ற திரைவேலை யமுதோவி யானோ
வேண்டுற்ற திவணென்ன வெய்யோ ரிசைப்பார்.

307. எங்கட்கு நீயென் றுரைத்தார் விரைத்தார்
இமையோர்க ளமுதெங்க ளிடமாக வென்றார்
சங்குற்ற கையானை வெய்யோர்கள் கொண்டோர்
சார்நண்ண வென்மேனி தழுவற்கு வல்லார்
இங்குற்று ளார்தம்மி லாரென்ன வப்போ
தியானென்றி யானென் றிரும்போர் புரிந்தே
மங்குற் றொழிந்தார்க ளவர்தம்மி லிருவோர்
வானோரு ளவர்போல வடிவுற் றடைந்தார். ௧௦௭

308. விண்ணோர்க ணரிநண்ணி யமுதங் களிப்ப
வெய்யோர்கள் கடிதுண்ண வதுகண்டு விறல்சேர்
தண்ணோவின் மதிசெய்ய கதிர்கண் டரிக்குத்
தங்கண்கொ டோதத் தடச்சட்டு வங்கொண்

---

306. இன்ப அமுது அங்கண் எழலும். அண்டரும் தானவக் கையரும் சூழ்ந்து; கையர் - வஞ்சகர். பொர முன்ன - தமக்குள் போராட முயல. மாயன் - திருமால். மிடைகின்ற - செறிந்திருக்கின்ற. அமுதமோ நானோ யாது வேண்டும்? வெய்யோர் - அசுரர்.

307. அசுரர் மோகினியையும் அமரர் அமுதத்தையும் விரும்பினார்கள். மங்குற்று - அழிந்து. வானோருள் அவர் போல வடிவுற்று - தேவர்களுக்குள்ளே அவர்களைப் போலக் கோலங்கொண்டு.

308. விண்ணோர்கண் அரி நண்ணி - தேவர்களிடத்தில் திருமால் வந்து. அமுது அங்கு அளிப்ப. வெய்யோர்கள் - அங்கே வந்த இரண்டு அசுரர்களும். தண் ஓவில் மதி செய்ய கதிர் கண்டு - குளிர்ச்சி நீங்குதலில்லாத சந்திரனும் சிவந்த கிரணங்களை உடைய சூரியனும் கண்டு. அரிக்குத் தம் கண் கொடு ஓத - திருமாலுக்குத் தம்முடைய கண்ணால் குறிப்பாகப் புலப்படுத்த. தடச் சட்டுவம் - விசாலமான

டுண்ணேவ முடிதள்ளி யமுதுண்ட நீரால்
உயர்கோளி னிலைநல்க வுவர்நாக மாகி
விண்ணேடு சசிதன்னை யென்றாழை முன்சொல்
வஞ்சத்தி ஞல்வான மீதே மறைப்பார். கO அ

309. அறைகின்ற விவைநிற்க வமுதம் பகிர்ந்தே
அணிமா துருக்கொண்ட வடன்மாய னுறலும்
கறைதுன்று கண்டத்த னவன்முன்னர் வந்தே
கலவித் தொழில்செய்தல் கருதுற் றழைப்ப
முறையன் றெனுமாய னிசையாது நிற்ப
முரனே டவற்பற்ற முன்னிச்செல் போதில்
நறைமன்னு துளவண்ண லோடத் தொடர்ந்தே
நம்பன் பிடித்தோ ரிடத்தெய்தி ஞல். கOகூ

310. எங்கோனு மாலும் புணர்ந்தார்க ளப்போ
தெழிலோ டுதித்தா னிருங்கொற்ற வையன்
சங்கோ வெனுங்கந்த ரத்தைய லவனுன்
றனையாள்வ னென்றச் சயத்தோனை முன்ன

அகப்பையினல். முடி தள்ளி - தலைகளைத் துணித்து. அமுதை உண்ட தன்மையால் அவர்களுக்கு நவக்கிரங்களில் இரண்டாக இருக்கும் பதவியைத் திருமால் அளித்தார்; கோள் - கிரகம். உவர் - வெறுப்பதற்குரிய. நாகம் - பாம்பு. விண் ஓடு சசி தன்னை - வானத்தில் ஓடுகின்ற சந்திரனை. என்றாழை - சூரியனை. வஞ்சத்திஞல் - தம்மைக் காட்டிக் கொடுத்தார் என்ற வஞ்ச வுணர்ச்சியினல். (பி - ம்.) வெஞ்சத்திஞல்.

ராகு சந்திரனையும் கேது சூரியனையும் கிரகண காலங்களில் மறைப்பர்.

309. பகிர்ந்தே - பங்கிட்டுக் கொடுத்து. கறை துன்னு கண்டத்தன் - நீலகண்டன். கலவித் தொழில் - புணர்தல். முரனேடு அவற்பற்ற முன்னி - வலிமையோடு அத்திருமாலைப் பற்ற எண்ணி. நறை - தேன். துளவு அண்ணல் - துளவ மாலையை அணிந்த திருமால்.

310. ஐயன் - சாத்தன்; அரிஹர புத்திரன். சங்கை ஒத்த கழுத்தையுடைய பெண்ணே; என்றது இந்திரன் இந்திராணியை விளித்தது. அச் சயத்தோனை முன்ன - அந்த வெற்றியையுடைய சாஸ்தாவை நினைக்க. மனையாளை - இந்திராணியை. அரணுக - பாதுகாப்

அங்கோர் கணத்தெய்த மனையாளை யனையான்
அரனாக வைத்துந்து திரனாக ரோடும்
பொங்கோத வேலைக் கடுக்கொண்ட கண்டப்
புனிதன் பொருப்பிற் பொருக்கென் றடைந்தான்.

311. இன்பான கயிலாய சயிலத் தடைந்தே
எம்மானி யோகத் திருக்குந் திறத்தால்
அன்பாக வேகாண வில்லாது பன்னாள்
அருணந்தி தலைவாச லதின்மேவு நாளின்
வன்பாவ வடிவான மறிமா முகத்தாள்
வளர்துன் முகங்கொண்ட மடமாதி னோடும்
பொன்பாவு சசிநற் றவஞ்செய் திருந்த
புகழ்மேவு காழிப் பொழிற்பா லடைந்தாள். கககக

312. மாணான வெழில்கொண்ட விளையோரை நாடி
வலிதே புணர்ந்தேகு மறிமா முகத்தாள்
சேணான பொழிலூடு சசியைத் தெரிந்தே
திறல்கொண்ட சூரோடு சேர்தற் கழைப்பப்
பூணார் பெருங்கொங்கை மடவாண் மறுத்தே
புகனீதி யலவீது போவென் றிசைப்ப
ஏணான வலியோடு வலிதே பிடித்தே
இடரோடு மவளோல மிடவே படர்ந்தாள். ககஉ

பாக இருக்க. நாகரோடும - தேவர்களோடும். ஓதம் - குளிர்ச்சி. வேலைக்கடு - கடலில் எழுந்த விடம். பொருப்பு - கைலை.

311. சயிலம் - மலை. அருள் நந்தி தலைவாசல் - அருளையுடைய நந்தியெம்பெருமான் காவல் புரியும் முதல் வாசல். மறிமுகத்தாள் - அசமுகி. துன்முகங்கொண்ட மடமாது - துன்முகி. சசி - இந்திராணி. மாதினோடு அடைந்தாள்.

312. மாண் ஆன - மாட்சியை உடைய. மறிமுகத்தாள் - அசமுகி. சேண் - உயரம். சூரோடு சேர்தற்கு அழைப்ப - சூரபதுமனுடன் சேர்ந்திருப்பதற்காக இந்திராணியை அழைக்க. ஏண் ஆன வலி - மிக்க வலி ; ஏண் - வலிமை.

313. பாகுற்ற மொழிதன்னை யசமா முகத்தாள்
பற்றிப் படர்ந்திடலு மையன்ற னாளாய்
வாகுற்ற சசியைப் புரந்திட்ட வீர
மாகாளர் போகாது நில்லென்று சொல்லிக்
காகத்தை நேரான வாகத்தி னாண்முன்
கடிதேக வவளுங் கறுத்தே திரும்பி
வாகைப் புயங்கொண்ட வீரன்ற னேரே
வலியோடு மொருசூல வைவேல் விடுத்தாள். ௧௧௩

314. வன்புற்ற சூலத்தை வாள்கொண்டு வீரன்
வலியோடு மிருதுண்ட மருவத் துணிப்ப
முன்புற்ற வறிவற்ற மறிவத் திரத்தாள்
முரணாற் றிடுந்துன் முகத்தாள் கரத்திற்
கொன்பெற்ற சூலங்கொண் டயிராணி தனையக்
கொடியா ணெடுங்கைக் கொடுத்தே யெதிர்ந்தே
இன்புற்ற மார்பூடு தைக்கச் செலுத்த
எழில்கொண்ட வாள்கொண்டெறிந்தே துணித்தான்.

315. உந்துற்ற வொருசூல மிருதுண்ட மாக
ஒருவாத வொருவெற் புரத்தோடு கொண்டே
மைந்துற்ற வீரன்ற னேரே விடுப்ப
வலிகொண்ட வாள்கொண்டு வருகின்ற குன்றம்
சிந்துற்று வீழத் தடிந்திட்ட போதிற்
சீர்கொண்ட வாளுஞ் சிதைந்திட்ட தம்மா
முந்துற்ற வயிராணி தன்னைப் பிடித்தே
முன்போ னடந்தாண் முரண்கொண்ட வெய்யாள்.

---

313. பாகு உற்ற மொழி தன்னை - பாகு போன்ற இனிய வார்த்தைகளையுடைய இந்திராணியை. ஐயன்தன் ஆளாய் - சாத்தனுடைய ஏவலாளாகி. வாகு - அழகு. காகத்தை நேரான ஆகத்தினாள் - காக்கையைப போன்ற கரிய நிறமுடைய அசமுகி. கறுத்து - கோபித்து. சூலம் வை வேல் - கூர்மையான சூலாயுதம்.

314. வன்பு - வலிமை. துணிபப - வெட்ட. மறிவத்திரத்தாள் - அசமுகி; வத்திரம் = வக்தரம் - முகம். அக்கொடியாள் - துன்முகி.

315. ஒருவாத - நீங்காத. உரத்தோடு - வலிமையோடு. வாள் - வீரமாகாளரது வாள். முரண் - வலிமை.

316. அப்போது மாகாளர் கடிதேகி யவடன்
அணியுற்ற வளகத்தை யடலோடு பற்றித்
துப்போடு முடைவாள் பிடித்தோர் கரத்தைத்
துண்டம் படுத்தித் துலங்குற்ற மாதை
மெய்ப்போடு விடுவித் தடற்றுன் முகத்தாள்
வீறுங் கரத்தொன்று வீழத் துணித்துச்
செப்போடு நிகர்கொங்கை யவண்மண்ணில் வீழச்
சீர்கொண்ட தாள்கொண்டு திறலோ னுதைத்தான்.

317. கரந்தா னிழந்திட்ட சூர்தங்கை சோரிக்
கடலோடு படிமீது கடிதே விழுந்தே
வருந்தா வரற்று மருண்டா ளுருண்டாள்
வயமுற்ற வுரையங்கண் வரையற்ற சொற்றாள்
அருந்தார் நெருங்குங் குழற்றுன் முகத்தாள்
அதுகண்டு பலபுந்தி யறையத் தெளிந்தே
திருந்தார் வணங்குங் கழற்சூர னேரே
சேரற் குளங்கொண்டு தென்பா னடந்தாள். ௧௧௭

318. எண்ணார் வழுத்துந் திறல்கொண்ட வீரன்
எழில்கொண்ட வயிராணி யெனுமாது தன்னைத்
தண்ணாரு மருளோடு வதனந் தெரிந்தே
தகுவர்க்கு நெஞ்சூடு சற்றேனு மஞ்சேல்
கண்ணா யிரங்கொண்ட விண்ணாட ரண்ணல்
கவினுற்ற வுனைமேவு காறும் புரப்பன்
பண்ணாரு மொழியிங்கு னுறைகென்று போகப்
பண்டென்ன வவளும் பரிந்தே யிருந்தாள். ௧௧அ

---

316. அளகத்தை - கூந்தலை. துப்பு - வலிமை. ஒரு கையை வெட்டி. மாதை - இந்திராணியை. கொங்கையவள் - அசமுகி.

317. சூர்தங்கை - அசமுகி. சோரி - இரத்தம். படிமீது - நிலத்தின்மேல். வயமுற்ற உரை - கோபத்தால் பலமான சொற்களை. தார் - மாலை. திருந்தார் - பகைவர்.

318. எண்ணார் - பகைவர். வீரன் - வீரமாகாளர். வதனம் தெரிந்தே - முகத்தை நோக்கி. தகுவர்க்கு - அசுரர்களுக்கு. அண்ணல் - தலைவன்; இந்திரன். மேவுகாறும் - அடையும்வரைக்கும். பண்

319. மேவுற்ற விதுதன்னை யருணா ரதன்போய்
வெள்ளிப் பொருப்பில் விருப்போடு விண்ணோர்
தேவுற் றுழிச்சென் றுரைப்பக் கலங்கிச்
சேணுற்ற விமையோர்க டிரளோடு காழிக்
காவுற்று மாகாள னைக்கண்டு புல்லிக்
கவின்மாதி னொடுமேரு வரையிற் கலந்தான்
பாவுற்ற படரோடு கரமற்ற மடவார்
பதகேச னரசாளு நகரிற் படர்ந்தார். ௧௧௯

320. அங்குற்ற போர்கண்டு மறிமா முகத்தாள்
அணியுற்ற கரமா ரறுத்தார்க ளென்றே
பொங்குற்ற டலவான வெண்ணங்க ளெண்ணப்
பொற்புற்ற சூருற்ற பொற்கோயி லுட்போய்த்
தங்குற்ற வவையிற் புரண்டே புலம்பித்
தகர்போல வதனந் தரித்தா ளரற்றக்
கொங்குற்ற மாலைப் புயச்சூர் தெரிந்தே
கூறார் கரத்தைக் குறைத்தார்க ளென்றான். ௧௨௦

321. ஆடான முகமுற்ற கொடியா ளுரைப்பாள்
அயிராணி புவியூ டமர்ந்தா ளுனக்கென்
றீடாக வேபற்றி வருபோது மகவான்
ஏவல் புரிந்தே யிருந்திட்ட வொருவன்

ஆரும் மொழி - பண்ணை ஒத்த மொழியை உடையாய். பரிநதே - அன்புற்று.

319. வெள்ளிப பொருபபில் - கைலாச மலையில். கா - நந்தவனம். பாவுற்ற படரோடு - பரவிய துன்பத்தோடு. கரம் அற்ற மடவார் - அசமுகியும் துன்முகியும் பதகேசன் - பாதகங்களைச் செய்வதில் தலைவனாகிய சூரன். நகர் - மகேந்திரபுரி.

320. பொங்குற்ற - கோபத்தோடு எழும். தகர்போல வதனம் தரித்தாள் - அசமுகி. கொங்கு - வாசனை. கூறு - சொல்வாயாக.

321. உனக்கு என்று ஈடு ஆகவே - உன்னுடைய இன்ப நுகர்ச்சிக்கு என்று ஒபபாக எண்ணி ; ஈடு - பெருமையுமாம் மகவான் - இந்திரன். பாடு ஆக - துன்பம் உண்டாகும்படியாக. பாணி - கையை.

பாடாக வென்பாணி கொய்தா னெனச்சூர்
பயமுற்ற முகிலூர்தி பணிசெய்யு மவனோ
நாடாம லிவர்கைத் தலத்தைத் துணிப்பான்
நன்றென்று விண்ணோர் நடுங்கச் சினந்தான். கஉக

322. அப்போது மகனாகி யுறுபானு கோபன்
அடலோ டெழுந்தே யவன்றாள் பணிந்தே
மெய்ப்பான* மகவானை யயிராணி தன்னை
விண்ணோரை யெல்லாம் விரைந்தே பிடித்திங்
கிப்போதி லிவண்மீள்வன் விடுகென்ன வன்னான்
ஏவத்த னாதான விற்பா லடைந்தான்
மைப்பாவு கடுவன்ன சூரொற்ற ரோடு
மலர்வேத னைக்கொண்டு வம்மின்க ளென்றான். கஉஉ

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

323. என்றிட வயனை நாடி யேகியே கொடுவந் துய்ப்பத்
துன்றுசீ ரிவர்தங் கையைத் தொன்மைபோற் புரிதி யென்றான்
மன்றல்சேர் வனச மேலோன் மற்றிவர் கரங்கள் வல்லே
நன்றுற வளர்க வென்று நவின்றிட வளர்ந்த வன்றே.

324. அங்கது சூரன் காணூஉ வயன்றனை மகிழ்ந்தே யூரில்
தங்கையையிருப்பச்செய்துதடங்கொடுன்முகத்தினாளைச்
செங்கதிர்ப் பகைவ னோடு சென்றிட விடுத்துப் பின்னர்ப்
பொங்குசீ ரொற்றர் தம்மோ டினையன புகல லுற்றான்.

முகில் ஊர்தி - இந்திரன். நாடாமல் - மேல் விளைவு இன்னதென்று ஆராயாமல்.

322. மகவானை-இந்திரனையும். அன்னான் ஏவ - சூரன் விடுக்க. இல்பால் - வீட்டை. மலர்வேதனை - பிரமதேவனை.

323. அயன் - பிரமன். உய்ப்ப - விட. வனசமேலோன் - பிரமன்; வனசம் - தாமரை.

324. காணூஉ - கண்டு. ஊரில் - தன்னுடைய நகரமாகிய மகேந்திரபுரியில். செங்கதிர்ப் பகைவனோடு - பானுகோபனோடு.

325. வெற்றிகொ ளருக்க னாதி விண்ணகத் தலைவ ராரும்
சுற்றியே திரிவோர் தம்மைத் துண்ணெனக் கொணர்தி யென்ன
மற்றவர் கொடுவெந் துய்ப்ப மறமுகி கரமோர் வீரன்
இற்றிடத் தடி தனைக்கி யிருந்ததி தலனியும் மென்றான்.

326. என்றிட வனையர் சொல்வா ரெங்கணம் பரத்தின் மீது
சென்றதீ தறியோ மென்னச் சீறியே சிறையிற் சேர்த்தித்
துன்றிய கால்க டம்மைத் துண்ணெனக் கொணர்தி ரென்ன
வன்றிறற் றாத ரேகி மற்றவர்க் கொடுவெந் துய்த்தார்.

327. தானவ னவரைச் சீறித் தகர்முகி தனது கையை
ஈனமி லொருவன் வாளா லெறிதல்கண் டிருந்தீ ரென்றே
ஊனமார்சிறையிற் சேர்த்தியொற்றரைத்தரணிகாக்கும்
மானவர் தம்மைக் கொண்டு வம்மினென் றுரைத்தான் மன்னோ.

328. எண்டவி ரவரையுய்ப்ப வெங்கைதன் செங்கை துண்டம்
கண்டன னொருவ னீவிர் காத்தவா நன்றென் றோதித்
துண்டமாமதனைத்தாளைத்தோளினைத்துணிப்பித்தின்ன
தண்டமங் கியற்றிச் சூரன் றவிசினு மெழுந்தா னன்றே.

329. எழுந்துதன் மருங்கு நின்ற விளையளை விடுத்துச் செங்தேன்
பொழிந்திடு கமலத் தோனைப் போகெனச் சிறையாந் துன்பத்

---

325. அருக்கன் - சூரியன். துண்ணென - விரைவில்; அவர்கள் நடுங்க எனலுமாம. இற்றிட - துண்டாகும்படி.

326. எம் கண் அம்பரத்தின்மீது சென்றது-எம்முடைய கண்கள் ஆகாயத்தின் மேலே சென்றன. கால்கள் தம்மை - பலவகைக் காற்றுக்களை; கொண்டல், கோடை, வாடை, தென்றல் என நான்காதலின் பன்மையாற் கூறினன்.

327. தகர்முகி - அசமுகி. தரணி காக்கும் மானவர் - பூவுலகைப் பாதுகாக்கும் அரசர்.

328. எண் தவிர் அவரை - கணக்கில்லாத மன்னரை. துண்டம் கண்டனன் - வெட்டினன். காத்தவா - பாதுகாத்தவாறு. துண்டமாம் அதனை - மூக்கை. தண்டம் - தண்டனை. தவிசினும் - சிங்காதனத்தினின்றும்.

தழுந்துவா னவரை விட்டிங் கருளென விரப்ப விட்டுச்
செழுந்திதி யனைய ரெல்லாஞ் செய்திடப் பணித்தான் றீயோன்.

330. அன்னது பின்னர் மைந்த ரமைச்சர்கண் முனிவரானோர்
துன்னுறு படைஞர்க் கெல்லாஞ் சூர்விடை கொடுத்துப் போனான்
இன்னது நிற்க முன்ன ரெழுந்துதன் மனையிற் சென்ற
கொன்னுறு பானு கோபன் செயலினைக் கூற லுற்றாம்.

331. நீடுபல் படைகள் சூழ நெடியதோ ரிரத மேறிக்
கூடுதுன் முகத்தாள் காட்டக் குறைவில்சீர்ப் புகலி மேவித்
தேடினன் மகவான்மாதைத்தெரிந்திலன்புவனியாண்டும்
நாடினன் காணா னாகி நாகமேற் சென்றா னன்றே. ௧௩௧

332. சண்டவெங் கிரணப் புத்தே டனைச்சிறை பிணித்த தீயோன்
அண்டிய தண்டர் காணா வருந்துயர் பொருந்தி யேங்கி
யண்டுசீர்ச் சயந்தன் முன்போய் மற்றிதை யுரைத்த லோடும்
கொண்டலூர் குரிசின் மைந்தன் கொண்டன னுளத்திவ் வாறே.

333. தந்தையு மில்லை பெற்ற தாயிலை குரவ னான
எந்தையு மில்லை செய்வ தென்னென விதயத் துன்னி
முந்தையில் விதியை யாரே முடித்திட வல்லா ரீண்டு
வந்தது வருக வென்னா வானவ ரோடும் போனான். ௧௩௩

334. வெள்ளைவா ரணத்தின் மீதே விண்ணர சாளு மண்ணல்
பிள்ளைவா னவர்கள் சூழப் பெருஞ்செருப் புரிவா னெண்ணிக்

---

329. மருங்கு - பக்கத்தில். இளையளை - அசமுகியை. இரப்ப - பிரமன் யாசிக்க. (பி - ம்) சென்றிடப் பணித்தான்.

331. புகலி - சீகாழி. மகவான் மாதை - இந்திராணியை. புவனி யாண்டும் - உலகம் எங்கும். நாகமேல் - தேவலோகத்திற்கு.

332. சண்ட வெம் கிரணம் புத்தேள் தனை - வெம்மையையுடைய கிரணங்களை வீசும் சூரியனை. தீயோன் - பானுகோபன். அண்டியது - வந்ததை. கொண்டல் ஊர் குரிசில் - இந்திரன்.

333. குரவன் - பிரகஸ்பதி. முந்தையில் விதியை - முன்பே விதிக்கப்பெற்ற ஊழ்வினையை.

334. வெள்ளைவாரணம் - ஐராவதம். செரு - போர். கொள்ளை - மிகுதி. எள் இல் - இகழ்தல் இல்லாத. எதிர்ந்து - எதிர் நின்று.

கொள்ளையா மவுணர் நேரே குறுகலு மவுணர் தாமும்
எள்ளில்சி ரிமையோர் தாமு மெதிர்ந்தம ரியற்றி ஞரால்.

335. மண்டிரு திறத்தி ஞேரும் வன்சமர் புரிந்த காலை
அண்டர்க ளுடைந்தே யோட வவுணர்க டொடர்ந்து பற்றிப்
புண்டரு கயிற்று லன்னார் புயம்பிணித் தகல வீது
கண்டனன்வெகுண்டான்வெள்ளைக் கயந்தனிற்சயந்தனென்பான்.

336. கைத்தனு வளைத்துத் தீய கணையெனு மழைபொ ழிந்து
பத்தின்மேற் றெண்ணூ றுற்ற படைவெள்ளம் விள்ளச் சிந்தி
மெத்திய தலைவர் தம்மை வென்றிகொண் டிடச்சூர் மைந்தன்
அத்தொழில் கண்டு நேர்வந் தடுசர மாரி தூர்த்தான்.

337. இந்திர குமரன் காணு வெண்ணில்கோ றுரந்து நீக்கி
வந்தவன் விசிக மாரி விடவிட வதனுன் மாற்றி
அந்தமில் வன்மை கொண்ட வாயிரங் கணைகள் சிந்திச்
சிந்தின னவுண னேந்துஞ் சிலைப்பெரு நாணி தன்னை.

338. நல்லதோர் நாணி போக நாணியோர் நாணி விற்கொண்
டொல்லையா யிரங்கோல் சிந்தி யுரந்திகழ் சயந்தன் மீதே
வல்லையி லழுத்த வன்னுன் வாளியா யிரநேர் தூண்டிச்
சில்லியந் தேரு மாவுஞ் சிதைத்தனன் றேவர் துள்ள.

---

335. சமர் - போர். அண்டர்கள் - தேவர்கள். உடைந்து - தோல்வியடைந்து. புயம் பிணித்து அகல - தோள்களைக் கட்டிக் கைக் கொண்டு செல்ல. வெள்ளைக்கயம் - ஐராவதம்.

336. தனு - வில். விள்ள - ஓடும்படியாக. சரமாரி - அம்பாகிய மழையை. தூர்த்தான் - விட்டான்.

337. கோல் துரந்து - அம்புகளை எய்து. நீக்கி - பானுகோபன் விட்ட அம்புகளை விலக்கி. விசிக மாரி - அம்பு மழை. மாற்றி - விலக்கி. நாணி - நாண் கயிறு.

338. நாணி ஓர் நாணி வில் கொண்டு-பானுகோபன் நாணத்தை அடைந்து வேறொரு நாணைத் தன் வில்லில் ஏற்றிக்கொண்டு. ஒல்லை - விரைவில். கோல் - அம்பு. உரம் - வலிமை. வல்லையில் - விரைவாக. அழுத்த - பதியும்படி செய்ய. சில்லி - சக்கரம். மாவும் - குதிரைகளையும்.

339\. மற்றொரு தேரில் வாவி வஞ்சகன் சிலையைக் கோட்டி
அற்றமில் சரங்க டாநூ றாயிரங் கோடி தூண்டி
வெற்றிசேர் மகவான் மைந்தன் மெய்யெலா மழுத்த நொந்து
சற்றுமங் கறிவி லாது தந்திமேற் சயந்தன் வீழ்ந்தான்.

340\. வீறிய மகவான் மைந்தன் வீழ்தலும் வெள்ளைத் தந்தி
சீறியொன் னலன்றேர் பாய்ந்து சிதைத்தவ னுரத்தின் மீதே
கோறுநாற் கோட்டி னாலுங் குத்தலுங் கோடு நாலும்
வேறுவே றொடிந்து வல்லே மேதினி விழுந்த வன்றே.

341\. கையுடைத் தவள மேருக் கவுளிடைப் பாணி கொண்டு
வெய்யவ னடிப்ப நொந்து வீழ்ந்தது சயந்தன் றன்னைச்
சையமே யனைய மொய்ம்பிற் றானவர் சுற்றிப் பற்றி
மையல்சேர் கயிற்றாற் கட்டி வானவ ரோடுஞ் சேர்த்தார்.

342\. அங்கது பின்ன ரன்ன வாடகத் துலகத் துற்ற
மங்கையர் தம்மை யேனை வானவர் தம்மை யெல்லாம்
பொங்குசீ ரவுணர் பற்றிப்புயங்களைக் கயிற்றால் வீக்கித்
துங்கவா னகரைத் தீயாற் சுட்டனர் தூளி யாக. கசஉ

343\. இன்னதுநிகழ்ந்தபின்ன ரிரவியைத்தளைந்தவெய்யோன்
தன்னுள மகிழ்ச்சி யோடுந் தானவத் தானை யோடும்

339\. வாவி - தாவி ஏறி. வஞ்சகன் சிலையைக் கோட்டி - பானுகோபனுனவன் வில்லை வளைத்து. அற்றம் இல் - சோர்வில்லாத.

340\. ஒன்னலன் - பகைவன். கோறு நால் கோட்டினாலும் - கொலையைச் செய்கின்ற நான்கு கொம்புகளாலும். கோறு: கொல் என்பதன் அடியாகப் பிறந்த தொழிற் பெயர். ஐராவதம் நான்கு கொம்புகளை உடையது.

341\. துதிக்கையையுடைய வெள்ளையான மேருவைப் போன்ற ஐராவதத்தின் கன்னத்தில். பாணிகொண்டு - கையினால். மொய்ம்பின் - தோளை. மையல் சேர் - மயக்கத்தை உண்டாக்குகின்ற.

342\. ஆடகத்து உலகத்து உற்ற - பொன்னுடாகிய சுவர்க்க லோகத்தில் இருந்த. வீக்கி - கட்டி. வான்நகரை - அமராவதியை. தூளி - பொடி.

மன்னிய புவியின் மேவி மகேந்திர மூதூ ருற்றுக்
கொன்னுறு தந்தை மேவு கோயிலுட் போயி னானல்.

344. தந்தையை வணங்கி நின்று சசியெனு மடந்தை யோடும்
இந்திரன் றனையுங் காணே னேனைய வானோர் தம்மை
உந்துசீர்ச் சயந்தன்றன்னை யொல்லைகொண் டேற்றே னூரைச்
செந்தழற் கீந்தே னென்னத் திருமகற் றழுவிக் கொண்டான்.

345. புல்லியே தங்கை காணப் போந்திடு சயந்த னாதி
எல்லவர் தமக்குந் தண்ட மியற்றுவித் தவரை யெல்லாம்
வல்லிசேர்சிறைசேர்வித்து மைந்தனைமனையிற்போகென்
றொல்லையில் விடுத்துச் சூர னுறைபுளிற்சென்றானன்றே.

346. ஆலமுங் கால வேலு மடுங்கொடுங் கணையும் வாளும்
நீலமு மானு மானு நெடுவிழி யரம்பை மாதர்
சாலவுங் கொடிய ரான தகுவர்தம் பணிக ளாற்றிச்
சீலமுந் தவமு மில்லாத் தீயசூர் நகரி லுற்றார். கசசு

347. இன்னவை நிற்க முன்ன மிரணிய வுலகந் தன்னிற்
கன்னவில் குவவுத் திண்டோட் கதிர்ப்பகை புடைப்ப வீழ்ந்த
மன்னெடுங் கரிவெண் காட்டு வரதனை யருச்சித் தேத்திப்
பொன்னுறு கோடி நாளும் பொருந்தியாங் கிருந்த தன்றே.

---

343. இரவியைத் தளைந்த வெய்யோன் - பானுகோபன்.

344. சசி - இந்திராணி. ஊரை - தேவர்கள் ஊரை.

345. தங்கை - அசமுகி. தண்டம் இயற்றுவித்து - தண்டனை செய்யும்படி செய்து. வல்லி - விலங்கு. உறைபுளில் - இருப்பிடத்திற்கு.

346. ஆலமும் - விடமும். காலவேலும் - காலனது ஆயுதமும். நீலமும் - குவளைமலரும். மானும் நெடுவிழி - ஒக்கும் நீண்ட கண்களையுடைய. பணிகள் - குற்றேவல்களை. சீலம் - ஒழுக்கம்.

347. இரணிய உலகம் - பொன்னுலகம்; தேவலோகம். குவவுத் திண்டோள் - குவிந்த திண்ணிய தோள். கதிர்ப்பகை - பானுகோபன். கரி - ஐராவதம். வெண்காட்டு வரதனை - திருவெண்காடு என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை.

348. ஈதறிந் திடரின் மூழ்கி யிந்திரன் றவஞ்செய் கின்ற
தாதிய தாக வாதி யறுமுக னுதித்த தீரு
ஓதிய வடைவி னோடு மொளிதரு வியாழப் புத்தேள்
கோதிலா வமரர் போற்றுங் குமரவேண் முன்னஞ் சொன்னான்.

மூன்றாவது
மகேந்திர காண்டம்

349. சொன்னவையனைத்துங்கேட்டுத்துலங்கியவருளினீரால்
ஒன்னலன் றனது மாட்டோ ரொற்றனை விடுப்பா மென்றே
மன்னிய புகழ்ச்சி வீர வாகுவை யருளா னோக்கி
என்னையா ளுடைய செவ்வே ளினையன விளம்ப லுற்றான்.

350. நாட்டிய புகழ்ச்சூர் முன்போய் நாகர்தஞ் சிறையை நீக்கி
வாட்டமி லறத்தில் வாழ்தி மறுத்தியேல் வந்து நாளை
வீட்டுவ நாமென் றோதி மீள்கென வீர வீரன்
தாட்டுணைபணிந்துவேலோன் றனைவிடை கொண்டு போனான்.

351. பெற்றசீர்க் குலிச வேலோன் பின்புபோ யும்ப ரோடும்
செற்றவெஞ்சூர னூரிற்சிறையிடைச்சயந்தனென்போன்

---

348. அடைவினோடு - வரிசையாக. வியாழப்புத்தேள் - பிருகஸ்பதி. இந்திரன் தவம் செய்தது முதல் முருகக்கடவுள் திருவவதாரம் செய்தது வரையில் முறையே பிருகஸ்பதி முருகபிரானிடம் சொன்னான்.

349. அருளின் நீரால் - கருணையாகிய இயல்பினால்; இன்: வேண்டாவழிச் சாரியை. ஒன்னலன் - சூரன்.

350. சூர் - சூரன். நாகர் தம் சிறையை நீக்கி - தேவர்களுடைய சிறையை விடுவித்து. அறத்தில் வாழ்தி - அறநெறியிலே செயல் புரிந்து வாழ்வாயாக. வீட்டுவம் - கொல்வேம். வீரவீரன் - வீரவாகு தேவர்.

351. குலிசவேலோன் - வச்சிராயுதத்தையுடைய இந்திரன். பின்பு போய் - வீரவாகுதேவருக்குப் பின்னாலே போய். செற்றம் - கோபம். குயிற்றுதல் - செய்தல்.

உற்றன னவன்பா லெய்தி யுளந்தனை யுவந்து தேற்றிக்
கொற்றநின் செயலைப் பின்னர்க் குயிற்றுதல் வேண்டுமென்றான்.

352. அங்கதற் கிசைவு கொண்டே யவன்றனை நிறுவி வீரம்
பொங்குதம் பியர்க டம்மைப் பூதமன் னரைநி றுத்தித்
துங்கவெண் டிரைசே ராழித் தூயதண் கரையின் மேவி
மங்குறா துயர்ந்த கந்த மாதனக் குவடு சேர்ந்தான். ச

353. அங்கதன் மீதி லேறி யவுணனூர்க் கடைவா னீட்சி
தங்குமோர் வடிவங் கொள்ளத் தடவரை பொருது தாழ்ந்து
பொங்குசீர்ப் பிலத்தி னூடு போயதெவ் வுலகுஞ் சூரன்
துங்கவா ணகருங் கண்டான் சுடர்விடு வடிவாள் வீரன்.

354. அண்டர்சூழ் குமர வேளை யன்புடன் றொழுது போற்றித்
துண்டவெண் பிறையான் மைந்தன் றொல்லுரு வமைந்து
கண்டக னூரை நாடிக் ககனமா நெறியூ டேகிப் [சூராம்
பண்டுபோ லெழுதி யென்ன வெழுந்தது படிந்த குன்றம்.

355. சென்றிடு வீரன் சூரன் றிருநகர் வடாது பாங்கர்
வன்றிறல் படைத்த யாளி மாமுகத் தவுணன் போற்றும்
வென்றிகொ ளிலங்கை யான வியனகர்க் கணிய னுன்
அன்றவன் சூரற் காண வனிகமோ டகன்று னன்றே.

356. அங்கவன் றனது மைந்த னுயிர வெள்ள மான
துங்கவெம் படையி னோடுந் துலங்கதி வீர னென்போன்

---

352. நிறுவி - நிறுத்தி. ஆழி - சமுத்திரம்.

353. அடைவான் - செல்லும் பொருட்டு. தடவரை - கந்த மாதன பருவதம். பிலத்தினூடு - பாதலத்திற்குள்.

354. மைந்தன் - வீரவாகுதேவர். சூராம் கண்டகன் - சூரனாகிய கொடியோன். ககனமா நெறியூடு - ஆகாசமார்க்கமாக. எழுதி - எழுவாயாக. என்ன - என்று வீரவாகு சொல்ல.

355. யாளிமாமுகத்து அவுணன் போற்றும் - யாளிமுகன் என்னும் அசுரன் காவல் புரியும். அவன் - யாளிமுகன் அனிகமோடு - சேனையோடு.

356. யாளிமுகனுக்கு மைந்தன் அதிவீரன்.

தங்கினன் வடாது வாச றன்னிடை மன்னு வீர
சிங்கனுஞ் ஞூறு வெள்ளச் சேனையோ டிருந்தான் மாதோ.

357. கண்டனன் வீர வாகு ககனமேல் வருதல் சீற்றம்
கொண்டன னெமது காப்பிற் குறுகின னிவன்ற னுவி
உண்டிடுவேனென்றெண்ணி யுரந்தருமடங்கற்பேரோன்
மண்டிய படையி னோடு மாகமேல் வளைந்து கொண்டான்.

358. உற்றசீர் வீர வாகு வுறைகழித் தொளிர்வாள் கொண்டு
செற்றவெங் கரிக ளோடு சீயமொன் றடைந்த வாபோல்
தற்றுவந் தெதிர்ந்து போர்செய் தண்டமுந் தலைவன் றனும்
அற்றிடக் கடிது லாவி யறுத்தனன் செறுத்து மன்னோ.

359. மின்னுலாந் தனிவாள் கொண்டு வீறிவந் தெதிர்ந்து சூழ்ந்த
மன்னிலா வெயிற்றுப் பேழ்வாய் வன்மைசே ரவுணற் செற்ற
பொன்னுலா மலங்கற் றிண்டோட் பொருவிலா வீரவீரன்
கொன்னுலா மிலங்கை யென்னுங் குன்றின்மேற் குப்புற் றானே.

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

360. குப்புற் றிடுதலு மதுதன் புடையுறு
கொடுவன் றகுவர்க ளொடுதாழா
உப்புற் றிடுகடல் புகவே யவனுறை
ஒருவா விருவிற லதிவீரன்

---

357. வீரவாகு ஆகாசத்தின்மீது வருவதைக் கண்டு சினம் கொண்டான். குறுகினன் - அடைந்தான். உரந்தரு மடங்கற் பேரோன் - வீரசிங்கன். மாகம் - ஆகாசம்.

358. செற்ற - எதிர்த்த. சீயம் - சிங்கம். தற்று - சூழ்ந்து. தண்டமும் - சேனைகளும். (பி - ம்.) தற்றிவந்.

359. மன்னுகின்ற பிறையைப் போன்ற பல்லையும் ஆழமான வாயையும் வன்மையையும் உடைய. வீரவீரன் - வீரவாகு. குப்புற்றான் - குதித்தான்.

360 புடை உறு - பக்கத்தில் இருந்த. கொடு வன் தகுவர்களொடு தாழா - கொடிய வலிய அசுரர்களோடு அழுந்தி. உப்புற்றிடு

துப்புற் றிடுபடை யொடுவந் தடலொடு
சூழத் தனதொரு சுடர்வாள்கொண்
டப்புக் கடலென வுதிரம் பெருகிட
அட்டா னவர்தமை யடல்வீரன். ௧௨

361. போரா விறன்மலை கடன்மே லெழும்வகை
பின்விண் ணிடையி னெழுந்தேகிச்
சீரார் சுரர்பகை நகரத் திடைவட
திசைவாய் தலினுற அதிகோர
வீரா திபனவ ணுறு யிரமெனும்
வெள்ளப் படையொடு முறவேகண்
டோரார் கரிமுக னிளையோ னிளையவன்
இவ்வா றுரையது செய்வானால். ௧௩

362. வற்று துறுகட லெனவிங் கவுணர்கள்
மருவுற் றனர்மிக வாய்தற்பால்
உற்று லவர்பொர வருவா ரவர்தமை
ஒழியப் பொருதிடி னொழியாதே
செற்றார் வருகுவ ரவர்தங் களையடல்
செய்தற் கரிதது செய்தாலும்
சுற்று நிறைவுறு திறல்வெம் படையொடு
சூரன் சமர்செய வருவானால். ௧௪

கடல் - லவண சமுத்திரம். அப்புக் கடல் என - நீரையுடைய கடலைப் போல. வீரன் - வீரவாகுதேவர்.

361. போரா - அகலாத. விறல் - வலிமை. சுரர்பகை நகரத்திடை - தேவர்களுக்கு வைரியாகிய சூரனுடைய இராசதானியாகிய மகேந்திரபுரியில். வாய்தலின் - வாசலில். அதிகோரம் - மிக்க கோரத்தையுடைய. கரிமுகன் இளையோன் - முருகன்; அவனுக்கிளையவன், வீரவாகு.

362. வாய்தற்பால் - வாசலில். செற்றார் வருகுவர் - போர் செய்து வருவார்கள். சுற்று - சுற்றி.

363. ஆதிக் குகனவ னழியப் பொருதிடல்
அல்லா தெவரட வல்லாரென்
ருேதிக் குணதிசை வாய்தற் றனில்வளர்
உரமே வியபுய னுறுபோதில்
மேதிக் கணனெடு மாதிக் கதனிடை
வீரத் தினகரன் வடதிக்கார்
ஏதப் படைநிக ரணிகஞ் சுலவ
இருந்தா ரிருவர் தெரிந்தானே. கரு

364. பேரா விறலுறு வீரா திபனது
பின்றென் றிசைவழி பெயர்போதில்
சூரா னவனது நகர்மேல் வெளிமிசை
தோய்வோ னமர்புரி தொழில்வல்லோன்
ஓரா யிரமுக மீரா யிரமெனும்
ஒண்கைக் கசமுக வசுரன்ருன்
பாரா விவனுயி ருண்பே னெனவெதிர்
படவந் தனனிது பயில்கின்ருன். கசு

365. வீரு மொருகிரி பறியா மிடலொடு
விடவே வளர்புய மிசைபட்டே
நீரு யதுதச நூரு மலேவிட
நிமலன் றிருவுரு நிலைமேவி

---

363. குகன் பொருதிடல் அல்லாது. அட - கொல்ல. குண திசை வாய்தற்றனில் - கீழை வாசலில். உரமேவிய புயன் - வீரவாகு. மேதிக்கணனெடு வீரதினகரன் ஆகிய இருவரும் கிழக்கு வாசலில் இருந்தார்கள். மா திக்கு - பெரியதிசை. ஏதப்படை - பகைவருக்குத் துன்பத்தைச் செய்யும் சேனை. அனிகம் - படை. சுலவ - சூழ. தெரிந்தான் - பார்த்தான்.

364. பேரா - அகலாத. விறல் - வீரம். வீராதிபன் - வீர வாகு. அதுபின் - அதன் பிறகு. பெயர் போதில் - போகின்ற சமயத்தில். வெளிமிசை தோய்வோன் - ஆகாசத்தில் தங்குபவன். பயில் கின்ருன் - செய்யலானுன்.

வேறு யளவறு துகளா யினகதிர்
மிகுவே லிறையவ னிளையோனுட்
சீறு மிளிரொளி வாள்கொண் டவனெதிர்
சென்று னடுதிறல் குன்றுதான். கஎ

366. வாள்கொண் டிடுநெடு வாள்கொண் டவன்முக
வண்கைத் திரளினை வலிமேவும்
தோள்கொண் டிடுமிறை தடியக் குகன்விடு
தூதன் றனையிரு தசநூறும்
நீள்கொண் டிடுகர மேகொண் டடலுட
னேசுற் றிடவவை நிலமீதே
வீள்கொண் டிடும்வகை வாள்கொண் டடலொடு
வெட்டா வழிவுசெய் திட்டானல். கஅ

367. துன்றுங் கரநிரை தரைமேல் விழவமர்
தோளான் முயறலு நீளாகத்
தொன்றும் படியொரு சரணு லவனை
உதைத்தே கடிதில் வதைத்தேமுற்
பொன்றும் படிசம ஞரமீ துரமொடு
புவியூ டுதைபுரி புனிதன்போற்
கொன்றுன் றியவிறல் மொய்ம்பன் மகிழ்வது
கொண்டா னமரர்கள் கொண்டாட. கக

365. நீறுயது : முற்று. தசநூறு - ஆயிரம். திரு உரு நிலை மேவி - திருமேனியிலே பட்டு.

366. வாள் - ஒளி. அவன் முகவண் கைத்திரளினை - கஜமுகாசுரனுடைய துதிக்கைக் கூட்டத்தை வலி மேவும் தோள் கொண்டிடும் இறை - வீரவாகுதேவர். திரளினைத் தடிய. தூதன் - வீரவாகு. இருதச நூறு - இரண்டாயிரம். வீள்கொண்டிடும் வகை - வீழும்படியாக ; எதுகை நோக்கி வீழ் என்பது வீள் என நின்றது.

367. கரநிரை - வரிசையான கைகள். தோளால் அமரை முயலுதலும். சரணல் - பாதத்தால். சமன் - யமன். புனிதன் - சிவபிரான். கொன் துன்றிய ; கொன் - பெருமை. விறல் மொய்ம்பன் - வீரவாகு.

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

368\. அன்னவனை யட்டபின ரிங்கரின் வாய்தலெலாம்
அவுணர் சேனை
துன்னியதா தலினாலே வேற்றுருக்கொண் டேகுதலே
துணிபா மென்றே
மன்னுமணு வுருவாகிக் கீழ்த்திசைக்கோ புரத்திருந்
வளங்க ணோக்கி [தூர்
மின்னுபுகழ் மகேந்திரமாஞ் சூரூருட் போயினன்சீர்
வீர வாகு. ௨௦

369\. பங்கமுள கொடுஞ்சூர்க்கு முதன்மைந்த னனதொரு
பானு கோபன்
துங்கமுள வக்கினிமா முகத்தோனே யிரணியனும்
துலங்கு பேரோன்
தங்கடல்வச் சிரவாகு மற்றுமூ வாயிரவர்
தமதின் னோக்கி
வெங்குணமந் திரிதரும கோபன்மனைச் சிகரமிசை
மேவினா னால். ௨௧

370\. சாற்றியவிங் கிதுநிற்கக் கறையுறுவெஞ் சிறையினி
சயந்த னென்போன் [டைச்
ஏற்றமுள வமரரொடு மவுணர்புரி சிறையதனால்
இடரின் மூழ்கி
ஆற்றமெலிந் தானேநினைந் தேத்தியயர்ந் திடவறிந்தங்
கருண்மீக் கொண்டு
சீற்றமுறு வேற்றடக்கைக் குமரனவன் கனவினிடைச்
சென்றா னன்றே. ௨௨

368\. அட்டபினர் - சங்கரித்த பிறகு. சூர் ஊர் சூரனது இராசதானி.

369\. பங்கம் - குற்றம். தமது இல் நோக்கி; இல் - வீடு. வெம் குண மந்திரி - வெவ்விய குணத்தையுடைய மந்திரி.

370\. கறை - பழி. ஆற்ற - மிகவும். அயர்ந்திட - சோர்வை அடைய. மீக்கொண்டு - மேற்கொண்டு. அவன் கனவினிடை - சயந்தனது கனவினில்.

371. சிந்தைமகிழ் வோடுதொழு தையநீ யாரெனவே
திகழு மீசன்
தந்தருளு மைந்தனியாந் தன்குறைநின் குறைபுகன்று
தாதை யான [ன்
இந்திரன்வந் தெமைவேண்டத் தாரகனைக் கதிர்வே
லெறிந்து சாடிச் [கொண்
செந்திநகர் வந்ததனி லிருந்தனமிந் திரனயன்மால்
தேவர் சூழ. உ௩

372. வீரவா கென்னுமொரு தூதுவனை யிங்குவர
விடுத்து வீரச்
சூரனு மவுணன்மக னொருவனொடு பலவவுணர்
தொலையச் சாடிச்
சீருலா நகரழித்து வரப்புரிந்து நாளையிவண்
சேர்ந்து சூர்முற்
போருலா மவுணரெலா மைந்திருவை கலின்மாளப்
புரிது மாதோ. உ௪

373. பின்புனது திருத்தருது மென்னவவன் றனக்குரைத்
பெயர்ந்து மோகத் [துப்
துன்பினுட னுறுமமரர் கனவினிடை மனமகிழத்
தோன்றித் தோன்றி
அன்பினொடு சயந்தனுக்குப் புகன்றதுபோற் புகன்றுபு
றகன்று போக [கன்
இன்பமுறு கனவினைவிட் டெழுந்துதுயர் பொருந்தாம
லிருந்தா ரன்றே. உ௫

(கலிவிருத்தம்)

374. கொன்பாவு திறல்கொண்ட குமரேச னமரர்
முன்பாக வந்தேகு முறையிங் குரைத்தாம்

---

371. எனவே - என்று சயந்தன் வினவ.
372. சாடி - அழித்து. ஐந்திரு வைகலின் - பத்து நாளில்.
373. திரு தருதும் - செல்வத்தை அளிப்போம்.
374. கொன் - பெருமை.

இன்பான புகழ்கொண்ட வெழில்வீர வாகு
பொன்பாவு நகரூடு புரிசெய்கை சொல்வாம். உசு

375. தண்டாத விறல்கொண்டு தருமங்கொல் கொடியோன்
விண்டாவு சிகரத்தின் மிசைநின் றிழிந்தே
எண்டான வர்கள்சூழ விமையோர்கள் சிறைசேர்
கண்டார்கள் பயமேவு களமீ தடைந்தான். உஎ

376. அங்காரு மசுரேச ரதிமோக மாகச்
சிங்கார வேண்மந் திரத்தைச் செபித்தே
மங்காத வமரேசன் மகனோடு மிம்மையோர்
தங்கா விருந்திட்ட தலமுற் றிருந்தான். உஅ

377. தண்டாத விறல்கொண்ட தலைவன்றன் மேனி
கண்டான் விருப்போடு கரமுந்து சிரமேற்
கொண்டான் வரத்தென்கொல் கூறென் றுரைத்தான்
அண்டார்கள் சிறையூ டழுந்துஞ் சயந்தன். உகூ

378. கால்கொண்ட விசைகொண்ட கழல்வீர வாகு
வேல்கொண்ட முருகேசன் விடுதூத னீரிப்
பால்கொண்ட சிறைவிண்டு பதமெய்த வேவெங்
கோல்கொண்ட சூர்முன்பு கூறற் கடைந்தேன். ௩௦

---

375. தண்டாத - குறையாத. தருமம் கொல் கொடியோன் - தருமகோபன். கொடியோனது சிகரம். தானவர்கள் - அசுரர். சிறை சேர் களம் ; களம் - இடம்.

376. சிங்கார வேள் - அழகையுடைய முருகன்.

377. விறல்கொண்ட தலைவன் - வீரவாகு. வரத்து - வரவின் காரணம். அண்டார்கள் - பகைவர்கள்.

378. கால் - காற்று. 'வேல் கொண்ட' என்பது முதல் வீரவாகுவின் கூற்று. விண்டு - நீங்கி. பதம் எய்தவே - உங்களுக்குரிய பதவியை அடைவதற்காகவே. வெங்கோல் - கொடுங்கோல்.

379. இப்பான்மை கேளா திடும்போ னிருக்கின்
தப்பாம லிவண்வந்து தசநாள்க டம்மில்
துப்பாரு மவுணர்த் தொலைத்தும் பதத்தே
மெய்ப்பாக வைப்பான் விறல்கொண்ட வேலோன். ௩௧

(கட்டளைக்கலிப்பா)

380. என்று பற்பல நன்று புகன்றிட
ஏதி லாத சயந்தனு மண்டரும்
துன்று கைக்கம லங்கள் குவித்துநின்
தூய செய்கை தொடங்குதி யையவென்
றென்று மன்பொ டுரைத்திட வங்கண்விட்
டொல்லை யேகியோ ராயிர யோசனைப்
பொன்றி கழ்ந்திடு சூரவை மண்டபம்
போகி முன்னுள பொன்னுரு வெய்தினன். ௩௨

381. எய்தி யாயிர யோசனை நீளமும்
எள்ளி டம்புரை வெள்ளிடை யின்றியே
வெய்ய தானவர் சூழ்தர வீறிலா
வீறு லாவு வளங்கள் விளங்குறத்
துய்ய மாலை யிலங்கிய மார்பகச்
சூர்ம டங்கல் சுமந்திடு மாதனச்
சைய மீதுறல் கண்டன னண்டர்சூழ்
சண்மு கற்கினி தாகிய தம்பியே. ௩௩

---

379. இப்பான்மை - நான் எடுத்துச் சொல்லும் இந்த இயல்பை; என்றது சயந்தன் முதலியோரைச் சிறை விடுதலைக் குறித்தது. இடும்போன் - சூரன். துப்பு - வலிமை.

380. ஏது இலாத - குற்றம் இல்லாத; ஏது: ஏதம் என்பதன் விகாரம். சூர் அவை மண்டபம் போகி - சூரனது ஆத்தான மண்டபத்தை அடைந்து.

381. எள் இடம்புரை வெள்ளிடை இன்றியே - எள்ளளவுகூட இடைவெளி இல்லாமல். சூர் - சூரன். மடங்கல் சுமந்திடும் ஆதனச் சையம் - சிங்காதனமாகிய மலை. தம்பி - வீரவாகு தேவர்.

382\. கண்டு திண்டிறல் கொண்டிடு தோளுடைக்
காளை சூரன் கடுந்திறற் சீயமேல்
கொண்ட வாதன மீதி லிருந்திடக்
கொற்ற வேலவ னேற்றென வோதியான்
மண்ட லத்திடை நின்றிட நீதெனு
வள்ள றன்னை மனக்க ணினைத்தலும்
ஒண்டி றற்குகன் மண்டரு ளாலரோ
ஓரி ரித்தவி சவ்விடை யுற்றதே. ௩௪

383\. வந்து மன்னவன் முன்ன ரிருந்திட
வாகை கொண்டிடு வாகு மகிழ்ச்சியோ
டெந்தை யாகிய கந்த னளித்ததீ
தென்று சென்றதி னெய்திய காலையில்
வெந்தி றல்பெறு சூரிது கண்டுநீள்
வித்தை செய்பவ னென்று வெகுண்டுரைத்
துந்து சீருள வீரனை யாரைநீ
ஓது வாயென வோதுதன் மேயினன். ௩௫

384\. தேவர் தங்க ளிடுக்க ணகற்றவே
செந்தின் மேவி யிருந்திடு கந்தவேள்
ஏவி னாவரு டன்னுட னென்னையே
உன்னை மேவி யுரங்கிள ரண்டரைப்
பாவ மார்சிறை விட்டிட வெண்ணுதி
பாரி னீதி பயின்றர சாளுதி
ஆவ தீது மறுத்திடின் மாள்வையென்
றன்பி னோடு மறைந்திட வேவினன். ௩௬

382\. காளை - வீரவாகு. சீயம் - சிங்கம். மண் தலத்திடை - தரையின்மேல் அரித்தவிசு - சிங்காதனம். அவ்விடை - அவ்விடத்தில்.

383\. அதின் - முருகன் அருளால் தோன்றிய சிங்காதனத்தில். வித்தை செய்பவன் - ஜால வித்தைகளை இயற்றுபவன். யாரை : ஐ, முன்னிலைக்கண் வந்த சாரியை.

384\. உரம் - வலிமை. நீதி பயின்று - நியாயத்தோடு அமைந்து. என்னை அறைந்திட ஏவினன்.

385. என்று கூற மிகுந்த சினத்தினே
டீறில் சூர னெனும்பெயர் பெற்றுளோன்
மன்ற வாணகை யின்னு முளைத்திடா
மைந்த னேயிங் கெனக்கிது செப்புவான்
நன்று நன்றிது பேதைய னுதலால்
அச்ச றுமொழி நச்சிவந் தோதினய்
இன்று நின்னுயிர் தந்தன னேகுதி
என்றி யம்பலு மேந்த லியம்புவான். ௩எ

386. ஆதி யாகிப் பரம்பர னுகிய
ஆறு மாமுக வண்ணலைப் பாலனென்
ரோதி னுயவன் மேன்மைகள் கேளெனு
ஒப்பின் மேன்மை யுரைத்திட வெய்யசூர்
காதி யங்கவன் மேன்மைகள் பின்னரும்
கட்டு ரைக்குதி யென்றய றுன்றிய
தாது லாவு தொடைப்புய வாயிரம்
தான வர்க்கிது சாற்றுதன் மேயினன். ௩அ

387. ஒற்ற னுகி யடைந்த விவன்றனை
ஊறு செய்திடல் வீறல வாதலாற்
பற்று மின்சிறை யூடு படுத்துமின்
என்று பாவி பகர்ந்திட வாயிரம்
துற்ற தானவர் பற்றிடு வானயல்
சூழ வீரன் றுலங்கொரு கையினல்
உற்ற வொன்னலர் சென்னி பிடித்துமண்
மீத டித்திட வொல்லை யிறந்தனர். ௩௯

---

385. நகை - பல் பேதையன் - நீ அறியாமையை யுடையவன். அச்சறு மொழி - சிறிதேனும் அஞ்சுதல் இல்லாத இந்த வார்த்தையை; இது கூறுதற்கு அஞ்ச வேண்டும் என்பது சூரன் குறிப்பு நச்சி - விரும்பி. ஏந்தல் - வீரவாகு.

386. பரம்பரன் - எல்லாரிலும் மேலானவன். காதி - தடுத்து.

387. ஊறு செய்திடல் - துன்புறுத்தல். வீறு - வீரம். சிறையூடு படுத்துமின் - சிறையில் அடையுங்கள். பாவி - சூரன் துற்ற - நெருங்கிய. பற்றிடுவான் - பிடிக்கும்பொருட்டு.

388. எந்தை வேலுக் கினியிறை யாகுதி
ஈது திண்ண மிருந்திடு போவனென்
றுந்து சீருள வீர னகன்றிட
உற்ற வாதன மொல்லை யெழுந்துநீள்
அந்த ரத்தின் மறைந்து படர்ந்ததால்
அந்த வேலை யருந்திறல் கொண்டசூர்
வெந்தி றல்புனை யுஞ்சத மாமுக
வீர னோடு விளம்புதன் மேயினன். ௪0

389. ஆதி மைந்தன் விடுத்திடு தூதனிங்
காயி ரத்தரை யட்டகல் கின்றனன்
காது மன்னவ னுக்கெதிர் கிட்டிநீ
கட்டி வாவென்று கைய னிசைத்தலும்
நீதி கொன்ற விலக்கர்க ளோடுபோய்
நில்லு நில்லென வொல்லை யியம்பியே
போதும் வீரன் வெரிந்புடை கிட்டலும்
பொங்கு கோபம புரிந்து திரும்பினன். ௪௧

390. செற்ற மோடு திரும்பிய வீரனோர்
சென்றி லக்கர் திருந்து கரங்களிற்
பற்று பல்படை விட்டிட மொய்ம்பன்மேற்
பட்டு நுண்டுகள் பட்டன வண்ணலங்
குற்ற சூளிகை யொன்று பறித்துநேர்
ஒன்ன லார்மிசை யுந்த விரைந்துபோய்
அற்ற மற்ற விலக்கர் கலக்கமோ
டாவி விட்டிட வட்டது கெட்டதே. ௪௨

388. வீரன் - வீரவாகு. சதமாமுக வீரன் - நூறு முகங்களைக் கொண்ட சதமுகன் என்னும் அசுரன்.

389. ஆதி மைந்தன - சிவபிரானுடைய குமாரராகிய முருகக் கடவுள். அட்டு - கொன்று. காதும் - போர் செய்யும். கையன் - சூரன். வெரிந் புடை - முதுகுப் பக்கத்தே.

390. செற்றம் - கோபம். மொய்ம்பன் - வீரவாகு. துகள் பட்டன - பொடி ஆயின. சூளிகை - மாளிகையின்மேல் மண்டபம். அட்டது கெட்டது - கொன்று தானும் அழிந்தது.

391. நூறு கொண்ட பெருந்தலை கொண்டவன்
நூபு ரத்திடை வந்தவர் மைந்தருள்
வீறு கொண்டவன் மீமிசை பல்படை
வீச வீரன் விளங்கொர் சிகரியை
மாறு கொண்டு பறித்து விடுத்திட
வல்லை யாயிர வாளிக டேவியே
நீறு கண்டொரு நூறு சரங்கடாம்
நேரி லான்மிசை நீசனெய் தானரோ. சங

392. விட்ட வாளிகள் பட்டிட மொய்ம்பினன்
வெய்யன் முன்னர் விரைந்து படர்ந்துகைப்
பட்ட வில்லைப் பறித்து முறித்திடப்
பாவி நூறு கரங்கொடு பற்றலும்
மட்டில் வீரப் புயங்கொடு தள்ளியே
மார்ப கத்தை மிதித்தொரு தாளினால்
ஒட்ட லன்றனி நூறு சிரத்தையும்
ஒல்லை தள்ளி யுயிர்கவர்ந் தானரோ. சச

(கலிவிருத்தம்)

393. அட்டது பின்ன ரரும்புகழ் வீரம்
பட்ட புயங்கள் படைத்துள வள்ளல்
துட்டர் வெருண்டு தொலைந்திட வங்கோர்
நெட்டுரு வங்கொடு நின்றன னன்றே. சரு

394. தேவர் வணங்கு திறற்புய வீரன்
பூவடி வங்கொடு பூமிசை நிற்ப

---

391. நூபுரம் - சிலம்பு. அம்பிகையினுடைய சிலம்பிலுள்ள நவமணியினின்றும் எழுந்த நவவீரர்களுள் சிறப்பையுடைய வீரவாகு. சிகரியை - கோபுரத்தை. நீறு கண்டு - பொடி செய்து. நீசன் - சதமுகன்.

392. ஒட்டலன் - பகைவனுடைய.

393. அட்டது பின்னர் - சதமுகனைச் சங்கரித்த பிறகு. வள்ளல் - வீரவாகு.

394. பூ வடிவம் - பொலிவையுடைய கோலம்.

மேவிய வைம்பது வெள்ளம தாகும்
காவல ரன்னது கண்டு வெகுண்டார். சசா

395. வந்து விரைந்து வளைந்து சினந்தே
பந்தி பொருந்து படைக்கல முந்தக்
கந்தன் விடுத்திடு காளை கறுத்தே
இந்த வியற்கை யியற்றுத லுற்றான். சஎ

396. அடித்து முதைத்து மராற்ற வெறிந்தும்
பிடித்துட லங்கள் பிசைந்து பிழிந்தும்
வெடிக்குர லைம்பது வெள்ளமும் விள்ள
முடித்தனன் மொய்ம்புள மொய்ம்புள வீரன். சஅ

397. அட்டவ தற்பின ரங்கொரு வேரம்
தொட்டறம் விட்டிடு சூரவை மன்றம்
பட்டிட விட்டுழி பட்டது கண்ணால்
எட்டரு மன்ற மிடிந்தது மன்னோ. சகூ

398. தீயவர் பண்ணை செறிந்திடு மன்றம்
மாய்வது கண்டு வயம்பெறு சூரன்
ஆயிர மொய்ம்புள வாயிரர் தம்மைத்
தூயவ னோடமர் துன்ற விடுத்தான். ருO

---

395. பந்தி - வரிசை. காளை - வீரவாகு. கறுத்து - சினந்து.

396. வெடிக்குரல் - வெடித்தலை யுடைய குரலைப் பெற்ற. விள்ள - உடையும்படி. மொய்ம்புள மொய்ம்புள வீரன் - வலிமை யுடைய தோள்களையுடைய வீரவாகுதேவர்.

397. வேரம் - கோபுரம். தொட்டு - பிடுங்கி. சூர் அவை மன்றம் பட்டிட - சூரனுடைய ஆத்தான மண்டபம் இடியும்படியாக. பட்டது - விட்ட மண்டபம் அந்த மண்டபத்தின்மேல் விழுந்தது.

398. தீயவர் பண்ணை - கெட்டவர்களாகிய அசுரர்களது கூட்டம். வயம் - வலிமை. மொய்ம்பு - தோள்.

399. உந்திடு மாயிர வொட்டலர் கிட்ட
வந்திடு முன்னர் வயம்புனை வாகு
சுந்தர மேவிய சூரன தூரை
அந்தர மாக வழித்திட லுற்றான். ருக

400. மண்டப கோபுரம் வாரி யெறிந்தும்
விண்டு மதிற்றிரள் வீழ வுதைத்தும்
வண்டுறு தண்டலை வல்லை பிடுங்கி
எண்டிசை யின்கணு மேக வெறிந்தும். ருஉ

401. அங்கிவை யாதி யநேக விதத்தாற்
பொங்கு வளங்கொள் புரத்தை யழித்தே
துங்க விறல்பெறு தூயவ னிற்ப
வெங்குண வாயிர வீரர் தெரிந்தார். ருங

402. தீங்கினர் கண்டு சினந்து வளைந்தே
பாங்குறு மெண்ணில் படைக்கல முய்ப்ப
ஓங்கு மராமர மொன்று பறித்தே
ஆங்கவர் தம்மை யடித்து முடித்தான். ருச

403. பாதக ராயிரர் பட்டது கண்டே
தூதுவ ரோடுபு சூரனொ டோதக்
காதியி ருப்பவோர் காதல னான
மாதிறல் வச்சிர வாகு வெழுந்தான். ருரு

---

399. ஒட்டலர் - பகைவர். அந்தரம் ஆக - வெறும் வெளியாகும்படி.

400. விண்டு - பிளந்து; மலையைப் போன்ற எனலுமாம். தண்டலை - சோலையை.

401. புரத்தை - சூரனது இராசதானியாகிய மகேந்திரபுரியை. வெம் குணம் - கொடிய இயல்பையுடைய.

402. உய்ப்ப - செலுத்த.

403. காதி - கோபம் கொண்டு. ஓர் காதலனான - சூரனுடைய புத்திரருள் ஒருவனான.

404. பற்றுறு தந்தை பதங்கள் பணிந்தே
ஒற்றனை வென்றிவ னுற்றிடு கின்றேன்
மற்றெனை யேவுதி வல்லையி லென்ன
அற்றமில் சூரன் விடுத்தன னன்றே. ருசு

405. தந்தை யிருந்திடு சங்க மகன்றே
உந்திய தன்மனை யூடு புகுந்தே
அந்த மிலாத வடற்படை கொண்டே
சிந்தை மகிழ்ந்தொரு தேர்மிசை யுற்றான். ருஎ

(கலிநிலைத்துறை)

406. தேரைஞ் ஞாறு வெள்ளம தாகுந் திறல்யானை
ஓரைஞ் ஞாறு வெள்ளம தாகு முயர்மாக்கள்
ஈரைஞ் ஞாறு வெள்ளம தாகு மெழிஞன்கு
பேரைஞ் ஞாறு வெள்ளம தாகும் பிறசேனை. ருஅ

407. இவ்வா றுகுஞ் சேனைக ளோடங் கிருமைப்போர்
செய்வா னுன்னித் தன்னிக ராம்வச் சிரவாகு
மைவாழ் கண்டத் தண்டர் பிரானூர் மகனேவும்
செவ்வான் மேனித் தூயவ னேரே சென்றானல். ருகூ

408. செற்றா ராகுந் தானவர் ஞானத் திறலோனைச்
சுற்றா நின்று படைக்கல முந்தத் துகளில்லோன்
குற்றா நின்று முதைத்து மெறிந்துங் கோபத்தோ
டெற்றா நின்றுங் கொன்றன னம்மா விறைதன்னில்.

---

404. அற்றம் - சோர்வு.

405. சங்கம் - சபை.

406. மாக்கள் - குதிரைகள். பிற சேனை - காலாட்படை.

407. இருமைப் போர் - பெரிய போரை.

408. செற்றார் - போர் செய்தவர். துகள் இல்லோன் - குற்றமில்லாத வீரவாகு. குற்றா நின்றும் - காலால் இடித்தும். எற்றா நின்றும் - அடித்தும். இறை - கணம்.

(வஞ்சிவிருத்தம்)

409. வேறு மநேக விதத்தாற், சீறி யெதிர்ந்திடு சேனை
ஊறு பொருந்திட வூழிச், சூறை புரிந்து தொலைத்தான்.

410. அங்க ணிறந்தவ ரல்லால், வெங்கண மாகிய வெய்யோர்
தங்கண் மனங்க டளர்ந்தே, எங்கணு மாகி யிரிந்தார்.

411. மாதிறல் வச்சிர வாகு, ஈது தெரிந்தட லேந்தல்
மீதுற வாயிர வெங்கோல்,ஊதையெனச்செலவுய்த்தான்.

412. வந்த சரங்களை வல்லே, உந்து கரங்கொ டொடித்தே
சிந்தின னின்றுழி தீயோன், இந்த வியற்கை யியற்றும்.

413. வெம்பதி னாயிர வெய்ய, அம்பு விடக்குக னன்பார்
தம்பி யெழுக்கொடு தாக்கி, மொய்ம்பொடு சிந்த முறித்தான்.

(கலிநிலைத்துறை)

414. முறித்தபி னைபிரு மெய்ச்சிர வச்சிர மொய்ம்புள்ளோன்
மறித்து மநம்பதி னாயிர வாளி மனத்தூடே
கறுத்து விடுத்து மிகுத்த வெழுத்துகள் கண்டேபின்
தெறித்தனனைந்தெனுமாயிரவாளிகள் செய்யோன்மேல்.

415. பட்டுழி யோரிறை நொந்து விரைந்து படர்ந்தன்னான்
நெட்டிர தத்தை யுதைத்திட வேறொரு தேர்மேல்

---

409. ஊறு - துன்பம். ஊழிச் சூறை புரிந்து - ஊழிக் காற்றைப்போலச் சூறையாடி.

410. இரிந்தார் - கெட்டு ஓடினர்.

411. ஏந்தல் - வீரவாகு. ஊதை - பெருங் காற்று.

412. சரங்களை - அம்புகளை. சிந்தினவன் வீரவாகு.

413. வெம்...வெய்ய - மிக்க வெம்மையை உடைய. தம்பி - வீரவாகு. எழு - கதாயுதம்.

414. ஐபிரு மெய்ச்சிரம் - பத்துத் தலைகளையுடைய. வச்சிர மொய்ம்புள்ளோன் - வச்சிரவாகு. மறித்தும் - மீட்டும். கறுத்து - கோபித்து. எழு துகள் கண்டு - கதையைப் பொடியாக்கி தெறித்தனன் - எய்தான். செய்யோன் - வீரவாகு.

ஒட்டல னுற்றுழி யவ்விர தத்தையு மொண்கையால்
எட்டி யெடுத்து விசும்பிடை போக வெறிந்தானால். ௬௭

416. தேரொடு வானி லிலக்க மியோசனை சென்றேபின்
பாரில் விழுந்தொளிர் வாளது கொண்டு பகைத்தோர்தம்
ஆருயி ருண்டிடு வீரனை நேர வவன்றானும்
சீரிய வாள்கொ டெறிந்து சிரங்கள் சிதைத்தானால்.

417. அங்கவ னாருயிர் கொன்றவ னின்றுழி யாகாய
வெங்கதி ரோனு மறைந்தனன் மாலையு மேவிற்றாற்
சங்கரன் மாமக னப்பதி யெல்லை தணந்தேபின்
மங்குல் விசும்பு வழிக்கொ டிலங்கையில் வந்தானே.

418. அண்டர் வெருண்டிடு மாளி முகத்தவ னப்போதிற்
கண்டன னின்றவ ருன்மக னாவி கறுத்தேமுன்
உண்டவ னிங்கிவ னாமென வோத வுருத்தேகி
மண்டு திறல்பெறு சேனைக ளோடும் வளைந்தானால். ௭௦

419. வீரரில் வீரன் வெகுண்டுறை வாளுரு விச்சென்றே
ஆரவு ணப்படை முற்று முலாவி யடும்போதிற்,
பாரமு றாயிர வாளி முகங்கள் படைத்துள்ளான்
நேருற வேகி யடித்தன னாயிர நீள்கையால். ௭௧

420. அடித்த கரங்களை யங்கொரு பாணிகொ டப்போதிற்
பிடித்தவ னுந்து கரங்கள் சிரங்கள் பெயர்ந்தோடித்

---

415. ஓர் இறை - ஒரு கண நேரம். நெடு இரதத்தை - உயர்ந்த தேரை. ஒட்டலன் - பகைவன்.

416. நேர - எதிர்க்க.

417. அவன் நின்றுழி - வீரவாகுதேவர் நின்றபோது. சங்கரன் மா மகன் - வீரவாகு. அப்பதி - மகேந்திரபுரியை. மங்குல் - மேகம்.

418. ஆளி முகத்தவன் - இலங்கையை ஆண்ட யாளி முகன். கறுத்து - கோபித்து. உருத்து - கோபித்து.

419. வீரரில் வீரன் - வீரவாகு. உலாவி முற்றும் அடும் போதில். ஆயிரம் யாளி முகங்களைக் கொண்டவன்.

420. பாணி - கை. வீரன் - வீரவாகு வடி - கூர்மை.

துடித்திட வாள்கொடு வீசி யடற்புனை தோள்வீரன்
வடித்தனி வேல னமர்ந்திடு செந்திலில் வந்தானே. எஉ

421. கந்த னிருந்திடு கோயில் புகுந்து களிப்போடும்
அந்தமி லன்பொடு முன்பு வணங்கி யணித்தாய்நின்
றுந்திய சூரன தெண்ணமு மேனைய வுங்கூறி
இந்திர னோடு சயந்த னிருப்பு மிசைத்துற்றான். எங

422. மற்றிது நின்றிட வச்சிர வாகு மடிந்தானென்
ெறுற்றர்கள் சொற்றுழி வெற்றிகொள் சூரென வுற்றுள்ளோன்
சற்றல வீறிடர் கொண்டொரு மந்திரி தானேனும்
அற்றமில் புந்தியி னுலிடர் சிந்தி யமர்ந்தானல். எச

423. அங்கது போதினி லப்புற வண்ட மதிற்சேரும்
செங்கம லத்தய னைக்கொணர் வித்தடல் சேர்சூரன்
மங்கிய தன்பதி முன்பி னிலங்க வகுப்பித்தே
துங்க விரிஞ்சன கன்றிட வன்பொடு சொற்றானல்.

424. அன்னது காலையில் முன்னர் விடுத்த வடற்றூதர்
மன்னிய செந்திலில் வந்தரன் மைந்தன் மருங்குள்ள
கொன்னுறு சேனை வினவி யகன்று கொடுஞ்சூரன்
தன்னை யடைந்து பதங்கள் பணிந்தித னைச்சொல்வார்.

425. அற்றம தற்றவி ராயிர வெள்ள மடற்பூதர் [ட்
மற்றவர் மன்னவர் நூறுட னெண்மர் வரைத்திண்டோ
கொற்ற விலக்கரொ டொன்பது வீரர் குழாத்தோடும்
வெற்றி தருங்கதிர் வேலவன் ஞால மிசைச்சேர்ந்தான்.

---

421. அணித்தாய் - அருகில்.

422. சூரென உற்றுள்ளோன் - சூரன். சற்றல - சிறிதல்லாத; மிக்க. அற்றம் - சோர்வு.

423. சூரன் பிரமதேவனைக் கொண்டு மீட்டும் தன்னுடைய நகரத்தைச் சிருட்டிக்கச் செய்தான் விரிஞ்சன் - பிரமதேவன்.

424. சேனை வினவி - சேனையின் அளவு முதலியவற்றைத் தெரிந்துகொண்டு.

425. தூதர் கூறும் செய்திகள். அற்றமது அற்று அவிர் - சோர்வில்லாமல் விளங்குகின்ற. மற்று அவர் மன்னவர் - பூதபதிகள்.

426. அங்குறு தாரக னெண்கிர வுஞ்ச வடற்குன்றம்
மங்குற வெஃக மெறிந்துயர் செந்திலில் வந்தோரொற்
றிங்கு விடுப்ப விலங்கை யழித்திவ ணெய்துற்றே
பங்கமில் யாளி முகன்றலை கொண்டு படர்ந்தானால். எஅ

427. தெண்டிரை வாவிநம் மாநக ரூடு திறற்கந்தன்
மண்டணி கத்தொடு வந்தமர் செய்ய மனந்தன்னிற்
கொண்டன னின்னது மெய்யென வெய்யகொடுஞ்சூரன்
ஒண்டிறல் சோதம ரைக்கொணர் வித்துரை செய்கின்றான்.

(கலிவிருத்தம்)

428. வானோர் தமைச்சிறையில் வைத்தசெயல் வானோர்
ஆனோர் தமக்கிறைவ னாதியுட னோதக்
கோனோர் விறற்பெறு குமாரனை யளித்தெம்
மேனோவு செய்திட விடுத்தருளி னானால். அ0

429. இன்பா ரரன்சுதனி ராயிரவெ ளஞ்சேர்
அன்பான பூதரு மலக்கணி விலக்கத்
தொன்பா னெனப்படு முரங்கொளிளை யோரும்
தன்பால் வரக்கடிது தாரணியில் வந்தான். அக

430. வீறான தாரகனை வெற்பொடு தடிந்தே
மாறாத செந்திநகர் வந்ததி லிருந்தே

---

426. எஃகம் - வேலை.

427. தெண் திரை வாவி - கடலைக் கடந்து. மண்டு அனிகத்தொடு - செறிந்த படைகளோடு. என - என்று தூதுவர் சொல்ல. தமரை - மந்திரச் சுற்றத்தாரை.

428. இறைவன் - இந்திரன். ஆதியுடன் - சிவபெருமானிடத்தில். கோன் - சிவபிரான். நோவு செய்திட எம்மேல் விடுத்தருளினான்; நோவு - துன்பம்.

429. வெளம் - வெள்ளம். அலக்கண் இல் - துன்பம் இல்லாத. இலக்கத்து ஒன்பான் இளையோர் - இலக்க வீரரும் நவவீரரும்; இளையோர் - தம்பிமார். கடிது - விரைவில்.

430. வெற்பொடு - கிரவுஞ்சகிரியோடு. வந்து அதில் இருந்து. ஒற்றனை - வீரவாகுதேவரை.

ஆறார் முடிப்பர னளித்தகுக னம்பால்
ஊறான தற்றிடுமோ ரொற்றனை விடுத்தான். ௮௨

431. அன்னா ளிலங்கையை யழித்திவ ணடைந்தென்
முன்னா விருந்தனை முனிந்தே யிகழ்ந்தே
கொன்னாரு மென்பதி குலைத்தே யிளஞ்சேய்
தன்னாவி கொண்டறு சயத்தினொடு சென்றான். ௮௩

432. நந்நம் பெரும்பதியி னாளையர னல்கும்
மைந்தன் செருப்புரிய வந்திடுவ னென்றே
முந்துந்து தூதுவர் மொழிந்தனர்க ளென்னா
உந்துஞ் செருச்செய வுசாவின னிசாவில். ௮௪

433. அப்போது பற்பல ரநேகவித மோத
கைப்போத மைத்தரி கலந்ததவி சின்கண்
துப்போ டிருந்ததொரு சூரன்முக நேரே
மெய்ப்போடு சிங்கமுக வீரனிது சொல்வான். ௮௫

434. விரைத்தார் மிடைந்திடு வியன்புய வமைச்சர்
இரைத்தாடல் செய்திடு மிலங்கனிக மன்னர்
வரைத்தாசின் மைந்தர்க டமக்கியலும் வன்மை
உரைத்தாரோர் புந்தியு முரைத்தில ருனக்கே. ௮௬

---

431. முன்னா இருந்த - நேரே வீற்றிருந்த. கொன் பெருமை. பதி - இராசதானி நகரம் இளஞ்சேய் என்றது வச்சிர வாகுவை.

432. செரு புரிய - போர் செய்ய. முந்து உந்து - முன்னே நான் அனுப்பிய. உசாவினன் - ஆலோசனை செய்தான். நிசாவில் இரவில்.

433. கைப்போது அமைத்து - கையாகிய மலரால் அமர்த்தி; கையால் குறிப்பித்து அவர்களைச் சும்மா இருக்கச் செய்து. அரி கலந்த தவிசு - சிங்காதனம். துப்பு வலிமை.

434. விரை தார் மிடைந்திடு - மணமுள்ள மாலை செறிந்த. இரைத்து ஆடல் செய்திடு - முழங்கிப போர் செய்கின்ற. அனிக மன்னர் - சேனாபதிகள். வரைத்து ஆசு இல் மைந்தர்கள் - எல்லைக்

435. கொன்னார் புகழ்குலவு கொற்றவர் செவிக்கே
மின்னா ரழற்கணை விடுப்பது கடுப்ப
எந்நாளு நன்னிலைமை யென்னுமது தன்னைச்
சொன்னா ரமைச்சர்க ளெனும்பெயர்கொ டேயோர். ௮௭

436. வாலுற்ற தண்புனல் வயங்கிய பயம்பின்
பாலுற் றவாமயிலை பற்றுமிகு முண்டி
போலுற்ற நுண்பொருள புரிந்துபடு மாபோல்
மேலுற் றிடுஞ்செயல் வினவுகிலை யந்தோ. ௮௮

437. நந்தா வளங்குலவு நாகவுல கோரை
முந்தான காலமதின் மொய்ம்புட னலைந்தோர்
சிந்தா குலத்தினொடு சிந்தினாக ளல்லா
துய்ந்தா ரொருத்தரை யுரைப்பவிவ ணுண்டோ. ௮௯

சூட்பட்ட குற்றமில்லாத புத்திரர்கள் தமக்கு இயலும் வன்மை - தம்மாலான பலத்தை. புந்தியும - அறிவுரையும.

எல்லோரும் தமதம பலத்தைப்பற்றிப பேசினார்களே யல்லாமல் உனக்கு இது தக்கது, இது தகாது என்று அறிவுரை கூறவில்லை.

435. கொன் - பெருமை அழற்கணை கடுப்ப - வெம்மையாகிய அம்புகளை யொப்ப செவி கைக்கும சொல்லாயினும் நன்மை பயக்கும என்பான், நன்னிலைமை யெனனுமது' என்றான். தாம் கூறுவது அரசனுக்கு உவப்புத் தருவதன்றாகி அவனுடைய சினத்துக்கு ஆளாக நேரும காலத்திலும நன்மையை உரைப்பவரென்பான, 'எந்நாளும்.......... சொன்னார்' என்றான; "தம் முயிர்க் குறுதி யெண்ணா தலைமகன வெகுண்ட போதும, வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரா"(**கம்ப ராமாயணம்**, மந்திரம். 9.)

436. வால - தூய்மை பயமபினபால் உற்று அவாம மயிலை பற்றும் - பள்ளத்தினிடத்தே இருந்து மயிலை யெனனும் சாதி மீனானது ஆசைப்பட்டு வாயினாலே கவவுகின்ற. மிக்க உணவைப போல் அமைந்த சிறிதாகிய பொருளை விரும்பித தூண்டிலில சிக்கி இறந்து படுவதுபோல. மயிலை - ஒருவகை மீன்.

437. நந்தா குறையாத நாக உலகோரை தேவரை. முந்தான காலமதில் - முன காலத்தில். மொய்ம்பு - வலிமை. சிந்தாகுலத்தினொடு - மனத் துயரத்தோடு. சிந்தினர்கள் - அழிந்து போனவர்கள். உரைப்ப - உதாரணமாகச் சொல்வதற்கு.

438. மீனஞ் சுமந்துபுகழ் விண்ணவர்க ளெல்லாம்
ஈனம் பொருந்திட வியற்றினை மகத்தின்
கோனந்தண் மாநகர் குலைந்திட முனிந்தாய்
ஊனந் தருஞ்சிறையி லும்பர்களை வைத்தாய். ௧௦

439. நந்தா வளங்குலவு நாகர்சிறை யின்னும்
அந்தோ விடுத்திலை யதற்குவடி வேலோன்
வந்தா னமர்செய வரங்கடரு நாளில்
முந்தா னுயர்த்தவன் மொழிந்தது மறந்தாய். ௧௧

440. இக்கால நூறினொடு மெட்டுக மிருந்தெம்
மெய்க்காசில் சத்தியின் விளிந்திடுதி ரென்றான்
அக்கால முற்றதிவ ணப்படியி னன்றோ
மிக்கான தாரகனை வென்றதுயர் வேலே. ௧௨

441. மின்னாரை வேதியரை மெய்க்குரவர் தம்மைப்
பொன்னா டரைப்பொறை பொருந்துமுனி வோரை
மன்னா சிறார்தமை வருத்தியவ ரன்றோ
எந்நாளும் வெந்நரகி லெய்தியுழல் வாரே. ௧௩

---

438. புகழ் - உன்னைப புகழ்கின்ற; புகழையுடைய எனலும் ஆம். ஈனம் - இழிவு. மகத்தின் கோமன் - இந்திரன். மாநகர் - அமராவதி. ஊனம் - குறைவு.

439. நாகர் - தேவர்கள். அதற்கு ஆச்சிறையை நீக்க; அதற்கு வடிவேலோன் வந்தான் என்பது, பிணிக்கு மருந்து வந்தது என்பது போல நின்றது. முந்து வரங்கள தரு நாளில் - முன்பு நீ செய்த தவத்துக்கு இரங்கி வரங்களை அருளிய காலத்தில். ஆன் உயர்த்தவன் - இடபக் கொடியை ஏந்திய சிவபெருமான். மொழிந்தது: "வீறுநம தானதொரு சத்தியல தும்மை வெல்லுமவர் யார்" (234) என்றது.

440. எம் மெய் காசு இல் சத்தியின் - எம்முடைய உண்மையான குற்றமற்ற சத்தியினாலே. விளிந்திடுதிர் - இறபபீர்கள். அக்காலம் - அச்சத்தியினால் அழியும் காலம். அபபடியின் அன்றே - அந்த முறையினால் அல்லவோ.

441. மின்னாரை - பெண்களை. குரவர் - ஆசிரியர். பொன்னாடரை - தேவரை. பொறை - பொறுமை. மன்னா: விளி.

442. ஈண்டாகை யான்முருக னோடம ரியற்ற
வேண்டாவிண் ணோர்கள்சிறை விட்டிடுவை யாயின்
மீண்டா சறுங்கயிலை வெற்பினிடை நாகம்
பூண்டான் மகன்கடிது போயிடுவ னன்றே. ௬௪

443. இன்பான விப்படி யியற்றுகிலை யாகிற்
கொன்பாவு மம்பிகை குமாரனமை யெல்லாம்
துன்பாக வேல்கொடு தொலைத்திடுவ னென்றே
மின்பாவு சிங்கமுக வீரனுரை செய்தான். ௬௫

444. என்றீது சிங்கமுக னின்புற விசைப்ப
நன்றீது நன்றென நகைத்துநனி சீறித்
தன்றீதி லாததொரு தம்பிமுக நேரே
ஒன்றீது சூர்முத லுரைத்திடுத லுற்றான். ௬௬

(எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

445. இந்திரன் றனக்கும் பூதர்க டமக்கும்
இளஞ்சிறு பாலனோ டிமையவர் தமக்கும்
உந்துநீ நெஞ்சி லஞ்சினை போலும்
உமையொரு பாகனு மொப்பிலாக் கடவுள்

---

442. ஆகையால் ஈண்டென மாறுக. மீண்டு - நின்னோடு போர் புரியாமல் திரும்பி. ஆசு - குற்றம். நாகம் பூண்டான் மகன் - சிவகுமாரன். கடிது - விரைவில்.

443 இன்பு ஆன இப்படி - இன்பத்தைத் தருவதற்குரியதான இந்த முறையே. கொன் பாவும் - பெருமை பரவிய. துன்பு ஆக - மரணத் துன்பம் விளையும்படி.

444. இன்பு உற - வருங் காலத்தில் இன்பம் உண்டாக வேண்டுமென்று. நன்று : குறிபபு மொழி. நகைத்து - கோபத்தினாற் சிரித்து. தம்பி - சிங்கமுகன். ஈது ஒன்று. சூர் முதல் - சூரனாகிய அசுரர் தலைவன்.

445. நாள் முடிவு இழைத்தது - நமக்குரிய ஆயுளின் எல்லையை வரையறுத்ததும்; "இழைத்தநா ளெல்லை கடவா" (**நாலடியார்**). நான் முன்பு கேளேன் - நீ சொல்லுகின்ற அக்காலத்தில் நான் கேட்டிலேன். வல்லையாயினை - ஆற்றல் உடையாய் ஆயினாய்.

நந்தனிச் சத்தி வெல்லுமென் றதுவும்
நாண்முடி விழைத்தது நான்முன்பு கேளேன்
புந்தியிற் புதிதொன் றுன்னியே யுரைத்தாய்
பொய்ம்மொழி சொல்லவும் வல்லையா யினையால்.

446. அப்படி யுரைத்தா னேனுமக் கடவுள்
அளித்திடு வரமா ரழித்திட வல்லார்
மெய்ப்புறு சத்தி யழித்திடு மென்னின்
வேறதோ சத்தியும் விமலனு மதனால்
இப்பெரு வரங்கள் கொடுத்தவ னழியான்
எண்ணினு ளமரரை யான்சிறை செயக்கண்
டொப்பின்மான் முதலோ ரஞ்சியே யிருந்தார்
ஒருசிறு பாலனோ வொழித்திட வல்லான். ௬௮

447. என்னவே குகனைப் பாலனென் றெண்ணி
இகழ்ந்துதன் னுயிரை யிழந்திடு கின்ற
முன்னவ னிசைப்பப் பின்னவன் பின்னும்
முனியலை யொன்றின மொழிவனென் றுரைப்பான்
பொன்னுல கமரர் தமைச்சிறை படுத்திப்
புவியினி னீதி புரிந்திடா வதனைத்
தன்னிக ரான சங்கர னறிந்துன்
றன்னைவந் தடுவான் றன்னுள நினைந்தான். ௬௯

---

446. மெய்ப்பு - உண்மை. சத்தியும் சிவமும் வேறுவரோ; விமலன் - சிவம். சிவபிரானது சத்தி அழித்திடும் என்றால், சிவபிரானும் சத்தியும் வேறல்லர்; ஆகவே அருள் செய்த அவனே அதனை மாற்றி அழிப்பானென்பது பொருந்தாது என்றான். எண் இல் நாள் - கணக்கற்ற நாட்கள். மால் முதலோர் - திருமால் முதலியவர்கள்.

447. இழந்திடுகின்ற: துணிவுபற்றி எதிர்காலம் நிகழ்காலம் ஆயிற்று. முன்னவன் - தமையனாகிய சூரன். பின்னவன் - தம்பியாகிய சிங்கமுகன். முனியலை - கோபம் கொள்ளாதே. இன்னம் ஒன்று மொழிவன். நீதி புரிந்திடா அதனை - நீதியைச் செய்யாமல் அநீதி செய்கின்றதை. அடுவான் - கொல்லும்பொருட்டு.

448. இன்னறீர் வரங்கள் கொடுத்தயா மழிப்ப
தியல்பல வாதலா லிருமையே படைத்து
மன்னியே யிருந்த சூரனைப் பிறர்க்கும்
வதைப்பரி தெனவே மனத்திடை நினைந்து
பொன்னுறு தனதா முருவமா மொருசீர்ப்
புதல்வனுற் புகழுறப் பொருக்கென முடிக்கத்
தன்னுதல் விழியா லாறுமா முகத்தோர்
தனிப்பெருங் குமரனைத் தந்தனன் பரனே. ௪00

(எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

449. அற்றமி லுருவ மாகுவ னருவம்
ஆகுவ னருவுரு வகன்ற
பெற்றியு மாவன் மறைகளுந் தெரியாப்
பெரியவன் பெரியர்க்கும் பெரியான்
துற்றிடும் பொருள்க ளனைத்துமா யலவாய்த்
தோன்றிய தனிப்பெருந் தோன்றல்
மற்றவன் றனைநீ பாலனென் றறைந்தாய்
வல்லையே மாளுதி மாதோ. ௪0௧

(எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

450. ஆதலா னீயு நின்பெருங் கிளையும்
அன்புறு வளத்தோ டமர்ந்திட வேண்டின்
தீதிலா வமரர் சிறையினை விடுத்தல்
செய்யென வெய்யவன் சிந்தைமேற் சினமுற்

---

448. இன்னல் தீர் - துன்பத்தைப் போக்கும். இருமை - பெருமை. பொருக்கென முடிக்க - விரைவிலே சங்காரம் செய்ய. பரன் - சிவபெருமான்.

449. அற்றம் - முடிவு துற்றிடும் - நுகர்கின்ற. வல்லை - விரைவில். இந்தச் செய்யுளின் ஈற்றடி, "மற்றவன் றனைநீ பாலனென் றறைந்தாய் வல்லையிங் கவனுன் மாளுதி மாதோ" என்று எட்டுச் சீராய் எல்லாப் பிரதிகளிலும் உள்ளன முன் மூன்றடியும் எழுசீராக இருத்தல் நோக்கி இவ்வடியிலும் எழுசீர் அமைக்கப்பெற்றன.

450. கிளையும் - சுற்றத்தாரும். வளத்தோடு அமர்ந்திட வேண்டின் - ஐசுவரியத்தோடு வாழ விரும்பினால். வெய்யவன் - சூரன்.

றாதையா லலைப்புண் டங்கியாற் சூடுண்
டுயர்சர வணத்தலை யுண்டபா லனையோ
சோதியென் றுரைத்தாய் பேதையென் றிகழ்ந்து
சொல்லினன் வெவ்வுரைச் சூரனு மவுணன். ௪௦௨

451. முற்றுணர் சிங்க முகத்தினு னன்மை
மொழிந்ததற் கிழிந்தோன் முனிந்துரைத் திடலும்
சற்றுநம் மொழியுட் கொண்டில னந்தோ
தலையினில் விதியையார் தவிர்த்திட வல்லார்
மற்றிவன் மடிதற் றிண்ணமா மதன்முன்
மடிதலே கடனென மனத்திடை நினைத்துச்
சிற்றறி வுடையேன் சொற்றன பொறுத்தி
சேரலார் தமையடச் செல்குவ னென்றான். ௪௦௩

452. என்றுவன் றிறல்கொண் மடங்கன்மா முகத்தோன்
இன்புற விசைப்ப விருந்திறற் சூரன்
நன்றுநன் றெனவே மகிழ்ந்தவன் றன்னை
நயமொடு புல்லிப் புகழ்ந்துநின் னகர்போய்
ஒன்றுதி குகனீண் டடைந்திடின் விளிப்பன்
ஒல்லைமே வுதியென் றுவப்புடன் விடுப்பச்
சென்றுதன் புரம்புக் கமர்ந்தன னெவரும்
செலவுரைத் துறையுள் சேர்ந்துசூ ழிருந்தான். ௪௦௪

ஊதையால் - காற்றால். அங்கியால் சூடுண்டு - தீயால் தகிக்கப் பெற்று. அலையுண்ட - அலைந்த. சோதி - கடவுள்.

451. முற்று உணர் - முருகனது திருவவதாரம் முழுவதையும் உணர்ந்த. இழிந்தோன் - சூரன். திண்ணமாம் - உறுதியாகும். அதன் முன் மடிதலே - இவன் இறப்பதற்குமுன் நாம் இறத்தலே. சொற்றன பொறுத்தி - கூறிய வார்த்தைகளைப் பொறுப்பாயாக. சேரலார்தமை அட - பகைவர்களோடு போர்புரிய.

452. மடங்கல் மாமுகத்தோன் - சிங்கமுகன். புல்லி - தழுவிக் கொண்டு. விளிப்பன் - உன்னை அழைப்பேன். தன்புரம் - தன் இராசதானி நகரம். செல உரைத்து - போகும்படியாக விடைகொடுத்தனுப்பி விட்டு. உறையுள் சேர்ந்து - தன் இருக்கையுட் புகுந்து.

453. இன்னவா றவுணர் தொழுங்கழற் கொடுஞ்சூர்
எழிலிவந் தெழிலினோ டினிதுகண் படுக்கும்
பொன்னுலாம் புரிசை மகேந்திர புரியிற்
புரிந்துவீற் றிருந்தது புகன்றன மன்னோ
மன்னுமா லயன்முன் னிமையவர் வணங்க
மடங்கலந் தவிசின்மேல் வனசமா ளிகைமேல்
அன்னம்வாழ் கழனிச் செந்தின்மா நகர்வாழ்
அறுமுகத் திறைசெய லறிவுற வறைவாம். ௪௫௩

நான்காவது

யுத்த காண்டம்

முதலுட் பானுகோபன் யுத்தம்

154. மின்னிகர் சடிலத் தவிர்மதி முடித்த
வித்தகன் மத்தக விழிவிழித் தாங்குப்
பொன்னுறு மருணத் தடமலர் மிடைந்த
பொதும்பர்சூ ழுதயவான் பொருப்பின தும்பர்
துன்னுசெங் கிரணத் திரவிவந் தெழலும்
தோகையோர்மருங்குடைத்தோன்றன்முன்றோன்று
கன்னல்விற் றடக்கைக் கடவுண்மாண் டதுபோற்
கதுமென வழிந்தது காரிருட் கங்குல். க

---

453. சூர் - சூரன். எழிலி - மேகம். இன்னவாறு புரிந்து. மடங்கலந்தவிசு-சிங்காதனம். வனச மாளிகை - தாமரையாகிய மாளிகையில். செந்தில் மாநகரில் தவிசின்மேல் வாழும் அறுமுகத்து இறை.

454. சடிலத்து - சடையில். மத்தக விழி விழித்தாங்கு - நெற்றிக்கண்ணைத் திறந்து விழித்ததுபோல. பொன் - திருமகள். அருணத் தடமலர் - செந்தாமரைப்பூ. பொதும்பர் - சோலை. உம்பர் - மேலே. இரவி - சூரியன். சூரியனுக்கு இறைவனது நெற்றிக்கண் உவமை. தோன்றல் - சிவபிரான். கன்னல் வில் - கரும்பாகிய வில்லையுடைய. கடவுள் - மன்மதன். இரவுக்குக் காமன் உவமை; காமனது நிறம் கருமை.

455. இவ்வகை யுலகிற் றுணங்கற லகல
இரவியா மொருவன்வந் திருவிசும் பெழலும்
மொய்வள ரவுணப் பேரிருண் மடிய
முருகனும் பருதியு முரணொடு மெழுந்து
செவ்வொளிக் கனகத் தேரின்மேற் புகுந்து
சேனையோர் வானுளோர் செறிந்துசூழ்ந் தேத்தப்
பௌவநீர் கடந்து சூரன்மூ தூரிற்
பாங்குறு வடதிசைப் பாலடைந் தனனே. உ

456. அங்கணவ் வமையத் திமைபவர் புனைவன்
ஆறுமா முக முடை யண்ணறன் னருளாற்
கொங்கல ரிருங்கா மருங்குசூ ழேம
கூடமாம் பெயருடைக் கோனகர் குயிற்றச்
சங்கரன் மதலை கொடிநெடுந் தடந்தேர்
தணந்துசீர் மந்திரத் தணைந்தது தன்னிற்
பொங்கெழின் மடங்கற் சேகரத் திடையே [ன்.
பொருந்திய வணையின்மேற் பொருந்திவீற் றிருந்தா

(எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

457. வீறுகொண்டதானையோடு மேன்மைகொண்ட வேலவன்
ஈறில் பாச றைத்த லத்தி லிந்த வாறி ருப்பவீ
றூறி லாத சூரன் முன்ன ருற்று நார தன்சொலச்
சீறி யின்ன தொற்ற ரோடு செற்ற மோடு சொற்றனன்.

---

455. துணஙகு அறல அகல - பிணைந்து நின்ற இருள் நீங்க. முரண் - வலிமை. மூதூர் - மகேந்திரபுரி.

456. அங்கண் அவ்வமையத்து - அவ்விடத்தில் அந்தச் சமயத்தில். கொங்கு - நறுமணம். ஏம கூடம் என்னும் பெயரையுடைய உத்தமமான நகரத்தை முருகனுக்காக இயற்ற. தணந்து-நீங்கி. மந்திரத்து - கோயிலை. மடங்கற் சேகரம் - சிங்கத்தின் தலை. அணை - சிங்காதனம்.

457. வீறு - வேறொன்றற் கில்லாத சிறபபு. தானை - சேனை. ஊறு - துன்பம். செற்றமோடு - கோபத்தோடு.

458\. வாரி மன்ன வற்பி டித்து வாரு மென்ன வேகியே
கோர மோடு பற்றி முற்கொ ணர்ந்தி டச்சி னந்துநீ
வீர மோடு மாறு கொண்டு வீறு கொண்ட தெவ்வரைச்
சேர விங்கு விட்ட தென்ன செப்பு கென்று செப்பினான்.

459\. அந்த வேலை வேலை மன்ன னமர ரோடு குமரவேள்
உந்து வானி னேகி னானு யர்ந்த பூத ரென்கணே
வந்தி டக்க லங்கி னேன்ம லங்கி னேன்வ ருந்தினேன்
பந்தி கொண்ட பூதர் தம்ப ரட்டி னுக்க மைந்திலேன்.

460\. ஏழை யேன்ற டப்ப தெங்ங னென்று கூறி நின்றிடத்
தாழ்வி லாத வொற்றர் வந்து சண்மு கக்கு மாரவேள்
வாழு நம்பெ ரும்ப திக்கு வடதி சைக்க ணெய்தினான்
சூழ்பா தாதி யோடு மென்று சொல்லவீது சொல்லினான்.

461\. இரவி யைத்த ளைந்து ளானை யிங்க ழைத்தி ரென்னலும்
பரவி யேகி யொற்றர் சொற்ற பானு கோப னைத்தரச்
சிரமொ ரைந்தன் மைந்த னோடு சேனையோரைவென்றுநீ
விரைவிலிங்குவருதியென்று விடைகொடுப்ப வேகினான்.

458\. வாரி மன்னவன் - சமுத்திர ராஜனை. கோரமோடு - கொடுமையுடன். மாறு கொண்டு - விரோத எண்ணம் கொண்டு. தெவ்வரை - பகைவரை. சேர - உன்னைக் கடந்து இங்கே வந்து அடையும்படியாக.

459\. அந்த வேலை - அச்சமயத்தில். வேலை மன்னன் - சமுத்திர ராஜன். வானின் ஏகினான் - ஆகாய வழியே வந்தான். மலங்கினேன் - மயங்கினேன். பந்தி கொண்ட - அணியணியாக வந்த. பரட்டினுக்கு அமைந்திலேன் - கணுக்கால் அளவுக்குக்கூட ஆழம் போதாமல் இருந்தேன்.

460\. பதாதியோடு - காலாட் படைகளோடு; உபலக்ஷணத்தால் மற்றப் படைகளையும் கொள்க.

461\. இரவியைத் தளைந்துளானை - பானுகோபனை. சிரமொரைந்தன் - சிவபெருமானுடைய.

462. ஆங்கு தன்ம னைக்க ணுற்ற டற்ப டைக்கலங்கள்கொண்
டேங்கு ருத தானை வெள்ள மிருப தான வாயிரம்
பாங்கி னோடு பாங்கி னிற்ப ரந்தி ரைந்து சூழவே
நீங்கி லாத விசய ஞதி யனிக மன்னர் சேரவே. ௯

463. கந்து கங்கண் முப்பதான வாயிரங் கலந்ததோர்
சுந்தரஞ் செறிந்திலங்கு துய்யவைய மேறியே
வெந்திறற் பெருஞ்சமர்க்கு மேவுகின்ற வாறுகண்
டிந்துநா ரதன்குகன்க ணொல்லைவந்து சொல்லினன். ௧௦

464. எந்தையான கந்தவே ளிலங்குவீர வாகுவாம்
சுந்தரன் றனைத்தெரிந்து சூரனிவ் விடத்தியாம்
வந்தவா றுணர்ந்துதன் மகன்றனைப் பதாதியோ
டிந்தவேலை நம்மொடே செருத்தொடங்க வேவினன்.

465. சேனையான துன்றவின்று சென்றுவென்றி யொன்றிநீ
ஊனமின்றி வருதியென் றுவப்பினோ டுரைத்தலும்
ஆனனங்க ளாறுகொண்ட வண்ணலைத் தணந்துபோய்த்
தூநலங்கொள் படைகள்கொண்டு துய்யவையமேறினன்

466. சுந்தரங்கொ ளெண்மருந் துலக்கமா மிலக்கரும்
வெந்திறல்கொள் பத்துநூறு வெள்ளமான பூதரும்
தந்திரங்கொள் சுப்பிராதி தானைமன்ன ருங்குழீஇ
வந்துசூழ வேகினன் மகிழ்ச்சிவீர வாகுவே. ௧௩

---

462. தானை - படை. பரந்து இரைந்து - பரவி முழங்கி. அனிக மன்னர் - சேனாபதிகள்.

463. கந்துகங்கள் - குதிரைகள். வையம் - தேர். சமர்க்கு போருக்கு. ஒல்லை வந்து - விரைவிலே வந்து.

464. செரு - போர்.

465. துன்ற - உடன் பொருந்த. வென்றியொன்றி - வெற்றி பெற்று. ஊனம் இன்றி - கேடில்லாமல். ஆனனங்கள் - திருமுகங்கள். வையம் - தேர்.

466. எண்மர் - வீரவாகு தேவருடைய தம்பிமார். துலக்கம் - பிரகாசம். திறல் - வலிமை. தந்திரம் - சேனே. சுப்பிரன் முதலிய படைத்தலைவர்களும்.

467. தலைமைகொண்ட பாசறைத் தலத்தினைத் தணந்துபோய்
நிலைமைகொண்ட சூரனூரி னீண்மதிற் புறத்துறத்
தொலைவில்பூதருஞ்சினங்கொள்சூரன்மைந்தனனிகமும்
பலபடைக்க லஞ்சொரிந் தெதிர்ந்துபோர் பயின்றவே.

468. தெண்டிரைக்கு நேரெனத் திரண்டிரண்டு சேனையும்
அண்டியோதை செய்துநின் றடுஞ்செருப் புரிந்திடச்
சண்டமுற்ற வவுணருஞ் சலந்தரித்த பூதரும்
மண்டுசோரி வாரிநேர மட்டிலார்கள் பட்டனர். ௧௫

469. மேனலங்கொள் பூதர்தாம் வெகுண்டுசென்று மேவலார்
ஆனையோடு மானைதன்னை யாளியோடு மாளினைச்
சேனையான தேரினோடு தேரைவாரி மோதலும்
ஊனமுற்ற வவுணர்தா முடைந்துவாடி யோடினார். ௧௬

470. அற்றவேலை யவுணர்தம்பி லனலியென்னு மன்னவன்
செற்றமோடு வந்தெதிர்ந்து தீதிலாத பூதர்மேல்
வெற்றிகொண்ட கணைகள்சிந்த வெந்திறல்கொள் பூதரு
ளுற்றசிங்கன்முனிவினோடு மொல்லைசென்றெதிர்ந்தனன்.

471. மிண்டுகொண்ட வனலிதேரில் விரவிநின்ற புரவியைத்
தண்டுகொண்டு மோதலுந் தளர்ந்திறப்ப வெய்யவன்

---

467. அனிகம் - படை. வீரவாகுவின் படையும் பானுகோபன் படையும் போர் செய்யலாயின.

468. கடலுக்கு ஒப்பென்று சொல்லும்படியாக. அண்டி - நெருங்கி. ஓதை - ஓசை. சண்டம் - வேகம். சலம் - பகை. சோரி - இரத்தம். வாரி நேர - கடலைப் போலப் பெருகும்படி. மட்டிலார்கள் - கணக்கில்லாதவர்கள்.

469. மேவலார் - பகைவருடைய. உடைந்து - தளர்ச்சி யடைந்து.

470. அற்ற வேலை - தோற்ற சமயத்தில். அனலியென்ற அசுரனும் சிங்கனென்ற பூதத்தலைவனும் போர் செய்தனர்.

471. மிண்டு - வலிமை. தண்டு - கதாயுதம். வெய்யவன் - அனலி. கோல் - அம்பு. வையம் - தேரை. அண்டலன் - பகைவனது.

கண்டுகோல் சொரிந்திடச் கனன்றவன்றன் வையமுற்
றண்டலன்கை விற்பறித் தடற்கொள்சிங்கன் வீசினன்.

472. *அற்றமற்ற சிங்கன்மீதி லனலிதண்டின் மோதலும்*
வெற்றிகொண்ட சிங்கனங்கண் வெய்யன் மார்படித்தவற்
பற்றி நின்று சுற்றி நற்படித்தலத் தடித்திடத்
தற்றுகின்ற வவுண ரூடு சண்டனீது கண்டனன். கசு

473. *கண்டசண்ட னடுவனென்று கழறும்வேலை சிங்கனவ்*
வண்டலன்றன் வையமுற் றவன்றடம் புயத்தின்மேல்
ஒண்டிறல்கொள் கதைபின்மோத வவனுமுந்து சிங்கன்மேல்
தண்டின்மோத விருவருந் தளர்ச்சியெய்தி வீழ்ந்தனர்.

474. *மற்றிவ்வேலை யவுணர் தம்மின் மாயனோடு பூதரிற்*
செற்ற முற்ற நீலனை சீலனங் கெதிர்ந்துநீ
ளுற்ற தண்ட முந்த மாய னுந்துமார்பில் வந்துபட்
டிற்றுளா னெனக்கலங்கி யிந்தவா றியற்றுவான். உக

475. *நீலன்மீது சூலமொன்று நீசன்விட் டிடப்படச்*
சாலவே வருந்தி நின்று தக்கமாயன் முன்புபோய்க்
கோலமார்பின் மீதுபாணி கொண்டுமோதி யண்டர்தம்
காலனைப் பிடித்தவன் களத்தினிற் கறித்தனன். உஉ

476. *கண்டமீது விண்டிடக் கடித்திரத்த முண்டுயிர்*
கொண்டபோது சண்டனோடு கோதில்சிங்க னங்கெழுந்

---

472. *அற்றம் - சோர்வு. தண்டின் - கதாயுதத்தால். மார்பு அடித்து. படித்தலத்து - பூமியின்மேல். தற்றுகின்ற - சூழ்ந்து நிற்கின்ற.*

473. *அடுவன் - கொல்லுவேன். அண்டலன் - பகைவன்.*

474. *மாயனென்னும் அசுரனும் நீலனென்னும் பூதத்தலைவனும் போர் செய்தனர். இற்றுளான் என - இறந்தானென்னும் படியாக.*

475. *நீசன் - மாயன். பாணிகொண்டு - கையால். அண்டர்தம் காலன் - தேவர்களுக்கு யமனைப்போன்ற மாயன். களத்தினில் கறித்தனன் - கழுத்திலே கடித்தான்.*

தொண்டிறற்கொடண்டுகொண்டுருத்தெழுந்துசிங்கனவ்
வண்டலன் கவுட்கரத் தடித்தனன் முடித்தனன். உகூ

477\. அன்னகாலை யவுணர்தம்மி லசமுகத்த னணுகவே
மன்னுகின்ற பூதர்தம்மின் மதுவெதிர்க்க வஞ்சகன்
மின்னுனைச் சரங்கள்சிந்த வெய்யன்வைய மீதுபோய்
ஒன்னலன் கலங்கவேலை யோதைபோ லொலித்தனன்.

478\. ஆர்த்தபோதி லசமுகத்த னயர்வதாக வன்னதைப்
பார்த்துவீர னல்லையுய்ந்து போகெனப் பகர்ந்துநீள்
சீர்த்திகொண்ட மண்ணிடைத் திரும்பவல்லை நில்லெனு
வார்த்தைபேசிவந்தெதிர்ந்துமறிமுகத்தனிதுசெய்வான்.

479\. மையிலாத பூதன் மீது வன்சரம் பொழிந்திடக்
கையினல் விலக்கல்செய்து கையன்முன்பு சென்றவன்
கொய்யுளைச் சகட்டினைக் கொதித்தெடுத்து வேலையில்
துய்யன்வீச வைய மீது துண்ணெனக் குதித்தனன்.

476\. கழுத்துப் பிளவுபடும்படியாகக் கடித்து. தண்டு - கதாயுதம். உருத்து - கோபித்து. அண்டலன் - பகைவனது. கவுள் கரத்து அடித்தனன் முடித்தனன் - தாடையில் தன் கையால் அடித்துக் கொன்முன்.

477\. அசமுகன் என்னும் அசுரனும் மதுவென்னும் பூதத்தலைவனும் எதிர்த்துப் போரிட்டனர். வெய்யன் வையமீது - அசமுகனது தேரின்மேல்.

478\. அயர்வதாக - மூர்ச்சையடைய. உய்ந்து போக - நீ பிழைத்துப் போவாயாக. தன் முழக்கத்தைக் கேட்டமாத்திரத்தில் பயந்து மூர்ச்சையான அசமுகனைக் கொல்லாது விடுத்தான். இது தழிஞ்சியென்னும் புறத்துறை. மறிமுகத்தன் - அசமுகன்.

479\. மை - குற்றம். கையன் - அசமுகன். கொய் உளைச் சகட்டினை - கத்தரிகையால் மட்டஞ்செய்த மயிரையுடைய குதிரைகளைப் பூட்டிய தேரை; கொய்யுளை - குதிரை ; அன்மொழித்தொகை. வேலையில் - சமுத்திரத்தில். வையமீது - பூமியின்மேல். குதித்தனன்: குதித்தவன் அசமுகன்.

480. குதித்துவந்து பூதன்முன்பு கூடிமற் றொழில்செயப்
பதத்தினா லுரத்தொடம் பரத்தின்மீ தெறிந்திடக்
கதித்தபூவின் மேவியே களங்கமற்ற மதுவின்மேற்
கொதித்துமாயை யான்மறைந்து கொடியநேமி விட்டனன்.

481. தந்திரங்கொண் மதுவின்மீது தகர்முகத்தன் விட்டிடும்
வெந்திறல்கொ டிகிரிதான் விரைந்துசென்று பூதனங்
குந்துகின்ற படையிலாம லுறுதலிற் றிரும்பியே
வந்துதீயன் முடிதடிந்து மாலிடத் தடைந்ததே. ௨அ

482. ஆய காலை யவுணர்மன்ன ரனிகமோடு மணுகலால்
ஏயபூத ருடையவே யிலக்கர்மேவு தண்டகன்
போயெதிர்ந்து பல்லவம் பொழிந்தழிப்ப வீதெலாம்
தீய சூரன் மாமகன் றெரிந்தெதிர்ந்து வந்தனன். ௨௯

483. வந்தெதிர்ந்த குறளினோர் மடிந்துடைந் திடச்சரம்
சிந்திமுந்தி வந்திடச் சினத்தினோடு முக்கிரன்
உந்துசூரன் மைந்தன்முன்ன ருற்றவன்ற னதுதேர்
அந்தரத்தின் மீதுபோக வங்கெடுத் தெறிந்தனன். ௩௰

---

480. மல்தொழில் - மல்யுத்தத்தை. மதுவானவன் அசமுகனைக் காலால் வலிமையோடு எடுத்து ஆகாசத்தில் வீசி எறிந்தான். கதித்த - மேலான. நேமி - சக்கராயுதத்தை.

481. தந்திரம் கொள் - சேனைகளைத் துணையாகக் கொண்ட. தகர் முகத்தன் - அசமுகாசுரன். திகிரி - சக்கராயுதம். உந்துகின்ற - ஏவுகின்ற. நிராயுதபாணிமேல் ஏவியமையின் அவனை ஒன்றும் செய்யாமல் மீண்டு தன்னைவிட்ட அசுரனது தலையையே அறுத்துவிட்டது. முடி தடிந்து - தலையை அறுத்து. மாலிடதது - திருமாலிடம்.

482. அனிகம் - சேனை. உடையவே - தோல்வி அடைய. இலக்கர் மேவு தண்டகன் - லக்ஷ வீரர்கள் கூட்டத்தில ஒருவனாக இருந்த தண்டகன் என்பவன். பல்லவம் - அம்புகளை. சூரன் மாமகன் - பானு கோபன்.

483. குறளினோர் - பூதங்கள். சரம் சிந்தி - அம்புகளை எய்து. உக்கிரன் - ஒரு பூதத்தலைவன். அந்தரத்தின்மீது - ஆகாசத்தில்.

484. நண்ணுதேரி னோடு பானு நாடுமட்டு மேகியே
மண்ணின்மேல்விழுந்துசென்றுவன்றிறல்கொளுக்கிரன்
திண்ணமுற்ற வங்கமீது செங்கையா லடித்துநீள்
விண்ணின்மீ தெடுத்தெறிந்து வேறுதேரி லேறினான்.

485. காசி லேழு லோகமுங் கடந்து பின்ன ருக்கிரன்
வீசுசீர்கொள் படியின்மேல் விழுந்தனன் கிடந்தனன்
ஏசி லாத தண்டிநீ டிரும்பி னாகி யேனையோர்
பூசலான வெந்தொழில் புரிந்திரிந்து போயினார். ௩௨

486. ஈதுகண் டிலக்கர்வந் தெதிர்ந்துகோல் சொரிந்தவன்
தீதுகொண்ட தேரினைச் சிதைப்பவேறு தேரின்மேல்
ஊதைபோல வாவிநின் றுறுஞ்சரங்கள் கோடிவிட்
டேதமற்ற வீரர்வில் லிலக்கமுந் துணித்தனன். ௩௩

487. விற்றுணித் தளப்பில் வாளி வீரர்மே லழுத்தலும்
மற்றுநே ரிலாவிலக்கர் வாடியஞ்சி யோடினார்
உற்றவிச் செயற்றெரிந் துரங்கொள்வீர கோளரி
செற்றமோடு மெற்றளைந்த தீயன்முன்பு வந்தனன். ௩௪

488. வந்தளப்பில்கோல்சொரிந்து வஞ்சன்விட்டகோலெலாம்
சிந்தியாயி ரஞ்சரஞ் செலுத்திவெய்யன் மார்பையங்

---

484. பானுநாடுமட்டும் - சூரியமண்டலம் வரைக்கும். அங்கமீது-உடலின்மேல்.

485. காசு இல் - குற்றம் இல்லாத. படியின்மேல்-பூமியின்மேல். தண்டி, பிஞகி - பூதகணத் தலைவர்கள்.

486. கோல் சொரிந்து - அம்புகளை மிகுதியாக விட்டு. அவன் - பானுகோபனது. ஊதைபோல வாவி - காற்றைப்போலத் தாவி. லக்ஷ வீரருடைய விற்கள் லக்ஷத்தையும் அறுத்தான்.

487. துணித்து - அறுத்து. அளப்பு இல் வாளி-கணக்கில்லாத அம்புகளை. உரம் - வலிமை. எல்தளைந்த தீயன் - பானுகோபன்; எல் - சூரியன்.

488. வீரகோளரி அம்பால் எய்து சன்னல் துவாரம் போலப் பானுகோபன் மார்பைத் துளைக்க. மாயவன் படைக்கலம் - நாராயணாஸ்திரம். வீரன் - வீரகோளரி.

குந்துசா ளரம்படுத்த வுள்ளநொந்து மாயவன்
வெந்திறற் படைக்கலத்தை வீரன்மீது வீசினான். ௨௬

489. வீசலுற்ற படைவிரைந்து மேனியுட் பொருந்தலும்
மாசிலாத வீரனும் மயங்கியே விழுந்தனன்
ஏசில்வீர பானுவந் தெதிர்ந்துவெய்யன் வையமுற்
றோசைநாணி விற்பறித் தொடித்தெறிந்த வெல்லையின்.

490. தூய வீர னாக மீது சோரிநீர் குதித்திட
மாயவஞ்சன் வாளினான் மனஞ்சினந்து குத்தலும்
தீயன்மீ தணிந்தவச் சிரக்கவச மற்றிட
ஓய்வில்வீர பானுவு முரத்துவாள் செலுத்தினான். ௨௭

491. சூரன்மைந்த னுட்சினந்து தூய னெற்றிகுத்தலும்
வீரபானு வீழவே வெகுண்டுவீர ராக்கதன்
கோரமோடு வந்தெதிர்ந்து கோல்களா யிரங்கடேய்
வாரமோடு மவுணனிட்ட மவுலியங் கறுத்தனன். ௨௮

492. வேதன்முன் கொடுத்தவேலை வெய்யன்விட் டிடப்படப்
போதநொந் தயர்ந்தனன் பொருந்திமற்றை யைவரும்
தீதினா னெடுந்தனுச் செருப்புரிந் துடைந்திடத்
காதல்வீர வாகுவீது கண்டுசென் றெதிர்ந்தனன். ௨௯

493. தீதில்வீர வாகுவைத் தெரிந்தெரிந்து தீயவன்
வேத னல்லை மாலுமல்லை வேலினானு மல்லையோர்

---

489. வெய்யன் வையம் உற்று - பானுகோபனது தேரில் தாவி. ஓசையையுடைய நாணியோடு கூடிய வில்லைப பறித்து.

490. வீரன் - வீரபானு. சோரிநீர் - இரத்தம். வாளினால் குத்தலும். உரத்து - பானுகோபனது மார்பில்.

491. பானுகோபன் வீரபானுவின் நெற்றியிலே குத்தினான். தூய் - தூவி. வாரம் - விருப்பத்தோடு. மவுலி - கிரீடத்தை.

492. வெய்யன் - பானுகோபன். போதநொந்து அயர்ந்தனன் - மிகவும் துன்புற்று மூர்ச்சை அடைந்தான். மற்றை ஐவர்-வீரராக்கதன், வீரமகேச்சுரன், வீரதீரன், வீரமகேந்திரன், வீரபுரந்தரன் என்பார். தனுச்செரு புரிந்து - வில்யுத்தம் செய்து. உடைந்திட-தோல்வியடைய.

தூதனீயெ ஞேடுபோர் தொடங்கவல்லை கொல்லென
மாதிறல் பரித்துயர்ந்த வாகு வீது கூறுவான். ௪௰

494. வீரம்வீரர் சிறிதுமே விளம்புவார்கொ லோவெனச்
சூரன்மைந்தன் முனிவுகொண்டு சோனைமாரி மானவெம்
கோரவாளி தூவலுங் குவட்டைவென்ற மொய்ம்பனும்
ஏருலாவு கணைசொரிந் திருஞ்செருப் புரிந்தனன். ௪௧

495. மண்ணிலோடு மெட்டதான மாதிரத்தி லோடுநீள்
விண்ணிலோடு நீலவேலை மீதிலோடு நேமியின்
கண்ணிலோடு மண்டமுன்பு கடிதிலோடு மீளுமால்
எண்ணிலாத வன்மைகொண்ட விருவரேறு மிரதமே.

496. சூரன் மைந்தன் விடுசரங்க டுய்யவன் றடுத்திடும்
வீர வாகு விடுசரங்கள் வெய்யவன் றடுத்திடும்
ஆரு மஞ்ச விந்தவா றருஞ்சரம் பொழிந்துநீள்
தீரமேவு மிருவருஞ் செருப்புரிந் துலாவினர். ௪௩

497. வெந்திறல்கொள் வீரன்விட்ட விசிகமாரி சிந்திவன்
கந்தவாகை வாகுவின் கரத்து வில்லை வல்லையங்
கந்த மற்ற சூரன் மைந்த னுயிரஞ் சரங்களால்
சிந்தவே துணிப்பவீர னிந்தவாறு செய்குவான். ௪௪

---

493. எரிந்து - சீறி. பரித்து - தாங்கி.

494. தம் வீரத்தை வீரர் தாமே சொல்லுவார்களா? சோனைமாரி மான - பெருமழையை ஒப்ப. கோர வாளி தூவலும் - கொடிய அம்புகளை விடவே. மொய்ம்பன் - தோளை உடையவன். இருஞ் செரு - பெரிய போரை.

495. மாதிரத்தில் - திசைகளில். நீல வேலைமீதில் - கரிய கடலில். நேமி - சக்கரவாளகிரி. அண்டமுன்பு - அண்டகடாகத்தின்மீது.

496. துய்யவன் - வீரவாகு. தீரம் - மனத்துணிவு.

497. விசிக மாரி - அம்பு மழை. கந்தவாகை வாகுவின் - மணம் பொருந்திய வாகைமாலையை அணிந்த வீரவாகுவினது. அந்தம் அற்ற - அழிவில்லாத.

498. பின்னுமோர் நெடுந்தனுப் பிடித்தொரா யிரஞ்சரம்
துன்னவே விடுத்தவன் றுலங்குவிற் றுணித்தபோ
தன்னவெய்யன் வேறுவிற்கொ டாயிரஞ் சரங்கடாம்
மன்னிரும் புகழ்ச்சிவீர வாகுமேல் விடுத்தனன். சரு

499. விட்டபோது வீரவாகு வெஞ்சரங்க ளேழினால்
ஒட்டலன்றன் மௌலிதள்ளி யொல்லைபத்து நூறுகோல்
தொட்டுவெய்ய னரணமுந் துணித்திடத் துலங்கிய
மட்டில்சீர்கொள் பரிதிகண்டு மண்டுமோகை கொண்டனன்.

500. கோரமான வாயிரங் கொடும்பெருஞ் சரங்கடாம்
வீரவாகு நெற்றிமீது வெய்யன்மைந்த னெய்யவே
சோரியுண் டழுந்திடத் துலங்குசெங் கரத்தினால்
ஈருமம் பிணைப்பறித் தெறிந்துவீர னிதுசெய்வான். சஎ

501. சித்திரங்கொள் பானுவைச் செயிர்த்துவீறு சேவகன்
வத்திரத்தி லாயிரம் வயங்கொண் மார்பி லாயிரம்
மெத்துதோளி லாயிரம் விறற்கரத்தி லாயிரம்
அத்திரங்க ளொல்லைசென் றழுந்துறத் துரந்தனன். சஅ

502. கந்தனெந்தை யிளவல்விட்ட கடியவாளி கொடியவன்
வெந்திறல்கொ ளங்கமெங்கும் விரவியங் கழுந்தலால்
வந்துவந்து சோரிமூட வாடிநொந்து கந்துகப்
பந்திகொண்ட தேரின்மீது பானுகோப னின்றனன். சகூ

---

498. தனு - வில்லை. வீரவாகு பானுகோபனது வில்லை அறுத்தார்.

499. ஒட்டலன் - பானுகோபன். அரணமும் - கவசத்தையும். பரிதி கண்டு - சூரியன் கண்டு. ஓகை - மகிழ்ச்சி. தன்னைப் பிணித்த பகைஞன் ஆதலின் அவன் சோர்வு கண்டு சூரியன் மகிழ்ந்தான்.

500. சோரி - இரத்தம். ஈரும் - பிளக்கின்ற.

501. சித்திரம் - அழகு. பானுவை - சூரியனை. வத்திரத்தில் - முகத்தில். வய - வலி. துரந்தனன் - எய்தான்.

502. எந்தை இளவல் - வீரவாகு. கடிய வாளி - வேகமாகிய அம்பு. கந்துகப் பந்தி - குதிரை வரிசை.

503. அன்னபோதி லீதுகண்ட வன்றனாது சேனையோர்
மன்னுவீர வாகுமுன்பு வந்தெதிர்ந்து போர்செயத்
துன்னுவிற்கொள் வாளிகொண்டு துற்றசேனைமுற்றவும்
சின்னபின்ன மாகவே செறுத்துநின் றறுத்தனன். ௫0

504. பின்புமுன் புடைந்திறந்த பெருகு பூதர் யாவரும்
துன்பிலா விலக்கருந் துலக்கமான வெண்மரும்
இன்பமா மகிழ்ச்சியோடு மீடினோடுங் கூடியே
மன்பெரும் புகழ்ச்சிவீர வாகுவின்க ணேகினார். ௫௧

505. துற்றசோப மற்றபின்னர் சூரன்மைந்தன் வீரனோர்
செற்றமோ டெதிர்ந்துநூறு நூறுகோல் செலுத்தியே
வெற்றிமொய்ம்ப னேறுகின்ற வீறுதேரை நூறலும்
மற்றுமோர் சகட்டில்வீர வாகுவல்லை வாவினான். ௫௨

506. வாவிநூறு நூறுகோலில் வஞ்சகன்கை வில்லுடன்
மேவுகின்ற தேரழிப்ப வேறுதேறி லேறிவெம்
பாவிமற்று மோர்தனுப் பரித்திரா யிரஞ்சரம்
தூவிவீர னாகமீது தோயவங் கழூத்தினான். ௫௩

507. ஆக மீது பகழிவந் தழுந்த வீர வாகுவும்
சோகமங் குணர்ந்திரேழு துங்க வாளி தூவியே
மாகர்தெவ்வன் வில்லொடித்து வாளியா யிரங்கடாம்
ஏகவிட்டு வெய்யனேறு மிரதமுங் கெடுத்தனன். ௫௪

---

503. துற்ற - நெருங்கிய. செறுத்து - அழித்து.

504. ஈடு - பெருமை. இறந்துபட்ட பூதர்களும் லக்ஷ வீரர்களும் எட்டு வீரர்களும் மீண்டும் உயிர்பெற்று எழுந்தனர்.

505. துற்ற சோபம் - அடைந்த சோர்வு. நூறு நூறுகோல் - பதினாயிரம் அம்புகள். வெற்றி மொய்ம்பன் - வீரவாகு. சகட்டில் - தேரில். வாவினான் - தாவி ஏறினான்.

506. பாவி - பானுகோபன். தனு பரித்து - வில்லைத் தாங்கி.

507. ஆகம் - திருமேனி. சோகம் - சோர்வு. இரேழு - பதினான்கு. மாகர் தெவ்வன் - தேவருக்குப் பகைவனாகிய பானுகோபன்.

508. மற்றுநூறு வாளிகொண்டு மார்பைவாயில் செய்யவோர்
வெற்றிவையம் வெய்ய னேற வீரவீரன் விசிகமங்
குற்றவா யிரந்துரந் துரந்திறந்த நெறியினால்
துற்றிடுஞ்சி லீமுகங்கொ டூணியங் கறுத்தனன். ருரு

509. இந்தவாறு கண்டுவில்லி னிவனைவெல்வ தரிதெனு
முந்துபானு வைத்தளைந்த மொய்ம்பன்வீர மொய்ம்பு
அந்த வீர னாதியான வாருமோக மாகவே [சேர்
வெந்திறல்கொண் மோகமான வேல்விடுத்து நின்றனன்.

510. வந்த வந்த வேலினான் மயங்கி வீறு பூதரும்
முந்துசீ ரிலக்கருப் முரண்பொருந்து மெண்மரும்
கந்தனேவு தூதனுந் தளர்ந்து கந்தி னிற்றலும்
அந்தமற்ற கணைகள்சிந்தி யவருருத் துளைத்தனன். ருள

511. ஆய காலை முருக னீதறிந்தமோக வேல்விடுத்
தேயு மோக வேலழிப்ப வேருலாவு வீரரோ
டோய்வில்வென்றி மொய்ம்பனங் குளந்தெளிந்து தானவன்
சேயின்மீதி லாதிவேல் செலுத்துமா றெடுத்தனன்.ருஅ

---

508. வாயில்செய்ய - துளைக்க வையம் - தேர். விசிகம் - அம்பு. உரம் திறந்த நெறியினால் - மார்பிலே உண்டான துவாரத்தின் வழியே. துற்றிடும்-நெருங்கிச் செல்லும். சிலீமுகங்கொள் தூணி-அம்பறாத்தூணி ; சிலீமுகம் - அம்பு.

பானுகோபனது மார்பிலே துவாரஞ்செய்து அதன் வழியே அம்பைச் செலுத்தி அவனது முதுகிலுள்ள அம்பறாத் தூணியை அறுத்தார்.

509. மோகாஸ்திரத்தைப் பானுகோபன் விட்டான். பானுவைத் தளைந்த மொய்ம்பன் - பானுகோபன். வீர மொய்ம்பு சேர் அந்த வீரன் - வீரவாகு.

510. வீறு - வலிமையோடு எழுந்த. முரண் - வலிமை. தூதனும் - வீரவாகுதேவரும். கந்தின் - தம்பத்தைப்போல. உரு - உடம்பை.

511. அமோகாஸ்திரத்தை முருகவேள் விட்டு மோகவேலைத் துணித்தார். வென்றி மொய்ம்பன் - வீரவாகு. தானவன் சேய் - பானு

512. கண்ணுதற் பரன்படைக் கலந்தொடுக்கின் மாய்வுறப்
பண்ணுமந்த வுந்துவேல் பரித்துவந்தி லேனெனு
எண்ணிமாய மாயொளித் திருக்கைவெய்ய னேகலும்
விண்ணினின்ற கன்றருக்கன் மேல்கடற் படிந்தனன்.

513. நண்ணலன் கரந்துபோன செய்கைதன்னை நாடியே
திண்ணமுற்ற தண்டமோடு திண்டிறற் புயத்தினோன்
துண்ணெனத் திரும்பியே துலங்குவெற் பெறிந்தவேற்
பண்ணவன்றன் முன்பணிந்து பாசறைக்கண் மேவினான்.

(கலிநிலைத்துறை)

514. இந்த வாறிவ ணின்றிட விரவியம் பகைஞன்
புந்தி தன்னிடை யளவிலாப் பெருந்துயர் பொருந்த
நொந்தி ருந்தன னிவையெலா மொற்றர்போய் நுவல
அந்த வேலையி லறிந்தனன் சூரனு மவுணன். சூக

515. அறிந்த தானவ னேயான் படையொடு மணுகிச்
செறிந்த சேனையும் பெருங்கிர வுஞ்சமாஞ் சிலம்பை
எறிந்த வேற்படைக் குமரனுஞ் சமரில்வந் தெதிர்ந்து
மறிந்தி டும்படி பொருவனென் றுன்னியே வதிந்தான்.

கோபன். ஆதிவேல் - சிவபிரானது ஆயுதம்; வேல், படைப் பொதுப் பெயராக நின்றது.

512. சிவபிரானது அஸ்திரத்தை இவன் தொடுத்தால் அது நம்மைக் கொல்லும்; அதை மாற்றுவதற்கு நாம் சிவபிரான் படையைக் கொண்டு வரவில்லையே என்று பானுகோபன் எண்ணி மாயமாய் ஒளித்தான். பரித்து - தாங்கி. இருக்கை - தன் இருப்பிடத்திற்கு. அருக்கன் - சூரியன்.

513. பானுகோபன் மறைந்ததை உணர்ந்து வீரவாகுவும் பாசறைக்குச் சென்றார். நண்ணலன் - பகைவன் தண்டமோடு - சேனையோடு. புயத்தினோன் - வீரவாகு. வெற்பு - கிரவுஞ்ச மலை.

514. இரவியம் பகைஞன் - பானுகோபன். நுவல - சூரனுக்குச் சொல்ல.

515. நாளைக்கு நான் போர் செய்வேனென்று எண்ணி இருந்தான் சூரன். வதிந்தான் - தங்கினான்.

516. வண்டு லாவரும் வண்டுழாய் மிலேச்சிய மௌலித்
திண்டி றல்பெறு மரியுரத் திலங்கிய திருப்போல்
எண்ட விர்ந்தவெண் சீகரச் சாகரத் திடையே
சண்ட வெங்கதிர் பரப்பிவந் தெழுந்தனன் றபனன். ௬௩

517. கந்த மாமலர்ப் பொதும்பர்சூழ் கமலைமா நகர்வாழ்
எந்தை ஞானசம் பந்ததே சிகன்றனை யெதிர்ந்தார்
பந்த வாணவப் படலம்விண் டிரிந்திடும் படிபோல்
அந்த ரம்புவி மறைத்தபே ரிருளகன் றதுவே. ௬௪

இரண்டாநாட் சூரபன்மன் யுத்தம்

518. அன்ன காலையி லிலக்கவெள் ளம்படை யணுகத்
துன்னு சீரசு ரேந்திர னுடனதி சூரன்
என்ன நின்றிடு தம்பியர் மைந்தரா மிருவர்
மன்னி டும்படைத் தலைவரா யிரதமேல் வரவே. ௬௫

519. சீர்பு ரிந்திடு மொருபெருந் தேரின்மேற் றிறற்சூர்
ஊர்பி ரிந்துபோர் புரிந்திட வருதல்கண் டோடிக்
கூர்பு ரிந்திடு குலிசவேற் கரத்தினன் கூற
ஏர்பு ரிந்திடு குமரவே ளறிந்தன னிதனை. ௬௬

---

516. சூரியன் உதயமானான். மிலேச்சிய முடித்த. அரி உரத்து - திருமாலின் திருமார்பில். சீகரச் சாகரத்திடையே - துளிகளை யுடைய கீழ்கடலில்; சகரரால் தோண்டப்பெற்ற கீழ்கடலுக்குச் சாகரம் என்னும் பெயர் உண்டாயிற்று; அதனைத் "தொடுகடல்" (**புறநானூறு**) என்பர். சண்ட வெம் கதிர் - மிக்க வெம்மையையுடைய கிரணங்களை. தபனன் - சூரியன்.

517. கந்தம் - நறுமணம். பொதும்பர் - சோலை. கமலை மாநகர் - திருவாரூர். ஞான சம்பந்த தேசிகன் - தருமையாதீன முதல் ஞானாசிரியர். பந்த ஆணவப்படலம் விண்டு இரிந்திடும்படிபோல் - பாசமாகிய ஆணவ மலத்தின் பரப்பு நீங்கிக் கெடுதலைப்போல. அந்தரத்தையும் புவியையும் மறைத்த; அந்தரம் - வானம்.

518. சூரனுடைய தம்பியின் புதல்வர்களாகிய அசுரேந்திரன், அதிசூரன் என்னும் இருவரும் சூரனுடன் படைத்தலைவராக வந்தனர்.

519. ஊர் பிரிந்து - நகரத்தைவிட்டு. குலிசவேல் கரத்தினன் - இந்திரன்.

520. அறிந்து மாருதச் சாரதி யியற்றுதே ரணுகிச்
சிறந்த சீருள விளையவ ரிரதமேற் செல்லப்
புறந்த ராதவீ ராயிர வெள்ளமாம் பூதர்
செறிந்துசூழ்ந்திடத்தானவன் படைக்கெதிர்சேர்ந்தான்.

521. சேர்ந்த காலையிற் பூதரு மவுணருஞ் சினங்கொண்
டார்ந்த பற்பல படைக்கலஞ் சொரிந்துபி னார்த்து
நேர்ந்து கிட்டியங் கிருஞ்செருப் புரிந்தனர் நெடுஞ்சீர்
சார்ந்த சாரத ரின்னன பின்னர்செய் தனரே. ௬௮

522. ஆயி ரம்பெருந் தேரினைக் கரங்களா லள்ளி
ஆயி ரங்கரி கெட்டிட மோதுவ ரதற்பின்
ஆயி ரங்கரி பாணிகொண் டெற்றியே யடற்பத்
தாயி ரம்பரி யழிவுறப் புரிகுவ ரடலால். ௬௯

523. கோடி வெம்பரி பாணிகொண் டாயிரங் குலவும்
கோடி யாகிய வவுணரை யடித்துயிர் குடித்தார்
வாடு ருவிறற் றகுவரும் பூதரை வளைவுற்
றீடு சேர்ந்திடு பற்பல படையினா லிறுத்தார். ௭௦

524. வீறி வந்திடு தானவ ரானவர் வெகுண்டு
சீறு சாரத ருடல்பதை பதைத்திடச் சிதைத்தல்
ஈறி லாவிறற் பூதமன் னவர்தெரிந் தெதிர்போய்
மாறு றும்படி தானவர் தானையை வதைத்தார். ௭௧

---

520. மாருதச் சாரதி - வாயுவாகிய தேர்ப்பாகன். இயற்று தேர் - அலங்கரித்த தேரை. புறந்தராத - முதுகு காட்டாத. தானவன் படைக்கு எதிர் - சூரனது சேனைக்கு எதிரே.

521. நேர்ந்து - எதிர் வந்து. கிட்டி - நெருங்கி. சாரதர் - பூத கணத்தினர்.

522. பாணி கொண்டு எற்றியே - கையால் மோதி.

523 தகுவரும் - அசுரர்களும். ஈடு - பெருமை. இறுத்தார் - கொன்றனர்.

524. மாறு உறும்படி - அவர்கள் செய்ததற்கு எதிர் விளைவை அடையும்படியாக.

525. பிணங்கள் சோரிவெற் பாறுபோன் மேவுறப் பெருஞ்
கணங்க டானவர் கணங்களை யடுதிறங் காணூஉ [சீர்க்
இணங்கு சீரதி சூரன்வந் தறுமுக னிருதாள்
வணங்கு பூதர்மேற் பொழிந்தனன் பகழியா மாரி. எஉ

526. அந்த வேலையிற் பூதரி லுக்கிர னணுகித்
தந்தி மாமுகன் முன்னவன் சுதன்மிசைத் தண்டொன்
றுந்த வுந்துமக் கதையதி சூரன துரத்து
வந்து சாலிகை சிந்திய தவுணர்கண் மயங்க. எ௩

527. மூடு சாலிகை சிந்தலுஞ் சிந்தையுண் முனிந்து
பாடி லுக்கிரன் மீதுநூ றாயிரம் பகழி
கூட விட்டுழிக் குருதிநீ ரெழுந்தது கொதித்தோர்
ஈடு வெற்புவிட் டவுணர்கோன் றேரினை யிறுத்தான்.

528. மற்றோர் வையமேற் பாய்தலு முக்கிர வலியோன்
செற்ற மோடுதேர்ப் பரிகளை யுதைத்திடத் தீயோன்
தற்று நூறுகோல் விடுத்தலு நெடியகைத் தடியால்
இற்றி டும்படி விலக்கவே றிரதமே றினனே. எ௫

---

525. பிணங்கள் வெற்பைப் போலவும் சோரி ஆற்றைப்போலவும்; சோரி - இரத்தம். கணங்கள் - பூதர். தானவர் கணங்களை - அசுரத்தொகுதிகளை. காணூஉ - கண்டு. பகழி - அம்பு.

526. தந்திமாமுகன் - தாரகன்; அவனுக்கு முன்னவன் சிங்கமுகன்; அவன் சுதன் அதிசூரன். தண்டு - கதாயுதம். உரத்து - மார்பில். சாலிகை சிந்தியது - கவசத்தை உடைத்துக் கீழே விழச் செய்தது.

527. பாடு இல் - அழிவு இல்லாத. பகழ் - அம்புகளை. கூட - ஒருங்கே. விட்டுழி - எய்தபோது. ஈடு-பெருமை. உக்கிரன் ஒரு மலையை எடுத்து வீசி அதிசூரனது தேரை அழித்தான்.

528. வையம் - தேர். தற்று - செறியச் செய்து. உக்கிரன் விலக்கினான்.

(எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

529. ஏறி நின்றவதி சூர னுக்கிரனை
ஈறு செய்வனென வெண்ணியே
சீற னற்படைய ரும்பு னற்படை
திறற்ச மன்றனது திண்படை
வீறு கின்றதொரு காலி னுந்துபடை
மின்ய டைத்தவிதி தன்படை
மாற னொண்படை விடப்பி டித்துடல்
வருநது ருதவை யருந்தினன். எசு

530. விட்ட விட்டபடை முற்று முற்றுதிறல்
மிக்க வுக்கிரன் விழுங்கலும்
துட்ட னவதி சூர னாதிபடை
தொட்டி டப்பரனை யுக்கிரன்
இட்ட மோடுதொழு தஞ்செ ழுத்தினை
இயம்பி நின்றிடலு மெந்தைதன்
நெட்டி ரும்படை திரும்பி முக்கணுடை
நின்ம லன்புடை யடைந்ததால். எஎ

531. ஈது கண்டரி முகத்தன் மாமகன்
இலங்கு தேரினு மிறங்கியே
கோது செய்யுமொரு தண்டு கொண்டுமிகு
கூளி மன்னனெதிர் கூடிவண்

---

529. சீறு அனல் படை - கொதித்து வருகின்ற ஆக்கினேயாஸ்திரம். புனற்படை - வாருணாஸ்திரம் சமன் தனது திண்படை - யமதர்மாஸ்திரம். காலின் உந்து படை - வாயவாஸ்திரம்; கால்-காற்று. மின் - மின்னுதல். விதிதன்படை - பிரமாஸ்திரம். மால்தன் ஒண் படை - நாராயணாஸ்திரம். அதிசூரன் விட்ட அஸ்திரங்களையெல்லாம் உக்கிரன் பிடித்து விழுங்கிவிட்டான்.

530. ஆதி படை தொட்டிட - பாசுபதாஸ்திரத்தை எய்யவே. அஞ்செழுத்தினை இயம்பி - பஞ்சாக்ஷரத்தைச் செபித்து. நெட்டிரும் படை - நீண்ட பெரியபடை; பாசுபதாஸ்திரம் அதி சூரன் ஆயுதம் எடாமல் மந்திரம் ஓதி நிற்க, நிராயுதபாணிமேற் செல்லாத பாசுபதாஸ்திரம் மீண்டு சிவபிரானிடமே போயிற்று.

போது கொண்டதொடை கொண்ட தோண்மிசை
புடைப்ப வக்கதை பறித்தவன்
தீது கொண்டவுர மீத டித்துழி
சிறந்த தொல்லுயிர் துறந்தனன். எஅ

532. இன்ன வாறது தெரிந்து நெஞ்சகம்
எரிந்து தானவர்க ளிந்திரன்
மன்னு பூதர்கள் பதைத்து மாளும்வகை
வாளி சிந்தியெதிர் வந்தபோ
தின்ன லற்றகுறண் மன்ன ரிற்கனகன்
என்னு மன்னவ னெதிர்ந்துநின்
றன்ன வஞ்சனொடு போர் புரிந்திடலும்
ஆயி ரங்கணை விடுத்தனன். எசு

533. மெத்து மத்திர முருத்த னிற்பட
மெலிந்த னன்கடிது வீறுமுன்
மத்த னென்பவ னெதிர்ந்து போர்புரிய
வஞ்ச னெண்ணில்பல வாளிதூஉய்
எய்த்தி டும்படி யிழைப்ப மந்தனெதிர்
எய்தி வெய்யசமர் செய்திடப்
பத்து நூறுகணை சிந்தி மந்தனும்
அயர்ந்தி டக்கடிது பண்ணினான். அ0

---

531. அரிமுகத்தன் மாமகன் - அதிசூரன். கோது - குற்றம்; இங்கே, கொலை. கூளி மன்னன் - பூதர்களுக்குத் தலைவனாகிய உக்கிரன். தொடை - மாலை. அந்தக் கதையைப் பறித்து உக்கிரன் அவன் மார்பின்மீதே திருப்பி அடித்தான்; அதிசூரன் இறந்தான்.

532. இன்னவாறது - இத்தகைய செய்தியை. தானவர்கள் இந்திரன் - அசுரேந்திரன். குறள் மன்னரில் கனகன் - பூதத் தலைவர்களுள் ஒருவனாகிய கனகன் என்பவன்.

533. மெத்தும் அத்திரம் - மிக்க வலிமையை உடைய அம்புகள். உருத்தனில் - உடம்பில். மெலிந்தனன் - கனகன் தளர்ச்சியை அடைந்தான். கடிது வீறுமுன் - விரைவிலே ஊக்கம் பெற்று எழுவதற்கு

534. வீறு சிங்கனது பின்பு முன்பணுகி
வெஞ்செ ருப்புரிய வஞ்சகன்
நூறு வெங்கணை விடுப்ப வன்னவனும்
நொந்து நின்றிடலு முந்துசீர்
ஏறு சாரதர்கண் மன்னர் பின்னுள
ரியாவ ரும்பொரு திளைத்திடச்
சீறி வந்தன னிலக்கர் தம்மிலுயர்
திண்டி றல்குலவு தண்டகன். அக

535. தார கன்றன்மகன் வத்தி ரத்திலுயர்
தண்ட கன்கணைக ளாயிரம்
வீர மோடுவிட நொந்து தந்திதரு
வெய்ய னெண்கணைக ளெய்யவே
சீரு லாநுதல் படப்பெ ருந்துயர்
செறிந்தி டக்கடிது சோமுகன்
கோர மோடணுகி யாயி ரங்கணைகள்
கொண்டு தேரழிவு கண்டனன். அஉ

536. தேர ழிந்திடலு மானை மாமதலை
சீறி வேறிரத மேறியே
வீர மோடுவரு சோமு கன்றன்மிசை
வென்றி யோர்படை விடுப்பவங்

முன்னே. தூஉய் - தூவி. எய்த்திடும்படி இழைபப - மத்த னென்பவனும் தளர்வடையும்படி செய்ய. அயர்ந்திட - மூர்ச்சிக்கும்படியாக.

கனகன், மத்தன், மந்தன் என்னும் மூவரும் அசுரேந்திரன் விட்ட பாணத்தால் தளர்ச்சியை அடைந்தனர்.

534. அதுபின்பு - அதன் பிறகு. சிங்கனென்பவனும் பூதத் தலைவர் பிறரும் வந்து எதிர்த்துத் தளர்ச்சியடைந்தனர். அப்பால் லக்ஷ வீரர்களுள் சிறந்த தண்டகன் போர் செய்ய வந்தான்.

535. வத்திரத்தில் - முகத்தில். தந்தி தரு வெய்யன் - அசுரேந்திரன். தண்டகனும் இளைப்புற, சோமுகன் என்பவன் வந்து அசுரேந்தின் தேரை அழித்தான்.

கேரு லாவுமவ னுந்த ளர்ந்தனன்
இலங்கு சீர்விசயன் வந்துநீள்
தார கன்றன்மகன் வில்லை வல்லைகணை
ஆயி ரங்கொடு தடிந்தனன். ௮௫

537. கொண்ட வில்லழிய வந்தெ திர்ந்துபொரு
கொற்ற வீரன்விறல் பற்றலன்
கண்டு தண்டது விடப்ப டத்தளர்
கலக்க முற்றன னிலக்கரில்
அண்டு மேனைய ரடைந்து விற்சமர்
புரிந்து டைந்திட லு மாசிலா
மண்டு வீரமுள கந்த னுக்கிளவல்
வந்து வெய்யனொ டெதிர்ந்தனன். ௮௬

538. கைத்த னுத்தனை வளைத்து மெத்திட
கடுஞ்ச ரஞ்சிதறி வெய்யவன்
மைத்த னுத்தனை மறைப்ப வன்னவனும்
மன்னு மாயிரநல் வாளிதான்

---

536. ஆனைமா மதலை - தாரகாசுரனுடைய புதல்வனாகிய அசுரேந்திரன். வென்றி ஓர் படை - வெற்றி தரும் ஒரு பாணத்தை. அவனும் - சோமுகனும்.

சோமுகனும் தளரவே விசய னென்பான் வந்து அசுரேந்திரனது வில்லை அறுத்தான்.

537. கொற்றவீரன் விறல் - விசயனது வீரத்தை. பற்றலன் - பகைவனாகிய அசுரேந்திரன். தண்டு - கதாயுதம். பட - அது படவே. உடைந்திடலும் - தோல்வியடையவே.

விசயன் தளர, அவனுக்குப் பின் லக்ஷவீரர்களுள் எஞ்சியவர் ஒருவர்பின் ஒருவராக வந்து எதிர்த்துத் தோல்வியுற்றனர்; பிறகு வீரவாகு தேவர் போர் செய்ய வந்தார்.

538. கைத்தனுத்தனை - கையிலே பிடித்த வில்லை. மெத்திய - மிகுதியான. மை தனு தனை கரிய உடலை. தொட்டு - எய்து. வில்

சுத்தன் மீதுபட விட்டொ ரேழுகணை
தொட்டு விற்றடிய விற்கொளாப்
பத்து நூறுகணை சிந்தி வெய்யனுறு
தேரை வில்லொடு படுத்தனன். ௮௫

539. வேறு தேரவுண னேறி விற்கொடியர்
வீர வாகுவுறு தேரினை
நூறு கோலதனி னூறு காலதனில்
நூபு ரத்துவரு சேவகன்
மாறி லாவிறல்கொள் பாவி தேரினிடை
வாவி மேவுதிறல் வாளினாற்
பேற தாமொரு கரந்து ணித்துழி
பிடித்த தண்டுகொ டடித்தனன். ௮௬

540. ஊறில் வீரனவு ணன்சி ரத்திடை
உதைத்து மீளுதலு மொன்னலன்
சீறி வாள்கொடு தொடர்ந்து வந்துழி
திரும்பி யங்கவனை வாளினால்
நூறி னானவுண ரஞ்சி யோடினர்
நுவன்றி டற்கரிய சீரினால்
வீறு சூரனிது கண்டு பூதர்குழு
மீது வெம்மையொடு மேவினான். ௮௭

தடிய - வீரவாகுவின் வில்லை அறுக்க. வில் கொளா - வேறொரு வில்லை எடுத்துக் கொண்டு.

539. நூறு கோலதனின் நூறு காலதனில் - நூறு அம்புகளால் அழித்த சமயத்தில். நூபுரத்து வரு சேவகன் - அம்பிகையின் திருவடிச் சிலம்பினின்றும் உதித்த வீரவாகு தேவர். பாவி தேரினிடை வாவி - அசுரேந்திரனது தேரிலே தாவி. அசுரேந்திரனது கை ஒன்றை வீர வாகு தேவர் வெட்ட, அவன் தண்டாயுதத்தால் அடித்தான்.

540. ஊறு - துன்பம். ஒன்னலன் - பகைவன். நூறினான் - வெட்டிக் கொன்றார். வீறு - பெருமிதங் கொண்டிருந்த. பூதர் குழு மீது - பூதப் படையினரின்மேல்.

541\. முந்தி வந்துயர் தனுக்கு னித்தனன்
முழங்கு நாணொலி வழங்கலும்
சிந்தி ஞர்சில ரிரிந்து ளார்சிலர்
திகைத்து ளார்சிலர் செகத்தின்மேல்
இந்த வாறுமிகு பூதர் நொந்தனர்கள்
யாண்டு பத்துட னிரண்டுதான்
அந்த நாணொலி யொழிந்த தில்லையெனின்
ஆர வன்றன்விறல் கூறுவார். அஅ

542\. இன்ன செய்கைதனை மன்னு சாரத
இராசர் கண்டவ ணெதிர்ந்தபோ
தன்ன வஞ்சனொரு பத்து நூறுதொடர்
ஆயி ரந்தழுவு கோடியாய்
இன்னல் வெங்கணை பொழிந்த போதவர்
அழிந்த போதுநல் லிலக்கராம்
வெந்நி டாதவிறல் வீரர் வந்தணுகி
வெந்தி றற்கணைகள் சிந்தினார். அகூ

543\. ஆடல் கொண்டவ னுரக்க ரத்தனு
அனைத்தை யுங்கணைக ளாயிரம்
கோடி சிந்தியவை சிந்தி யத்தொகைகொள்
கோல்வி டுத்தவர்க டேரெலாம்
பாடு றும்படி புரிந்தி லக்கமொடு
பத்து நூறுசெறி பல்லவம்
ஈடி னேடுதவி வீரர் மேனிகள்
இளைத்தி டும்படி துளைத்தனன். கூo

541\. தனு குனித்தனன் - வில்லை வளைத்தான். நாணொலியைக் கேட்ட அளவில் சில பூதர் இறந்தனர்; சிலர் ஓடினர்; சிலர் மயங்கினர். அந்த ஓசை பன்னிரண்டு வருஷம் வரையில் நீங்காமல் ஒலித்தது.

542\. பத்து நூறு தொடர் ஆயிரம் தழுவு கோடியாய் - பத்து லக்ஷங் கோடி எண் உள்ளனவாக. வெந் இடாத - புறங்காட்டாத.

543\. ஆடல் கொண்டு - வெற்றி கொண்டு. உரக்கரத் தனு - வலிமையையுடைய கைவிற்களை. பாடுறும்படி - அழியுமாறு. பல்லவம் - அம்புகளை. ஈடு - பெருமை. வீரர் - லக்ஷ வீரர்.

544. ஈது கண்டுதிற லெண்மர் தங்களில்
இருந்தி றற்பெறு திவாகரன்
தீதி லாதகணை சிந்தி வந்திடலும்
நூறு நூறுகணை சிந்தியே
ஓது வீரனது விற்று ணித்தவன்
உரம்பி ளந்துழி விழுந்தனன்
கோதி லாவிற லரக்கன் வந்தவுணர்
கோவின் முன்புகணை தூவினான். ௬௧

545. தூவி யங்கதனில் வென்றி யின்றிமிடல்
துன்று வாளினொடு சூரர்கோன்
மேவு தேர ணுகி வில்லை வெட்டவவன்
வில்லொ டிந்ததிலை வல்லையே
ஓவி லாதகதிர் வாளொ டிந்ததடல்
உந்த ரக்கனையொர் தாளினாற்
பாவி யண்டமிசை செல்ல வுந்தலும்
விழுந்த னன்கடிது பாரின்மேல். ௬௨

546. வீழு மன்னதை வெகுண்டு கண்டுமிகு
வெற்றி பெற்றிடு மகேந்திரன்
தாழ்வி லாவிறல்கொள் சூரன் முன்புபல
சாய கஞ்சிதற வெய்யவன்
சூழு நூறுகணை தூய னங்கமிசை
தோய விட்டுழி விழுந்தனன்
வாழ்வு கொண்டபுகழ் வீர தீரனெதிர்
வந்து பல்கணைகள் சிந்தினான். ௬௩

---

544. திவாகரன் - வீர மார்த்தாண்டன். உரம் - மார்பை. விறல் அரக்கன் - வீர ராக்ஷஸன்.

545. விற்போரில் வெற்றி இல்லாமையால் வாளை எடுத்தான். மிடல் துன்று - வலிமை பொருந்திய. அடல் உந்து அரக்கனை - வீர ராக்ஷஸனை. பாவி - சூரன். உந்தலும் - உதைக்கவே.

546. மகேந்திரன் - வீரமகேந்திரன். சாயகம் - அம்பு. அங்கமிசை தோய - உடலிற் பதியவே. வீரமகேந்திரன் தளர்ச்சி அடையவே வீரதீரன் சூரனோடு போர் செய்ய வந்தான்.

547. ஈடு சேரவரு வீர தீரன்மிசை
ஏழி ஞேடவுண னேழுகோல்
கூட விட்டுழி விழுந்த னன்கடிது
கொற்ற முற்றிடு மகேசனும்
நீடு சூரனெதிர் வந்தெ திர்ந்தொரு
நெடும்ப டைக்கலம் விடுப்பவே
பீடு கொண்டவுர மீது பட்டமிகு
தூளி பட்டது பிறங்குவேல். ௬௪

548. வந்து பட்டகதிர் வேல ழிந்திடலும்
மன்னு தானவர்கண் மன்னவன்
உந்து கின்றகணை யேழு விட்டிட
உரம்பொ ருந்திய மகேசனீள்
கந்து றழ்ந்திடு புயங்க லந்துடல்
களைப்ப மொய்ம்பது துளைப்பவே
சிந்தை நொந்தன னிகழ்ந்த விச்செயலை
வீர கோளரி தெரிந்தனன். ௬௫

549. கண்டி தண்டர்புகழ் வீர கேசரி
கடுஞ்ச ரஞ்சிதறி வந்துபின்
பண்ட லன்றனது வைய முற்றுரம்
அடிக்க வேகரம் வெடிக்கவே
மண்டு சூரனொரு கைபி னுலிவனை
மாலு றுங்கடலில் வெஞ்சினம்
கொண்டெ றிந்திட விழுந்து பின்னரும்
எழுந்து சேனையொடு கூடினன். ௬௬

---

547. ஈடு - ஒப்பு. கூட - ஒருங்கே. வீரதீரன் விழவே, பிறகு வீரமகேசன் வந்து ஒரு வேலை விட, அது சூரன் மார்பிற் பட்டுப் பொடியாகி விட்டது. நெடும் படைக்கலம் - வேல்.

548. வீரமகேசனும் களைத்து விழ, வீரகேசரி கண்டான். தானவர்கள் மன்னவன் - சூரன். கந்து - கட்டுத்தறி. மொய்ம்பு - தோளை. வீரகோளரி - வீரகேசரி.

549. இது கண்டு. அண்டலன் தனது - பகைவனது. வீரகேசரி சூரன் தேரில் பாய்ந்து அவன் மார்பில் தன் கையால் அடிக்கவே, அக் கை பிளந்தது. உரம் - மார்பு. மால் உறும் கடலில் - திருப்பாற்கடலில்.

550. மால்ப டைத்தவிற லிந்தி ரன்குறுகி
வன்ச மன்படை விடுத்தலும்
பால்ப டைத்தமொழி மாயை மைந்தன்மிசை
பட்டு மட்டிறுக ளாகவெம்
கோல்ப டைத்தவனு ருயி ரங்குலவு
கோடி வெங்கணைக ளேவலும்
கால்ப டைத்தவிசை போல மேவிய
கலந்து ளைத்திட விளைத்தனன். சுள

551. மன்னு வெற்றிபுனை யந்த கன்கடிது
வந்து பல்கணைகள் சிந்தலும்
அன்ன வன்கணை விலக்கி வெந்தருவன்
ஆயி ரங்கணைக ளாலவன்
மின்னு தேரினொடு விற்று ணித்துமரு
மம்பி ளந்திட விழுந்தனன்
வெந்நி டாதவிறல் கொண்ட வண்டர்புகழ்
வீர வாகுவிது கண்டனன். சுஅ

552. கனத்த தேரினொடு வந்தெ திர்ப்பவது
கண்டு மாயைதரு கண்டகன்
மனத்தி லொற்றனென வுன்னி யின்னமுமென்
முன்ன ரொற்றனென வந்தியேல்

550. மால் - பெருமை. விறல் இந்திரன் - வீர புரந்தரன். சமன்படை - யமதர்மாஸ்திரம். மாயை மைந்தன் - சூரன். மட்டில் துகள் ஆக - கணக்கில்லாத துண்டங்களாகிவிட. கால் - காற்று. அகலம் துளைத்திட இளைத்தனன் - வீரபுரந்தரனது மார்பைத் துளைக்கவே அவன் சோர்ந்து வீழ்ந்தான்.

551. வெற்றி புனை அந்தகன் - வீராந்தகன். வெம் தருவன் - கொடிய சூரன். மருமம் பிளந்திட - மார்பைப் பிளக்க வெந் இடாத - போரிலே புறங்காட்டாத

552. எதிர்ப்ப வீரவாகு எதிர்க்க. மாயை தரு கண்டகன்-சூரன்; கண்டகன் - முள்ளைப் போன்றவன். ஒற்றன் என உன்னி - முன்புவந்த தூதன் என்றெண்ணி. அனத்தம் எய்திலை - மரணத்தை அடைய மாட்டாய். தனு பிடிக்கின் - வில்லைப்பிடித்துப் போர் செய்வதாக இருந்தால்.

அனத்த மெய்திலே தனுப்பி டிக்கினுன
தாவி கொண்டிடுவ னென்னவே
சினத்த பாவிமக ஞவி கொண்டதிற
லாள னின்னமொழி செப்புவான். கூகூ

553. உற்ற தூதனு மமைச்சு மாகுவன்
உரங்கொ டெவ்வர்மிசை செல்குவன்
வெற்றி வேலுடைய கந்த னெந்தையருள்
வேறு முள்ளபணி செய்குவன்
முற்றும் வல்லவனி யான மர்புரிதி
என்ன வொன்னலன் முனிந்துநீள்
கொற்ற வாளிகளொ ராயி ரங்குலவு
கோடி வீரனெதிர் தூவினன். க00

554. வீர வாகுவு மளப்பில் வெங்கணை
விடுத்து வெய்யன்விடு வெய்யகோல்
சேர நூறியொரு நூறு கோனுதல்
செறித்தி டக்கணை சிதைந்திட
மூரி சேரவுண னெட்டு வெங்கணைகள்
மொய்ம்பன் மொய்ம்பிடை யழுத்தலும்
சோரி யுண்டுபிடர் தன்னை யன்னவை
துளைத்த வும்பர்க ளெங்கவே. க0க

555. வென்றி கொண்டபுய வண்ணல் பின்புபல
வெய்ய கோலவுணன் வையமேல்
துன்றி யொன்றுபல பாக ரங்கமிசை
சோரி கண்டிட வழுத்தல்கண்

---

553. தெவ்வர் - பகைவர். ஒன்னலன் - பகைவனாகிய சூரன்.

554. சேர நூறி - ஒருங்கே அழித்து. நூறு அம்புகளைச் சூரனது நெற்றியிலே எய்ய, அவை முறிந்து போயின. மூரி - வலிமை. மொய்ம்பன் மொய்ம்பிடை - வீரவாகுவினது தோளில். சோரி - இரத்தத்தை. பிடர்தன்னைத் துளைத்த - தோளின் பின்பக்கத்தைத் துளைத்தன.

டன்று காசிப னளித்த தானவனொ
  ரைம்ப தொண்கணையின் மொய்ம்பினால்
நின்ற தேரதனை நூற வேறுமொரு
  நீடு தேரின்மிசை கூடினான். ௧0௨

556. கூடி வாயுவொடு தேயு வின்படை
  கொடுஞ்ச மன்கதிர் நெடும்படை
ஈடு சேர்வருணன் வாடு ருதிருதி
  இந்தி ரன்படை யிலங்குசீர்
சூடு வேதனொடு மாத வன்படை
  தொடுத்து மொய்ம்பினன் விடுத்திடப்
பாடில் சூரன்மிசை வந்து வந்தவைகள்
  பட்டு மட்டிறுகள் பட்டவே. ௧0௩

557. மட்டு லாவுதொடை யண்ண லங்கதுபின்
  மங்கை பங்குடைய வள்ளறன்
நெட்டி ரும்படை விடுப்ப வன்னபடை
  நேரி லாவிறல்கொள் சூரனும்
விட்டு மொய்ம்பொடு விலக்கி யாறினொடு
  வீறு மொன்பது விறற்சரம்
தொட்டு வீரனது கைத்த லச்சிலை
  துணித்த னன்றகுவர் துள்ளவே. ௧0௪

---

555. அண்ணல் - வீரவாகு. வையம் - தேர். பல பாகர் - பல சாரதிகளின். காசிபன் அளித்த தானவன் - சூரன். நூற - பொடிபடுத்த.

556. வீரவாகுதேவர் விட்ட பாணங்களெல்லாம் சூரன் மேலே பட்டுப் பொடியாயின. தேயுவின் படை - ஆக்கிநேயாஸ்திரம். சமன் படை - யமாஸ்திரம். கதிர் நெடும்படை - சூரியாஸ்திரம். மாதவன் படை - நாராயணாஸ்திரம். பாடு இல் - அழிவு இல்லாத.

557. மட்டு - தேன். மங்கை பங்குடைய வள்ளல் தன் நெட்டிரும் படை - சிவபிரானது அஸ்திரம். மொய்ம்பொடு - பலத்தோடு. தொட்டு - தொடுத்து. தகுவர் - அசுரர்.

558. மூண்ட கோபமொடு மொய்ம்ப னங்கொரு
முரண்கொள் வேலினை விடுத்தலும்
ஆண்டு சூரன்மிசை பட்டு வல்லையில்
அழிந்து போகுதலு மன்னவன்
பூண்ட வன்மையொரு தண்ட முந்தவது
வந்து மார்பிடை புகுந்திட
வீண்ட சோரியொடு நீண்ட தேரின்மிசை
வீர வீரனும் விழுந்தனன். ௧0௫

559. செய்கை யின்னது தெரிந்து தேரினொடு
சீரு றுஞ்சர வணப்பெயர்ப்
பொய்கை தன்னிடை வளர்ந்த நங்கடவுள்
போயெ திர்ந்திட வழுத்தினர்க்
குய்கை தந்தருள் குமார வேள்வடிவம்
உற்று நோக்கிமிகு செற்றமாய்
நைகை கொண்டதொழில் கொண்ட வஞ்சனிது
நம்பி ரானொடு விளம்புவான். ௧0௬

560. உன்ற னோடுவரு சேனை யானவர்
ஒழிந்து போயின ருவர்க்கெலாம்
வென்றி கொண்டவிறை யாகி வந்தவனும்
வெந்து யர்க்கொடு விழுந்தனன்
நின்றி ளங்குமர னை நீகொலமர்
என்னொ டேபுரிய வல்லைநின்
வன்றி றற்றனை யழிப்ப னிங்கொரு
கணத்தி னென்றனன் மறத்தினன். ௧0௭

---

558. மொய்ம்பன் - வீரவாகு. முரண் - வலிமை. தண்டம் உந்த - தண்டாயுதத்தை விட. வீண்ட - விழுநத. வீரவீரன் - வீரவாகு.

559. கடவுள் - முருகவேள். மிகு செற்றமாய் - மிக்க கோபத்தோடு. நைகை கொண்ட தொழில் - பிறரை நலிவுறுத்தலையே தன் தொழிலாகக் கொண்ட.

560. உவர்க்கு எலாம் - அந்தப் படை வீரர்களுக்கு எல்லாம். இறையாகி வந்தவனென்றது வீரவாகு தேவரை. வல்லை - வன்மையுடையாய். மறத்தினன் - பாவி.

561. வஞ்ச னீதுசொல வேளு ரைப்பனிள
மைந்த னென்றெமை மதித்தனை
நஞ்சு லாவிய களத்த னெற்றிவிழி
நண்ணு கின்றபொறி யொன்றுகாண்
விஞ்சு கின்றவுல கங்கெ டுப்பது
விவேக மற்றவொரு பேதைநீ
அஞ்சு றுததிறல் வீரர் பாலர்பெரி
யோர்க ளென்றுமதி யார்கள்காண். ௧0௮

562. யாவ ரேனுமமர் செய்ய வந்திடின்
எதிர்ந்து போர்புரிவ ரிங்கினிச்
சேவ கத்தொடு பெருத்த நின்வலி
சிறுத்த நம்பெரிய திண்மையால்
ஓவ ரும்படி கெடுப்ப மென்றிட
உருத்த ளப்பில்கணை யொன்னலன்
தூவ வேலவனு மெண்ணில் வெங்கணை
தொடுத்து விட்டவை தடுத்தனன். ௧0௯

563. தடுத்து வேன்முருக னேழி ரண்டுகணை
தான வன்றனது தோளின்மேல்
விடுத்த போதுகணை பட்டொ டிந்துவிழ
வேறு மாயிரம் விறற்சரம்

---

561. வேள் - முருகக் கடவுள். சிவபிரானது நெற்றிக்கண்ணி லிருந்து வரும் ஒரு பொறியே உருவாற் சிறியதுபோல் இருந்தாலும் உலகங்களையெல்லாம் அழிக்கும் வன்மையை உடையது. தாம் பொறியி னின்று அவதாரம் செய்தமையைக் குறிப்பித்தபடி.

562. சேவகத்தொடு - வீரத்தோடு. பெருத்த - உருவாலும் பெருமையை உடைய. சிறுத்த - சிறிய உருவத்தையுடைய. ஓ வரும் படி - ஒழிதல் உண்டாகும்படியாக. உருத்து - கோபித்து. ஒன்னலன் - பகைவன்.

563. அவன் சிலை துணிப்ப - சூரனது வில்லை அறுக்க. அந்த வேலை - அந்தச் சமயத்தில் உற - மேலே பட.

தொடுத்த வன்சிலை துணிப்ப வஞ்சனொரு
துங்க வேல்விடவு மேமொரேழ்
வடித்த வெங்கணையி லந்த வேலையுற
வந்த வேலையெதிர் சிந்தினன். ககO

564. வீறு கின்றதொரு வில்லெ டுத்தவுணன்
வேலன் விட்டபல கோலெலாம்
நூறி யேழ்கணை புயத்தி லெய்யவவை
நுண்டு கட்படலும் வேலவன்
சீறி யையிரு சரத்த வன்சிலை
சிதைத்தொ ராயிரநல் வாளியால்
ஏறு தேரழிய நூறி வேறுமவன்
ஏறு தேர்களற வெய்தனன். ககக

565. வண்மை கொண்டசிலை வைய மற்றிடலும்
வைய முற்றவுணர் மன்னவன்
திண்மை கொண்டதொரு முத்த லைப்படை
செலுத்த வீரிரு சரங்கள்விட்
டுண்மை கொண்டகுக னன்ன தைக்கடி
துருத்த றுத்துமிகு கோல்கடேய்த்
தண்மை கொண்டதொழில் கொண்ட வன்புனை
மதாணி யானவை தடிந்தனன். ககஉ

---

564. கோல் - அம்பு. நூறி - பொடியாக்கி. சரத்து - அம்பி னால். வேறும் அவன் ஏறு தேர்கள் - ஒன்று கெட மற்றொன்றாக அடுத்தடுத்து வேறு வேறாக அச்சூரன் ஏறிய தேர்களை.

565. சிலை வையம் - வில்லும் தேரும். வையம் உற்று - பூமி யின்மேல் வந்து. முத்தலைப் படை - சூலம். உண்மை கொண்ட குகன் - மெய்த்தன்மையையுடைய முருகவேள். உருத்து - கோபித்து. தண்மை கொண்ட தொழில் கொண்டவன் - தாழ்வாகிய செயல்களையுடையவன்; தண்மை - தாழ்வு. மதாணி - மார்பில் அணியும் பதக்கம்.

566. ஈது கண்டவுண ராரு மங்கணுகி
எந்தை கந்தனை வளைந்துநின்
ரேறது போர்புரிய வாழி வேலன்விட
உற்ற சேனையவை முற்றவும்
கோது றும்படி கெடுத்து மற்றது
குமார வேள்கையுற வெய்யசூர்
வேதன் மால்படை விடுப்ப வேலவை
விழுங்க வாதிபடை விட்டனன். ககரு

567. விட்ட வெம்படை குமார வேளொரு
விறற்க ரங்கொடு பிடித்தவன்
கெட்டி டாதவகை புந்தி சிற்சில
கிளத்த வங்கதை மதித்திலன்
மட்டில் சேனையொடு பின்பு சேர்துமென
மாய மாகிமனை யேகலும்
பட்ட சோகமொ டயர்ந்த யாவரும்
எழுந்து வேலனயல் பரவினர். ககசு

568. மற்றிவ் வேலைமிகு பூதர் சூர்நகர்
வடாது வாசறனி லேகியங்
குற்றி ருந்தவதி சூர னைப்படை
யொடுங்கெ டுத்தெயி லுடைத்துவிண்

---

566. ஆழி - சக்கராயுதத்தை. கோது உறும்படி - மரணம் அடையும்படி. மற்று அது; அது - சக்கரம். வேதன்படையையும் மால் படையையும் சூரன் விட அவற்றை முருகவேளினுடைய வேலாயுதம் விழுங்கி விட்டது. ஆதிபடை - சிவாஸ்திரம்.

567. சிவாஸ்திரத்தை முருகவேள் தம் திருக்கரத்தால் பற்றிக் கொண்டு சூரனுக்குச் சில அறிவுரைகள் கூறினர். புந்தி - அறிவுரை. மாயமாய்ச் சூரன் மறைந்துபோனன். முருகக் கடவுள் சூரனை நோக்கி, "உன்னைக் கொல்ல வேல் இருக்கின்றது. நீ தேவர்களைச் சிறையினின் றும் விட்டால் கொல்லாமல் விட்டுவிடுவோம். இல்லையானல் உன்னைச் சங்கரிப்போம்" என்று கூறினர். (**கந்தபுராணம்,** இரண்டா நாள். 313 - 7.)

துற்றி ருந்ததொரு கோபு ரங்கடிது
  தொட்டு வேலையிடை யிட்டவ்வூர்
சற்ற ழித்தனர் திரும்பி னார்கடிது
  சண்மு கத்தனயல் கூடினார். ௧௧௫

569. வெந்தி றல்கொண்மிகு சார தக்குழுவும்
  வீர ரும்புடையின் மேவவே
எந்தை கந்தனுயர் பாச றைப்பதியில்
  ஏகி மந்திரம தெய்தியே
சிந்து ரப்பகை சுமந்த நீடொளி
  திருந்தி டுந்தவி சிருந்தனன்
அந்த ரம்படி யிருண்டி டும்படி
  அருக்கன் மேல்கட லடைந்தனன். ௧௧௬

570. நலந்தி ருந்துமரு ணக்க திர்க்கமல
  நாய கன்கடிது வந்தெனைக்
கலந்தி ருந்தவ னகன்று போனசெயல்
  கண்டு நீதிமுறை கொண்டிடா
துலம்பு ரைந்தபுய விந்து வென்னையுற
  உன்னி வந்தன னெனாநினைந்
திலங்கு மம்பர மடந்தை நக்கென
  எழுந்த தாரகை யினங்களே. ௧௧௭

---

568. இவ் வேலை - இந்தச் சமயததில். சூர் நகர் - சூரனது இராசதானியாகிய மகேந்திர புரியின். எயில் உடைத்து - மதிலை இடித்து. விண் துற்று இருந்த - ஆகாயத்தை அளாவி உயர்ந்து நின்ற. தொட்டு - தோண்டி. வேலையிடை இட்டு - சமுத்திரத்திலே போகட்டு. அவ்வூர் - அந்த நகரத்தை. சற்று - சிறிதளவு.

569. சாரதக் குழுவும் - பூதகணங்களும். புடையில் - பக்கத்தில். மந்திரம் - கோயில். சிந்துரப் பகை - சிங்கம். தவிசு - சிங்காதனம். அந்தரமும் படியும்.; வானமும் பூமியும். அருச்கன் - சூரியன்.

570. நன்மையை யுடைய சிவந்த கிரணங்களையுடைய தாமரைக்கு நாயகனாகிய சூரியன். நீதி முறை கொண்டிடாது - நீதியின் முறைமையை மேற்கொள்ளாமல்; அநியாயமாக. உலம் புரைந்த - கல்லையொத்த. இந்து - சந்திரன். அம்பர மடந்தை - வானமாகிய

571. ஓடி யுற்றசெய லொற்றர் சொற்றிட
உணர்ந்து பானுவை முனிந்துளான்
நீடு தந்தையிடை வந்து முற்பகல்
நிகழ்ந்த வச்செய னிகழ்த்தியின்
றீடு கொண்டவரை நாளை வென்றிடுவன்
என்ன வன்னவன் விடுப்பநீள்
மாட மாளிகைகொள் வீட டைந்ததனில்
வைகி வைகறை யெழுந்தனன். கக அ

மூன்றுநாட் பானுகோபன் யுத்தம்

572. எழுந்து மாயைதனை முன்ன முன்னலுகி
ஏது வேண்டுமென வோதலும்
இழிந்த வன்புதல்வன் முன்ன மென்னுடைமர்
எய்தி வென்றவனை யின்றுநான்
அழிந்தி டும்பரிசு வெல்ல வோர்படை
அளித்தி யென்றிடலு மார்வமே
பொழிந்த மாயையொரு மாய வெம்படை
கொடுத்து விண்ணினிடை போயினள். ககசு

573. அன்ன வஞ்சனது பின்னர் பின்னுள
அடற்ப டைக்குல மெடுத்துநீள்
மின்னு தேரணுகி யைம்ப தாயிரமென்
வெள்ள மானபடை சூழவே

பெண். நக்கென - சிரித்தாற்போல. தாரகை - நட்சத்திரம். தற்குறிப் பேற்றவணி.

571. பானுவை முனிந்துளான் - பானுகோபன். தந்தையிடை - தந்தையினிடத்தில். ஈடு கொண்டவரை - பெருமை அடைந்தவர்களை. என்ன - என்று பானுகோபன் சொல்ல.

572. முன்ன - நினைக்க. ஓதலும் - கேட்டவுடன். படை - ஆயுதம்.

573. ஐம்பதாயிரம் என்று கணக்கிடும்; என் - என்னும். மாவின் மாமுகம் - குதிரை முகம். வதனம் தெரிந்து - முகத்தைப் பார்த்து. வாசகம் - வார்த்தைகளை. கடிது - விரைவில்.

மன்னு மப்பதி மதிற்பு றத்தணுகி
  மாவின் மாமுகமொ ராயிரம்
துன்னு தூதன்வத னங்கெ ரிந்திளைய
  வாச கங்கடிது சொல்லுவான். கஉ0

574. வீர வாகுவெதிர் சென்றி யாணிவண்
  விரைந்த டைந்தது விளம்பியே
போரி யற்றவவன் வந்தி டும்படி
  புகன்று மீள்கென வகன்றுபோய்ச்
சீரு லாவிவளர் பாச றைப்பதி
  செறிந்து வீரனை யறிந்துகண்
டீர மற்றிடு மனத்து வெய்யவன்
  இசைத்த வாசக மிசைத்தனன். கஉக

575. இயம்பு போதுகதி ரைத்த ளைந்தவனை
  இன்று கொல்லவரு வேனெனுப்
பயம்பொ ருந்துவகை தூத னேடிவை
  பகர்ந்து விட்டிளைய ரோடுநீள்
வயம்பொ ருந்துகும ரேசன் முன்பணுகி
  வந்த னைத்தொழில் புரிந்துபின்
நயம்பொ ருந்துவிடை கொண்டு சென்றுகவின்
  அண்ணு தேரின்மிசை நண்ணினுன். கஉஉ

576. கொன்னு றுந்தனது சேனை யோடணிகொள்
  கோதில் பாசறை யகன்றுபோய்
பன்ன ரும்புகழ்கொ டெவ்வ னின்றிடு
  பறந்த லைக்கள மடைந்திட

---

574. மீள்க என; என - என்று பானுகோபன் தூதனிடம் சொல்ல. வீரனை - வீரவாகுவை. ஈரம் - அன்பு. வெய்யவன் - பானுகோபன்.

575. கதிரைத் தளைந்தவனை - பானுகோபனை. வயம் - வலிமை. வந்தனைத்தொழில் புரிந்து - வணங்கி. நயம் - அன்பு. கவின் - அழகு.

576. கொன் - பெருமை. அணி கொள் - படைவகுப்பைக் கொண்ட. தெவ்வன் - பகைவன், பறந்தலைக் களம் - போர்க்களம்.

இன்ன லற்றமிகு பூதர் தானவர்
எதிர்ந்து வெஞ்சம ரியற்றினர்
மன்னு பூதரொடு வெய்ய தானவர்கள்
வல்லை சிற்சிலர் மடிந்தனர். கஉ௩

577. தான வத்தலைவ ராரும் வீரமுறு
சார தத்தலைவர் யாவரும்
ஈன மற்றிடு மிலக்க ரெண்மரும்
எதிர்ந்து வெஞ்சம ரியற்றவே
ஊன முற்றவ ரிறக்க வெற்பகைவன்
உந்து தேரினொடு வந்திட
மான முற்றதிறன் மொய்ம்ப னுங்கடிது
வந்து தேரினொ டெதிர்ந்தனன். கஉ௪

578. அற்ற வேலைதனி லுற்ற வில்லினை
வளைத்தி லங்குபிறை யாசுகம்
வெற்றி மேகமென நாகர் தெவ்வன்விட
வீறு கொண்டதொரு வில்லினை
மற்று நேரில்குமர ரன்பதத்தினை
வணங்கு வீரனும் வணக்கியே
துற்றி டும்பிறை நெடுஞ்ச ரம்பல
தொடுத்து நேருற விடுத்தனன். கஉ௫

பூதரும் தானவரும். சமர் - போர். பூதரிலும் தானவரிலும் சிலர் விரைவில் இறந்தனர்.

577. சாரதத்தலைவர் - பூதத்தலைவர். ஈனம் - இழிவு. இலக்கர் எண்மர் - லக்ஷத்து எட்டு வீரர். எல் பகைவன் - பானுகோபன். மானம் - பெருமை. திறல் மொய்ம்பன் - வீரவாகு.

578. அற்று அவ்வேலை தனில் - அத்தகைய சமயத்தில். பிறை ஆசுகம் - அர்த்தசந்திர பாணம். மேகம் என - மேகம் மழை பொழிவதைப்போல. நாகர் தெவ்வன் - தேவர்களுக்குப் பகைவனாகிய பானுகோபன். வணக்கி - வளைத்து. துற்றிடும் - பொருந்திய.

579\. காரி லேகுவன விண்ணி லேகுவன
கஞ்ச னோடரி கலந்துவாழ்
ஊரி லேகுவன பாரி லேகுவன
உந்து சீகர முலாவுமுந்
நீரி லேகுவன வெற்பி லேகுவன
நீள்வு கொண்டபுக ழண்டமுன்
சீரி லேகுவன தூய வன்றனொடு
தீய வன்றனது செய்யதேர். கஉசு

580\. சைய மொத்தவவர் வைய மிந்தவகை
சாரி வட்டம துலாவலும்
வெய்ய னுயிர நெடுஞ்ச ரஞ்சிதறி
வீரன் மார்பிடை யழுத்திடத்
துய்ய னுயிரமெ னும்பெ ருங்கணைகள்
தூவி வென்றியுறு சூர்மகன்
செய்ய தேரதனை நூற வேறுமொரு
தேரின் மீமிசை செறிந்தனன். கஉஎ

581\. செறிந்து வில்லினை வளைக்கு முன்னருமை
செம்ம லுக்கிளைய சேவகன்
முறிந்தி டாதகணை யாயி ரங்கொடவன்
மொய்ம்பு ரந்துளை படுத்தலும்

579\. கஞ்சனொடு அரி கலந்து வாழ் ஊர் - பிரமன் வாழும் சத்திய லோகத்திலும், திருமால் வாழும் வைகுந்தத்திலும். சீகரம் உலாவும் முந்நீரில் - துளிகள் பரவுகின்ற கடலில். அண்டமுன் - அண்டகடாகத்தின் மேலே. தூயவன் - வீரவாகு. தீயவன் - பானுகோபன்.

580\. சையம் ஒத்த - மலையை ஒத்த. வையம் - தேர்கள். சாரி வட்டமது உலாவலும் - வலசாரி இடசாரியாக வட்டமிட்டு உலவவே.

581\. உமை செம்மல் - முருகவேள் ; அவருக்கு இளைய சேவகன், வீரவாகு தேவர் மொய்ம்பு உரம் துளைபடுத்தலும் - தோளையும் மார்பையும் துளைக்கவே. உம்பர் வேல்கொடு - தேவர்களுக்குரிய படைகளோடு. திருந்தலன் மறிந்திடும் பரிசு - பகைவன் இறக்குமாறு. வாருணப்படை - வாருணாஸ்திரம்.

பிறிந்தி டாதவிற லும்பர் வேல்கொடு
பெருந்தி றல்புனை திருந்தவன்
மறிந்தி டும்பரிசு வெல்வ னென்றவுணன்
வாரு ணப்படை விடுத்தனன். கஉஅ

582. மேயு மப்படையை வீர னங்கிபடை
விட்ட ழித்திடலு மொட்டலன்
வாயு வின்படை விடுப்ப மொய்ம்பனொரு
மாசு ணப்படை விடுப்பவே
போயு ரத்துவரு வாயு வின்படையை
உண்டு வஞ்சனெதிர் போதலும்
மாய னூர்திபடை தீய னுந்தவெதிர்
வந்த வெம்படை முறிந்ததே. கஉகூ

583. உந்து நந்திபடை பின்பு மொய்ம்பன்விட
ஊதை போலது விரைந்துபோய்
வந்த காருட நெடும்ப டைத்திறலை
வல்லை சிந்துதலும் வஞ்சகன்
அந்த கன்படை விடுப்ப வங்கதையும்
அட்ட தொட்டல னயன்படை
வெந்தி றல்கொள விடுப்ப நந்திபடை
முன்பு வந்தது விளிந்ததே. கஙo

---

582. மேயும் - வந்த. அங்கிபடை விட்டு - ஆக்கிநேயாஸ்திரத்தை எய்து. ஒட்டலன் - பகைவன். வாயவாஸ்திரத்துக்கு எதிர் நாகாஸ்திரம் விட்டார்; மாசுணப்படை - நாகாஸ்திரம். மாயனூர்தி படை - கருடாஸ்திரம். நாகாஸ்திரத்தைக் கருடாஸ்திரம் அழித்தது.

583. நந்தியஸ்திரத்தை வீரவாகுதேவர் விட அது கருடாஸ்திரத்தை அழித்தது. பானுகோபன் யமாஸ்திரத்தைவிட நந்தியஸ்திரம் அதை அழித்துப் பின்வந்த பிரமாஸ்திரத்தையும் அழித்தது. ஊதை - பெருங் காற்று. காருட நெடும்படை - கருடாஸ்திரம்.

584. மிக்க வெற்பகைவன் மாய வன்படை
விடுப்ப நந்திபடை முன்புவந்
தக்க ணம்பொர லூ மாடன் மொய்ம்புடைய
அண்ண லங்கது தெரிந்துபின்
தக்கன் வேள்வியை யழித்த வன்படை
விடுப்ப மால்படை தகர்ந்திட
நக்க ஞர்படை யெடுத்து வெந்தகுவன்
நண்ணலார்வெருவ விட்டனன். கஙக

585. முரண்ட ரும்புயனு நம்பன் வெம்படையை
மொய்ம்பி னேடுவிட வங்கெதிர்ந்
திரண்டு வெம்படையு நீள்பெ ருஞ்சமர்
இயற்றி விட்டவரை யெய்தவே
திரண்ட கந்திணை புரைந்த தோளுடைய
தீய சூரனரு டையவன்
அரண்ட ருந்தனது மாயை யாலிலகும்
அம்ப ரத்திடை யொளித்தனன். கஙஉ

---

584. பானுகோபன் நாராயணாஸ்திரத்தை விட, அது நந்தியஸ்திரத்தோடு போராடிக் கொண்டிருக்கையில் வீரவாகுதேவர் வீரபத்திராஸ்திரத்தை விடவே நாராயணாஸ்திரம் மறைந்தது. உடனே பானுகோபன் சிவாஸ்திரத்தை எடுத்து விட்டான். எல் பகைவன் - பானுகோபன். மாயவன் படை - நாராயணாஸ்திரம். ஆடல் - வெற்றி. தக்கன் வேள்வியை அழித்தவன் - வீரபத்திரன். மால் படை - நாராயணாஸ்திரம். நக்கனார் படை - சிவாஸ்திரம். நண்ணலார் - பகைவர்.

585. வீரவாகுதேவரும் சிவாஸ்திரத்தை விடவே இரண்டும் போரிட்டு மீட்டும் விட்டவர்களிடத்தே அடைந்தன. உடனே பானுகோபன் மாயத் திறத்தால் ஆகாசத்தில் மறைந்து போனான்.

முரண்டரும் புயன் - வீரவாகு. நம்பன் வெம்படை - சிவாஸ்திரம். கந்து இணை புரைந்த - இரு கட்டுத்தறிக்கு ஒப்பாகிய. தீயவன் - பானுகோபன். அரண் தரும் - பாதுகாப்பைத் தருகின்ற. அம்பரத்திடை - ஆகாசத்தில்.

586. ஆய போதுகதி ரோன்ம றைந்தனன்
அருந்தி றல்குலவு தானவன்
மாயை தன்படை விடுப்ப வள்ளன்முத
லான சேனையை வளைந்துமால்
ஏய வேகடிது கட்டி யேகியினி
தாய நீர்க்கடலி லிட்டிடத்
தீய ரிற்பெரிய தீய னங்கது
தெரிந்து நெஞ்சக மகிழ்ந்தனன். கநரு

587. மகிழ்ந்து தாதையுறு கோயி னண்ணியவன்
வண்ண வொண்கழல் வணங்கியே
நிகழ்ந்த வாறுதனை யோத வன்னவன்
நிறைந்த வார்வம துறைந்திடப்
புகழ்ந்து மைந்தனை யவன்ற னுதுமனை
புக்கி ருந்திட விடுத்தனன்
இகழ்ந்தி டாநெறிகொ ளுர தன்குமர
வேண்மு னுற்றிவை யிசைத்தனன். கநச

588. அற்ற வேலைதனி லாறு மாமுகன்
அடல்கொள் வேல்விட வளக்கர்வாய்
வெற்றி வேல்கடிதி னுற்று மாயையை
விலக்கி யேகவடல் வீரனும்
துற்ற யாவரு மெழுந்து வந்தணிகொள்
சூர னூரையெதிர் கண்டபின்
கொற்ற மேவுகும ரேச னுக்கிளைய
காளை யின்னமொழி கூறுவான். கநரு

586. பானுகோபன் மாயாஸ்திரத்தை விட்டு வீரவாகுதேவர் முதலியவர்களைக் கட்டிக் கடலில் இடச் செய்தான்.

தானவன் - பானுகோபன். மாயை தன்படை : இது மாயையால் அளிக்கப்பட்டது. வள்ளல் - வீரவாகு. மால் ஏய - மயக்கம் பொருந்த. தீயன் - பானுகோபன்.

587. தாதை - சூரன்.

588. அற்ற வேலைதனில் - அந்தச் சமயத்தில். அளக்கர் வாய் - கடலினிடத்தே. மாயையை விலக்கி - எல்லோரும் மயங்கும்படி செய்த மாயையின் வலியை நீக்கி. அடல் வீரன், காளை - வீரவாகு.

589. கரந்து மாயைகொடு வென்று சென்றதொரு
கள்வ னைத்தலை யறுத்தலால்
உரந்த ருங்குமர வேண்மு னேகிலன்
உரைத்த வீதுமுடி யாதெனின்
இருந்தி டேனெனது வில்லு நாணுமெரி
எய்து வேனென வியம்பியே
விரிந்த சேனையொடு சூர னாரரண
மேலை வாசலிடை மேவினான். ௧௱௬

590. அங்கி ருந்தபுலி மாமு கன்பொரு
தழிந்தி டக்கனலின் வாயுவின்
துங்க வெம்படை செலுத்தி வாணகர்
தொலைப்ப வும்பரை யலைப்பவன்
மங்கு லேழையும் விடுப்ப வங்கவைகள்
வந்து மாமழை சொரிந்துநீள்
வெங்க னற்றனை யழிப்ப வன்னசெயல்
வீர வாகுவெதிர் கண்டனன். ௧௱௭

மூன்று நாள் இரணியன் யுத்தம்

(கலிநிலைத்துறை)

591. கண்டான் வெகுண்டான் வடவைப்படை விட்ட காலை
விண்டா னிறைந்த புயனீர்தனை யுண்ண வீழ்ந்து
தண்டா முகில்கள் கடலோடிய வீது தன்னை
அண்டார் புகழுந் திறற்றூதர்சூ ரோடறைந்தார். ௧௱௮

---

589. மாயைகொடு வென்று - மாயாஸ்திரத்தால் ஜயித்து. கள்வனை - பானுகோபனை. அரணம் - மதில்.

590. ஆக்கிநேயாஸ்திரத்தையும் வாயவாஸ்திரத்தையும் வீரவாகு விட்டுச் சூரனது நகரை அழித்தார். சூரன் ஏழு மேகங்களையும் விட்டு அத்தீ அவியும்படி செய்தான். மங்குல் - மேகம்.

591. வடவைப்படை - வடவாமுகாக்கினி அஸ்திரம். அது ஆகாசத்தில் இருந்த மேகங்களின் நீரைக் குடித்தது. தண்டா - குறையாத. ஓடிய - ஓடின ; முற்று. அண்டார் - பகைவர்.

592. அப்போது சீறி யமர்க்கேகுவ னென்ன வங்கண்
துப்போ டிலங்கு மறையாயிர மோர்ந்த தூயன்
மெய்ப்பான சூரன் மகனாடக னென்னு மேலோன்
இப்போது கேளென் றவன்றாள்பணிந் தீதி சைப்பான்.

593. வில்லார் கனகத் திருநாடதி னுற்ற விண்ணோர்
பல்லோர் தமையாஞ் சிறைசெய்தது வீறு பாவம்
அல்லாது நன்றி படுமோவவர் தம்மை வென்ற
தெல்லார் நயனப் பெருமான்வர மன்றி யாதே. கசo

594. ஏறுற்ற தேவ னொடுமாறுகொண் டார்க ளெல்லாம்
ஊறுற் றிறந்தா ரிருந்தார்தமை யோத வுண்டோ
மாறற்ற செல்வ மளித்தோன்மகன் மேவின் மாறும்
ஆறற் றவனைப் பணியாதமர் செய்ய லாமோ. கசக

595. மன்னு குகனம் பிழைபாலமர் செய்ய வந்தான்
பொன்னாட் டமரர் சிறைவிட்டவன் முன்பு போந்தங்
கென்னு யகனே கொடியோம்பிழை யெண்ண லென்றே
சொன்னு லறுமா முகன்மீண்டிடு மென்று சொற்றான்.

596. ஈங்கீது பால னுரைசெய்திடும் போதி டும்போன்
தீங்கான கோப முடனேசில வார்த்தை செப்ப

---

592. துப்பு - வலிமை ஆடகன் - இரணியன்.

593. கனகத்திரு நாடு - சுவர்க்கலோகம். வீறு பாவம் - மிக்க பாவம் நன்றி படுமோ - புண்ணியச் செயலாகுமோ. எல் ஆர் நயனப் பெருமான் - விளக்கத்தையுடைய மூன்று சுடர்களையும் விழியாகக் கொண்ட சிவபிரான்.

594. ஏறு உற்ற தேவனொடு மாறு கொண்டார்கள் - சிவபிரானைப் பகைத்தவர்கள். மாறு அற்ற - மாறுபாடு இல்லாத. மாறு ஆம் ஆறு அற்று - எதிராக உள்ள பகைத்திறத்தை விட்டு.

595. மன்னு : விளி. குகன் - முருகவேள். எண்ணல் - திருவுள்ளத்தில் கொள்ளாதே. மீண்டிடும் - போர் செய்யாமல் திரும்பிப் போய்விடுவார்.

596. இடும்போன் - கர்வத்தையுடைய சூரன். அண்டார் பகைவர். நீங்கா இறப்ப - உயிர் நீங்கி இறந்துபட.

ஆங்காதன் மைந்த னறியேன்பிழை யெண்ணலண்டார்
நீங்கா விறப்ப வமர்செய்குவ னென்று நின்றான். கசங

597. இன்பாகி வெய்யோ னனையான்றனை யேவ வேகிக்
கொன்பாவு தன்னி லணுகிப்படை யான கொண்டு
மின்பாவு நாலா யிரவெள்ளவெஞ் சேனை மேவப்
பொன்பாவு பூத ருறுசெம்புல முன்பு போனான். கசச

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

598. மூச்சிர முள்ளவன் வச்சிர முள்ளவன்
மொய்ம்பினன் முன்பினன் முரணுறு மிரணியன்
அச்சமில் சேனைவெள் ளத்தைநாற் றிக்கினும்
ஆயிர மாயிர மாகவே யேகவிட்
டெச்சமில் குடதிசைச் சேனையோ டேகினான்
ஈடுசேர் வீரனு நால்வகைத் திக்கினும்
மெச்சுதன் றானையைப் பொரவிடுத் தவுணர்கோன்
மேவுறுந் திக்கிலே மேவினன் றானுமே. கசரு

599. சாரதத் தானையுந் தானவத் தானையும்
தங்களிற் போர்செயச் சண்முகற் கிளையவன்
தீரமுற் றிரணியன் றன்னொடும் வந்தவெஞ்
சேனையிற் பல்லவச் சோனையைச் சிந்தியே

---

597. இன்பாகி - மகிழ்ந்து. கொன் பாவு தன் இல் - பெருமை பரவிய தன் வீட்டை. பொன் - பொலிவு. செம்புலம் - இரத்தத்தாற் சிவந்த போர்க்களம்.

598. மூன்று தலையை உடையவனும் வச்சிரத் தன்மையை யுடைய வலிய தோளையுடையவனு மாகிய வச்சிரவாகுவின் முன்னவனாகிய இரணியன். வன் மொய்ம்பினன்-வலிய தோளையுடையவன். எச்சம் இல் - குறைவில்லாத. ஈடு - பெருமை. வீரனும் - வீரவாகு தேவரும்.

599. சாரதத்தானை - பூதர் படை. தானவத்தானை - அசுரர் படை. பல்லவச் சோனையை - அம்புமழையை. தகுவர்கோன் - இரணியன். பாரிடச் சேனையை - பூதப்படையை. பாரிடத்தே - பூமியில்.

கோரமுற் றடுதலுந் தருவர்கோ னாயிரம்
 கோல்விடுத் தாயிரங் கோடியாய் நீடிய
பாரிடச் சேனையைப் பாரிடத் தேயடப்
 பாங்குறும் பூதர்தா மேங்கியே யோடினார். கசகூ

600. சாரதற் கிறையவ னீலனும் பேரினன்
 தானவன் முன்புபோய்த் தானவன் மேவிய
தேரெடுத் தம்பரத் தெறியவே தேரொடும்
 சென்றுமீண் டிடுதலுஞ் சீலனு நீலனும்
நேருறச் சினமொடே மாகமேல் வேகமாய்
 நில்லுநில் லென்றுபோய் நீசன்மா மைந்தனைப்
பாரமெய்த் தாளினா லுருளவே யுதையவே
 பாரின்மேல் வீழ்தலும் பாய்ந்தனன் மேனிமேல்.

601. தன்பதத் தாலவன் றனைமிதித் திடுதலும்
 தாழ்ந்திடும் விறலினன் வீழ்ந்திடுஞ் சோரியன்
துன்புடைத் தாகியோர் மேனிதன் போலவே
 துஞ்சுறு விஞ்சையாற் றோன்றுவித் திடுதலும்
நன்புகழ்ப் பூதனுங் கண்டதைச் சாடவே
 நனிதொடர்ந் திருபத நலியவே மெலியவே
மன்புகழ்த் தேர்மிசைத் துயரகன் றேறினன்
 வாளிபூ தன்மிசை வஞ்சனுஞ் சிந்தினன். கசஅ

---

600. நீலனென்னும் பூதத்தலைவன் இரணியன் தேரை எடுத்து ஆகாசத்தில் வீசினான். அம்பரத்து - ஆகாசத்தில். மாகமேல் போய் - ஆகாசத்திலே போய். நீசன் மா மைந்தனை - இரணியனை. இரணியனை உதைத்துக் கீழே விழச் செய்து அவன் மேலே பாய்ந்தான்.

601. தாழ்ந்திடும் விறலினன் - குறைந்த வலிமையையுடைய வனாகி. இரணியன் தன்னைப்போலவே தோற்ற வேறோர் உடலை மாயையால் உண்டுபண்ண, நீலன் அதைத்தொடர்ந்து சென்று இளைக்க, இரணியன் தேரில் ஏறி யுத்தம் செய்யத் தொடங்கினான். விஞ்சையால் - வித்தையினால். பூதன் - நீலன். இருபதமும் சோர்வுற்று வருந்த.

602. மண்டுதீ வாளிதான் வந்துபட் டிடுதலும்
வாடிவெம் பூதனு மண்ணின்மே னின்றிடக்
கண்டனன் வீரனற் றேரொடுங் குறுகியே
கையன்மா யத்தினைக் கையினிற் கவினுறக்
கொண்டதோர் ஞானவே லாலழித் திடுதலும்
கொடியனோ ராயிரங் கோல்விடுத் திடவிரைந்
தொண்டிறற் புயமுடைக் காளைதன் மார்பகத்
துந்துகோல் வந்துபட் டொல்லைதூ ளுற்றவே. கசசு

603. மாணுறுந் திறலுடைக் காளைபின் பாயிர
வன்சரஞ் சிந்தியே மன்னவன் பின்னுறும்
தூணியுந் தூணிசேர் வாளியும் வாளிசேர்
தூவிலுந் தூவிலார் துங்கவன் றேரையும்
நாணுறும் படிகெடுத் தவனுரம் பஃறுளை
நண்ணவே செய்துபின் னண்ணல னண்ணிய
சேணிருந் தேரெலா நூறுநூ றம்பினால்
தேவர்கொண் டாடவே சிந்தினின் றுனரோ. கரு0

604. இச்செயல் கண்டுபின் னெண்ணலா னெண்ணுவான்
ஈங்கியான் முடிகுவ னெந்தையு முடிகுவன்
நிச்சயம் பிறர்களு முடிகுவர் முடிவரேல்
நீள்கடன் செய்யவோர் நிருதரிங் கில்லையால்

---

602. தீ வாளி - அக்கினி பாணம். பூதன் - நீலன். வீரன் - வீரவாகு. கையன் மாயத்தினை - இரணியன் செய்த மாயத்தை. காளை - வீரவாகு. அவர் மார்பிலே பட்டுப் பாணங்கள் பொடிபட்டன.

603. மாண் - மாட்சி. தூணி - அம்புப் புட்டில். தூ வில்லும் - தூய வில்லையும். தூ வில் ஆர்; வில் - ஒளி. அவன் உரம் பல் துளை நண்ண - அவன் மார்பிலே பல துவாரங்கள் உண்டாகும்படியாக. சேண் - உயர்ந்த.

604. எண்ணலான் - இரணியன். நீள் கடன் செய்ய - இறந்தவர்களுக்கு உரிய ஈமக்கடன்களைச் செய்ய. நான் உறுவன் - நான் உயிரோடு வாழ்வேன். ஆழியுள்-கடலுக்குள். பச்சிமத்திசை - மேற்குத் திக்கு. எதிர்படுந் திசை - கிழக்கு. பானு - சூரியன். பந்தி - வரிசை.

அச்செயல் புரியநா னுறுவனென் றுன்னியே
அருவமாய் மீனமா யாழியுட் போயினன்
பச்சிமத் திசைதனக் கெதிர்படுந் திசைதனிற்
பானுவந் தானிருட் பந்தியைச் சிந்தியே. கருக

605. ஆனவிச் செயலினை யொற்றர்கண் டேகியே
அடலுடைச் சூரன்முன் பணுகியங் கறையவே
ஈனமுற் றிடுகொடுஞ் சூரன்மா மைந்தனங்
கெரிமுகன் கடிதுவந் தெனைவிடுத் திடுதியான்
ஊனமுற் றழிவுறத் தெவ்வரைச் சீறியிங்
கொல்லைவந் திடுவனென் றுரைசெயா நின்றிட
மானமுற் றிடுவிறற் புதல்வபோய் வென்றுபின்
வருதியென் றேகினன் மன்னர்தம் மன்னவன். கருஉ

நாலா நாள் அக்கினிமுகாசுரன் வதை

606. என்றுசொற் றிடுதலும் புறமதிற் கடிதுவந்
தேருலா வும்பெருந் தேரின்மீ தேறியே
துன்றிமொய்த் திடுமடற் சேனையோ ரெண்ணிலார்
சூழவந் தேகியே தூயவெம் பூதர்சேர்
வென்றியுற் றிடுநெடுஞ் செம்புலத் தணுகலும்
வீரசா ரதர்களும் விறலுலா நிருதரும்
நின்றுபற் பலபடைக் கலமெறிந் தெதிருறு
நீடுவெஞ் சமரமா நிலைமைசெய் தாரரோ. கருங

607. அந்தவே லையில்விறல் வியர்வில்வந் துதயமாம்
அரியசீர் வீரர்போ யவுணர்தஞ் சேனையிற்
பந்திகொண் டிடுநெடுஞ் சாயகஞ் சிந்தியே
பாடுகண் டிடுதலும் பதகரங் கோடினோர்

---

605. எரிமுகன் - அக்கினிமுகாசுரன். தெவ்வரைச் சீறி - பகைவரை அழித்து.

606. மதிற்புறத்தில் விரைவிலே வந்து. செம்புலம் - போர்க்களம். நிருதர் - அசுரர். சமரமாம் நிலைமை செய்தார் - யுத்தமாகிய செயலைச் செய்தார்கள்

நிந்தைதீர் மேகனே சோமனே யாதியாம்
நிருதமன் னவர்செருப் பொருதவவ் வாறுகண்
டிந்துசீ ரெண்மரிற் றிறலுடைச் சதமகன்
ஒல்லைசென் றெய்தின னென்னலார் தங்களோர்.

608. போர்புரிந் தெதிர்பொருந் திந்துகண் டகனையும்
புயலினன் றன்னையும் பொன்றுறப் புரிதலும்
ஏர்புரிந் திடுமுரத் தேனையோ ரோடினர்
எரிமுக னிதுதெரிந் தெரிமுக னாகியே
கூர்புரிந திடுநெடுங் கணைசொரிந் தடலொடும்
கொள்ளைவெம் பூதரைக் கொன்றுநேர் நின்றிடச்
சீர்புரிந் திடுதிறற் சதமகன் கண்டனன்
சீற்றமேல் கொண்டனன் சிலைகுனித் தானரோ.கருரு

609. வெய்யனுக் கெதிரணைந் தடுசரம் பொழிதலும்
விறலுடைத் தருவனு மிருசரஞ் சிதறியே
சையமொத திடுபுயத் திறலுடைச் சதமகன்
தனுவையுந் தேரையுஞ் சாபவண் டேணியும்
வையகம் புகழவே நூறியோர் நூறுகோல்
மார்பிடைச் சிந்தலும் வன்மைபோய் நிற்பவீ
தொய்யெனக் கண்டவன் றுணைவரா மெழுவரும்
ஒல்லைசென் றெய்தின ரொன்னலான் முன்னரே.

---

607. வியர்வில் வந்து உதயம் ஆம் - வேர்வையிலே உதித்த வீரர் - லக்ஷ வீரர். பநதி-வரிசை சாயகம் - அம்பு பாடு கண்டிடுதலும் - பகைவருக்கு அழிவைச் செய்யவே பதகர் அங்கு ஓடினர் சதமகன் - வீரபுரந்தரன்.

608. இந்து கண்டகன் - சோமாசுரன். புயலினன் - மேகன். பொன்றுற - இறக்கும்படியாக. உரத்து - வலிமையை உடைய. எரிமுகன் - அக்கினிமுகாசுரன். எரிமுகனாகியே - கோபத்தால் கொதிக்கும் முகத்தை யுடையவனாகி. கொள்ளை - மிகுதி. சதமகன் - நவவீரரில் ஒருவனாகிய வீரபுரந்தரன்.

609. வெய்யனுக்கு - அக்கினிமுகாசுரனுக்கு. தருவன் - அசுரன். சையம் - மலை. சதமகன் தனுவையும் - வீரபுரந்தரனது வில்லையும்.

610. சிலைவளைத் தளவிலாக் கணைதமைச் சொரிதலும்
திறலுடைத் தருவனுஞ் சிலசரத் தினையவர்
மலையினைப் பொருபுயத் தெய்யவே யவரவன்
மாமுகத் தாயிர மார்பிலத் தொகைபுயம்
தலையிடத் தாயிரங் கையிடத் தாயிரம்
சாயகந் தொட்டவன் றேரையுந தடிதலும்
கொலையுடைக் கொடியனோர் தேரின்மீ தேறினன்
கோல்விடுத் ததனையுங் கூறுசெய் தாரரோ. கருஎ

611. தேரழித் தவனுடற் றுளைபடுத் திடலுமோர்
தேரின்மீ தேறியே சிவனருட் படையினைச்
சீருடைத் தருவர்கோ னெழுவர்மேல் விடுதலும்
தீநெடும் படையெனச் சிந்தைமீ தெண்ணியே
வீரமுற் றிடுபுனற் படைவிடச் சோதிவேல்
விரைவினுண் டணுகியேழ் வீரரைக் கொன்றதால்
வாரியிற் பொலிதரும் பூதரா னவரெலாம்
வாய்புடைத் தலறினர் வாடினா ரோடினர். கருஅ

சாப வண் தூணியும் - அம்பறாத் தூணியையும். கோல் - அம்பு. வன்மை போய் நிற்ப - வீரபுரந்தரன் மெலிவடைந்து நிற்க. எழுவரும் - வீர வாகுதேவர் அல்லாத ஏனைய எழுபேரும்.

610. தருவன் - அசுரன். அவர் புயத்து எய்யவே. அவர் அவனுடைய முகம், மார்பு, புயம், தலை, கை ஆகிய அங்கங்களில் ஆயிரம் ஆயிரம் அம்புகளை எய்தனர், சாயகம் தொட்டு - அம்புகளை எய்து.

611. அக்கினிமுகனுடைய தேரை அழித்து அவன் உடம்பையும் துளைத்தார்கள். சிவன் அருட்படை - சிவாஸ்திரம். தருவர்கோன் - அக்கினிமுகன். அவர்கள் சிவாஸ்திரத்தை ஆக்கிநேயாஸ்திரமென்று எணணி வாருணாஸ்திரத்தை விடவே, சிவாஸ்திரம அவ்வெழுவரையும் கொன்றது. தீ நெடும்படை - ஆக்கிநேயாஸ்திரம். புனற்படை - வாருணாஸ்திரம். சோதிவேல் - சிவாஸ்திரம் உண்டு - வாருணாஸ்திரத்தை விழுங்கி. வாரியின் - கடலைபபோல

612. ஈதெலாங் கண்டனன் பூதரைக் கையமைத்
திங்குநீ ரஞ்சன்மி னென்னவங் கோதியே
ஆதிகண் டனில்வருங் குமரனுக் கிளையவன்
அனன்முகக் கொடியன்முன் பணுகவே யிருவரும்
சோதிவெங் கணைகடூ யமர்புரிந் தார்கள்பின்
சூர்மகன் பரன்மகன் றூயமுண் டத்திடைத்
தீதுறுங் கணைகளோ ராயிரந் தொடுதலும்
செய்யவன் சீறியிச் செய்கைபின் செய்குவான்.

613. ஆயிரங் கணைகடூ யவுணர்கோ னிரதமும்
அங்கையிற் சாபமு மழிவுசெய் திடுதலும்
வேயுறுந் தோளுடைப் பதுமைதன் பாலகன்
வேறுதே ரேறியோர் வீறுதண் டுந்தவச்
சேயிருந் திறலுடைக் கதையையோர் கணையினாற்
சிதைவுசெய் திடுதலுஞ் சிலைபிடித் தவுணர்கோன்
வாயுவின் படைசமன் படைகதிர்ப் படைவிட
மற்றவப் படைவிடூஇ மாற்றினன் வீரனே. கசுO

614. ஆனைதன் பின்னவன் பின்னவன் பின்னரும்
அனன்முகத் தவனுரத் தம்புநா றய்ப்பவே
ஈனமற் றிடுமணித் தேரின்மீ தேவிழுந்
தெருவைநீர் பெருகவங் கெரிமுகன் றயருறீஇத்

612. இளையவன் - வீரவாகு. அனல்முகக் கொடியன் - அக்கினி முகாசுரன். சூர்மகன் - அக்கினிமுகன். பரன் மகன் - வீரவாகுவினுடைய. முண்டத்திடை - நெற்றியில் தொடுதலும் - எய்யவே.

613. சாபமும் - வில்லும். வேயுறும் தோள் - மூங்கிலைப போன்ற தோளையுடைய. பதுமை - பதுமகோமளை. தண்டு உந்த - கதாயுதத்தை ஏவ. அக்கினிமுகன் வாயவாஸ்திரம், யமாஸ்திரம், சூரியாஸ்திரம் என்பவற்றை விட, வீரவாகுதேவர் அந்த அஸ்திரங்களையே விட்டு அவற்றைத் தடுத்தார்.

614. ஆனை - விநாயகர்; அவருக்குப பின்னவர், முருகவேள்; அவருக்குப பின்னவர், வீரவாகு தேவர். உரத்து - மார்பில. உய்பப - விட. எருவை நீர் - இரத்தம. அகத்து உன்னலும் - மனத்தில் தியானித்தவுடன். தானையோடு - சேனையோடு. தெவ்வரை - பகைவரை.

தான்முனம் வழிபடுந் தன்னகர்க் காளியைத்
தன்னகத் துன்னலுந் தானையோ டெய்தினள்
மானமுற் றிடுதிறற் றெவ்வரைக் கொல்லுவன்
மைந்தவஞ் சேலெனா வந்தனள் பூதர்மேல். கசுக

615. துங்கவெம் பூதர்மேற் சூலமொன் றுந்தவச்
சூலமங் காலமே போலவந் திடுதலும
சங்கரன் மாமகன் பின்னவன் சிறியேழ்
சாயகங் கொண்டதைத் தடிதலுஞ் சண்டிகை
வெங்கொடுஞ் சினமொடே பின்புமோர் சூலவேல்
விடுதலு மாயிரம் வெஞ்சரந் தூண்டியே
அங்கது தன்னையு மங்குவித் திடுதலும
அண்ணல்சேர் தேரின்மீ தார்த்துவந் தெய்தினள்.

616. பாங்குறுங் காளியெண் கையுமோர் கையினாற்
பற்றியே மார்பகந் தெற்றியே நிற்றலும்
ஏங்கியே சோகமா யெருவைநீர் விழவிழுந்
திடரகன் றிடவெழுந் தேத்தினள் வாழ்த்தினள்
ஆங்குநின் றிலள்விரைந் தேகினா ளீதுகண்
டங்கிமா முகனெழுந் தடல்பெறுஞ் சிலைபிடித்
தோங்குநா றம்பினான் மொய்ம்பினன் றோளறுத்
தூதிய மாயதென் றூதினன் சங்கமே. கசுரு

617. தீதிலா வீரனீ ரேழுகோல் கொண்டுபின்
தீமுகத் தீயவன் சிலையறுத் திடவவன்
வேதனார் படைதனைக் கடவலுந் திறலினான்
வீரபத் திரன்படை விடுதலுங் கடிதுபோய்ப்

---

615. ஆலமே போல - விடத்தைபபோல. பின்னவன் - வீரவாகு. சாயகம் - அம்புகள். சண்டிகை - காளி.

616. எண் கையும் - எட்டுக் கைகளையும். எற்றியே - குத்தி. சோகமாய்-காளி மூர்ச்சையாகி எருவை நீர் - இரத்தம். மொய்ம்பினன் - வீரவாகுவினது. ஊதியம் ஆயது - வெற்றி உண்டாயிற்று.

617. வீரன் - வீரவாகு. ஈரேழு கோல் கொண்டு - பதினான்கு அம்பை எடுத்து. தீமுகத் தீயவன் - அக்கினிமுகாசுரன். வேதனார்

போதனுர் படைதனைச் சிந்திவெந் தழன்முகன்
பொன்றவே முடிகளைந் தண்ணல்கைப் புக்கதால்
ஆதரச் சுரரெலா மொய்ம்பன்மேல் மலர்சொரிந்
தாடினு ருவகையா லவசமே யாயினர். கசுஎ

618. வன்னிசேர் மாமுகன் பட்டதைக் கண்டவன்
மட்டிலாச் சேனையோர் மானமும் வீரமும்
துன்னவந் தெய்தியே பலபடைக் கலமெலாம்
தூவிவெம் போர்செயத் தூயவன் சீறியே
மன்னிடும் புயலெனக் கணைசொரிந் திடுதலும்
வாடிஞ ரோடினர் மாண்டுளா ராயினர்
அன்னதன் பின்னரெண் பூதரு மெழுவரல்
லாததம் பியருமங் கருகுவந் தெய்தினர். கசுஅ

619. அன்னபோ தெழுவராந் துணைவரைக் கண்டிலான்
யாவதா னுர்கொலோ வாவிபோ னுர்கொலோ
என்னவே யுக்கிரன் கனன்முகன் படையினுல்
எழுவரும் பொன்றினு ரென்றுகூ றிடுதலும்
இன்னுயிர்த் துணைவரா மவர்கிடந் துழியடைந்
திருகணீர் சொரியவங் கெதிர்விழுந் தலறினன்
நன்னயத் தம்பிமீர் தம்பிமீ ரென்றனன்
நனிபுலம் புற்றன னுடருந் திறலினன். கசுகூ

படை - பிரமாஸ்திரம். கடவலும் - எய்தவுடன். திறலினன் - வீர வாகு. போதனுர் படை - பிரமாஸ்திரம். தழல்முகன் பொன்ற - அக்கினிமுகாசுரன் இறக்கும்படி. முடி களைந்து - தலையை அறுத்து. ஆதரம் - அன்பு. மொய்ம்பன் - வீரவாகு. அவசமே ஆயினர் - தம்மை மறந்த நிலையை அடைந்தனர்.

618. வன்னி சேர் மா முகன் - அக்கினிமுகன். துன்ன - சேர. தூயவன் - வீரவாகு. புயல் என - மேகத்தைப்போல. வாடி ஓடி மாண்டனர். எண் பூதரும் - யாவரும் மதிக்கும் பூதகணத்தினரும்.

619. என்னவே - என்று கேட்க. உக்கிரன் கூறிடுதலும். கனல்முகன் - அக்கினிமுகாசுரன். பொன்றினர் - இறந்தனர். கிடந்துழி அடைந்து - இறந்து கிடந்த இடத்தை அணுகி.

(கலிநிலைத்துறை)

620. *இன்ன பான்மையிற் றுயருழந் தறுமுக னிளையோன்பின்*
மன்னி ருந்திறற் றுணைவரை யெழுப்புவான் மனங்கொண்டு
பின்னு றுங்கணைத் தூணியி னொருகணை பிடுங்காவங்
கன்ன தன்றலை யுகிரினா லெழுதுவா னடலோடும். ககூஎ

621. *வெற்றி வேலுடைக் குமரனுக் கிளையவன் விடுத்திட்டே*
னுற்ற வந்தகன் காண்கவென் றம்பிய ருயிர்கொண்டாய்
நற்றி றங்கொலோ விடுமதி கடிதென நனிதீட்டிச்[தான்.
செற்ற மோடுதன் சிலைபிடைப் பூட்டியே செலவுய்த்

622. *மாற்ற ருங்கட லேழையுங் கடந்துபோய் வயமேவும்*
கூற்றன் முன்னரே வீழ்தலுந் தெரிந்தனன் குறித்துள்ளத்
தாற்ற வஞ்சினன் றேடினன் கயிலையி னடைந்திட்டான்
வீற்றி ருந்தன ரவ்விடை யெழுவராம் விறலோரும்.

623. *பூண்ட போரிடை யிறந்தவெங் கணமெலாம் புடைசூழ*
ஆண்டி ருந்தன ரந்தகன் றொழுதன னடன்மேவி
நீண்ட தோளினான் றேடினன் வம்மென நிகழ்வோத
ஈண்டு தானையோ டெழுவரு மமர்க்களத் திடைவந்தார்.

---

620. துயர் உழந்து - வருந்தி. அறுமுகன் இளையோன் - வீரவாகு. எழுப்புவான் - உயிரோடு எழுப்ப. அன்னதன் தலை - அந்தப் பாணத்தின் நுனியில். உகிரினால் - நகத்தினால்.

621. இளையவன் - தம்பி. விடுத்திட்டேன் - இதை அனுப்பினேன். அந்தகன் காண்க - யமன் இதைப் பார்ப்பானாக. நல் திறம் கொலோ - நல்ல நீதியோ. விடுமதி கடிது - விரைவிலே விடுவாயாக. தீட்டி - எழுதி. செற்றமோடு - கோபத்தோடு. சிலை - வில்.

622. வய - வலிமை. கூற்றன் முன்னர் - யமனுக்கு முன்னாலே. வீழ்தலும் - வீரவாகுதேவர் எழுதிவிட்ட கணையானது சென்று விழ. உள்ளத்துக் குறித்து - மனத்தில் வீரவாகுதேவர் கட்டளையை நினைந்து. ஆற்ற - மிகுதியாக. எழு வீரர்களும் யமலோகத்தில் இல்லாமல் கயிலாசத்தில் இருந்தனர்.

623. கணமெலாம் - பூதகணத்தினர் அனைவரும். அந்தகன் - யமன். தோளினான் - வீரவாகுதேவர். வம் என - வாருங்கள் என்று.

624. இலங்கு தத்தம துருவினிற் புகுந்தன ரெழுந்தேபின்
நலங்கொள் வீரனை வணங்கலு மனையவ னயமோடும்
அலங்கன் மார்புறத் தழுவினன் மகிழ்ந்தனனதுபோதின்
விலங்கு றுவிற லந்தகன் வந்தனன் விறலோன்முன்.

625. தொழுது வீரநீ யென்றனை முனிந்தனை துணையோரைப்
பழுது செய்வனே வவர்பெருங் கயிலையிற்படர்ந்தாரென்
றெழுது வாசகங் கண்டபி னியற்றிய தெழிலோன்முன்
முழுது மோதினன் முனியலென் றேகினன் முரட்காலன்.

626. ஈதெ லாந்திற லொற்றர்கண் டேகியே யிருஞ்சூரன்
பாதம் வந்தனை புரிந்தன ரெரிமுகன் பட்டானென்
றோதி ஞரவ னரற்றினன் புலம்பின னுறுபோதிற்
காதன் மைந்தர்மூ வாயிரர் வந்தனர் கடியோன்முன்.

மூவாயிரம் பிள்ளைகள் வதை

627. வந்து தந்தைவெந் துயரறச் சிலமொழி வகுத்தோதி
வெந்தி றற்சமர்க் கேகுதும் யாமென விடைகொண்டு
பந்தி கொண்டதே ரேறியங் களவிலாப் படைசூழ
உந்து வீரனும் படைஞரு முறுகளத் துற்றூரால். களச

ஈண்டு தானையோடு - மிக்க சேனையோடு. அமர்க்களத்திடை - போர்க்களத்துக்கு.

624. உருவினில் - பிணமாகக் கிடந்த உடல்களில். வீரனை - வீரவாகுவை. நயம் - அன்பு. அலங்கல் - மாலை. விலங்குறு - தடுக்க முடியாத. அந்தகன் - யமன்.

625. என்றனை முனிந்தனை - என்னைக் கோபித்தாய். துணையோரை - நின் தம்பியருக்கு. பழுது - தீமை. படர்ந்தார் - சென்றூர். வீரவாகு எழுதிய கட்டளையுரையைக் கண்டவுடன் தான் செய்த காரியங்கள் எல்லாவற்றையும் யமன் அவரிடம் சொன்னான். முரண் - வலிமை.

626. ஒற்றர் - சூரனுடைய ஒற்றர்கள். எரிமுகன் - அக்கினிமுகாசுரன்.

627. ஏகுதும் - போவேம். பந்தி - வரிசை. வீரனும் படைஞரும் உறுகளத்து - வீரவாகுதேவரும் அவனுடைய படைவீரர்களும் இருந்த போர்க்களத்தை.

628. மாய மேசெயு மவுணரும் பூதரு மலைவாகி
ஓய்வில் பற்பல படைக்கலஞ் சொரிந்தம ருறுபோதிற்
றீயர் சேனையும் பூதர்தஞ் சேனையுஞ் சிலமாளப்
போயெ திர்ந்தனர் கடிதுமூ வாயிரம் புகழ்வீரர். கஎரு

629. கதிர்கொள் வாளிதூய்ப் பூதரை யடுதலுங் கணமன்ன
ரெதிர்பு குந்தம ரிழைத்திட வவரிவ ரெழின்மெய்யிற்
பதிவு றும்படி கணைவிட விடரொடும் படிநின்றார்
அதிர்த ருங்கழ லிலக்கரி லாயிர ரதுகண்டார். கஎசு

630. கண்டு வீரனைத் தொழுதனர் விடைகொடு கடிதேகி
எண்ட ரும்புகழ் விசயனே யாதியா யிரவீரர்
மண்டு கோன்மழை சொரிதலு மவருமம் மழைதூவ
அண்டி ருந்திற லிருவகைக் கணைபுநேர்ந் தமர்செய்த.

631. ஆய காலைமூ வாயிர ராயிரத் தவர்தேரைச்
சாய கங்கொடு சிதைத்தலுந் தூயவர் சரந்தூண்டித்
தீயர் தேரையுந் தனுவையுந் துணித்தனர் தேர்புக்கார்
மாய வந்தவர் சீறியே யீறிலா வரையுய்த்தார். கஎஅ

632. வீறுவெற்பெலாங் கணையினாற் சிதறியேவிறற்கோறாய்ச்
சீறி வெய்யர்மெய் துளைத்திட வவுணரிற் சிலரின்னோர்

---

628. மலைவாகி - போர்செய்யத் தொடங்கி.

629. தூய் - தூவி. கணமன்னர் - பூதத்தலைவர்கள். இடரொடும் - துன்பத்தோடு. படி நின்றார் - பூமியில் பூதர் நின்றனர்.

630. வீரனை - வீரவாகுதேவரை. மண்டு - மிகுதியான. அவரும் - மூவாயிரம் அசுரர்களும். அண்டு - நெருங்கிய. நேர்ந்து - ஒன்றனை ஒன்று எதிரிட்டு.

631. ஆயிரத்தவர் - விசயன் முதலிய ஆயிர வீரர்களுடைய. சாயகம் கொடு - அம்பினால். தூயவர் - ஆயிரவீரர். தனுவையும் - வில்லையும். மாய வந்தவர் - போர்செய்து இறக்கத் துணிந்து வந்த அசுரர். வரை உய்த்தார் - மலைகளைப் பிடுங்கி எறிந்தார்கள்.

632. மலைகளை அம்புகளால் பொடியாக்கி அசுரர் மெய்யைத் துளைத்தனர். வெய்யர் - அசுரர். அவுணர் - அசுரர். உவரிமேல் - சமுத்திரத்தில்.

ஏறு தேரெடுத் துவரிமே லெறிந்திட வெழில்வீரர்
மாறில் பூமிசைப் பாய்ந்தனர் பின்னரும் வந்துற்றூர்.

633. செற்ற வெங்கணை சொரிதலு மவுணரிற் சிலரின்னோர்
உற்ற கைச்சிலை பறித்தொடித் திடவவ ருரமீதே
எற்றினு ரவர் தாமுமங் கெற்றினு ரிகல்கூடி
மற்றெரு ழிற்றனைப் புரிந்தன ரிருவகை வலியோரும்.

634. ஈது செய்தலும் விசயனை யன்றிமற் றெல்லோரும்
போத நொந்தன ரவுணருக் குடைந்தனர் புறந்தந்தார்
தாது லாந்தொடை விசயனுட் சீறியே சரஞ்சிந்தித்
தீது லாவுசூர் மைந்தரைத் துணித்தனன் சிதைத்திட்டான்.

635. இறந்த பேர்களுந் துணிந்துள பேர்களு மெழுந்தேபின்
மறந்த ருஞ்செருப் புரிந்திட வியந்தனன் மனநொந்தே
சிறந்த வேலனை நினைத்தலுங் ககனமேற் செவ்வேள்வந்
துறைந்து நின்றுதன் றூெடொழு விசயனுக் குரைசெய்வான்.

636. மாய்ந்த வஞ்சக ரறுவது மெழுவது மலரோன்முன்
ஈந்த நல்வர மவரினிக் கெடவிதை யெறிகென்றே
காய்ந்த வெஞ்சினக் காரிவே லருளினன் கரந்திட்டான்
ஆய்ந்து ணர்ந்தன னிதனையுன் மத்தனு மசுரேசன்.

---

633. செற்றம் - கோபம். அவர் உரமீதே - அசுரர்களின் மார்பின் மேல். எற்றினுர் - அடித்தார். இகல் கூடி - பகை மிகுந்து. மல் தொழில்தனை - மல் யுத்தத்தை.

634. விசயனை அன்றி - விசயனைத் தவிர. போத - மிகவும். உடைந்தனர் புறந்தந்தார் - தோல்வியுற்று முதுகுகாட்டி ஓடினர். தாது - பூந்தாது தொடை - மாலை. சூர்மைந்தரை - மூவாயிரம் அசுரர்களை.

635. துணிந்துள பேர்களும் - துண்டுபட்டுக் கிடந்த அசுரர்களும். மறம் - வீரம். செரு - போர். ககனமேல் - ஆகாயத்தின் மீது. செவ்வேள் - முருகக்கடவுள்.

636. அறுவதும் எழுவதும் - இறப்பதும் மீண்டு உயிர்பெற்று எழுவதும். மலரோன் - பிரமதேவன். இதை எறிக - இந்த ஆயுதத்தை விடுவாயாக. காரி வேல் - பைரவாஸ்திரம்; காரி - பைரவன். உன்மத்தனும் அசுரேசன் - உன்மத்தன் என்னும் பெயரையுடைய அசுரர்தலைவன்; இவன் மூவாயிரவருள் ஒருவன்.

637. மிக்க மாயவள் படையினை விடுத்தலும் விசயன்றான்
அக்க ணந்தனிற் காரிதன் படைவிட வதுபோந்து
புக்க மாயவள் படையழித் தவுணர்கோன் புகழ்மைந்தர்
தக்க மும்மையா யிரரையுங் கொன்றது சயமாக. ௧௮௪

638. மும்மை யாயிரம் புதல்வர்கண் முடிந்ததை முரணுற்றார்
மம்ம ரோடுகண் டோடினர் சூரன்முன் மருவுற்றீ
தம்ம வோதலு மரற்றினன் புலம்பின னதுபோதின்
வெம்மை கொண்டசெங் கதிரவ னடைந்தனன் மேல்வேலை.

639. எண்ட ரும்புகழ் மதுரையே கதிர்விசும் பிருண்மேவும்
கொண்டல்மண்டமண்குண்டரே தாரகைக்குலமெல்லாம்
அண்டர் நாயக ரடியரே செக்கரே யழறிங்கட்
டுண்டம் வாதில்வே காதெழு மேடெனத் துலங்கிற்றே.

நாலாம் நாள் இரவு தருமகோபன் வதை

640. இன்ன பான்மையிற் கங்குல்வந் திடுதலு மிருஞ்சூரன்
தன்னை வந்தடைந் தறப்பகை புந்திசிற் சிலசாற்றி

---

637. மாயவள் படை - மாயை அளித்த ஆயுதம். காரிதன் படை - பைரவாஸ்திரம். சயம் ஆக - வெற்றியுண்டாகும்படி.

638. முரண் - வலிமை. மம்மர் - மயக்கம். கதிரவன் - சூரியன். மேல் வேலை - மேற்குத்திக்கில் உள்ள கடல்.

639. சந்திரோதய வருணனை. சந்திரனுக்கு, திருஞான சம்பந்தர் அமணரோடு வாது செய்தகாலத்தில் நெருப்பிலிட்ட ஏடு உவமை. என என்பதை மதுரை முதலியவற்றிற்கும் கூட்டுக. வானத்துக்கு மதுரையும், மேகத்துக்குச் சமணரும், நட்சத்திரத்திற்குச் சிவனடியார்களும், செவ்வானத்திற்குத் தீயும், பிறைக்கு ஏடும் உவமைகள். கதிர் விசும்பு - சூரிய சந்திரர் உலவும் வானம். அமண்குண்டர் - கீழ் மக்களாகிய சமணர்கள். தாரகைக் குலம் - நட்சத்திரக்கூட்டம். அண்டர் நாயகர் - சிவபெருமான். செக்கர் - செவ்வானம். திங்கள் துண்டம் - பிறை. வாதில் - திருஞான சம்பந்தர் அமணரோடு செய்த வாதத்தில். ஏடு - 'போக மார்த்த' என்ற திருப்பாசுரம் எழுதிய ஏடு.

640. கங்குல் - இரவு. அறப்பகை - தருமகோபன் என்னும் அசுரன்.

ஒன்ன லார்தம துயிர்குடித் தொல்லையீண் டுறுவேனென்
றன்ன வன்றனைவிடைகொடு புறந்தனிலடைந்திட்டான்.

641. புண்ட ரீகமா மாதிரப் போதகப் பிடர்புக்கே
அண்ட ரஞ்சுற வெண்ணிலாப் பெரும்படை யயல்சூழ
மண்டி ருந்திறற் பூதர்சூழ் பறந்தலை வந்திட்டான்
சண்ட முற்றிடு மவுணரும் பூதருஞ் சமர்செய்தார்.

642. இருதிறத்தருமெண்ணிலாப் படையெறிந்திகல்கொண்டு
பொருதி றஞ்செய வவுணரி லமைச்சரும் புகழ்வேர்வில்
வருதி றத்தரு மெதிர்ந்தனர் சமர்த்தொழின் மருவுற்றார்
திருமி குத்திடு மவுணரும் பூதருஞ் சிலர்மாண்டார்.

643. இலக்க வீரரும் வன்மைபோய் நொந்தன ரிதுகண்டு
விலக்க ரும்புகழ்வீரமார்த் தாண்டனும் விறலோன்சென்
றலக்க ணுற்றிடக்கணைசொரிந்தமைச்சரையடனோக்கித்
தலக்க ணின்றிடுந் தானவ ரெதிர்ந்தனர் சமர்செய்தார்.

644. ஓங்கு பூதர்கள் பலமலை விடுதலு முடைந்தார்கள்
தீங்கு லாவிய வறப்பகை கண்டிது சினமேவித்
தாங்கி ரும்புகழ்ப் பூதர்மீ தளவிலாச் சரஞ்சிந்த
ஆங்கு மேனிமேற் படுதலு மெலிந்தன ரடனீங்கி.

645. காலிற் கொன்றிடு மருப்பினாற் கொன்றிடுங் கவின்மேவும்
வாலிற் கொன்றிடுங் கரத்தினாற் கொன்றிடும்வயப்பூதக்

---

641. புண்டரீகம் என்ற பெரிய திக்கஜத்தின் கழுத்தின்மேல் புகுந்து. அண்டர் - தேவர். பறந்தலை - போர்க்களம். சண்டம் - கொடுமை.

642. இகல் - பகை. பொரு திறம்செய - யுத்தம் செய்ய. வேர் வில் வரு திறத்தரும் - லக்ஷ வீரர்களும்.

643. அலக்கண் - துன்பம். அமைச்சரை - அசுர மந்திரிகளை. தலக்கண் நின்றிடும் தானவர் - பூமியின்மேல் நின்ற அசுரப்படைஞர்.

644. உடைந்தார்கள் - தோல்வியுற்றார்கள். அறப்பகை - தருமகோபன். மெலிந்தனர் - பூதர்கள் தளர்ச்சியை அடைந்தார்கள். அடல் - வலிமை.

645. மருப்பினால் - தந்தத்தால். வய - வலி. சால - மிகுதியாக. சாரதர் - பூதர்கள்.

கோலச் சேனையை யிவ்வகை கொடியவன் கொடுவேழம்
சாலக் கோறலுஞ் சாரத ரோடினர் தரைமீதே. ௧௯௨

646. கண்டு வென்றிசேர் கதிரவன் கடிதுபல் கணைசிந்திப்
புண்ட ரீகமீ தழுத்தலு மயர்ந்தது பொலிசீற்றத்
தண்டர் மாற்றலன் சீறியே நூறுகோ லவையேவிக்
கொண்ட சோரிநீ ரெழுந்திட வழுத்தினன் குளமீது.

647. உதிர மோடுதன் றேருறத் தீயவ னொருவேலை
எதிர்வி டுத்தலும் வீரமா புரந்தர னென்போனாற்
கதிர்நெ டுங்கணை விடுத்தது தடுத்துவெங் கணைமாரி
துதிபொ ருந்திய வவுணன்மேற் பொழிந்தனன் சுரர்போற்ற.

648. தரும கோபனை வாலவை விலக்கியோர் தண்டுந்த
மரும மீதது வந்துபட் டிடுதலு மயக்குற்றான்
கரும மீதுகண் டடல்பெறுந் தோளினன் கடிதேக
வரும வன்றன்மேற் பொழிந்தன னிழிந்தவன் மழைவாளி.

649. விட்ட வாளிபட் டொடிந்திட வீரனோர் விறல்வேலை
ஒட்ட லன்றன்மேல் விடுத்திடச் சென்றவ னுரத்தூடே
பட்டு வெந்நிடைப் பறிதலு முளம்பதை பதைப்புற்று
மட்டில் சோரியோ டிருந்தனன் கரிமிசை மயலாகி. ௧௯௬

---

646. வென்றி சேர் கதிரவன் - வீரமார்த்தாண்டன். புண்டரீகம் - தருமகோபன் ஏறி வந்த யானை. அயர்ந்தது - தளர்ச்சியை அடைந்தது. அண்டர் மாற்றலன் - தருமகோபன். சோரி நீர் - இரத்தம். குளமீது - நெற்றியில்.

647. இரத்தமானது ஓடுகின்ற தன் தேரில் வந்து அடிக்க. தீயவன் - தருமகோபன். நால் கணை விடுத்து - நான்கு அம்புகளை எய்து.

648. ஏவால் அவை விலக்கி - அம்பினால் அந்த நான்கு அம்புகளைத் தடுத்து. தண்டு - தண்டாயுதம். மருமம் - மார்பு. மயக்குற்றான் - வீரபுரந்தரன் மயங்கி வீழ்ந்தான். அடல் பெருந் தோளினன் - வீரவாகு. வரும் அவன். இழிந்தவன் - தருமகோபன்.

649. வீரவாகுவின் மேல்விட்ட அம்புகள் ஒடிந்து போயின. அவர் ஒருவேலைத் தருமகோபன்மேல்விட அது மார்பிலே பட்டு உருவி முதுகு வழியாகச் செல்லவே அவ்வசுரன் மயக்கமடைந்தான். ஒட்டலன்-

650. அந்த வேலையி லவன்கரி மனஞ்சினந் தடன்மேவும்
தந்தி மாமுகற் கிளையவற் கிளையவன் றடந்தேரை
உந்து நாற்பெருங் கோட்டினுற் றூக்கியே யுயர்பாகன்
சிந்து றும்படி புடைத்தது கரத்தினுற் றிறலோடும்.

651. ஆன காலையில் வேறுதே ரேறியே யடல்வீரன்
கான மாமலைக் கரிகரம் பிடித்தனன் கவுண்மோதி
ஈன முற்றிட வப்புறத் துலகிடை யெறியப்போய்த்
தான வர்க்குளந் துணுக்குற விழுந்தது தரைமீது.

652. விழுந்து மண்மிசைத் துன்பொடு கிடத்தலும் விறல்வெய்யோ
னெழுந்து தண்டமொன் றுந்திடு மன்னதை யெழில்வீரன்
செழுந்த னிச்சுடர் வாளினுற் சிதைப்பவச் சிரமுய்த்
அழுந்து சீருள வச்சிரங் குறுகிய தடலோன்முன். [தான்

653. வந்த வச்சிரம் பாணியிற் பிடித்துவஞ் சகன்மீதே
உந்த வங்கது படுதலும் பதைபதைத் துடன்வீழச்

பகைவன். உரத்தூடே - மார்பினுள்ளே. வெந்நிடைப் பறிதலும் - முதுகு வழியே வெளிப்பட. சோரியோடு - இரத்தத்தோடு. மயல் ஆகி - மயக்கம் அடைந்து

650. அவன் கரி - புண்டரீகமென்னும் திக்கஜம். தந்திமா முகற்கு இளையவன் - முருகவேள்; அவருக்கு இளையவன் - வீரவாகு.

651. அடல்வீரன் - வீரவாகு. கானமாமலைக் கரிகரம் - காடுகளையுடைய பெரிய மலையைப்போன்ற யானையின் துதிக்கையை. கவுள் மோதி - கன்னத்தில் அறைந்து. தானவர்க்கு - அசுரர்களுக்கு. துணுக்குற - அச்சம் உண்டாக.

652. விறல் வெய்யோன் - தருமகோபன். வீரன் - வீரவாகு. தருமகோபன் விட்ட தண்டாயுதத்தை வீரவாகுதேவர் வாளினல் வெட்டினர். வச்சிரம் உய்த்தான் - அசுரன் வச்சிராயுதத்தை விட்டான்.

653. வச்சிராயுதத்தைக் கையால் பற்றி அசுரன் மேலே திருப்பி விட்டான்; அதுபடவே அசுரன் பதைபதைத்து விழ, வீரவாகுதேவர் அவனைக் காலினல் துவைத்துக் கொன்றூர்.

பாணி - கை. அந்தரத்தரை அலைத்தவன் - தேவர்களைத் துன்புறுத்தியவன். அவர் - தேவர்கள்.

சுந்த ரங்கெழு தாளினு லுதைத்திடத் துகடரும்
அந்த ரத்தரை யலைத்தவ னிறந்தன னவர்துள்ள. ௨00

654. ஈது கண்டவன் றண்டமங் கோடிய திடர்மூழ்கிப்
பூத லத்துறு வெங்கரி யெழுந்துபின் புகழ்ந்தேத்தி
மேத குந்திறல் வீரனை விடைகொடு விறல்சேர்தன்
மாதி ரந்தனிற் படர்ந்தது பூதர்கண் மகிழ்ந்தார்த்தார்.

655. செற்ற மேவிய வறப்பகை மடிந்தவச் செயறன்னை
ஒற்றர் நோக்கினர் வாடின ரோடின ருரைசெய்ய
அற்ற மாந்துயர்ப் பரவையு ளழுந்தின னறிவின்றி
உற்ற பாவைபோ லிருந்தன னவுணரி லுரமிக்கான்.

ஐந்தாம் நாள் பானுகோபன் வதை

656. இருந்த காலையி லிறையவன் கறையடி யிருந்தோலாற்
பரிந்து மத்தகங்காறுமெய்ம் மறைந்திடும்படிபோர்த்துத்
திருந்து செஞ்சடைகாட்டிநின்றிடுவதோர்திறம்போலக்
கருந்தண் வேலையிற் செங்கதி ருதித்தனன் கதிர்வீசி.

657. அற்ற வேலையிற் காசிப னுதவிய வசுரேசன்
இற்று ளானெனத் துயருழந் தயர்வுறு மியனோக்கி

654. அவன் தண்டம் - தருமகோபனுடைய படை. வெங்கரி - கீழே விழுந்துகிடந்த புண்டரீகம் என்னும் யானை. தன் மாதிரந்தனில் - தனக்குரிய திக்காகிய கீழ்த்திசையில்.

655. அறப்பகை - தருமகோபன். ஒற்றர் - சூரனுடைய தூதுவர். அற்றம் - சோர்வு. துயர்ப்பரவையுள் - துயரமாகிய கடலில். பாவை போல் - பொம்மையைபபோல். உரம் - வலிமை.

656. யானைத் தோலைப போர்த்துக்கொண்டு செஞ்சடையை மாத்திரம் வெளிக்காட்டிச் சிவபிரான் இருத்தல்போல் கடலில் சூரியன் உதயமானுன்.

இறையவன் - சிவபிரான். கறையடி இருந்தோலால் - யானையினது கரிய தோலினல். பரிந்து - அன்பு செய்து. மத்தகங்காறும் - தலைவரையிலும். செங்கதிர் - சூரியன்.

657. அற்ற வேலையில் - அந்தச் சமயத்தில். அசுரேசன் - சூரன். இற்றுளான் என - இறந்துபட்டான் என்று சொல்லும்படி. அயர்வுறும்

வெற்றி யூதையுஞ் சிந்தையும் பிற்பட விரைந்தோடி
எற்ற லைந்தவற் பணிந்தனரொற்றர்தாமெழுந்தார்பின்.

658. சிறந்த வீரரை மாயையாற் கட்டிமுன் றிரைவேலை
உறைந் திடும்படி யெறிந்துபி னிகழ்ந்தன வுரைசெய்ய
அறந்தவிர்ந்தவன் றவிர்ந்திடாப் பெருந்துய ரதின்மூழ்கி
இறந்ததேயினிநம்பெருவாழ்க்கையென் றெழுந்திட்டான்.

659. எழுந்து தந்தைதன் கோயிலுட் புகுந்தவ னிருதாண்மு
விழுந்து நின்றுவேற் குமரனைத் தூதனை மிகவேநா [ன்
மழிந்து போவதே யன்றிவென் றிடுவதிங் கரிதண்டர்
ஒழிந்தி டச்சிறை விடுப்பதே நன்றென வுரைசெய்ய.

660. மஞ்ச நெஞ்சகத் தஞ்சினை போலுநின் மனையேகித்
துஞ்சி வைகுதி யென்னயா னுரைத்ததைத் துகடீர
நெஞ்சு கொண்டிலன் வெருளிகொண் டானென நினைவாகி
வஞ்ச னேன்பிழை பொறுத்தியென் றுரைத்தனன் மகிழ்வாக.

661. அறைந்து போர்க்கவன் றனைவிடை கொண்டவ னகன்றேபின்
குறைந்தி டாப்பெருந் தேர்மிசை யேறினன் குழுவாகி

இயல் - தளர்ச்சியை அடைந்த தன்மையை. ஊதை - பெருங்காற்று. எல் தலைந்தவன் - பானுகோபனை.

658. மாயையாற் கட்டிய பூதர்களைச் சமுத்திரத்தில் பானுகோபன் எறிந்து வந்த பிறகு சூரன் மக்களும் தருமகோபனும் இறந்த வரையிலும் நிகழ்ந்தவற்றைப் பானுகோபனிடம் ஒற்றர் கூறினர். திரை வேலை - அலைகளையுடைய கடலில். அறம் தவிர்ந்தவன் - பானுகோபன்.

659. குமரனையும் தூதனையும் வென்றிடுவது அரிது. தூதன் - வீரவாகுதேவர். அண்டர் - தேவர்.

660. மஞ்ச - மைந்த; விளி. துஞ்சி வைகுதி - தூங்கிக்கொண்டு சுகமாக இருப்பாயாக. துகள் தீர - குற்றம் இல்லையாகும்படி. மகிழ்வு ஆக - சூரனுக்கு உவகை உண்டாகும்படி.

661. அறைந்து - கூறி. குழுவாகி - கூட்டமாகக் கூடி. கூளிப் பறந்தலைக்களம் - பூதர்கள் இருந்த போர்க்களத்திற்கு. இரவிதன் பகை ஆனான் - பானுகோபன்.

நிறைந்த வெண்ணிலாச் சேனைகள் சூழ்தர நெடுங்கூளிப்
பறந்த லேக்களஞ் சென்றன னிரவிதன் பகையானன்.

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

662. அந்த வேலையிற் பூத வீரரும்
அவுண வீரரு மடலி னேடெதிர்த்
துந்து போர்செயத் தூசி யாகிமுன்
புற்ற பூதரங் குடைவ தாயினர்
வந்து பின்புறும் பூதர் தானவர்
மாறு மாறுமா றான போர்செயச்
சுந்த ரந்தருஞ் சூரன் மாமகன்
தூவி னன்கணை தூய பூதர்மேல். உ0கூ

663. வாளி பட்டிடப் பூத ராயினோர்
வாடி யோடினர் மங்கை பாலகன்
தாளி னன்புறுந் திறல்கொண் மொய்ம்பினன்
தான வப்பெருந் தானை யானதைத்
தூளி யாகவெங் கணைபொ ழிந்திடச்
சூரன் மாமகன் றாயன் முன்புபோய்க்
கோளி ருங்கரச் சிலைவ ளைத்தனன்
கோர வாயிரங் கோல்வி டுத்தனன். உகO

664. ஆயி ரஞ்சர மகல மூழ்கிவெங்
அகல வேயக லாத மொய்ம்பினன்
தீய துன்பமோ டாயி ரஞ்சரம்
தீயன் மொய்ம்பிடைச் செலவி டுத்தலும்

---

662. வேலை - சமயம். தூசி ஆகி - முன்னே உள்ள படையாகி. உடைவது ஆயினர் - தோல்வியுற்றனர். மாறுமாறு - போரைவிட்டு விட்டுப் போகுமாறு. மாறு ஆன - எதிரான. மகன் - பானுகோபன்.

663. மங்கை பாலகன் - முருகவேள். மொய்ம்பினன் - வீரவாகு. தூளி ஆக - பொடியாகும்படி. கோள் இரும் கரச்சிலை - கொலை செய்வதற்குரிய பெரிய கைவில்லை. ஆயிரம் கோரக்கோல்; கோல் - அம்பு.

664. அகலம் மூழ்கி - வீரவாகுதேவர் மார்பிலே பதிந்து. வெங் அகலவே - முதுகின் வழியே ஊடுருவிச் செல்ல. அகலாத மொய்ம்பி

நோயு ழுந்துபின் பண்ணல் வில்லையோர்
நூறு கோலினு னூறி நிற்கவோர்
மாய்வில் வேலினைத் தீய னெற்றியுள்
மன்ன வுய்த்தனன் வாகை வாகினுன். உகக

665. பெருகு சோரிநீர் மிகவெ ழுந்திடப்
பெருகு துன்பமாய்ப் பின்றெ ளிந்தனன்
முருகு கொண்டிடுந் தொடையல் வீரனோர்
மூரி வெஞ்சிலை முரணெ டும்பிடித்
தருகு நின்றிடுந் தருவ ரஞ்சவே
அனில மன்படை யங்கி யின்படை
கருகு மெய்யுடைக் கொடிய னோர்விடக்
கடிய னும்மவை கடவி மாற்றினுன். உகஉ

666. மாற்றி வஞ்சகன் கதிர வன்படை
மலரி னன்படை மால்பெ ரும்படை
சீற்ற மாகியே விடலு மன்னவை
செலுத்தி வீரனுந் தடுத்து நின்றிட

ஞன் - அழியாத வலிமையையுடைய வீரவாகுதேவர். மொய்ம்பிடை - தோளில். நூறி - அழித்து. மாய்வு இல் - அழிதல் இல்லாத. தீயன் நெற்றியுள் மன்ன - பானுகோபனது நெற்றியிலே பதியும்படி. வாகை வாகினுன் - வெற்றியையுடைய தோளையுடைய வீரவாகுதேவர்.

665. சோரிநீர் - இரத்தம். பெருகு துன்பமாய்ப் பின் தெளிந்தனன் - மிக்க துன்பமடைந்து செயலற்றுப் பிறகு தெளிவடைந்தான். முருகு - நறுமணம். தொடையல் - மாலை. மூரி - வலிமை. முரண் - பலம். தருவர் - அசுரர். அனிலமன்படை - வாயவாஸ்திரம். அங்கியின் படை - ஆக்கிநேயாஸ்திரம். கொடியன் நேர்விட - பானுகோபனுக்கு எதிரே விட. அவனும் அத்தகைய பாணங்களையே எய்து அவற்றைத் தடுத்தான். கடவி - எய்து.

666. பானுகோபன் சூரியாஸ்திரம், பிரமாஸ்திரம், நாராயணுஸ்திரம் ஆகியவற்றை விட வீரவாகுதேவரும் அவற்றையே விட்டுத் தடுத்தார். பிறகு பானுகோபன் மாயத்தால் மறைந்து பாணங்களைச் சொரிந்தான்.

அம்பரத்தினில் - ஆகாசத்தில். இறுதி மாரிபோல் - யுகாந்த மழையைப்போல.

ஆற்றல் கொண்டிடுந் தனது மாயையால்
அரிய தேரினோ டம்ப ரத்தினில்
தோற்றி டாதொளித் திறுதி மாரிபோல்
தூவி னன்சரந் தூய வீரன்மேல். உகங

667. கள்ள வஞ்சகன் முன்பு பின்புமாய்க்
கணைசொ ரிந்திடக் காமர் மெய்யெலாம்
வெள்ள மானசெங் குருதி யோடவே
வீர வாகுவும் வெகுளி கொண்டுபின்
தள்ள ரும்புகழ்ப் போத கப்படை
தனைவி டுத்தலுந் தகுவன் மாயமங்
கெள்ளி யாவரு நகைசெ யும்படி
இரிய விண்ணிடைத் தெரிய நின்றனன். உகச

668. மற்ற வன்றனைக் கண்டு சீறியே
வஞ்ச காவினி யெங்க ணேகுதி
நிற்றி நிற்றியென் றம்ப ரத்தின்மேல்
நெடிய தேரொடுங் கடிதி னெய்தியே
கற்று ணைப்புயன் கொண்ட லாமெனக்
கணைசொ ரிந்திடக் கண்டு மண்டுகோல்
எற்ற ளேந்தசூர் மைந்த னுந்தவங்
கிந்த வாறுபோ ரியற்றி னாரரோ. உகரு

669. கிட்ட வந்திடுஞ் சேணி லேகுறும்
கிளரு மொன்றையங் கொன்று சென்றுநேர்
முட்டு மெட்டதா மாதி ரத்தினும்
மூரி வானினு முடுகி யேகுறும்

667. காமர் - அழகு. போதகப்படை - ஞானஸ்திரம். தகுவன் - அசுரன். எள்ளி - இழித்து. இரிய - கெட்டு நீங்க.

668. நிற்றி - நிற்பாயாக. அம்பரத்தின்மேல் ஆகாசத்தின் மேல். கல்லைப்போன்ற தோள்களையுடைய வீரவாகு. மண்டுகோல் - மிக்க அம்புகளை. எல் தளேந்த சூர் மைந்தன் - பானுகோபன்.

669. கிட்ட - அருகில். சேணில் - நெடுந்தூரத்தில். மாதிரத்தினும் - திசைகளிலும். மூரி - வலிமை. முடுகி - வேகமாக. வால் விறல் சங்கம் - வெள்ளையாகிய வெற்றிச்சங்கை. சூள் - வஞ்சினங்களை.

இட்ட மானதே ரிருமை வீரரும்
இகழு வார்செருப் புகழு வார்சரம்
தொட்டு வால்விறற் சங்க மூதுவார்
சூளி யம்புவார் சூழு வாரரோ. உகசு

670. வரையி லோடுமா முகிலி லோடுமேல்
வான மோடுநீர் வளமு லாவுதெண்
திரையி லோடுமூ தண்ட மோடுமெண்
திசையி லோடுமத் திசைகள் சூழுமித்
தரையி லோடுநீள் பிலத்தி லோடுமெய்த்
தான வர்க்கெலா மரச ஞகிய
விரையு லாந்தொடைப் பானு கோபனும்
வீர வாகுவும் விடுச ரங்களே. உகஎ

671. பாங்கு கொண்டுநூ றுயி ரந்தொகைப்
பல்ல வங்களாற் பல்ல வம்புரிந்
தோங்கு சூர்மகன் வீர னேறுதேர்
ஒழிவு செய்யவோ ராயி ரஞ்சரத்
தாங்கு வெய்யவன் றேரை வீரனும்
அழிவு செய்யவில் லமர்பு ரிந்தபின்
தீங்கில் வாள்பிடித் திருமை வீரரும்
சென்றெ திர்ந்துநேர் நின்று போர்செய்தார். உகஅ

672. மன்னி டும்புகழ்ச் சூரன் மாமகன்
வள்ளல் மாமகன் வாள்வி லக்கியே
கொன்னு றுந்திருத் தோளில் வெட்டிடக்
குருதி வீழ்தரக் குமர வேள்பதம்

---

670. திரையில் - சமுத்திரத்தில். பிலத்தில் - பாதாள உலகத்தில். விரை உலாம் தொடை - மணம் பரவிய மாலையை அணிந்த.

671. ஒருவர் தேரை மற்றொருவர் அழித்துவிட்டு இருவரும் வாட்போர் செய்யலாயினர்.

பாங்குகொண்டு - தக்க தருணத்தை மேற்கொண்டு. பல்லவங்களால் - அம்புகளால். பல் அவம் புரிந்து - பல தீம்புகளைச் செய்து. ஒழிவு செய்ய - அழிக்க.

உன்னி வீரரிற் றலைமை பெற்றுளான்
ஒன்ன லன்வலத் தோளை யொல்லையின்
மின்னு வன்னதாய் மின்னு வாளினால்
வீழ்வு றும்படி வெட்டி னனரோ. உகசு

673. சீரு லாவுதன் வலது கைத்தலம்
சிதைவ தாகவே தீயன் மாமகன்
ஏரு லாவுறு மிடது கைத்தலத்
திலகு வாள்பிடித் தெதிர வீரனும்
கோர வாளினால் வாம பாணியைக்
குறைவு செய்தவன் கொடுமை யுன்னவே
சூரன் மாமகன் றலையை விண்ணுளார்
துள்ளி யாடவே தள்ளி னனரோ. உஉ0

(கலிவிருத்தம்)

674. மான்மகன் மகன்மகன் மகன்ம டிந்திட
லான்மக பதிமுத லமரர் துள்ளினர்
வேன்மகி பனைநினை வீர வாகுவும்
தான்மன மகிழ்ந்தனன் சபத முற்றியே. உஉக

---

672. வள்ளல் மாமகன் - வீரவாகுதேவர் கொன் - பெருமை. திருத்தோளில் - வீரவாகுவின் அழகிய தோளில். பெற்றுளான் - வீர வாகு. ஒன்னலன் - பகைவனது. மின்னலைப்போல மின்னுகின்ற வாளால்.

673. தீயன் மாமகன் - பானுகோபன். எதிர - எதிர்த்துப போர் புரிய. வாமபாணியை - இடக்கரத்தை. குறைவு செய்து - வெட்டி.

674. மால் - திருமால்; அவர் மகன் பிரமன்; அவன் மகன் காசிபன்; அவன் மகன் சூரன்; அவன் மகன் பானுகோபன். மகபதி - இந்திரன். வேல்மகிபனை - முருகக்கடவுளை. சபதம் - பானுகோப னைக் கொன்றாலன்றித் திரும்புவதில்லை என்ற சபதம்; 589-ஆம் செய் யுளைப் பார்க்க.

675. உற்றசீர் முடியற வொளிகொள் பானுவின்
பற்றலன் மடிதலும் பாரின் மேவியே
சுற்றிய படையெலாஞ் சூழ வேலன்முன்
வெற்றியோ டணைந்தனன் வீர வாகுவே. ௨௨௨

676. இன்புறு முருகனை யிறைஞ்சி நிற்றலும்
துன்பொடு வருந்துநீ சூரன் மைந்தனைக்
கொன்புனை புயத்தினாய் கொன்று வந்தனை
அன்பொடு வேண்டிய தறைதி யென்றனன். ௨௨௩

677. என்றிவை குமரவே ளிசைப்பக் கேட்டலும்
உன்றனை யலதியா னோர்செ யற்கையும்
இன்றுசெய் ததுசிறி தில்லை யாயினும்
ஒன்றொரு வரந்தனை யுதவ வேண்டுமால். ௨௨௪

678. அண்டர்பொய் வாழ்வையு மயன்பொய் வாழ்வையும்
விண்டுவின் வாழ்வையும் வெஃகி லேனியான்
தண்டைக ளணிந்தநின் சரணத் தன்பையே
கொண்டிட வேண்டுவ னென்று கூறினான். ௨௨௫

679. என்றுழி யளித்தன மென்று வேலவன்
துன்றிய புகழுடைத் துணைவர் தம்மொடும்
வென்றிகொ ளிருக்கையில் வீர வாகுவைச்
சென்றிட விடுப்பவவ் விருக்கை சேர்ந்தனன். ௨௨௬

680. பானுவின் மாற்றலன் பதைத்து வீழ்ந்துயிர்
போனதை நாடியே போந்தங் கொற்றர்தாம்

---

675. பானுவின் பற்றலன் - பானுகோபன்.

676. கொன் - பெருமை.

677. ஓர் செயற்கையும் - ஒரு காரியமும்.

678. அண்டர் - தேவர். அயன் - பிரமன். விண்டு - திருமால். வெஃகிலேன் - விரும்பவில்லை. சரணத்து - திருவடிகளில்.

679. துணைவர் தம்முடன் - தம்பிமார்களோடு.

தானவன் றனக்கிது சாற்றக் கேசரி
மேனிமிர் தவிசினும் வீழ்ந்த ரற்றினன். ௨௨௭

681. அன்னதோர் காலையி லமர்க்க ளத்திடைச்
சின்னம தாகிய சேயைத் தானவர்
முன்னமே கொடுவர முகில்பு ரைந்திடு
வன்னமே யானவன் வருந்தன் மேயினன். ௨௨௮

682. சிரத்தினைக் கரத்தினைத் திருந்து மார்பினைப்
பொருத்திடும் பார்த்திடும் புரளுஞ் சோர்வுறும்
அருத்திகொள் வாய்புடைத் தலறு மன்றவன்
பரித்திடுந் துயரையார் பகர வல்லரே. ௨௨௯

683. மற்றிதைப் பதுமகோ மளையென் பாளறிந்
திற்றிடு மைந்தன்முன் பெய்தி மேல்விழுந்
தற்றமி றன்பொடு மரற்றி னணைகர்
முற்றினு மழுகுரன் முதிர்ந்த தந்தநாள். ௨௩0

சிங்கமுகாசுரன் வதை

684. தீயவ னன்னபின் சிலரை நோக்கியே
மாயநம் பகைஞரை மடிவு செய்துபின்

---

680. பானுவின் மாற்றலன் - பானுகோபன். தானவன் தனக்கு - சூரனுக்கு. கேசரிமேல் நிமிர் தவிசினும் வீழ்ந்து - சிங்காதனத்திலிருந்து விழுந்து.

681. சின்னமதாகிய சேயை - துண்டமாய் விழுந்த பிள்ளையை. முகில் புரைந்திடு வன்னமே ஆனவன் - மேகத்தை யொத்த கரிய நிறத்தை உடைய சூரன்.

682. பொருத்திடும் - உடலொடு பொருத்தி. வாய் புடைத்து - வாயில் அடித்துக்கொண்டு. பரித்திடும் - தாங்கிய.

683. பதுமகோமளை - சூரன் மனைவி. இற்றிடும் - இறந்துபட்ட. அற்றம் இல் - இறுதி இல்லாத.

684. தீயவன் - சூரன். ஒரு மகம் செய்து எழுப்புவன் - யாகம் ஒன்று பண்ணி உயிர்ப்பிப்பேன். காயம் - பானுகோபன் உடலை.

சேயினை யொருமகஞ் செய்தெ ழூப்புவன்
காயமிங் கொருபுடை காத்தி ரென்றனன். உ௩௧

685. ஓங்கிய விதுபுகன் றுற்ற வொற்றரைத்
தீங்கின ஞேக்கியே சென்னி யாயிரம்
தாங்கிய வெம்பியைத் தருதி ரென்னலும்
ஆங்கவர் வடதிசை யளக்கர் மேவினர். உ௩௨

686. ஓவிலா வதனிடை யுயர்ந்த விண்ணுளார்
பூவினர் புகழ்தரு புரத்துட் கோயில்போய்
மேவினர் நிகழ்ந்தன விளம்பி னுருனைக்
கூவினன் சூரெனக் கூறி னுரரோ. உ௩௩

687. என்றலு மரிமுக னெழுந்து சேனையோ
டொன்றுசீர் மகேந்திர மணுகி யும்பரை
வென்றவ னடிமிசை வீழ்ந்தெ ழுந்துநீ
என்றனைக் கூவிய தென்னை யென்னவே. உ௩௪

688. முந்துற நிகழ்ந்தன முறையிற் கூறியே
கந்தனு முருகவேள் கருதிப் போர்செய
வந்தன னவனைநீ வல்லை யேகிவென்
றுந்துசீர் படைத்திவ ணுறுதி யென்றனன். உ௩௫

---

685. தீங்கினன் - நல்லோருக்குத் தீங்கு புரியும் சூரன். சென்னியாயிரந் தாங்குபவன், சிங்கமுகாசுரன். தருதிர் - அழைத்து வாருங்கள். வடதிசை அளக்கர் - வடகடலை.

686. ஓ இலா - குறைதல் இல்லாத. பூவினர் - பூமியில் உள்ளவர்கள். புரத்துள் - மாயாபுரி என்னும் நகரில். கோயில் போய் - அரண்மனைக்குள் சென்று.

687. அரிமுகன் - சிஙகமுகாசுரன். உம்பரை வென்றவன் - சூரன். என்னை - என்ன காரணம்.

688. முந்துற நிகழ்ந்தன - அதற்கு முன் நடந்தவற்றை. வல்லை- விரைவில்.

689. தானவன் விடுத்தலுந் தனதின் மேவியூன்
போனக முண்டுதேர் புகுந்தி லக்கமாம்
சேனைவெள் ளப்படை சேர வேகினுன்
வானவ ரிதுதெரீஇ வாடி யோடினுர். உகசு

690. எங்கணு யகனெதி ரிறைஞ்சி நின்றரோ
துங்கமா ரரிமுகன் சூரன் பின்னவன்
அங்கவன் றனிலும்வீ றுற்றல் பெற்றவன்
இங்கமர் புரிந்திட வெய்தி னுனென. உகஎ

691. இன்னதை யறிந்துபோர்க் கெழுகி னைத்தலும்
அன்னதை யறிர துசென் றுடன் மொய்ம்பினுன்
பன்னிரு புயத்தனைப் பணிந்தெ ழுந்துநான்
ஒன்னலன் றனையழித் துறுகின் றேனென. உகஅ

692. அன்பொடு விடுத்தலு மகன்ற கன்றிடாக்
கொன்புனை படைக்கலங் கொண்டு தேரின்மீ
தின்புட னேறியே யெழில்கொண் மொய்ம்பினுன்
தன்பெரும் படையொடுந் தகுவர்ச் சேர்ந்தனன். உகசு

693. ஆயிர மியோசனை யான மெய்புடைச்
சீயமா முகத்தவன் சேனை யானதும்
போயெதிர் மலைந்திடும் பூதர் சேனையும்
ஆயிடை யெதிர்ந்துநின் றமர்பு ரிந்தவால். உசo

---

689. தானவன் - சூரன். தனது இல். ஊன் போனகம் - மாமிச உணவை. தெரீஇ - தெரிந்து.

690. அரிமுகனுகிய சூரன் தம்பி. வீறு - மேலான.

691. ஆடல் மொய்ம்பினுன் - வீரவாகுதேவர். ஒன்னலன் றனை - பகைவனை.

692. அகன்று - நீங்கி. எழில் கொள் மொய்ம்பினுன் - வீர வாகு. தகுவர் - அசுரர்களை.

693. சீயம் மா முகத்தவன் - சிங்கமுகாசுரன். ஆயிடை - அவ் விடத்தில். புரிந்த - செய்தன.

694. திண்டிறற் படைக்கலஞ் சிதறிப் போர்செய
அண்டிய வீரரு மவுண வீரரும்
மண்டணிற் சிலர்சிலர் மாயத் தானவர்
தண்டமன் னவரெதிர் சார்ந்து போர்செய்தார். உசக

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

695. அன்ன காலையிற் பூதர்க ளுடைய
அடல்கொள் பூதரிற் சிங்கனென் றொருவன்
தன்னெ டுங்கையிற் றண்டியு லவுணர்
தலைகள் சிந்திடச் சாடியே குதலும்
முன்னர் நின்றிடு மவுணர்க டம்மின்
முரண்கொ ளுந்தச முகனெனுங் கொடியோன்
பொன்னெ டுஞ்சிலை பிடித்துவந் தெதிர்ந்து
புங்க வம்பல சிங்கன்மேற் பொழிந்தான். உசஉ

696. வீறி வந்திடுங் கணையெலாங் கதையால்
விறற்க ணத்திறை விலக்கலுங் கொடியோன்
சீறி யோர்பெருங் கதையினை விடுப்பச்
சிங்கன் மார்பகஞ் செறிந்தொடிந் திடலும்
மாறி லாவொரு மழுப்படை விடுப்ப
வரங்கொள் சாரதன் மற்றதைக் கதையால்
ஊறு செய்திடக் குந்தமொன் றெறிந்தான்
உந்து மாழியொன் றுந்தினு னிவனும். உசங

---

694. தண்ட மன்னவர் - சேனுபதிகள்.

695. பூதர்கள் உடைய - பூதப்படையினர் தோல்வியடைய. சாடி - அடித்து. புங்கவம் - அம்புகள்.

696. கணத்து இறை - பூதத்தலைவனுகிய சிங்கன். கொடியோன் - தசமுகனென்னும் அசுரன். வரம் - மேன்மை. சாரதன் - பூதர்தலைவன். ஊறு செய்திட - அழிக்க. குந்தம் - வேல். ஆழி - சக்கராயுதம்.

697. குந்த வேலினை யாழிபோ யழிப்பக்
கொடிய னோர்கதை குறிப்பொடு விடுத்தான்
உந்து சிங்கன துரத்தின்வந் தழுந்த
உதிர மேல்விழுந் தோடவங் கோடி
வெந்தி றற்றச முகனுரத் தடிப்ப
விழுந்து வெய்யவன் வீந்திட வதுகண்
டந்த மற்றிடுந் தகுவர்க ளெவரும்
அமர்பு ரிந்திட வடலொடு மடைந்தார். ௨௪௪

698. அன்ன காலையி லிலக்கர்தங் குழுவில்
ஆற்றல் பெற்றுள வனகனு மொருவன்
மன்னு தானவர் தானைமுன் பணுகி
வாளி கொண்டவர் மாளவே யழிப்பத்
துன்னு தானவ ரோடின ரவரிற்
றன்மு கத்தினன் றுண்ணென வெதிர்ந்து
கொன்னு றும்படி பலபல வடிவம்
கொண்டு பூதர்முன் கொடுஞ்செருப் புரிந்தான்.

699. ஆய காலையில் வாகையங் கதிரோன்
அதுதெ ரிந்தன னறிவெனும் படையால்
மாய மானதை யழித்தலுந் தனித்து
வஞ்ச னுயிர வாளிகள் விடுப்ப
ஆயி ரங்கணை விடுத்தவை தடுத்தங்
கவனு டம்பினி லழுந்திட வளவில்
சாய கந்தொட விழுந்தயர்ந் தருவாய்த்
தகுவ னோடினன் சாரதர் மகிழ. ௨௪௬

---

697. குந்தவேல் - சிறியவேல். உரத்தின் - மார்பில். வெய்ய வன் வீந்திட - தசமுகன் மரணமடைய.

698. லக்ஷவீரர்களுள் ஒருவன் அனகன். தானவர் தானை முன்பு - அசுர சேனைக்கு முன்னாலே. துண்ணென - நடுங்க.

699. வாகை அம் கதிரோன் - வீரமார்த்தாண்டன். அறி வெனும் படையால் - ஞானாஸ்திரத்தால. சாயகம் - அம்பு. அருவாய் - உருவம் மறைந்து அரூபியாகி.

700. அந்த வேலையி லிந்தவா றறிந்தான்
அரிமு கத்தின னெரிமுக மானான்
வந்தெ திர்ந்தன னெதிர்தலும் பூதர்
மாக்கு லங்களும் வரைகளும் விடுப்ப
முந்து மன்னவ னாசியி லுயிர்ப்பால்
முரிந்து போயின முனிந்துவெம் பூதர்
மந்த ரங்களு மரங்களும் பிறவும்
மாகர் தெவ்வன்மேல் வலியொடு விடுத்தார். ௨௪௭

701. விட்ட வின்னவை மாகமே னிறைந்து
வேக மோடுபோய் விறலரி முகனும்
ஒட்ட லன்றன்மேற் பட்டன படலும்
ஊறு செய்தில வுடைந்தில விழுந்த
அட்டி டும்படி கரியினந் தனிலோர்
அரிபு குந்தென வடற்கணக் குழுவின்
வட்ட மானதன் றேரினு மிறங்கி
வந்து புக்கனன் மாயைதன் புதல்வன். ௨௪௮

702. பற்றி னன்சில பூதர்க டம்மைப்
பதைத்தி டும்படி பாரவண் டத்தில்
எற்றி னன்சில பூதர்க டம்மை
எயிறு துன்றிய விடிக்குரல் வாயிற்

---

700. அரிமுகத்தினன் - சிங்கமுகாசுரன். எரிமுகன் ஆனான் - கோபத்தால் எரிகின்ற முகத்தை உடையவன் ஆனான். அன்னவன் நாசியில் உயிர்ப்பால் - சிங்கமுகன் மூக்கிலிருந்து விடுத்த மூச்சுக்காற்றினால். மந்தரங்களும் - மலைகளையும். மாகர் தெவ்வன்மேல் - சிங்கமுகன்மேல்.

701. மாகமேல் நிறைந்து - ஆகாசத்தில் நிரம்பி. ஒட்டலன் - பகைவன். அட்டிடும்படி - கொல்வதற்காக. அரி புகுந்தென - சிங்கம் புகுந்தாற்போல. கணக்குழுவின் - பூதப்படைக்குள்ளே. மாயை தன் புதல்வன் - சிங்கமுகன்.

702. பார அண்டத்தில் - கனமுடைய அண்டமுகட்டில். எற்றினன் - அடித்தான். இடிக்குரலையுடைய வாயில். குற்றினன் -

குற்றி னன்சில பூதர்க டம்மைக்
குறைத்த னன்சில பூதர்க டம்மைச்
சுற்றி னன்சில பூதர்க டம்மைத்
துவைத்த னன்சில பூதர்க டம்மை. உசகூ

703. வேத னூரினிற் சிலவரை வீசும்
விரிக டல்களிற் சிலவரை வீசும்
மாதி ரங்களிற் சிலவரை வீசும்
மறலி யூரினிற் சிலவரை வீசும்
ஈது போலவே யமர்பல வியற்ற
எருவை நீர்விரிந் திருங்கடற் புகுதப்
பூத லந்தனிற் பூதர்கள் பல்லோர்
பொன்றி னாரவன் புகுந்தனன் றேர்மேல். உருo

704. ஈது கண்டனன் பூதர்மன் னவரில்
எரிகொள் கண்ணின னெதிரணைந் தவுணன்
மீது தண்டமொன் றெறிந்திட வதுபோய்
வெய்யன் வையமேன் மேவுசீர் வலவன்
தீது கொண்டிடு சிரந்தனைக் களையச்
சிங்க மாமுகன் சீறியே யொருதண்
டாதி மாமகன் பூதமன் னவன்மேல்
அழுந்த விட்டுழி யயர்ந்துநின் றனனே. உருக

அரைத்தான். குறைத்தனன் - வெட்டினன். துவைத்தனன் - காலால் மிதித்தான்.

703. வேதன் ஊர் - சத்தியலோகம். மாதிரங்களில் - திசைகளில். மறலியூரினில் - யமபுரியில். எருவை நீர் - இரத்தம். பொன்றினர் - இறந்தனர்.

704. எரிகொள் கண்ணினன் - அக்கினி நேத்திரன். தண்டம்- தண்டாயுதம். வையம் - தேர். வலவன் - தேர்ப்பாகன். ஆதிமா மகன் - முருகக்கடவுளுக்குரிய. அயர்ந்து நின்றனன் - பூதத்தலைவன் மயங்கி நின்றான்.

705. தேரின் மீதொரு பாகனை நிறுவிச்
சிங்க மாமுகன் சீறிவந் தணுகப்
பாரி னோர்புகழ் சுமாலியென் பவனோர்
பருப்ப தந்தனைப் பறித்துநேர் விடுப்பச்
சீரு லாவுதன் கரத்தினாற் பிடித்துத்
தீதில் பூதன்மேற் றிரும்பவிட் டிடலும்
வீர முற்றிடு சுமாலிதன் னுரத்தில்
விரைந்து பட்டிட மெலிந்தனன் விழுந்தான். உ௫உ

706. அனைய காலையிற் றண்டியென் றொருவன்
அவுணன் வையமுற் றவன்றன துரத்திற்
கனமு றுங்கரக் கதையினா லடிப்பக்
கதையொ டிந்தது கரங்கொடு புடைத்தான்
தனது தாளினா லவுணனங் கிவனைத்
தள்ள வீழ்ந்துபின் றண்டிவிண் ணெழுந்து
சினம தாயவன் றோளின்மேற் பாய்ந்து
செய்ய தாளினாற் றிறலொடுந் துவைத்தான். உ௫௩

707. செறிந்த தோள்களிற் கரத்தினிற் சிரத்திற்
சென்று சென்றுவன் றிறலொடுந் துவைப்ப
அறிந்தி லானதை யரிமுகத் தவுணன்
ஆக மீதிலோ ரீகொலென் றெண்ணிச்
சொறிந்து கையினாற் றுடைப்பநொந் திரிந்தான்
துலக்க வெண்மரு மிலக்கரு மெதிர்ந்தெண்
இறந்த வாளிகள் சொரிந்திடப் படிமேல்
இழிந்து வந்தன னிழிதொழில் பயின்றோன். உ௫௪

---

705. சுமாலி : பூதப்படையைச் சார்ந்தவன். பருப்பதம் - மலை.

706. தண்டி யென்னும் பூதன் அசுரன் மார்பிலே கதாயுதத்தால் அடிக்க அக் கதை ஒடிந்தது. வையம் உற்று - தேரின்மேல் தாவி. அவன் தோளின்மேல் - சிங்கமுகனது தோள்மேலே.

707. ஆகமீதில் - நம் உடம்பில். ஓர் ஈகொல் என்று எண்ணி - ஈ ஒன்று வந்து மொய்க்கிறதோ என்று நினைந்து. இரிந்தான் - ஓடினான். படிமேல் இழிந்து - பூமியில் இறங்கி.

708. எடுத்தெ றிந்தனன் சிலவர்தந் தேரை
இலங்கு மொன்றினே டொன்றுதாக் குறவே
அடித்தல் செய்தனன் சிலவர்தந் தேரை
அங்கை யாற்சில தேர்தமை யள்ளி
ஒடித்த னன்சில தேர்களை யுதைத்தான்
உரைத்த விப்படி யநேகமங் கியற்றப்
படித்த லம்புகழ் வீரர்க ளிரிந்தார்
பரிந்து தேரிலப் பதகனே றினனே. உருரு

(கலிநிலைத்துறை)

709. காரிலகு பூதரொடு தம்பிய ருடைந்தசெயல் கண்டான்
வீரமுரு கற்கிளைய நாதனுள மீதினில் வெகுண்டான்
கோரமொ டிருந்ததொரு கைச்சிலை தனைக்குனிவு கொண்டான்
ஓரிறையின் முன்கணை சொரிந்தவுணர் தானையுயி ருண்டான்.

710. கரங்களை யறுப்பன பதங்களை யறுப்பன கவின்றோய்
உரங்களை யறுப்பன புயங்களை யறுப்பன வுரக்கந்
தரங்களை யறுப்பன கலன்களை யறுப்பன சயஞ்சேர்
வரங்களை மிகப்புனையும்வாளின்மொய்ம் பாளிவிடு வாளி.

711. மாறவுணர் சேனைபல தூளிபட வாளிகொடு வள்ளல்
சீறியமர் செய்தலு மரிப்பெரு முகன்றனது சேயோர்
நூறெனு மிலக்கமுடை யாரவரெதிர்ந்தனர் நுதிக்கோல்
வீறுமுகி லாமென விடக்கணைகள் வீரனும் விடுத்தான்.

---

708. படித்தலம் - பூமியிலுள்ளோர். பரிந்து - விரும்பி. பதகன் - சிங்கமுகன்.

709. உடைந்த செயல் - தோல்வியுற்ற செய்தியை. இளைய நாதன் - வீரவாகுதேவர். குனிவு கொண்டான் - வளைத்தான். ஓர் இறையின்முன் - ஒரு கணத்திற்குள்ளே

710. பதங்களை - கால்களை. கவின் தோய் - அழகு பரவிய. உரங்களை - மார்புகளை. உரம் கந்தரங்களை - வலியையுடைய கழுத்துக்களை. கலன்களை - ஆபரணங்களை. வாளின் மொய்ம்பாளி - வாள் வலியையுடைய வீரவாகுதேவர்.

711. மாறு - பகை. வள்ளல் - வீரவாகு. அரிப்பெருமுகன் - சிங்கமுகாசுரன். சேயோர் - பிள்ளைகள். நுதிக்கோல் - கூரிய

712\. விடுத்தவைதடுத்தவரெடுத்தசிலைதேரைமிகுவெங்கோல்
தொடுத்தவ னழித்திட மனத்திடைசினத்தவர்கடுவோள்
பிடித்தம ரியற்றுற விளிக்கந விரப்படை பிடித்தே
படித்தலமதிப்பொடு குதித்தவர் தமக்கெதிர்படர்ந்தான்.

713\. வாளது பிடித்துவரு மண்ணலெதிர் வந்தனர் வளைந்தார்
தோளிடையுரத்திடைகரத்திடையெறிந்தனர்கடியோன்
கோளுருவி லூறிலது கண்டனர்பிடித்தனர்கொதித்தே
ஆளரி முகன்குமரர் சிந்திவிழ வாள்விசிறி யட்டான்.

714\. அங்குலவு மைம்பதுடனைம்பதெனுமைந்தர்தமையட்டே
துங்கமுறுவீரர்கடனிற்றலைமை பெற்றதொருதூயோன்
பொங்குமிமையோர்புகழுவையமுறுவையமிசை புக்கான்
சிங்கனிது கண்டுளம் வெகுண்டணுகி மொய்ம்பனொடு செப்பும்.

715\. ஈனமில்கு மாரனலை யெண்மர்களி லோவல திலக்க
மானவரி லோவலதெம் மூரினிடை தூதுவரு வானோ
ஆனவிவர் தங்களிலி யாரெனலும் வீரமுறு மண்ணல்
வானவர்குலத்தினையலைத்த கொடியோனொடு வகுப்பான்.

நுனியையுடைய அம்புகளை. முகிலாம் என விட - மேகம் மழையைச் சொரிவதைப் போல எய்ய.

712\. தடுத்து, அவர் எடுத்த. சிலையையும் தேரையும். சினத்து = சினந்து - கோபித்து. விளிக்க - அழைக்க. நவிரப்படை - வாளாயுதம். படித்தலம் - நிலத்தில்.

713\. அண்ணல் எதிர் - வீரவாகுவுக்கு எதிரே. உரத்திடை - மார்பில். கோள் உருவில் - விரதத்தால் வலி பெற்ற திருமேனியில்; கோள் - மேற்கோள்; விரதம். ஊறிலது - தாங்கள் வெட்டியதால் புண்படாமல் இருப்பதை. ஆளி முகன் - சிங்கமுகாசுரன். விசிறி - வீசி. அட்டான் - கொன்றான்.

714\. தூயோன் - வீரவாகு. இமையோர் - தேவர். வையமுறு வையமிசை - பூமியின்மேல் இருந்த தேர்மேல். மொய்ம்பனொடு - வீரவாகு தேவரோடு.

715\. குமாரன் அலை - நீ முருகக் கடவுள் அல்லை. வீரமுறும் அண்ணல் - வீரவாகு.

716. ஆதியரு ளுங்குமர நாயக னடிக்கடிமை யானேன்
தூதனென வந்துமது நற்பதியை முற்பக றொலைத்தேன்
நீதமறு மும்மையட நின்றனனி யானென நிகழ்த்திக்
கோதறுத ளுதுபெய ரோதினன் மிகுத்தவிறல் கொண்டான்.

717. என்றிடலு முன்றனை யுனக்கிறைதனைக்கடி திறைக்குள்
வென்றிடுவ னென்றிட வெகுண்டுபெதி னெண்கணை விடுத்தான்
சென்றவனுரத்திடைசெறிந்ததுமுறிந்த தொருதண்டம்
துன்றரிமுகத்தன்விடநாலுகணைகொண்டது துணித்தான்.

(பதினன்குசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

718. தீதில் வீர னாயி ரஞ்சரத்தி னைப்ப கைத்தவன்
சிரத்தினிற்செலுத்தவேசெறிந்தொடிந்து போயதால்
ஏதமான சிங்கனங்கொர் சூலவேல் விடுப்பவே
இராயிரஞ் சிலீமுகங்க ளிளைய வீர னெய்யவச்
சோதிகொண்ட சூலமச் சரத்தை நூறி வந்திடத்
தூயவீரன் வாள்கொடே துணித்தனன் றுணித்தபின்
பாதிதன் படைக்கலத்தை யவுணன்மீதி லேவினன்
அவனு மன்ன தேவினு னமர்புரிந்த திருமையும்.

719. வீறுகின்ற படைகள்பின்பு விட்டு ளாரை மேவவே
வீரவாகு நெஞ்சமேல் வியந்துபத்தின் மீதினல்
ஏறுகின்ற கணைகடேவி யரிமுகத்த னிரதமேல்
இலகுபாகன் முடியறுப்ப விருமை கொண்ட தண்டமொன்

---

716. முற்பகல் - முன் ஒரு நாள். நீதம் அறும் - நீதி அற்ற. அட - கொல்ல.

717. இறைக்குள் - கண நேரத்தில். பதினெட்டு அம்புகளை வீர வாகுதேவர் எய்தார். முறிந்தது: தொகுதி ஒருமை. அரிமுகத்தன் - சிங்கமுகன்.

718. பகைத்தவன் சிரத்தினில் - சிங்கமுகாசுரனுடைய தலைகளின்மேல். இராயிரம் சிலீமுகங்கள் - இரண்டாயிரம் அம்புகளை. இளைய வீரன் - வீரவாகு. நூறி - அழித்து. துணித்தனன் - சூலாயுதத்தை வெட்டினன். ஆதி தன் படைக் கலத்தை - சிவாஸ்திரத்தை அன்னது - அந்தச் சிவாஸ்திரத்தையே. இருமையும் - இரண்டு அஸ்திரங்களும்.

றாறி லாத சிங்கனுந்த வுந்துமார்பில் வந்துபட்
டொல்லைதூள் பொருந்த வேயொராயிரஞ்சரங்களைச்
சூறையென்ன விட்டுவெய்ய னேறுதேரை நூறவே
தூயபூதர் கண்டுசென்று சுற்றினார்க ளவுணனை.

720. அந்த வேலை சீறிவெய்யன் வேறுதேரி லேறியே
ஆயி ரந்த னுப்பிடித் தருஞ்சரம் பொழிந்துநேர்
வந்தெதிர்ந்த பூதரைப் பிணம்படுத்தி யெங்கணும்
வாளியான் மறைப்ப வீரன் வாளியா லறுத்தவன்
சிந்துகோல் விலக்கிநிற்ப வாயிரத் திரட்டிகோல்
தீயன்விட்டு வள்ளறன் றிருத்தனுத் தனைத்துணித்
துந்துவீரன் விற்பிடிக்கு முன்னர்நூறு கோடிகோல்
உரத்தழுத்த வீறுசோரி யுததிபோ லெழுந்ததே.

721. வெய்யசூர்த னுதுதம்பி வெம்பிவிட்ட கோலெலாம்
வேலவன் றனுதுதம்பி விற்சரத் தறுத்தவன்
செய்ய தேரை யாயிரஞ் சரத்தினு லழிக்கவே
சிங்கமா முகத்தன்வேறு தேரின்மீதி லேறினன்
கைய னுந்து கையிலுற்ற பத்துநூறு வில்லையும்
கந்தனன்ப னெண்ணிலாத கணைசொரிந் தழித்திட
வையமுற்ற வானமுற்ற சாரதக் குழாங்களும்
வானவக் குழாங்களு மகிழ்ந்தொலித்து நின்றவே.

---

719. படைகள் - சிவாஸ்திரங்கள். வீரவாகுதேவர் பதினான்கு கணைகள் விட்டுச் சிங்கமுகனது தேர்ப்பாகன் தலையை அறுத்தார். இருமை - பெருமை. சூறை என்ன - சூறாவளியைப் போல.

720. பிணம்படுத்தி - கொன்று பிணமாக்கி. தன் அம்புகளால் எவ் விடத்தையும் சிங்கமுகன் மறைக்க, அவற்றை வீரவாகுதேவர் அம்புகளை விட்டு அறுத்தார். சோரி - இரத்தம். உததி - கடல்.

721. வெம்பி - கோபித்து. கந்தன் அன்பன் - வீரவாகு. சாரதக் குழாங்கள் - பூதக் கூட்டங்கள்.

722. மற்றிவ்வேலை வெகுளிகொண்டு சிங்கமா முகத்தினேன்
மாயமான பாசம்வீச மாசிலாத பூதரைக்
கொற்றமுற்ற வெண்மரைத் துலக்கமா மிலக்கரைக்
கோளுறும் புயத்தனைக் கொதித்துவந்து கட்டியே
வெற்றிகொண்டு விண்ணெழுந்து துண்ணெனப் படர்ந்துபால்
வேலைதன்னி லுதயமான வெற்பிலிட் டிருந்ததால்
உற்ற தேவ ரீது கண்டு வாடி னார்க ளோடினார்
உலவைசென்று முருகனோடுரைப்பவங்கெழுந்தனன்.

723. மிக்க தேரின் மீதி லேறி வீறுபூத ராயிர
வெள்ளமும் பரந்துசூழ விண்ணுளார் புகழ்ந்திடத்
தக்கபல்லி யந்தழங்க மன்னுசின்ன மூதிடத்
தானவன்ற னதுமுன்பு சண்முகத்த னணுகவே
மைக்கருங் கடற்புரைந்த வவுணர்சேனை வெள்ளமும்
வள்ள லோடு வந்தபூத மன்னர்சேனை வெள்ளமும்
அக்கணம் படைக்கலஞ் சொரிந்துபோர் புரிந்தபோ
தவுணர் மாய வீறுபூத ரவருமாய்வ தாயினார். உஎ0

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

724. இப்பான்மை கண்ட வரிமாமு கத்தன்
இகல்கொண்ட பூதர் குழுவைக்
கைப்போது கொண்டு மிகவாரி யின்று
கடிதுண்ப னென்று கருதி

---

722. மாயமான பாசம் - மாயம் செய்யும் இயல்பையுடைய பாசக் கயிற்றை. கோளுறும் புயத்தனை - வலிமையுடைய வீரவாகு தேவரை. பால் வேலை தன்னில் உதயமான வெற்பில் - பாற்கடலினிடையே உள்ள உதய கிரியில். உலவை - வாயுதேவன்.

723. பல்லியம் தழங்க - வாத்தியம் முழங்க சின்னம் ஊதிட - திருச்சின்னம் ஊத. வள்ளலோடு - முருகக் கடவுளோடு.

724. அரிமா முகத்தன் - சிங்கமுகாசுரன். இகல் - பகை. கைப்போது கொண்டு - கைகளைக்கொண்டு துப்போடும் - வன்மையோடும். சுரர் அஞ்ச - தேவர்கள் பயப்படும்படியாக.

மெய்ப்பான வண்ட முடிவைச் சிரங்கள்
விறலோடு சென்று தொடவே
துப்பேபாடு மங்க ணொருமேனி கொண்டு
சுரரஞ்ச வீது புரிவான். உஎக

725. கல்லா மனத்த னிருபத்து நூறு
கரமுஞ் செலுத்தி விறல்சேர்
சல்லாப மோடு குகனோடு வந்த
தசநூறு வெள்ள வனிகம்
எல்லா மகட்டி னிடைசேர வாரி
இனிதாய் விழுங்க வெழில்சேர்
அல்லார் களத்த னமையாள நல்கும்
அமலன் றனித்த ருளினன். உஎஉ

726. இவ்வேலை தன்னின் மிகுமொற்ற ரேகி
இறையான சூர னுடனே
செவ்வே நிகழ்ந்த சொலவே மகிழ்ந்து
சிகரத்தி னுச்சி மிசைபோய்
அவ்வேலை தம்பி சமர்கண் டிருப்ப
அவனேவல் கொண்டு திறல்சேர்
மைவேலை யென்ன மிகுசேனை பின்னும்
மருவிற்று யுத்த களமே. உஎங

727. ஈடான சிங்க னெதிராக வீறும்
எழிலாக வேல னணுகக்
கூடா நிறைந்த வவுணப் பதாதி
குகன்முன் பணைந்து படைதூய்

---

725. கல் ஆம் மனத்தன். இருபத்துநூறு கரம் - இரண்டாயிரம் கைகள். சல்லாபமோடு - சந்தோஷமான பேச்சோடு. அனிகம் - படை. அகட்டினிடை சேர - வயிற்றுக்குள்ளே போக. அல்லார் களத்தன் - நீலகண்டப் பெருமான். அமலன் - முருகவேள். படைகளை யெல்லாம் அசுரன் விழுங்க, முருகக் கடவுள் மாத்திரம் தனித்து நின்றார்.

726. செவ்வே - நன்றாக. நிகழ்ந்த - நடந்த காரியங்களை. சிகரத்தின் உச்சி மிசை போய் - கோபுரத்தின் உச்சியில் ஏறிச் சென்று. சமர் - போரை. மைவேலை என்ன - கருங்கடலைப் போல.

வாடா விறல்கொண் முருகேசன் வில்லின்
வலியான நாணி னொலியால்
வீடா வழிந்த ததுகண்டு தீயன்
விறலோடு வந்து மொழிவான். உஎஎ

728. பொன்னாட ரெங்கள் பகையாதல் கண்டு
புலவோரை யின்னல் புரிவோம்
அன்னாரி லல்லை பகையல்லை யென்கொல்
அமர்செய்ய வந்த வகையென்
றொன்னா னிசைப்ப வெளியாரை மொய்ம்பர்
உறுகண் குயிற்றி னவரைப்
பன்னாளு நூறி யரசாள்வ மன்ன
பரிசா லடைந்த னமரோ. உஎரு

729. என்றீ துரைப்ப வலியாள னீயும்
எளியார்க ளெங்க ளினமும்
நன்றீது வல்லை யமர்செய்தி யென்ன
நலமார் குமார னொருகோல்
முன்றீய வன்றன் மருமத் தழுத்த
முதுகிற் பறிந்த ததனால்
வன்றீ நிகர்த்த கொடி யோனுடம்பின்
மலிசோரி வந்த தவணே. உஎசு

---

727. ஈடு - பெருமை எழில் ஆகம் வேலன் - அழகையுடைய திருமேனியைப் படைத்த முருகக் கடவுள். அவுணப் பதாதி - அசுரர் படைகள். வீடா - இறந்து.

728. பொன்னாடர் - சுவர்க்கவாசிகளாகிய தேவர்கள். புலவோரை - தேவரை. அன்னாரில் அல்லை - அவர்களுக்குள் சேர்ந்தவன் நீ அல்லை. ஒன்னான் - பகைவன். எளியாரை வலியார் துன்புறுத்தினால் அவ்வலியாரை அழித்து அருள் செய்வோம் உறுகண் குயிற்றின் - துன்பம் செய்தால். நூறி - அழித்து. அன்ன பரிசால் - அந்த முறைபற்றி.

729. வலியாளன் நீயும் என்றது இகழ்ச்சிக் குறிப்பு. அமர் செய்தி - போர் புரிவாயாக. மருமத்து - மார்பில். முதுகிற் பறிந்தது - முதுகு வழியாக ஊடுருவிச் சென்றது. மலி சோரி - மிக்க இரத்தம்.

730. உள்ளுற்ற பூத ரதுபோதில்வேல
ஞெருகோ றுளைத்த வழியால்
மெள்ளத் தலத்தி னிழியச் சினந்து
வெளியைக் கரங்கொ டடையாக்
கள்ளுற்ற தொங்கன் முருகேசன் மீது
கதையொன்று கைப்ப வமலன்
வள்ளுற்ற நாலு கணைசிந்த வேகி
வருதண்டை நூறி யவைபோய். உளஎ

731. மங்காத சிங்க னுதல்சென் றொளிப்ப
மயலோடு வெய்ய னுறவே
சிங்கார மேவு மவன்முன் படைத்த
திறல்கொண்ட பாணி நெகிழ
வெங்காயு மிஞ்சி யுறுகின்ற பூதர்
விறல்வாளி பட்ட வெளியால்
அங்காய வேலே கடிதே யிறங்கி
அமலன்றன் முன்ப ணுகினுர். உளஅ

732. அப்போது தன்னி லுதயச் சிலம்பில்
அருள்கொண்ட வேல ஞெருகோல்
துப்போடு கைப்ப வதுசென்று வீரர்
தொகையைத் தணுது மிசையே

---

730. உள் உற்ற - சிங்கமுகனது வயிற்றுக்குள்ளே இருந்த. தலத்தின் இழிய - தரைமேல் இறங்கி வர. வெளியை - துவாரத்தை. கள் உற்ற தொங்கல் - தேனையுடைய மாலையை அணிந்த. உகைப்ப - செலுத்த. வள் - கூர்மை.

731. நுதல் - நெற்றியில். மயலோடு - மயக்கத்தோடு. சிங்காரம் - அழகு. முன்பு அடைத்த. பாணி நெகிழ - கை தளர. மிஞ்சி வெம்காயம் உறுகின்ற பூதர் - வெளியிலே வாராமல் எஞ்சி அவன் வயிற்றுக்குள் இருந்த பூதர்கள். வாளி பட்ட வெளியால் - அம்பு துளைத்த வாயில்வழியே. அங்கு ஆய வேலே - அந்தச் சமயத்தில்.

732. உதயச் சிலம்பில் - உதய கிரியில். துப்போடு கைப்ப - வலியோடு எய்ய மெய்ப்போடு கொண்டு - உண்மையில் தாங்கிக்

மெய்ப்போடு கொண்டு கடிதே திரும்பி
விறல்வேலன் முன்பு விடவே
மைப்பாவு கண்டன் மகனங் கவர்க்கு
மகிழ்வாக வோதி னனரோ. உஎகூ

733. அக்காலை தன்னி லிதுகண்டு சீறி
அரிமா முகத்த னனிகம்
மிக்காரி லாத குமரேசன் முன்பு
விரைவோடு வந்து வளைய
நக்கா னளப்பில் கணைமாரி தூவி
நலியத் தொலைப்ப விடரிற்
புக்காண்மை யின்றி யுறுகின்ற வெய்யன்
இதுகண் டழன்று புரிவான். உ௮0

734. நூறான பத்து நெடுவிற் பிடித்து
நுதிவாளி சிந்தி முருகன்
சீறா விடுத்த கணையைத் தடிந்து
திறல்கொண்ட சிங்க முகவன்
மாறாக வேல னிரதத்தி லுற்ற
வலவன்றன் மார்பி னிடையே
வீறாயி ரங்கொள் கணைசிந்த நொந்து
மெலிவா யிருந்த பொழுதின். உ௮க

கொண்டு. மைப்பாவு கண்டன் - நீலகண்டப் பெருமான். மகிழ்வு உண்டாகும்படி. ஓதினன் - இனிய மொழிகளைச் சொன்னார்.

733. அரிமா முகத்தன் அனிகம் - சிங்கமுகனுடைய படை. நக்கான் - புன்னகை பூத்து. நலிய தொலைப்ப - வருந்தி அழியும்படி செய்ய. வெய்யன் - சிங்கமுகன். அழன்று - கோபித்து.

734 சிங்கமுகன் ஆயிரந் தலைகளும் இரண்டாயிரம் கைகளும் உடையவனாதலின் ஆயிரம் விற்களைப் பிடித்தான். நுதி - முனை. சீறா - கோபித்து. தடிந்து - அறுத்தெறிந்து. ஆயிரம் வீறு கொள் கணை யென்று மாறுக. நொந்து - தேர்ப்பாகன் வருந்தி.

735. ஐயன் சினந்து கணைநூறு சிந்தி
அரிமா முகங்கொ ளவுணன்
வையங் கெடுப்ப நிலநின் றளப்பில்
வடிவாளி வெய்யன் விடவே
கையன் றனுக்க டமையா யிரங்கொள்
கணையா லொடிப்ப வவுணன்
மெய்யன்றன் மீதி லொருசூல முந்த
விறல்வேல னீது புரிவான். ௨௮௨

736. ஈரேழ தான கணைசிந்தி முந்தி
எதிர்சூல நூறி யடுகோல்
ஓரா யிரத்தை யவனேர் விடுப்ப
உரமேவு சிங்க முகவன்
சீரான கையி லொருதண்டு கொண்டு
சிதறப் புடைத்து வரவப்
போரார் கரத்தை யெழுவாளி கொண்டு
புனிதன் றடிந்த ருளினன். ௨௮௩

737. மெய்ப்பாணி பின்பு மெழுவெய்யன் வையம்
விழுதண் டெடுத்து விடலும்
துப்பா யிரங்கொள் கணைகொண்டு தண்டு
துணிசெய்து வேல னுறவே

---

735. ஐயன் - முருகக் கடவுள். வையம் கெடுப்ப - தேரை அழிக்க. நிலம் நின்று - பூமியின்மேல் நின்று. அளப்பு இல் - கணக்கு இல்லாத. வடி - கூர்மை. கையன் - சிங்கமுகன். தனுக்கள்தமை - விற்களை. மெய்யன் - முருகக் கடவுள்.

736. நூறி - அழித்து. உரம் - வலிமை. தடிந்தருளினன் - அறுத்தருளினர்.

737. மெய்ப்பாணி - தேகத்திலிருந்த கை வையம் விழு - தரைமேல் விழுந்து கிடந்த துப்பு - வலிமை. தண்டு துணி செய்து - தண்டாயுதத்தைத் துண்டுபடுத்தி. பாசம் உந்த - பாசத்தை விட. மைப் பாவி - அஞ்ஞானத்தை உடைய பாவியாகிய சிங்கமுகன்.

கைப்பாச முந்த விறைபத்து நூறு
கணைகொண் டழிக்க வதனுல்
மைப்பாவி யாறு முகனைப் பிடிக்க
வலியோடு வந்த னனரோ. உ௩௭

738. ஆறுமு கத்த னதுகண்டு வந்த
அவுணன் கரஞ்சி ரமெலாம்
ஊறுகி வீழ விருபத்து நூறொ
டொருபத்து நூறு கணையைச்
சீறு விடுப்ப வவைபின் பெழுந்து
செறிவாக வெய்யன் வெகுளா
மாறுக வெண்ணில் வரையைப் பிடுங்கி
வலியோடு வீசு தலுமே. உ௩௮

739. வரையற்று வந்த வரையற்று வீழ
வலியற் றிடாத முருகன்
புரையற்ற வாளி மிகவே பொழிந்து
புகழ்மேவு கின்ற வவுணன்
நிரையுற்ற சென்னி யுரமுற்ற கைகள்
நிலமுற் றிடத்த டியவே
விரைவுற்று மண்ணில் விழுமுன்பு பின்பு
விறலோ டெழுந்த வவையே. உ௩௯

740. சிங்கார மேவு கரமுஞ் சிரங்கள்
சிதறித் திரும்ப முளையா
துங்கார மோத விருபாணி யோடும்
ஒருசென்னி யோடு மெதிர்வந்

---

738. ஆறு ஆம் முகத்தன் - சண்முகக் கடவுள். ஊறுகி - காயம்பட்டு. சீறு - கோபித்து. செறிவு ஆக - முன்போலப் பொருந்திக் கொள்ள. வரையை - மலைகளை

739. வரையற்று வந்த - அளவில்லாமல் வந்த. புரை அற்ற - ஒப்பில்லாத ; குற்றமற்ற எனலும் ஆம். நிரையுற்ற சென்னி - வரிசையான தலைகள். உரம் - மார்புகள். சென்னியும் உரமும் கைகளும் நிலம் உற்றிட. விழ விழ மீட்டும் அவை உடம்போடு ஒட்டிக் கொண்டன.

திங்கா ரெனக்கு நிகரென்றோர் குன்றம்
இகலிப் பறித்து விடவே
கங்காளன் மைந்த னொருவாளி கொண்டு
கடிதே துணித்த ருளினான். உஅள

741. மால்விட்ட வும்பர் சிறைவிட்டி டாது
மறமுற்ற சூர னிளையோன்
வேல்விட்டு வென்றி கொளுமாறு மன்றி
விடுகின்ற தொன்றை விறல்சேர்
கோல்விட்ட ழிக்கு மிதுவேய லாது
குமரா பயின்றி லைகொலென்
றாலத்தை யொத்த வொருதண்டு தன்னை
அடலோடு விட்ட பொழுதின். உஅஅ

742. வீறான தண்டு வருசெய்கை கண்டு
விறல்கொண்ட கந்தன் வெகுளா
மாறான வஞ்ச னுயிருண்டு வல்லை
வருகென்று கையின் மருவும்
ஊறான தற்ற குலிசந் தொடுப்ப
உரனோடு சென்று கதையை
நீறாக நூறி யரிமா முகத்தன்
நெடுமார்பி னுற்ற ததுவே உஅகூ

---

740. சிங்காரம் - அலங்காரம். முளையாது - முளையாமல் இருக்கும்படி. உங்காரம் ஓத - ஹூங்கார சப்தத்தை முருகக் கடவுள் செய்ய. இரு பாணியோடும் - இரண்டு கைகளோடும். இக்லி - பகைத்து. கங்காளன் - முழு என்பை அணிந்த சிவபிரான்.

741. மால் - மயக்கம். உம்பர் சிறை - தேவர்களது சிறையை. மறம் உற்ற - அதர்மத்தையுடைய. இளையோன் - சிங்கமுகன். வேலை விட்டு வெற்றிகொள்வதும் நான் விடும் ஆயுதத்தை அம்பால் அழிப்பது மன்றி வேறொன்றும் பழகவில்லையோ என்று சிங்கமுகன் கூறி. ஆலத்தை - விடத்தை.

742. குலிசம் - வச்சிராயுதத்தை. உரன் - வலி.

743. மார்பிற் பொருந்தி முதுகிற் பறிந்து
வலியோடு செல்ல வவுணன்
சோரிப் பெருக்கி னுடனே விழுந்து
துயரத்தி னோடு மடியக்
கூர்பெற்றி லங்கு குலிசம் படர்ந்து
குளிர்வான திக்குண் முழுகிக்
கார்பெற்ற கண்ட னருண்மைந்த னுந்து
கரமீது வந்த திறையின். உகo

744. நாகத்தி லும்பர் மலர்மாரி தூவி
நனிபாடி யாடி மகிழ
வாகைக் குமார னிளையோர்க டாமும்
மலிகின்ற பூதர் குழுவும்
ஓகைக்குண் மூழ்கி யபலே பொருந்த
உயர்பா சறைக்க னுகினன்
ஆகுற்ற வேலை யிதுகண்ட வொற்றர்
அசுரேச னோடி தறைவார். உகக

745. உன்றம்பி யான வரிமா முகத்தன்
உயிர்போய் மடிந்த னனெனுக்
குன்றம் புரைந்த சிகரத் திருந்த
கொடியோ னிலத்தின் மிசையே

---

743. பறிந்து - ஊடுருவிப் போய். சோரிப் பெருக்கினுடனே - இரத்த வெள்ளத்தோடு. படர்ந்து - சென்று. வான் நதிக்குள் - ஆகாச கங்கையில். கார் பெற்ற கண்டன் - நீலகண்டப்பெருமான். இறையின் - ஒரு கணப்பொழுதில்.

744. நாகத்தில் - வானத்தில். உம்பர் - தேவர்கள். ஓகை - உவகை. பாசறைக்கு - பாசறையை ; உருபு மயக்கம். அசுரேசனோடு - சூரனோடு.

745. அரிமா முகத்தன் - சிங்கமுகன். சிகரத்து இருந்த - கோபுரத்தின்மேல் இருந்த. மின் தங்கு எயிற்று - மின்னுதலையுடைய பல்லையுடைய.

துன்றும் புனல்கொண் முகில்போல் விழுந்து
துயரக் கடற்குண் முழுகி
மினறங் கெயிற்று விறல்வாய் திறந்து
மிகவே புலம்பி யழுதான். உகூஉ

சூரபன்மன் வதை

(வேறு)

746. ஓங்குதுயர் நீங்கியொரு கோடியெனு மாயிரமு
மொற்றர்களை யொல்லை விளியாத்
தீங்ககலு மாயிரவொ ரெட்டளவை யண்டமுறு
சேனைக ளனைத்தும் வரவே
ஆங்குற வணைந்துபுகல் வீரென விரைந்தவர்கள்
அண்டமுள வண்டி யறைய
வாங்கரு மிருந்திறல்கொ டானவர்க டானைபல
வந்தவுய ரண்ட வழியால். கூஉரு

747. வேதனொடு மாதவ னுறும்பதி நிறைந்தன
விசும்பிடை நிறைந்த னவெழிற்
பூதல நிறைந்தன பெருந்திசை நிறைந்தன
புகழ்க்கட னிறைந்த னநெடும்
பாதல நிறைநதன வியாவையு நிறைந்தன
பரந்துவரு தூசி யனிகம்
ஆதரவி னூறுபெறு கோடியுறு யோசனையிவ்
வண்டமு நிறைந்த விறையின். உகூச

---

746. ஒல்லை விளியா - விரைவில் அழைத்து. என - என்று சூரபன்மன் ஏவ. அண்டம் உள அண்டி அறைய - உள்ள அண்டங்கள் யாவற்றையும் அடைந்து சொல்ல. வாங்கரும் - நீங்குதற்கரிய. அண்ட வழியால் - அண்ட கோளத்தின் வழியாக.

747. வேதன் பதியிலும் மாதவன் பதியிலும் நிறைந்தன; மாதவன் - திருமால். தூசி அனிகம் - முற்படை. இறையின் - கண நேரத்தில்.

748. இன்னபடி தானவர்க டானையுற வொற்றர்கள்
இருந்திறல் பொருந்து மவுணன்
பொன்னடி பணிந்திவை யுரைத்திட விருப்பொடு
பொருக்கென விருக்கை யிடைபோய்
மன்னுபுன லாடியினி தாமடிசி லுண்டுதிரு
நீறுநுதல் வல்லை யிலணிந்
தின்னலக லுங்களப மின்னுகல னனைவை
இதம்பெற வணிந்த னனரோ. உகரு

749. ஆளிகளி லக்கெழுப தாயிர மரும்பரிகள்
அன்னதொகை யன்ன தொகையே
கூளிக ளிழுத்திடு மிழுக்கி லிரதத்தின்மிசை
கொற்றமொ டணைந்த வுணர்கோன்
வாளில கெயிற்றவுணர் சேனைபுடை சூழ்தர
மறந்தரு பறந்த லைதனிற்
காளியொடு வாதுநட மாடிமக னோடமர்
கலந்திட வணைந்த பொழுதின். உகசு

750. செங்கமல வேதனுட னுந்துமரி கந்தனது
செம்பத மிறைஞ்சி யவுணன்
இங்கமர்பு ரிந்திட வணைந்தன னெனக்குகன்
எழுந்தனில சார திவிடும்

---

748. அவுணன் - சூரன். பொருக்கென - விரைவாக. அடிசில் - உணவை. களபம் - கலவைச் சந்தனம். மின்னு கலன் - ஒளி வீசுகின்ற ஆபரணங்கள்.

749. ஆளிகள் இலக்கு எழுபதாயிரம் - சிங்கங்களின் எண் எழுபதாயிரம்; இலக்கு - இலக்கம். அன்ன தொகை - அதே அளவு; எழுபதாயிரம். கூளிகள் - பேய்கள். வாள் இலகு - ஒளி வீசுகின்ற. மறந்தரு பறந்தலைதனில் - வீரத்தை வெளிப்படுத்தும் போர்க்களத்தில். நடமாடி - சிவபிரான்.

750. அரி - திருமால். அனிலசாரதி - வாயு தேவனாகிய தேர்ப் பாகன். பொங்கு அணிகொள் தேர் - மிக்க அலங்காரங்களைக் கொண்ட இரதம்.

பொங்கணிகொ டேரணுகி வீரரொடு சாரதர்
புகழ்ந்தயல் பொருந்தி வரவே
தங்கவுணர் சேனையெதிர் செல்லமிகு பூதரொடு
தானவர் மலைந்து பொருதார். உ௬எ

751. வீறிவரு தானவர்க ளாலிலகு பூதர்கள்
விளிந்திட விலக்க முடனெட்
டேறுதனி வீரர்க ளடைந்துடைய மொய்ம்புறும்
இரும்புய னெதிர்ந்து கணைதூய்ச்
சீறியவ ரிற்சிலரை நூறியழி யாவது
தெரிந்துமுரு கன்பு டைவரக்
கூறியிடு மிந்தவகை கண்டருளி வெஞ்சிலை
குனித்தன னநித்த மணையான். உ௬அ

752. மன்னுதனு விற்கணை யளப்பில தொடுத்தருளி
வானமொடு வைய கமுமாய்த்
துன்னுமவு ணப்படை பிணக்குவை படும்படி
துலங்குமுரு கன்பு ரியவே
அன்னசெயல் கண்டுமிக வண்டகட கத்தின்மிசை
அப்புற மிருந்த வனிகம்
முன்னென வணைந்துகும ரேசனை வளைந்திட
முரட்குமர னீது மொழிவான். உ௬௯

---

751. வீறிவரு - மிக்க பலங்கொண்டு எழுந்த. விளிந்திட - இறக்க. உடைய - தோல்வியடைய. மொய்ம்புறும் இரும்புயன் - வீரவாகு. நூறி - கொன்று. அழியா அது தெரிந்து - அழியாத அந்தத் தன்மையை உணர்ந்துகொண்டு. கண்டருளி - தாமே நேரிற் பார்த்து. அநித்தம் அணையான் - நிலையாமையைப் பொருந்ாதவர்; நித்தர்.

752. தனுவில் - வில்லில். பிணக்குவை - பிணக்குவியல். அண்ட கடகத்தின்மிசை - அண்டச் சுவருக்கு மேலே. அனிகம் - படை. முரண் - வலிமை.

753. மையவுணர் சேனையிடை தேரினை விடுத்திடென
மாருதியி னோடு றையவே
ஐயவிது நன்றெனா நிலத்தினில் விசும்பினில்
அளக்கரில் விடுப்ப முருகன்
பெய்யுமுகி லென்னமிகு வாளிகள் சொரிந்தருள்
பிரிந்தவவு ணப்ப டையெலாம்
ஒய்யென விறந்துதிர மோடுபிண மாயிட
உலாவியமர் செய்த ருளினான். ௩௦௦

754. சீகர முலாவுமெழு சாகரமு மாகமொடு
தேவர்க ணிறைந்த வுலகும்
சூகர நிறத்தவுணர் சேனைபிண மாகநனி
துன்றவெழு கின்ற குருதி
வேகமுட னேழ்பிலமு மண்டலமு மெண்டிசையும்
விண்ணகமு நண்ணி நிறைய
வாகைமுரு கன்றகுவர் சேனைவரு மண்டவழி
வாளிகொ டடைத்த ருளினான். ௩௦௧

755. பாலன மொழிக்கவுரி பாலனது பின்புதழல்
பன்னிருக ணும்பொ லியவே
மாலணுகு தானவர் பிணத்தினிடை கண்ணு றலும்
வாரிநிகர் சோரி யறெலாம்

---

753. மாருதியினோடு - வாயு தேவனோடு அளக்கரில் - கடலினிடையே. அருள் பிரிந்த - கருணையினின்றும் நீங்கிய. ஒய்யென - விரைவாக.

754. சீகரம் உலாவும் எழு சாகரமும் - துளிகள் பரந்த ஏழு கடல்களும். மாகமொடு - ஆகாசத்தோடு. சூகர நிறத்து - பன்றியைப் போன்ற கரிய நிறமுள்ள. குருதி - இரத்தம். ஏழ் பிலமும் - கீழுலகங்களாகிய ஏழிலும். வாகை - வெற்றி. தகுவர் - அசுரர். அண்டவழி - அண்ட கடாகத்திலிருந்து வரும் வழியை

755. தழல் - கோபாக்கினி. மால் அணுகு - மயக்கத்தை அடைந்த. கண் உறலும் - திருக்கண் பார்வையை ஓட்ட. சோரி - இரத்தம். வறந்தது - வற்றிப்போயிற்று.

சாலவும் வறந்தது நிறைந்திடு பிணக்குவை
  தணந்துபொடி யாகி யதுசீர்
மாலயனு மிந்திரனு மும்பர்களும் வேலனை
  வழுத்தினர் மகிழ்ச்சி யுறவே. ௩௦௨

756. எம்பரம னின்னன புரிந்தது தெரிந்துளம்
  எரிந்திட விரைந்த வுணர்கோன்
அம்பகமி ராறுடைய நம்பனெதிர் தேரினொடும்
  ஆலமென வந்த ணுகலும்
கும்பமத யானையுரி கொண்டவ னளித்தருள்
  குமாரனு மெதிர்ந்த ருளினன்
உம்பர்கள் பெருஞ்சிறை விடாதுயிர் விடுப்பவன்
  உருத்திவை யுரைத்தி டுவனால். ௩௦௩

757. இன்புறு பரன்றரு வரத்தியல்பி லெப்பொழுதும்
  இப்படி யிருப்ப னழியேன்
என்பணி புரிந்துழலு மும்பர்மொழி மெய்ம்மையென
  எண்ணியம ருக்க ணுகினாய்
என்படினு முன்றனை விடுப்பதிலை மைந்தனென
  விட்டிடுவ தில்லை யெனவே
வன்புமன வெய்யனிது கூறவெமை யாளுடைய
  வள்ளலுரை செய்த ருளுவான். ௩௦௪

---

756. எம் பரமன் - முருகக் சடவுள். அவுணர்கோன் - சூரன். அம்பகம் இராறு உடைய நம்பன் - பன்னிரண்டு கண்களையுடைய முருகவேள். ஆலமென - விடத்தைப்போல. கும்ப மத யானை - மத்தகத்தினின்றும் பிறக்கும் மதத்தையுடைய யானையினது. உரி - தோலை. கொண்டவன் - ஆடையாக உடைய சிவபிரான். உயிர் விடுப்பவன் - உயிர்விட வந்திருக்கும் சூரன் உருத்து - கோபித்து.

757. இன்பு உறு பரன் - ஆனந்தமாக உள்ள சிவபெருமான். பணி - ஏவல். உம்பர் மொழி - தேவர்கள் நின்பால் கூறிய வார்த்தைகளை. என் படினும் - என்ன விளைந்தாலும். மைந்தன் என - சிறு பிள்ளையென்று நினைத்து. வன்பு - கொடுமை. வெய்யன் - சூரன். வள்ளல் - முருகக்கடவுள்.

758. உம்பரை யலைத்ததொரு வெங்கயவ வம்புரை
உரைத்தனை யுறுது ருவினிற்
செம்புனல் குதித்திடவி யாம்விடு பெருங்கணைகள்
செப்பிடு முனக்கு மொழியென்
றெம்பரம ஞேதலு நெடுஞ்சிலை வளைத்தனன்
இருந்திறல்கொள் பூத ரெவரும்
வெம்பியவு ணன்றனை வளைந்தவன் விடுங்கணைகள்
மெய்ப்பட வுடைந்த னரரோ. ௩௦௫

759. இன்னசெயல் கண்டுதிறன் மொய்ம்பனுடனெண்மரும்
இலக்கரு மெதிர்ந்த வுணன்மேல்
மின்னுகணை மாரியின் விடுப்பமிசை பட்டவை
விரைந்தவ ஞெடிந்து விழலும்
மன்னவுண ஞறுபெறு கோடிகணை சிந்தியவர்
வையமொடு வில்லி னையறுத்
தந்நிலையி ஞன்குபெறு மாயிர நெடுங்கணையை
அங்கமிசை விட்ட னனரோ. ௩௦௬

760. எண்மரி லிலக்கர்கள் கலக்கமொ டிரிந்தனர்
இருந்திறல்கொள் வாகு வவுணன்
திண்மையுள தேர ணுகி வாள்கொடவ னீள்சிலை
சிதைக்கவனை யோனை யவுணன்

---

758. அலைத்ததொரு வெங்கயவ - துன்புறுத்தின கொடிய இழி தகவுடையோய். வம்புரை - வீண் வார்த்தைகளை. செம்புனல் - இரத்தம். குதித்திட யாம். உனக்கு மொழி செப்பிடும்; மொழி - விடை. சிலை - வில்லை. வெம்பி - கோபித்து. மெய்ப்பட உடைந்தனர் - உடம்பிலே படவே தோற்று ஓடினர்.

759. திறல் மொய்ம்பன் - வீரவாகு. கணையை மாரியைப்போல விடுப்ப. வையம் - தேர். அங்கமிசை - உடம்பின் மேல்.

760. எண்மரோடு இலக்கர்களும். இரிந்தனர் - தளர்ந்து ஓடினர்கள். திறல்கொள் வாகு - வீரவாகு. சிலை சிதைக்க - வில்லை ஒடிக்க. அயர - மயங்க. ஒல்லை - விரைவில்.

வண்மையுறு மார்பிடை யடித்துழி விழுந்தயர
வான்மிசை யெறிந்த னனறிந்
துண்மையுறு கந்தனயன் மேவவவு ணன்சிலைகொ
டொல்லைகுகன் முன்கு றுகினன். ௩0எ

761. வெந்திறல்கொள் வேலனொடு விற்சமர் புரிந்தவன்
விடுங்கணை விலக்கி விறல்சேர்
கந்தனிர தத்துறு விறற்கொடி யறுத்துழி
கறுத்தவன் விடுங்க ணையெலாம்
சிந்தும்வகை செய்துகணை யேழுகொடு சூரனுறு
தேரினி லுறுங்கொ டியறுத்
துந்துதிரை வேலைதனி விட்டருள வானமுறும்
உம்பர்க ளொலித்த னரரோ. ௩0அ

762. அன்னவ ரொலித்தலு மழன்றிரத மோடவுணர்
அண்ண லுயர் விண்ணி டையடைந்
தின்னலுற வும்பர்மிசை வெம்பகழி தூவலும்
இளங்குமர னின்று புவிமேல்
துன்னுகணை விட்டவை யறுத்திலகு வையமொடு
துய்யககனத்தின் மிசைபோய்
ஒன்னல னெடுங்கணை பொழிந்தமர் புரிந்தனன்
உமைக்கினிமை யான புதல்வன். ௩0௯

763. பிலத்தினிடை போவன நிலத்தினிடை மேவுவன
பேசரிய வாசை களெனும்
தலத்தினிடை யோடுவன நீடுகடல் கூடுவன
சையமிசை யெய்து வனசிர்

761. விறல் கொடி அறுத்துழி - வெற்றித் துவசத்தை அறுத்த போது. கறுத்து - முருகவேள் கோபித்து. உந்து திரை வேலைதனில் - அலைகள் வீசுகின்ற கடலில்.

762. அழன்று - கோபித்து. அவுணர் அண்ணல் - சூரன். பகழி - அம்பு. வையமொடு - தேரோடு. ககனத்தின்மிசை போய் - ஆகாசத்திலே சென்று. ஒன்னலன் - பகைவன்.

மலர்த்தவி சயன்புவியி னண்டுவன மண்டுகடல்
வாளகிரி தாவி யழியா
நலத்தொடுறு மண்டமுன மேருவன மீளுவன
நண்ணுமவர் வண்ண விரதம். ௩௧௦

764. இன்னபரி சன்னவர்க ளேறுமிரு வீறிரதம்
எங்கணு முலாவு பொழுதில்
மன்னவுணர் மன்னளவில் வெம்படை விடுப்பவவை
வாளிகொடு தூளி புரியா
இன்னமுத மானமுரு கக்கடவு ளேழினுடன்
ஏழுகணை விட்ட வுணர்கோன்
பொன்னிரத நீறுபட நூறுதலும் வில்லினொடு
பூமிசை யடைந்த னனரோ. ௩௧௧

765. வையமிசை வந்தொரு சூரன்மிகு வாளிவிட
வாளிகொ டறுத்த ருளியே
ஐயனெதிர் சூரனது வீரமுறு தோளின்மிசை
ஆயிர நெடுங்க ணைகடான்
எய்யவவை பட்டவ னொடிந்துவிழ வெய்யவன்
இராயிர நெடுங்க ணைவிடத்
துய்யகுகன் மொய்ம்பினிடை வாளிகள் பொருந்திமிகு
தூளிகள் பொருந்தி னவரோ. ௩௧௨

---

763. பிலத்தினிடை - பாதலத்திற்குள்ளே. ஆசைகள் - திசைகள். சையமிசை - மலைகளின் மீது. மலர் தவிசு அயன் புவியின் - தாமரையை ஆதனமாகவுடைய பிரமனது உலகத்தில். வாளகிரி - சக்கரவாளகிரி. அவர் வண்ண இரதம் - சூரன், முருகவேள் என்னும் இருவருடைய அழகுபெற்ற தேர்கள்.

764. இரு வீறு இரதம் - இரண்டு வேறு தேர்களும். அவுணர் மன் - சூரன். தூளி புரியா - பொடிபடுத்தி. நூறுதலும் - அழிக்கவே.

765. வையமிசை - நிலத்தின் மேல். ஐயன் - முருகக்கடவுள். அவண் - சூரன் தோள்களில். மொய்ம்பினிடை - தோள்களின்மேல்.

766. பின்னுமவு ணன்சொரி சரங்களை விலக்குபு
பெருங்கணைக ளாயி ரம்விடுத்
தன்னவ னடற்றனு வொடித்திடலு மற்றுமொ
ரருஞ்சிலை பிடித்த வுணர்கோன்
மின்னுறு விசும்பினி லெழக்கடிது வேலவனும்
விண்ணிடை யெழுந்து பொரவே
மன்னவுணன் மண்ணின்மிசை பின்னும்வர நம்பரனும்
வந்தமர் புரிந்த ருளினன். ௩௧௩

767. காசினியி னின்றவ னளக்கரிடை திக்கிடை
கவின்றரு பிலத்தி னிடைசீர்
வீசுபுகழ் மேருவிடை மாயனுல கத்தினிடை
மேவவவை தோறு மணுகிப்
பூசன்முரு கன்புரிய வண்டமுறு வாயிலிடை
போகவவ னுங்குறுகியே
நீசனொ டெதிர்ந்துவிறல் பட்டகணை விட்டவுணன்
நெட்டிரத மட்ட ருளினன். ௩௧௪

768. தேரழிய முன்புரி மகத்தினிடை யாதியருள்
செய்தமன வேக மதுவாம்
வீரமுறு தேரைநினை யக்கடிது வந்திட
விளங்கதனி லேறி யருளே

---

766. அடல் தனு - பலமுடைய வில்லை. நம் பரனும் - முருகக் கடவுளும்.

767. காசினியில் - பூமியின் மேல். அளக்கரிடை - கடலினிடையே. கவின் - அழகு. பிலத்தினிடை - பாதாள உலகத்தில். மாயன் உலகத்தினிடை - வைகுந்தத்தில். முருகன் பூசல் புரிய; பூசல் - போர். அண்டமுறு வாசல் - அண்டகோளத்தின் முகட்டிலுள்ள வாயில். நீசனொடு - சூரனோடு. நெடு இரதம் - உயர்ந்த தேரை.

768. மகத்தினிடை - யாகத்தில். ஆதி - சிவபெருமான். மனோ வேகத்தையுடைய இந்திரஜால இரதத்தை. அருளே ஆரும் - கருணை நிறைந்த அம்புகளால் அண்டவாசலை முருகவேள் அடைத்தபோது அவ்வம்புக் கதவைச் சூரன் அழித்தான்.

ஆருமுரு கன்கணைகொ டண்டமுறு வாயிலை
அடைத்தகத வைக்க ணைகடேய்
வீரமொ டறுத்திடலு மப்புற மிருந்தபடை
மேவியது வேல னயலே. ௩௬௫

769. வந்தபடை கந்தன்விழி பட்டிடலும் வல்லையின்
மடிந்தஅய லண்ட மருவும்
உந்துபடை வந்திட வுரப்பின னுரப்பலும்
உடைந்தஅய லண்ட மருவும்
வெந்திற லுறும்படை தரக்கரமு றைம்படையை
வேலவன் விடுப்ப வவைபோய்
நந்தில்பல வண்டமுறு சூர்படை யனைத்தையும்
நடுக்குற வடர்த்த வுலவி. ௩௬௬

770. தந்திர முறும்படை கெடப்பர னளித்ததொரு
சக்கர மெடுத்த வுணர்கோன்
கந்தன்மிசை விட்டிட வதைக்குமர வேளொரு
கரங்கொடு பிடிப்ப வதுகண்
டந்தமி லுருக்கொடம ராடமுரு கேசனறி
வானபடை விட்ட டையலான்
வெந்திறல்கொண் மாயம தறுத்துழி யொருத்தனென
மேவினன் மிகுத்த கொடியோன். ௩௬௭

---

769. அயல் அண்டம் - வேறு அண்டங்களில் இருக்கும். உரப்பினன் - கர்ச்சனை புரிந்தருளினர். அவ்வொலி கேட்டு மேல்வந்த படைகள் அழிந்தன. ஐம்படையை - பஞ்சாயுதத்தை. நந்து இல் - குறைதல் இல்லாத. உலவி அடர்த்த - எங்கும் பரந்துசென்று அழித்தன.

770. தந்திரம் - போர் செய்தற்குரிய விரகுகள். பரன் - சிவபிரான். அந்தமில் உருக்கொடு - சூரன் மாயையால் முடிவில்லாத பல பல உருவங்களை எடுத்துக்கொண்டு. அமர் ஆட - போர் செய்ய. அறிவான படை - ஞானாஸ்திரம். அடையலான் - பகைவன். ஒருத்தனென - தனி ஒருவனாக.

(எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

771. அப்போதினின் மிகுதானவ ரரசாயிர கோடி
அண்டத்தினு மண்டக்கடி தண்டிக்கும ரேசன்
மெய்ப்பாரம ராடப்பினு மிப்பாரிடை வந்தே
மிகநொந்து மனத்தாயை நினைத்தானது போதின்
ஒப்பாரறு மவள்வந்திட நிகழ்வானவை யவளோ
டோதிப்படை யிறப்பட்டவ ருய்ந்தேயெழு மாறு
செப்பாயெனப் புறவேலையி னொருசாருறு மமுதத்
திருவெற்பது வரினாமெனச் செப்பிக்கரந் திட்டாள்.

772. இன்பாகிய வவுணன்றன திரதத்தினை யொருவி
இறைவன்றரு சிங்கத்தி னெருத்தத்தி னணைந்தே
கொன்பாவிய வமுதந்திகழ் குன்றந்தனைச் சென்றே
கொடுவாவெனத்தேர்போயதுகொடுவந்ததுபடையின்
முன்பாடுறு மரிமாமுக னிரவிப்பகை முதலா
முடிவற்றிடு படைமுற்றவு முன்போலெழுந் தீண்டப்
பொன்பாவிய வுலகத்தவர் வெம்பூதர்கள் கண்டே
புலிகண்டிடு புல்வாயது போலத்தளர் வுற்றார். ருகக

771. தானவர் அரசு - சூரன். அண்ட - செல்ல. கடிது அண்டி - அவன் போன இடங்களிலெல்லாம் தாமும் விரைவாகச் சென்று. மனத்து ஆயை நினைத்தான் - மனத்தில் மாயையாகிய தன் தாயை நினைத்தான். புறவேலையின் - உலகப்புறக் கடலில். அமுதத் திரு வெற்பு - அமிர்தகிரி. வரின் ஆம் - இங்கே வந்தால் இறந்துபட்ட படைகள் எழும். கரந்திட்டாள் - மறைந்தாள்.

772. இன்பு ஆகிய - சந்தோஷத்தை அடைந்த. ஒருவி - நீங்கி. எருத்தத்தின் - கழுத்தின்மேல். கொன் பாவிய - பெருமை பரவிய. கொடுவா என - கொண்டு வருவாயாக என்று தேரை நோக்கிச் சூரன் கூற. முன் பாடு உறு - முன்னே இறந்துபட்ட. அரிமாமுகன் - சிங்கமுகாசுரன். இரவிப்பகை - பானுகோபன். ஈண்ட - அடைய. பொன் பாவிய உலகத்தவர் - தேவர். புல்வாய் - மான்.

773. கண்டானிது மண்டாறிரு கண்டானுடை வள்ளல்
கடவுண்டவனெடுவெம்படை கைக்கொண்டுவிடுப்பத்
தண்டாவிற லவுணப்படை முற்றுங்கடி தட்டத்
தாணுப்படை வேலன்புடை சாரக்கொடுஞ் சூரன்
அண்டாசிடர் கொண்டானிடர் விண்டாரிமை யோர்கள்
அல்லற்புரி சூர்பின்ன ரருந்தேரை விடுப்பக்
கொண்டாடு நெடுந்தேரது கண்டார்க ணடுக்கம்
கொள்ளும்படிபோள்ளென்று கொதித்தேகியதம்மா.

774. ஏகித்திறல் வாகுத்தனை வாகுற்ற விலக்கத்
தெட்டான திறத்தோரை யிரும்பூதரை யெல்லாம்
மோகத்தொடு சோகப்பட வாரிக்கடி தண்ட
முகடுற்றது முருகேசன் முனிந்தோர்கணைவிட்டான்
வாகைக்கணை சென்றிந்திர ஞாலச்சக டத்தை
வையத்திடை கொடுவந்திட வாகுத்தனை முதலோர்
சோகத்தினை யற்றார்குக னிரதத்தினை நிற்பச்
சொற்றானஃ தவணின்றது சூர்கண்டு வெகுண்டு.

---

773. மண்டு ஆறு இரு கண் தான்உடை வள்ளல் - நெருங்கிய பன்னிரண்டு கண்களை உடைய முருகவேள். கடவுண்டவன் - சிவ பிரான். அவன் படை, பாசுபதாஸ்திரம். முற்றும் கடிது அட்டு - முழு வதையும் விரைவிலே அழித்து. அத் தாணுப்படை - அந்தப் பாசுபதாஸ் திரம். அண்டு ஆசு இடர் கொண்டான் - குற்றமுடைய துன்பத்தை அடைந்தான். இமையோர்கள் இடர் விண்டார். கொதித்து - கோபம் கொண்டு.

774. திறல் வாகுத்தனை - வீரவாகுவையும். திறத்தோரையும் பூதரையும். மோகத்தொடு சோகப்பட வாரி - மயக்கத்தோடு துக்கத்தை அடையும்படி எடுத்துக்கொண்டு. அண்ட முகடு உற்றது - அண்டத்தின் உச்சியை அடைந்தது. இந்திர ஞாலச் சகடத்தை - மனோவேகமென்னும் இந்திரஜால ரதத்தை. வையத்திடை - பூமிக்கு. வாகுத்தனை முதலோர் - வீரவாகு முதலியவர். இரதத்தினை நிற்பச் சொற்றான் - இந்திர ஞாலத் தேரை நிற்கும்படி ஏவியருளினார்.

775. மூதண்ட மளாவுற்றிடு கோதண்டம் வளைத்தேழ்
முரணம்பு சொரிந்தானறு முகனுங்கணை தூவித்
தீதண்டிய சூர்வாளி விலக்கித்தச நூறு
திண்மைக்கணை சிந்திச்சமர் சிந்தித்திடு சூர்கைப்
போதண்டிய வில்லைத்துணி கண்டானது போதிற்
பொருமூவிலை வேல்கொண்டு புகழ்ச்சிக்கும ரேசன்
மீதண்ட விடுத்தானது கண்டாயிர கோடி
வெவ்வாளி சொரிந்தானருள் வீசும்முரு கேசன்.

776. வேலன்சொரி கோன்முற்ற விறற்சூல மறுத்தே
விரைவோடெதிர் வரவச்சிரம் விட்டானதுசென்றே
சூலத்தலை கவ்விக்கும ரன்பாணி பொருந்தச்
சுடர்வேலவ னீராயிரந் தூவாளிக ளேவி
ஆலக்கொடி யோனுற்றிடு சிங்கத்தை வதைப்ப
அங்கத்துணை வஞ்சத்தொடு மடலேமிகு கடலே
போலப்பொலி வெம்பூதர் வருந்தும்படி நேமிப்
புள்ளாயுருவங்கொண்டெதிர்பொருதானெறி கருதான்.

777. துண்டங்கொடு கொத்திச்சிறை தன்னான்மிக மோதித்
துங்கம்பெறு வெம்பூதரைத் துயர்செய்தது திரிய
மண்டும்புக ழறுமாமுகன் மகவான்மயில் வடிவாய்
வரவுன்னலு மவனப்படி வந்தானவன் மிசையே

---

775. முது அண்டம் - பழமையான அண்டத்தை. கோதண்டம் - வில்லை. முரண் - வலிமை. தீது அண்டிய - தீங்கையுடைய. கைப் போது அண்டிய வில்லை - கையில் இருந்த வில்லை. துணி கண்டான் - ஒடித்தார். மூவிலை வேல் - சூலாயுதம். அண்ட - விழும்படி.

776. கோல் முற்ற - அம்புகள் முழுவதையும். வச்சிரம் - வச்சிராயுதத்தை. பாணி - திருக்கரத்தை. ஆலக்கொடியோன் - விடம் போன்ற கொடுமையை உடைய சூரன். அத்துணை - அவ்வளவில். வஞ்சத்தொடும்-வஞ்சகத்தோடும். அடல் மிகுந்த கடலைப்போல. நேமிப் புள்ளாய் - சக்கரவாகப் பட்சியாகி. நெறி கருதான் - நல்ல நீதியை நினையாத சூரன்.

777. துண்டம் கொடு - அலகினால். சிறை தன்னால் - இறகுகளால். துயர் செய்து அது திரிய. மகவான் மயில் வடிவாய் வர - இந்தி

சண்டன்றனை யுதைசெய்தவ னறுண்மாமக னேறிச்
சயமோடு துரந்தேகொடி தாயுற்றிடு புள்ளைக்
கண்டம்பட வாள்கொண்டு துணித்தானது போதிற்
கடலுற்றிடு விடமொத்திடு கடியோனிது புரிவான்.

778\. மண்ணாகியும் புனலாகியு மனலாகியும் வங்கூழ்
வடிவாகியு மண்டந்தொட வளர்ந்தேயவ னுறலும்
விண்ணோடர் வணங்காறிரு கண்ணார்முரு கேசன்
வீறாயவை மாறாகிய வெங்கோல்கள் விடுத்தே
எண்ணனது மாயத்துரு மாயும்படி செய்தான்
இப்பான்மையி லிருநாளொட லிருநாள்வரை யவுணன்
பெண்ணாரு மருங்கண்ணல் பெருங்கண்ணிடை வந்த
பெருமானொடுபொருதேயிவைபின்னுஞ்செயலுற்றான்.

779\. கூற்றாமெனவொருபால்வருமொருபால்வருமிருள்போற்
குவடாமெனவொருபால்வருமொருபால்வருங்குறள்போற்
காற்றாமெனவொருபால்வருமொருபால்வருமனல்போற்
கடலாமெனவொருபால்வருமொருபால்வருங்கடிபோல்
மாற்றாவிற லிளையோரென வொருபால்வரு மொருபால்
வயமைந்தர்க ளெனவேவரு மைவேலையின் முன்னம்
தோற்றாவரு விடமாமென வொருபால்வரு மொருபால்
துன்னும்படை யென்னும்படி சூழ்வுற்றிடுஞ் சூரன்.

ரன் மயிலுருவத்தோடு வரும்படியாக. அறுமாமுகன் உன்னலும். சண்டன்தனை உதை செய்தவன் - சிவபிரான். துரந்தே - செலுத்தி. புள்ளை - சக்கரவாகப் பறவையை. கண்டம்பட - துண்டாகும்படி.

778\. வங்கூழ் - காற்று. அண்டம் தொட - அண்டத்தைத் தொடும்படியாக. வளர்ந்தே: வளர்ந்தவன் சூரன். வீறு ஆயவை மாறு ஆகிய - வேறு வேறு உருவங் கொண்டுவந்த அவற்றிற்குப் பகையாக உள்ள. எண்ணனது - பகைவனுடைய. மாயத்து உரு - மாயையினால் எடுத்துக்கொண்ட பல உருவங்கள். நான்கு நாள் சூரன் இவ்வாறு போர் செய்தான். பெண் ஆரும் மருங்கு அண்ணல் - உமாதேவியார் தங்கும் வாமபாகத்தையுடைய சிவபெருமான். அவருடைய நெற்றிக் கண்ணிலிருந்து வந்த பெருமான், முருகக்கடவுள்.

779\. கூற்று ஆம் என - யமன் என்று சொல்லும்படியாக. குவடாமென - மலையைப்போல. குறள் போல் - பூதம் போல. கடி

780. இப்பான்மையி லவுணர்க்கிறை யெங்கெங்கு நிறைந்தே
இரும்போர்செயவரும்போதினிலிருள்கொண்டிடுகண்டத்
துப்பார்கனல் விழியோனருள் சுதனுயிர கோடி
தூவாளிக ளேவாவவை தொலையும்படி புரியா
மெய்ப்பார்கட லேழும்புவி யேழும்பிற யாவும்
வீறொன்றிய தானல்லது வேறொன்றிலை யென்ன
ஒப்பாகிய தில்லாவொரு வடிவங்கொடு நின்றான்
ஒன்னானிரு நயனங்களு முளமெங்கணு முருக.

781. எங்குந்தன துருவாகி யிருக்கின்ற சொரூபம்
எய்திக்குக னிற்கும்பொழு தின்னற்புரி சூரன்
பொங்கும்புக ழன்போடு மதித்தேயது மாறப்
பொள்ளென்று சினந்தண்டர் புலம்பும்படி மாயம்
தங்கும்பல வடிவங்கொடு சமராடலு முருகன்
தனிவேலை விடுத்தானது தகுவர்க்கிறை கண்டே
சங்குந்திய வேலைப்புடை தடமாமர மாகிச்
சாரக்கதிர் வேல்சென்று தடிந்திட்டது மாதோ.

போல் - பேயைப்போல. வய - வலி. மை வேலை - கரிய கடல். படை என்னும்படி - ஆயுதங்களைப்போல.

780. இருள்கொண்டிடு கண்டம் - நீலகண்டம். சுதன் - குமாரன். தூவா - எய்து. அவை தொலையும்படி - சூரன் எடுத்த மாய உருவங்கள் அழியும் வண்ணம். ஒரு வடிவங்கொடு - விசுவரூபத்தை எடுத்துக்கொண்டு. ஒன்னான் - பகைவன்.

781. இன்னல் - துன்பத்தை. அன்போடு மதித்தே - முதலில் அந்த உருவத்தினிடத்தே கருத்துச் செல்ல நன்மதிப்பைக் கொண்டு. அது மாற - அந்த அன்பு மாற. பொள்ளென்று சினந்து - திடீரென்று கோபித்து. அண்டர் புலம்பும்படி - தேவர் கதறும்படி. தனி வேலை - ஒப்பற்ற வேலாயுதத்தை. தகுவர்க்கு இறை - அசுரருக்குத் தலைவனாகிய சூரன். சங்கு உந்திய வேலைப்புடை - சங்குகளைத் தள்ளிய கடலினிடையே. தட மாமரமாகி - விசாலமான மாமர உருவத்தை எடுத்துக்கொண்டு. தடிந்திட்டது - பிளந்தது.

782. சங்கத்தியின் மேனின்றிடு மாவைக்கதிர் வேல்போய்ச்
சாயும்படி செய்திட்டுழி தருவர்க்கிறை கண்டே
துங்கத்தன துருவங்கொடு பொரவேவரை மார்பைத்
துண்ணென்று பிளந்தண்டர்க டுள்ளும்படி தள்ளி
மங்குற்பொலி வானத்துறு கங்கைப்புன லாடி
வந்தேகுமு ரன்பாணி புகுந்தேகதிர் வைவேல்
அங்குற்றது வெஞ்சூர னிரண்டான பிளப்பும்
அடன்மாமயி லொடுகுக்குட மாகிப்பொர வந்தான்.

783. ஆறுந்திய முடிகொண்டவ னதுகண்டசு ரேசன்
அமராடி யிளைக்குஞ்செய லாலங்கவன் மீதே
ஏறுஞ்செயல் போலப்பொலி நீலச்சிகி மேலே
ஏறிக்கொடி தானாக விருஞ்சேவ லுயர்த்தான்
வீறண்டர்கள் கண்டேயறு முகனைப்பர வுற்றார்
வெஞ்சூர்முதல் பட்டானென விட்டாளுயிர் தேவி
ஈறின்றிய வேலைப்புடை மீனாமிர ணியனங்
கிதுகண்டு புலம்பிப்புக ரென்பானை யடைந்தான்.

---

782. சங்கு அத்தியின்மேல் - சங்குகளையுடைய கடலின் மேல். மாவை - மாமரத்தை. சாயும்படி செய்திட்டுழி - விழும்படியாகச் செய்த பொழுது தருவர்க்கிறை - சூரன். தனது உருவம் கொடு - தன் இயல்பான உருவத்தை எடுத்துக்கொண்டு. வரை மார்பை - சூரனது மலை போன்ற மார்பை. அண்டர்கள் துள்ளும்படி - தேவர்கள் மகிழ்ச்சியினால் கூத்தாடும்படி. மங்குல் - மேகம். பாணி - திருக்கரத்தில். அங்கு - அக்கரத்தில். இரண்டு ஆன பிளப்பு - வேலால் பிளக்கபபட்டு இரண்டான துண்டுகள். குக்குடம் - கோழி.

783. ஆறு உந்திய முடி. அமராடி இளைக்கும் செயலால் - போர்புரிந்து தோல்வியுறும் செய்கையால். தோல்வியுற்றார் மேல் வென்றார் ஏறுதல் ஒரு மரபு. பொலி நீலச் சிகிமேலே - விளங்குகின்ற நீல மயிலின் மீதே. இருஞ்சேவலைக் கொடி தான் ஆக உயர்த்தான். சூர் முதல் - சூரனாகிய அசுரர் தலைவன். தேவி உயிர்விட்டாள - சூரன் தேவியாகிய பதுமகோமளை உயிரை நீத்தாள். மீன் ஆம் இரணியன் - மீனாக இருந்த இரணியன். புகர் என்பானை - சுக்கிரனை.

இரணியன் - சூரபன்மன் தம்பி ; யாவரும் இறந்தால் அவர்களுக்கு ஈமக்கடன் புரிய ஒருவன் வேண்டுமென்று கருதி மீனாகிக் கடலில் இருந்தவன் ; 604-ஆம் செய்யுளைப் பார்க்க.

784. அனைவர்க்கு மவற்கொண்டு சடங்கானது செய்தான்
அறுமாமுக னடல்வாகுவை யருளோடு தெரிந்தே
மனமுற்றிடு துயரத்தொடு சிறையின்புடை வாழும்
மகவான்மகன் முதலாகிய வானோர்களை நந்தம்
முனமுய்க்குதி யெனமுன்புற வுய்த்தானவர் தொழுதே
மொய்த்தார்மிகு சூரூரினை முந்நீர்கொள நல்கிச்
சினமெத்திய பூதப்படை விண்ணோர்புடை சூழச்
செந்திற்பதி வந்தானருள் சிந்தித்திடு கந்தன். ௩௩௧

ஐந்தாவது
தேவ காண்டம்

(வேறு)

785. வண்மை தங்கு மயூர மிழிந்தே
மந்தி ரத்திடை வந்து புகுந்தே
திண்மை தங்கு மடங்க லணைக்கண்
தேவ ரஞ்சலி செய்ய விருந்தான்

---

784. அவன் கொண்டு - இரணியனைக் கொண்டு. சடங்கானது - ஈமக்கடன்களை. அடல்வாகுவை - வீரவாகுதேவரை. மகவான் மகன் - இந்திரன் மகனாகிய சயந்தன். உய்க்குதி - அழைத்துவந்து விடுக. மொய்த்தார் - முருகக்கடவுளைச் சூழ்ந்தார்கள். சூர் ஊரினை - மகேந்திரபுரியை. முந்நீர்கொள நல்கி - கடல் கொள்ளும்படி வழங்கியருளி. சினம் மெத்திய - கோபம் மிக்க. பூதப்படையும் விண்ணோரும் சூழ. அருள் சிந்தித்திடு கந்தன் - எப்போதும் ஆன்மாக்கள் உய்யும்படி அருளுதலையே திருவுள்ளத்தில் நினைந்துகொண்டிருக்கும் முருகக்கடவுள்.

785. மயூரம் இழிந்தே - மயில் வாகனத்திலிருந்து இறங்கி. மந்திரத்திடை - திருக்கோயிலுக்குள். மடங்கல் அணைக்கண் - சிங்காதனத்தின்மீது. அஞ்சலி செய்ய - கும்பிட. விண் மை தங்கு துணங்கு அறல் கொள்ள - ஆகாயத்தில் கருமை நிறைந்து கலந்த இருள் வர. திரை வேலையினூடே - அலைகளையுடைய மேல் கடலுக்குள். வெய்யோன் - சூரியன். படிவுற்று - அமிழ்ந்து.

விண்மை தங்கு துணங்கறல் கொள்ள
வெள்ளை வண்டிரை வேலையி னூடே
ஒண்மை தங்கு கனற்கதிர் வெய்யோன்
ஒய்யெ னப்படி யுற்று மறைந்தான். க

786. ஆசை கொண்டெய ரண்டர்க ளெல்லாம்
ஆறு மாமுக வண்ணன் மலர்த்தாள்
பூசை செய்து பராவினர் நிற்பப்
பொற்பு லாவு புகழ்த்தனி வேலோன்
நேச முற்றம ரர்க்கருள் செய்தான்
நீடு கங்கு னெடுந்திறல் வெஞ்சூர்
மாச றும்படி மாய்வுற வேல்போல்
வந்தெ ழுந்தனன் வண்மை யருக்கன். உ

787. மற்றவ் வேலையில் வேலையில் வேலை
வல்லை யேவிய வண்கும ரேசன்
புற்ற ராவின நண்ணிய சென்னிப்
புண்ணி யன்கழல் பூசை புரிந்தே
வெற்றி மஞ்ஞையின் மீது புகுந்தே
வீறு பூதர் மிடைந்தயல் சூழ
அற்ற மற்ற வெழில்கொள் பரங்குன்
றத்தின் மேவின னண்டர் வழுத்த. ௩

788. அண்டர் கம்மிய னன்ன வரைப்பால்
ஆல யத்துட னுடக மாடம்
கொண்ட வீதி யிமைப்பி லமைப்பக்
கோல மஞ்ஞையி னின்று மகன்றே

---

786. பராவினர் - தோத்திரம் செய்து. பொற்பு - பெருமை. கங்குல் - இரவு அது சூரனைப்போல மடிய, சூரியன் வேலைப்போல உதயமானான். அருக்கன் - சூரியன்.

787. அவ்வேலையில் - அப்போது. வேலையில் வேலை - கடலில் வேலாயுதத்தை. புற்று அரா இனம் - புற்றில் வாழும் பாம்புக்கூட்டங்கள்; இறைவன் அணிந்த நாகங்கள் புற்றில் வாழ்வன அல்லவாதலின், இது சாதிபற்றி வந்த அடை. புண்ணியன் - சிவபெருமான். மிடைந்து - நெருங்கி. அற்றம் - இறுதி. அண்டர் - தேவர்.

மண்டு சுந்தர மந்திர முற்றே
வண்மை கொண்ட மடங்க லணைக்கண்
எண்ட விர்ந்த வுயிர்க்குயி ராகி
இருக்கு நாத னிருந்தனன் மன்னோ. ௪

789. துன்னு வானவர் தம்மை விடுத்தே
துங்க வீரர் சுலாவ விருப்ப
அன்ன போது பராசர னல்கும்
ஆறு மைந்தரு மாறு முகேசன்
பொன்னு லாவிய புண்டரி கத்தாள்
பூசை செய்து புகழ்ந்திட லோடும்
நன்ன லம்பெற வன்னவர் தம்பால்
ஞான போதக நல்கி யிருந்தான். ௫

790. ஈது நின்றிட விண்ணவ ரண்ணல்
இன்ப முற்ற வெழிற்றெய்வ யானை
மாதெ னுந்தன தொண்மக டன்னை
மன்னி ருந்திறல் வண்குும ரேசற்
காத ரத்தொடு நல்குவ னென்றே
ஆழி மாலொடு மம்புய னோடும்
ஓதி னனவர் நன்றிது நன்றிங்
கொல்லை செய்குதி யென்ன வுரைத்தார். ௬

788. அண்டர் கம்மியன் - தேவதச்சனாகிய விசுவகர்மா. அன்ன வரைப்பால் - அந்த மலையினிடத்தில். ஆடகமாடம் - பொன் மாளிகை. இமைப்பில் - இமைப்பொழுதில். சுந்தர மந்திரம் - அழகிய ஆலயத்தை. மடங்கலணை - சிங்காதனம். நாதன் - முருகக்கடவுள்.

789. சுலாவ - சூழ. புண்டரிகத் தாள் - தாமரை மலரைப் போன்ற திருவடிகளை. ஞான போதகம் நல்கி - ஞான உபதேசம் வழங்கி.

790. விண்ணவர் அண்ணல் - இந்திரன். ஆதரத்தொடு - அன்போடு. ஆழி - சக்கரப்படையை யுடைய; திருப்பாற்கடலில் எழுந்தருளிய எனலும் ஆம். அம்புயன் - பிரமதேவன். ஒல்லை - விரைவில்.

791. உம்பர் மன்னவ னுள்ள முவந்தோர்
ஒற்றன் மாமுக மொல்லை தெரிந்தே
செம்பொன் மால்வரை மீது பொருந்தென்
தேவி தன்னொடு சீர்மக டன்னை
இம்பர் நீகொடு வாவென வோத
ஏகி யின்ன திசைத்திட வன்னோர்
கும்ப மாமத வாரண மேறிக்
குன்று ருப்பரங் குன்ற மடைந்தார். எ

792. இந்தி ரன்ற னிருக்கையின் மாதோ
டிந்தி ராணி யிருந்தன ளங்கண்
உந்து சீருள சூரன தூரில்
உற்றி டுஞ்சிறை யற்றிடு மாதர்
வந்தி றைஞ்சவு வந்தருள் செய்தே
மைந்த னைத்தழு வுற்று மகிழ்ந்தாள்
அந்த வேலை வரைச்சிறை கொய்தோன்
ஆறு மாமுக னுலைய முற்றான். அ

793. சென்னி யாறுள தேவ னளித்த
சென்னி யாறுள தேவை வணங்கி
என்னை யாளுடை நாயக நீயிங்
கின்ன குன்றிடை யென்றிரு மாதை

---

791. தெரிந்து - பார்த்து. செம்பொன் மால் வரை - மேருமலை. என் தேவி என்றது இந்திராணியை. மகள் - தெய்வயானை. இம்பர் - இவ்வுலகத்துக்கு. ஏகி - ஒற்றர்கள் போய். கும்பம் - மத்தகம். மத வாரணமென்றது இங்கே வெள்ளை யானையை.

792. சூரனதூரில் - மகேந்திரபுரியில். மாதர் - தேவமகளிர். இறைஞ்சவும் - இந்திராணியை வணங்கவே. மைந்தனை - சயந்தனை. வரைச் சிறை கொய்தோன் - மலைகளின் சிறகை அறுத்த இந்திரன்.

793. சிரத்தின் கண்ணே கங்கா நதியையுடைய மகாதேவரால் பெறப்பட்ட ஆறு திருச்சிரங்களையுடைய முருகக்கடவுளை. மன்ன - நிலையாக. மன்றல் - திருமணம். அன்ன பான்மை இயற்றுதும் - அப்படியே திருமணம் செய்து கொள்கிறோம் அண்டர் அண்ணல் - இந்திரன்.

மன்ன மன்றல் புரிந்தரு ளென்ன
வாகை வேலுள மன்னவ ஞளே
அன்ன பான்மை யியற்றுது மென்ன
அண்ட ரண்ண லகத்துண் மகிழ்ந்தான். ௯

794. *அற்ற மற்ற மகிழ்ச்சி யடைந்தே*
ஆல யத்தி னகன்கடை வந்தே
கொற்ற வொற்றர் முகங்க டெரிந்தே
கோதி லாமுசு குந்தனு மல்லா
வெற்றி மன்னரு மும்பரு மிங்ஙன்
மேவு மாறு விளங்கிய வைவேல்
நற்றி றற்றிரு நாயகன் மன்றல்
நாளை யென்று நவின்றிடு மென்றான். ௧௦

795. *எண்ணி லொற்றர் விரைந்து படர்ந்தார்*
ஈது நிற்க வெழிற்குலி சக்கைக்
கண்ணொ ராயிர விண்ணிறை தெய்வக்
கம்மி யற்கொடு கந்த முலாவும்
வண்ண நீப நெடுந்தொடை மார்பன்
மன்றல் செய்திட மண்டப மன்றம்
விண்ணு லாவிய சோலைக ளெல்லாம்
வீறொ டும்புரி வித்தன னன்றே. ௧௧

796. *மிக்க வின்னது நின்றிட முன்னம்*
வெள்ளி விண்டுவில் விண்டொடு காவில்
இக்கு வேளை யெரித்த நுகற்கண்
எம்பி ரானுமை யோடு மிருப்ப

---

794. அற்றம் அற்ற - முடிவில்லாத. கடை - வாசலில். முசுகுந்தனும் வேறு அரசர்களும் தேவர்களும் இங்கே வரும்படி. மன்றல் - திருமணம். மேவுமாறு நவின்றிடும்.

795. குலிசம் - வச்சிராயுதம். விண் இறை - இந்திரன். தெய்வக் கம்மியன் - விசுவகர்மா. கந்தம் - நறுமணம். நீப நெடுந்தொடை - கடம்பமலர் மாலை. மண்டபமும் மன்றமும் சோலைகளும்.

அக்க ணத்தின் முசுக்கலை யொன்றங்
காதி மீதினு மாரியை மீதும்
தக்க வில்லுவ நல்லிலை சிந்தத்
தையல் சீறலு மையன் விலக்கி. கஉ

797. கூவி ளத்தழை கொண்டெமை யிங்ஙன்
கோதில் பூசை குயிற்றிய பண்பால்
நீவ ளந்திட வேலை சுலாவும்
நீள்பு விக்கர சாகுதி யென்றே
மாவ ளக்கை யிடத்த னிசைப்ப
வைய கத்திடை வந்து பிறந்தே
காவ ளத்த வயற்கரு வூர்வாழ்
காமர் சேர்முசு குந்த னிடத்தின். கரு

798. மேக வாகன னொற்றர் படர்ந்தே
வென்றி வேலவன் மன்றல் விளம்ப
ஓகை யெய்தி யெழுந்தனி கத்தோ
டும்பர் நாத னுறங்கிரி யுற்றான்

---

796. வெள்ளி விண்டுவில் - வெள்ளி மலையில். விண் தொடு காவில் - ஆகாயத்தை அளாவிய சோலையில். இக்கு வேளை - கருப்பு வில்லையுடைய மன்மதனை. முசுக்கலை - ஆண் குரங்கு. ஆதி மீதினும் - சிவபிரான் மேலும். ஆரியை - அம்பிகை. வில்லுவ நல் இலை - வில்வ மரத்தின் இலைகளை. தையல் - உமாதேவியார். ஐயன் - சிவபிரான்.

797. கூவிளத் தழை - வில்வபத்திரம். குயிற்றிய - செய்த. நீ என்றது அந்தக் குரங்கை நோக்கிச் சொன்னது. வேலை சுலாவும் - கடல் சூழ்ந்த. அரசு ஆகுதி - அரசன் ஆவாயாக. மா வளக்கை இடத்தன் - உமாதேவியாரை வாமபாகத்தில் உடைய சிவபிரான். கா வளத்த - சோலைகள் சூழ்ந்த. காமர் - விருப்பம்; அழகுமாம். அந்தக் குரங்கு முசுகுந்தனைப் பிறந்தது. என்றே இசைப்பப் பிறந்து வாழ் முசுகுந்தன் என்க.

798. மேகவாகனன் - இந்திரன். ஓகை - மகிழ்ச்சி. அனிகத்தோடு - படையோடு. உம்பர்நாதன் - இந்திரன். கிரி - பரங்குன்றம். சீகரம் செறி சாகரம் மண்ணில் - துளிகள் நிறைந்த கடல் சூழ்ந்த

சீக ரஞ்செறி சாகர மண்ணிற்
சேரு மன்னவர் யாரு மடைந்தார்
மாக நேரிடை மாதர்கண் மைந்தர்
வாவி காவி லுலாவி மகிழ்ந்தார். கஅ

799. ஆன காலையி லார்கலி யூடே
ஆழி யொன்றுள வாடக வையப்
பானு மூழ்கினன் வந்தது கங்குல்
பங்க மற்ற பரங்கிரி மீதே
வேனில் வேண்முரசு குந்தனு மல்லா
வீறு மன்னரு மேறுபு வேள்விக்
கோனை வந்தனை செய்திட வன்னோன்
கோதி லாமுக மன்கள் புகன்றான். கரு

800. அன்ன போதினி லாதவ னோதி
அண்டர் மாதவ ராரு மடைந்தார்
மன்னு வேல்விழி மங்கைய ரெல்லாம்
வார ணத்திரு மாதை யடைந்தே
பொன்னு லாமணி செய்தன ரன்ன
போது கோபதி போதினன் மாயோன்
மின்னு வேலவ னாலய முற்றே
மிக்க வன்பொடு முன்பு வணங்கி. கசா

பூவுலகத்தில். மாகம் நேர் இடை - ஆகாயத்தை ஒத்த உருத்தெரியாத இடையை உடைய. வாவியிலும் காவிலும்; வாவி - பொய்கை.

799. ஆர்கலி - கடல். ஆழி ஒன்றுள - ஒற்றைச் சக்கரத்தைக் கொண்ட. ஆடக வையப்பானு - பொற்றேரையுடைய சூரியன். கங்குல் வந்தது. வேனில் வேள் - மன்மதனைப்போன்ற. ஏறுபு - ஏறி. வேள்விக் கோனை - இந்திரனை. முகமன்கள் - உபசார வார்த்தைகள்.

800. ஆதவன் - சூரியன். மாதவர் - முனிவர்கள். வாரணத் திருமாதை - தெய்வயானையை. பொன் உலாம் அணி செய்தனர் - பொன்னாலாகிய ஆபரணங்களை அணிந்தார்கள். கோபதி - வானத்து அரசன்; இந்திரன. போதினன - பிரமதேவன்.

801. வார ணத்திரு மாமக டன்னை
மன்றல் செய்திட வந்தரு ளென்ன
ஆர ணப்பொரு ளாகிய புத்தேள்
அங்கெ ழுந்து மயூர மடைந்தே
தோர ணத்திரு வீதி புகுந்தே
துன்று வானவர் தூமலர் தூவப்
பூர ணக்கவின் மாதர் நடிப்பப்
பொங்கு பல்லிய மெங்கு முழங்க. கஎ

802. இன்ன போல வளங்கள் விளங்க
எம்பி ரானினி தேகி மணஞ்செய்
கொன்னு லாவிய சாலைமு னீலக்
குன்ற மஞ்ஞையி னின்று மகன்றான்
அன்ன போது புலோமசை பால்கொண்
டண்ண றாளை விளக்கி யகன்றாள்
மன்னு வேலவன் மன்ற னிலம்போய்
வாள ரித்தவி சுற்றனன் மன்னோ. கஅ

803. வேல னேவலின் மால்முதல் விண்ணோர்
வீறு தங்க விருப்ப விருப்பக்
கோல மாமுசு குந்தனு மற்றைக்
கொற்ற வானவ ருங்கும ரேசன்

---

801. வாரணத் திருமாமகள் - தெய்வயானை ஆரணப்பொருள் - வேதத்தினுற் குறிக்கப்பெறும் பொருள். புத்தேள் - கடவுள்; முருகவேள். மயூரம் - மயில் வாகனத்தை. பூரணக்கவின் - முற்றிய அழகையுடைய. பல்லியம் - பல வாத்தியங்கள்.

802. மணம் செய் சாலைமுன் - கல்யாணக் கூடத்திற்கு முன்பு. நீலக் குன்ற மஞ்ஞை - நீல மலைபோன்ற மயில். புலோமசை பால் கொண்டு அண்ணல் தாளை விளக்கி - இந்திராணி பாலைக்கொண்டு முருகவேளின் திருவடிகளை விளக்கி; இது மணமகனுக்குச் செய்வது மரபு. மன்றல் நிலம் - கல்யாண மண்டபம். வாள் அரித்தவிசு - சிங்காதனத்தில்.

803. பாரிடங்கள் - பூதங்கள். பரிந்து - அன்புகொண்டு. ஆலமுண்ட மிடற்றினன் - சிவபிரான். மாதோடு - உமாதேவியாரோடு. அந்தரத்திடை - ஆகாசத்தின் வழியே.

பாலடைந்து பணிந்தன ரங்கண்
  பாரி டங்கள் பரிந்தயல் சூழ
ஆல முண்ட மிடற்றினன் மாதோ
  டந்த ரத்திடை வந்தன னம்மா. ௧௯

804. மங்கை தன்னொடு மான மிழிந்தே
  மன்ற லெல்லையில் வந்திட வென்றி
தங்கு வேலன் மகிழ்ந்தெதிர் சென்றே
  தந்தை தன்னொடு தாயை வணங்க
உங்கெ டுத்தனர் புல்லின ரன்போ
  டுச்சி மோந்தனர் மான்முத லும்பர்
மங்குல் கண்ட மயூரம தென்ன
  வந்து வந்து வணங்கி மகிழ்ந்தார். ௨௦

805. பூம ணம்புரி சாலையுள் வேலன்
  பூவை யோடிறை வற்கொடு போக
மாம லிந்த வரித்தவி சொன்று
  வள்ள லாணையின் வந்தவண் மேவக்
காமர் கொண்ட வதன்க ணிருந்தே
  கந்த னைத்தம கைகொ டெடுத்தே
தூம ருங்கி லிருத்தினர் வேதன்
  சூர்ம டிந்தது முற்று முரைத்தான். ௨௧

---

804. மானம் இழிநதே - விமானத்தினின்றும் இறங்கி. மன்றல் எல்லையில் - விவாகசாலையில். உங்கு - அங்கே. மால்முதல் - திருமால் முதலிய. மங்குல் கண்ட மயூரமது என்ன - மேகத்தைக் கண்ட மயில் களைப்போல.

805. பூ-பொலிவு. பூவையோடு - உமாதேவியாரோடு. இறை[illegible] சிவபிரானை. மா மலிந்த - பெருமை மிக்க. அரித்தவிசு - சிங்காதனம். வள்ளல் ஆணையின் - சிவபிரானது கட்டளையினால். தூ மருங்கில் - பரிசுத்தமான தம் பக்கத்தில். வேதன் - பிரமன். உரைத்தான் - சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் கூறினான்.

806. எந்தை யன்னை விறுவி மகிழ்ந்தே
இங்கு மன்ற லியற்றுக வென்ன
அந்த ரத்திறை யேகி மகட்கொண்
டங்கண் வந்திட வந்த மடந்தை
நந்தி யோடுமை யாளை வணங்க
நாரி முற்படு நற்றவி சின்கண்
கந்த னோடவ டன்னை யிருத்தக்
கண்டு கண்கள் களித்தனர் யாரும். ௨௨

807. கற்பெ ருஞ்சிறை கொய்தவ னங்கண்
கன்ன லொண்புனல் பன்னி விடுப்பப்
பொற்பு வேலிறை தாள்கள் விளக்கிப்
பூசை செய்து புராரி குமாரன்
நற்க ரத்து மடந்தையை நல்கி
நல்கி னேனென நார முகுப்ப
அற்கன் மான விளங்கிய செவ்வேள்
அங்கை தன்னிடை யங்கது கொண்டான். ௨௩

808. அண்டர் போற்றய னங்கு விதித்த
ஆசின் மங்கல நாணினை யன்னாள்
கண்ட மீது தரித்தள கத்தோர்
கந்த நீடு கவின்றொடை சூடா

---

806. எந்தை அன்னை - சிவபிரானும் உமாதேவியாரும். மன்றல் - திருமணத்தை. அந்தரத்து இறை - இந்திரன். நந்தியோடு - சிவபெருமானோடு. நாரி - உமாதேவியார். அவள் தன்னை - தேவயானையை.

807. கற்பெருஞ்சிறை கொய்தவன் - மலைகளின் சிறகை அரிந்த இந்திரன். கன்னல் ஒண் புனல் - கரகத்தினின்றும் வரும் நீரை. பன்னி விடுப்ப - தன் மனைவியாகிய இந்திராணி வார்க்க. வேல் இறை - வேலாயுதக் கடவுளுடைய. புராரி குமாரன் - முருகவேளுடைய. நாரம் உகுப்ப - தாரை வார்க்க. அற்கன் = அர்க்கன் - சூரியனை. அது - தாரை நீரை.

808. அண்டர் - தேவர் அயன் - பிரமதேவன். விதித்த - மந்திர விதியோடு அளித்த. ஆசில் மங்கல நாணை - குற்றமற்ற திருமங்கல நாணை. கண்டமீது தரித்து - திருக்கழுத்தில் பூட்டி. அளகத்து

ஒண்டி றற்பெறு வன்னி வலங்கொண்
டும்பன் மாதின தோதிம முட்க
மண்டு சீர்நடை தந்திடு தாளை
வல்லை யிற்சிலை மீமிசை வைத்தான். உச

809. இன்ன தன்மையின் மன்ற லியற்றி
ஈச னோடுமை யாளை வணங்க
நன்ன லம்பெறு பேரருள் செய்தே
நாரி தன்னொடு நாத னகன்றான்
மன்னு வேலவ னங்கொரு வித்தன்
மந்தி ரத்திடை மாதொடு வந்தே
பொன்னி னாடுள வாதியை யாதிப்
போக வானவர் போக வுரைத்தான். உரு

810. விண்ணு லாமிமை யோரை விடுத்தே
வீரர் வாயிலின் மேவ விருத்தி
எண்ணி லாவெழில் கொண்ட விருக்கை
எம்பி ராட்டியொ டெய்தி யதன்கண்
தண்ணி லாவிய மஞ்ச மணைந்தே
தைய றன்னொடு தன்னிகர் பெம்மான்
உண்ணி லாவு விருப்பொடு வையம்
உய்ய நற்கல வித்தொழி லுற்றான். உசா

ஓர் கந்தம் நீடு கவின் தொடை சூடா - கூந்தலில் மணம் பரவிய அழகிய மாலை ஒன்றை அணிந்து. வன்னி வலம் கொண்டு - அக்கினியை வலமாக வந்து. உம்பல்மாதினது தாளை - தேவயானையின் திருவடியை. ஓதிமம் உட்க - அன்னம் அஞ்ச. சிலைமீமிசை - அம்மிமீது.

809. மன்றல் இயற்றி - திருமணம் புரிந்து. நாரி - உமாதேவியார். நாதன் - சிவபிரான். அங்கு ஒருவி - அவ்விடத்தை அகன்று. மந்திரத்திடை - திருக்கோயிலில். மாதொடு - தேவயானையோடு. பொன்னின் நாடுள ஆதி ஆதி - சுவர்க்கலோகாதிபதியாகிய இந்திரன் முதலிய. போகவானவர் - சுவர்க்க போகத்தை உடைய தேவர். போக - தம் இருப்பிடங்களுக்குப் போகும்படியாக.

810. இமையோரை - தேவர்களை. வீரர்களை வாயிலில் காவலாக இருக்கும்படி செய்து. எழில்கொண்ட இருக்கை - அழகு பெற்ற கடிமண இல்லத்தில். மஞ்சம் - அணை.

(கலிவிருத்தம்)

811. தாவி லும்பர்க டத்த மிருக்கையின்
மேவி னாடல் வேன்முசு குந்தனும்
ஓவின் மன்னரு முந்தணி கத்தொடு
பூவி லுள்ள புரங்களிற் போயினார். உஎ

812. மன்னு வெற்பில் வரையகல் வைகலெம்
அன்னை யோடு மமல னமர்ந்தரோ
பின்ன ரோர்பகற் பீடுவிண் ணோர்தொழக்
கொன்னு லாமக் குவட்டினை நீங்கினான். உஅ

813. தவள நித்திலச் சங்க முலாவிய
உவள கப்பரங் குன்றை யொருவியே
பவள வார்சடைப் பண்ணவன் மைந்தனும்
துவள மேவு துறக்க மடைந்தனன். உகூ

814. அன்ன காலை யமரர்கள் கம்மியன்
தன்னை யின்ன தலத்திடை முன்புபோல்
நன்ன லங்கொ ணகர்புரி வாயெனத்
தொன்மை போலத் துறக்க மியற்றினான். ௩௦

---

811. தா இல் - கேடில்லாத. ஓ இல்-நீங்குதல் இல்லாத. அணி கத்தோடு - படையோடு. புரங்களில் - நகரங்களுக்கு.

812. வெற்பில் - திருப்பரங்குன்றில்' வரை அகல் வைகல் - கணக்கற்ற நாட்கள். எம் அன்னையோடும் - தேவயானையம்மையாரோடும். அமலன் - முருகவேள். அக்குவட்டினை - அந்த மலையை.

813. தவள நித்திலச் சங்கம் - வெள்ளிய முத்துக்களை ஈனும் சங்குகள். உவளகம் - பொய்கை. ஒருவியே - நீங்கி. பவளம்போன்ற நீண்ட சடையையுடைய கடவுள்; சிவபிரான். துவளம் மேவு துறக்கம் - வாட்டத்தை அடைந்திருக்கும் சுவர்க்க லோகத்தை; சூரன் முதலியவர்களால் அடைந்த வாட்டம்.

814. அமரர்கள் கம்மியன் - விசுவகர்மா. என - என்று முருகவேள் ஏவ. துறக்கம் - சுவர்க்கலோகத்தை.

815. அந்த நாகத் தரசு புரிந்திட
இந்தி ரற்கங் கெழின்முடி சூடுவித்
தந்தி வான்மதி யானன மாதொடும்
எந்தை யங்ங னிருந்தன னெண்ணினுள். ௫௧

816. தேனு லாந்தொடைத் தேர்மிசை யேறியே
வான மேன்மக வானை யிருத்தியே
சேனை வீரருந் தேவியுந் தானுமாய்க்
கான மேவு கயிலையின் மேவினான். ௫௨

817. மங்கை யீசன் மகிழப் பணிந்தெழுந்
தங்க ணின்று மருள்விடை கொண்டுசீர்
பொங்கு கந்தப் பொருப்பினின் மேவினான்
துங்க வீரருந் தொன்மையின் வைகினார். ௫௩

818. இன்ன பான்மை யிருந்திட வும்பர்கோன்
பொன்னி னாடு புரந்தர சாற்றுழி
மன்னின் மின்னிகர் வாழ்க்கை துறந்திடாத்
தன்னை நேர்கதி சார்ந்திட வெண்ணினான். ௫௪

819. துறக்க வேந்த றுறக்க நினைந்ததைச்
சிறக்கு மும்பர்க டேசிக ரோர்ந்துவந்

---

815. நாகத்து - தேவலோகத்தில். அந்தி வால்மதி ஆனனம் மாதொடும் - மாலையில் தோன்றும் தூய சந்திரனைப்போன்ற திருமுகத்தையுடைய தேவயானையோடும். எண் இல் நாள் இருந்தனன்.

816. தொடை - மாலை. வானமேல் - தேவலோகத்தில். மகவானை - இந்திரனை. கானம் - சோலை; பாட்டுமாம்.

817. மங்கையும் ஈசனும் மகிழும்படி. கந்தப் பொருப்பினில் - முருகக்கடவுளுக்குரிய கந்தகிரியில். தொன்மையின் - பழமையைப் போல.

818. உம்பர்கோன் - இந்திரன். புரந்து - பாதுகாத்து. அரசு ஆற்றுழி - அரசாட்சி செய்யும் காலத்தில். மன் இல் - நிலையில்லாத. மின் நிகர் வாழ்க்கை - மின்னைப்போன்ற போக வாழ்வை. தன்னை நேர் கதி - முத்தி.

தறக்க ருத்துல காயத மாமதத்
துறத் திருப்பின னூழ்வினை போலவே. ௫௫

(எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

820. அன்னவ னுரைத்த பொய்யைமெய் யெனக்கொண்
டறிவிலா மகபதி சயந்தன்
தன்வச மாக வரசினை நிறுவிச்
சசியொடு கலந்துவீற் றிருப்ப
மன்னர சியற்றுஞ் சயந்தனங் கொருநாள்
வானவர் குருவினை நோக்கி
இன்னநா ளளவுஞ் சூரனுன் மெலிந்த
தென்கொல்யா மெனவவ னிசைப்பான். ௫௬

ஆறுவது

தக்ஷ காண்டம்

821. முன்பொரு பகலி லிமையவர் பரவ
முளரியந் தவிசிடை முதல்வன்
இன்புற விளங்குஞ் சத்திய வுலகத்
திருந்தன னிருந்திடு மேல்வைக்

---

819. துறக்க வேந்தல் - இந்திரன். உம்பர்கள் தேசிகன் - பிருகஸ்பதி. ஓர்ந்து - நினைந்து. அற கருத்து - முழு மனமும். உல காயதமாம் மதத்து உற. ஊழ்வினை மதியைத் திருப்புவதுபோலத் திருப்பினுன்.

820. அன்னவன் - பிருகஸ்பதி. மகபதி - இந்திரன். இந்திரன் சயந்தனிடம் அரசாட்சியை ஒப்பித்து இந்திராணியோடு அளவளாவி இன்புற்றிருந்தான்.

821. ஒரு பகலில் - ஒரு நாளில். முளரி யம் தவிசிடை முதல் வன் - பிரமதேவன். சத்தியவுலகம் - பிரமலோகம். எல்லை - சமயத்தில். அனையான் தனையர் - பிரமபுத்திரர்கள். வாணி - கலைமகள். புயத்தோன் - பிரமன். வினவும் - கேட்கலானுன்.

கொன்பொலி யனையான் றனையரோர் பதின்மர்
குழுவினிற் றக்கனுங் குரிசில்
மின்பொலி நுசுப்பு வாணிசேர் புயத்தோன்
வியன்முக நோக்கியே வினவும். க

822. மொய்வளா ரமரர்க் கிறையவ னாகி
மூவரி லுயர்ந்தவ னாகி
எவ்வகை யுயிர்க்கு முயிரென விருக்கும்
இயல்பினோன் யாவனென் றிசைப்ப
மைவள ருருவக் குரிசிலும் யானும்
மாறுகொண் டுழியழல் வடிவாய்ச்
செவ்வொளி பரப்பி யெழுந்துவா னிமிர்ந்த
தேவனே யதிகமாந் தேவன். உ

823. என்றய னிசைப்ப வொருதொழில் புரிவான்
இருதொழில் செயுநமக் கிறையாய்
வன்றிறல் படைத்த தென்கொலோ வெனலும்
மைந்தகே ளெங்களைச் சுரரைத்
துன்றுபல் லுயிரை யீற்றின்மாய்த் திடலாற்
றோற்றுவித் தவனவ னன்றோ
அன்றியு மவனே யெங்கள்பா லிருந்தீண்
டளித்தலும் புரத்தலு மருள்வான். ௩

---

822. மைவளர் உருவக்குரிசிலும் - கரிய திருமேனியை உடைய திருமாலும். மாறு கொண்டுழி - நானே பெரியவன் என்று வாதம் செய்தபொழுது. அழல் வடிவாய் - நெருப்புருவமாகி. தேவனே - சிவபிரானே. அதிகம் ஆம் - எல்லாரினும் உயர்வாகிய.

823. ஒரு தொழில் புரிவான - அழித்தலாகிய ஒரு காரியத்தைச் செய்பவன். இறையாய் - தலைவனாய். திறல் - வலிமை. மைந்த - புத்திரனே ; தக்கன் பிரமதேவனுக்குப் புத்திரன். இறுதியின் மாய்ப்பவர் எவரோ அவர்தாமே மீண்டும் உண்டாக்கவேண்டும் ? "அந்த மாதி என்மனார் புலவர்" (**சிவஞானபோதம்.**) அளித்தலும் புரத்தலும் - சிருட்டித்தலையும் காத்தலையும்.

824. எம்மொடு மொருவ னாகியோர் கிரியை
இயற்றுவான் போலவு மியற்றும்
பொம்மல தடைந்த வுயிர்தொறு மலரிற்
பொருந்திய விரையெனப் பொருந்தும்
செம்மைகொ ளவனே மறைமுதற் கலைகள்
தெரிந்தெமக் குணர்த்தலாற் றெளிந்தேம்
மம்மர்கொண் மனத்துப் பேதையா யினையோ
அவனையெம் போலநீ மதித்தாய். ௪

825. எனவிதி புகல வவன்மக னவில்வான்
இறையவ னருளிய மறைகள்
அனைவரு மனைத்தும் பிரமமென் றியம்பிற்
றையவீ தென்கொலென் றறையத்
தினகரச் செழுங்கட் பகவனைப் புகழ்தல்
திண்ணமற் றவையெலா முகமன்
கனைகடற் புவியந் தணரையா னெனவே
கழறுதல் போலநீ காண்டி. ௫

826. ஆதலா லவனே பதியெனுங் கடவுள்
அருந்தளை பொருந்திய வணுநாம்
காதலா லவன தருள்பெறு மடியார்
கருதின்வா ராததொன் றில்லை

---

824. கிரியை - தொழில். பொம்மலது - வளப்பத்தை. விரையென - மணத்தைப்போல. மறைமுதல் கலைகள் தெரிந்து உணர்த்தலால் - வேதம் முதலிய சாத்திரங்களை இவருக்கு இது தகுமென்று ஆராய்ந்து தெளிவித்தலால் மம்மர் - மயக்கம்.

825. விதி - பிரமன். அவன மகன் - தக்கன். யாவரையும் எப்பொருளையும் வேதங்கள் பிரமமென்று சொல்லும். இந்த முரண் பாட்டுக்குக் காரணம் யாது? தினகரச் செழுங்கண் பகவனை - சூரியனைக் கண்ணாகவுடைய சிவபிரானை. திண்ணம் - உண்மை. முகமன் - உபசார வழக்கு. அந்தணரை யான் எனவே கழறுதல்போல - பிராம ணர்களை யானென்று (பிரமதேவனென்று) உபசாரமாகச் சொல்வது போல.

826. பதி எனும் கடவுள் - மேலாந் தலைவன் என்பதற்குரிய தெய்வம். தளை - பாசம். அணு - உயிர். சூது அனைய முலையும்

சூதலா லனைய முலைகுழ லகட்டுத்
தோகையோர் மருங்கினிற் றுலங்கும்
கோதிலா வரனை யடைதிநீ யென்றான்
குளிர்மலர்ப் பொருட்டில்வாழ் குரிசில். ௬

827. அல்லிமா மலர்மே லிருந்தவன் மொழிந்த
அமுதவா சகஞ்செவி புகுதச்
செல்லுறழ் மிடற்றோ னிறையென வெவர்க்கும்
தெளிந்துமா னதத்தடத் தடைந்து
மல்லல்பெற் றிடுவான் பரமனைக் கருதி
வருடமா யிரந்தவம் புரிய
வில்லன புருவத் துமையொடும் விடைமேல்
மேவினு னிணையிலா விமலன். ௭

828. அன்னது தெரிந்து தக்கனெம் மடிகள்
அடிகளை வணங்கிநின் றேத்த
உன்னது கருத்தி லருத்தியே தனைய
துரைத்தியென் றுரைத்திட வுரைப்பான்
மன்னுமார் கலிசூ ழுலகும்வா னுலகும்
மலரய னுலகுமா லுலகும்
என்னதா ணையினின் றிடவுநிற் புகழ்வோர்
எவரும்வந் தெனைப்புகழ்ந் திடவும். ௮

அல் அனைய குழலும் ஆல் அனைய அகடும் உடைய தோகை ; உமாதேவியார் ; சூது - சூதாடுங் காய்கள் ; அகடு - வயிறு. மருங்கினில் - வாமபாகத்தில். மலர்ப்பொருட்டில் - தாமரைக்கொட்டையில். குரிசில் - பிரமன்.

827. அல்லி - அகவிதழ்களையுடைய. அமுதவாசகம் - அமுதம் போன்ற இனிய வார்த்தைகள். செல் உறழ் மிடற்றோன் - மேகத்தை ஒத்த நீலகண்டப்பெருமான். எவர்க்கும் இறை என. மானதத் தடத்து - மானஸ ஸரஸை. மல்லல் - வளம். விமலன் - சிவபிரான்.

828. எம் அடிகள் அடிகளை - எம்முடைய சுவாமியான சிவபெருமானுடைய திருவடிகளை. அருத்தி எது - விருப்பம் யாது ?. ஆர் கலி - கடல். மலரயன் உலகும் - பிரமலோகமும். நிற்புகழ்வோர் எவரும் - உன்னைத் துதிப்பவர்கள் யாவரும்.

829. எந்தைநின் னிடத்தி லிருந்திடு முமையாள்
எனதுமா மகளென வரவும்
அந்தணன் வடிவா யணைந்துநீ மணஞ்செய்
தருளவும் வேண்டுமென் றறையக்
கந்தரங் கடுத்த கந்தரக் கடவுள்
கருணையா லிவையளித் தொளித்தான்
உந்துசீர் படைத்த சிறுவிதி மனத்தில்
ஓதிம வூர்தியை நினைத்தான். கூ

830. அன்னவா கனத்தோ னன்னவா றறிந்தாங்
கடைந்துநின் றாசிக ளறையப்
பொன்னுலாம் புரிசைப் புரியெனக் கிவணீ
புரியெனத் தக்கமா புரியென்
றின்னறீர் பதியொன் றியற்றவங் கதிற்போய்
எழிலரித் தவிசின்மே லிருந்து
தன்னைவா னவர்கோன் முதலினோர் பரவத்
தனியர சாற்றினான் றக்கன். கo

831. மற்றவன் மனைவி யாயினாள் வேத
வல்லியாம் பெயருடை மடந்தை
கற்றைவா ரளகத் தவடனை மலரோன்
காதலன் காதலாற் கலந்து

---

829. உமாதேவியார் என் மகளாக வரவேண்டும். கந்தரம் கடுத்த - மேகத்தை ஒத்த. கந்தரக் கடவுள் - கரிய கழுத்தை உடைய சிவபிரான். சிறுவிதி - தக்ஷப்பிரசாபதி. ஓதிம ஊர்தியை - அன்ன வாகனனாகிய பிரமனை.

830. ஆசிகள் - ஆசீர்வாதங்களை. புரிசைப்புரி - மதிலையுடைய நகரம் ஒன்றை. பதி ஒன்று இயற்ற - ஒரு நகரத்தைப் பிரமதேவன் சிருட்டிக்க. அரித் தவிசின்மேல் - சிங்காதனத்தின்மேல். வானவர் கோன் - இந்திரன்.

831. தக்கன் வேதவல்லியை மணந்து ஆயிரம் குமாரர்களைப் பெற்றான். கற்றை வார் அளகத்தவள் தனை - கற்றையாகிய நீண்ட கூந்தலையுடையவளை. மலரோன் காதலன் - பிரமபுத்திரனாகிய தக்கன். முன் தவந்தனில் - முன்செய்த தவத்தால். பயந்து - பெற்று. முப்

முற்றவந் தனிலா யிரஞ்சிறுரப் பயந்து
முப்புரி நூல்விதி முடித்துக்
குற்றமின் மறையு மனையவர்க் குதவி
இனையன வாசகங் கூறும். கக

832. நீவிர்க ளெவரு முயிர்த்தொகை படைப்பான்
நிமலனை நினைந்துமா னதத்தின்
மேவிநோற் றுளத்தின் விழைந்தது பொருந்தி
மீள்திரா லிவணென விடுப்பப்
பூவில்வண் டினங்க ளிரைக்குமத் தடத்துப்
பொருந்தியாண் டருந்தவம் புரிந்தார்
ஓவில்சீர் படைத்த நாரத னவண்சேர்ந்
துயர்தவ நோக்கியீ துரைப்பான். கஉ

833. மெய்த்தவம் புரிவீ ரேதுகா ரணநீர்
வெஃகிய வியல்பென வினவ
உத்தம முனிகேள் படைப்பது பொருட்டால்
உழந்தன மீதென வுரைப்ப
முத்தியைக் கருதா தவத்தொழில் புரிவான்
முன்னினீர் பவமிதென் றவர்தம்
புத்தியைத் திருப்பி யுண்மைவீ டளித்தான்
பொருவினா ரதனெனும் புகழோன். கங

புரிநூல் விதி - உபநயனம். மறையும் - வேத வித்தையையும். வாசகம் - வார்த்தையை.

832. படைப்பான - சிருட்டி செய்வதற்காக. நிமலனை - சிவபிரானை. மானதத்தின் மேவி - மானஸ வாவியை அடைந்து. நோற்று - தவம்புரிந்து. மீள்திரால் - திரும்பி வருவீர்களாக. இரைக்கும் - முரலும்.

833. வெஃகிய இயல்பு - விரும்பிய இயல்புக்கு. உழந்தனம் - முயன்றோம். அவத்தொழில் புரிவான் - வீணான காரியத்தைச் செய்யும்பொருட்டு. முன்னினீர் - கருதினீர்கள். பவம் இது - இது நீங்கள் செய்த பாவம். உண்மை வீடு - உண்மையான முத்தியை.

834. சேயினோர் கதியிற் புகுந்தவா றுளத்தாற்
சிறுவிதி யறிந்துநோய் செறிந்தாங்
காயிரங் குமரர்ப் பயந்தவர் தமக்கும்
அவர்க்குமுன் னவர்க்குரைத் ததுபோல்
நேயமோ டியம்ப வவருமா னதம்போய்
நிகரிலா வருந்தவம் புரிந்து
தூயநா ரதனுன் முன்புவீ டடைந்த
துணைவர்போ லின்பவீ டடைந்தார். கச

835. ஈதையு மறிந்து வெகுண்டுநா ரதனை
எங்கணுஞ் சுழல்கவென் றிசைத்து
மேதகு புகழ்சேர் தக்கனு ரிருபான்
மேலுமூன் ருகிய வேற்கண்
மாதரை யுதவித் தருமனே முதலாம்
மாதவர்க் களித்திரு பானேழ்
கோதையர் தமையீன் றவரைமா மதிக்குக்
கொடுத்திது சசியொடுங் கூறும். கரு

836. எல்லவ ரிடத்து மருத்தியோர் படித்தாய்
இருத்தியென் றிசைத்தனன் விடுப்ப
வல்லைவாண் மதியக் கடவுள்வா னணுகி
வளரொளி யிரலையே முதலாய்ச்

834. சேயினோர் - நூறு குமாரர்களும். கதியில் - முத்தியில். சிறுவிதி - தக்கன். நோய் - வருத்தம். பின்னும் ஆயிரம் பிள்ளைகளைப் பெற்று முன்னே தன் புத்திரர்களுக்குச் சொன்னதுபோலத் தவம் புரியச் சொன்னான். மானதம் போய் - மானத வாவியை அடைந்து. துணைவர்போல் - சகோதரர்களைப்போல.

835. சுழல்க என்று இசைத்து - திரிவாயாக என்று சாபம் இட்டு. இருபத்து மூன்று பெண்களைப்பெற்றுச் சாபம் இட்டு. இருபத்து மூன்று பெண்களைப் பெற்றுத் தருமன் முதலிய முனிவர்களுக்கு மணம் செய்து அளித்துப் பிறகு இருபத்தேழு பெண்களைப் பெற்றுச் சந்திரனுக்கு மணம்செய்து வழங்கி அவனோடு சொல்லலானான். மதி, சசி - சந்திரன்.

சொல்லிய விருபா னெழுவரா மடவார்
துணைமுலைக் கிரிகண்மேற் றோய்ந்து
மல்லலங் கலவி யாரமு தருந்தி
வாழுநா ளேழ்வினை வலியால். கசு

837. ஆரன்மா தினையு மவடனக் கிளைய
அணிகொண்மா தினையுமே யவாவிற்
சேருதல் புரிந்து துறந்தன னொழிந்த
தேவிமார் தமையவர் சினம்பூத்
தேருலாம் புகழ்தோய் தந்தைமாட் டணுகி
இந்தவா றியம்பலு மனையான்
நேரிலாச் சசிதன் கலையெலாங் கலைய
நிகழ்த்தினன் கொடியசூ ளினையே. கஎ

838. ஐந்துட னொருபான் கலைகளோர் பகற்கொன்
றாகியே யழியவோர் கலையோ
டிந்திரன் புடைபோய் நிகழ்ந்தன விளம்பி
என்செய்கே னிதற்கென விசைப்பச்

836. இருபத்தேழு பெண்களிடத்தும் ஒரேவிதமான அன்புடன் இருக்கவேண்டும் ஓர்படித்தாய் - ஒரே அளவாக. மதியக் கடவுள் - சந்திரன். இரலை - அசுவினி. இருபான் எழுவராம் மடவார் - இருபத்தேழு நக்ஷத்திரங்களாகிய பெண்களை. மல்லல் - பெருமை கலவி யாகிய அரிய அமுதத்தை.

837. ஆரல் மாதினையும் - கார்த்திகையையும். அவள் தனக்கு இளையவள், ரோகிணி. அவாவின் - ஆசையோடு. ஒழிந்த - எஞ்சிய. தேவிமார்தமைத் துறந்தனன். சினம் பூத்து - அந்த இருபத்தைந்து பெண்களும் கோபம்கொண்டு. தந்தை மாட்டு - தக்கன்பால். நேரிலாச் சசி - ஒப்பில்லாத சந்திரன். கலையெலாம் கலைய - கலைகளெல்லாம் போகும்படி. சூள்நிலை - சாபத்தை.

838. தினத்துக்கு ஒன்றாகப் பதினைந்து கலைகள் அழிந்துபோக, ஒற்றைக் கலையோடு இந்திரனிடத்திற் சென்றான். பிரமாவிடம் சொன்னால் அவன் தன் மகனிடம் வேண்டிச் சாபத்தை விடுவிப்பான்

சுந்தரக் கமலத் தயனொடு துரைக்கிற்
சொற்றரு தனயனை யிரந்துன்
வெந்துயர்ப் பெருஞ்சூ ளகற்றுமென் றவன்பால்
விடுத்தனன் குலிசவேல் விடலை. கஅ

839. சீதள கிரணத் தவிர்மதிக் கடவுள்
திசைமுகத் தொருவனைச் சேர்ந்தாங்
கோதின னிகழ்ந்த வுனதுகான் முளைக்கி
துணர்த்திநோ யொழித்தியென் றுரைப்பப்
போதமில் கொடிய னெனதுரை மதியான்
புகலில்வெஞ் சீற்றமே புரியும்
மாதுபா கனைநீ யடைதியென் றறைய
மருவினன் கயிலைமால் வரையில். கசு

840. நந்தியெம் பெருமா னருளினல் விடுப்ப
நாதனை வணங்கிநின் றயன்சேய்
தந்தசூ ளதனன் மெலிந்தன னிதனைத்
தவிர்த்தியென் றுரைத்தலுஞ் சடைமேல்
இந்துவி னழியாக் கலைதனைத் தரித்தே
இதனைநா மணிந்ததா லிதுதான்
நிந்தனை பொருந்த வழிந்திடா திதனின்
நீடுநின் கலையெலாங் கூடும். உ0

என்று அவன் கூறினன். தனயனை - மகனாகிய தக்கனை. சூள் - சாபத்தை. குலிசவேல் விடலை - வச்சிராயுதத்தையுடைய இந்திரன்.

839. சீதளகிரணத்து - குளிர்ந்த கதிர்களையுடைய. அவிர் - விளங்குகின்ற. திசைமுகத்து ஒருவனை - பிரமதேவனை. நிகழ்ந்த ஓதினன். கான்முளைக்கு - புதல்வனாகிய தக்கனுக்கு. நோய் ஒழித்தி - துன்பத்தை நீக்குவாயாக. போதம் இல் கொடியன் - அறிவில்லாத கொடியவன். சீற்றமே புரியும் - கோபிப்பான். மாதுபாகனை - சிவ பிரானை. அறைய - பிரமன் கூற.

840. விடுப்ப - உள்ளே விட. நாதனை - சிவபிரானை. அயன் சேய் - தக்கன். சூள் அதனல் - சாபத்தால். மெலிந்தனன் - வாட்டத்தை அடைந்தேன். இந்துவின் அழியாக் கலைதனைத் தரித்தே - சந்திரனது அழியாத ஒற்றைக் கலையை அணிந்து. இதனின் - இந்த

841. ஐந்துட னொருபான் பகலெலாம் வளரும்
அன்னநாட் பின்னரே சுருங்கும்
இந்தவா றுழுகு மெனவிடை கொடுப்ப
எழின்மதி நிறைந்துவா னெழலும்
சந்தணி நெடுந்தோட் டக்கனீ துணர்ந்து
தனதுரை தடுத்தலாற் பரனைப்
புந்தியின் முனிந்து புலகனு முனிசொல்
புந்தியாற் சினமொரீஇ யிருந்தான். உக

(கலிவிருத்தம்)

842. நின்றிட வினையது நிமலனை திடைசேர்
குன்றென வளரிரு குவிமுலை யுமையாள்
வென்றிய துறுசிறு விதிமக ளெனவே
வன்றவ நிலைமையில் வருசெயன் மொழிவாம். உஉ

843. விண்டொடு கயிலையின் மிசையரி யணைமேல்
அண்டர்க ளழுவெழு மழல்விட மமுதா
உண்டவ னுறைபொழு துமையவள் பணியா
மண்டிய வுனதுமெய் வகைபுக லெனவே. உந

ஒரு கலையால். கலையெலாம் கூடும் - மற்றக் கலைகளெல்லாம் வந்து சேரும்.

841. பதினைந்து நாட்கள் கலைகள் வளரும்; அதன் பிறகு பதினைந்து நாட்கள் தேயும். சந்து - சந்தனம். தனது உரை தடுத்தலால் - தன்னுடைய சாபத்தை மாற்றியதால். பரனை முனிந்து - சிவபிரானைக் கோபித்து. புலகனென்னும் ரிஷி கூறிய அறிவுரையால் கோபம் நீங்கி இருந்தான்.

842. இனையது நின்றிட - இது நிற்க. நிமலன் - சிவபிரான். சிறுவிதி மகள் எனவே - தக்கனுடைய மகளாக. தவநிலைமையில் - தக்கன் செய்த தவத்தால்.

843. விண்தொடு - ஆகாசத்தை அளாவிய. அரியணை - சிங்காதனம். தேவர்கள் அழும்படியாக எழுந்த தீயைப்போன்ற ஆலகால விடத்தைத் திருவமுதாக உண்ட சிவபிரான் எழுந்தருளியிருந்தபொழுது. மெய்வகை - உண்மையை. எனவே - என்று உமாதேவியார் வேண்ட.

844. செயல்குண முருவிவை செறிகில மெவணும்
மயலற நிறைகுவ மருவரு வுருவென்
றியல்பொடு பலவடி விசைகுவ மெனவண்
கயல்விழி யுமையொடு கழறின னிமலன். உச

845. ஈதிறை புகறலு மிவணுரு விலையென்
றோதினை பலவடி வுளதெனு மியல்பின்
றேதென வவையெம தருள்வடி வெனவிங்
காதலி னெனதுயர் வடிவவை யெனலும். உரு

(பதின்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

846. உன்னை நம்மெதிர் மனந்தனில் விபந்தனை நயந்தாய்
உனதி டத்தினு முனையலா தனைவர்க ளுள்ளும்
மன்னி யாமிருந் தியற்றுவ மியற்றுத றவிர்ந்தால்
மதியெ லாமொரீஇ மருவுவர் சடமதாய் மாதோ
அன்ன வாறுநீ தெரிதியென் றவனியுண் டவன்முன்
னுன வானவ ரானவ ரேனையோ ரகத்துட்
டுன்னி யாங்குணர் வளித்திடு மியற்கையை விடுத்தான்
தோன்றல் பொன்றுதலின்றிவாழ்கின்றநந் தோன்றல்.

---

844. செயலும் குணமும் உருவமும் நாம் பொருந்திலோம். எவணும் - எவ்விடத்தும். மருவு அரு உரு என்று.

845. இறை புகறலும் - சிவபிரான் திருவாய் மலர்ந்தருள. இவண் - இங்கே. உருவம் இல்லையென்று சொல்லிவிட்டுப் பல உருவங்களுண்டென்று சொல்லும் முரண்பாடு எங்ஙனம் பொருந்தும் என்று உமாதேவியார் கேட்க, அவை எம்முடைய அருளின் வடிவம் என்று சிவபிரான் கூற, அப்படியானுல் அவ்வருளன்றி வேறல்லா என் வடிவங்களே அவை என்று உமாதேவியார் கூறினர்

846. இயற்றுவம் - அவரவர் செய்கையைச் செய்விக்கின்றோம். அவ்வாறு நாம் புக்கு இயற்றுதலை நீங்கினுல் யாவரும் அறிவற்ற சடங்களாகிவிடுவர். ஒரீஇ - நீங்கி. அவனி உண்டவன் - திருமால். உணர்வு அளித்திடும இயற்கையை - அறிவை அளிக்கும் திறத்தை. விடுத்தான் - நீங்கி நின்றார் தோன்றல் பொன்றுதல் இன்றி-ஜனன மரணம இல்லாமல். தோன்றல் - தலைவர்.

847. எங்க ளையகன் கணப்பொழு தினையவா றிருப்ப
ஏனை யோர்க்கெலா மெண்ணிலா வுகமதா யெவரும்
தங்கள் செய்கட னாகிய முறையெலாந் தவறிச்
சடம தாகியே சார்தலுங் கௌரியாந் தலைவி
கங்கை வார்சடைக் கருணையங் கடலடி பணிந்து
கடிய னேன்புரி பெரும்பிழை கருத்தினிற் கருதேல்
எங்க ளுதவிங் கருள்சுரந் தெவரையு மெழுப்பென்
றறைந்தி ரந்திட வெழுப்பின னுருத்திர ரவரை.உஎ

848. ஒன்று மேவிய பதின்மரா முருத்திர ரெழுந்தே
உவரி வாரணஞ் சுலவுபூ வுலகில்வந் துலவாப்
பொன்ற யங்கிய கொன்றையந் தொடைநெடுஞ் சடிலப்
புனித நாதனை யருச்சனை யருச்சுனப் புவிமாட்
டன்று செய்தலாற் பரம்பொரு ளெவரையு மெழுப்ப
அனந்த னாதியோர் மனந்தெளிந் தெழுந்தன ரதற்பின்
சென்று வானிறக் கயிலையஞ் சயிலமேன் மருவித்
திரிபு ராரியை வணங்கிநின் றிவையுரை செய்வார்.

849. எண்ணி கந்தநா ளறிவெலா மொருவியே சடமாய்
எங்க டங்கடன் மறந்தன விறந்ததீ திசைந்தேம்
அண்ண லேயவை தீரவொன் றருடியென் றறைய
அனைய தீமைக ளுமையவ டனதிடத் தாகும்

---

847. இனையவாறு இருப்ப - ஜீவர்களிடத்தில் புகுந்து அறிவு வழங்காமல் அவற்றைச் சடமாகச் செய்து வீற்றிருக்க. கடியனேன் - கடுமையையுடைய நான். உருத்திரரை எழுப்பினன்.

848. பதினொருருத்திரர்கள். உவரி வாரணம் சுலவு-உப்புக்கடல் சூழ்ந்த. உலவா - உலவி. பொன் தயங்கிய - பொன்னைப்போன்ற நிறத்தை உடைய. சடிலம் - சடை நாதனை - சிவபெருமானை. அருச்சுனப் புவிமாட்டு - திருவிடைமருதூரென்னும் தலத்தில்., அருச்சுனம் - மருது. அனந்தன் - திருமால். வால்நிறம் - வெண்ணிறம்.

849. ஒருவியே - நீங்கி. கடன் மறந்து - செய்யவேண்டிய காரியங்களை மறந்து. தீது இசைந்தேம் - பாவத்தைக் கொண்டோம். ஒன்று அருள்தி - ஒரு பரிகாரத்தை உரைத்தருள்வாயாக. அந்தப பாவம் உமையைச் சாரும். நும் பதத்து - உங்கள் உலகத்துக்கு. நக்கன் - சிவ

நண்ணு நும்பதத் தெனவிடை கொடுத்தன னதற்பின்
நக்க னாரியைத் தக்கன்மா மகளென நணுகி
மண்ணில் வாழுதி வந்தியா மணத்துமென் றிசைப்ப
வணங்கி னாள்விடை கொண்டனள் கருணைசேர்வல்லி.

850. அணியு மிந்துவி னிளநிலா வெறிப்பது கடுப்ப
அறல்ப ரந்தசெஞ் சடைமுடிக் கடவுளை யகன்று
மணியு மாரமுங் கரைகளிற் றிரைகள்வந் திறைப்ப
மருவு காளிந்தி வனசமேல் வலம்புரி வடிவாய்ப்
பணிகு வார்பிறப் பறுத்தருள் பரம்பொரு ளுமம்
பன்னி யன்னவன் பன்னியங் கிருந்தனள் பன்னாள்
தணிவி லாப்புகழ் மாசிமா மகப்புன லாடத்
தக்க னென்பவன் மறைக்கொடி யொடுமவண்சார்ந்தான்.

851. அண்டர் சூழ்தர மேவிய தக்கனந் நதிநீர்
ஆடி மீள்பொழு தாங்கொரு பாங்கரி னலர்மேல்
எண்ட விர்ந்திடு முயிர்க்கெலா முயிரென விருப்போன்
இடம்பு ரிந்தவள் வலம்புரி யாகிவீற் றிருத்தல்
கண்டெ டுத்துழிக் குழவியா யினளவன் வியந்தே
கவுரி யெம்மக ளாகிவந் தனளெனக் களித்து
மண்டு சீருள மறைக்கொடி தளிர்க்கரத் தளித்து
மன்னு தன்னக ரன்னவ னடைந்தனன் மன்னோ.

பிரான். நாரியை - உமாதேவியாரை மணத்தும் - திருமணம் புரிந்து கொள்கின்றோம். கருணைசேர் வல்லி - உமாதேவியார்.

850. இந்துவின் - சந்திரனது. கடுப்ப - ஒப்ப. அறல் பரந்த - நீர் பரவிய. கங்கை வெண்ணிறமுடையதாதலின் அதன் நீருக்கு நிலவு உவமையாயிற்று. ஆரமும் - முத்துக்களையும். காளிந்தி வனசமேல் - யமுனை நதியில் உண்டான தாமரை மலரின்மேல். வலம்புரி வடிவாய் - வலம்புரிச் சங்க உருவத்தை உடையவளாகி. பரம்பொருள் நாமம் பன்னி - சிவபிரானுடைய திருநாமத்தை ஜபித்துக்கொண்டு. அன்னவன் பன்னி - அவன் தேவியாகிய உமாதேவியார். மறைக்கொடியொடும் - தன் மனைவி யாகிய வேதவல்லியோடும்.

851. அண்டர் - தேவர். பாங்கரின் - பக்கத்தில். இடம் புரிந்தவள் - வாமபாகத்தை விரும்பித்தங்கிய உமாதேவியார். (பி - ம்.) இடம் பிரிந்தவள். எடுத்துழி - அந்த வலம்புரிச் சங்கை எடுத்தபோது. குழவி ஆயினள் - பெண் குழந்தையானாள். மறைக்கொடி - வேதவல்லி.

852. காதன் மீக்கொளக் கௌரியைமறைக்கொடிவளர்த்தாள்
கருணை வாண்முக வையையை யாண்டவண் கடப்பச்
சீத வாண்மதி யணிந்தருள் பரம்பொருள் வதுவை
செய்ய வேதவஞ் செய்வலென் றுமையுரை செய்யப்
போத நீடிய தந்தைதா யுளந்தனின் மகிழ்ந்து
பொருவி லாவொரு மாடமப் புரிக்கயல் புரிவித்
தாத ரம்பெறு கன்னிமா ரொடுமதில் விடப்போய்
ஆண்டு சென்றிருந்தருந்தவம் புரிந்தன ளமலை. ௯௨

853. பத்தின் மேலுமங் கோரிரண் டாகிய பருவம்
பருவ ரற்பிறப் பறுத்தருள் பராபரை படைப்பத்
தத்து வார்திரைக் கடற்கடு வடக்கிய மிடற்றோன்
தக்கன் மாபுரத் துமையவ ளிருந்திடுந் தலத்து
மெத்து சீரொரு மறையவன் போலவந் தணுக
மிகவு மெம்பிராற் கன்பரிங் கிவரென விருப்பு
வைத்த சிந்தைய ளாகியாங் கெழுந்தெதிர் நடந்து
வணங்கி யேத்துபு நின்றன ளறமெலாம் வளர்ப்பாள்.

854. எம்பிராட்டியையெம்பிரான்றெரிந்தொருபொருள்வேட்
டண்டு வந்தனந் தருதியே லுரைப்பமென் றிசைப்ப
நம்ப கேட்டியெற் கிசையுமேற் றருகுவ னதனை
நவிறி நீயென வுனைமணம் புரிந்திடு நயப்பால்

---

852. ஐயை - ஆரியை; உமாதேவியார். ஐயாண்டு அவண் கடப்ப - ஐந்து பிராயம் ஆக. பரம்பொருள் - சிவபிரான். வதுவைசெய்ய - என்னை மணம்புரிந்து கொள்ளும்படி. செய்வல் - செய்வேன். போதம் - அறிவு. பொரு இலா - ஒப்பில்லாத. அப் புரிக்கு அயல் - அந்த நகரத்துக்கு அருகில். ஆதரம் - அன்பு. அமலை - உமாதேவியார்.

853. உமாதேவியார் பன்னிரண்டு பிராயத்தை அடைய. பருவம் - பிராயம். பருவரல் - துன்பம். பராபரை - சத்தி. தத்து - தள்ளுகின்ற. கடு - விடத்தை. தக்கன் மாபுரம் - தக்கனுடைய நகரம். ஏத்துபு - துதித்து. அறமெலாம் வளர்ப்பாள் - முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்கும் உமாதேவியார்.

854. வேட்டு - விரும்பி. நம்ப - பெரியோய். எற்கு இசையுமேல் - கொடுப்பதற்கு என்னால் முடியுமானால். நவில்தி - கூறுவாயாக.

இம்பர் மேவின மதற்கிவண் மறுத்தினி யுரையேல்
என்று கூறலு மிடர்நெடுங் கடலில்வீழ்ந் தெழிறோய்
கும்ப மாமுலை செவித்துணை கரத்தினு லடைத்துக்
குமுத வாய்திறந் தமுதவா சகமிவை கூறும். ௩௪

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

855. பெய்தேனிதழித்தொடையும் பிறையும்புனைவோன்வதுவை
செய்தே யருளத் தவமே செய்வே னுடனீ திசைத்தாய்
பொய்தோய் மனத்தோய் கடிதே போபோ வென்னப் புகன்று
வைதே யொருபா லகன்றாண் மறுவில் கற்பின் மடவாள்.

856. இவ்வா றமலை யகல வெவருந் தெரியா வண்ணம்
மைவாழ் களநங் கடவுள் வளர்தன் னுருவ மருவச்
செவ்வாய்க் கருங்க ணுமையா டெரியா விழிநீர்சொரியா
ஒவ்வா வன்பிற் றொழலு முயர்கன் னியரீ துரைப்பார்.

857. மன்னுங் காதன் மறையோன் மாயம் வல்லன் கொல்லோ
என்னே யிதுதான் கன்னி யெம்மை நோக்கி லாளென்
றன்ன நடையார் தம்மி லங்கண் சிலவ ரோடித்
துன்னும் புகழ்சேர் தக்கன் முன்ன ரிதனைச் சொன்னார்.

858. அந்த வேலை யவனு மறிவா லரனென் றறிந்தே
சிந்தை மகிழ்ந்து பரன்முன் சென்றே போற்றி நின்றே

நயப்பால் - விருப்பத்தால், இம்பர் - இங்கே. இடர் - துன்பம். அமுதவாச கம் - அமுதத்தைப போன்ற வார்த்தைகள்.

855. இதழித்தொடையும் - கொன்றை மாலையையும். வதுவை - திருமணம். ஈது இசைத்தாய். கடிதே - விரைவாக. ஒருபால் அகன் றாள் - வேறொரு பக்கத்தே சென்றாள்.

856. அமலை - உமாதேவியார். மை வாழ் களம் நம் கடவுள்-நீல கண்டப பெருமான். தன் உருவம் மருவ - தமக்கு இயல்பான திருவுரு வத்தை எடுத்து நிற்க ஒவ்வா - ஒப்பு வேறு இல்லாத.

857. கன்னி - உமாதேவி.

858. அவனும் - தக்கனும். கொந்து - கொத்து. குழலாள - தாக்ஷாயணி.

எந்தை யெனது நகரி னெய்த வேண்டு மென்றே
கொந்தார் குழலா ளொடுதன் கொடிமா ளிகையுட் கொணர்ந்தான்.

859. ஆதி முதல்வ னங்கோ ரரியா தனமீ தமர
மாது தன்னை வேத வல்லி புல்லி மகிழ்ந்தே
சோதி நன்னீ ராட்டித் துலங்கு கலன்கள் சூட்டிக்
கோதி லுயிர்கட் குயிராங் குழகன் பாங்கர் விடுத்தாள்.

860. கருந்தா ழளகக் கௌரி கருணைக் கடலின் புடைவந்
திருந்தா ளிருந்த வமையத் திமையோ ரயன்மால்குறுகிப்
பொருந்தா தரவிற் பணிந்தே புரைதீ ரிதழி பிரசம்
சொரிந்தார்சடையானயலேசூழ்ந்தார்நெஞ்சம்வாழ்ந்தார்.

(கலிநிலைத்துறை)

861. தக்க னப்பொழு தெழுந்தனன் மறைக்கொ டிதளிர்க்
கைக்க ணுற்றகர கப்புனல் விடக்க வினுலாம்
செக்கர் பெற்றகம லக்கழல் விளக்கி நுதல்சேர்
அக்க நக்கனை யருச்சனை புரிந்த னனரோ. சக

862. அருத்தி தன்னுட னருச்சனை புரிந்த பினரன்
கரத்தி லம்பிகை கரத்தினை யளித்தெ னதுகண்

---

859. அரியாதனம் - சிங்காசனம். புல்லி - அணைத்துக்கொண்டு. சோதி - ஒளியையுடைய. கலன்கள் - ஆபரணங்களை குழகன் - சிவபிரான்.

860. கரிய பின்தாழ்ந்த கூந்தலையுடைய. கருணைக்கடல் - சிவபிரான். குறுகி - அடைந்து. பொருந்து ஆதரவின் - இசைந்த அன்பினால். புரை - குற்றம். இதழி பிரசம் சொரிந்து ஆர் சடையான் - கொன்றையானது தேனைச் சொரிந்துகொண்டு அமைந்த சடையையுடைய சிவபெருமான். வாழ்ந்தார் - மகிழ்ந்தனர்.

861. மறைக்கொடி - வேதவல்லி. கரகப் புனல் விட - கமண்டலத்தில் உள்ள நீரை வார்க்க. கவின் - அழகு. செக்கர் - செந்நிறம். நுதல் சேர் அக்கம் நக்கனை - நெற்றிக் கண்ணையுடைய சிவபிரானை; அக்கம் - கண்.

862. அருத்தி - அன்பு. எனது கண் - என்னிடத்தில் வரத்தின் - நான் பெற்ற வரத்தினுல். மறையின் சிரத்தில் - வேத முடிவில். இறைவணுகிய நினக்கு மணம்செய்து கொடுத்தேன்.

வரத்தின் வந்துமக ளானவுமை யாளை மறையின்
சிரத்தி னிற்குமிறை நிற்குதவல் செய்த னனியான். ௬௨

863. என்று கூறியுத கத்தினை விடுப்ப விமையோர்
வென்றி யன்பொடு புகழ்ந்தனர் மகிழ்ந்த னர்விரைக்
கொன்றை வேணியன்மறைந்தனனிறைந்த துயர்கொண்
டன்று சங்கரி வருந்திய துரைப்ப தரிதால். ௬௩

864. மன்னு தக்கனிவை கண்டழ லெனச்சி னமரீஇ
நன்ன லம்பெறு கரத்துணை புடைத்த னனகைத்
தென்னை யெண்ணலன் மறைந்துவசை தந்த னனெனு
முன்ன வன்றனை மொழிந்தன னிகழ்ச்சி மொழியே. ௬௪

865. பண்டு போலவுமை மாடம தடைந்து பரிவால்
மண்டு நற்றவ மியற்றின ளியற்ற மகிழ்வாய்
விண்டு வன்னதன மங்கையெதிர் வந்து விடைமேற்
கொண்டு போயின னெழிற்கயிலை மீது குழகன். ௬௫

866. கன்னி மாரிது தெரிந்தயன் மகன்பு டைகலந்
தின்ன செய்கையுரை செய்யவிறை வன்ற னையிகழ்ந்
தன்ன நாண்முதல் மதித்தில னிருப்ப வதனைத்
துன்னு வானவ ரறிந்தறைகு வாரி னையசொல். ௬௬

---

863. உதகத்தினை விடுப்ப - தாரை வார்க்க. விரை - நறுமணம். வேணி - முடி. சங்கரி - தாக்ஷாயணி.

864. சினம் மரீஇ - கோபம் கொண்டு. கரத்துணை புடைத்தனன் நகைத்து - இரண்டு கைகளையும் கொட்டிச் சிரித்து. எண்ணலன் - மதியானாகி. வசை தந்தனன் - அவமதிப்பை உண்டாக்கினான். முன்னவன்றனை - சிவபிரானை. இகழ்ச்சி மொழி மொழிந்தனன்.

865. மாடமது - கன்னிமாடத்தை. பரிவால் - அன்பினால். விண்டு அன்ன தனம் - மலையைப்போன்ற நகில்களையுடைய. குழகன் - இளமையையுடைய சிவபிரான்.

866. கன்னிமார் - தாக்ஷாயணியின் தோழியர்களாகிய கன்னிப் பெண்கள். அயன்மகன் புடை கலந்து - தக்கனிடம் சென்று. அன்ன நாள் முதல் - அன்றுமுதல். மதித்திலன் இருப்ப - மதியாமல் இருக்க.

867\. *தக்க னக்கனை மதிக்கில னிறத்தல் சரதம்*
மிக்க வன்னவ னிடும்பணியி னிற்கும் வினையால்
ஒக்க யாமுமழி வாகவரு மென்ற வனுறும்
பொக்கின் மாநக ரடைந்தவரொ டின்ன புகல்வார். சஎ

, (வஞ்சிவிருத்தம்)

868\. *பெற்றந்தனி லேறு பிரானையுமோர்*
உற்றுந்துமை தன்னையு முன்னலைநீ
குற்றங்க டெரிந்து குறித்திடினற்
சுற்றம்பெறு வாரெவர் சொல்லுதியால். சஅ

869\. *என்றேபல புந்தி யிசைத்திடலும்*
நன்றேயென வுன்னி நயந்ததனுக்
கின்றேது குயிற்றுவ தென்றிடலும்
நின்றேயிது தன்னை நிகழ்த்தினரே. சகூ

870\. *விண்டோய்கயி லைக்கிரி மீதணுகித்*
தண்டேன்மொழி யாளொடு சங்கரனைக்
கண்டேவரு கென்று கதித்தபுகழ்
கொண்டேசெறி யும்பர்கள் கூறினரால். ௫0

871\. *இவ்வாறிமை யோர்க ளிசைப்பவிசைந்*
தவ்வானவ ரங்க ணமர்ந்திடவைத்

867\. நக்கனை - சிவபிரானை. இறத்தல் சரதம் - தக்கன் அழிதல் திண்ணம். அந்தத் தக்கன ஏவும் ஏவல்களில் ஈடுபட்டு நிற்கும் பாவத்தால் யாமும் ஒருங்கே அழியும்படியாக நேரும். பொக்கு இல் - குற்றம் இல்லாத.

868\. பெற்றம் - இடபவாகனம். உற்று உந்து உமை. உன்னலை - மதிக்கவில்லை. 'குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை' என்று தேவர் கூறினர். குறித்திடின் - உளங்கொண்டால்.

869\. புந்தி - அறிவுரை. இன்று குயிற்றுவது எது; குயிற்றுவது - செய்வது.

870\. மொழியாள் - உமாதேவியார். வருக என்று. கதித்த - மிக்க.

தொவ்வாரச தக்கிரி யுற்றனனாற்
செவ்வாய்மறை வல்லி திருக்கொழுநன். ௫௧

(எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்)

872. சின்ம யததனு வந்தி ருநத
திருந்து மன்ன சிலமபின்மேற்
பொன்ம லிநதிடு மநதி ரத்திடை
முன்பு வாசல் புகுநதிட
நன்மை தங்குற வங்கு றுங்கண
நாதா நாதனை யெளளிய
புன்மை யாயெம தீச னுக்கெதிர்
போக லென்று தடுததனா. ௫௨

873. சீறு பூதர் தடுததல் கண்டு
சினம்பு ரிநது திருமபியே
வீறு தன்னகா தன்னில் வநதிது
விண்ண வாக்குரை செய்துபின்
ஏற தேறிய சங்க ரன்றனை
இநத நாண்முத லாகநீா
மாறு கொண்டு மதிததி டாதிரும்
எனவி சைநதனா வானுளோர். ௫௩

874. என்சொல் கேளிதை யெனசொல கேளெம
தீசன மேன்மை யறிநதுமப
பொன்செ யஞசடை யானை யெளளிய
புலலா பட்டது கண்டுநீள்

---

871. இசைநது - இணஙகி. ஒவவா ரசதக்கிரி - பிற மலைகளை இணை ஒவ்வாத வெளளி மலையை. மறைவலலி - வேதவல்லியின. கொழுநன - தக்கன்.

872. சினமயததன் - ஞானமே திருவுருவாக உடைய சிவ பிரான். உவநது இருநத. சிலமபு - மலை. மநதிரம் - திருக்கோயில். முன்பு வாசல் - தலைவாசல். கணநாதா தடுததனா.

873. சினம் புரிநது - தக்கன் கோபங்கொண்டு. மாறுகொண்டு - விரோதித்து. மாறுகொண்டு இரும், மதித்திடாது இரும் என்க. இசைநதனர் - இணங்கினர்கள்.

கொன்செ யுந்துயர் மாய வாழ்வு
குறித்தி தற்கு மிசைந்தனர்
மின்செய் வானவ ராத லால்வினை
வெல்ல வல்லவ ரில்லையே. ருச

875. அன்ன போதிசை வான வானவர்
ஆரு மேக வறைந்தரோ
இன்ன பான்மை யிருக்கு நாளில்
இருக்கு நான்முக னோர்மகந்
தன்னை யங்க ணியற்ற வுன்னுபு
தன்ன தேவல்செய் தனயரை
மன்னு மான்முத லும்பரைக் கொடு
வம்மி னென்று விடுத்தனன். ருரு

876. மூளு கின்ற சினங்கொ டன்மகன்
முன்னி சைத்தது முன்னியான்
மாள வேவரு மேனு மன்னது
வருக வென்று மனந்துணிந்
தாளு நாயகன் வெள்ளி வெற்பில்
அடைந்து நந்தி விடுத்திடக்
காள கண்டனை முன்ப ணிந்திரு
கைகு வித்துரை செய்குவான். ருசு

---

874. பொன் செய் அம் சடையானை - பொன்னைப் போன்ற அழகிய சடையையுடையவனை. எள்ளிய புல்லர் - அவமதித்த நீசர்கள். பட்டது கண்டும் - அழிந்து போனதைப் பார்த்தும். மாய வாழ்வு குறித்து - தக்கனால் வரும் பெருமையையுடைய பொய் வாழ்க்கையை நினைந்து. வானவர் இசைந்தனர்.

875. மகம் - யாகம். உன்னுபு - எண்ணி. தனயரை - புத்திரர்களை. தனயரை விடுத்தனன்.

876. பிரமன் செயல். தன் மகன் என்றது தக்கனை. யான் மாளவே வருமேனும் - நான் இறக்கும்படி நேர்ந்தாலும். ஆளும் நாயகன் - சிவபிரானது. வெள்ளி வெற்பில் - கைலாச மலையை. காள கண்டனை - நீலகண்டப் பெருமானை.

877. எந்தை கேளொரு வேள்வி யானதை
யானி யற்றுவ னங்கணீ
வந்தெ னக்கருள் செய்தி யென்ன
மகிழ்ந்து நம்முரு வானசீர்
நந்தி தன்னை விடுப்ப மேகென
நான்மு கன்றொழு தேகியே
மைந்த னுக்கு முரைத்து நீதி
மனோவ திப்புடை யுற்றனன். ருஎ

878. மிக்க வேள்வி யவன்றொ டங்கலும்
வீறு மான்முதல் விண்ணுளோர்
தக்க னோடு மடைந்து வேள்விசெய்
சாலை யின்புடை சார்தலும்
செக்கர் வேணியர் நூறு கோடியர்
சீறு சாரதர் சூழவே
அக்க ணந்தனி னந்தி வந்தனன்
ஆதி தேவன தேவலால். ருஅ

879. எந்தை வந்தது கண்டு வேதன்
எழுந்து கைப்பது மங்குவித்
துந்து மாதன மீதி ருத்த
உவந் திருந்தன் னீதுகண்
டந்த மற்ற பவங்கொ டக்கன்
அழைத்து ளாரெவ ரென்றுதன்
சிந்தை யூடு குறித் துணர்ந்து
செயிர்த்து வேதனொ டோதுவான். ருகூ

---

877. வேள்வியானதை - யாகத்தை. விடுப்பம் - அனுப்புவோம். மைந்தனுக்கும் - தக்கனுக்கும். மனோவதி - பிரமன் வாழும் நகரம்.

878. மால் முதல் - திருமால் முதலாகிய. செக்கர் வேணியர் - சிவந்த தலைமயிரையுடையவராகிய. சாரதர் - பூதர். ஆதிதேவனது ஏவலால் - சிவபிரானது கட்டளையினால்.

879. எந்தை - நந்தி தேவர். வேதன் - பிரமன். ஆதனம் மீது இருத்த. பவம் கொள் - பாவங்களைக் கொண்ட. அழைத்துளார் எவர் - நந்தி தேவரை அழைத்தவர் யார். செயிர்த்து - கோபித்து.

880. சோதி முன்ன ரடைந்து வேள்வி
தொடங்கு கின்றது சொற்றனே
ஆதி யுந்திய நந்தி யைத்தொழு
தன்பி னென்மு னிருத்தினை
வேத கேண்மதி தாதை யாதலின்
வெட்டி டாதுனை விட்டனன்
நீதி யோவிது செய்த தென்று
புகன்று பின்னு நிகழ்த்துவான். ௯0

881. எள்ளு நீர்மைகொள் பித்த னாகி
இருக்கு மீசன் மகத்தவி
கொள்ளு தற்குரி யன்கொ லீது
குறித்தி டாது கொடுத்தனர்
தள்ளு மற்றதை விண்டு வேயுயர்
தாணு வென்ன மதித்துநற்
கள்ளு றுங்கம லத்த முன்பவி
காத றன்னொடு மீதிநீ. ௯௧

882. மற்றெ வர்க்கு மளித்தி யென்னலும்
மன்னு நந்தி மனஞ்சினந்
துற்ற தக்கன் முகந்தெ ரிந்துணர்
வோடு நீதியில் பேதைநீ

---

880. சோதி முன்னர் அடைந்து - சிவனிடம் போய். ஆதி - சிவபிரான். உந்திய - விடுத்த. என் முன் இருத்தினை - எனக்கு முன்னாலே வீற்றிருக்கச் செய்தாய். கேள்மதி - கேட்பாயாக. தாதை ஆதலின் - நீ என் தகப்பனாக இருத்தலினால்.

881. எள்ளும் நீர்மைகொள் - இகழ்வதற்குரிய இயல்பையுடைய. மகத்து அவி கொள்ளுதற்கு உரியன்கொல் - யாகத்தில் அவிர்ப்பாகத்தைக் கொள்ளுவதற்கு உரியவனோ? இந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ளாமல் அவனுக்கு அவிர்ப்பாகம் கொடுத்தார்கள். இனித் திருமாலையே முதற்கடவுளாகக் கொண்டு கொடுக்கவேண்டுமென்று தக்கன் உரைத்தான். தள்ளு: ஏவல். விண்டுவே - திருமாலே. உயர் தாணு - உயர்ந்த கடவுள். அவி - அவிர்ப்பாகத்தை. ஈதி - கொடுப்பாயாக.

பெற்ற மேலம லற்ப ழித்துரை
பேசி னுயவ னன்றியே
கொற்ற வேள்வி குயிற்று வோர்முடி
போக வென்றுரை கூறியே. ௯௨

883. சீறி யெம்பெரு மானை யெள்ளிய
தீய நின்றலை போகவென்
றீறி லாத பரம்ப ரன்றனை
எள்ளு நின்னொ டிருந்திடும்
வீறு மான்முத லும்பர் யாவரும்
வீர மேவிய சூரனால்
மாற ருந்துய ரத்து ழூழ்கி
வருந்த வென்று சபித்தனன். ௯௩

884. இந்த வாறு புகன்று நந்தி
எழுந்து சாரதர் சூழவே
அந்தண் மாமதி வேணி யானை
அடைந்த னைத்து மறைந்துபின்
மைந்து றுங்குண வாசன் மேவினன்
மன்னு வேதன் மகங்குலைந்
துந்தி டுந்துயர் கொண்டு தத்தம்
இடத்தி யாவரு முற்றனர். ௯௪

---

882. திருமாலுக்கு முதலில் அளித்துவிட்டுப் பிறகு மற்ற யாவருக்கும் அளிப்பாயாக. நந்தி - நந்திதேவர். உணர்வு - அறிவு. நீதி - தருமம். பெற்றம்மேல் அமலன் பழித்து - இடபவாகனத்தின்மேல் எழுந்தருளும் சிவபிரானை இகழ்ந்து. கொற்றவேள்வி - வெற்றியைத் தரும் யாகத்தை. குயிற்றுவோர் - செய்வோர். முடி போக - தலை அறுவனவாக. உரை - சாபம்.

883. எள்ளிய - இகழ்ந்த. மால்முதல் - திருமால் முதலிய. மாறு அரும் - பரிகாரம் இல்லாத. போகவென்றும் வருந்தவென்றும்.

884. சாரதர் - பூதப்படையினர். மதிவேணியானை - சிவபிரானை. மைந்து உறும் - வலிமை பொருந்திய. குணவாசல் - கீழ்க் கோபுர வாசல். வேதன் - பிரமன். மகம் குலைந்து - யாகம் அழிய.

885. சொற்ற ரும்புகழ் நந்தி முன்பு
சுளிந்து கூறிய சூளினால்
அற்றை நாண்முதல் யாரும் வேள்வி
இயற்ற வஞ்சி யமர்ந்தனர்
மற்றை யோர்பக றக்க னென்பவன்
மாம கஞ்செய வுன்னியே
கொற்ற நற்றொழில் கற்ற வும்பர்கள்
கம்மி யற்கிது கூறுவான். சாரு

886. மகம்பு ரிந்திடு சாலை யொன்று
வகுத்தி யென்னலு மன்னவன்
திகழ்ந்த கங்கை மருங்க டைந்து
திருந்து மாயிர யோசனை
அகன்ற சாலைய தொன்றி யற்றலும்
அங்க ணேகி யயன்சுதன்
சகம்பு கழ்ந்திடு காமர் கண்டு
தனது ளங்களி கொண்டனன். சாசு

887. பின்ன ரொற்றர் முகந்தெ ரிந்து
பிறைக்கொ ழுந்து மிலைச்சிய
மின்னி ருஞ்சடை யண்ண லல்லது
வேறு தேவர்கள் யாரையும்
மன்னு மிவ்விடை யுய்த்தி ரென்னலும்
வல்லை யேகி யவர்க்கெலாம்
சொன்ன போதரி யாதி வானவர்
யாரும் வந்தனர் துன்னியே. சாஎ

---

885. சுளிந்து - கோபித்து. சூளினால் - சாபத்தால். மற்றை ஓர் பகல் - வேறு ஒருநாள். மகம் செய - யாகம் செய்ய. உம்பர்கள் கம்மியற்கு - விசுவகர்மாவுக்கு.

886. வகுத்தி - அமைப்பாயாக. அன்னவன் - அந்த விசுவ கர்மா. அயன் சுதன் - தக்கன். காமர் கண்டு - யாகசாலையின் அழகைப் பார்த்து.

887. மிலைச்சிய - அணிந்த. அண்ணல் அல்லது - சிவபிரானைத் தவிர. உய்த்திர் - அழைத்து வருவீர்களாக. அரி ஆதி வானவர் - திருமால் முதலிய தேவர்கள்.

888. வந்து தக்கன தியாக சாலையின்
மாய னுங்கம லத்தனும்
இந்தி ரன்முத லான தேவர்கள்
யாரு மங்க ணிருந்தபோ
துந்தி டும்புகழ் மாத வத்தர்
உவந்து சூழ்தர வந்தனன்
தந்தி ரம்புரி மாலை வென்றடல்
மாலை கொண்ட ததீசியே. சஅ

889. நன்றி கொன்றிடு தக்கன் மாமுனி
நண்ணு கின்றது கண்டரோ
இன்றெ னக்கிவ னஞ்சி வந்தனன்
என்று சிந்தையி லெண்ணியே
வென்றி மாதவ வருக வென்றொரு
வீறு மாதன மீதலும்
துன்று மாதவ ரோடி ருந்திது
சொல்லு வான்வினை வெல்லுவான். சகூ

890. எம்மை யிங்ங னழைத்த காரணம்
என்ன வென்னலு மீசனெம்
அம்மை தன்னை மணந்த தற்பின்
நிகழ்ந்த யாவு மறைந்தரோ
மைம்ம லிந்திடு கண்ட னுக்கவி
மாற்று வான்மக மாற்றுவேன்
உம்மை யிங்கு விளித்த தன்மையும்
இன்றி தற்கென வோதினன். எ0

---

888. கமலத்தனும் - பிரமதேவனும். மாதவத்தர் - முனிவர்கள். தந்திரம் புரி மாலை வென்று - குபன் என்னும் அரசனுக்குத் துணையாக வந்து பல தந்திரங்களைச் செய்து போர்செய்த திருமாலை வென்று. அடல் மாலை - வெற்றிமாலை.

889. மாமுனி - ததீசி முனிவர். எண்ணியே - தக்கன் நினைத்து. சொல்லுவான் - ததீசி முனிவர் சொல்லலாயினர்.

890. மை மலிந்திடு கண்டனுக்கு - நீலகண்டமுடைய சிவபிரானுக்கு. அவி மாற்று வான் மகம் ஆற்றுவேன் - அவிர்ப்பாகத்தைக் கொடாமல் மறுக்கும் பெரிய யாகத்தைச் செய்வேன்.

891. ஊறு கன்ற ததீசி தக்கன்
உரைத்த பான்மை வினவியே
வீறு கொண்ட பராப ரன்றனி
மேன்மை தன்னை விளம்பியே
ஏறு தங்கு பதாகை யண்ணல்
எவர்க்கு மீச னவற்குநீ
மாறு கொண்டு மகஞ்செ யேலென
மாசி லானிது பேசினான். எக

892. மாசு றென்பு புனைந்து சேகர
மாலை யானது பூணுமோ
தேசு நீறது பூசு மோதசை
தீர்ந்த தீயுட லேந்துமோ
கேச முங்கரு மாம ருப்பொடு
கேடு றாமையி னோடுமே
நேச மோடு தரிக்கு மோபரம்
ஆகி நின்றிடு நின்மலன். எஉ

893. கோல ஞாலமொ டுயிர்கள் செற்றல்
குயிற்று மோபுலி தந்தியின்
தோலொ டங்கி கணிச்சி தாவுழை
சூல மின்ன சுமக்குமோ

---

891. ஊறு - துன்பம். தனி மேன்மை - ஒருவருக்கும் இல்லாத சிறப்பான பெருமைகளை; பரத்துவத்தை. ஏறு தங்கு பதாகை அண்ணல் - இடபக்கொடியையுடைய சிவபிரான். ஈசன் - கடவுள். மாறு கொண்டு - விரோதம் கொண்டு. மகம் செயேல் யாகத்தைச் செய்யாதே.

892. தக்கன் கூற்று. மாசுறு என்பு. சேகர மாலை - தலை மாலையை. தசை தீர்ந்த தீ உடல் - ஊன் நீங்கிய தீய உடலாகிய முழு என்பை; இதற்குக் கங்காளமென்று பெயர். கேசமும் - மயிரையும். கருமா மருப்பு - பன்றிக்கொம்பு. கேடுறு ஆமையின் ஓடு. பரமாகி - எல்லோருக்கும் மேலாகி.

893. செற்றல் குயிற்றுமோ - அழித்தலைச் செய்வானோ. புலி தந்தியின் தோலொடு - புலித்தோலையும் யானைத்தோலையும். கணிச்சி -

சால வும்பலி கொள்ளு மோநடம்
ஆடு மோமிகு சாரதர்
சில மேவிய படையெ னும்படி
திரியு மோவுயர் தேவனே. ௭௩

894. நஞ்செ யிற்றட ஞகம் வெண்டலை
நவையெ ஞது தரிக்குமோ
விஞ்சு கின்றதன் மேனி யல்லது
வேறு மோர்தனு மேவுமோ
எஞ்சு ருத விருந்தி றல்பெறும்
ஏறு தன்மிசை யேறுமோ
அஞ்சு மால மருநது மோநிகர்
அன்றி நின்றிடு மண்ணலே. ௭௪

895. ஈம மாட லொருத்தி யைத்தலை
எய்த வைத்த லொருத்தியை
வாம மீதினில் வைத்தல் பிள்ளை
மகிழ்ந்து பெற்றிடல் வெங்குணம்
காம ரண்ணல் படைக்கு மோவென
ஏது வாகிய காதைகள்
தாம மார்புள தக்க னேடு
ததீசி மாமுனி பேசுவான். ௭௫

மழுவினையும். தாவு உழை - தாவுகின்ற மானையும். பலி - பிக்ஷை. சாரதர் - பூதர். உயர் தேவன் - எல்லோருக்கும் மேலாகிய தேவன்.

894. விடத்தையுடைய பல்லையும் வலியையும் பெற்ற பாம்புகளை. வெண்டலை - தசை நீங்கிய தலை. நவை - குற்றம். வேறும் ஓர் தனு - வேறொரு திருமேனியை. எஞ்சுருது அவிரும் திறல். ஏறு தன்மிசை - இடபத்தின் மேல். அஞ்சும் ஆலம் - யாவரும் அணுக அஞ்சும் விடத்தை. அண்ணல் - கடவுள்.

895. ஈமம் ஆடல் - மயானத்தில் தாண்டவம் புரிதல். தலையில் எய்தும்படி வைத்தல்; ஒருத்தி - கங்கை வாம மீதினில் - இடப்பாகத்தில். வெம் குணம் - தாமதகுணம் அண்ணல் - தலைவனுன கடவுள். என - என்று தக்கன் கேட்க. ஏது ஆகிய காதைகள் - இவற்றிற்குக் காரணமாகிய வரலாறுகளை. தாமம் - மாலை.

896. வேதன் மான்முத லோரை நம்பன்
விதித்த ழித்திடு போதெலாம்
தீதி லங்கவ ரென்ப ணிந்து
சிரங்கள் கேச மணிந்துநீள்
கோதி லாதொளிர் சூல மீதுடல்
கொண்டு நீறது கண்டுபின்
மீது பூசுமி யாவ ருந்தனை
மேவி யுய்ந்திட வேண்டியே. ௭௬

897. ஈது நின்றிட வாட கக்கணன்
என்ப வன்புவி யுண்டுமுன்
பாத லந்தனி லேக மாலொரு
பார வேனம தாகியே
கோதி னனை மருப்பி னைக்கொடு
கொன்று முன்பென வொன்றவே
பூத லந்தனை வைத்த கந்தை
பொருந்தி மண்ணை யழித்தனன். ௭௭

898. அந்த வேலையில் வேலை நஞ்சம்
அயின்ற நம்ப னவன்றனோர்
வந்தொர் கோடு பறிப்ப முன்புலன்
வந்து வந்தனை செய்திட

---

896. பிரமன், திருமால் முதலியவர்களை. விதித்து அழித்திடு போதெலாம் - உண்டாக்கிப் பின் சங்காரம் செய்யும் காலத்தில். கேசம் - மயிர். உடல்கொண்டு - அவர் உடல்களைக் கொண்டு. நீறது கண்டு - எரித்துப் பொடியாக்கி. மீது பூசும் - அந்தப் பொடியைத் தம்மேல் பூசிக் கொள்வார்.

897. பன்றிக்கொம்பை அணிவதற்குரிய காரணத்தைக் கூறு கின்றார். ஆடகக்கணன் - இரணியாட்சன். மால் - திருமால். பார ஏனமது ஆகியே - பெரிய வராக உருவம் எடுத்துக்கொண்டு. கோதினனை - இரணியாட்சனை. மருப்பினைக்கொடு - கொம்பினால். முன்பென - முன்புபோல. அகந்தை பொருநதி - கர்வத்தை அடைந்து.

898. வேலை நஞ்சம் - கடலில் உண்டான ஆலகால விடத்தை நம்பன் - சிவபிரான். கோடு - கொம்பை. முன்புலன் வநது - முன்னைய

எந்தை யேன மருப்ப ணிந்தனன்
எண்ணில் வானவ ரானவர்
உந்து மாழி கடைந்த வேலையில்
மந்த ரந்தளர் வுற்றதே. எஅ

899. மால வன்கம டத்து ருக்கொடு
*மந்த ரத்தை வெரிந்தனிற்
சால வன்று பரித்த னன்கடல்
தந்த தங்கமு தந்தனை
நீல மாய னகந்தை கொண்டு
நிறைந்த வேலை யுழக்கவே
ஆல முண்டவன் வந்து பற்றி
அவன்றன் வன்மை யழித்தனன். எகூ

900. உற்ற முன்னுணர் வெய்தி மாயன்
உவப்பி னோடு புகழ்ந்திட
அற்றை நாளவ னோடு மார்பில்
அணிந்த னன்னது நின்றிட
முற்று வேள்விய தேத ரும்பர
முத்தி யென்றுயர் புத்தியிற்
சற்று மெம்பெரு மானை யெண்ணலர்
தாரு காவன மாதவர். அ0

அறிவு வரப்பெற்று. ஏன மருப்பு அணிந்தனன் - அந்தப் பன்றிக் கொம்பைத் திருமார்பில் தரித்தார். இனி, ஆமையோடு தரித்த காரணத்தைச் சொல்கிறார். ஆழி - பாற்கடலை. வேலையில் - சமயத்தில். மந்தரம் - மத்தாக உதவிய மந்தரகிரி.

899. கமடத்து உருக்கொடு - ஆமையின் உருவத்தை எடுத்துக்கொண்டு. வெரிந்தனில் - முதுகின்மேல். சால - நன்றாக. பரித்தனன் - தாங்கினான். அங்கு அமுதந்தனைக் கடல் தந்தது. நீலமாயன் - கரியநிறங்கொண்ட திருமால். வேலை உழக்க - கடலைக்கலக்க. ஆலம் உண்டவன் - சிவபிரான். அவன்றன் வன்மை - ஆமையாக இருந்த திருமாலின் வலிமையை.

900. முன் உணர்வு எய்தி - முன்னைய அறிவை அடைந்து. அவன் ஓடு - கூர்மாவதாரமெடுத்த திருமாலின் ஓட்டை. புலித்தோல்

901. இன்ன பான்மை யறிந்து நம்பன்
இலங்கு சீருள மாலொடு
மன்னி டுங்கயி லாய வெற்பினை
வல்லை தன்னி லகன்றுபோய்த்
தன்னை யுன்னலர் துன்னி வாழ்வுறு
தாரு காவனந் தன்னினற்
கன்னி யாகி நடந்தி டும்படி
கண்ண னுக்கருள் செய்தனன். அக

902. மார வேளை யளித்த பச்சுரு
மாயன் மாதுரு வங்கொளாச்
சாரு நீடெழி லவ்வ னத்துறு
தாப தர்க்கெதிர் போகவிட்
டேரி னோடவர் பன்னி மார்கள்
இருந்த வீதியி லெம்பிரான்
வார மோடு பலிக்க டைந்திடு
வார்க ளென்ன வணைந்தனன். அஉ

903. மாலை சேர்குழன் மாலை நோக்கினர்
மாலை யெய்தினர் மாதவர்
சால வெம்பெரு மானை மானினை
மானு கின்ற தடங்கணார்

முதலியவற்றை அணிந்த காரணத்தை இனிக் கூறுகின்றார். யாகமே மேலான முத்தியைத் தரும் என்று எண்ணிச் சிவபிரானை எண்ணாமல் தாருகாவனத்து முனிவர் இருந்தனர்.

901. நம்பன் - சிவபிரான். நம்பன் அகன்று. உன்னலர் - நினையாதவர்களாகிய முனிவர். கன்னியாகி - பெண்ணாகி; மோகினியாகி. கண்ணனுக்கு - திருமாலுக்கு.

902. மாரவேளை அளித்த - மன்மதனைப்பெற்ற. பச்சுரு - பச்சை நிறத் திருமேனியையுடைய. மாது உருவம் கொளா - மோகினியின் உருவத்தை எடுத்துக்கொண்டு, தாபதர்க்கு - முனிவர்களுக்கு. ஏரினோடு - எழுச்சியோடு. அவர் பன்னிமார்கள் - அந்த முனிவர்களுடைய பத்தினிகள். வாரம் - அன்பு. பலிக்கு அடைந்திடுவார்கள் என்ன - பிக்ஷைக்கு வருபவர்களைப்போல.

கோல மோடெதிர் கண்டு மாமயல்
கொண்டு கொண்ட கலன்கள்போய்ச்
சூல பாணி தனாது பின்றுய
ரத்தி னோடு தொடர்ந்தனர். அங

904. அந்த வேலையி லிந்து தாரி
அநேக மேனிய னாகியே
வந்து மங்கைய ரெண்ணு மாறு
மகிழ்ந்து செய்திட மாதரார்
எந்தை யாலவ னாலு பத்துடன்
எண்ணு கின்றவெண் ணாயிரம்
மைந்த ரைத்தர வந்த மைந்தர்கள்
வள்ள றன்னை வணங்கினார். அச

905. சங்க ரன்னமை யுன்னி நீவிர்
தவம்பு ரிந்திடு மென்னவே
அங்க ணின்றிடு மைந்த ரேகினர்
அந்த வேலை முகுந்தனும்
மங்கை வந்திட மாத வத்தர்
தொடர்ந்து வந்துதம் மாதரார்
பங்க முற்றுயர் கற்ப ழிந்திடு
பான்மை கண்டு சினந்தனர். அரு

---

903. மாலை சேர் - பூமாலையை அணிந்த. மாலை நோக்கினர் - மோகினி உருவங்கொண்ட திருமாலைப்பார்த்து. மாதவர் மாலை எய்தினர்; மாலை - காம மயக்கத்தை. மானினை மானுகின்ற தடங்கணார் - மானை ஒத்த விசாலமாகிய கண்களையுடைய ரிஷி பத்தினிகள். கொண்ட கலன்கள் போய் - தாம் அணிந்துகொண்ட ஆபரணங்கள் கழல. சூல பாணி - சிவபிரான்.

904. இந்து தாரி - சந்திரனைத் தரித்த சிவபிரான். எண்ணு மாறு செய்திட. எண்ணாயிரம் பிள்ளைகளைப் பெற்றனர். வள்ளல் தன்னை - சிவபிரானை.

905. அந்த வேலை - அப்பொழுது. மங்கை - மோகினி. பங்கம் உற்று - அழிந்து.

906. தீதின் மாதர்கள் கற்ப ழித்தவ
னைச்செ குத்திடு வோமெனு
மாத ழற்கொண் மகம்பு ரிந்ததின்
வந்து வந்து பிறந்திடும்
காது வெம்புலி பரசு நவ்வி
கடும்ப ணித்திரள் பூதர்கள்
மோது வெண்டலை திண்டி றற்றுடி
முயல கன்றமை யேவினார். அசு

907. வேங்கை தன்னை யுரித்து டுத்தனன்
மிக்க சாரதர் தானையாய்ப்
பாங்கு றும்படி யோதி னொரு
பாத வண்கம லத்தினல்
ஏங்கு றும்படி முயல கன்றனை
ஈடி னேடு மிதித்தனன்
வாங்க ருங்கவி னுற்ற மேனியின்
மற்றை யாவு மணிந்தனன். அஎ

908. ஈடு கொண்டிடு விண்ணு ளார்தொழ
எந்தை நாடக மாடினன்
வீடி னரென மாத வத்தர்
விழுந்து பின்னு மெழுந்தவம்

---

906. செகுத்திடுவோம் - கொல்வோம். மா தழல்கொள் மகம் புரிந்து-பெரிய அக்கினியை உடைய யாகத்தைச் செய்து. காது - கொல்லும். பரசு - மழு. நவ்வி - மான். பணி - பாம்பு. வெண்டலை - தசையில்லாத தலை. துடி - உடுக்கை.

907. வேங்கைதன்னை - புலியை. சாரதர் - பூதர்களை. தானையாய் பாங்கு உறும்படி - படையாகித் தம் பக்கத்திலே இருக்கும்படி. ஈடினேடு - பெருமையோடு. வாங்கு அரும் கவின் - மாற்றுதற்கரிய அழகை.

908. ஈடு - பெருமை. நாடகம் - நடனம். வீடினர் என - இறந்தவர்களைப்போல. அவம் கூடும் எங்கள் - வீண் செயலைக் கூடிய எங்களுடைய. கொள்ளல் - திருவுள்ளத்தில் எண்ணற்க. வழுத்த - துதிக்க. அன்பை அருள்செய்து.

கூடு மெங்கள் கொடும்பெ ரும்பிழை
 கொள்ள லென்று வழுத்தவே
நாடி யன்பருள் செய்து பின்கயி
 லாய மாமலை நண்ணினன். அஅ

909. ஈது நின்றிட வானை மேனியொ
 டீடு கொண்ட கயாசுரன்
வேத னல்கு வரத்தி னலுயர்
 விண்ணு மண்ணு மலைக்கவே
மாத வத்தின ராரு மஞ்சி
 வளங்கொள் காசிபி லோடினர்
பாத கன்னவ ரைத்தொ டர்ந்து
 படர்ந்து காசி யடைந்தனன். அசு

910. கண்டு மாதவர் காசி யின்மணி
 கன்னி யாகிய வாலயத்
தண்ட நாத னருட்ப தத்தில்
 அடைக்க லம்புக வங்கணன்
ஒண்டி றற்கரி முன்ன ரேகி
 உரித்து மேனி தரித்தனன்
துண்ட வாண்மதி போனு தற்பெறு
 தோகை யும்பய மாகவே. கூ0

909. யானைத்தோல் போர்த்ததன் காரணம் கூறுகின்றார். ஈடு - பெருமை. வேதன் - பிரமன். அலைக்க - துன்புறுத்த. பாதகன் - கயாசுரன்.

910. மணி கன்னிகையென்னும் திருக்கோயிலில் எழுந்தருளிய சிவபிரானிடம். அங்கணன் - சிவபிரான். கரிமுன்னர் ஏகி - கயாசுரனுக்கு எதிரே சென்று. யானையை உரித்து அந்தத் தோலை உமாதேவியாரும் அஞ்சும்படி போர்த்துக்கொண்டார். துண்ட வாள்மதி - பிறை. தோகை - உமாதேவியார்.

911\. மற்றி வர்றிவ ணிற்ப முற்பகல்
மாய னந்தணன் மேருமேல்
உற்ற கான்முனி வோர்க ளும்பர்
உவந்து வந்து பணிந்துநீள்
வெற்றி பெற்றிடு மூவர் தங்களின்
வீறி னாரெவ ரென்றிட
அற்றை வேலையின் வேத னானென
அரியு நானென வோதினான். ௯௧௧

912\. மாறு கொண்டிரு வோரு மெண்டவிர்
வைகல் பூசல் புரிந்திட
ஆறு கொண்டிடு மண்ண லங்கொளி
ஆகி யந்த வொளிக்குளே
வீறு கொண்டவ ணிற்ப மாயன்
விழுந்து போற்றி யகன்றனன்
நீறு கொண்டிடு மேனி யெந்தையை
நீடு வேத னிகழ்ந்தனன். ௯௧௨

913\. எந்தை யங்கு மனத்தி னாலருள்
எய்து காரியை நல்கவே
வந்து வேதன துச்சி யாமுடி
வள்ளு கிர்கொடு கிள்ளலும்

911\. முற்பகல் - முன் ஒரு காலத்தில். மாயன் அந்தணன்-திருமாலும் பிரமதேவனும். உற்றகால் - அடைந்தபோது முனிவோர்களும் உம்பரும். வீறினார் - உயர்ந்தவர். வேதன் நான் என - பிரமன் நானே உயர்ந்தவன் என்று சொல்ல. அரி - திருமால்.

912\. மாறுகொண்டு - வாதமிட்டு எண் தவிர் வைகல் - அளவற்றகாலம். பூசல் - சண்டை. ஆறுகொண்டிடும் அண்ணல் - கங்காதரராகிய சிவபிரான். ஒளி ஆகி - சோதி உருவமாகி வீறு கொண்டு - யாருக்கும் இல்லாத சிறப்பைக் கொண்டு. வேதன் இகழ்ந்தனன் - பிரமன் அவமதித்தான்.

913\. காரியை மனத்தினால் நல்க - பைரவரைத் திருவுள்ளத்திலிருந்து சிருட்டி செய்யவே. உச்சி ஆம் முடி - மேலுள்ளதாகிய

சிந்தை நொந்து வழுத்த வங்கருள்
செய்து மாலுல கெய்தினன்
உந்து மாய னிறைஞ்சி மற்றிவண்
உற்ற தென்னென வோதினன். கூஙா

914. உன்ற லைப்படு சோரி நீரை
உகுத்தி யென்ன நகத்தினால்
தன்ற னெற்றி பிளந்து சோரி
தனைப்பொ ழிந்திட நம்பிரான்
வென்றி சேரய னார்பெ ருஞ்சிர
மீதி லேற்றன னாற்றா
றென்று கூறிடு மாண்டு செல்ல
இளைத்து மாயன் விழுந்தனன். கூச

915. நீடு கைத்தலை பாதி யேனும்
நிறைந்த தில்லை யவன்றனைப்
பீடு மேவிய காரி யன்பொடு
பின்பெ ழுப்பி நிறுத்தியே
ஈடு கொண்டு பொருந்தி மேலுல
கெய்தி யண்ட மியாவையும்
நாடி யங்க ணளித்தி ருந்தனன்
நாத னாரரு ளாலரோ. கூரு

தலையை. வள் உகிர்கொடு - கூரிய நகத்தால். எய்தினன் - பைரவர் அடைந்தார்.

914. உன் தலையின் இரத்தத்தைச் சொரிவாயாக. தன் தன் நெற்றி - தனது நெற்றியை. பிளந்து - கீறி. நம்பிரான் அயனார் பெருஞ் சிரமீதில் ஏற்றனன் - பைரவர் கிள்ளிய பிரமனது கபாலத்தில் ஏற்றுக் கொண்டார். பதினாயிரம் வருஷம் செல்லவே திருமால் தளர்ந்து விழுந்தார்.

915. திருமாலின் இரத்தத்தால் பைரவர் கையில் இருந்த கபாலத்தின் ஒரு பாதிகூட நிறையவில்லை. காரி - பைரவர். அவன்றனை எழுப்பி. அளித்திருந்தனன் - காவல் செய்திருந்தார்.

916. பகர்ந்த வின்னது நிற்ப முற்பகல்
பண்ண வர்க்கிறை யானவன்
அகந்தை கொண்ட மனத்தொ டுங்கயி
லாய மந்திர முன்புற
உகந்து சாரதர் போல வெண்குணன்
உற்ற னன்குலி சத்தினன்
மிகுந்த பூத வரன்ற னக்கென
வேளை யென்று வினவினன். ௬௬

917. வேளை கேட்டுழி வேளை வென்றவன்
வெஞ்சி னங்கொடு நின்றிடக்
கோளு றிந்திர னுஞ்சி னந்துயர்
குலிச வேலினை யெறியவே
ஆளு மெம்பெரு மானை மேவி
அருந்து கட்பட வங்கணன்
நீளு ருத்திர மேனி கொண்டு
நெடுஞ்சி னங்கொடு நின்றனன். ௬௭

918. அன்ன காலையி லுன்றன் மாயம்
அறிந்தி லேனறி வற்றயான்
என்னி ரும்பிழை யெண்ண லென்ன
இறைஞ்சி நிற்க விடுத்தரோ

---

916. பண்ணவர்க்கு இறை - இந்திரன். கயிலாய மந்திரம் முன்புஉற - கயிலாயத்தில் சிவபிரான் திருக்கோயிலுக்கு முன்பே வர. சாரதர் போல - பூதனைப்போல. எண்குணன் - சிவபிரான். குலிசத்தினன் - இந்திரன். பூத : விளி. என்ன வேளை - என்ன சமயம்.

917. வேளை வென்றவன் - காமாரியாகிய சிவபிரான். கோள் உறு இந்திரன் - கொள்கையை உடைய இந்திரன். குலிசவேலினை - வச்சிராயுதத்தை. துகட்பட - பொடியாக. அங்கணன் - சிவபிரான். உருத்திர மேனிகொண்டு - ருத்திர ரூபத்தை எடுத்துக்கொண்டு.

918. மாயம் - மறைந்திருந்த நிலையை. சினமான தீயினை - கோபமாகிய அக்கினியை. மேலை வேலையில் - மேற்குக் கடலில். சலந்தரப் பெயர் மைந்தனாகி - அந்த அக்கினியானது சலந்தரன் என்னும் பெயருடைய வலியை உடையவனாகி.

மின்னு தன்சின மான தீயினை
மேலை வேலையில் வீசலும்
மன்னு கின்ற சலந்த ரப்பெயர்
மைந்த ஞகி வளர்ந்தனன். ௯௮

919. வளர்ந்த பின்பவு ணக்கு லத்தொடு
மண்ணி லுற்றுயர் விண்ணுளோர்
தளர்ந்தி டும்படி செய்தி ரண்டு
சதங்கொ ளாயிர வற்சரம்
வளைந்து மாலொடு போர்பு ரிந்திட
மால்பு கழ்ந்து படர்ந்தனன்
கிளந்த வும்பர்க ளோடி ஞர்கயி
லாய மாகிய கிரியின்மேல். ௯௯

920. வெள்ளி வெற்பிடை விண்ணு ளாரவர்
மேவி யுற்ற தறிந்துபின்
தள்ளு தற்கரு மொய்ம்பு கொண்ட
சலந்த ரன்படை சூழவே
எள்ள ரும்புகழ் மேவு றுங்கயி
லாய விண்டுவி லேகலும்
வள்ளல் வாசவன் வேண்ட வேதியன்
வடிவு கொண்டவண் வந்தனன். ௧௦௦

921. எங்க ணுயக னெங்க ணேகுதி
என்று கூற வரன்றனே
டிங்க மர்செய மேவி னேனென
ஈண்டு நின்வலி காண்டுமென்

---

919. அவுணக்குலத்தொடு - அசுரர் கூட்டத்தோடு. இரண்டு சதங்கொள் ஆயிர வற்சரம் - இருநூறுயிர வருடம். சலந்தரன் அசுரர்களோடு வந்து திருமாலோடு போர்செய்யத் திருமால் ஆற்றுராகி அவனைப் புகழ்ந்துவிட்டுப் போனுர்.

920. விண்ணுளாரவர் - தேவர். மொய்ம்பு - வலிமை. விண்டுவில் - மலையில். வள்ளல் - சிவபிரான். வாசவன் - இந்திரன். வேதியன் வடிவுகொண்டு - ஓர் அந்தணனைப்போன்ற வடிவத்தை எடுத்துக் கொண்டு.

றங்கண் மண்ணிலொ ராழி தாளின்
அமைத்தெ டுக்குதி யென்னவே
மங்கு தன்சிர மீதெ டுப்ப
உடல்கி ழிந்து மடிந்தனன். கOக

922. வீறு மின்னது நிற்க மாயன்
விளிந்து யாவு மழிந்தபோ
தூறி லாம லிருக்க நச்சி
உரந்த ருந்தரு மத்திறை
ஏற தாமுரு வெய்தி நாதன்முன்
ஏகி வந்தனை செய்துசீர்
கூறி யிங்கெனை யூர்தி கொண்டருள்
என்ன வப்படி கொண்டனன். கOஉ

923. உற்ற வின்னது நிற்க வொற்கமில்
உந்து பாலுறு வேலையில்
வற்றி டாவமு தம்பெ றும்படி
மந்த ரந்தனை மத்தெனக்
கொற்ற வெம்பணி நாணெ னும்படி
கொண்டு மான்முத லண்டரும்
துற்ற தானவ ருங்க டைந்தனர்
தொன்மை வைகலின் வன்மையால். கOங

---

921. எங்கண் ஏகுதி - எங்கே போகிறாய். கூற - சிவபிரான் சொல்ல. சிவபிரானோடு போரிட வந்தேன் என்று சலந்தரன் சொன்னான். காண்டும் - பார்ப்போம். நிலத்தின்மேல் காலால் ஒரு சக்கரத்தைக் கீறி அதை எடுப்பாயாக என்று பிராமண வடிவங்கொண்ட சிவபிரான் சொல்ல, அதை அவன் எடுக்க, அவன் உடம்பை அது அறுக்கவே அவன் இறந்தான்.

922. ஊறு - துன்பம். நச்சி - விரும்பி. தருமத்து இறை - தருமதேவதை. ஏறதாம் உரு எய்தி - இடப ரூபம் கொண்டு, தரும தேவதை இடபமாக அதைச் சிவபிரான் வாகனமாக ஏற்றருளினார். ஊர்தி - வாகனமாக. அப்படி - அவ்வாறே வாகனமாக.

923. ஒற்கம் இல் - தளர்ச்சியில்லாத. பாலுறு வேலையில் - பாற்கடலில். மந்தரமலையை மத்தாகவும் வாசுகியாகிய பாம்பைக் கயிறாக

924. நாக வாயினு மாழி வாயினும்
நஞ்செ ழுந்து தொடர்ந்திட
மேகமேனிய னாதி யாகிய
விண்ணு ளார்கள் வெரீஇயிரிந்
தேக நாயகன் வாழ்பெ ருங்கயி
லாய விண்டுவி லேகியே
சோக மோடர னைப்ப ணிந்துறு
துக்க நக்கனொ டோதினார். கOச

925. அந்த வேலையில் விண்ணு ளார்களும்
ஆரு முய்ய விரங்கியே
உந்து மேவல்செய் சுந்த ரன்றனை
ஒல்லை சென்று விடங்கொடே
வந்தி டென்ன நடந்து கைக்கொடு
வந்த ரன்கையி லுய்ப்பவங்
கெந்தை யுண்டன னுண்டி லானெனின்
யாவர் பின்ன ரிருப்பவர். கOரு

926. முக்க ணாயகன் மிகுமு யிர்த்தொகை
அகிலம் யாவு முடித்தபோ
தக்க ணந்தனி லீம மாயிடும்
அன்ன தாகிய வீமமேல்

வும் கொண்டு தேவரும் அசுரரும் பாற்கடலைக் கடைந்தனர். நாண் - கடைகயிறு. அண்டர் - தேவர். துற்ற - நெருங்கிய. தானவரும் - அசுரரும். தொன்மை வைகலின் - பழங்காலத்தில்.

924. நாகவாயினும் - வாசுகியென்னும் பாம்பின் வாயிலிருந்தும். ஆழிவாயினும் - பாற்கடலிலிருந்தும். மேகமேனியன் - திருமால். வெரீஇ - அஞ்சி. இரிந்து ஏக - கெட்டு ஓடிப்போக. ஏகநாயகன் - சிவபிரான். விண்டு - மலை. நக்கனொடு - சிவபிரானோடு.

925. உய்ய - உயிர் பிழைக்க. உய்ப்ப - கொடுக்க.

926. அகிலம் யாவும் முடித்தபோது - சர்வலோகங்களையும் சங்காரம் செய்த காலத்தில். ஈமம் ஆயிடும் - எல்லா உலகங்களும் மயானமாகிவிடும். மடந்தை - உமாதேவியார்.

மைக்க ருங்கண் மடந்தை பங்குள
வள்ள லாடுமி தன்றியும்
தக்க கங்கையை யோங்கு மாமுடி
தாங்கு கின்றது சாற்றுவாம். கOசு

927. முன்ன ரோர்பக லம்மை நம்பன்
முரண்ட ரும்விழி பொத்தலும்
அன்ன காலையி லெங்கு முச்சுடர்
அற்று வீறிரு ளாகவே
மின்னு நெற்றியி லுற்ற கண்ணை
விழிப்ப வெங்கும் விளங்கியே
தொன்மை போலுற வஞ்சி வஞ்சி
துணைக்க ரத்தை விடுத்தனள். கOஎ

928. அம்மை தன்கர வங்கு லிப்புடை
அங்கு வேர்வை யெழுந்துபின்
செம்மை கொண்டிடு பத்த தான
திருந்து கங்கைக ளாகியே
வெம்மை யோடுல கங்கள் கொண்டிட
மேவ மான்முதல் விண்ணுளோர்
எம்மை யாளுடை யண்ணல் வாழ்கயி
லாய வண்குவ டெய்தினர். கOஅ

929. கண்ணு தற்பர மற்ப ணிந்துல
கங்கள் கொண்டிடு கங்கையை
அண்ண லேயிவ ணீய ணிந்தெமை
ஆள்தி யென்று வழுத்தலும்

927. முரண் தரும் - ஒன்றுக்கு ஒன்று மாறுபடும். முச்சுடர் அற்று - சூரிய சந்திராக்கினிகள் ஒளிதருதலை நீங்கி. அஞ்சி வஞ்சி - உமாதேவியார் பயந்து.

928. கர அங்குலிப்புடை - கைவிரல்களில். பத்து விரல்களிலும் உண்டான வேர்வை பத்துக் கங்கைகள் ஆயின. குவடு - மலை.

929. அணிந்து - தரித்து. ஒளி திருவேணியில் - ஒளியையுடைய திருமுடியில். தண் நிலாவு ஒரு ரோமமீது - குளிர்ச்சியை

விண்ணு லாவிய கங்கை தன்னை
விளித்தொ ளித்திரு வேணியில்
தண்ணி லாவொரு ரோம மீது
தரித்த னன்றனை நேரிலான். கஉகூ

930. இன்ன தல்லது தொல்லை நாளில்
இலங்கு பங்கய வாழ்வினன்
மன்னு கின்ற படைத்தி டுந்தொழில்
மாறி வீறிய மாயவன்
முன்ன ரேகி மொழிந்த போதவன்
முண்ட கத்திறை தன்னொடு
மின்னி ருங்கயி லாய முற்றர
னைப்ப ணிந்து விளம்புவான். ககo

931. ஆதி நின்னரு ளால்வி திக்கும்
அயன்றொ ழில்சிதை வாயதால்
ஈதி யென்றிட மால யன்றனை
எங்க ளையக னோக்கியப்
போது நீறது கண்டி டங்கொள்
புயந்த ரித்தன னவ்விடை
மாது தோன்றினள் பின்பெ ழுப்பி
வரங்கொ டுத்து விடுத்தனன். ககக

யுடைய ஒரு மயிரில்; ஒரு சடையில் என்றும் கூறுவதுண்டு. தனை நேர் இலான் - தமக்கு ஒப்பார் ஒருவரும் இல்லாதவர்.

930. தொல்லை நாளில் - பழங்காலத்தில். பங்கய வாழ்வினன் - பிரமதேவன். முண்டகத்து இறை - பிரமன்.

931. அயன் - பிரமனது. சிதைவாயது - கெட்டது. ஈதி - அதைச் செய்வனே தருவாயாக. மாலையும் அயனையும். நீறது கண்டு- எரித்து நீறாக்கி. இடம் கொள் புயம் தரித்தனன் - இடத்தோளில் அணிந்து கொண்டார். அவ்விடை - அந்த இடப்பாகத்தில். மாது - உமாதேவியார். எழுப்பி - எரித்த திருமால் முதலியவர்களை மீட்டும் உயிர்ப்பித்து.

932. சொற்ற வின்னது நிற்க முற்பகல்
தோன்மு கம்பெறு தானவன்
நற்ற வம்பல நாள்பு ரிந்தரன்
நல்கு யர்ந்த வரத்தினால்
உற்ற சீரிமை யோர்கள் வந்துதன்
ஏவல் செய்ய வுறைந்தனன்
மற்று மோர்பணி யிந்தி ராதியர்
வந்து செய்திட வோதினான். கக௨

933. இங்கு நம்மு னடைந்து நுங்கள்
இருஞ்சி ரங்களின் மும்முறை
செங்க ரங்கொடு தாக்கி யேயிரு
செவிக ளூடு செழுங்கரம்
தங்க நின்று நிலத்தி லன்பொடு
தாழ்ந்தெ ழுந்திடு மென்றிடப்
பங்க முற்றிடு மன்ன புன்றொழில்
பற்ப கற்புரிந் தாரரோ. கக௩

934. புரிந்த யர்ந்தயன் மாலி னோடிது
புகல வானவ ரைக்கொடே
திருந்தி டுங்கயி லாய மேவிய
சிற்ப ரன்றனை நண்ணியே
பரிந்தி றைஞ்சின ரும்ப ரின்னல்
பகர்ந்த போதொரு பாலனை
விரைந்த ளித்தவு ணன்ற னைக்கொல
விடுவ மென்று விளம்பினான். கக௪

---

932. தோல் முகம் பெறு தானவன் - யானை முகத்தைப் பெற்ற அசுரன்; கஜமுகாசுரன். மற்றும் ஓர் பணி - வேறு ஒரு குற்றேவலை.

933. உங்கள் தலைகளில் மூன்று தடவை குட்டிக்கொண்டு இரண்டு காதுகளையும் கையால் பிடித்துக்கொண்டு வணங்கவேண்டும் என்றான். பங்கம் - அவமானம்.

934. அயர்ந்து - தளர்ச்சியை அடைந்து. அயன் - பிரமன். பரிந்து - அன்பு செய்து. ஒரு புத்திரனை அளித்துக் கஜமுகாசுரனை அழிக்கச் செய்வோம் என்று சிவபிரான் திருவாய் மொழிந்தருளினார்.

935. என்ற பின்பரன் மாதி ஞேடும்
இலங்கு சோலையுண் மேவவே
குன்று ருத பெரும்பு கழ்பெறு
குடிலை தானிரு தந்தியாய்
அன்று நற்கல வித்தொ ழில்செய
ஐங்க ரத்த னுதித்துநீள்
வன்றி றற்பர ஞேடு மாதை
வணங்க மார்பி லணைத்தனர். ககரு

936. அந்த வேலையி லாதி நோக்கி
அருந்தி றற்பெறு தோன்முகன்
சிந்த வேபொரு தும்பர் தந்துயர்
தீர்த்தி யென்றருள் செய்திடத்
தந்தி மாமுக ஞேடு வெய்ய
சமர்பு ரிந்தவ னைக்கொலா
வந்த னன்கயி லாய வெற்பினில்
வானு ளார்கள் வணங்கினர். ககசு

937. சீறு தோன்முகன் மாள வேயமர்
செய்த நிற்கடி யேங்கள்கைம்
மாறு செய்வதெ னென்று தாமவன்
முன்பு ரிந்திடு வன்பணி
ஈறி லங்கரன் முன்பு ரிந்தவன்
ஏவ வானக ரேகினர்
ஊறி லாத பரன்க ணேர்குணம்
உற்ற தன்மை யுணர்த்துவாம். ககஎ

---

935. குடிலைதான் - பிரணவம். இரு தந்தியாய் - இரண்டு யானைகளாகி. ஐங்கரத்தன் - ஐந்து கரங்களையுடைய விநாயகர்.

936. ஆதி - சிவபிரான். தோல் முகன் சிந்தவே பொருது - கஜமுகாசுரன் அழியும்படி அவனேடு போர் செய்து. தீர்த்தி - போக்கு வாயாக. கொலா - கொன்று.

937. தோல் முகன் - கஜமுகாசுரன். கைம்மாறு - பிரதி உப காரம். தாம் - தேவர்கள். அவன்முன் புரிந்திடு வன்பணி - அந்த

938\. மரும லிந்திடு பங்க யத்தனை
  மாய வன்றனை நல்கியே
திரும லிந்திடு சாத்தி கத்தொடு
  சீரி ராசத மாகிய
இருமை கொண்ட குணங்கொ டுத்தபின்
  ஈத லோடு புரத்தலும்
தருவன் யாவு மழித்தி டுஞ்செயல்
  தன்ன தென்று தரிக்குமே. கக௮

939\. ஏத மற்றிடு தான லாதெவ
  ராலு மற்ற தியற்றொணா
தாத லாலது செய்வ னன்னதில்
  அன்ன வன்புடை தாமதம்
ஓது வாரல தங்க வன்கண்
  உறைந்தி டுங்குண மன்றரோ
வேத மானவை சிற்கு ணத்தினன்
  விமல னென்று விளம்புமால். கககூ

940\. என்று பற்பல வாச கங்கள்
  இருந்த தீசி யியம்பலும்
வென்றி நான்மறை நான்மு கன்றரு
  வெய்ய தக்கன் வினவியே

அசுரன் முன்பு செய்து வந்த பணியாகிய, குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போடுதலை. புரிந்து அவன் ஏவ. பரன்கண் - சிவபிரானிடம். ஓர் குணம் - தாமதகுணம்.

938\. மரு - நறுமணம். பிரமதேவனையும் திருமாலையும் உற்பத்தி செய்து அவர்களுக்குச் சாத்விகமும் ராஜஸமுமாகிய குணங்களைக் கொடுத்துச் சிருஷ்டிஸ்திதி யென்னும் தொழில்களைத் தந்தார்.

939\. தானலாது - சிவபிரானையல்லாமல். மற்று அது இயற்ற ஒணாது. தாமதம் ஓதுவார் - தாமத குணம் உண்டென்று சொல்வர். அது அவனிடம் நிலையாக உள்ள குணமன்று. சிற்குணத்தினன் - ஞானமாகிய குணத்தையுடையவன். விமலன் - மலமற்றவன்.

940\. இரும் ததீசி - தவத்தினாற் பெரிய ததீசி முனிவர். பொன்று காலம் அடுத்தலால் - அழியுங் காலம் வந்தமையால். அவை -

பொன்று கால மடுத்த லாலவை
புந்தி யென்று நினைந்திலன்
குன்ற வில்லி பதத்தி லன்புறு
கோதி லாடுெடி தோதுவான். கஉ௦

941. பெண்ணி னுக்குரு நல்கு முங்கள்
பிரானை வர்க்கு முயர்ந்தசீர்
அண்ண லாயினு மாக விங்கவி
அன்ன வற்குத வேணியான்
எண்ணி யாது மியம்பு றுதினி
ஏகு வாயென வோதலும்
துண்ணெ னச்சின முற்றெ ழுந்திது
சொல்லு வான்வினை வெல்லுவான். கஉக

942. இந்து லாவு நெடுஞ்ச டாடவி
எம்பி ரானை விலக்கியிங்
குந்து சீரொ டியற்று மிம்மகம்
ஒல்லை யின்னழி வாகுக
புந்தி யற்றிடு முன்ற னோடு
பொருந்து மும்பரு மிவ்விடை
அந்த மேவுக வென்று பின்னிஃ
தந்த ணர்க்கு முரைத்தனன். கஉஉ

943. வீறு தங்கிய நுங்கு லத்தின்
இயற்கை தன்னை விடுத்துநீர்
ஆறு தங்கிய சென்னி யானையும்
அன்ன வற்கடி யாரையும்

ததீசி கூறியவற்றை. புந்தி என்று - அறிவுரை யென்று. குன்ற வில்லி - மேருவில்லியாகிய சிவபிரான். கோதிலான் - ததீசிமுனிவர்.

941. உருநல்கும் - தம் உடம்பின் ஒரு பகுதியைக் கொடுக்கும். இங்கு அன்னவற்கு யான் அவி உதவேன்.

942. இந்து - சந்திரன். சடாடவி - காடு போன்ற சடை. மகம் - யாகம். ஒல்லையின் - விரைவில். அந்தம் மேவுக - முடிவை அடைவார்களாக.

நீறு கண்டிகை மாலை தம்மையும்
நீங்கி வெந்துயர் தாங்கியே
பேறு தங்கிய வீடு ருறது
பிறந்தி றந்திடு மென்றனன். கஉ௩

944. இன்னல் கொண்டிட வின்ன சாபம்
எவர்க்கு மங்க ணிசைத்தபின்
மன்னு நன்னெறி மாத வத்தர்
மருங்கி ரண்டு நெருங்கவே
தன்னி ருக்கையி லேகி னுயர்
சங்கு தங்கு கரத்தனை
முன்னர் வெநநது கண்ட வன்பிறை
முடிய வன்றன தடியவன். கஉ௪

(தரவு கொச்சகக்கலிப்பா)

945. மாசில் பெரும்புகழ்சேர் மாமுனிவன் போனதற்பின்
ஆசி லயினியளித் தாடகமு மாடைகளும்
நேச முறைய நிறைய மறையோர்பால்
வீசி விதிபுதல்வன் வேள்வி புரிந்தனனே. கஉ௫

946. அவ்வாறு கண்டா னகல்வான் றணிற்றிரியும்
செவ்வார் சடிலத் திருநா ரதமுனிவன்

---

943. ஆறு தங்கிய சென்னியானையும் - கங்காதரராகிய சிவபிரானையும். நீற்றையும் கண்டிகை மாலையையும் ; கண்டிகை - ருத்திராட்சம். வீடு உறுது - முத்தியை அடையாமல்.

944. அங்கண் - அங்கே. நல் நெறி மாதவத்தர் - நல்ல நெறியில் ஒழுகும் முனிவர்கள். சங்கு தங்கு கரத்தனை - திருமாலை. வெந் அது கண்டவன் - புறங்காட்டி ஓடச்செய்த ததீசி முனிவர்.

945. அயினி - உணவு. ஆடகம் - பொன். விதி புதல்வன் - தக்கன்.

946. செ வார் சடிலம் - சிவந்த நீண்ட சடையை உடைய. குவட்டு வண்மைக்கயிலையில் - மலையாகிய வளம் மிக்க கைலாசத்திற்கு. பை - படம். துத்தி - படப்பொறி. பணியான் - சர்ப்பாபரணராகிய சிவபிரான்.

மைவாழ் பெருங்குவட்டு வண்மைக் கயிலையிற்போய்ப்
பைவாழுந் துத்திப் பணியான் பதம்பணிந்து. கஉசு

947. நின்றான் பரன்பாரா நீள்புவியி லேதுநிகழ்
வென்றா னெனலு மிறைவ வமரரொடு
மென்றா மரைமேல் விதிபுதல்வன் வேள்விபுரி
கின்றா னெனவெழுந்தாள் கெண்டையங்கட் காரிகையே.

948. எழுந்தாள் பரம னெழிற்கமலத் தாண்முன்
விழுந்தாண் மகந்தெரிந்து மீள்வனென மாற்றம்
அழுந்தா தரவா லவள்புகலப் பின்னர்ச்
செழுந்தா தகிச்சடிலத் தேவன் விடைகொடுத்தான்.

949. பொன்றாங்கு மானம் புகுந்தாள் புகழ்மாதர்
துன்றா வயலே சுலவத்தன் றாதையிடைச்
சென்றா ளனையான் றெரிந்திகழ்ந்து போதிகடி
தென்றான் பலநிந்தை யீசனையும் பேசினனே. கஉகூ

950. நக்கன் றனைப்பழிக்க நாரி யதுகேளா
மிக்க சினம்படைத்து வெள்ளிப் பொருப்படைந்து
முக்கட் பரன்பாத முன்பணிந்துன் றன்னையெண்ணாத்
தக்கனது வேள்வி தனையழிக்க வேண்டுமென. கஙo

951. அம்மை பணிந்திரப்ப வன்ன செயன்முடிப்பான்
எம்மையினி தாளு மிறையோ னினைத்திடலும்

---

947. ஏது நிகழ்வு - என்ன நடப்பது. விதி புதல்வன் - தக்கன். கெண்டை அம் கண் காரிகை - உமாதேவியார்.

948. மகம் தெரிந்து - யாகத்தைப் பார்த்துவிட்டு. தாதகிச் சடிலத்தேவன் - கொன்றைச் சடையையுடைய சிவபிரான்.

949. பொன் தாங்கு மானம் - பொன்னாலாகிய விமானம். சுலவு - சூழ. தன் தாதையிடை - தன் தந்தையாகிய தக்கனிடத்தில். போதி கடிது - விரைவில் இவ்விடத்தை விட்டுப் போவாயாக.

950. நக்கன் - திகம்பரராகிய சிவபிரான். நாரி - உமாதேவியார். வெள்ளிப் பொருப்பு - கைலாசத்தை.

செம்மை நுதல்விழியிற் சென்னிகளோ ராயிரத்தோ
டிம்மெனவே வந்தா னெழில்வீர பத்திரனே. கரு௧

952. அப்போது தன்னிலெம தன்னை பெருஞ்சினத்தாற்
கைப்போதி ராயிரமுங் காமர்முக மாயிரமும்
துப்போ டிலங்கத் துலங்குவிறற் காளியுதித்
தொப்போரில் வீரன்பாற் றேவியா யுற்றனளே. கரு௨

953. அன்ன பொழுதரனை யன்னநடை யம்பிகையைப்
பன்னருஞ்சீர் வீரன் பணிந்தே பணியடியேற்
கென்னை யெனலு மெமையெண்ணுத் தக்கன்மகம்
தன்னை மருவியவி தந்திடெனச் சாற்றுதியால். கருந

954. தந்தா லிவண்வருதி தாரானே லக்கொடியோன்
சிந்தா குலஞ்சேரச் சென்னிதடிந் தாங்கிருந்தோர்
உந்தாவி கொண்டுமக மொல்லை யழித்திடுதி
மைந்தாவி யாமும் வருகின்றோ மென்றனனே. கருச

---

951. முடிப்பான் - நிறைவேற்றும் பொருட்டு. இம்மெனவே - விரைவில். சிவபிரான் நெற்றிக் கண்ணிலிருந்து ஆயிரம் சிரமுள்ள வீரபத்திரர் தோன்றினர்.

952. உமாதேவியாருடைய கோபத்தீயிலிருந்து ஈராயிரம் கைகளும், ஆயிரம் திருமுகங்களும் உடைய காளி தோன்றி வீரபத்திரருக்குத் தேவியாகச் சேர்ந்தாள்.

வீரன் - வீரபத்திரர்.

953. அன்ன நடை - அன்னத்தைப் போன்ற நடையையுடைய. அரனையும் அம்பிகையையும். வீரன் - வீரபத்திரர். பணி - ஏவல். என்னை - ஏது. அவி தந்திடு என - நமக்கு உரிய அவிர்ப்பாகத்தைத் தருவாயாக என்று.

954. தந்தால் இவண் வருதி - தக்கன் அவிர்ப்பாகத்தைக் கொடுத்தால் அதைப் பெற்றுக் கொண்டு இங்கே வா. சிந்தாகுலம் சேர - மனத்துயரம் அடையும்படி. சென்னி தடிந்து - தலையைக் கொய்து. ஆங்கு இருந்தோருடைய ஆவியைக் கொண்டு மகத்தை அழித்திடுதி. மைந்தா : விளி.

955. என்ன விடைகொண் டெழின்மேவு காளியொடும்
தன்னுருவில் வந்துதித்த சாரதர்கள் சேனையொடும்
மன்னுபுகழ்த் தக்கன் மகச்சாலை வந்தணுகிப்
பொன்னிலகு செஞ்சடிலப் பூதர்க் கிதுபுகல்வான். கநரு

956. ஆலமிடற் றெம்மானை யன்றிமகஞ் செய்புமிந்தச்
சாலையெயில் வாச றனைக்காவல் கொண்மினெனுச்
சீலமிகும் பூதர் சிலவர் சுலவவெழில்
வேலனகட் காளியொடு வேள்விக் களம்புகுந்தான்.

957. தண்டா மரையான் றனயன் மகம்புரிதல்
கண்டான் வெகுண்டா னுருமே றெனக்கலித்தான்
வண்டார் நெடுந்தார் வயக்கொம் பினைக்குறித்தாங்
கண்டார் வெருவ வடலோடு நின்றனனே. கநஎ

958. ஈடுசேர் வீர னிசைத்த விசைகேளா
வாடினார் சிந்தை வருந்தினார் வல்லையெழுந்
தோடினார் மீண்டா ருலைந்தா ருறுதுயரம்
கூடினார் விண்ணோர் கொடியோ னிதுதெரிந்தான். கநஅ

959. வீரன் றனைநோக்கி வேதன் றருங்கொடியோன்
ஆரை யிவணீ யடைந்ததெவ னென்றிடலும்

---

955. மகச்சாலை - யாகசாலை. செஞ்சடிலம் - சிவந்த சடையை யுடைய.

956. ஆலமிடற்று எம்மானை அன்றி - நீலகண்டப்பெருமானாகிய சிவபிரானை விரோதித்து; அவனை யல்லாமல் எனலுமாம். எயில் வாசல் தனை - மதில் வாசலை. சிலவர் சுலவ - சிலபேர் காவலாகச் சூழ. வேல் அன்ன கண்.

957. தண் தாமரையான் - பிரமன்; அவன் தனயன், தக்கன். உருமேறு என கலித்தான் - இடியைப்போலக் கர்ச்சித்தான். வண்டு ஆர். வயக்கொம்பினைக் குறித்து - வெற்றியைக் குறிக்கும் ஊது கொம்பை முழக்கி. அண்டார் - பகைவர்.

958. வீரன் - வீரபத்திரர். உலைந்தார் - தளர்ச்சி அடைந்தார். விண்ணோர் : எழுவாய்.

காரிலகு கண்டக் கடவுள்விட வந்தடைந்தேன்
நேரி லவனவிநீ நேர்வா யெனவுரைத்தான். கருகூ

960. காவி நயனக் கலசமுலைக் காளியெனும்
தேவியொடு நின்ற திறலாள னீதிசைப்பக்
கோவின் மிசையேறுங் கோவை யிகழ்ந்துமொழிந்
தாவி கொடுப்பா னவிகொடே னென்றனனே. கசo

961. தன்னை மதித்தகொடுந் தக்கனிது சாற்றுதலும்
மன்னு திறல்வீரன் வானோர் தமைநோக்கி
இன்ன துமக்கு மிசைவோ வெனவிசைப்ப
உன்னியொன்று மோதாம லூமர்போ லுற்றனரே.

(வஞ்சிவிருத்தம்)

962. இவ்வாறு வானவ ரிருப்பச்
செவ்வாய் திறந்துநகை செய்தே
மைவாழ் களத்தனருண் மைந்தன்
அவ்வா யியற்றுமிவை யம்மா. கசஉ

963. தண்டா விறற்குலவு தண்டால்
வண்டார் நறுந்துளவ மாலைப்

---

959. வேதன் தரும் கொடியோன் - தக்கன். ஆரை - நீ யார். எவன் - என்ன காரணம். காரிலகு கண்டக் கடவுள் - நீலகண்டப் பெருமான். அவன் அவி - அவருக்குரிய அவிர்ப்பாகத்தை. நேர்வாய் - அளிப்பாயாக.

960. காவி நயனம் - நீலமலரைப் போன்ற கண்கள். திறலாளன் - வீரபத்திரன். கோவின் மிசை ஏறும் கோவை - இடப வாகனத்தின்மேல் எழுந்தருளும் சிவபிரானை. ஆவி கொடுப்பான் - உயிரைக் கொடுக்க நின்ற தக்கன்.

961. தன்னை மதித்த - தன்னையே பேராற்றல் உடையவனாக மதித்த. இன்னது உமக்கும் இசைவோ - இவன் சொல்வது உங்களுக்கும் சம்மதமோ. ஊமர்போல் - ஊமைகளைப்போல.

962. மை வாழ் களத்தன் - நீலகண்டப்பெருமான். மைந்தன் - வீரபத்திரர். அவ்வாய் - அவ்விடத்தில்.

புண்டா னுறும்படி புடைப்ப
விண்டா னெனப்படி விழுந்தான். கசங

964. மட்டுறுவி ரைக்கமல மன்முன்
கிட்டிநளி னத்தெழில் கெடுத்துக்
கட்டழகு தங்கிய கரத்தாற்
குட்டினன் முடித்திரள் குலுங்க. கசச

(கலிவிருத்தம்)

965. விழுந்தான் வேதனும் வெண்மை மாமதி
எழுந்தா னோடலு மீசன் மாமகன்
செழுந்தாள் கொண்டடே றேயு மாறுசெய்
தொழிந்தார் தம்மையு மூறி யற்றினான். கசரு

966. அறந்தா னோவிய வண்டர் யாவரும்
இறந்தா ராயு மிலங்கு ணர்ச்சிகள்
மறந்தா ராயு மகக்க ளத்தின்வாய்
உறைந்தா ராட லுகந்த வீரனால். கசசு

967. கண்டா னீது கலங்கி வெந்துயர்
கொண்டா னெஞ்சு குலைந்து மொய்ம்பினில்
தண்டார் கொண்டுள தக்க னிற்றலும்
அண்டார் கூற்றிஃ தாற்று வானரோ. கசஎ

---

963. விறல் - பலம். தண்டால் - கதாயுதத்தால். வண்டு ஆர். துளவத்தை யணிந்த திருமாலை. விண்டான் என - இறந்துபட்டான் என்று சொல்லும்படியாக. படி - பூமியின்மேல்.

964. மட்டு - தேன். கமல மன் - பிரமன். கிட்டி - சென்று. நளினத்து எழில் - தாமரையின் அழகை.

965. மதி - சந்திரன். அவனைக் காலால் தேய்த்தார். ஒழிந்தார் தம்மையும் - மற்றவர்களையும். ஊறு இயற்றினான் - பங்கம் செய்தார்.

966. அறந்தான் ஓவிய - தர்ம மார்க்கத்தை விட்டு நீங்கின. அண்டர் - தேவர். மகக்களத்தின் வாய் - யாகசாலையில். ஆடல் - உகந்த - போரை மேற்கொண்ட. வீரனால் - வீரபத்திரரால்.

967. மொய்ம்பினில் - தோளில். அண்டார் கூற்று - பகைவர்களுக்கு யமனைப் போன்ற வீரபத்திரர்.

968. செறுத்தா னேறிய தேவை யெள்ளிய
மறுத்தா நெஞ்சுடை வஞ்சன் மாமுடி
அறுத்தா னங்கி யருந்த நல்கினன்
வெறித்தார் மொய்ம்புள வீர வீரனே. கசஅ

969. மாலே தங்கிய வஞ்சன் மாய்தலும்
வேலே யன்னகண் வேத வல்லிதன்
பாலே மாதர் பரம்பி வந்திடக்
காலே போன்று கடிதின் மேவினாள். கசகூ

970. துன்பங் கொண்டு துளங்கி வந்துளாள்
முன்பங் கெய்தி முரண்கொள் காளிதன்
அன்பன் னேர வணங்கின் வார்குழை
மின்கொள் கேள்வி யறுப்ப வீழ்ந்ததே. கரு0

971. பிடித்தாண் மற்றுள பேதை மாதரைக்
கடித்தார் கொண்ட கவின்கு ழற்றலை
வடித்தார் வாள்கொடு வல்லை கொய்துபங்
தடித்தா ளெம்மை யளிக்கு மன்னையே. கருக

---

968. ஆன் ஏறிய தேவை செறுத்து - இடபவாகனராகிய சிவபிரானைப் பகைத்து. மறு தாம் நெஞ்சுடை வஞ்சன் - குற்றம் பரவிய நெஞ்சத்தையுடைய பாவியாகிய தக்கன். முடி அறுத்தான் - தலையை வெட்டி. அங்கி அருந்த - அங்கே இருந்த ஹோமாக்கினி உண்ணும்படியாக. வெறி தார் - மணமிக்க மாலையை அணிந்த. மொய்ம்பு - தோள்.

969. மால் - மயக்கம். வேதவல்லி - தக்கனுடைய மனைவி. பரம்பி - பரந்து. காலே போன்று - காற்றைப்போல.

970. முரண் - வலிமை. தன் அன்பன் நேர - தன் கணவராகிய வீரபத்திரரைப்போல. குழை மின்கொள் கேள்வி - குழைமின்னுகின்ற காதை. காளி அறுப்ப.

971. கடி தார் - மணமுள்ள மாலை. குழல்தலை - கூந்தலையுடைய தலைகளை. வடித்து ஆர் வாள்கொடு - நன்றாகச் செய்யப்பட்டுள்ள வாளால்; வடி தார் - கூர்மையையும் மாலையையும் உடைய எனலும் ஆம். அன்னை - காளி.

(வேறு)

972. வீரர் னேவலின் விரைந்தெயி லுடைத்தே
தாரு லாவுமகச் சாலையை யழித்தே
கோர மோடுபல் கொடுந்தொழில் புரிந்தார்
போரெ னிற்களி பொருந்தியிடு பூதர். கருஉ

973. முந்து நொந்திடு முகுந்தனெனு மேலோன்
சிந்தை வெந்துயர் தெளிந்திவை தெரிந்தே
உந்து கின்றவுவ ணத்தின்மிசை யுற்றே
மைந்து கொண்டகணை மாரிகள் சொரிந்தான். கருங

974. நின்ற பூதரு நெருப்பெழ விழித்தே
துன்று வாளிகள் சொரிந்தமர் புரிந்தார்
வென்றி கொண்டபுய வீரனிது கண்டே
சென்று மாலொடு செருச்செய நினைந்தான். கருச

975. அன்ன போதிலெம தண்ணலரு ளாலோர்
மின்னு தேரணுக வேதனதன் மீதே
துன்னு வீரனெதிர் சூதனென வந்தே
இன்ன வையமிசை யேறென விரப்ப. கருரு

976. வீறு காளியொடு வீரனதன் மீதே
ஏறி நான்முக னிலங்கிரத முய்ப்ப

---

972. எயில் உடைத்தே - மதிலை இடித்து. மகச்சாலையை - யாகசாலையை. கோரமோடு - கொடுமையோடு.

973. முகுந்தன் - திருமால். உவணத்தின் மிசை - கருடவாகனத்தின்மேல். மைந்து - வலிமை திருமால் அம்புகளை எய்தார்.

974. வாளிகள் - அம்புகளை. வீரன் - வீரபத்திரர். செருசெய - போர் செய்ய.

975 எமது அண்ணல் - சிவபிரான். வேதன் - பிரமன். சூதன் என - தேர்ப்பாகனாக. வையமிசை - தேரின்மேல். இரப்ப - பிரமன் பணிந்து கூற.

976. இரதம் உய்ப்ப - தேரைச் செலுத்த. மாறு - பகை. முராரி - திருமால்.

மாறு கொண்டுபொரு மாயனெதிர் வல்லே
சேற லோடுமிவை செப்புவன் முராரி. கருசு

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

977. தன்னிக ரண்ணலை யெள்ளும்
தக்கனை யட்டிட லல்லால்
மன்னிய விண்ணவ ரெல்லாம்
மாள வியற்றிய தென்னோ
என்னலு மக்கொடி யோனோ
டெய்துதல் கண்டுயிர் கொண்டோம்
உன்னையு மின்னுயி ரின்னே
உண்குவ மென்ன வுரைத்தான். கருஎ

978. வண்டு படிந்த நெடுந்தார்
மார்பின் மிடைந்த வளைக்கைக்
கொண்டல் வெகுண்டு கரத்தே
கொண்ட நெடுஞ்சிலை கோட்டித்
திண்டிற லொலி காட்டித்
தீய சரம்பல பூட்டிப்
புண்டரு வெய்ய படைக்கைப்
பூதர்கண் மீது பொழிந்தான். கருஅ

(எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

979. கண்டனனி ருண்ட கண்டன்மக னுந்து
கார்முக மிசைச்சி லீமுக மிசைத்து
வண்டுள மகிழ்ந்த வண்டுள வலங்கல்
மாயவன் விடுத்த வாளிகண் முருக்கி

---

977. அண்ணலை - சிவபிரானை. அட்டிடல் அல்லால் - கொல்லு தலையன்றி அக்கொடியோனோடு - தக்கனோடு.

978. வளைக்கைக் கொண்டல் - சங்கபாணியாகிய மேக நிறம் பெற்ற திருமால். நெடுஞ்சிலை கோட்டி - நீண்ட வில்லை வளைத்து. சரம் - அம்புகள்.

979. இருண்ட கண்டன் மகன் - வீரபத்திரர். கார்முகம் மிசை சிலீமுகம் இசைத்து - வில்லில் அம்புகளை வைத்து. வண்டு

ஒண்டிறல் பொருந்த விண்டு நுதலின்கண்
ஓர்கணை யழுத்த வோகையி லிடுக்கண்
அண்டின னகன்று மொய்ம்ப னெதிர்பின்பும்
ஆசுக மளப்பி லாதன வுகைப்ப. கருசு

980. உத்தமனு மெத்து மத்திர முரத்தொ
டுந்திபரி யுந்து முந்துகணை சிந்தி
நத்துறு கரத்த னற்றனுவை யொற்றை
நன்கணைது ரந்து நந்திடல் புரிந்து
கொத்துமுவ ணத்த டற்சிறகை மிக்க
கொன்கணை யிரண்டு கொண்டரிதல் கண்டு
மைத்திரு நிறத்தன் மற்றிகிரி யுய்ப்ப
வந்தது விரைந்து மண்டல நடுங்க. கஅ0

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

981. அங்காழிப் படைவருத றெரிந்தான்
அடல்வீரன் கடிதுபிடித் தயின்றான்
கொங்காரு நறுந்துளவ நெடியோன்
கொடுவாள்கொண் டிறையோன்முன் குறுக

உளம் மகிழ்ந்த வண் துளவு அலங்கல்; துளவு - துழாய். முருக்கி - அழித்து. விண்டு நுதலின்கண் - விஷ்ணுவின் நெற்றியில். ஓகை இல் இடுக்கண் அண்டினன் - மகிழ்ச்சி நீங்கிய துன்பத்தை அடைந்து. மொய்ம்பன் எதிர் - வீரபத்திரருக்கு எதிரே. ஆசுகம் - அம்புகள், உகைப்ப - எய்ய.

980. மெத்தும் அத்திரம் - மிகுதியான அம்புகளை. உரத்தொடு உந்தி - வேகத்தோடு எய்து. கணை சிந்தி - அம்புகளை வீழ்த்தி. நத்துறுகரத்தன் - சங்கைக் கரத்திலே கொண்ட திருமால். நல் தனுவை ஒரு கணை எய்து அறுத்து; நந்திடல் - கெடுத்தல். உவணத்து அடல் சிறகை - கருடனது பலம் பொருந்திய இறகுகளை. சிறகை அரிதல் கண்டு. மைத்திரு நிறத்தன் - மேக வண்ணனாகிய திருமால். மல் திகிரி - வளமுடைய சக்கராயுதத்தை. மண்டலம் - பூமி.

981. ஆழிப்படை - சக்கராயுதம். அதை விரைவிலே பற்றி விழுங்கினார். கொங்கு - நறுமணம். நெடியோன் - திருமால். கொடு வாள் கொண்டு - கொடிய வாளாயுதத்தைக் கைக்கொண்டு. இறையோன் முன் - வீரபத்திரருக்கு முன்பு. உங்காரம் செய்தனன் - ஹூங்

உங்காரஞ் செய்தனனெம் பெருமான்
ஓவியம்போன் மாயவனுங் குறைந்தான்
மங்காத பெருஞ்சினமென் னினைந்தோ
மருவினு னுதல்விழியான் மதலை. ௯௮௧

982. எம்பெருமான் சினந்திடலுஞ் சினவேல்
எனவிசும்பில் வாசகமொன் றிசைப்ப
உம்பர்பிரான் றனதுசுத னதுகேட்
டுள்ளெழுவெஞ் சினமகன்றுங் குறலும்
செம்பதுமத் தணங்குரத்தோன் புகழ்ந்தே
சிதடனேன் புரிந்தபிழை செழுந்தீ
அம்பகநா யகன்புதல்வ பொறுத்தீண்
டளித்தியென வருள்புரிந்தா னமலன். ௯௮௨

983. அவ்வேலை வேலைவிட மருந்தி
அமரர்தம துயிர்காத்த வமலன்
வைவேலை முனிந்தநெடுந் தடங்கண்
மாதேடு வான்மீது வரலும்

கார முழக்கம் செய்தார். ஓவியம்போல் - சித்திரத்தைப் போலச் செயலற்று. குறைந்தான் - மெலிவடைந்தான். என் நினைந்தோ - எதனையோ எண்ணி. சினத்தை மருவினன். நுதல்விழியான் மதலை - வீரபத்திரர்.

982. சினவேல் என - நீ கோபம் கொள்ளற்க என்று. விசும்பில் வாசகம் ஒன்று இசைப்ப - ஆகாசத்தில் ஒரு தொனி உண்டாக. சுதன் - வீரபத்திரர். செம் பதுமத்து அணங்கு உரத்தோன் - திருமகளைத் திருமார்பிலே கொண்ட திருமால். சிதடனேன் - அறிவில்லாதயான். செழுந்தீ அம்பக நாயகன்-அக்கினியை நெற்றி விழியாக உடைய சிவபிரான். அளித்தி என - பாதுகாப்பாயாக என்று திருமால் வேண்ட. அமலன் - வீரபத்திரர்.

983. 'அவ்வேலை - அப்போது. வேலை விடம் - பாற்கடலில் எழுந்த ஆலகால விடத்தை. அமலன் - சிவபிரான். தடங்கண் மாதேடு - உமாதேவியாரோடு. செவ்வேணித் திறல் வீரன் - சிவந்த சடையையும் பலத்தையும் உடைய வீரபத்திரர். கைவேழம் உரித்த பிரான் - கஜசங்காரராகிய சிவபிரானுடைய.

செவ்வேணித் திறல்வீரன் றெழுதான்
திருமாலு மயனுமமர் செய்யும்
கைவேழ முரித்தபிரான் றிருத்தாட்
கமலமல ரெதிர்பணிந்து களித்தார். கசுந

984. ஓங்குமகக் களத்தினிடை மடிந்தே
உறுகின்றோர் தமையெமையா ளுமைகண்
டிங்கிவர்க ளெனதுபொருட் டிறந்தார்
இறைவபிழை பொறுத்தெழுப்பென் றிரப்ப
நீங்கருந்திண் டிறல்புனைதன் சுதனால்
நிமலனெவ ரையுமெழுப்ப நிலமேல்
தூங்கியெழுந் தெனவெழுந்தார் மறையோர்
துகடீரு முனிவரொடு சுரர்கள். கசுச

985. உஞ்செழுந்த வமரர்மா விடைமேல்
உயர்விசும்பி விறைவனைமா தொடுங்கண்
டஞ்சிமிக நடுங்குதலு மதிசூ
டருளாள னஞ்சலிரென் றருள
நெஞ்சமகிழ்ந் தடிபணிந்தார் புகழ்ந்தார்
நெடுமலரோன் மகற்காணு நிமலன்
கஞ்சமலர்க் கழல்பணிந்தென் மகனும்
கயவனெழுந் திலனெனவே கழறி. கசுரு

986. ஐயவவ னுய்யவருள் செய்யென்
றயனிரப்ப வுமைபாக னருளாற்
சையநிகர் புயவீரன் கடிதே
தக்கனுடன் மீதுமறித் தலையொன்

---

984. மகக்களத்தினிடை - யாகசாலையில். எழுப்பு - உயிர்ப்பித்தருள்க. சுதனால் - வீரபத்திரரைக் கொண்டு. எழுந்தென - எழுந்தாலென. துகள் - குற்றம்.

985. உஞ்சு எழுந்த - பிழைத்து எழுந்த. விடைமேல் - இடபவாகனத்தின்மேல். மதி சூடு அருளாளன் - சந்திரசேகராகிய கிருபையையுடைய சிவபிரான். அஞ்சலிர் - நீவிர் அஞ்சுதலை ஒழிக. மகன் காணுன் - தன் மகனுகிய தக்கனைக் காணுதவனுகி. நிமலன் - சிவபிரானது. கயவன் - கீழ்மகன்.

றய்யவிசைத் தெழுதியென வெழுந்தாங்
குளநாணி வெருவவிட முமிழும்
வெய்யபணிச் சடையாளன் றக்க
வெருவேலென் றருள்புரிந்தான் மிகவும். கசுசு

987. ஆசறுநல் லறிவொருவி மையாம்
அறிவுறலா லானனமு மனைத்தாய்க்
காசினியி லெழுந்தவனம் பெருமான்
கழல்பணிந்து புகழ்ந்திடலுங் கருணை
நேசமொடு புரிந்தருளி யமர்க்கு
நிகரிலா வீரனொடு நிமலன்
வீசுபுகழ்க் கயிலையடைந் தடல்சேர்
வீரனுக்கோ ருலகளித்து விடுத்தான். கசுஎ

(கலிவிருத்தம்)

988. மற்றிது நிற்க மகக்களத்தி னூடே
உற்றிடு மும்பரி லுந்துமலர் வேதன்
பெற்றிடு மைந்தன் முகந்தெரிந்து பேதாய்
எற்றையி யற்றினை யென்றினைய கூறும். கசுஅ

989. ஈசனை யெள்ளிய வின்னபிழை தீர
ஆசறு மன்பொ டவன்றனது பொற்றாள்
பூசனை புரிந்து புகழ்ந்திடுதி யென்றே
பேசுவ னிவ்வகை பின்னுமல ரோனே. கசுகூ

---

986. அயன் இரப்ப - பிரமன் வேண்ட. வீரபத்திரர் தக்கன் தலையில் ஆட்டுத்தலை யொன்றைப் பொருத்தி எழுப்பினர். மறி - ஆடு. வெருவ - அஞ்சி நிற்க. சடையாளன் - சிவபிரான். தக்க - தக்கனே; விளி.

987. நல் அறிவு ஒருவி - நல்ல அறிவை நீங்கி. மை ஆம் - அறிவு - அஞ்ஞானம். ஆனனமும் அனைத்தாய் - முகமும் மையாகி; மை - ஆடு. எழுந்தவன் - தக்கன். வீரனொடு - வீரபத்திரரோடு.

988. மகக்களத்தினூடே - யாகசாலைக்குள். மைந்தன் - தக்கன். எற்றை - எத்தகைய காரியத்தை.

990. தேனமர் கொன்றைச் செழுஞ்சடை முடித்த
வானவன் மேன்மை மறந்தொரு பகற்கண்
நானிறை யென்றன னாரண னெவர்க்கும்
தானிறை யென்று தருக்குட னுரைத்தான். கஎ0

991. வெஞ்சமர் செய்குதும் வென்றவ ரெவர்க்கும்
தஞ்ச மெனப்படு தாணுவென வோதிக்
கஞ்ச மடக்கொடி காதலனும் யானும்
நெஞ்ச முனிந்து நெடுஞ்செரு விழைத்தோம். கஎக

992. அந்தரி தங்கிய வங்கனெமை யாள்வான்
வந்தெரி யாகியிம் மண்ணும்விண்ணு மொன்றாய்
உந்துபு நின்றிட வொல்லையது கண்டே
வெந்திற லாடல் விளைப்பது விடுத்தேம். கஎ௨

993. திண்டிற லின்ன சிலம்பினடி சென்னி
கண்டவ ரேயுயர் காரண ரெனச்சீர்
கொண்ட பதத்தொடு கோதின்முடி தேடிக்
கண்டிலம் வன்மை கழிந்தகந்தை விட்டேம். கஎ௩

994. சம்புவை யன்பொடு தாழ்ந்தடி பணிந்தேம்
எம்பிழை யெண்ணல னின்னருள் புரிந்தான்
அம்புவி யின்புடை யன்னவனை நீயும்
நம்பி வணங்குதி நல்குமரு ளென்றான். கஎ௪

---

990. நான் இறை என்றனன்-நானே முழுமுதற் கடவுள் என்று நான் கூறினேன். தருக்குடன் - அகந்தையோடு.

991. தஞ்சம் எனப்படு தாணு - புகலென்று சொல்வதற்குரிய கடவுள். கஞ்ச மடக்கொடி காதலனும் - திருமகள் கணவனாகிய திருமாலும். செரு இழைத்தோம் - போர் செய்தோம்.

992. அந்தரி தங்கிய அங்கன் - உமாதேவியார் ஒரு பாகத்தில் வீற்றிருக்கும் திருமேனியையுடைய சிவபிரான். வந்து எரியாகி. ஆடல் விளைப்பது - போர் செய்தலை.

993. இன்ன சிலம்பின் அடி சென்னி-இந்த மலையின் அடியையும் முடியையும். என - என்று சிவபிரான் சொல்ல கண்டிலம் - யாம் கண்டோம் இல்லை கழிந்து அகந்தை விட்டேம்.

994. எண்ணலன் - எண்ணாமல்.

995. இன்ன விசைப்ப விசைந்தடி பணிந்தே
கன்ன னெருங்கிய காசிநக ருற்றே
மன்னிய வாயிர வற்சர மரன்றாள்
நன்னெறி யர்ச்சனை செய்திட லுநம்பன். கஎரு

996. வந்துக ணப்படை மன்னவ னெனுஞ்சீர்
தந்தன னும்பர்க டத்தமிடை யுற்றே
இந்து நெடுஞ்சடை யெந்தைபெரு மானைப்
புந்தியி லன்பொடு பூசனை புரிந்தார். கஎசு

997. என்றிவை யாவு மிருங்குலிச வேலாற்
குன்றி னெடுஞ்சிறை கொய்தவன் மகற்கு
வென்றி பொருந்து வியாழமெனு மேலோன்
ஒன்றொழி யாம லுவப்புட னுரைத்தான். கஎஎ

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

998. கூறிது நின்றிட வேறொரு நாண்முசு
குந்த னெனுந்தலைவன்
மாறுத லற்ற விசிட்ட மடைந்த
வசிட்டனை வந்துபணிந்
தாறு முடித்த வருட்கட னல்கிய
ஆறு முடிப்பெருமான்
வீறு புகழ்ப்பெறு விரத முரைத்தருள்
என்று விளம்புதலும். கஎஅ

---

995. கன்னல் - கரும்பு. வற்சரம் - வருடங்கள். நம்பன் - சிவபிரான்.

996. கணப்படை மன்னவன் எனும் சீர் தந்தனன் - கணநாதனென்னும் சிறப்பை அருளினர். தத்தம் இடை உற்றே - தங்கள் தங்கள் பதத்தை அடைந்து. இந்து - சந்திரன்.

997. குலிச வேலால் - வச்சிராயுதத்தால். சிறை - சிறகுகளை. கொய்தவன் - இந்திரன். மகற்கு - சயந்தனுக்கு. வியாழம் எனும் மேலோன் - பிருகஸ்பதி பகவான்.

998. விசிட்டம் - மேன்மை. முருகக்கடவுளுக்குரிய விரதங்களைச் சொல்லவேண்டுமென்று வசிட்டரை முசுகுந்தன் கேட்டான்.

999. வெள்ளியெ னுந்தின மாரல தன்றியும்
வென்றி யுறுந்துலையாம்
ஒள்ளிய திங்களி லிந்து வளர்ந்திட
ஓங்குமுன் வைகன்முறு
எள்ளரி தாமறு நாளுந மெழிற்பர
சேந்திய வேந்தறரும்
வள்ளன் மகிழ்ந்தருள் விரத மெனப்புகழ்
மாதவ னோதியரோ. களசகூ

1000. அன்னதி யற்றலு மன்னது தன்னில்
அருத்தி பொருத்திமுடித்
துன்னரு மேன்மை யடைந்தவர் தம்மையும்
ஓதின னோதுதலும்
இன்னலின் மன்னவ னப்படி பற்பகல்
இப்புவி யிற்புரியா
ஒன்னலர் வந்து பணிந்திட வையம்
உவந்து புரந்தனனே. கஅ௦

1001. மேவொரு நாடனின் மண்ணுல கத்தினும்
விண்ணுல கத்தணுகித்
தேவர் வணங்குறு கோவை வருத்து
திருக்கவு ணப்படைவென்

---

999. வெள்ளிக்கிழமையும், கார்த்திகை நக்ஷத்திரமும், ஐப்பசி மாதத்தில் வரும் கந்தசஷ்டியும் முருகக் கடவுளுக்குரிய விரதங்கள். ஆரல் - கிருத்திகை. துலையாம் ஒள்ளிய திங்களில் - ஐப்பசி மாதத்தில். இந்து வளர்ந்திட ஓங்குமுன் வைகல் முன்று - சுக்கில பக்ஷப் பிரதமை முதலாக. அறுநாளும் - சஷ்டியீறாகிய ஆறு நாட்களும். பரசு - மழு.

1000. இயற்றலும் - மேற்கொள்ளும் முறையையும். அருத்தி பொருத்தி முடித்து - அன்புகூடி நிறைவேற்றி. விரதத்தைச் சாதித்தவர்களையும். இன்னல் இல் மன்னவன். ஒன்னலர் - பகைவர். வையம் - உலகத்தை.

றேவில் பெரும்புக ழேழு விடங்கரை
ஒண்புவி மீதுகொணர்ந்
தேவரு மன்பொடு காண விருத்தி
இருங்கதி யுற்றனனே. கஅக

1002. சொற்றிடு மின்ன திருக்க விருப்பொடு
தொண்டைநன் னாடைதனில்
மற்றொரு வெற்பிடை பொற்புறு நற்சிவ
மாமுனி மேவியகால்
நற்றிற நவ்வி யடைந்திட வன்னதை
நச்சின னச்சியதே
உற்றிடு மோர்கரு வாயது நவ்வி
உலாயதம் மால்வரைமேல். கஅஉ

1003. குன்றவர் வள்ளியின் மூல மெடுத்த
குழிப்புடை வந்தணுகா
நன்றி பெறுந்திரு மங்கையை யங்கதின்
நல்குபு தன்னதினம்
அன்றி யிருந்தது கண்டு வெருண்ட
தகன்ற தகன்றிடலும்
வன்றிறல் கொண்ட கிராதர் பெருந்தகை
வந்து தெரிந்தனனே. கஅங

1001. முசுகுந்தன் செயல். கோவை - இந்திரனை. திருக்கு அவுணப்படை வென்று - மயக்கத்தையுடைய அசுரர் சேனையை வென்று. சப்தவிடங்க மூர்த்திகளைக் கொணர்ந்து பூவுலகத்தில் பிரதிஷ்டைசெய்து சிவகதியை அடைந்தான்.

திருவாரூர், நாகபட்டினம், திருநள்ளாறு, திருக்காறாயில், திருக்கோளரியூர், திருவாய்மியூர், திருமறைக்காடு என்னும் ஏழு தலங்களிலும் விடங்கரைத் தாபித்தான்.

1002. மேவியகால் - இருந்தபொழுது. நவ்வி - ஒருமான். அன்னதை நச்சினன் - அதன்பால் விருப்பம் கொண்டான். அங்ஙனம் விரும்பியது காரணமாக அதன் வயிற்றில் கருப்பம் உண்டாயிற்று.

1003. குன்றவர் - வேடர்கள். வள்ளியின் மூலம் எடுத்த குழிப்புடை - வள்ளிக்கிழங்கைத் தோண்டிய குழியினிடத்தே. திருமங்

1004. தெரிந்து மகிழ்ந்து கரங்கொ டெடுத்துயர்
செல்வ மனைப்புடையுற்
றிருந்திறல் கொண்ட விருத்தர்கள் வள்ளி
எனப்பெயர் சொற்றிடவே
பரிந்து சிறப்பொடு குன்றவர் மன்னது
பாரில் வளர்த்திடுநாள்
திருந்திய யாண ரிளங்குயி லாறிரு
திருவய துற்றனளால். கஅச

1005. ஏவை முனிந்தொளி ரெஃக நெடும்படை
என்ன விளங்கியகட்
பூவையை வேடுவ ரானவ ரேனல்
புரந்திட வைத்திடலும்
காவல் புரிந்தித ணத்துறு நாளுயர்
கந்த விலங்கலொரீஇச்
சேவ னெடுங்கொடி யண்ணல் பெருத்த
செருத்தணி யுற்றனனே. கஅரு

1006. வந்து செருத்தணி யற்புத வெற்பிடை
வள்ள லிருந்தருளச்
சுந்தர வள்ளியை நாரத னாகிய
தொன்மைகொண் மாமுனிகண்

கையை அங்கு அதின் நல்குபு - ஓர் அழகிய பெண் குழந்தையை அந்தக் குழியில் ஈன்று. தன்னது இனம் - மான் இனம். வெருண்டு அது அகன்றிடலும். கிராதர் பெருந்தகை - வேடர்க்கு அரசன்.

1004. மனைப்புடை உற்று - வீட்டை அடைந்து. விருத்தர்கள் முதியவர்கள். குன்றவர் மன் - வேடர்களுக்கு அரசன். யாணர்-புதுமை. இளங்குயில் - வள்ளி. பன்னிரண்டு பிராயம் அடைந்தாள்.

1005. ஏவை - அம்பை. எஃகம் நெடும்படை என்ன - வேலைப் போல. பூவையை - வள்ளியை. ஏனல் புரந்திட - தினைப்புனத்தைக் காக்க. இதணத்து - பரணில். கந்த விலங்கல் ஒரீஇ-கந்த கிரியை நீங்கி. அண்ணல் - முருகக்கடவுள். செருத்தணி - தணிகை மலையை.

1006. அற்புதம் - வியப்பையுடைய. நாரதமுனிவர் வள்ளியைக் கண்டு. இசைத்திட - வள்ளியின் பேரழகைச் சொல்ல. மயல் - காதல்.

டெந்தை குகன்க ணிணங்கி வணங்கி
இசைத்திட மாமயல்கொண்
டுந்திய வேலவன் வேடுவர் போல
உருக்கொடு சென்றனனே. கஅசு

1007. விண்டொடு வள்ளி விலங்கலி னேகி
விலங்க விலாவெழிலோ
டண்டரி தாமித ணத்தி லிருந்த
அருங்குற மாதுதனைக்
கண்டனன் மாமயல் கொண்டிடர் கொண்ட
கருத்தொடு நின்றுபுகழ்ந்
தொண்டிற லோன்விர கத்துரை பற்பல
ஓதினன் மாதினெடும். கஅஎ

1008. ஆங்கது காலையில் வேடுவ ரோடவள்
அத்த னடைந்திடலும்
வேங்கை யுரித்த பரம்பரன் மாமகன்
வேங்கை யுருக்கொளவே
வாங்கில் புகழ்பெறு கானவ ரானவர்
வந்து வளைந்துசினந்
தீங்கிது வல்லை பறித்து முறித்திடும்
என்று புகன்றனரே. கஅஅ

1007. விண் தொடு - ஆகாசத்தை அளாவிய வள்ளி விலங்கலின் - வள்ளி மலைக்கு. விலங்கல் இலா - மாறுத. அண்ட அரிது ஆம் இதணத்தில் - சேர்தற்கு அரிய பரணில். இடர் கொண்ட - காம மயக்கத்தை அடைந்த. ஒண் திறலோன் - முருகவேள். விரகத்து உரை - பிரிவால் உண்டாகும் வார்த்தைகளை.

1008. அவள் அத்தன் - வள்ளியம்மையின் தந்தையாகிய வேடராசன். வேங்கை - புலி. பரம்பரன் - சிவபிரான். வேங்கை உரு - வேங்கை மரமான உருவம். வாங்கு இல் - மறைதல் இல்லாத. கானவர் - வேடர். இது - இந்த மரத்தை.

1009. அன்னவர் தம்மை விலக்கி யவர்க்கிறை
அன்பு மகட்டெரியா
இன்னதி யாதென வேது மறிந்திலன்
என்று புகன்றிடலும்
மன்னிய வின்னது நின்றுணை யாகி
வளர்ந்திவ ணிற்கவெனு
அந்நிலை தன்னி லகன்றனன் முன்பென
அண்ணலு நின்றனனே. கஅகூ

1010. இன்பொடு நின்றவ னுன்றனை யன்றி
எனக்கொரு தஞ்சமிலை
அன்புட ளுருதி யென்றனை யென்றெம
தன்னையொ டோதலுமே
பின்பு மிருங்குற வர்க்கிறை யான
பெருந்தகை வந்திடவே
பொன்புனை சைவ விருத்த னெனும்படி
போயின னங்கவனோர். கக0

1011. ஆதர விற்றிரு நீறு கொடுத்தனன்
ஆசி புகன்றிடலும்
ஏதமில் கொற்றவ னச்சின தேதென
இவ்வரை யிற்குமரி

1009. இறை - அரசன். அன்புள்ள மகளைப் பார்த்து. முன்பு என - முன்போல வேடனது உருவத்தோடு. அண்ணல் - முருகவேள்.

1010. தஞ்சம் - புகலிடம். என்றனை ஆளுதி. அன்னையொடு - வள்ளியம்மையோடு. பொன் - பொலிவு. சைவ விருத்தன்-சிவ வேடங் கொண்ட முதியவன்.

1011. ஆதரவின் - அன்பினோடு. ஆசி - ஆசீர்வாத மொழி. ஏதம் - குற்றம். கொற்றவன் - வேட்டுவ அரசன். நச்சினது - நீர் விரும்பியது. குமரி தீது அற ஆடுற - குமரித் தீர்த்தத்தின்கண் பாவம் நீங்க நீராட; கன்னிகையோடு துயர் நீங்க இன்புற என்ற பொருளும் தொனித்தது. ஆடுபு - நீராடி. மாதினொடும் - மகளாகிய வள்ளிக்கு. அவண் - அவ்விடத்தில்.

தீதற வாடுற வந்தன மென்றருள்
செய்யவ தாடுபுநம்
மாதினொ டுந்துணை யாயிரு மென்றவண்
வைத்தகல் வுற்றனனே. கக௲க

1012. வள்ளியை நோக்கி விருத்த னெனும்படி
வந்திடு மெந்தைபிரான்
உள்ளுறு நீரில் விடாயுடை யேனென
ஓத வதற்கொருசார்
எள்ளில் புகழ்க்கொடி நற்சுனை யின்கரை
எய்த மெலிந்தவர்போல்
அள்ளி யருந்புன லுண்டெமை யாளுடை
அண்ண லறைந்தருள்வான். கக௲உ

1013. ஏதமி னீரின் விடாயை யகற்றினை
என்னை யினித்தழுவிக்
காத லகற்றுதி யென்று புகன்றிரு
கைகள் குவித்திடலும்
மாது சினந்து படர்ந்தன ளத்தியின்
வத்திர னைக்குமரன்
ஆதர வோடு நினைப்ப வெதிர்ந்தனன்
ஆனைய தாயெதிரே. கக௲௩

1014. கண்டனள் வள்ளி வெருண்டு திரும்பினள்
கந்தனை வந்துதழீஇக்
கொண்டன ளும்ப லகற்றிடி னீர்நசை
கொண்டது செய்வனென

1012. விருத்தன் - முதியவன். எந்தைபிரான் - முருகவேள். நீரில் விடாய் - தண்ணீர்த்தாகம். ஓத - வள்ளியெம்பிராட்டியிடம் சொல்ல. எள் இல் - இகழ்ச்சியற்ற. கொடி - வள்ளி. எய்த - முதியவரோடு அடைய.

1013. நீரின் விடாயை - நீர் வேட்கையை. காதல் - காமத்தை. அத்தியின் வத்திரனை - யானைமுகக் கடவுளை. ஆதரவோடு - அன்போடு. ஆனையதாய் எதிர்ந்தனன்.

அண்டர் பிரானிரு கைகள் குவித்தனன்
அத்த வெழுந்தருளென்
றெண்டிறல் வேழமொ டோதலு மன்ன
துவப்பொடு சென்றதுவே. ககூச

1015. அன்னது பின்பறு மாமுகன் வள்ளியை
ஆசையொ டும்புணராப்
பன்னிரு கையொ டிருந்திட மங்கை
பணிந்து புகழ்ந்திடலும்
மன்னு தினைப்புன மேகுதி யாமவண்
வந்திடு வோமெனவே
துன்னிய வேன லுறும்படி யுற்றனள்
தோழியு மெய்தினளே. ககூரு

1016. ஏன லழிந்திட வெங்ஙன மேகினை
என்று விளம்புதலும்
பூநறு மென்சுனை யாடி வரும்படி
போயின னென்றிடவே
மேனி வியர்ப்ப முலைத்துணை விம்ம
வெளுத்திட வாய்புரியும்
ஊனமி றண்சுனை யெவ்விடை யுற்றுள
தோடென வோதினளே. ககூசா

1014. வெருண்டு - அஞ்சி. உம்பல் அகற்றிடின் - யானையை ஓட்டினால். நீர் நசைகொண்டது - நீர் விரும்பிய காரியத்தை. அண்டர் பிரான் - முருகவேள். அத்த எழுந்தருள் - அப்பனே, இனி நீ செல்வாயாக. வேழமொடு - யானையாக வந்த விநாயகரோடு. அன்னது - அந்த யானை.

1015. அவண் - தினைப்புனத்தில். ஏனல் - தினைப்புனத்தை. உறும்படி - முன்னே இருந்ததுபோலவே.

1016. ஏனல் அழிந்திட - தினைப்புனமானது காவல் செய்வாரில்லாமல் கெடுற. விளம்புதலும் - தோழி கேட்க. வரும்படி - வருமாறு. மேனிவியர்த்தல் முதலியன புணர்ச்சியின்பத்தால் வந்த வேறுபாடுகள். வாய் வெளுத்திட, புரியும் - செய்யும். எவ்விடை - எவ்விடத்தில்.

1017. நன்றிது நன்றி தெனக்குமோர் குற்றம்
நவின்றனை யென்றுவெகுண்
டொன்றி யிருந்துழி வேலவன் வேடர்
உருக்கொடு வெய்யமதம்
துன்று விறற்கரி யொன்றென தம்பொடு
சோரி சொரிந்திடவே
இன்றிவண் வந்துள தோவென வோதினன்
ஏதமின் மாதர்கண்முன். கக௧எ

1018. அவ்விடை யிற்குகன் மங்கை புணர்ந்ததை
அங்கவர் பார்வையினால்
மைவிழி நண்பி யறிந்து பிறிந்தயல்
வன்புன மீதுறவுன்
கவ்விய வேலவ னன்னவண் முன்பு
கலந்தெழில் வள்ளியையெற்
கிவ்விடை யீகுதி யல்லதி யான்மடல்
ஏறுவ னென்றனனே. கக௧அ

1019. என்னலு மன்னவள் வள்ளியை யெய்தி
இணங்குறு மாறுரையா
மன்னிய வேல னிடைக்கொடு வந்திட
வள்ளியும் வேலவனும்

இது அகத்திணையில் சுனைவியந்துரைத்தல் என்னும் துறையின்பாற் படும்.

1017. ஒன்றி - பின்பு மனம் பொருந்தி. கரி ஒன்று எனது அம்பொடு. சோரி - இரத்தம். மாதர்கள் - வள்ளியும் தோழியும். இது வேழம் வினாதல் என்னும் துறை.

1018. அவ்விடையில் - அப்போது. நண்பி - தோழி. அயல் வன் புனமீது உற - அருகிலே உள்ள தினைக்கொல்லையைச் சார. அன்னவள் முன்பு கலந்து - அத்தோழியின் முன் சென்று. எற்கு இவ் விடை - எனக்கு இங்கே. மடல் ஏறுவேன் - பனைமடலால் செய்த குதிரைமீது ஏறுவேன்; காதல் நிறைவேறாதவர் மட லேறுவேனென்று கூறுதல் மரபு.

இன்ன லறுங்கல வித்தொழில் செய்துபின்
ஏனல் புரந்திடவே
பொன்னுறு வேலன் விடுத்தலு மெம்மனை
போயினள் சேடியொடும். ௧௯௯

1020. வென்றிகொள் குன்றவ ரேன றடிந்திட
மேவினர் மாதினையிற்
சென்றிடெ னத்துணை மாதொடு வீடு
செறிந்து வருந்தியுறப்
பொன்றிகழ் வள்ளியை நாடி மெலிந்து
புலம்பி யிருட்பொழுதின்
வன்றிறல் வேலவன் மங்கை யிருந்த
மனைப்புற முற்றனனே. ௨00

1021. வேலனை யன்பொடு கண்டனள் சேடி
விருப்புறு வள்ளிதனைக்
கோலமொ டுங்கொடு வந்தனள் பாணி
கொடுத்தன ளின்னவனைச்
சாலவு மன்பொடு காத்தரு ளென்றுரை
சாற்றலு நம்பிடைநீ
மாலை நறுங்குழல் வைத்திடு மன்பு
மறக்கில மென்றனனே. ௨0௧

1019. அன்னவள் - தோழி. இணங்குறுமாறு - முருகவேளுடைய விருப்பத்துக்கு இசையும்படி. ஏனல் புரந்திட - வள்ளியம்மை தினைப்புனத்தைக் காவல் செய்ய. எம் அனை - வள்ளியம்மை. சேடி - தோழி.

1020. குன்றவர் - குறவர். ஏனல் தடிந்திட - தினையை அறுக்க. மாதினை இல் சென்றிடு என. துணைமாதொடு - தோழியோடு. வீடு செறிந்து - இற்செறிப்புற்று; தங்கள் வீட்டை அடைந்து. இருட்பொழுதின் - இராக்காலத்தில். இது இரவுக்குறி.

1021. சேடி - தோழி. பாணி கொடுத்தனள் - கையிலே அடைக்கலமாகக் கொடுத்தாள். மாலை நறுங்குழல் : பாங்கியை நோக்கிய விளி.

1022. என்று புகன்றவ ணின்று மகன்றெழில்
எய்திய மாதினொடும்
சென்றொரு காவி லிருந்தனன் வைகறை
சேர்தலும் வள்ளிதனைத்
துன்றெயி னர்க்கிறை கண்டிலன் மண்டிய
சுற்றமொ டுங்குழுமிப்
பொன்றி லடிச்சுவ டொற்றி நடந்து
பொழிற்புடை யுற்றனனே. உ0உ

1023. கண்டனள் வள்ளி வெருண்டன ளன்பொடு
கந்தனை வந்தனைசெய்
தண்டினர் வேடுவ ரென்செய்வ தென்றிட
அன்றெதிர் சூருயிரைக்
கொண்டிடு மெஃக மிருந்துள தஞ்சலை
கொள்ளுதும் யாமெனவே
மண்டிய வேடுவர் வந்து வளைந்து
வடிக்கணை வீசினரே. உ0௩

1024. மாரி யெனும்படி வாளி சொரிந்திட
வள்ள றனுதருளாற்
சீரிய கையி லுறுங்கொடி யாகிய
சேவ லொலித்திடவே

1022. அவணின்றும் அகன்று. காவில் - சோலையில். வைகறை சேர்தலும் - விடிந்தவுடன். எயினர்க்கு இறை - வேட்டுவ அரசன். குழுமி - கூடி. அடிச்சுவடு ஒற்றி நடந்து - தாள் பதிந்த அடையாளத்தைக் கவனித்துச் சென்று. பொழிற்புடை - முருகன் வள்ளியம்மையோடு இருந்த சோலையை,

1023. வந்தனை செய்து - வணங்கி. வேடுவர் அண்டினர். சூர் - சூரன். எஃகம் - வேல். அஞ்சலை-நீ பயப்படாதே. வடிக்கணை - கூர்மையான அம்புகளை.

1024. வாளி - அம்பு. வள்ளல் - முருகவேள். அங்கண் அகன்று - அவ்விடத்தை விட்டு நீங்கி. குன்றவர் மாது - குறமகளாகிய வள்ளி.

ஆரு மிறந்தனர் வேலவ னங்கண்
அகன்று நடந்திடலும்
சோர்வி லெழில்பெறு குன்றவர் மாது
தொடர்ந்து படர்ந்தனளே. ௨௦௪

1025. மேதகு நாரத னவ்விடை வந்தனன்
வேலவ னைப்பணியா
ஓதுதி யிங்ங னியற்றிய தென்ன
உவப்புறு வள்ளிபொருட்
டேதமில் வேலவ னிங்ங னியற்றிய
யாவு மறைந்திடவே
தீதறு நாரத னாகிய பேருள
சீர்முனி கூறுவனால். ௨௦௫

1026. எம்பெரு மானிவண் வேடுவர் யாரும்
இறப்ப வியற்றினையிக்
கொம்பினை வவ்வி யகன்றிட னீதி
கொலோவென வோதுதலும்
உம்ப ரிடுக்க ணகற்றிய வேலன்
உவந்து திரும்பியரோ
வம்புறு சோலையின் வந்தனன் மாதவன்
வள்ளி யொடுங்கடிதே. ௨௦௬

1027. ஒல்லையில் வேலவன் வள்ளி மடந்தையொ
டுன்றம ருய்ந்தெழவே
சொல்லுதி யென்னலு மன்னையு மவ்வகை
சொற்றனள் சொற்றிடலும்

1025. பணியா - பணிந்து. இயற்றியதை ஓதுதி.

1026. இவர்களை இறக்கும்படி செய்து வள்ளியை அழைத்துச் செல்லுதல் நியாயமோ. கொம்பினை - வள்ளியை. இடுக்கண - துன்பத்தை. வம்பு - நறுமணம். சோலையின் - முன்பு தாம் இருந்த சோலையினிடத்தே. மாதவன் - நாரதனோடும்.

1027. உன் தமர் உய்ந்து எழவே - உன் சுற்றத்தார் பிழைத்து எழ. அன்னை - வள்ளி. வல்லை - விரைவில். வெருக்கொடு - பயம் கொண்டு.

வல்லை யெழுந்தன ராறு முகம்பெறு
வள்ளலை யன்பொடுகண்
டெல்லை யிலாத வெருக்கொ டிறைஞ்சி
யிசைத்திடு வாரிவையே. ௨0எ

1028. எங்கள் பிரானினி யெம்மனை யுற்றெழில்
எம்மனை தன்னைமணந்
தங்கொளு நின்பதி யேகுதி யென்னலும்
அன்ன செயற்கிசையா
மங்கு னெருங்கிய குன்றுறை கானவர்
மன்னவ னிற்குறுகித்
துங்க நெடும்புலி யாதன மீது
துலங்க விருந்தனனே. ௨0அ

1029. அங்கது காலையில் வள்ளியை யன்பினொ
டண்ண றெரிந்திடலும்
கொங்கு நறுந்தொடை வேடுவர் மாதர்
குயிற்றிய கோலமொரீஇ
மங்கில் வளம்பெறு தெய்வ வனப்புடன்
மன்னின ளின்னதுகண்
டிங்கிவ ளெம்புடை வந்தது நந்தம்
இருந்தவ மென்றனரே. ௨0௯

1028. எம் மனை உற்று - எங்கள் இல்லத்தை அடைந்து. எம் அனைதன்னை - வள்ளியெம்பிராட்டியை. அம் கொளும் - அழகை உடைய. இசையா - முருகன் இணங்கி. மங்குல் - மேகம். கானவர் மன்னவனுடைய இல்லைக் குறுகி. புலி ஆதனமீது - புலித்தோலாசனத்தின்மேல்.

1029. தெரிந்திடலும் - பார்த்தவுடன். வேடுவர் மாதர் குயிற்றிய கோலம் ஒரீஇ - குறமகளிர் புனைந்த திருக்கோலம் நீங்கி. தெய்வ வனப்புடன் - தெய்வ மகளுக்குரிய பேரழகுடன். என்றனர் - என்று குறவர்கள் கூறினர்.

1030. கொற்றமு துற்றிடு கானவ ரானவர்
கொற்றவன் முற்றெழிலால்
மற்றிணை யற்றுயர் வள்ளி கரத்தினை
வள்ளல் கரத்தினில்வைத்
துற்றிடு மென்மக ளைக்குமு ரேச
உனக்கருள் செய்தனனென்
றற்றமி லன்பொ டுறைந்து சிறந்த
அரும்புன லுய்த்தனனே. உ௧௦

1031. அன்னது காலையி லெஃக நெடுங்கர
வண்ணற லுதருளால்
தன்னிகர் நாரதன் மன்றலி னுள்ள
சடங்கு புரிந்திடலும்
துன்னிய விண்ணவர் கண்ணன யன்புடை
சுற்றி வழுத்திடவே
கன்னி மடந்தையொ டந்தர மீதிருள்
கந்தரன் வந்தனனே. உ௧௧

1032. தந்தையு மன்னையும் வந்தது கண்டொரு
தந்தி முகற்கிளவல்
சிந்தை களித்தெவ ரும்முண ராவகை
செய்ய கரங்கள்குவித்

1030. கானவரானவர் கொற்றவன் - வேட்டுவ அரசன். இணை யற்று உயர். உனக்கு அருள் செய்தனன் - உனக்கு மனைவியாக வழங்கினேன். அற்றம் இல் - சோர்வில்லாத. அரும் புனல் உய்த்தனன் - தாரை வார்த்தான்.

1031. எஃகம் நெடுங்கர அண்ணல் - வேலாயுதக் கடவுள். மன்றலின் உள்ள சடங்கு - திருமணத்துக்கு உரிய சடங்குகளை. கண்ணன் அயன் - திருமாலும் பிரமனும். கன்னி மடந்தையொடு - உமா தேவியாரோடு. அந்தரமீது - ஆகாசத்தில். இருள் கந்தரன் - சிவபிரான்.

1032. தந்திமுகற்கு இளவல் - விநாயகருக்குத் தம்பியாகிய முருகவேள். யாரும் உணராமல் தாய் தந்தையரை வணங்கினுர். புராந்தகன் - சிவபிரான்.

துந்து பெரும்புக ழும்பர் தமக்கும்
உவந்தருள் செய்திடலும்
புந்தி மகிழ்ந்துயர் விண்ணவ ரோடு
புராந்தக னேகினனே. உகஉ

1033. சம்பு வகன்றுழி நாரத னாற்று
சடங்கு முடிந்திடலும்
அம்பு நெடுஞ்சிலை வேடுவர் மாதர்கள்
ஆசி புகன்றிடவே
வம்பு பொருந்து கடம்பு தடம்புயன்
மங்கையொ டங்கணெழுந்
தும்பர் புகழ்ந்திடு குன்றவர் மன்னொ
டுரைத்திடு வாணிவையே. உகங

1034. அருத்தி பொருந்திய வுன்ற னியற்கை
அனைத்து மியற்றுபுவிங்
கிருத்தி யெனக்கடி தங்க ணிறுத்தி
இலங்கெழில் வள்ளியொடும்
பெருத்திடு மன்ன சிலம்பை யகன்று
பிறங்கு வளங்குலவும்
செருத்தணி மால்வரை வந்தன னுந்திய
சேவ லுயர்த்தபிரான். உகச

1033. சம்பு - சிவபெருமான். ஆற்று சடங்கு - செய்யவேண்டிய திருமணச் சடங்குகளை. சிலை - வில்லையுடைய. வேடுவரும் அவர் மாதரும். ஆசி - வாழ்த்து. வம்பு - வாசனை. கடம்பு தடம்புயன் - கடப்ப மாலையை அணிந்த விசாலமான தோள்களையுடைய முருகவேள். குன்றவர் மன்னொடு - வேட்டுவ அரசனுடன்.

1034. அருத்தி - அன்பு. இயற்கை - கடமைகள். அங்கண் நிறுத்தி. சிலம்பை - மலையை. பிறங்கு - விளங்குகின்ற. செருத்தணி மால்வரை - திருத்தணி மலையை.

1035. அண்டர்கள் கம்மிய னன்னதின் முன்னர்
அமைத்திடு மாலயமுற்
றெண்டொடி யோடு மிருத்தலு மங்கை
உவந்து வணங்கியெழிற்
கொண்டிடு மின்ன சிலம்பி னியற்கைகள்
கூறுதி யென்றிடலும்
மண்டிய வக்கிரி மேன்மை யனைத்தையும்
வள்ளல் புகன்றனனே. உகரு

1036. உய்வகை தந்திடு கந்த னதற்பின்
உரக்கிரி வில்லுடையோன்
ஐவகை மேனியி லோர்வடி வங்கண்
அமைத்தமை யாமகிழ்வான்
மெய்வகை யர்ச்சனை செய்தனி னாள்பல
மேவி விளங்கெழில்சேர்
மைவிழி மாதொடு கந்த விலங்கலில்
மந்திர முற்றனனே. உகசு

(கலிநிலைத்துறை)

1037. வண்டார்தொடைக்குழன் மருத்துவனளித்ததிருமங்கை
கண்டா னெழுந்தெதிர் நடந்தாள் பணிந்தனள்கரத்தால்

1035. அண்டர்கள் கம்மியன் - தேவதச்சனாகிய விசுவகர்மா. அன்னதில் - அவ்விடத்தில். முன்னர் - முன்பே. திருத்தணிகையின் பெருமையை முருகவேள் வள்ளியம்மைக்குக் கூறியருளினார்.

1036. உரக்கிரி வில்லுடையோன் - வன்மையையுடைய மேரு மலையாகிய வில்லையுடைய சிவபிரான். ஐவகை மேனியில் ஓர் வடிவு - சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திரு சாத்ரக்கியம், கர்மசாதாக்கியம் என்னும் ஐந்து வடிவங்களில் ஒன்றான கர்மசாதாக்கியமாகிய சிவலிங்கத்தை. அமையா மகிழ்வால் - அடங்காத உவகையோடு. அதில் நாள்பல. கந்த விலங்கலில் மந்திரம் - கந்த கிரியில் உள்ள தம் ஆலயத்தை.

1037. தொடை - மாலை. மருத்துவன் - இந்திரன். திருமங் கை - தேவயானை. அண்டார் தமக்கு அரி - பகைவர்களுக்குச் சிங்கம்

அண்டார் தமக்கரி யெடுத்தே யுரத்திடை யணைத்தான்
விண்டா னுறழ்ந்தவிடை வள்ளியவ டாண்மிசை விழுந்தாள்.

1038. ஈறுன தற்றபுகழ் யாணருள வள்ளியை யெடுத்தே
மாறு நெடுங்கிரி யிரண்டுட னிரண்டுபொரு மாபோல்
வீறுன கொங்கையொடு கொங்கைக ணெருங்கவுரமீதே
பாறு னிகர்த்தமொழி புல்லிமுக மன்பல பகர்ந்தாள்.

1039. மின்னு நுசுப்பனைய மாதரொ டரித்தவிசின் மீதே
ஒன்னு ருடம்பிடி யுடம்பிடி பிடித்தவ னுறைந்தான்
பொன்னு டன்மங்கையிவள் வந்தபரிசென்னபுகலென்ன
அன்னு டனக்கிவை யுரைக்குமெமையாளுடைய வண்ணல்.

1040. முன்னுண் முகுந்தனிடை வநதீரெ மைத்தழுவமுன்னிப்
பன்னு ணெடுஞ்சர வணத்தே தவத்தொழில் பயின்றீர்
அந்நாளி னும்புடை யடைந்தே மகத்திறை யகத்து [ம்.
மின்னார்படைப்புளினர் கண்ணும்வளர்வீரென விடுத்தா

1041. மருந்தான வின்பமொழி யிந்திர னிடத்துமக ளாய்நீ
இருந்தா யிருந்துழி மணந்தா முனக்கிளைய வின்னாள்

போன்ற முருகவேள். உரத்திடை - திருமார்பில். விண்தான் உறழ்ந்த இடை - ஆகாசத்தை ஒத்த இடையை உடைய.

1038. யாணர் - புதுமையழகு. பால்தான் நிகர்த்த மொழி - தேவயானை.

1039. மின் ஆம் நுசுப்பு - மின்னலைப் போன்ற இடையை யுடைய. அரித்தவிசு - சிங்காதனம். ஒன்னார் உடம்பு இடி உடம் பிடி பிடித்தவன் - பகைவருடைய தேகங்களை அழிக்கும் வேலாயுதத்தை ஏந்தியவன். பொன்னுடன் மங்கை - தேவயானை. பரிசு - வகை.

1040. நீங்கள் இருவரும் திருமாலுக்குப் புத்திரிகளாக உதித் தீர்கள். அந்நாளில் நும்புடை. மகத்து இறையகத்தும் - இந்திரனிடத் திலும். புளினர்கண்ணும் - வேடர்பாலும்.

திருந்தார் வணங்கெயினர் பால்வள ர யாமினிதுசென்றே
பொருந்தாசை யோடுபல செய்துவதுவைத்தொழில் புரிந்தாம்.

1042. செந்தே னறும்பொழின் மருத்தரு செருத்தணி வரைக்கண்
பந்தே பொருந்திய கரத்தா யிருந்தொளி பரப்பும்
இந்தே புரிந்தமுக வின்னமட மங்கையொடு மிங்ஙன்
வந்தே மியாமென மகிழ்ந்தாண் மருத்துவன் மடந்தை.

1043. சீரா ரடற்குலிச பாணிமக ளானதிரு மாதும்
வாரார் முலைக்குறவர் மாதுமிரு பாலினும் வயங்கப்
போரா ரரித்தவிசின் மீமிசை யிளம்பரிதி போல
ஏரா ரடற்குமர நாயக னுவப்புட னிருந்தான். உஉங

1044. மைந்துற்ற சேவலு மிருந்தகருமொ ண்பணியைவவ்விச்
சிந்துற் றிடுந்திறன் மயூரமொடு வேலுமுயர் தேரும்
எந்தைக்கு நாடொறு மிடும்பணி புரிந்தவ ணிருந்த
கந்தப் புராணச் சுருக்கமு நிறைந்தது களிப்பால். உஉச

1041. மருந்து - அமுதம். மொழி : விளி. மணந்தாம் - உன்னை மணம் செய்துகொண்டோம். எயினர்பால் - வேடர்களிடையே. வதுவை - திருமணம்.

1042. மருதரு - வாசனை வீசுகின்ற. பந்தே பொருந்திய கரத்தாய் - பந்துகள் அமைந்த கைகளை உடையாய். இந்து - சந்திரனை. மருத்துவன் மடந்தை - இந்திரன் மகளாகிய தேவயானை.

1043. குலிசபாணி - இந்திரன். குறவர் மாது - வள்ளி. வயங்க - விளங்க. அரித்தவிசின் மீமிசை - சிங்காதனத்தின் மேல். இளம்பரிதி போல - பால சூரியனைப்போல.

1044. மைந்து - வலிமை. சேவலும் - சேவற்கொடியும். இரும் தகரும் - கரிய ஆட்டுக்கிடாயாகிய வாகனமும். பணியை - பாம்பை. சிந்துற்றிடும் - துண்டஞ் செய்யும் மயூரம் - மயில். எந்தைக்கு - முருகக்கடவுளுக்கு. பணி புரிந்து - ஏவலைச் செய்துகொண்டு. இருந்த - இருந்தன.

(எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

1045. வேல்வாழி மயில்வாழி சேவல் வாழி
வேறுமுள படைவாழி விளங்கு தண்டைக்
கால்வாழி யருள்பொழியும் விழிகள் வாழி
கவின்குலவு மீராறு கரங்கள் வாழி
மால்வாழி வாழியெனப் பணிந்து வாழ்த்தும்
மலைமாது தருமுருகன் மகிழ்ந்த வாறு
பால்வாழி யெனையாளுங் கருணை வாழி
பங்கிருந்த மங்கையர்தம் பதங்கள் வாழி. உ௨ரு

(கலிவிருத்தம்)

1046. ஆதி வாழிய வஞ்செழுத் தோடுவெண்
பூதி வாழிய புண்ணியர் வாழிய
நீதி வாழிய நீள்புவி வாழிய
கோதில் சைவக் குலமிக வாழியே. உ௨சா

1047. மெத்து மின்ப வியாபக மாகிய
முத்தி தந்தெனை யாட்கொண்ட முன்னவன்
பத்தர் மொய்த்தசம் பந்தன் கமலைவாழ்
அத்தன் வாழி யடியவர் வாழியே. உ௨எ

1045. வேறும் உள படை - வேலொழிந்த மற்றப திஞேராயு தங்களும். மால் வாழ்த்தும் முருகன். மகிழ்ந்த - தம் இருக்கை யாகக் கொண்டு மகிழ்ச்சியுற்ற. ஆறு பால் வாழி - ஆறு படைவீடுகள் வாழ்க. பங்கிருந்த மங்கையர் - தேவயானையும் வள்ளியம்மையும்.

1046. ஆதி - சிவபிரான். வெண்பூதி - திருநீறு. புண்ணியர - சிவபுண்ணியம் செய்யும் சிவனடியார்.

1047. இன்ப வியாபகம் ஆகிய - இன்பமே நிறைந்த. முன்னவன் - தலைவர். சம்பநதன் - தருமபுர ஆதீன ஞாசிரியராகிய குருஞானசம்பந்தர். கமலை - திருவாரூர். சம்பநதனுகிய அத்தன்.

1048. வீரவேற்கை விமலன் மகிழ்ந்திடப்
பாரி னோர்கள் பரிந்து புகழ்ந்திடச்
சீரு லாவிய செந்தி னகரிடை
ஏரி னோடரங் கேற்றிய திந்தநூல். உஉஅ

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

1049. துய்யதா மறைக ளாலுந் துதித்திட வரிய தான
செய்யவே ளடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க வன்றன்
பொய்யில்சீ ரடியார் வாழ்க வாழ்கவிப் புவன மெல்லாம்.

முற்றும்

1049. செய்யவேள் - சிவந்த திருமேனியையுடைய முருகக் கடவுள். சூர்மார்பு கீண்ட - சூரனது மார்பைப் பிளந்த.